# புதுமைப்பித்தன் படைப்புகள்



ஐந்திணைப் பதிப்பகம்

# புதுமைப்பித்தன் படைப்புகள்

**2 ஆம் தொகுதி**

**(கட்டுரைகள், கவிதைகள், சிற்றன்னை, நாடகங்கள்)**

## புதுமைப்பித்தன்

Phone : *84 94 10*

## ஐந்திணைப் பதிப்பகம்

**279, பாரதி (பைகிராப்ட்ஸ்) சாலை**
**திருவல்லிக்கேணி, சென்னை—5**

புதுமைப்பித்தன் படைப்புகள்—2
முதல் பதிப்பு : டிசம்பர் 1988

உரிமை பதிவு

ஐந்திணை : 53

PUDHUMAIPPITHAN PADAIPPUGAL—II
Collection of Essays, Dramas, Poems
and a Novel

விலை ரூ. 48-00

By PUDHUMAIPPITHAN
XXXII+476 pages
11pt. Letters
18×12.5 Cms
11.6 Kg. D/c Belarpur White Printing
Box Board Binding

Published
By
KUZHA. KATHIRESAN

Phone: 84 94 10
AINTHINAI PATHIPPAGAM
279, Pycrofts Road
Triplicane, Madras-600 005

---

அச்சிட்டோர் : தொலைபேசி : 47 78 20
சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை-86

# புதுமைப்பித்தன்
# படைப்புகள்

# பதிப்புரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற, சாகாவரம் பெற்ற எழுத்தாளர் அமரர் புதுமைப்பித்தன் அவர்களுடைய எழுத்தோவியங்களை எல்லாம் ஒன்று சேர்த்துத் தொகுப்பு நூலாக, அதை 3 பாகங்களாக வாசகப் பெருமக்களுக்கு வழங்க எண்ணி முதலில் சிறுகதைகளைத் தொகுத்து புதுமைப்பித்தன் படைப்புகள் என்ற பெயரில் வெளியிட்டோம். இதற்குக் கிடைத்த பலமான வரவேற்பு எங்களை உற்சாகப்படுத்தியது. இந்நூலின் மறுபதிப்பு அச்சாகிக்கொண்டு இருக்கிறது.

இதைத் தொடர்ந்து வெளியிடும் 2வது பாகத்தில் புதுமைப்பித்தனுடைய கட்டுரைகள், கவிதைகள், சிற்றன்னை (நாவல்), நாடகங்கள் முதலியவை இடம் பெறுகின்றன. புதுமைப்பித்தனுடன் நெருங்கிப்பழகிய திரு மீ. ப. சோமு அவர்கள் இலக்கியச் சுவை ததும்பும் முன்னுரையில் புதுமைப்பித்தனுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்கள்.

சமகால எழுத்தாளர்களைப் பற்றி புதுமைப்பித்தன் அவர்கள் திரு மீ. ப. சோமு அவர்களுக்கு எழுதியுள்ள இலக்கிய நயமும், செறிவும் மிக்க பல கடிதங்கள் தொகுப்பு நூலாக விரைவில் வெளிவர உள்ளன என்பதை வாசகப் பெருமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்,

புதுமைப்பித்தன் அவர்களின் வரலாற்றுக் குறிப்புக் களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலைத் தொடர்ந்து புதுமைப்பித்தன் படைப்பு கள் 3-வது தொகுதியும் விரைவில் வெளிவர உள்ளன. இதுவரை நூல் வடிவம் பெறாத புதுமைப்பித்தனுடைய படைப்புகள் எவையேனும் யாரிடத்திலாவது இருந்தால் பதிப்பகத்துடன் தொடர்புகொண்டு அவற்றை 3-வது பாகத்தில் இடம் பெறச் செய்ய உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஐந்திணை வெளியீடுகளுக்குத் தொடர்ந்து நல்லா தரவு தந்துவரும் வாசகப் பெருமக்களுக்கும் திருமதி. கமலா விருத்தாசலம் அவர்களுக்கும் புதுமைப்பித்தன் படைப்பு கள் 2-வது தொகுதிக்கு முன்னுரை தந்துதவிய திரு. மீ. ப. சோமு அவர்களுக்கும் கவிதைகளுக்கான குறிப் புரைகளை வழங்கிய திரு. ரகுநாதன் அவர்களுக்கும் சிறந்த முறையில் அச்சிட்ட சாலை அச்சகத்தாருக்கும் உளம் கனிந்த நன்றி.

சென்னை-5 | அன்புடன்,
23-11-88 | குழ. கதிரேசன்

# உள்ளே...


முன்னுரை—மீ. ப. சோமு IX
புதுமைப்பித்தன் வாழ்க்கைக் குறிப்பு XXXII
புதுமைப்பித்தன் முன்னுரை 1
கவிதை என்றால் என்ன? 3


## புதுமைப்பித்தன் கட்டுரைகள்


என் கதைகளும் நானும் 5
உங்கள் கதை 14
மதிப்புரை 27
சிறுகதை-1 31
சிறுகதை-2 38
சிறுகதை-3 43
கவிதை 48
நமது கலைச் செல்வம் 50
கடவுளின் கனவும் கவிஞனின் கனவும் 53
சமயத்தையும் கடந்த கலை 57
இலக்கியத்தின் உட்பிரிவுகள் 61
இதயத் துடிப்பின் பேச்சு 65
உணர்ச்சி வேகமும் நடை நயமும் 68
வாணன் ஒரு இலக்ஷ்ய வீரன் 75
பாட்டும் அதன் பாதையும் 83

குயில்-ஒரு நெட்டைக் கனவு 89
பகற் கனவு 93
பஞ்சமோ பஞ்சம் 96
கைவண்டிச் சரக்கு 98
புஸ்தக உலகம் 102
சின்ன விஷயம் 104
என்ன எழுதுவது? 108
நாட்டுப் பாடல்கள் 112
இலக்கியத்தின் இரகசியம் 120
சாம்ராட்டுகளின் சப்தஜாலம் 123
இலைக்குணம் 127
பாரதிதாசன் 134
தமிழர் நாகரிகத்தில் கிராமவாழ்க்கை 142
ரேடியோ 152
முடிவில் எதற்கு வெற்றி 159
அரிஸ்டாட்டில் கண்ட ராஜீயப் பிராணி 163
கலையும் இலக்கியமும் 170

## புதுமைப்பித்தன் கவிதைகள்

நிசந்தானோ சொப்பனமோ! 175
ஓடாதீர் 178
உருக்கமுள்ள வித்தகரே 183
காதல் பாட்டு 189
மாகாவியம் 196

இணையற்ற இந்தியா 203
தொழில் 205
இருட்டு 207
பாதை 209
திரு ஆங்கில அரசாங்கத் தொண்டரடி பொடியாள்வார் வைபவம் 211
கடவுளுக்குக் கண்ணுண்டு 213
பொங்கல் நம்பிக்கை 215
'அல்வா' 216
காலைக் கடல் 217
அசரீரி 219
பாரதிக்குப்பின் 222
கங்கை நதி 223
பாட்டுக் களஞ்சியமே! 225
உதிரிக்கவிகள் 228
குறிப்புக்கள் 234

## புதினம்

சிற்றன்னை 245

## புதுமைப்பித்தன் நாடகங்கள்

வாக்கும் வக்கும் 325
சார், நிச்சயமா நாளைக்கு! 418
பக்த குசேலா 433

# முன்னுரை

## மீ.ப. சோமு

இலக்கியம் என்ன நோக்கத்தோடு எழுகிறது? சிறு கதையோ, நாடகமோ, கவிதையோ, கட்டுரையோ, அது எதுவானாலும், அந்தப் படைப்பு, எதற்காகத் தோன்று கிறது—என்பது ஓர் அடிப்படையான கேள்வி! இலக்கியத் திறனாய்வின் அடிப்படை இதுவே!

சிலருடைய படைப்புக்களைப் பார்த்துவிட்டு அந்தச் சலிப்பிலே 'இந்தப் படைப்புக்கள் எதற்காகத் தோன்றின!' என்று, 'எதற்காகத்தான் தோன்றினவோ!' என்று; தோன்றியே இருக்க வேண்டாமே என்ற கருத்தில் நொந்து கொள்கிறோமே, அப்படிப்பட்ட மனக் கசப்பிலிருந்து எழுகிற கேள்வியில்லை இது! ஆய்வுத் துறையிலே எழுகிற இலக்கிய வினா இது!

படைப்புக்கள் எழுத்தாளர்களின் எழுதுகோலிலிருந்து என்ன குறிக்கோளுடன் தோன்றுகின்றன என்பது அனைத் துலக மொழிகளிலும் இலக்கியத் திறனாய்விலே ஆதார மான ஓர் சிந்தனையாகும்.

இலக்கியம் எப்படித் தோன்றுகிறது என்னும் படைப்பு இரகசியம் இந்தச் சிந்தனையின் ஆழத்திலேதான் பொதிந்து கிடக்கிறது!

தாமரை அல்லது மல்லிகை அல்லது பிச்சிப்பூ ஏன் மலர் கிறது?

வழிபாடு செய்கிற கடவுளின் பூசனைக்காக மலர்கிறது என்று சொல்லலாம்.

காதலியின் கூந்தலிலே கொண்டு செருகுவதற்காக மலர்கிறது என்று சொல்லலாம்.

காட்டிலே எரிக்கிற நிலவுபோல, மனித உலகத்தின் பார்வைக்கு அப்பாற்பட்ட ஒரு வனத்திலே, இருட்டிலே பூத்து, வெயிலிலே வெம்பி, மாலையிலே வாடித் தரையிலே விழுவதற்காகப் பூக்கிறது என்றும் சொல்லலாம்! பாவம்!

அதனதன் தலையெழுத்து அப்படி என்று பொருளா?

ஒரு செந்தாமரை மலர் எப்படி இதழ் விரிகிறது?— சிந்தித்துப் பாருங்கள்.

சிறைக்குள்ளே தவமிருப்பதுபோல, இதழ் மூடிய ஒரு மொட்டுக்குள்ளே தாமரை என்ற ஒரு மலர்த் தத்துவம் இரவு முழுவதும் தண்ணீரிலே ஒற்றைக் காம்பிலே நின்று, நின்று, நின்று, கண்மூடித் தவமிருக்கிறது! ஒற்றைக் காலிலே நின்று யோகிகள் தவமிருப்பதுபோலே, ஒற்றைத் தண்டிலே சேற்றுக்குள் நின்று தவமிருக்கிறது ஒரு தாமரை மலர் என்ற உயிர்த் தத்துவம்! வைகறை ஆகிறது, கதிரவன் உதிக்கிறான். அவனுடைய சிவந்த ஒளிக் கைகள் அந்தத் தாமரை மொட்டின்மீது பட்டதும், பட்டதுமே, உடனேயே, அந்தப் பூ மொட்டிலே ஒரு சிலிர்ப்பு உண்டாகிறது. காதலனுடைய கரங்கள் பட்டதும் ஒரு காதலியினுடைய மேனி சிலிர்ப்பதுபோல, அந்தத் தாமரை மொட்டானது மேனி சிலிர்க்கிறது. அவ்வளவுதான். மொட்டு மலராகிறது!

நீங்களும் நானும் சேற்றிலே இறங்கி அந்த மொட்டை நம் விரல்களினால் மலர்த்த முடியுமா? எந்த மனிதக் கையும் ஒரு தாமரை மொட்டை விரித்து மலராக்க முடிவதில்லை. செங்கதிர்ச் செல்வனுடைய ஒளிக் கரங்கள், அந்த ஒளிவிரல்கள், தாமரை மொட்டினைத் தொட்டவுடனே மலர் சிலிர்க்கிறது, சிரிக்கிறது, மலர்கிறது!

இந்த விந்தையை ஏன், எப்படி என்று எங்ஙனம் விளக்கிச் சொல்வது?

இலக்கியம் பூப்பதும். ஒரு படைப்புக் கலைஞனுடைய இதயம் மலர்வதும் இப்படித்தான்!

குயில் ஏன் பாடுகிறது? மயில் ஏன் நடனம் ஆடுகிறது?

மலருக்குள்ளே தாமரை கண் துயில்கிறது! குயிலுக்குள்ளே பாட்டு குடி கொண்டிருக்கிறது. மயிலுக்குள்ளே நடனம் கண்மூடிக் கிடக்கிறது. எனவே பாடக் கூடிய சூழ்நிலையிலே குயில் பாடுகிறது. மேகத்தைக் கண்டு மயில் ஆடுகிறது. கதிரவனைக் கண்டு தாமரை மலர்கிறது.

கன்றுக்குட்டியைப் பார்த்ததும் பசுவுக்குப் பால் சுரக்கிறது. மெய்யான கன்றுக்குட்டி இல்லையென்றால், போலியான பொய்க் கன்றுக்குட்டியையாவது பசுவுக்கு முன்னால் நிறுத்துகிறோம் அல்லவா! தத்துவம் தெரிந்த பிறவியல்லவா மனிதப் பிறவி. எனவே, வைக்கோலைத் திணித்த பொய்க் கன்றையாவது பசுவின் கண்ணிலே காட்டுகிறோம்! கன்றைக் கண்டதும் பசுவுக்கு மடிசுரக்கும் என்னும் இயல்புணர்வு மனிதனுக்கு நன்றாகத் தெரியும்!

ஆராய்ந்து பார்த்தால் கலைகள் எல்லாமே இப்படித்தான் தோன்றுகின்றன. கவிதை, கதை, சிற்பம், இசை, ஓவியம் எதுவானாலும் அது கன்றை நோக்கிச் சுரக்கும் பசும்பால்தான்!

மலர்வது தாமரையின் இயல்பு. பாடுவது குயிலின் இயல்பு. நடனமாடுவது மயிலின் இயல்பு. பால் சுரப்பது பசுவின் இயல்பு என்பதுபோல, அதனதன் அறம் அது. சுயதருமம் என்பது இதுதான்.

பாடுவது கவிஞனுடைய அறம். வரைவது ஓவியனுடைய இயல்புணர்வு. ஆனால் ஒரு கவிஞன் எப்போதும் பாடுவதில்லை. ஓர் ஓவியன் எப்போதும் வரைவதில்லை, மணலுக்குள்ளே தண்ணீரானது ஊற்றுக் கண்ணுக்குள்ளே உறங்குகிறது. கிளறுகிறோம், மேலே சுரந்து வருகிறது புனல்!

பொதுமக்களின் கூட்டத்தைப் பார்த்துவிட்டால் சிலருக்குப் பேச்சு உதயமாகிவிடும். முன்கூட்டியே சிந்தனை செய்து வைக்காமலேயே பேச்சு தானாகவே உதயமாகிவிடும்! கைதட்டல் அதிகமாக அதிகமாகச் சிந்தனைகள் புதிய வேகம் கொள்ளும்.

இசைக் கச்சேரி செய்கிற பாடகர்களுக்கும் இவ்வாறு தான்! அதாவது கன்றுக்குட்டி முட்டமுட்டப் பசுவுக்கு மேலும் மேலும் பால் சுரப்பதுபோல!

இலக்கியம் என்பதும் மற்றக் கலைகளைப் போலவே இலக்கிய அன்பர்களுக்காகவே, இலக்கியத்தைப் படிப் பவர்களுக்காகவே எழுகிறது, தோன்றுகிறது! பள்ளத்தை நோக்கி ஓடுகிற தண்ணீரைப் போலவே ஓர் ஆசிரியனின் படைப்பாற்றல் இயங்குகிறது.

சரி; ஆனால் படிப்பவர்கள் எல்லோரும் ஒரே மாதிரி இருப்பதில்லையே!

சிறுகதையோ நெடுங்கதையோ, கவிதையோ, கட்டு ரையோ இவற்றைப் படிப்பவர்களின் மனநிலை, அறிவு நிலை, அனுபவிக்கும் திறன் எத்தனை ஏற்றத் தாழ்வுகளிலே இருக்கிறது. இந்த அத்தனை நிலைகளையும் அத்தனை ஏற்றத்தாழ்வுகளையும் நாடியே இலக்கியம் செல்கிறது.

ஆம்; இந்த வெவ்வேறு நிலைகளிலுமுள்ள வாசகர் களுக்காகவே இலக்கியம் எழுகிறது.

குயில் ஏன் பாடுகிறது என்று கேட்டால் "To Cheer its own solitude" என்று ஆங்கிலக் கவிஞன் சொன்னதை மேற்கோள் காட்டலாம். அதாவது குயில் ஏன் பாடுகிறது என்றால், பாடும்போது அதனுடைய உள்ளத்தில் ஏற் படுகிற களிப்பானது, அதனுடைய சூழ்நிலையின் தனி மையை இன்பமயமாக்குகிறது! தான் பாடுவது அதற்கு ஓர் ஆனந்தம்; தனது சூழ்நிலையை ஆனந்தப்படுத்துவதற்காக அது பாடுகிறது என்பதே இந்த மேற்கோளின் உட்கிடை யாகும்.

குயிலுக்குச் சொன்னதுதான் எல்லாக் கலைகளுக்கும். பாடுகிறவன், இசைக் கருவி வாசிப்பவன், கதை சொல்லு கிறவன், கவிதை புனைகிறவன் எல்லாரும் குயிலைப் போலத்தான்!

சொந்த இன்பம் என்பது ஒவ்வொரு கலைஞனுக்கும் அவனுடைய கலையின் வெளியீட்டிலே இருக்கிறது. தீவிர மாகவே இருக்கிறது. கதை அல்லது கவிதை அல்லது ஒரு நாடகம் அல்லது கட்டுரையை எழுதும்போதே எழுதுகிறவ னுக்கு ஓர் ஆனந்தம், ஒரு களிப்பு ஏற்படுகிறது அல்லவா, அந்த ஆனந்தக் களிப்பு இல்லையென்றால் கலையே இல்லை! கலையாக்கம் என்பதே கலைஞனுடைய இந்த ஆனந்தக் களிப்பிலேதான் உருவெடுக்கிறது.

ஆகவே இலக்கியம் ஏன் தோன்றுகிறது என்றால் வாசகருக்காகத் தோன்றுகிறது. எப்படித் தோன்றுகிறது என்றால், கதையை அல்லது கவிதையை எழுதும்போது அல்லது சொல்லும்போது ஆசிரியனுக்கு ஓர் ஆனந்தம் உண்டாகிறதே, அந்த ஆனந்தத்தின் மயமாக அது தோன்றுகிறது!

ஆனந்தம் என்று சொல்லிவிட்டால், சோகப் படைப் புக்கள் இதில் சேர்த்தியில்லையா என்று கேட்கக்கூடாது. படைக்கிற ஆசிரியனுக்குள்ள சிருஷ்டி - ஆனந்தம் அல்லது ஆக்கக் களிப்பு அல்லது படைப்பின்பம் என்பது வேறு; கதைக்குள்ளே வருகிற துயரம் நகைப்பு சினம் முதலிய கதைச் சுவைகள் வேறு. எல்லாச் சுவைகளுக்குமே அந்தச் சுவைகளைக் கற்பனை செய்து தருகிற ஆசிரியனுடைய ஆனந்த அனுபவந்தான் வித்து! கதாநாயகர்களுடைய துயரங்களைச் சித்திரிப்பதிலே ஓர் ஆனந்தம்; அவர்களு டைய கோபத்தை வரைவதிலே ஒரு களிப்பு. அவர்களு டைய இன்னல்களை எடுத்துரைப்பதிலே ஒரு படைப்பு இன்பம். இந்த இன்பம், இந்தக் களிப்பு, இந்த ஆனந்தம் கலைஞனுடைய சொத்து. அவனுடைய பிறப்புரிமையாகிய இயல்பு. இதை யாரும் அவனிடமிருந்து கைப்பற்ற முடி

யாது. அபகரிக்க முடியாது. இன்னொருவனுக்கு இதை அவன் வழிச் சொத்தாக விட்டுவிட்டுப்போக, வழங்கவும் முடியாது!

கற்பனை என்பது படித்து வருகிற ஆற்றல் இல்லை. படிப்பினால் மொழியறிவு வளரும். கலைஞானம் விருத்தியாகும். மண்டையைப் பலப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் கற்பனை என்பது வேறு. சில மாடுகள் தீனி வைத்தாலும் வைக்காவிட்டாலும் பால் கொடுக்கும். சக்தியுள்ள மாட்டுக்குச் சத்துள்ள தீனி கொடுத்தால் இன்னும் அதிகமாகப் பால் கொடுக்கும். வறட்டுப் பசுவுக்குப் போய் எத்தனை பருத்திக்கொட்டையை அரைத்து வைத்தாலும் வீசம்படி பால் கூடத் தேறாது. இதுபோலத்தான் கலைஞர்களின் கற்பனையாற்றல்! வாழ்வில் எவ்வளவோ படித்தும், எத்தனையோ புத்தகங்களைக் கரைத்துக் குடித்தும் இருக்கலாம். பருத்திக் கொட்டையும் பிண்ணாக்கும் போல இவை! ஆனால் எழுதுகோலைக் கையிலே பிடித்தால் ஒரு வரி சொந்தமாக வராது! இதற்குக் காரணம் என்ன? கற்பனை என்ற இயல்பான ஆற்றல் இருந்தால் ஒழியப் படிப்பு பயன் படாது கலையுலகிலே. கற்பனையும் இருந்து, நல்ல படிப்பும் இருந்துவிட்டால் சொல்லவே வேண்டாம்; பருத்தி புடவையாகக் காய்த்ததுபோல!

தாமரை வித்துக்குள்ளே ஒரு படைப்புத் தத்துவம் இருந்துகொண்டு மொட்டுக்குள்ளே போய் இதழ் மூடிக் கிடக்கிறது. சிறை இருக்கிறது. அந்தத் தத்துவம் தாமரை வித்துக்குள்ளே இல்லாவிட்டால், சூரியக் கதிரால் அந்த மொட்டை மலராக்க முடியுமா? முடியாது! சரி, தாமரை வித்துக்குள்ளே அந்தச் சக்தி இருந்தால் மட்டும் போதுமா? சூரியனுடைய ஒளியாகிய ஒரு குறிப்பிட்ட தட்ப வெப்ப நிலையிலேதான் அது மலரும்! இதழை விரித்து நம்மால் அதை மலர்த்த முடியாது. அது, அஃதாகவே மலர வேண்டும்! தன்வினை அது. பிற வினையாகிய மலர்த்தல் இல்லை; தன் வினையாகிய மலர்தல் அது!

ஏதோ கருத்துக்களும் நிகழ்ச்சிப் பின்னல்களும் கிடைத்து விட்டால் கதைகளை எழுதிவிடலாம் என்று நினைப்பது தவறு! சிதறிய இதழ்களை ஒட்டவைத்து ஒரு தாமரைப் பூவைச் செய்கிற மாதிரியான காரியம் அது! அதில் சிருஷ்டி தத்துவம் படைப்புநுட்பம் இராது; உயிர்ப்பு இராது! உயிரே இராது! கருத்து, நிகழ்ச்சி எல்லாம் தவிடும் பிண்ணாக்கும் போலத்தான்! பால் சுரக்கும் மடியிருந்தால் அன்றி, இவற்றால் பயனில்லை!

எங்கோ ஒரு மரத்தில் ஏதோ ஒரு கிளையில் நிகழ்ந்த ஒரு பறவையின் சோகம், வால்மீகி முனிவருடைய இராம காவியத்தை இயக்கியது. ஏன் அப்படி இயக்கியது, எப்படி இயக்கியது என்பதற்கு என்ன விளக்கம் சொல்லுவது? எல்லாப் பறவைகளின் துயரங்களும் எல்லாக் கவிஞர் களுக்கும் கதையையோ காவியத்தையோ தருமா?

அவரவர்களுடைய உள்ளத்தின் பண்புக்கும் பக்குவத் துக்கும் ஏற்ப, வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகள், காட்சிகள் இலக்கிய அனுபவங்கள் எல்லாமாகச் சேர்ந்து மனம் என்ற நிலத்துக்கு உரமாக அமைகின்றன. மண்ணின் வாசிக்குத் தக்கவாறு கதைகளின் தன்மையும் மாறுகிறது.

ஒரு கதாசிரியன் தனது உள்ளம் என்ற வயலிலே ஒரு கருத்து அல்லது ஒரு மைய நிகழ்ச்சியை வித்தாக ஊன்று கிறான். நிலம் ஏற்கனவே நாம் பார்த்தபடி களர் இல்லை. உழுத நிலம். உரமிட்ட நிலம். 'பண்பாடு' என்ற சொல் லுக்கு ஏற்பப் பண்படுத்தப்பட்ட நிலம். அதோடு சொல் லும் பொருளும் மழையும் வெயிலுமாக உதவுகின்றன. சிறு கதைகளின் அறுவடை நன்றாக நடக்கிறது.

எழுத்தாளன் எப்படிச் சிறுகதை எழுதுகிறான் என்பதை வேறு எப்படிச் சொல்வது? ஒவ்வொருவனுக்கு ஓரொரு குறிக்கோள், ஓரொரு சுயதருமம்! ஓரொரு பிறப்பியல்பு! தேள் என்றால் அது கொட்டும். கழுதை என்றால் அது கனைக்கும். குயில் என்றால் அது

பாடும். அது அதன் தன் இயல்பு. அதுபோலவே கதாசிரியன் கதை எழுதுகிறான். பட்டினி கிடந்தாலும் எழுதுவான். சாப்பிட்டுவிட்டும் எழுதுவான், தூங்காமலும் எழுதுவான், தூங்கி எழுந்தும் எழுதுவான். எழுதாமல் அவனால் இருக்க முடியாது.

கதை எழுதுகிறவனைப் பார்த்து, ''ஏன் கதை எழுது கிறாய் அப்பா, களிமண் பொம்மைகள் செய்யலாமே, நாலு காசு வருமே'' என்று சொன்னால் அவனுக்கு அது தெரியாது!

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்!**

என்று வள்ளுவர் வகுத்த நீதியை இயற்கையும் கடைப் பிடிக்கிறது. எழுத்தாளன் எழுதுகிறான். வாசகன் படிக்கிறான். இது அவரவர்களுடைய குணமும் சிறப் பியல்பும் ஆகும். இதற்குமேல் இவற்றுக்குள்ளே நுழைந்து பார்ப்பதற்கில்லை.

குயிலுக்குத்தெரியும், குயில் மாதிரிப் பாட! மயிலுக்குத் தெரியும் மயில் மாதிரி நடனம் ஆட! வான்கோழி மயிலாகாது. காகம் குயிலாகாது. எந்தக் கலையுமே இப் படித்தான்!

மனிதனுடைய இலக்கணம் என்ன, அவன் எப்படி இருப்பான், மனிதப் பிறப்பின் அங்க இயல் எவ்வாறு அமைந்துள்ளது என்று எடுத்து விளக்கம் செய்யலாம். அந்த அங்க இயல்பைப் படித்து வைத்துக்கொண்டு, ஒரு மனிதனைச் செய்து நிறுத்திவிட முடியாது! ஒருவர் எழுதிய சிறுகதைகளின் பட்டியல் ஒன்றைக் கொடுத்து ''இவற்றை நீங்கள் எவ்வெப்போது எழுதினீர்கள்?'' என்று கேட்கலாம், சொல்லுவார், ஒவ்வொரு கதையும் ஒரொரு சூழ்நிலையில் எழுந்தது என்பார். ஒரொரு ஊரில், ஒரொரு ஆண்டில், நடக்கும்போது, ஓடும்போது, புகை வண்டியில் போகும்போது, ஆகாயவிமானத்தில் பறக்கும்போது

என்றெல்லாம் செய்திகள் சொல்லுவார். அத்தகைய ஒரு சூழ்நிலையில், அதுபோன்ற ஒரு கருத்து எப்படி வந்தது என்று மேலும் கேட்கலாம். ''தோன்றியது'' என்பார்! ''எப்படி ஐயா தோன்றியது?'' என்று மறுபடியும் வளைத்து மடக்கினால் என்ன விடை சொல்லுவார்? மன எழுச்சி, கற்பனை உதயம் என்று சொல்லலாம். அல்லது சிந்தனை ஊற்று என்று பயங்காட்டலாம்! எப்படிச் சொன்னாலும் சங்கதி ஒன்றுதான்! பிறப்பின் இரகசியம் அது!

**ஆசை பற்றி அறைய லுற்றேன்இக்**
**காசில் கொற்றத் திராமன் கதையரோ!**

என்று கம்பன் தன்னுடைய காவியத்துக்கு முன்னுரை சொல்லுகிறான். இராம கதையை எப்படி எழுதினான் என்ற கேள்விக்கு, அந்தக் கதையின் தோற்றத்துக்குக் கம்பன் தருகிற விடை இதுதான்:

**ஆசை பற்றி அறைய லுற்றேன்**

'சிருஷ்டி தாகம்' என்றும் 'படைப்பு வேட்கை' என்றும், 'சிந்தனா வேகம்' என்றும் சொல்லுகிறார்கள் அல்லவா, அதையே, ''ஆசை பற்றி அறையலுற்றேன்'' என்று வல்லோசையோடு பேசுகிறான் கம்பன்!

கதைகள் எப்படிப் பிறக்கின்றன என்று கேட்டால், உள்ளத்தின் ஆசைவேகம், மன எழுச்சி, படைப்பு வெறி, சிந்தனைக் குறளியின் சீறல், என்றெல்லாம் பலபடியாகச் சொல்லலாம்.

**சொல்லு சொல் எனவே வாயில்**
**இடிக்குது குறளி**

என்னலாம். எப்படிச் சொன்னாலும் எல்லாக் கலைகளின் பிறப்புக்கும், தோற்றத்துக்குமே ஆதாரம் இதுதான். சிறுகதையும் இவ்வாறே! பிறப்பிலுள்ள நுட்பம் அது. சரி ஆனால் ஒரு குழந்தை பிறந்த பிறகு அதனுடைய நட்சத்திரம், அது பிறந்த ஆண்டு, மாதம்

தியதி, கிழமை முதலான செய்திகளைக் குறித்து வைப்பதும், அது பிறந்த வேளையை ஆராய்வதும், கணக்கு எடுப்பதும் போல் சிறுகதைகளை ஆய்ந்து அவற்றின் தோற்றத்திலுள்ள சில இயல்புகளைக் காணலாந்தானே?

இலக்கியம் எப்படித் தோன்றுகிறது, ஏன் தோன்று கிறது என்பதெல்லாம் மனிதனுடைய தோற்றத்தைப் போல ஆழமான, இரகசியமான தத்துவங்கள் என்றாலும் பிறந்த பிறகு மனிதர்களின் தன்மைகளையும், தோற்றத்தி லுள்ள பண்பு முறைகளையும் எந்தச் சூழ்நிலை எந்த மனிதரை எப்படி உருவாக்குகிறது என்ற மனத் தத்துவ இயல்புகளையும் அலசிப் பார்ப்பதுபோல, இலக்கிய மதிப்புரை அல்லது திறனாய்வு இயலிலே ஒரு கலைஞனு டைய படைப்புக்களின் தோற்றத்திலுள்ள சில நுட்பங் களைக் காணுவது என்பது பயனுள்ள ஆராய்ச்சியேயாகும்.

தமிழ் மொழியில் சிறுகதைகள் எப்பொழுது தோன் றின என்பது குறித்துப் பலர் பல முறைகளில் ஆராய்ந்து பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். உரை நடை என்பது தமிழ் மொழியில் மிக அண்மையில் தோன் றிய இலக்கிய வடிவம் என்று கூறுகிற அறிஞர்கள், தமிழில் சிறுகதைகள் தோன்றியதும் மிகச் சமீப காலத்திலேதான் என்று கூறுகிறார்கள். ஒரு வகையில் இது சரி என்றாலும், ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இதை ஒப்புக் கொள்ளு வதற்கில்லை.

தமிழில் உரை நடை எப்போது தோன்றியது?

தமிழ் எப்போது தோன்றியதோ அப்போதே உரை நடையும் தோன்றியது. தோன்றிவிட்டது என்று சொல் வதுதான் சரியாகும்! தமிழ் மொழியில் நம்முடைய பழைய இலக்கியங்கள் எல்லாம் கவிதை வடிவில், செய்யுள் உருவிலேதான் இருக்கின்றன என்றாலும் நம்முடைய முன்னோர்கள் அனைவரும் தங்களுடைய தினசரி வாழ்வில்

ஒருவருக்கொருவர் கவிதையிலேயா பேசினார்கள்? நம்முடைய பாட்டனும் பாட்டியும், நம்முடைய பாட்டனுக்குப் பாட்டனும், பாட்டிக்குப் பாட்டியும், செய்யுளிலேயா காதல் புரிந்தார்கள்? செய்யுளிலேயா சண்டை போட்டார்கள்? செய்யுளிலேயா தங்கள் வாழ்க்கை வரவு செலவுகளை நடத்தினார்கள்? கவிஞர்களைச் சொல்லவில்லை. சாமானிய மக்களைக் குறிப்பிடுகிறேன். இவர்களுடைய செயல்கள் கவிதையிலேயா நடந்தன? இல்லை! பேசுவது என்ற நிலை எப்போது ஏற்பட்டதோ அப்போதே உலக நாடுகள் அனைத்திலும், உலகமொழிகள் அனைத்திலும் உரைநடையும் தோன்றிவிட்டது.

சாதாரணமாக மனிதர்கள், பொது மக்கள், தங்கள் கோபதாபங்களை, தங்கள் ஆசைகளைத் தங்கள் பாசங்களை, தங்கள் உணர்ச்சி வேகங்களைத் தினசரி வாழ்வின் இதய வெளியீடுகளை எல்லாம் உரைநடையிலேதான் பரிமாறிக் கொண்டார்கள். ஆனால் ஏடும் எழுத்தாணியும், வரிவடிவத்தின் அவசியமான பல சாதனங்களும் மிகவும் குறைவாக, மிகவும் சுருக்கமாக, மிகவும் கட்டுப்பட்ட ஒரு நிலையிலே கிடைத்துவந்த காலத்தில், அச்சு வசதிகளும், நூல் வடிவங்களும் இக்காலத்திற்போல் விரிந்து பரந்து ஓங்கி வளராத அக்காலத்தில் பேசிய பேச்சுக்களையும், நடத்திய உரையாடல்களையும் இலக்கிய வடிவிலே வழங்குவதற்கு வேண்டிய வாய்ப்புமுறைகள் அவர்களுக்கில்லை. எனவே இடச்சுருக்கமும், சிந்தனைச் செறிவும், நினைவிலே நிற்கக் கூடிய இசைவடிவமும் கொண்ட செய்யுளையே இலக்கியக் கருவியாகக் கையாண்டு தங்கள் சிந்தனைகளையெல்லாம் செய்யுள் உருவிலேயே பாதுகாத்து வைத்தார்கள்.

வரலாற்று முறையிலே ஆராய்ந்து பார்த்தால் இதுவே உண்மை. உரைநடையோ, வசனநெறியோ நமக்கு இல்லை என்று சொல்ல முடியாது; நாட்டுப் புறங்களிலே

நடைபெற்ற ''மொந்தை'' நாடகங்களும், தெருக்கூத்துகளும், திண்ணைகளிலே நடந்துவந்த கதை விளக்கங்களும், சந்தைகளிலும் அங்காடிக் கூடங்களிலும் முழு நிலா இரவுகளில் நடைபெற்ற களியாட்டக் கேளிக்கைகளும், பொது அரங்குகளில் நடந்த உரையாடல் நாடகங்களும், எல்லாம் பெரும்பாலும் உரைநடை இலக்கியமே. இந்தக் கலைகள் எல்லாம் பொதுவாக உரைநடையும் பாடலுமாக இணைந்து வழங்கி வாய்மொழி இலக்கியங்களை நன்கு வளர்த்துப் பேணிப் பாதுகாத்து வந்தன. ஆனால் இந்த இலக்கியங்கள் ஏட்டிலே தவழவில்லை. எழுத்து வடிவத்திலே வளரவில்லை; அவ்வளவே குறை. உரைநடையே பேச்சு வழக்கே இல்லையென்றோ, அல்லது வாய்மொழி இலக்கியங்களே இல்லை (Literature of the spoken word) என்றோ சொல்லுவது தவறு.

தமிழ் மொழியில் எத்தனையோ பல நூற்றாண்டுகளாக நமது முன்னோர்கள் வாய்மொழியாகப் பற்பல சிறு கதைகளை வழங்கி வந்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஏட்டிலே இவை பாதுகாக்கப்படாத காரணத்தால், வழிவழியாக வழங்கி வரும் வழிமுறைகளைத் தவிரச் சான்று சொல்லி விளக்கக்கூடிய சிறுகதைகள் அண்மை இலக்கியத்தில் இருப்பதைப் போலப் பண்டை இலக்கியத்திலிருந்து எடுத்துக்காட்டிச் சொலவதற்கில்லை. என்றாலும் தமிழ் இலக்கியத்தில் சங்க காலத்திலிருந்து வழி வழியாக நமக்கு இலக்கியச் செல்வங்களாக விளங்கி வருகிற தமிழ்க்கவிதை இலக்கியத்திலே அரிய பண்புள்ள பல அற்புதச் சிறுகதைகளைக் காண்கிறோம். கலித்தொகையிலும், குறுந்தொகையிலும், அகநானூற்றிலும் காதல் சம்பந்தமான சிறுகதை ஓவியங்கள் ஏராளமாக இருக்கின்றன. சிறுகதை என்ற இலக்கியத்தின் உத்திகள் பல்கிப் பெருகியுள்ள இந்தக் காலத்து மக்களும் வியந்து போற்றும்படியான சிறு கதைகள் இந்த இலக்கிய நூல்களில் ஆங்காங்கே மிளிர்வதைக் காணலாம்.

இதெல்லாம் தமிழ் இலக்கிய உலகிலே நிலவிவருகிற சிறுகதை மரபாகும். ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் எழுந்து வளர்ந்து நிலைபெற்று வருகிற சிறுகதைமரபு தமிழ் மொழியில் எப்படி வேரூன்றுகிறது?

இந்தப் புதிய மரபைத் தமிழில் வேரூன்றச் செய்து அந்த இலக்கியப் புரட்சியில் தமக்கென்று ஒரு நிலையான இடத்தைத் தமது மேதமையினால் வகுத்துக்கொண்ட புதுமைப் படைப்பாளிதான் புதுமைப்பித்தன்!

புதுமைப்பித்தன் என்ற தமது பெயரிலேயே தமது கோட்பாடுகளை உள்ளடக்கி ஒளி வீசுகிற ஒரு மாமேதை அவர்.

மேதை என்று நான் அவரை அழைக்கிறேன். இது வெறும் புகழ்ச் சொல் இல்லை: மெய்யான மதிப்பீடாகும்.

படிப்பினாலும் கல்வித் திறத்தாலும் சிறந்த எழுத்தாளர் என்ற நிலைக்கு உயர்கிறவர்கள் பலர் உண்டு. ஆனால் புதுமைப்பித்தன் அப்படியில்லை.

புதுமைப்பித்தனிடம் படிப்பு இருந்தது, கல்வித் திறம் இருந்தது, ஐயமில்லை. இன்னும் சொல்லப் போனால் நான் பழகியுள்ள முன்னணி எழுத்தாளர்களில் புதுமைப்பித்தனுக்கு நிகராக ஆங்கில உரைநடை இலக்கியத்தை, நாள்தோறும் வெளியாகிற ஆங்கிலப் புத்திலக்கிய நூல்களை, அத்தனை ஆர்வத்தோடு வாங்கி ஆழ்ந்து படித்தவர் வேறு யாருமில்லை. உறுதியாகச் சொல்வேன்.

மேற்கு நாடுகளில் வெளிவருகிற உயர்ந்த எழுத்தாளர்களின் புதிய புதிய கதைகளை, நவீனங்களை, இலக்கியத் திறனாய்வுகளை உடனுக்குடன் படித்து அவற்றின் தரங்களுக்குள் ஆழமாகச் சென்று வாதிடுகிற அளவுக்குப் புதுமைப்பித்தன் ஆங்கிலப் புத்தகங்களை அவ்வப்போது வாங்கிப் படித்துவிடுவார். வியப்படையக் கூடிய விதத்தில் இருந்தது அவருடைய இந்த ஆங்கில மோகம், இந்த

ஆங்கிலத் திறனாய்வு! என்றாலும் அவருடைய படைப் பாற்றலுக்கு வித்தாக இருந்தது இந்தக் கல்வியில்லை. இல்லவேயில்லை. அதனால்தான் அவரை ஒரு மேதை என்று அழைக்கிறேன்.

எனக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்ட நெருங்கிய நட்பு அவர் தினசரியை விட்ட பிறகுதான் உரம்பாய்ந்து இறுகியது. அடிக்கடி திருச்சிக்கு வருவார். அப்போது நான் திருச்சி வானொலியில் நிகழ்ச்சி நிர்வாக அதிகாரியாக இருந்தேன். வானொலி நிகழ்ச்சிக்காகவும் வருவார். சும் மாவும் வருவார். என்னோடுதான் என் வீட்டில் தங்குவார். இரவு தூங்க மாட்டோம். அவருடைய புகழ் பெற்ற பத்த மடைப் பாயிலே தலையணையை மடியிலே தூக்கி வைத் துக்கொண்டு அமர்ந்தபடியே மணிக்கணக்காக வாதாடு வார்.

இலக்கியத்தில் அவரைப்போலவே எனக்கும் சில ஆணித்தரமான கொள்கைகள் உண்டு. எனவே என்னை அவர் மிகவும் நேசித்தார். நட்புக்காக நாங்கள் இருவருமே எங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்கிற பச்சோந்திகள் இல்லை என்பதை இருவருமே நன்கு புரிந்துகொண்டோம். மேலும் இந்தத் தலைமுறை அறிஞர்கள், எழுத்தாளர் களிலே அவர் இதயத்தின் ஆழத்திலிருந்து வெறுத்த சிலரை நான் என் இதயக்கோவிலில் வைத்துப் பூசனை செய்தேன். இந்த இயல்பினால் ஒருவரை ஒருவர் மதிப்பதும், ஒருவர் கருத்துக்கு இன்னொருவர் இடம் கொடுத்து மெச்சுவதும் எங்களுடைய இலக்கிய உடன்படிக்கையாகி விட்டது. எனினும் தருக்கம் இடுவோம். பலமாகச் சண்டை போடு வோம். ஆனால் காழ்ப்பு இராது!

முக்கியமாக ராஜாஜி, டி.கே.சி., கல்கி ஆகிய மும்மூர்த்திகளும் எங்களுக்குள் கருத்து வேற்றுமைக்குரிய மூன்று கேந்திர மையங்கள்! இவர்களுடைய சில படைப்புக் களைப் பற்றி நானும் புதுமைப்பித்தனும் காரசாரமாகச் சண்டை போடுவோம்! அப்போது நான் திருச்சி மார்

சிங்கன் பேட்டையில் ஒரு மாடி வீட்டில் இருந்தேன். ஒரு நாள் நள்ளிரவில் நாங்கள் மாடியிலே போடுகிற சத்தத்தின் ரகளையைக் கேட்டுவிட்டு, அடுத்த வீட்டுக்காரர் அஞ்சி அந்தப் பதற்றத்தில் எங்கள் வீட்டுக்கதவையே தட்டினார், என்ன ரகளை என்ற கவலையோடு! அப்போது கீழே படுத்திருந்த என் தாயார் கதவைத் திறந்து பார்த்து விட்டு, அந்தப் பக்கத்துவீட்டு நண்பரிடம் சிரித்துக் கொண்டே சொன்னாள் : ''என் மூத்தபிள்ளை (புதுமைப் பித்தன்) தம்பியோடு (என்னுடன்) பட்டிமண்டபம் பேசு கிறான். அவ்வளவுதான்! பயப்படவேண்டாம்!''

இதை எதற்கு இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், இலக்கியத் திறனாய்விலே சமகாலத்து எழுத்தாளர்கள் பலரைவிட ஆங்கிலமும் தமிழும் ஆழமாகப் படித்துத் தேர்ந்த ஒரு நல்ல அறிஞர் புதுமைப்பித்தன். என்றாலும் அவருடைய இலக்கியப் படைப்புக்கு ஊற்றுக்கண் இந்தக் கல்வியில்லை. அவருடைய மேதைமையே ஆகும். அதாவது புதுமைப்பித்தனுடைய இலக்கியப் படைப்புக்கு ஊற்றுக் கண் அந்த எழுத்தாளப் பசுவின் நற்சுரப்பு மிக்க பால் மடியே யாகும்! அவருடைய படிப்பு தவிடும் பிண்ணாக்கு மாகப் பயன்பட்டதை ஒப்புக் கொள்ளலாம். அது இந்த முன்னுரையின் தொடக்கத்திலே பார்த்த பசும்பால் சுரக்கும் நுட்பமே!

ஆம்; புதுமைப்பித்தனுடைய கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் எல்லாமே இவ்வாறு தோன்றிய படைப்புகளே.

## "வாக்கும் வக்கும்"

இந்த நாடகம் ஒரு பைத்தியக்கார நாடகம். அதாவது பித்துப்பிடித்த பிச்சைக்காரனை மையமாகக் கொண்டு சுழல்கிற ஓர் உரையாடற் கோவை. நடிப்பதற்கு உரிய நாடகம் என்பதைவிடப் படிப்பதற்கு உரிய நாடகம்

என்றே இதை நான் பார்க்கிறேன். அப்படிப் பார்க்கும் போது புதுமைப்பித்தன் என்ற பெயரிலுள்ள புதுமையும் பித்தும் ஒரு மேதையின் பித்துக்கள் என்பது புலனாகும்.

நாடகம் என்ற உத்தியை ஆராய்ந்தால் இது இலக்கிய எடையிலே எப்படி நிற்கும் என்பதை நான் ஆராயப் புக வில்லை. ஏனென்றால் ஒரு புரட்சிப் படைப்பாளியின் பல விதமான படைப்புக்களில் இதுவும் ஒன்று என்றே நான் இதைப் பார்க்கிறேன். அப்படிப் பார்த்தால் இன்றைய சமுதாயத்தின் ஆட்சிமுறைக்குள்ளே நிழலாடுகிற சில நுட்பங்களை இந்த நாடகம் கூறாமல் கூறுகிறது என்பதைக் காண்போம். இதற்குமேல் இதை விளக்கவேண்டுவதில்லை. மௌனமாக இருந்து படித்துப் பாருங்கள் என்று பரிந்துரை செய்கிறேன். சில இடங்களில் நாடகம் தொய்வு கொடுக் கிறது என்பதையும் முன்னதாகவே சொல்லிவிடுகிறேன்.

## *"சார்! நிச்சயமா நாளைக்கு"*

இந்த நாடகம் முற்றிலும் வேறுவிதம்! மேடைநாடக மாக நடத்திப் பார்க்கலாம். சிறிய திரைப்படமாகவும் எடுத்துப் பார்க்கலாம். புத்தகத்தில் படித்துப் பார்த்தும் அனுபவிக்கலாம். அற்புதமான படைப்பு! உருக்கம், கசிவு, இரக்கம், வேதனை—அடடா, எத்தனை சொற்கள் சொன்னாலும் தகும். புதுமைப்பித்தனுடைய ஆற்றல், மனித வாழ்வின் இருளைப் படம் பிடிப்பதில் ஒப்புயர் வற்றது என்பதற்கு இந்த நாடகம் ஒன்றேபோதும், நிலையான பொருத்தமான கலைப் பண்போடு கூடிய தக்க சான்று! 'கடவுளும் கந்தசாமி பிள்ளையும்' என்ற புதுமைப் பித்தனின் சிறுகதையைப்போல், **'சார் நிச்சயமா நாளைக்கு'** என்ற நாடகமும் கடவுளைப்போல ஒரு சிரஞ்சீவிப் படைப்பு. **''சார் நிச்சயமா நாளைக்கு''** என்பது நாளைக்கு மட்டுமில்லை, நாளை மறுநாளைக்கு மட்டுமில்லை, இன்று நாளைக்கு மட்டுமில்லை, நாளெல்லாம் நிச்சயமாக வாழக்கூடிய ஒரு நிலையான இலக்கியப் படைப்பு, சார்,

நிச்சயமா நாளெல்லாம் வாழும் என்று திண்ணமாகச் சொல்லலாம்.

## "பக்த குசேலர்"

இந்த நாடகம் ஷாவும் இரண்டொரு ரஷிய ஆசிரியர்களும் புனைந்துள்ள நாடகங்கள் போன்று, மொழி நடையிலே சிந்தனை எடைகளை ஏற்றி இறக்குகிற உத்தியில் அமைந்துள்ளது. ஒரே சீரான போக்கின்றி, அங்கங்கே நயங்கள் மிளிர்வதைக் காணலாம். அங்கத நாடகத்தில் இது ஒருவகை.

இந்த மூன்று நாடகங்களையும் இவை எழுதப்பட்ட காலத்திலேயே படித்துள்ளேன். இப்போது இந்த ஆய்வு முன்னுரைக்காக மீண்டும் படித்தேன். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது என்னை மிகவும் கவர்வது இந்த மூன்றில் ஒன்றான 'சார் நிச்சயமா நாளைக்கு' என்ற அருமையான நாடகமே!

''என் கதைகளில் ஏற்றத் தாழ்வு உண்டு. அவற்றிற்குக் காரணம் வார்ப்புப் பிசகு அல்ல; கதை எழுதத்தூண்டிய மன அவசரத்தின் உத்வேகத்தைப் பொறுத்தது, கதையின் கவர்ச்சியில் காணும் ஏற்றத்தாழ்வு!'' என்று புதுமைப் பித்தனே அற்புதமாகச் சொல்லியிருக்கிறார். அவருடைய கட்டுரைகளிலே 'என் கதைகளும் நானும்' என்ற பொருள் பற்றிப் பேசும்போது இவ்வாறு கூறுகிறார். நூற்றுக்கு நூறு மெய்யான வார்த்தை இது. இதற்குரிய சான்று இந்த நூலுக்குள்ளேயே உள்ளது.

## கட்டுரைகள்

'உங்கள் கதை' என்ற கட்டுரையிலே சில அபாரமான வாக்கியங்களைக் காண்கிறோம்.

'சமயம் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாலும், அதன்மேல் படிந்த புழுதி அகலவில்லை'

என்பது போன்ற வாக்கியங்களிலே புதுமைப்பித்தன் என்ற மின்னல் பளீரிடுகிறது!

'இலக்கியத்தின் உட்பிரிவுகள்' என்ற கட்டுரையில் கவிதையின் இலக்கணத்தைச் சொல்லும்போது ''கவி என்ற பகுதியைக் கவனிக்கும்பொழுது சங்கீதத்துடன் இணைந்தது என்பது எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும்!'' என்று ஒரு வாக்கியம் பார்க்கலாம். புதுமைப் பித்தனுடைய இந்த வாக்கியம் அவருடைய நுட்பமான கவியுணர்வை நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகிறது.

சிறுகதை, கவிதை, கலைகள், இலக்கியம் என்று பல தலைப்புக்களிலே கட்டுரைகள் தீட்டியிருக்கிறார். சில இடங்களில் அவருடைய கருத்தோடு நான் மாறுபடுகிற வாக்கியங்களும் வருகின்றன. என்றாலும் அந்தக் கருத்துக் களை நான் மதிக்கிறேன். அவற்றை அவர் வெளியிட்டுள்ள தெளிவை, நேர்மையை, கலையை அனுபவிக்கிறேன்.

சில கட்டுரைகளைப் படித்தபோது அவை அரைகுறை யாகத் தோன்றின. பின்னால் விரிவு செய்து ஆழமான சேர்க்கைகளுடன் கட்டுரை வடிவிலே வடிவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் புதுமைப்பித்தன் குறிப்புக்கள் எழுதி வைத்திருந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருப்பதாகப் பட்டன. ஒன்றிரண்டு கட்டுரைகள்—இலக்கியத்தின் இரகசியம், என்ன எழுதுவது, சின்ன விஷயம் போன்றவை கோலம் போடுவதற்கு முன்பு பெண்டுகள் புள்ளி வைக்கி றார்கள் அல்லவா, அந்தப் புள்ளிகளைப் போன்று கோல மில்லாமல் தோற்றம் தருகின்றன! என்றாலும், இவை அனைத்திலுமே புதுமைப்பித்தன் என்ற மேதையை நான் காண்கிறேன். கோலக்கோடுகள் இல்லாத புள்ளிகளுங்கூட, ''நாங்கள் புதுமைப்பித்தனுடைய புள்ளிகள், அவர் வைத்த பொட்டுக்கள்!'' என்று சொல்லுகின்றன!

## "சிற்றன்னை"

இனி, புதுமைப் பித்தனுடைய 'சிற்றன்னை' என்ற புதினம்.

இந்தப் புதினத்தின் கதை சிக்கல் ஏதுமில்லாத எளிமையான நூலிழையாகும். நிகழ்ச்சிகளில் அதிகமான பின்னல்கள் இல்லாத நேரான சன்னமான சிறிய கதை. ஆனால் அந்தக் கதையின் ஆசிரியர் யார்? ஒரு பெரிய மண்டையிலிருந்து ஒரு சிறிய நூல் இழைகிறது! அப்படிப்பட்ட புதினம் எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும்?

சிற்றன்னை என்ற நாவலுக்குள்ளே இதயங்கள் பேசுகின்றன. பெண் இதயம், கணவனுடைய நெஞ்சம், குழந்தையின் உள்ளம்—இந்த நெஞ்சத் துடிப்புக்கள் படிப்பவர்களின் நெஞ்சத்தையும் துடிக்க வைக்கின்றன. துடிதுடிக்க வைக்கின்றன என்றாலும் பொருந்தும்.

பாத்திரங்களின் வடிவமைப்பு, இதய நெகிழ்ச்சிகளைச் சித்திரிக்கும் புதுமைப்பித்தனின் திருநெல்வேலித் தமிழ், ''படுக்காளி'' ''வாறியா,'' ''போறியா,'' ''ஆசைப் படுறாக'' போன்ற சொற்களின் இயல்புணர்வுகள், எல்லாமாகச் சேர்ந்து நான் இந்தக் கதையைப் பெரிதும் துய்த்தேன். அதோடு புதுமைப்பித்தனின் படைப்பாற்றலின் பாங்கு ஒவ்வொரு நிகழ்ச்சி நிலையிலும் உரையாடலிலும் எவ்வாறு மேதைமையோடு துலங்குகிறது என்பதையும் இந்தப் புதினத்தில் கண்கூடாகக் கண்டு தெளிந்தேன்.

சிறுகதைகளிலும், நாடகங்களிலும் நாம் காணுகிற அதே பேராற்றல் மிக்க படைப்பாளியை இந்த நாவலிலும் நாம் காணுகிறோம்,

இனி, புதுமைப்பித்தனின் கவிதைகளைப் பார்க்க லாம்.

புதுமைப்பித்தன் ஆற்றல் மிக்க படைப்பாளி. அவரு டைய உரைநடையிலுள்ள தமிழ் ஒரு தனிப் பண்போடு கூடியது. எப்படியென்றால், வாழ்க்கையில் தொழில் முறை யிலே அவருடைய நித்தியப் பணி ஆங்கிலத்தில் வருகிற செய்திகளை ஒரே தந்தி வேகத்தில் மொழி பெயர்த்துச் சில மணி நேரத்துக்குள் அச்சேற்றுகிற அவசரப் பணியாகும்! ஆர, அமரச் செய்கிற இலக்கியப் படைப்புப் பணியில்லை அது! எனவே வேகமும் அவசரமும் அவருடைய தமிழைப் பிடரி பிடித்து உந்தித் தள்ளின என்று சொல்ல வேண்டும். அந்த அத்தனை அவசரத்துக்கும் ஈடுகொடுக்கக் கூடிய தமிழ்ப் பின்னணி அவருக்கு இருந்தது. ஓரளவு பழைய தமிழிலக்கியங்களோடு பயிற்சி, மிகப் பெரிய அளவுக்கு ஆங்கில நூல்களின் கல்வி, இவற்றோடு கூர்மையான அறிவு, இத்தனையும் சேர்ந்து அவசரமான அசுர வேக மொழி பெயர்ப்புப் பணியிலே பொழுதெல்லாம் ஈடுபட்டு ஈடுபட்டுப் புதுமைப்பித்தனுடைய தமிழ் நடையிலே ஓர் ஆங்கிலத் துள்ளலும், பாய்ச்சலும் புகுந்து கொண்டன. 'சுரீர்' என்று வெளியிடும் நேர்மை, அதோடு ஒரு வேகம், இந்த இரண்டும் ஒரு படைப்பாற்றல் மிக்க கலைஞனான புதுமைப்பித்தனை இயக்கின. சாதாரணச் செய்தி நிருப ராக அவர் இருந்திருந்தால் நிலைமை வேறுவிதமாக இருக்கும். அவர் ஒரு படைப்பாற்றல் மிக்க கலைஞனாக இருந்த காரணத்தால், தொழிலின் அன்றாட அவசரத் தேவையும், ஆங்கில மொழி பெயர்ப்புப் பழக்கமும் சேர்ந்து அவருடைய படைப்பு நடையிலே ஒரு புதுமையை உண்டாக்கின. செய்திகளை மொழி பெயர்த்துச் சொல்லு கிற இந்த அவசரமும் அனுபவ ஆற்றலும் கதைகளிலே விளையாடியபோது, அந்தத் தமிழ்நடை அபூர்வமான ஒரு பண்பு பெற்றது! அதற்கென்று ஒரு தனியான ஆற்றலும் வேகமும் ஓரளவு கவர்ச்சியும் இணைந்தன! நடையின் செலவிலே ஆங்கில மொழிப்போக்கின் முடிச்சுக்களும் சிக்கல்

களும் இருப்பினும், அவை தமிழுக்குள் புகுந்து ஒரு புதுமையைச் செய்தன!

உரைநடையிலே இருந்த இந்தப் பண்போடு அவர் கவிதையுலகிலே நுழைந்தார். ஏற்கனவே தமிழ்மொழியிலுள்ள கம்பன் பாடல்கள், தனிப் பாடற் சிந்தாமணி போன்ற தொகுப்புக்களையும் மற்றும் சில பிரபந்தங்களையும் ஆழ்ந்து கற்றிருந்த காரணத்தால், புதுமைப்பித்தனுடைய கவியாற்றல் தனியானதோர் வேகமுடைய தமிழ்நடையிலே வெளியாயிற்று. இலக்கண வழுக்களைப் பொருட்படுத்தாமல் வெண்பாக்கள் எழுதிப் பிறகு இந்தப் பிழைகளைத் திருத்திக் கொள்வார். இவ்வாறே யாப்பமைதியிலே முக்கிய நாட்டம் செலுத்தாமல் தமது படைப்பு வேகத்துக்கும் உணர்ச்சியின் உந்துதலுக்குமே வளைந்து கொடுத்து, அவற்றின் போக்கிலே கவிதைகள் புனைந்தார். அவருடைய உரைநடை இலக்கியத்தைப்போலவே இந்தக் கவிதைகளிலும் செறிவும், வேகமும், தனியான நடைப்பண்பும் சேர்ந்து ஓர் அரிய சுவையைத் தருகின்றன.

இந்தத் தொகுப்பிலே உள்ள கவிதைகள் தோன்றிய சூழலையும், உட்கிடை விளக்கத்தையும் தருகிற திரு. ரகுநாதனின் குறிப்புக்கள் இணைப்பாக இந்தத் தொகுப்பிலே இருப்பதால், இந்தக் கவிதைகளைப் பற்றி விரிவாக நான் குறிப்புக்கள் தரவில்லை. ஒன்றுமட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். புதுமைப்பித்தன் பழைய தமிழ் நூல்களை நெல்லையிலே இருந்தபோது படித்துப் பழகியவர் என்பதோடு கூட, அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, தேசிங்கு ராஜன் கதை போன்ற நாட்டுப்பாடல் நயங்களையெல்லாம் ஆழ்ந்து அனுபவித்து, மனப்பாடமே செய்தவர். இவற்றோடு நெல்லை மாவட்டத்தில் வழங்குகிற பெண்டுகளின் வாய்மொழிப் பாடல்களான ஒப்பாரி, அம்மானை போன்ற பல பாடல்களிலே ஊறிப் போனவர் புதுமைப்பித்தன்! எனவே அவருடைய கவிதைகளில்

இந்தப் பின்னணியும் நன்றாகத் துலங்குவதைக் காண லாம்.

புதுமைப்பித்தனுடைய கவிதைகளிலே புல, என்னோடு தொடர்பு கொண்ட நாட்களில் பற்பல சூழ்நிலைகளிலே எழுந்தவை. இவற்றை இவற்றின் பிறப்பிலேயே நான் அறிவேன். அறிந்து அனுபவித்து மதித்துப் பாராட்டினேன். இன்றும் பாராட்டுகிறேன். முக்கியமாக 'நிசந்தானோ சொப்பனமோ' 'ஓடாதீர்,' 'பாதை', 'உருக்கமுள்ள வித்தகரே' முதலிய கவிதைகளைப் புதுமைப்பித்தனிடம் நேரில் மனமாரப் பாராட்டியதுண்டு. இப்போது அந்தப் பாராட்டை 'மிச்சம் சொச்சம்' வைக்காமல் முழு மனத் தோடு வெளியிடுகிறேன். புதுமைப்பித்தனின் மேதை மைக்கு இந்தப் பாடல்களும் தெளிவான இலக்கியச் சான்றுகள் என்று ஆணித்தரமாகக் கூறுகிறேன்.

மாபெரும் எழுத்தாளர்; மாபெரும் படைப்புக் கலைஞர். இன்றையத் தலைமுறையிலே வளரும் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியிலே வளர்ந்தோங்கி நிற்கும் மாபெரும் எழுத்துலக மன்னர் புதுமைப்பித்தன்! மணிக் கொடி தந்த மேதைகளிலே பி.எஸ். ராமையாவை நான் எப்போதும் மதிப்பதுண்டு. அவர் சிறுகதையிலே ஒரு மாபெரும் நிலையைப் பெற்றுத் திகழ்கிறார். அந்த மணிக்கொடி தந்த மாபெரும் எழுத்தாளர்களிலே பி.எஸ். ராமையாவைப் போலவே நான் மிகவும் மதிக்கிற மற் றொருவர் புதுமைப்பித்தன். இவர் சிறுகதைகள் மட்டு மல்லாமல், நெடுங்கதை, கவிதை, திறனாய்வு ஆகிய பல துறைகளிலும் கொடிகட்டிப் பறக்கிற எழுத்துலக மன்னன்!

நீண்ட நாள் நெருங்கிப் பழகியுள்ள புதுமைப்பித்தன் என்னும் அந்த நண்பரின் மேதைமையைப் பாராட்டு வதிலும், அதை ஆய்வு செய்வதிலும், அவருடைய படைப் புக்குப் புகழ்மாலை சூட்டுவதிலும் மகிழ்ச்சியும் பெருமை

யும் அடைகிறேன். இந்த அரிய படைப்புக்களில் என்றென்றும் அமரன் புதுமைப்பித்தனின் நாமம் வாழ்க என்று சொல்லி அஞ்சலி செலுத்துகிறேன்.

இந்தத் தொகுப்பு நூலை இவ்வளவு ஆர்வத்துடன் வெளியிடுகிற ஐந்திணைப் பதிப்பக அதிபர் குழ. கதிரேசன் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

**மீ.ப. சோமசுந்தரம்**

''பச்சை''
ஏஜ 122, எட்டாவது நேர்சாலை
**அண்ணாநகர், சென்னை-600 040**
22-5-'89

# புதுமைப் பித்தன்

இவருடைய பெயர் சொ. விருத்தாசலம். நண்பர்கள் இவரைச் ''சோவி'' [சொ.வி] என்று அன்புடன் அழைப்ப துண்டு.

இவர் பிறந்த ஆண்டு 1906.

நெல்லையில் பி.ஏ. படித்துப் பட்டம் பெற்றார். இவரு டைய தந்தை சொக்கலிங்கம் பிள்ளை, திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் ''தாசில்தார் சொக்கலிங்கம் பிள்ளை'' என்று புகழ்பெற்றவர்.

புதுமைப்பித்தன் தமது கல்லூரிப் படிப்புக்குப் பிறகு, சென்னைக்கு வந்து பத்திரிகை உலகிலே நுழைந்தார். தின மணியிலும் பிறகு, தினசரியிலும் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தார். ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களின் அன்புக்குரிய துணையாசிரியராக நீண்ட காலம் இருந்து பத்திரிகை உலகிலே தமது படைப்பாற்றலினால் பெரிய புரட்சியை உண்டாக்கினார்.

தமது வாழ்வின் கடைசி நாட்களில் திரைப்படத் துறை யிலே புகுந்து பணி செய்தார்.

தினமணியில் இருந்தபோது மணிக்கொடியிலும் வேறு சில பத்திரிகைகளிலும் கருத்தாழம் நிறைந்த சிரஞ்சீவிக் கதை களைப் படைத்துத் தமது புதுமையாலும், புரட்சி நோக்கினா லும், சிந்தனைக் கூர்மையினாலும், வியக்கத்தக்க நெஞ்சுரத் தோடு கூடிய கருப்பொருளாலும், சிறுகதை உத்தியாலும் தமிழ் மறுமலர்ச்சி வானிலே ஓர் அரிய விண்மீனாக ஒளிவீசி வருகிறார்.

இவர் மறைந்த ஆண்டு 1948. இவருக்கு ஒரு மகள்— தினகரி. இவருடைய மனைவியும் ஒரு நல்ல எழுத்தாளர், கமலா விருத்தாசலம்.

இவர்கள் முகவரி :

**புதுமைப்பித்தன் இல்லம்**

24, 5வது பிரதான சாலை

ராஜா அண்ணாமலைபுரம்

**சென்னை-28**

தொலைபேசி: 455176

# முன்னுரை

புதுமைப்பித்தன்

வாழ்வு, வாழ்க்கை என இரண்டு பதங்கள் உண்டு. இவற்றிடையே உள்ள தொடர்பையோ தொடர்பற்ற தன்மை யையோ விளக்குவது, மனித சிந்தனை யின் சாரம். வாழ்வு எனில் தோற்றம், ஸ்திதி, மறைவு என முக்கூறாகத் தோன்றும் பிரபஞ்சத்தன்மை. வாழ்க்கை என்பது தனிப்பட்ட ஜீவராசியின் உயிர்ப் பாசத்தினால் நிகழும் அவஸ்தை. இவ் விரண்டுக்கும் உள்ள தொடர்பைக் காட்டு வது மனித சிந்தனையின் சாரம். அது தத்துவமாக உருவாகிறது. வாழ்வின் நியதி ஒன்று, சூத்திரம் ஒன்று என வற் புறுத்துவது ஆஸ்திகம். வாழ்வு நியதிக் குக் கட்டுப்படாதது, பிரபஞ்ச உற்பத்தியே அகஸ்மாத்தாக நிகழ்ந்த சம்பவம். இதில் நியதிக்கோ, ஒரு கட்டுக்கோப்புக்கோ இடம் உண்டு என நினைப்பது வெறும் சொப்பனாவஸ்தை என வற்புறுத்துவது நாஸ்திகம்,

இவ்விரண்டு விதமான மன நிலை களுக்கும் பிறப்பிடம் மனிதசித்தம். இதைச் சித்திரங்களாகத் தீட்டுவது இலக்கியம்.

மனிதனுக்கும் புறவுலகுக்கும் உள்ள தொடர்பை அல்லது தொடர்பின்மையை மனிதக் கண்கொண்டு பார்ப்பது இலக்கியம். மனிதன் உணர்ச்சிக்கு உட்பட்டவன். உணர்ச்சி உண்மையறியும் சாதனமாகவும், அதை மறைக்கும் திரையாகவும் அமைந்துள்ளது. இலக்கியம் மன அவசத்தில் தோன்றி, புறவுலகின் அடிமுடியை நாட முயலும் ஒரு பிரபஞ்சம். இது தேசந்தோறும் பாஷைக்கும், பண்புக்கும் தக்கபடி பல்வேறு ரூபங்களில் அமைந்துள்ளது. இதன் பொது விதிகளை, தன்மைகளை ஆராயும் நோக்கத்துடன் இக்கட்டுரைகள் எழுதப்பட்டன.

**(புதுமைப்பித்தன் கட்டுரைகள் நூலிலிருந்து)**

## கவிதை என்றால் என்ன?

புதுமைப்பித்தன்

கவிதையைக் கலையின் அரசி என்பார்கள். கல்லாத கலை என்பார்கள். கவிதை என்றால் என்ன? யாப்பிலக்கண விதிகளைக் கவனித்து வார்த்தைகளைக் கோர்த்து அமைத்து விட்டால் கவியாகுமா? கவிதையின் இலட்சணங்கள் என்ன? கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு, ஆனால் அவைகளின் கூட்டுறவு மட்டும் கவிதையை உண்டாக்கி விடாது. கவிதையின் முக்கியபாகம் அதன் ஜீவசக்தி. அது கவிஞனது உள்மனத்தின் உணர்ச்சி உத்வேகத்தைப் பொருத்துத் தான் இருக்கிறது.

(புதுமைப்பித்தன் கவிதைகள் நூலிலிருந்து)

# என் கதைகளும் நானும்

'தன் பலம் தனக்குத் தெரியாது' என்பது வெகு ஜன வாக்கு; அதே மாதிரி தன் பலவீனமும், விசித்திர பேதங்களும் பிறர் கண்ணுக்குத் தெரிவதுபோலத் தனக்குத் தெரியா தென்பதையும் வெகுஜன வாக்காகக் கொள்ள வேண்டும். ஏனென்றால், முந்திய வசனத்தின் உட்கிடை பிந்திய வியாக்கியானம். நல்லதும் சோடையுமாகச் சுமார் இருநூறு கதைகள் எழுதிவிட்டு, அப்புறம் அவற்றின் தராதரத்தைப் பற்றிக் கவனிப்பது எழுதினவருக்கு ஒரு ரசமான பொழுது போக்கு. என்னுடைய கதைகளைப் பொறுத்தவரை அமிதமான பாராட்டும்பரவசமும் ஒரு சார்; மற்றொருபுறம் பலத்த மனப்பூர்வமான கண்டனம். இந்த இரண்டும் என்னுடைய கதைகள் பெற்றுள்ள கவர்ச்சிகள். ஒரு பரமரசிகர் என்னுடைய கதைப் புஸ்தகத்தைக் கண்டவுடன் "இந்த மனிதன் எப்பொழுது கதை எழுதுகிறதை நிறுத்திக் கொள்வான்" என்று ஆவலுடன் கேட்டார். அந்தப் பரம ரசிகருக்குத்தான் என்னுடைய அடுத்த புஸ்தகத்தை—அவருடைய கொய்னா மாத்திரையை—ஸமர்ப்பிக்கப் போகிறேன். மற்றொரு கலைநுணுக்கவாதி, "இவர் என்ன சூனா, மானாவா?" என்று கேட்டார். என் கட்சி பேச ஆசைப்பட்ட ஒருவர் "அவரும் நம்மைப்போல ஒரு மனிதர்தான்" என்று தெளிவுபடுத்திக் கொடுத்தார். இதே

மாதிரிதான் பரவசமும் பாராட்டுதலும். அவையும் தன்னை மறந்த 'சாமியாட்ட'மாக இருக்கிறது.

என் கதைகளில் உள்ள கவர்ச்சிக்கு ஓரளவு காரணம் நான் புனைந்துகொண்ட புனைபெயராகும். அது அமெரிக்க விளம்பரத் தன்மை வாய்த்திருக்கிறது என்பதை இப்போது அறிகிறேன். பிறகு, நான் எடுத்தாளும் விவகாரங்கள்; பலர் வெறுப்பது; சிலர் விரும்புவது. நிற்கட்டும்.

என்னுடைய கதைகளை நான் எப்படி எழுதுகிறேன்? மற்ற எல்லோரையும் போலத்தான் பேனாவும் பென்சிலும் உபயோகித்து எழுதுகிறேன். வாரத்துக்கு ஐந்து ஆறு கதைகளிலிருந்து வருஷத்துக்கு ஒன்று என்ற திருமூலர் அந்தஸ்தை எட்டியிருக்கிறேன். பரிணாம நியதிப்படி வளர்ச்சிதான். இனி மேலும் இந்த நியதிப்படியே பிறக்க ஆரம்பித்தால் பொருளாதார வகையில் எனக்கு நஷ்டக் கணக்குத்தான்.

என் கதைகளில் எது நல்ல கதை? எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொன்றும் நல்ல கதையாகத்தான் இருக்கிறது. இப்பொழுது படித்துப் பார்க்கும்போதும் எனக்கு வாசிக்கப் பரமசுகமாக இருக்கிறது. எல்லோரும் 'சிற்பியின் நரகம்' நல்ல கதை என்கிறார்கள். அது 'மணிக் கொடி' நடக்கும் போது அந்தக் காரியாலயத்தில் சாயங்காலம் சிக்கிக் கொண்டு விளாசிக் கிறுக்கி விட்டு, வீட்டுக்குத் தப்பி வந்த கதை. சிலர் 'நினைவுப் பாதை' நல்ல கதை என்று சொன்னார்கள்; தினமணி வருஷ மலரில்தான் அந்தக் கதை முதல் முதலில் வெளியாயிற்று. அப்போது வருஷ மலரைப் பதிப்பிக்கும் பொறுப்பு என்வசம் அளிக்கப்பட்டிருந்தது. ஒருநாள் ராத்திரி எட்டுப் பக்கங்களுக்கு என்று விஷயங்களை எழுதிக் கொடுத்துவிட்டு, 'புரூப்' வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். ராத்திரி பதினொரு மணி

யிருக்கும். அப்பொழுது அச்சு இலாகா 'போர்மன்' என்னிடம் வந்து, ''ஸார் இரண்டு பக்கங்களுக்கு விஷயம் தேவை'' என்றார். படம் செய்து கொடுப்பவர் குறித்த காலத்தில் 'பிளாக்கு'களை அனுப்பாததனால் அந்தச் சங்கடம். அந்தப் பக்கங்களில் வரவேண்டிய கட்டுரைகளை மாற்றிவிட்டு, வேறு கட்டுரைகளை கொடுத்தேன். அது இரண்டு பக்கங்களில் வந்து உதைத்துக் கொண்டது. வேறு ஏதோ கதை ஒன்று எழுதி அதற்காகச் செய்து வைத்த பிளாக்குகளை உபயோகித்து, இரண்டு பக்கங்களுக்கு என்று ஒரு கதை எழுதி, பக்கத்தை நிரப்பினேன். நிரப்பினேன் என்று சொல்வது பிசகு; 'ரொப்பினேன்' என்று கிராம்யமாகச் சொன்னால்தான் பொருந்தும்.

நான் தினசரிப் பத்திரிகைகளுக்கு வருமுன் ஒரு வாரப் பத்திரிகையில் போய் உதவி ஆசிரியனாக அமர்ந்திருந்தேன். இந்த ஆசிரியர் வீணாகப் பொருள் விரயம் செய்பவரல்ல; ஒரு நாள் என்னிடம் வந்து ஒரு பிளாக்கைக் கொடுத்து, 'இந்தப் படத்துக்காக வைத்திருந்த கதை கைதவறி விட்டது. நீங்கள் இதற்குப் பொருந்துவது போல் ஒரு கதை எழுதுங்கள்'' என்றார். உருவப் படத்தை எழுதி வைத்துக் கொண்டு, அந்த முகஜாடை உள்ளவர் ஒருவரைத் தேடி அவரிடம் அதை விற்பது போல, நானும் ஒரு கதை எழுதிக் கொடுத்தேன். அதுதான் கோபாலபுரம். இன்னும் அதை வாசிக்கும் போது எனக்கு நன்றாக இருப்பது போலத்தான் தெரிகிறது.

இந்தக் கதை எழுதுகிறதிலேயே வேடிக்கையான அனுபவம் எனக்குத்தான் ஏற்பட்டிருந்தது என்று சொல்ல வேண்டும். கதை தருவதாக வாக்குக்கொடுத்து விட்டு, கடைசி நிமிஷம் வரை போக்குக் காட்டி, சாத்தியமானால், அந்தக் குறிப்பிட்ட இதழுக்குத் தப்பி விடுவதில் நான்

கைதேர்ந்த நிபுணன். இது என்னுடைய நண்பர்களான பத்திரிகை நிர்வாகிகளுக்கு நன்றாகத் தெரியும். stay-in-strike போல, பக்கத்தில் ஆளை உட்கார்த்தி வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள். இது வழக்கப்படி அவர்கள் அனுஷ்டிக்கும் முறை. ஒருமுறை ''அடுத்தஇதழுக்கு என்ன கதை''? என்று கேட்டார்கள். ''சரி, தருகிறேன்'' என்றேன். ஒரு நாள் திடீரென்று வந்து ''அடுத்த இதழுக்கு முன் விளம்பரம் கொடுக்கப் போகிறேன். கதையைக் கொடுங்கள்'' என்று கெடுபிடி செய்து விட்டார்கள். 'ரொம்ப நீள மான கதை; பாதிதான் எழுதியிருக்கிறேன். பூர்த்தி செய்து கொடுக்கிறேன்'' என்றேன். அப்பொழுது ''கதையின் பெயரையாவது சொல்லுங்கள்'' என்றார்கள்.

அப்பொழுது மத்திய அசெம்பிளித் தேர்தல் போலிருக்கிறது. காங்கிரஸ் போட்டியிடும் காலம். ஸ்ரீ சங்கு சுப்பிரமணியன் 'தினமணியில்' எங்களுடன் சக ஆசிரியராக, தந்தி மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். அவர் தேர்தல் பாட்டு ஒன்று எழுதி அன்றைத் தினமணியில் பிரசுரமாகி இருந்தது, ''நாட்டினுடநலம் கெடுக்கும் நாசகாரக் கும்பல்'' என்பது அந்தப்பாட்டில் ஒருவரி. 'நாசகாரக் கும்பல்' என்ற வார்த்தைச் சேர்க்கை எனக்குப் பிடித்திருந்தது. அடிக்கடி என் வாய் அதை அலப்பிக் கொண்டிருந்தது. கதையின் பெயர் கேட்ட நண்பர்களிடம் 'நாசகாரக் கும்பல்' என்று சொல்லி விட்டேன். நான் சொல்லப்போகும் அந்த நாசகாரக் கும்பல் யார் என்பது எனக்குச் சற்றும் தெரியாது. முப்பத்து முக்கோடி தேவர்களா அல்லது அதற்கும் சிறிது எண்ணிக்கை குறைவான தேவதைகளா. அல்லது 1935-ம் வருஷ இந்திய சர்க்கார் சட்டப்படி நடக்கும் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்டவர்களா என்பது எனக்குத் தெரியாது. ஏதோ சொல்லிவிட்டேன். பிறகு என் வழக்கப்படி விவகாரத்தை

அடியோடு மறந்து விட்டேன். பத்திரிகைக்குக்கதை கொடுக்க வேண்டிய நாள் நெருங்க நெருங்க மனசு 'கெதக், கெதக்' என்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. வாக்குறுதியை நிறைவேற்றாத கடைசிக் கெடுவும் வந்தது. நண்பர்கள் வந்து உட்கார்ந்து விட்டார்கள். நானும் பேனாவை எடுத்துக்கொண்டு ஓட்டினேன். எழுத்து பக்கம் பக்கமாகக் குவிந்துகொண்டு செல்கிறது; வசமான பிடிப்பு கைக்குள் சிக்கவில்லை. அவர்களும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு, "மீதியை நாளைக்கு முடித்து அனுப்புங்கள்" என்று கைவசமிருந்த கடுதாசிகளையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்தச் சமயம் தப்பித்துக்கொண்டோம் என்ற பிரக்ஞை இருந்ததே ஒழிய, கதை எப்படி முடியுமோ என்ற பிரக்ஞை சற்றும் இல்லை. மறுநாள் எப்படியோ அதை முடித்துக் கொடுத்தேன். கதையும் வெளிவந்தது.

அச்சுப்பிழை பார்க்கிறவர்களை ஒதுக்கிவிட்டால் என் கதையின் முதல் வாசகன் நான்தான். அவ்வளவு ரசித்துப் படிப்பேன். வேகமாக எழுதிக்கொண்டு போவதனால், எழுதியதில் அங்கொன்றும் இங்கொன்றும் தான் என் ஞாபகத்தில் இருக்கும். கோவையாக எழுத்து ரூபத்தில் என் கதைகளை நான் அச்சில்தான் பார்த்து வருகிறேன். அந்தப்படி படித்து வரும்போது முதலில் 'இலங்கையிலிருந்து திரும்பிய மருத்துவனாருக்கு மனைவி காலமாகிவிட்டார்' என்று இரண்டாம் பக்கத்தில் எழுதி விட்டு, முடிப்பதற்கு முன் பக்கத்தில் 'மருத்துவனார் தம் மனைவியின் கைத்தாங்கலில் தள்ளாடி வந்த'தாக எழுதி யிருந்தேன். இந்த மாதிரி மாண்டவர் மீண்ட விந்தை, துப்பறியும் திறமை கட்டாத இந்தக் கதையில் வந்திருப் பதைப் பத்திரிகை ஆசிரியருக்கு நாசூக்காக அறிவித்தேன். நான் எடுத்துக்காட்டிய பிறகுதான் அவர் கண்ணுக்கும் அது தென்பட்டது. பிறகு இனிமேல் செத்தவர்களை

இந்த ரீதியில் உயிர்ப்பிப்பதில்லை என நானும் அந்த ஆசிரியரும் சேர்ந்து வாசகர்களுக்கு உத்தரவாதம் அளித்தோம் என்று வையுங்கள். அந்தக் கதையைச் சமீபத்தில் ஒருமுறை படிக்க நேர்ந்தது, நன்றாகத்தான் இருக்கிறது.

நான் கதை எழுதுகிற சீர்சிறப்பு எல்லாம் இந்த மாதிரிதான் என்று வைத்துக்கொள்ள வேண்டாம். அதாவது நான் எழுதவேண்டியதுதான் பாக்கி; அது நேராகப் பத்திரிகையின் பக்கங்களில் போய் உட்கார்ந்து கொள்வது நிச்சயம் என்று கருதவேண்டாம். அப்படி ஒன்றும் இல்லை. ஒரு காலத்தில் என் கதைகளைப்போல பத்திரிகைகளில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டவை வேறு இருக்கவே முடியாது. நான் இப்பொழுது பிரசுரித்துள்ளவற்றின் அளவுக்கு ஏறக்குறையச் சமமான எண்ணிக்கையுள்ள கதைகள், அவை எழுதப்பட்ட காலத்திலிருந்த பத்திரிகைக் காரியாலயங்கள் எல்லாவற்றையும் க்ஷேத்திர தரிசனம் செய்து விட்டுத் திரும்பியவையாகும். பிரசுரிக்கும் நோக்கமே இல்லாமல் நான் எழுதிக் கிழித்துப் போட்ட கதைகள் எத்தனையோ? எழுத்துக்குக் கைப் பழக்கம் மிகவும் அவசியம். முடுக்கிவிட்ட யந்திரம் மாதிரி தானே ஓர் இடத்தில் வந்து நிற்கும். இது என் அனுபவம். இதுவரை நான் கையாண்டு வரும் இந்த முறை பிசகியதே இல்லை. என் கதைகளிலே ஏற்றத் தாழ்வு உண்டு. அவற்றிற்குக் காரணம் வார்ப்புப் பிசகு அல்ல; கதை எழுதத் தூண்டிய மன அவசத்தின் உத்வேகத்தைப் பொருத்தது கதையின் கவர்ச்சியில் காணும் ஏற்றத்தாழ்வு.

நான் கதை எழுதுவதற்காக நிஷ்டையில் உட்கார்ந்து யோசித்து எழுதும் வழக்கம் இல்லை, இதை நான் ஸ்பஷ்டமாகச் சொல்ல வேண்டியதில்லை; நான் முன் விவரித்த உதாரணங்களே போதும். என் கதைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு எடுத்த எடுப்பில் எழுதியும்,

வெற்றி காணுவதற்குக் காரணம் என் நெஞ்சில் எழுதாக் கதைகளாகப் பல எப்பொழுதும் கிடந்து கொண்டே இருக்கும். அந்தக் கிடங்கிலிருந்து நான் எப்பொழுதும் எடுத்துக் கொள்வேன்; கதை எழுதும் சிலர் இவற்றை விவரப்பட்டியல் எழுதி ஒரு மூலையில் போட்டு வைப்பார் கள். நான் அப்படியல்ல. ஞாபக மறதிக்கு அரிய வசதி அளிப்பேன். அதையும் தப்பி வந்தவைதாம் 'புதுமைப் பித்தன் கதைகள்' என்ற கோவையும் பிறவும். ஆனால் ஒன்று; எழுத்து ரூபத்தில் அமையும்வரை மனசில்உறுத்திக் கொண்டுகிடக்கும் நிலையில் இந்தக் கதைகள் யாவும் இவற்றை விடச் சிறந்த ரூபத்தில் இருந்தன என்பது என் நம்பிக்கை. எழுதி முடித்த பிறகு அவை சற்று ஏமாற்றத் தையே அளித்து வந்திருக்கின்றன. ஆனால் ஏமாற்றம் வெகு நேரம் நீடிப்பதில்லை.

என் கதைகளில் எதையாவது ஒன்றைக் குறிப்பிட்டு அது பிறந்த விதத்தைச் சொல்வதென்றால் ரிஷி மூலம் நதி மூலம் காணுகிற மாதிரிதான். சில ஆபாச வேட்கையில் பிறந்திருக்கலாம். சில குரோத புத்தியின் விளைவாகப் பிறந்திருக்கலாம்; வேறு சில அவை சுமக்கும் பொருளுக்குச் சற்றும்சம்மந்தமே இல்லாத ஒரு காரியம்கை கூடாதபோது எழுதப்பட்டிருக்கலாம். இதனால், சுயமாகக் கற்பனை பண்ணிக்கொண்டிருக்கிறவனுக்கு இன்னதான் இந்தக் கதையை எழுதத் தூண்டியது என்று சொல்வது எளி தல்ல. கேட்டால், ''என்னமோ தோணித்து, எழுதினேன்; என்றுதான் சொல்ல வேண்டும்.

என் கதைகளின் தராதரத்தைப் பற்றி ''எரிந்த கட்சி'' ''எரியாத கட்சி'' ஆடுகிறார்கள். அதற்குக் காரணம், பலர் இலக்கியத்தில் இன்னதுதான் சொல்லவேண்டும், இன்னது சொல்லக்கூடாது என ஒருதத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக் கொண்டி

ருக்கலாம். உண்மை அதுவல்ல; சுமார் இருநூறு வருஷங்களாக ஒரு விதமான சீலைப்பேன் வாழ்வு நடத்தி விட்டோம். சில விஷயங்களை நேர் நோக்கிப் பார்க்கவும் கூசுகிறோம். அதனால்தாம் இப்படிச் சக்கரவட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக்கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக் களறியையும், மனக் குரூபங்களையும். விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப் போகப் போகிறது? இற்றுப்பே னது எப்படிப் பாது காத்தாலும் நிற்கப்போகிறதா? மேலும், இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே? நாலு திசையிலும் ஸ்டோர் குமஸ்தா ராமன், ஸினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரம நாயகம்—இத்யாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்திரிக்காய் பண்ணிக் கொண்டிருப்பதுபோன்ற, அனுபவத்துக்கு நேர் முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடைமுறை விவகாரங்களைப்பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை.

நீளமாகத் தலை கத்தரித்து விட்டுக்கொண்டு, அடையாறு ஜிப்பா போட்டுக்கொண்டு. பங்கியடித்த மாதிரிக் கண்களை ஏறச்சொருக வைத்துக்கொண்டிருக்கும் படங்கள், அவை போன்ற கதைகள், நாசூக்கான கட்டம் வரை, அதாவது உடை குலையாத கட்டம்வரை, எழுதிக் கொண்டிருப்பதே கலையல்ல; அவைகளே 'அப்புறம்' என்ற நினைப்பைத் தட்டிவிட்டு ஆபாச வேட்கைகளைக் கிளப்புகின்றன. இலக்கியத்தில் கலையம்சம் என்பது ஜீவத் துடிதுடிப்பில்தான் இருக்கிறது. ராமாயணத்தில் விபசாரம் இல்லையா? தற்காலப் புஸ்தகத் தணிக்கை போர்டார்,

இப்பொழுது எழுதினால் 'ஆபாசம்' என்ற தலைப்பில் தடை விதிக்கக் கூடிய வேறு விவகாரங்கள் இல்லையா? ஒரு பெரிய மாளிகை மாதிரி ராமாயணம் அகண்டாகார மாக இருப்பதால், அவை பலர் கண்களுக்குத் தென்படுவ தில்லை. கோவில் கோபுரச் சிற்பங்கள் போல என் கதை கள் அப்படிப்பட்டவையென்று நாமகரணம் சூட்டப் பட்டிருப்பதாக நான் தூக்குப் பிடித்துப் பேசவில்லை. என்னுடைய கதைகளில் அப்படிப்பட்டவை விலக்கு அல்ல என்று கூறுதல் பொருந்தும். ஏனென்றால் என் கதை களில் ஒவ்வொன்றும், ஒரு விவகாரத்தைப் பற்றியதாக இருக்கும். ஆனால், என் கதைகளின் பொதுத் தன்மை நம்பிக்கை வரட்சி. ''எதிர் மறையான குணங்கள் இலக்கியத்துக்கு வலுக்கொடுக்குமா?'' என்று கேட்கலாம். அது ஏற்பவர்களின் மனப்பக்குவத்தைப் பொருத்ததே யொழிய, எதிர்மறை பாவத்தின் விஷயத் தன்மையைப் பற்றியதல்ல.

ஒருவர் என்னுடைய புனைபெயரை வைத்துக் கொண்டு என்னை விமர்சனம் செய்தார். ''பித்தமும் இடை யிடையே புதுமையும் காணப்படும்'' என்றார். வாஸ்தவம் தான். 'பித்தா பிறைசூடி பெருமானே' என்ற உருவகத் தில் பொதிந்துள்ள உன்மத்த விகற்பங்களை அவர் குறிப் பிடுகிறார் என்று பொருள் கொண்டு, அவ்வளவும் நமக்கு உண்டு என ஒப்புக் கொள்கிறேன். அவரவர் மனசுக்கு உகந்த ரீதியில் இருப்பவைகளே புதுமை எனக் கொள்ளப் படுகின்றன. நான் பொருள் கொடுக்கும் பித்தம்தான் அதில் புதுமை, என் கதைகளின் புதுமை அதுதான்.

# உங்கள் கதை

## 1

இயற்கையின் பரிணாம விநோதங்களில் மிகவும் அபூர்வமான, விந்தையான பிராணி மனிதன். அவனைப் போல் பலவீனமான ஜீவராசி, அமீபாப் பூச்சி என்று சொல்ல முடியாது. அவனைப்போல், லாவகமாக உயிர் வாழ்வது மட்டுமல்லாது, மற்றவைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் திறமையுமுள்ள பிராணி வேறொன்றும் கிடையாது. வடிவப் பரிணாமப் பரீட்சைகளின் முடிவான பதில் மனிதனே என்று கூறலாம். அமீபாப் பூச்சி முதல் மனிதன் இறுதியாக ஏற்பட்டு வந்த உருவ மாறுபாடுகள், வேறுபாடுகள் எல்லாம் உயிர் வாழ வேண்டும் என்ற ஜீவத் துடிதுடிப்பின் வடிவப் பரீட்சைகள், இந்தத் துடிதுடிப்புத் தான் இயற்கைப் பரிணாமத்தின் அந்தரங்கமான பல்லவி. உயிர் வாழ்வதற்கு உயிர்க் கொலை அவசியம். உயிர் வளர்ச்சி, உயிர் வதையினால்தான் ஏற்பட முடியும். இது இயற்கை விதி.

ஒவ்வொரு பிராணியும், தன் வம்சம் நசித்துப் போகாமல் இருப்பதற்கு எடுத்துக்கொள்ளும் சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. வாழ்க்கை ஒரு போர். இதில், தோற்று நசித்த பிராணிகள் அனந்தம். அவைகள் சிலவற்றின் சின்னங்கள், வாழ்க்கையிலிருந்து ஒதுக்கப்பட்டவைகளாக, தற்பொழுது

பொருட்காட்சிச் சாலைகளை அலங்கரிக்கின்றன. வாழ்க்கை இருக்கும்வரை, உயிர் வாழ்தல் இருக்கும்வரை இந்தப் போர் இருந்து கொண்டுதான் இருக்கும்.

மடிந்து நாசமாகாமல் இருக்க எடுத்துக்கொள்ளும் பிரயாசைகள்தான் நாகரிகத்தின் கரு. அமீபாப்பூச்சி முதல் மனிதன் வரை உள்ள பிராணிகளுக்கு இயற்கை பாதுகாப்புக்களை அளிக்கிறது. அவைதான் ஜீவோபாவங்களின் உருவ வேறுபாடுகள். அதுவரை, பிராணிகளின் இயக்கங்கள் இயற்கையின் தூண்டுதல்கள்தான்.

மனிதன் இயற்கையின் சிகரம். அவனிடந்தான் அறிவு என்ற ஒரு புதுவிதமான பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. அறிவின் வளர்ச்சி—இது ஒரு தனிப்பெரும் பாரதம். அமீபாவிலிருந்து மனிதன் வரும்வரை கழிந்த காலம் கோடிக்கணக்கான வருஷங்கள். செய்த பரீட்சைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பலியாகத்தான் கருத வேண்டும். அவற்றின் பிறகு மனிதன் தோன்றுகிறான். அறிவு விளக்கு மனிதனை எடுத்துச் சென்ற வழிதான் நாகரிகம். சரித்திரம், மனித அறிவின் பழைய பாதைகளை, திசைமாறி அலைந்த வழிகளை, ஒரு சிறிது தூரம் வரை நமக்குக் காண்பிக்கிறது. சரித்திரத்துக்கு அகப்படாமல் மறைந்து போன பாதைகளின் எல்லையை அடைந்து வாழ்பவர்கள் சங்குமணிகளையும், கோரைப் புல்லையும் அணிந்து திரியும் காட்டு மிராண்டிகள். மிருகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மனிதன் வாழ்க்கைப் போரில் தோற்று மடிந்து நாசமாவதற்கு ஏற்ற புற உறுப்புக்களைப் பெற்றிருக்கிறான் என்பதில் ஐயமில்லை. நகமும், சருமமும், பல்லும் பாதுகாப்பின் படைக்கலங்கள். மனிதனுக்குத்தான் அவை மிகவும் பலவீனமானவை. ஆனால், இவற்றுக்கு எல்லாம் பதிலாக அறிவு இருக்கிறது. அதுதான் இவற்றின் வேலைகளைச் செய்கின்றது. மனித வாழ்க்கையின் சரித்

திரம், தவறுகள் என்ற படிக்கட்டின் வழியாகவே நடந்து வருகிறது.

மனிதன், தன் சந்ததி நசித்துப் போகாமல் இருப்பதற்குக் கூட்டத்தில் நம்பிக்கை வைத்தான். ஆதிமனிதனின் சமூகக் கட்டுப்பாடு, கூட்டமாக எதிரிகளைக் கொல்வதற்காகவும், வயிற்றுக்கு வேண்டிய உணவு தேடுவதற்காகவும் வேட்டையாடுவதற்காகவுந்தான் இருந்து வந்தது. அவிழ்த்து உதறின வெறும் நெல்லிக்காய் மூட்டைபோல், ஒரு பிணிப்பும் இன்றித் தான்தோன்றித் தனிக் கூட்டமாக இருப்பதன் பலவீனத்தை மனிதன் அறிய எத்தனை காலம் சென்றதோ! ஆனால் எதிரிகளுக்கு நிரந்தரத் தோல்வியும், வயிற்றுக்கு ஏராளமாக உணவும் கொடுக்கக்கூடிய ஒருவன் வந்து கூட்டத்தைத் தன் இஷ்டப்படி நடத்தி வைப்பதில் அதிசயமில்லை. இவனுக்கு இருக்கும் திறமைகளை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிக் கூறப்படுவதும் இயற்கை. அவை, எதிரிகளுக்குப் பயத்தை மூட்டி, அவனுடைய சொந்த மக்களிடம் மரியாதையைப் பெற்றுத் தந்தது. இம்மாதிரித் தலைவனைப் பெற்ற மனித வர்க்கம், உணவையே வாழ்க்கையின் முதலும் முடிவுமாகக் கருதி, மிருகப் பிராயத்துக்கு ஒரு படிக்கு மேல் இருந்துகொண்டு எத்தனை காலத்தைக் கழித்ததோ!

எந்த வேலையிலும் சிரமம் குறையவேண்டும் என்பதே உயிர்வாழும் கவலை நின்றவுடன் ஏற்படும் ஆசை. கூட்டத்தின் முதல் மனிதன், தலைவன், அவனுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையின் காரணமாக மற்றவர்களும் அதைக் காப்பியடிக்க முயன்றிருக்கலாம். பலமுள்ளவன் துணையைப் பலமில்லாதவன் நாடுவது இயற்கை. அதன் விளைவு அடிமைத் தொழில்.

அரசன் தெய்வமான விதம்—அது வேறு தனிப் பெருங் கதை. வீரனுக்கு அவன் உயிருடன் இருக்கும் வரை, அரச

மரியாதை நடந்தது. அவன் இறந்ததும், அவனது நினைவு மறையாமல் இருப்பதற்கு ஏற்பட்ட சிலை வடிவம், சமயம் என்ற ஒரு பெருங்கிளை வாழ்வை மனித சமூகத்தில் ஏற் படுத்தியது. வீரனது வம்சமே வீரனை முதலாவதாக வழி படும் உரிமையைப் பெறுவது இயற்கை யாதலால், மனித சமூகத்தின் நன்மையைப் பாதுகாக்கும் தலைவனே பூசாரி யாகவும் இருந்தான். பழைய வீர வழிபாட்டின் பூசை, வீரன் இந்த உலகத்திலிருக்கும் பொழுது செய்து காட்டின வீரச் செயல்களுடன், அவனுடைய பெருமையை அதிகப் படுத்த முயலும் பூசாரியின் கற்பனை சேர்த்த பாட்டும் வேட்டையும், யுத்தம் நடத்தும் பாவனையாக நடக்கும் களி யாட்டமுமாம். ஆதியில் இருந்த மனித வர்க்கத்தின் சமயம் வெறும் வீரவழிபாடுதான்.காட்டுமிராண்டியாக, ஆங்காங்கு காளான்கள் மாதிரி, நாகரிகம் என்ற நமது எண்ணங்கள் செல்லாத இடங்களில் வாழும் மனித வர்க்கத்தின் தெய்வ வழிபாட்டு முறைகளும் நமது சுடலை மாடன் முதலிய பேய்த் தெய்வங்களை வழிபடு முறைகளும் இம்மாதிரியான வையே. பேய்க்கண மென்றால், இம்மாதிரியான காட்டு மிராண்டிகள் என்றே தமிழில் அர்த்தம் இருக்கிறது. அவர்கள், நரமாமிச பட்சணிகளாக, நாகரிகத்தின் ஒட்டுக் குடிகளாக வாழ்க்கை நடத்தி வந்தவர்கள். அவர்களும் அறிவு விளக்கை வைத்துக்கொண்டு, மனித வர்க்கம் செய்து வரும் நாகரிக யாத்திரையில் பின்தங்கியவர்கள் போலும்!

இப்படி ஆரம்பித்த சமயத்தினை நட்சத்திரங்கள் அழைத்தன. புழுதியை அணைந்து விளையாடிய குழந் தைச் சமயம் வானத்தை நோக்கியது. பூசாரிகள் சூரியனி லும் சந்திரனிலும் தங்கள் தலைவர்களைக் கண்டார்கள். சூரியனும், சந்திரனும் தெய்வங்களானார்கள்— அவர் களுக்குக் குலத் தலைவர்களானார்கள்.

உதாரணமாக, முருகனைப் பற்றிய பின்வரும் வெண்பா நான் கூற வந்ததை விளக்குகிறது.

**நீல நெடுங்கொண்மூ நெற்றி**
**நிழல் நாறிக்**
**காலை இருள்சீக்கும்**
**காய்கதிர்போல்—சோலை**
**மணித்தோகை மேல்தோன்றி**
**மாக்கடற்சூர் வென்றோன்**
**அணிச்சே வடிஎம் அரண்.**

சமயம் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தாலும், அதன்மேல் படிந்த புழுதி அகலவில்லை. அறிவு வளர்ந்து கொண்டிருக்கும் மனித வர்க்கம் எத்தனை நாள் சக்கையைப் பிடித்துக் கொண்டிருக்க முடியும்? புதிய உண்மைகள் எத்தனையோ தென்பட்டன. ஆனால், பழைய வடிவங்களை தாங்கும் புதிய கற்பனைகளாகத்தான் இருக்க முடிந்தது. உண்மைகள் அப்படியே அப்பட்டமாக இருந்திருந்தால், அவற்றுக்கும் மனித வர்க்கத்துக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்க முடியாது. அது உண்மைகளிடத்தில் இருக்கும் கெட்ட குணம். அவை தனி மனிதனின் வாழ்க்கை விசாரமாகக் கண்டு பிடிக்கப்பட்டவை. உண்மையைக் காண முயலும் தனி மனிதன் சமூகத்தின் விதிவிலக்கு; வாழ்க்கையின் பலி பீடம். உண்மை, மண்ணுலகத்தின் புழுதி படியாது இருக்கும் வரை அது மனித வர்க்கத்தின் உயிர் வாழ்வுக்குத் தடை. சமூகம் மனிதக் கூட்டத்தின் பிணிப்பு. அதன் பாதுகாப்புக்கு ஏற்பட்ட வீர மரியாதை அரசியலாகி, மனிதரின் உடம்பைக் கட்டுப்படுத்தியது. அதன் வீரர் வழிபாடு சமயமாகி, மனிதரின் சித்தத்தைக் கட்டுப்படுத்தியது. ராஜபக்தி என்ற பித்தமும், சமய நெறி என்ற போதையும் இதன் விளைவுகள்.

# 2

உயிர் வாழ்தல், வம்ச விருத்தி இவை இரண்டும் பிராணிகளின் நிரந்தரமான முயற்சி. தனி மனிதன் தன் வாழ்வு நிச்சயத்துக்காகக் கூட்டத்தில், சமூகத்தில், மறைந் தான்; கூட்டத்தின் பாதுகாப்புக்குத் தனி மனிதனின் பலி அவசியமாயிற்று. ஆதலால் வீரனுக்கு—அவன் இந்த வாழ்க்கையை இழப்பதற்குக் கைம்மாறாக— மோட்சம் என்ற ஒரு புதிய கற்பனை உலகம் சிருஷ்டிக்கப்பட்டு, அதில் இடம் அளிக்கப்பட்டது.

ஒரு சமூகத்தின் தெய்வங்களும், மோட்ச லோகமும் அதன் தேவைக்குத் தகுந்தாற்போல் நிர்மாணிக்கப் பட்டவை.

போரே நடைமுறை வாழ்க்கையாக இருக்கும்பொழுது, தெய்வங்கள் வீரனாகவும், சுடலையாகவும், ஜூபிட்டராக வும், ஜெஹோவா, பால்களாகவுந்தான் இருக்க முடியும். நாடோடியாகச் சண்டை பிடித்து வாழ்ந்து மடிந்த மனித வர்க்கம், ஓரிடத்தில் குடியேறி வாழ்க்கை நடத்த ஆரம்பித்ததிலிருந்து, சமூகத்தின் இரட்டைக் காப்பாளிகளான சமயத்துக்கும் அரசியலுக்கும் சக்தி அதிகரித்தது. அதனுடன் கடமையும் அதிகரித்தது. சௌகரியத்துக்காக, அரசியலில் இருந்து சமயம் பிரிந் திருக்கலாம்; அல்லது வேறு விதமாகவும் பிரிந் திருக்கலாம்; ஓரிடத்தில் குடியேறி வாழ்க்கைச் சௌகரியங் களைப் பெற்ற தலைவனின் வம்சம் பலவீனமாக இருக்கும் பொழுது அதிகாரத்துக்கு ஆசைப்பட்ட புதுத் தலைவன் கிளம்பிக் கூட்டத்தின் தலைமையைக் கைப்பற்றி யிருக்க லாம். பழைய வீர வம்சத்தினரோ எனின் தம் குலத்த வனின் பூசாரித் தொழிலிலேயே தங்கள் பெருமையை நிலை நாட்டிக் கொள்ள முயன்றிருக்கலாம். ஆனால் இருவரிடையி

லும் மனத்தாங்கல் இருந்துகொண்டுதான் இருக்கும். தன் சக்தியைப் பலப்படுத்தப் பூசாரியின் தயவைப் புதிய தலைவன் எதிர்பார்க்க வேண்டியிருக்கும். அவனும் அந்தச் சமூகத்தின் விளைவுதானே. பூசாரியின் கற்பனையில் நம்பிக்கை யில்லாமல் இருந்தாலும், அவன் தயவு அவசியமாக இருக்கும் பொழுது அவன் நம்பியி ருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால். காலக்கிரமத்தில் உலாவுந் தெய்வங்களான அரசர்களின் செல்வாக்கும் சக்தி யும், அதிகமானதினால் பூசாரி அடங்கிவிட வேண்டியதா யிற்று. அதிகாரத்தில் ருசி கண்டவர்கள் அதை விட்டுவிட மனமொப்புவார்களா? தங்கள் சக்தியை மறைமுகமாகப் பெருக்கினார்கள், சமயம் வரும்பொழுது தங்கள் கைப் பகடையாக அரசர்களை உருட்டினார்கள் என்று கூறினால் மிகையாகாது.

உதாரணமாக ஐரோப்பாவில் கத்தோலிக்க மதத் தலைவர் போப், ஹோலி ரோமன் சாம்ராஜ்ய அரசர்களு டன் இட்டுக்கொண்டிருந்த பெரும் போர் இதை ஸ்பஷ்ட மாக விளக்கும்.

## 3

உண்மையைக் கண்டு தெளிபவர்கள் சமூகத்தின் விதி விலக்குகள். அவர்களால், மனித வர்க்கத்தின் உயிர் வாழும் பிரச்சனையைப் பொறுத்தவரை, சமூகத்துக்கு ஒரு சிறிதாவது பிரயோஜனம் கிடையாது. நற்காலமாக இப்படிப்பட்டவர்கள் நமது தேசத்தில் சமூகத்தை விட்டுத் தனியாகக் காட்டில் சென்று வசித்தார்களாம். அவர் களுடைய முயற்சியின் பயன்கள் எல்லாம் அவர்களைப் போன்றவர்களுக்கும் அவற்றை அறிய ஆசைப்பட்டவர் களுக்கும் பிரயோஜனத்தை அளிப்பதற்கு ஏற்றபடி சமூகத்தைவிட்டு விலகியே இருக்கின்றன.

மேலை நாட்டிலோ வெனில். அரசாங்கம் உடலைக் கட்டுவதைவிட சமயம் சித்தத்தைப் பலமாக இறுக்கிக் கட்டிவிட்டது. அதனால் புதிய உண்மைகள் பழைய தவறு களுக்குப் புறம்பாக இருந்தால், அவை தவறுகள் தான். நமது நாட்டைவிட மேலை நாடுகளில் அறிவுத் தேட்டம் மிகவும் அபாயகரமானதாகவே, ரகசிய இன்பமாகவே வளர்க்கப்பட்டு வந்தது.

மனிதன் கூட்டம் கூட்டமாகவே வாழ ஆரம்பித்த வுடன், அதனுடன் எழுந்த பிரச்னை ஒன்றின் முடிவு இன்னும் வந்த பாடில்லை. தனிமையின் பலவீனத்தை நினைத்துக் கூட்டத்தை ஸ்தாபித்த மனிதனுக்கு அதன் பலத்தால்தான் உயிர் வாழ முடிந்தது. ஆனால், உயிருக்குப் பணயமாகத் தன் சுதந்தரத்தைக் கொடுத்தான். அதாவது கூட்டத்தின் நன்மைக்காகத் தனிமனிதனின் உயிரைப் பலி கொடுப்பதில் கெடுதல் ஒன்றும் இல்லை என்ற நினைப்பும், அதன் பிறகு, அது அவசியம் என்ற நம்பிக்கையும் கூட ஆரம்பித்தன. இதன் விளைவுதான் அரசியல் தத்துவங்கள் எல்லாம். பிளேட்டோ முதல் மேலைநாட்டு அரசியல் தத்துவ சாஸ்திரிகள் எல்லோரும் கனவு கண்ட கற்பனைச் சமுதாயங்கள் நடைமுறை உலகத் துக்கு ஒவ்வாது போனதன் காரணம், அவை மனிதனுடைய பலவீனத்தை ஒதுக்க முயன்றதுதான். சமூகத்தின் அமைப்பு எவ்விதமானதாக இருந்தாலும், இன்று தாராளமாக விவாதிக்கப்படும் அபேதவாதம், பொதுவுடமை, தனி மனிதத்துவம், சர்வாதிகாரத்துவம் எல்லாம் இந்தப் பிரச்னைக்கு முடிவான பதிலைஅளியா. மனிதன் மனிதனாக இருக்கும் வரை, சமூகமும் தனி மனிதனும் இரண்டு வித்தியாசமான மூலைக் கோடியில் நின்று கொண்டுதான் விவாதித்துக் கொண்டிருப்பார்கள்.

காரணம், மனிதனுக்கு உயிர் வாழ்தல் அவசியமான பிரச்னைதான். ஆனால் வாழ்க்கை வெறும் உயிர் வாழ்தலுடன் முடிவடைந்து விடவில்லை. மனிதன் உடலைக் கட்டுப் படுத்தினாலும், ஒரு விதமாகப் பொறுத்துக் கொள்வான்; அவனுடைய மனத்தைக் கட்டுப்படுத்த முயல்வது மிகவும் ஆபத்தான காரியம். மேலை நாடுகள் முன்பு மதசம்பந்தமான விஷயங்களில் சித்தத்தைக் கட்டுப்படுத்த முயன்று தோல்வியுற்றன. தற்பொழுது இருந்து வரும் சுவாரஸ்யமான அரசியல் தத்துவங்கள் எல்லாம் அதைப் போலவே சித்தத்தைக் கட்டுப்படுத்த முயன்று தோல்வியுறும்.

சமூகம், ஒரே நாளில் ஏற்பட்ட சம்பிரதாயம் அல்ல. மனித வர்க்கத்தின் அநுபவத்தின் விளைவு. அநுபவம் என்பது உயிர் வாழ்தல் என்பதன் பல்லவியாகையால், சித்தத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சமூகத்தின் பாதுகாப்புகளில் அது ஒன்று. சமூக விழிப்பு என்பது விதி விலக்கான செய்தி. அநுபவங்கள் காலத்துக்குப் பிற்பட்டனவாகப் பொக்காகி, பொடிப் பொடியாக உதிரும் வரை. அதாவது, பழைய பாதுகாப்பானது தானாக நசிக்கும்வரை, சமூகம் ஒருமிக்க கவலை கொள்வது கிடையாது. அந்தச் சமயம் ஏற்படும் வரை, புதிய கொள்கைகளை மனத்தினாலும் நினைப்பவனைச் சமூகம் நசுக்க முயல்கிறது. அநுபவங்கள் பாழாகி, அவை புதிய எண்ணங்களுக்கு இடம் கொடுப்பது லேசான காரியமல்ல. முடிவும் முதலும் சந்திக்கும் இடத்துக்குத்தான் புரட்சி என்று பெயர். அது வெறும் இயற்கைத் தத்துவத்தின் விதி. மரணச் சங்கடமும், பிரசவ வேதனையும்தான் ஜீவ தத்துவத்தின் அந்தரங்க விதி. மனிதன் நிருமித்த சமுதாயத்துக்கும், அவன் சித்தத்தை அலைக்கும் எண்ணங்களுக்கும் அதே விதிதான்.

# 4

சமயத்தைப் பொறுத்தவரை, அது ஆதியில் உயிருள்ள தலைவனுக்கு மரியாதையாக ஆரம்பித்துப் பிறகு அரசாங்கத்துக்கும், சமூகத்துக்கும் மறைமுகமான போலீஸ் காரனாகச் சேவை செய்ய முயன்றது. வீரனுக்குக் கைம் மாறாக முதலில் மோட்சத்தை அளித்த சமயம், பகைவர் களுக்கு நரகத்தைக் கொடுத்திருக்கும். சமூகமானது நாடோடியாகத் திரியும் வழக்கத்தை விட்டு ஓரிடத்தில் ஸ்திரமாக இருந்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்ததிலிருந்து, சமூகத்தின் சௌகரியத்திற்குக் குந்தகம் செய்ய முயல்கிற வர்களுக்கு நரகமும், மற்றவர்களுக்கு மோட்சமும் அளித்தது. சமயமானது இத்துடன் மட்டும் சேவையை நிறுத்தியிருந்தால் ஒரு தொந்தரவும் இருந்திருக்காது. மனித வர்க்கத்தில் அவர்களுக்கு விதிவிலக்காக இருக்கும் அறிவுத் தெளிவு பெற்றவர்கள், அவர்களும் தாங்கள் கண்ட உண்மைகளுக்கும் பழைய கற்பனைகளைக் கொண்டதனால் ஏற்பட்ட கலக்கம், அவர்களுடைய கொள்கைகளையும் சமூகப் பாதுகாப்புக்காக இருந்து வந்த சமயத்தினுள் புகுத்திவிட்டது. இதனால் சமயம், சமூகத்தின் பாதுகாப் பாகமட்டிலும் இருக்காமல், அதன் பெரும் எதிரியாகவும் இருக்க வேண்டியதாயிற்று.

அறிவுத் தெளிவில் ஏற்பட்ட உண்மைகளும், கண்டு பிடித்தவர்களின் மனப்போக்குக்கு ஒத்தவாறு, பற்பலவித மாக, லேசில் தவறாக அர்த்தப்படுத்திக் கொள்ளும்படியாக இருந்ததனால், சமூக, சமயம் எதைத்தான் முடிவானது என்று தீர்மானிப்பது இயலாததாயிற்று. அதன் விளைவு கள்தான் பற்பல சமயங்கள் என்ற வித்தியாசங்கள். ஆனால் அவை யாவும், சமூகப் பாதுகாப்பு என்ற உரிமையை விடாது பிடித்துக் கொண்டு இருந்தன. மேல் நாட்டிலும்

ஏற்பட்ட சரித்திர காலத்திற்குட்பட்ட சமயங்கள் எல்லாம் இதன் விளைவுகளே. மற்றவை வீர வழி பாட்டைக் கருவாகக் கொண்டு புதிய எண்ணங்களைத் தாங்கி நின்றவை.

சமயத்துக்கும், அறிவுத் தெளிவுக்கும் ஏற்பட்ட தொடர்பு பௌதிக உண்மைகளைக் கண்டு மேலை நாடு களில் பயப்பட ஆரம்பித்தது. பௌதிக உண்மைகளின் பலி பீடங்களாகவே, மேலைநாட்டு விஞ்ஞானிகள் சென்ற நூற்றாண்டு வரை இருந்து வந்தார்கள். காரணம், பழைய பயந்தான். இந்த நூற்றாண்டு பயத்தைத் தெளிவித்தது என்று கூற வேண்டும். காரணம் சமயம் சமூகத்தின் போலீஸ்காரனாக இருக்கவேண்டிய அவசியம் குறைந்து, அரசியலே அந்த வேலையைச் சரிவர நடத்த முடியும் என்ற கொள்கை பலத்ததுதான். இப்பொழுது, சமயம் சித்தத்தைக் கட்டுவதற்குப் பதிலாக அரசியலே அதைக் கட்டுப்படுத்த முயல்கின்றது. இருந்துவரும் அமைப்புக்கு எந்த எந்த அரசியல் தத்துவங்கள் புறம்பானவையோ அல்லது புதியவையோ, அவை தனி மனிதர்களை அரசியல் நரகத்தில் தள்ளுகின்றன. அடிப்படையான காரணம், ஜீவனாசமாகி வாழ்க்கை தடைப்படும் என்ற வெறும் மிருகப் பயந்தான்.

இந்திய நாகரிகத்தின் வளர்ச்சியும் ஏறக்குறைய இதே மாதிரிதான். என்றாலும், சமூக சமயங்களுக்கும், அவற்றி லிருந்து உண்மைகளை விடுவிக்க முயலும் பெரியார்களின் கோட்பாடுகளுக்கும் ஒரு சமரசம் ஏற்பட்டது. ஹிந்து மதம் என்று ஒன்று இல்லையாயினும், அது எல்லா வித்தியாசங்களையும் தன்னுள் அடக்கும் சமரசமுள்ள ஒரு சமய சமஷ்டியாயிற்று. வெறும் காட்டுமிராண்டித் தனமாகப் பொங்கலிட்டுப் பூசையிடும் தெய்வங்கள் முதல், உபநிஷத்துக்களின் லட்சியங்கள்வரை, எல்லாம் அதில்

இடம் பெற்றன. இந்தச் சமயச் சமஷ்டியை எவ்வளவு கஷ்டப்பட்டுப் பெற்றோம் என்பதை இதிகாச, புராண, இலக்கிய, சரித்திரங்களில் உள்ள எதிரொலிகளிலிருந்து காணலாம். இம்மாதிரியான ஓர் உயர்ந்த கோட்பாடே ஹிந்து நாகரித்தின் உயிர்த் தத்துவத்துக்குச் சாவுமணியோ என்று சந்தேகிக்கும் படியாக இருக்கிறது.

மனித வளர்ச்சியின் பாதை கரடு முரடானது. துன்பமும் கஷ்டமும் சூழ்ந்த இடத்தில்தான் மனிதன் தனது அரிய சக்தியைக் காண்பிக்கிறான் என்று கீத் என்பவர் சொல்லுவது வெறும் மிருக உலகத்தின் விதியல்ல. நாகரிகமும், லட்சியங்களும் அதே பாதையில் தான் செல்லுகின்றன. எந்தச் சமயத்தில் பிரச்சனை என்ற ஒன்று இல்லாமல் போய்விடுகிறதோ, அந்த நிமிஷத்திலிருந்தே நாகரிகத்தின் ஜீவத் துடிப்பு நின்று போகிறது. பழைய லட்சியங்கள் அவற்றை அடைந்த மக்களுக்கே நாசகாரியாக இருந்து, அவர்களை அமுக்கிக் கொன்று விடுகின்றன என்று கூற வேண்டும்.

மனிதன், சண்டையில், துன்பத்தில், செழித்து ஓங்கும் ஜீவராசி. நாகரிகத்தினுடைய அழிவின் உற்பாதம் அமைதி. சண்டை என்பது வெட்டும் குத்துமாக இருக்க வேண்டும் என்பதல்ல. மானத உலகத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். இரண்டும் நின்றால் மனித வம்சம் பூண்டு அற்றுப் போவதில் ஐயமில்லை.

## 5

மனிதன் ஓர் அபூர்வப் பிராணி. அவன் போரிலே வளர்ந்து போரிலே வாழ்ந்து, போரிலே ஓங்குகின்றவன். மது குடித்த குரங்குகளைப்போல் பேய்க் கூட்டங்களாக, உலகத்தில் முதல்முதல் நகரத்தை ஸ்தாபித்த மனித

வர்க்கம், இவ்வளவு தூரம் உயர்ந்து வந்ததே ஆச்சரியம். காரணம் போர்தான். மனிதன், காட்டிலே கஷ்டத்தை எதிர்த்துப் போராடி வளரும் முட்செடியைப் போன்றவன். நாகரிகத்தின் அடிப்படை போர்—அதாவது இயக்கம்.

மனித வர்க்கம் உண்மையில் ஓங்குகிறது என்கிறார்கள். மனிதன் உண்மையை நாடலாம். ஆனால். அவனுடைய வளர்ச்சிக்கு வெறும் பிரமைகளே போதும். மனித வர்க்கம் முன்னேறிச் செல்வதற்காக நடந்த இயக்கங்களின் ஆதிப் பிரச்சனைகள் எல்லாம் வெறும் பிரமைகள்தான்.

மனிதன் ஓர் அபூர்வப் பிராணி, கால நதியில் அவன் வாழ்வின் யாத்திரை வெகு அற்புதமானது. மனித வர்க்கம் இந்த நாகரிகத்தினால் நசித்துப்போகும் என்று எத்தனையோ அறிஞர்கள் வலிய வந்து சாவு மணியடிக்கிறார்கள். பிரமைகளும், அசட்டுத்தனங்களும் இருக்கும் வரை அந்தக் கவலை உலகுக்கு ஏற்பட வேண்டிய அவசியமே இல்லை.

மகா விஷ்ணு விஸ்வரூபம் எடுத்து, வானத்தைத் தொட்டது பழைய கதை. அதன் உண்மையைப்பற்றி இங்கு ஆராய்ச்சியில்லை. இன்று மனிதன்தான் வானத்தைத் தன் லட்சியங்களால் அளக்கிறான். அவன் கால்கள் புழுதி படிந்திருந்தாலும் பூமியில் நன்றாக ஊன்றப் பட்டிருக்கின்றன. அவன் காலைத் தடுமாறாமல் நிலை பெற வைத்திருக்கிற வரையில் மனித வர்க்கம் நசித்துப் போகாது. வானத்து லட்சியங்கள் மனிதனைப் பூமியில் தாங்கவில்லை, உயிர் வாழ்தல் என்ற பாதந்தான் அவனை நிறுத்தி வைத்திருக்கிறது பிரமை என்ற புழுதி படிந்திருந்தால் என்ன? உண்மை மங்கினாலும் வாழ்க்கை நின்று விடாது.

# மதிப்புரை

மதிப்பு என்ற வார்த்தைக்குப் பெறுமானம் அல்லது தகுதி என்ற பொருள் உண்டு. அதனடியாக உயர்வான தகுதிக்கு உரிய என்ற பொருளும் ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்தின் மூலம் இதைச் சற்று தெளிவாக்கிக் கொள்வோம். ''இந்த வீட்டுக்கு என்ன மதிப்புப் போடுகிறாய்?'' ''இன்றைக்கு ராமன் வந்திருந்த போது மதிப்பாக நடந்து கொண்டான்'' இவ்விரண்டு வாக்கியங்களிலும் மதிப்பு தனித்தனி தொனிப்புப் பெறுவதுபோல, புத்தக உலகத்திலும் ஒரு பொருள் கொடுக்கப்படுகிறது. மதிப்பு என்ற வார்த்தை மதிப்புரை என்ற தொடரில் அமைந்து பத்திரிகைகளில் புதிது புதிதாக வெளிவரும் புத்தகங்களை வாசித்துப் பிறகு இவற்றைக் குறிப்பிட்டு இவற்றினடியில் எழுதப்படும் சில வாக்கியங்களுக்குத் தலைப்பாகக் கொடுக்கப்படுகிறது. புத்தகத்தைப் பொறுத்தவரை பத்திரிகைகளைத் தவிர அதனுடன் சம்மந்தப்படுகிறவர் மூவர். அவர்கள் முறையே, அதை எழுதுகிறவர், அச்சடிப்பவர், வாசிப்பவர் என்ற விலாசத்துக்குள் அடங்குகிறவர்களாகும். புத்தகத்தை எழுதுகிறவருக்கு மதிப்புரை

என்றால் அதன்தகுதியை நிர்ணயமாகச் சொல்லும் ஒரு அங்கமாக இருக்கவேண்டும் என்ற ஆசை இருக்கும். புத்தகத்தை அச்சடிப்பவர் அது அப்புத்தகத்தை வாசிக்கிறவன் என்றிருக்கிறானே அந்த ஜந்து தனது பார்வையைத் திறக்கும்படி செய்விக்கும் சாதனமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். மூன்றாவதான வாசகன் இருக்கிறானே, அவன் குறிப்பிடப்பட்டுள்ள புத்தகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவது இயல்பு; அப்புத்தகத்தைப் பற்றி எழுதப்படும் வாக்கியங்கள் வாசிக்கத் தகுந்தவையாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது இயல்பு; ஆனால் முக்கியமாக அவன் எதிர்பார்ப்பது ஒன்றுதான்; மதிப்புரை எழுதியவன் அப்புத்தகத்தைப் பற்றித் தான் கொண்டுள்ள அபிப்பிராயத்தை வகிக்கிறானா அல்லவா என்பதுதான். சார்பான அபிப்பிராயம் எழுதியவனாக இருந்தால், மதிப்புரைஎழுதியவன் புலி; சிங்கக்குட்டி என்று முதுகில் தட்டிக்கொடுப்பான்; இல்லாவிட்டால், "அவனுக்கென்னடா தெரியும்? என்னமோ பேத்தரான்" என்று சொல்லிவிட்டு விலகுவான். பத்திரிகையில் தொடர்புகொண்டு புத்தகத்தைப் பற்றி எழுதுகிறவனுக்கோ, அது தனது பார்வைக்கு வந்து கொண்டிருக்கும் கோடானு கோடி 'கழுத்தறுப்புகளில்' ஒன்று; அவற்றின் விதியை நிர்ணயிக்கும் சக்தி படைத்தவன் தானே என்பது தீர்மானம்.

தமிழில் இருக்கும் நிலையைக் கவனித்தாலோ, எழுதுகிறவர்களைக் கேட்டால், நம்முடைய இன்றைய சாதனையை மேல் நாட்டு இலக்கியங்களுடன் தைரியமாக ஒப்பிடலாம் என மார்தட்டுவார்கள். ஏன் மேல் நாட்டுடன் அது ஒப்பிடவேண்டிய காரியமோ தெரியவில்லை. நம்மூர் நாயர் ஓட்டல் இட்டலியையும் பரமசிவம் பிள்ளை ஓட்டல் தோசையையும் ஹண்ட்லி பாமர்ஸ் பிஸ்கோத்துடன்

வெற்றிகரமாக ஒப்பிட்டு வெளிவரும் கருத்துக்களைக் காணப்பெறும் பாக்கியம் எனக்கு இதுவரை சித்திக்க வில்லை—இலக்கியத்துக்குள்தான் இக்கோளாறு—புத்த கத்தின் முன்னுரை ஆசிரியரைத் தமிழ்நாட்டு பெர்னாட்ஷா என்று பறை சாற்றும்; புத்தகத்தை அச்சடித்தவர் மதிப் புரைக்காகப் புத்தகங்களை அனுப்பிவிட்டு ''தமிழ்நாட்டில் இலக்கியம் ஆரம்பநிலையில் இருக்கிறது; கொஞ்சம் பார்த்துச் செய்யுங்கோ'' என்று சொல்லிவிட்டு ஒவ்வொரு காரியாலயமாக ஏறி இறங்குவார்; இது தவறினால், சில பத்திரிகைகளிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு 'மதிப்புரை' என்ற சிலவாக்கியங்களையும் கொண்டு போய் அனுப்பிப் பிரசுரிக்கச் செய்வார். இவ்வளவு நெளிவு சுளுவுகள் தெரியாத பிரசுரகர்த்தரானால், விதியின் பேரிலும் விளம்பரத்தின் பேரிலும் பாரத்தைப் போடுவார். இவைதான் இன்று மதிப்புரை என்ற வார்த்தையைச் சூழ்ந்து நிற்கும் ரசாபாசமான வாழ்த்துக்கள். ஆனால் உண்மையில் மதிப்புரைதான் என்ன? அது பொதுவாக இலக்கிய விசாரமான ஆராய்ச்சி அல்ல; புதுப் புத்தகம் வந்திருக்கிறது. இது இன்னமாதிரி எழுதப்பட்டிருக்கிறது என்பது கணடிருந்தால்போதும். ஆனால் இன்றுவெளிவரும் புத்தகங்களில் சித்த வைத்தியம், சோதிடம், சிற்றின்பம் பற்றியவை தவிர மற்றவெல்லாம், தம்மை ஒரு இலக்கிய மைல் கல் என மார்தட்டிக்கொண்டு வருகின்றன. இப்படிப் பட்டதொரு மயக்க நிலையைப் போக்கச் சற்றுக் காரமான கருத்துக்கள் வெளியிடப்படுவது குற்றமல்ல; நல்ல இலக்கியமென்றால், எத்தனை நந்திகள் வழிமறித்துப் படுத்துக்கொண்டாலும் இவை உரிய ஸ்தானத்தை அடைந்தே தீரும். பனைமரத்தில் ஊசியைச் சொருகிக் கொண்டு சுமந்து நடந்த பரமார்த்த குருவின் சீடர்கள் போல, எத்தனைபேர் சுமந்துவந்தாலும் பரங்கிக்காய் குதிரை முட்டையாகி விடாது. மதிப்புரை எழுதுகிற

வனிடம் எதிர்பார்க்க வேண்டியது ஒன்றுதான். நல்ல இலக்கியத்தைக் காணும்பொழுது அதைத் தெரிந்து கொள்ளவும், பரிச்சியம் செய்து வைக்கவும் அவனிடம் திராணி வேண்டும்; அப்படியே போலியைக் காணும்போது, யார் வந்து நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் அது போலி என்று சொல்லுவதற்கு நெஞ்சு அழுத்தம் கொண்டிருக்க வேண்டும்; இது போதும்.

# சிறுகதை

## 1

சமீபத்தில் என்னுடைய நண்பர் ஒருவர் ரசமான சம்பவம் ஒன்றைச் சொன்னார். அது நம்மவரிடைக் கதையைப் பற்றி எவ்விதமான அபிப்பிராயம் இருக்கிறது என்பதைக் காட்டுவதுடன், கதையின் தத்துவத்தையே விளக்குகிறது. என்னுடைய நண்பரின் நண்பர் ஒரு இலக்கிய ரசிகர். பாவம், பண்பாடு, மரபு முதலிய சொல்லடுக்குகளைக் கொண்டு அம்மானையாடுபவர். ''நாங்கள் வெளியிட இருக்கும் விசேஷ மலருக்கு ஒரு அரிய கட்டுரையாவது, கதையாவது, அனுப்பித் தரவேண்டும் எனக் கோருகிறோம்'' என அவருக்கு வந்திருந்த கடுதாசியைக் காண்பித்து, ''கட்டுரை எழுதுவதென்றால் சிந்திப்பதற்கு அவகாசமே இல்லை. ஒரு கதையாவது எழுதியனுப்பி விடலாமா என்று நினைக்கிறேன்'' எனத் தமது சங்கடத்தை என்னுடைய நண்பரிடம் பகிர்ந்துகொண்டார். எனது நண்பரும் சிரித்துக்கொண்டே, ''அப்படியானால் இராத்திரியே ஒன்றை எழுதி நாளைத் தபாலில் அனுப்பி விடுங்கள்'' என்று யோசனை சொல்லிவிட்டுப் போனார். மறுநாள் காலையிலும் அந்த ரசிகரின் கண்ணில் படவேண்டியேற்பட்டது, என் நண்பருக்கு. ''என்ன சார், கதை எழுதி அனுப்பிவிட்டீர்களா?'' என்று மரியாதைக்காகக் கேட்டார். அந்த ரசிகர் பொது

வாக நல்ல மனுஷர்; மனசில் உள்ளதை ஒளிக்க மாட்டார். "ஒட்டிப் புளுகுவதற்கு எவனுக்கு வருகிறது சார்? நேற்று ராத்திரி ராமசாமி எழுந்து நின்று அந்தச் சன்னலையே பார்த்துக் கொண்டிருந்தான், என்று ஆரம்பித்து, முதல் வாக்கியத்தை எழுதினேன். ராத்திரி இரண்டு மணியடிக்கிற வரைக்கும் ராமசாமி சன்னலையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். இன்னும் அப்படித்தான் திண்டாடிக் கொண்டிருக்கிறான். மேலே கதை ஓடவில்லை" என்று சொன்னார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு ரசமான ஆழ்ந்த உண்மையிருக்கிறது. கதை நன்றாக, வாய்ப்பாக, கவாச்சியாக அமைந்திருந்தால், நம்மாலும் எழுத முடியாதா என்ற மயக்க உணர்ச்சி தோன்றும்படி அவ்வளவு சுளுவாகத் தென்படும். தரை தெரியும்படியாக அவ்வளவு சுத்தமாக இருந்தால் ஆழம் புலப்படாதல்லவா? அது மாதிரிதான் இந்தக் கலை விவகாரம் எல்லாம். "பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போல்வரும் வெண்ணிலாவே இந்த வேகமுனக்காகாதோ!" "விதியே கொடியாய் விளையாடுதியோ?" என்று வரும் அடிகளில் லகுவாக அமைந்திருக்கும் இயல்பு நம்மையும் பாட்டெழுத வைத்து, கேலிக்கு இடமாக்குகிறதல்லவா? இதுதான் கலையின் இயல்பு. வலிந்து கட்டிப் பேசுவது மாதிரி இருக்காது. சொல்லப்படும் விஷயம் எதுவாக இருந்தாலும், நம்மை அதில் ஒன்ற வைப்பதுடன், நாமும் செய்திருக்கலாமே என்ற மயக்கவுணர்ச்சியை ஏற்படுத்துகிறது. பயன் கருதாது, தன் மயமாகி, லயித்து, ஒட்டிப் புளுகுவது தான் கதை.

இந்தக் கதை விவகாரத்திலே, சமீப காலமாக சிறுகதை என்ற சொல்லாட்சி ஒன்று அடிபட்டு வருகிறது. அந்தப் பதச் சேர்க்கைலே நமக்குப் புதிது. விக்கிரமாதித்தனின் அறுபத்தி நாலு பதுமைகள் சொல்லிய சின்னக் கதைகளும்,

கதைகள் தான்; ராமாயணமும் கதைதான். சிறு கதை என்பது நம்மைப் பொறுத்த வரை அளவைத்தான் குறிப்பிட்டுக் காட்டி வந்தது. இப்பொழுது கொடுக்கும் விசேஷ அர்த்தத்தை அல்ல. இந்தப் பதச்சேர்க்கை வெளிநாட்டுச் சரக்கு.நமக்கு இந்தப்பதம் இங்கிலீஷிலிருந்து கிடைத்தது. இங்கிலீஷில் Short Story என்ற பதத்திற்கு, வார்த்தைக்கு, வார்த்தை மொழி பெயர்ப்புத்தான் சிறுகதை என்ற வார்த்தையும், இங்கிலீஷிலும் அந்தப் பதச்சேர்க்கை சமீபகால விவகாரந்தான். அளவைப் பிரதானமாகக்கொள்ளாது, அங்கும் அதற்கு விசேஷார்த்தம் கற்பிக்கப்படுகிறது. அவர் வலிந்து அப்பதச் சேர்க்கை மீது ஏற்றியுள்ள அர்த்தத்தைத்தான் நாமும் சிறுகதை என்ற பதத்திற்குக் கொடுத்து வருகிறோம். இலக்கியத்தில் இது ஒரு துறை. இந்த முயற்சி வெளிநாட்டுச் சரக்காக இருப்பதினால்தான், சாதாரணமான ரசிகர்கள் இது புரியாது என்று சொல்லி, மரபுக்குப் பொருந்தாது என முடிவு கட்டுகிறார்கள். மரபை ஒட்டிய கதைகளை மட்டுமே படித்தவர்கள், இதென்ன இடையிலே எங்கோ ஆரம்பித்து எங்கோ முடிக்கிறான், எனக்குப் புரியவில்லையே எனச் சொல்வது இயல்பு. ஆனால் அகப்பொருள் துறைகளிலும் பல்வேறு மன அவசங்களைக் காட்டி ஒரு காட்சியை, ஒரு கதையைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் அற்புதமான பாட்டுகளை நுகர்ந்தவர்கள் கூட இதுபுரியவில்லை என்று சொல்லும்போதுதான் விசித்திரமாக இருக்கிறது. சிறந்த சிறுகதைகளுக்கு இலக்கணமாக யாப்பில் எத்தனையோ உண்டு; வசனத்தில் தோன்றியுள்ள இன்றைய சிறுகதைகளைப் புரிந்துகொள்ளாதவர்கள் பழைய காவிய நுகர்ச்சியிலும் அதே நிலையில்தான் இருக்கிறார்கள்.

தமிழில் சிறுகதை என்பது சுமார் ஐம்பது வருஷத்து விவகாரந்தான். செல்வகேசவராய முதலியார் எழுதியுள்ள

அபிநவக் கதைகள் என்ற சிறு தொகுதியை ஆரம்பமாக வைத்துக்கொண்டு கவனித்தால் இன்று நம்முடைய சாதனை பெருமைப்பட்டுக்கொள்ளக் கூடியதுதான்.

சிறு கதைகள் பிறந்து வளர்ந்த காலத்தை மூன்று பகுதியாகப் பிரிக்கலாம். செல்வகேசவராய முதலியாரி லிருந்து வ.வெ-சு. ஐயர் காலம் வரை ஒரு பகுதி. இதை வெறும் சோதனைக் காலம் என்று சொல்லவேண்டும். குறிப்பிடத் தக்க கதைகள் எதுவும் கிடையாது என்று பொதுவாகச் சொல்லலாம். இக்காலத்தில் பிறநாட்டுக் கதைகள், வாய் மொழியாக உலவி வந்தவைகள் எழுத்தில் அமைந்தன. அவற்றில் பெரும்பான்மையாக ஒரு கதை யிருக்கும்; அவற்றில் நடமாடும் பாத்திரங்கள் உயிர் பெற்று இயங்காது. ஆசிரியர் அவற்றை இயக்குவதற்காக, சூத்திரக் கயிற்றைப் பிடித்து இழுப்பதுங்கூட நமக்குத் தெரியும்.

இதற்கடுத்தபடியாக வ. வெ. சு. ஐயர் யுகம் என்று சொல்லவேண்டும். தமிழில் சிறு கதைக்கு உருவும் உயிரும் கொடுத்தவர் அவர்தான். ஒரு விதத்தில் இவரை 'சிறு கதை யின் பிதா' என்று ஆங்கில மரபை யொட்டிக் குறிப்பிட லாம். இவரது கதைத்தொகுதியான '**மங்கையர்க்கரசியின் காதல்** முதலிய கதைகள்' என்பதிலும் அவர் நடத்திய 'பால பாரதி' என்ற பத்திரிகையில் எழுதிய ராஜகோபாலன் கடிதங்கள் என்பவற்றிலும் அபூர்வமான கதைகள் பல உண்டு. குளத்தங்கரை அரச மரத்தை யார்தான் மறக்க முடியும்? அவருடைய கதைகளில் பாலையின் வெக்கை நம்மைப் பொசுக்கும். முகலாய அந்தப் புரத்து நந்தவனங் களின் வைபவம் நம்மைக் களிப்பூட்டும். கிரேக்க தேசத்துக் கடவுளர் நம் முடன் உறவாடுவர். பிரஞ்சு போர்க்கள ரத்த பயங்கரம் நம்மை விரட்டும். பிறநாட்டு மரபுகளையும் பெயர்களையும் நம்மால் ரசிக்க முடியாது என இன்றைய விமர்சகர்கள் சிலர் சொல்லிக் கொண்டிருப்பதற்குத் தகுந்த

பதில் அவரது கதைகள். இவர் காலத்தில், மாதவையா, சுப்பிரமணிய பாரதியார், ராமாநுஜலு நாயுடு ஆகியோர்கள் கதைகள் எழுதி வந்தார்கள். மாதவையா, உலகத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடனேயே பார்த்ததனால், அவர் விரும்பும் கருத்துக்களை வற்புறுத்துவதற்கு சவுக்கியமாக அமைந்த சாதனங்களாகவே கொண்டதால், கதைகள் உயிர்த் தத்துவம் இழந்த வெறும் உபாக்கியானங்களாக அமைந்து விட்டன. அவர் பதிப்பித்த பஞ்சாமிருதம் என்ற பத்திரிகையில் சில சிறந்த சிறு கதைகள் வெளிவந்துள்ளன. ''**மூன்றில் எது?**'' என்று வெளிவந்தது இன்றும் ஞாபக மிருக்கிறது. டாக்டர் சிகிச்சை, நாட்டு வைத்தியம், கோயில் பிரசாதம் இம்மூன்றில் எது சாகக் கிடந்த குழந்தையைப் பிழைக்க வைத்தது என்பதுதான் கதையின் ஆதாரக் கேள்வி. அதிலே ஒரு தாயின் பரிதவிப்பு வெகு அழகாக விழுந்திருக்கிறது. எழுதியவரின் பெயர் எனக்கு நினைவில் இல்லை. ஸ்ரீமாதவையா திடீரென்று காலமானார். கடைசி யாக அவர் பதிப்பித்த இதழில் '**கண்ணன் பெருந்தூது**' என்ற கதை பிரசுரிக்கப்பட்டுள்ளது — உருவ வாய்ப்புக்குச் சிறந்தஉதாரணமாகஅதைத்தான் சொல்லவேண்டும்.கதைப் பாத்திரங்களின் குண விஸ்திரமும் கதையின் போக்கும் பிர மாதம். அதில் எழுதியவர் யார் என்று குறிப்பிடப்பட வில் லை.நடையைக் கவனித்தால் மாதவையாவே எழுதி இருக்கக் கூடும் என ஊகிக்க இடமிருக்கிறது. ஸ்ரீராமாநுஜலு நாயுடு கதை சொல்லுவதில் சமர்த்தர். பாத்திரங்கள் உயிர்த் தன்மையுடன் இயங்குபவை. பெண்களைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்கள் விபரீதமானவை. கலையைப் பற்றியும் பெண்மையைம் பற்றியும் டால்ஸ்டாய் விசித்திர அபிப்பிராயங்களைத்தான் கொண்டிருந்தார். அதற்காக அவர் சிறந்த கலைஞன் என்பதை நாம் மறந்து விடு கிறோமா? அம்மாதிரியே ராமாநுஜலு நாயுடுவை நாம் பாவிக்கவேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக 1930-ம் வருஷத்துக்குப் பின் உப்பு சத்தியாக்கிரகத்தின் இலக்கிய அலையாக ஒரு புது வேகம் இலக்கியத்தில் ஏற்பட்டது. அதாவது எதையும் சிரிக்கச் சிரிக்க எழுத வேண்டும் என்று ஒரு பாணியை வகுத்து அந்தத் துறையில் சிலர் இறங்கித் திறமைகளைக் காட்ட முயன்றார்கள். இவர்களுள் பிரதானஸ்தர் கல்கி. இவர்களுக்குச் சிரிப்பு மூட்டக் கூடிய தன்மையில் எழுத வேண்டும் என்பதே பிரதான லட்சியம். ஹாஸ்யச் சுவை என்பது இயல்பாக அமைய வேண்டிய விவகாரமாதலால், வலிந்து கட்டிக்கொண்டு சிரிக்கவைக்க முயலுவது போட்டோவுக்காகச் சிரித்த மாதிரியாகத்தான்அமையும். கல்கியும், பிறரும் மேல்நாட்டு ஹாஸ்ய சாம்ராட்டுகளை மொழி பெயர்த்துத் தந்தார்கள். அவற்றை அனுசரித்தும் ஒட்டியும் பெயர்த்தும் எழுதினார்கள். கல்கி பிராபல்யத்துக்கு வந்தது அவர் சிரிக்கச் சிரிக்க எழுதுவார் என்பதிலிருந்துதான். ஆனால் பிற்காலத்தில் அவர் சிறுகதைத் துறையில் இறங்கிய பொழுது அவரது எழுத்துக்களில் மருந்துக்குக் கூட சிரிப்பு இல்லாமல் போனதற்குக் காரணம், ஹாஸ்யம் இவருக்கு இயல்பான குணம் அல்ல என்பதுதான். ஆனால், ஹாஸ்யமாகக் கதை எழுதக் கூடியவர்கள் தமிழில் உண்டு. அவர்களிருவர். எஸ். வி. வியும்கொனஷ்டையும். எஸ். வி. வியை விடகொனஷ்டையில் கலையம்சம் ரொம்பவும்நயமாக இருக்கும்; கதைப் பாணி புதிதாக இருக்கும். இந்த ஹாஸ்ய யுகத்தின் வேகம் ஒடுங்கும் நிலையில் தான் இன்னும் ஒரு பேரலை எழுந்தது. அதில்தான் சிறுகதை தமிழில் பூரண வடிவம் பெற்றது. இதைச் சிறப்பாக **மணிக் கொடியுகம்** என்று சொல்ல வேண்டும். இக்காலத்தில்தான் சிறு கதைக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட்டது. பிச்சமூர்த்தி, கு. ப. ரா., பி. எஸ். ராமையா சிதம்பர சுப்பிரமணியன் முதலியவர்களும், நானும் கதைகள் எழுத ஆரம்பித்தோம். வாழ்வுக்குப் பொருள் கொடுப்பது தான் கலை. சிறுகதை

வாழ்வின் பல சூட்சுமங்களையும் எழுத்தில் நிர்மாணித்துக் காண்பித்தது. 'பரமசிவன் வந்து வந்து வரம் கொடுத்துப் போவார், பதிவிரதைக் கின்னல் வரும் பழையபடி தீரும்' என்றிருந்த நிலைமை மாறி நிலாவும், காதலும், கதாநாயகனுமாக சோபித்த சிறுகதைகள் வாழ்வை, உண்மையை நேர்நின்று நோக்க ஆரம்பித்தன.

தமிழ் மரபுக்கும் போக்குக்கும் புதிதாகவும் சிறப்பாக வும்வழிவகுத்தவர் ஒருவரைச் சொல்லவேண்டும் என்றால், 'மௌனி' என்ற புனைபெயரில் எழுதி வருபவரைத்தான் குறிப்பிட வேண்டும். அவரைத் தமிழ்ச் சிறுகதையின் திரு மூலர் என்று சொல்ல வேண்டும். அவர் மொத்தத்தில் இது வரை பத்துக் கதைகள் தான் எழுதியிருப்பார். கற்பனையின் எல்லைக் கோட்டில் நின்று வார்த்தைக்குள் அடைபட மறுக்கும் கருத்துக்களையும் மடக்கிக் கொண்டு வரக்கூடியவர் அவர் ஒருவரே. தமிழிலே **நட்சத்திரக் குழந்தைகள், சிவசைலம், எகிங்ருந்தோ வந்தான், கடவுளும் கந்தசாமி பிள்ளையும்** என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கதைகள் ஒப்புயர்வற்றவை. இன்று சிறு கதைகள் வளர்ந்து வரும் லட்சியம், அதன் வரம்புகளையும். சாதனைகளையும் நிர்ணயிப்பது கடினம். இன்று கதைக்கெனவே தமிழில் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவை ஒவ் வொன்றும் ஒவ்வொரு பாணியைப் பின்பற்றி அற்புதமான பயன்களை அளித்து வருகின்றன. இவற்றில் சிறப்பாகக் கலைமகளைக் குறிப்பிட வேண்டும். பிரதான மானவை எனச் சொல்லத் தக்கவை பல அதில்தான் வெளி வந்துள்ளன. இவை தவிரச் சாதனையை அளவிட்டுக் காட்டுவதுபோல, கோவையாக சிறு கதைகள் ஏராளமாக வெளிவந்துள்ளன. அவை இன்றைய நிலைமையை ஓரளவு தெளிவாகப் பிரதிபலிக்கும்.

# சிறு கதை

## 2

கதைகேட்பதும் கதை சொல்லுவதும் தொன்று தொட்டு வந்த பழக்கம். 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா இருந்தான்' என்று ஆரம்பிக்கும் இளமை மாறாத கிழக்கதைகள் முதல் இன்று இருக்கும் எழுத்தாசிரியர்களின் கனவுகளான சிறு கதைகள் வரை, எல்லாம் மனித உள்ளத்தின் அடையமுடியாத ஆசைகளின் எதிரொலி. கதை என்றால் என்ன? எதுதான் சிறு கதை? சிறுகதையின் எல்லை என்ன? சிறுகதைக்கு என்று தனிப்பட்ட ரூபம் ஒன்று உண்டா? இதற்கெல்லாம் சூத்திரங்கள் ஒன்றும் கிடையாது. சிறுகதையின் எல்லை வளர்ந்து கொண்டே வருகிறது. ஒவ்வொரு கதை யாசிரியனும் எடுத்தாண்ட ரூபங்கள் எண்ணிறந்தன. இருக்கும் கதை களை வைத்துத்தான் இவைதான் சிறு கதை என்று நிர்ணயிக்க வேண்டும்.

சிறு கதையின் ஜீவநாடி ஒன்று, அதில் எடுத்தாளப் படும் சம்பவம் அல்லது நிகழ்ச்சி தனிப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். சிறுகதை வாழ்க்கையின் சாளரம்.

கவிதையிலே **'லிரிக்'** என்று ஒரு பகுதி உண்டு. ஒரு தனிச் சம்பவம், அல்லது உணர்ச்சி, அல்லது குணவிஸ் தாரம், அல்லது வருணனை எடுத்தாளப்படும், தனிப்

பிண்டமான சிறு கவிதையை 'லிரிக்' என்று கூறுவார்கள். தமிழில் அதைத் தனிப்பாட்டு என்று அர்த்தப் படுத்திக் கொள்ளலாம். சிறுகதைக்கும், தனிப்பாட்டு என்ற லிரிக்கிற்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான். லிரிக்கிற்கு ரூபம் அவசியம்; சிறு கதையில் ரூபம் கதை எழுதுபவனின் மனோதர்மத்தைப் பொறுத்தது. இவ்வாறு அகன்ற எல்லைக் கோட்டிற்குள்தான் இலக்கியத்தின் சிறுகதைப் பகுதி அடங்குகிறது. சிறுகதை என்றால் அளவில் சிறிய தாக இருப்பது என்பதல்ல; எடுத்தாளப் படும் சம்பவம் தனி நிகழ்ச்சியாக இருக்க வேண்டும்.

சிறு கதைக்கும் நாவலுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனித்து விட்டு, பிறகு உதாரணமாக ஒரு சிறுகதையை எடுத்து அதன் கட்டுக் கோப்பைக் கவனிப்போம்.

சிறுகதை வாழ்க்கையின் சாளரம் என்றால், நாவல் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணாடி. வாழ்க்கை யின் சிக்கல்களை, அதன் உயர்வை, அதன் சிறுமைகளை, உலாவும் பாத்திரங்களான மனிதக் கூட்டத்தின் சலனத்தில் அவற்றின் குண விஸ்தாரத்துடன் சிருஷ்டிப்பதுதான் நாவல். நாவலுக்குக் கால எல்லை கிடையாது. சென்ற காலம், நிகழ்காலம். வருங்காலம் இவற்றின் நிகழ்ச்சியை மனோ தர்மத்தால் சிருஷ்டியின் மேதை குன்றாமல் கற்பனை செய்வதுதான் நாவல். சிறுகதை வாழ்க்கையின் ஒரு பகுதியை மற்றவற்றின் கலப்பை மறந்து ஏன், விட்டு விட்டுக் கவனிக்கிறது. நாவல், வாழ்க்கையை அப்படியே முழுசாக சிருஷ்டிக்க முயல்கிறது. இவைதான் ஆசிரியர் களின் இலட்சியங்கள். ஒவ்வொருவருடைய மனோ தர்மத் திற்கும் சிருஷ்டி சக்திக்கும் அநுபவத்திற்கும் தக்கவாறு நாவல்கள் பிறக்கின்றன.

சிறுகதையை வாழ்க்கையின் சாளரம் என்று சொன் னேன். உதாரணமாக ஒரு கதையை எடுத்து அதன் கட்டுக்

கோப்பைப் பிரித்துப் பார்ப்போம். சிறுகதைப் பின்னலில் ஆரம்பம், மத்திய சம்பவம், அதன் வளர்ச்சி அல்லதுவீழ்ச்சி என்ற மூன்று பகுதிகள் உண்டு. சாதாரணமான கதை களில் இம் மூன்றும் படிப்படியாக வளர்ந்து கொண்டே போகும். சமீபத்தில் எழுதப்பட்ட அமெரிக்கச் சிறுகதை களில் பழைய சம்பிரதாயமான ஆரம்பம் முடிவு என்ற இரண்டு பகுதிகளும் கிடையவே கிடையாது. கதை திடீரென்று மத்திய சம்பவத்தின் உச்சஸ் தானத்தில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடைகிறது. இன்னும் வேறு ஒரு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்ற ஒன்று கிடையாது. அதாவது கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒருதூண்டு கோல், கதை முடியும் பொழுது அதைப் பற்றிய சிந்தனை முடிவடைந்துவிடாது; இப்படிப்பட்ட கதைகள் முடிந்த பிறகுதான் ஆரம்பமாகிறது என்று சொன்னால் விசித்திர வாதமாகத் தோன்றும்; ஆனால் அதுதான் உண்மை. இம்மாதிரியாகக் கதை எழுதுகிறவர்கள் இந்த முறையின் சார்பாகக் கூறும் வாதம் ஒன்று. வாழ்க்கையில் 'முற்றிற்று' 'திருச்சிற்றம்பலம்' என்று கோடு கிழித்து விட்டு 'ஹாய்' யாக நாற்காலியில் சாய்ந்து கொள்ளும்படி ஏதாவது இருக்கிறதா? வாழ்க்கை எல்லையற்றது; மனந்தான் எல்லைக் கனவுகளைக் காண்பது. கடவுள் வாழ்க்கையின் கடைசிப்பக்கத்தை எழுதிவிடவில்லை; அவரால் எழுதவும் சாத்தியப்படாத காரியம். இதுதான் அவர்கள் கூற்று, கதை களுக்குச் சம்பவம் அவசியமா, இப்படிப்பட்ட விகற்பங்கள் இருக்கலாமா என்று பலர் கேட்கிறார்கள். கதைகள் அவரவர்களுடைய சுவையையும் ரசனையையுந்தான் பொறுத்தது. ஒரு நிகழ்ச்சியை சுவாரஸ்யமாகப் பின்னுவது சிறுகதையில் ஒரு பகுதி. அவரவர்களுடைய அநுபவத் திற்கும் ரசனைக்கும் ஏற்றபடிதான் கதைகளைப் படிக்க

முடியும். அதனால் இவை யெல்லாம் சிறுகதை அல்ல என்று கூறுவது அசட்டுத்தனம்.

உதாரணமாக ஸ்ரீ. பி. எஸ். ராமையா எழுதிய 'பூச் சூட்டல்' என்ற கதையை எடுத்து கதைப் பின்னலைக் கவனிப்போம. கதையில் எடுத்தாளப்படும் சம்பவம் நைந்த ஆனால் மிகவும் அபாயகரமான பொருளைப் பற்றியது; அதாவது ஒரு இளம் விதவையின் துன்பம். பழைய விஷயங்களை எடுத்து எழுதுவதுதான் மிகவும் அபாய கரமான விஷயம். வாசகன் எப்பொழுது, லேசில் பொறுமையை இழக்கக் கூடியவன் என்பதை எழுத்தாளர் கள் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். 'ஆமாம் அவ்வளவுதானா' என்று பக்கத்தைத் தள்ளிக் கொண்டு போவதில் நிபுணன். அவனுக்குத் தெரிந்த விஷயத்தை, அதாவது அவன் காதுகள் புளித்துப் போகும்படியாகக் கேட்ட விஷயத்தை, மெய் மறந்து உட்கார்ந்து கேட்கும் படிச் செய்வது மிகவும் கடினமான காரியம். அதைச் சாதிப் பதற்கு எழுத்தாளர்கள் கையாளும் தந்திரங்கள் எத்த னையோ உண்டு, 'பூச்சூட்டல்' என்ற கதையில் ஆசிரியர் புதிய முறைகளைக் கையாளாமல், சம்பிரதாயத்திற்குட் பட்ட, ஆரம்பம் மத்திய நிகழ்ச்சி. முடிவு என்ற மூன்று அங்கங்களும் உள்ள சாதாரண முறையில் ஒரு சம்பவத்தை வருணித்திருக்கிறார். ஆனால் முறையில புதுமை இல்லா விட்டாலும், கதை பின்னும் தந்திரத்தால், பழைய நைந்த விஷயத்திற்கு ஒரு புதிய மெருகு கொடுத்துவிடுகிறார்.

கதையில் ஒரு இளம் விதவை தன் சகோதரன் குழந்தைக்குப் பூ வைத்துப் பின்ன முயல்கிறாள். குழந்தை அவளையும் பூச்சூட்டிக் கொள்ளும்படி வற்புறுத்துகிறது. அதிலிருந்து அவள் மனது கலைந்து பின் நோக்கிப் பாய் கிறது. மனதின் பின் பாய்ச்சலில் அவள் பூர்வ கதை

முழுவதும் சித்திரிக்கப் பட்டு விடுகிறது. முதல், ஆரம்பம், பிறகு சீதையின் மற்றொரு சகோதரனுடைய சாந்தி முகூர்த்தம். அந்தக் கோலாகலமான பகைப்புலத்தின்முன்பு சீதையின் துயரம், அவளது சகோதரனது தாராள மனது, தகப்பனாரின் கோபம் இவற்றின் மீது படிப்படியாக வளர்ந்து, சீதையின் கலியாணத்தில் முடிவடைகிறது. சீதையின் சகோதரன் தகப்பனாரைத் தன் வழிக்குத் திருப்ப எடுத்துக் கொள்ளும் வழிதான் வினோதமானது. ஆனால் திரும்பக் கூடாத மனிதனாக இருந்தால் அந்த வழியைத் தவிர வேறுஒன்றினாலும் மாற்றப்படமுடியாது. கதையின் முடிவில் சீதைக்கும் அவளது தந்தைக்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதும் அந்தச் சிறு குழந்தை தான். குழந்தை கதைப் பின்னலின் பொற்சரடு. சீதையின் புதிய வாழ்க்கைக்கும், அவள் விதவா விவாகம் செய்து கொண்டாள் என்பதைத் தவிர சாதாரண ஒரு பிராமணப் பெண்ணுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. சீதையின் முதல் மணம் எப்படி மற்றவர்களால் நிச்சயிக்கப் பட்டதோ, அப்படியே அவளது இரண்டாவது மண வாழ்க் கையும் ஆரம்பமாகிறது. இதற்குப் பதிலாக சீதைக்கு ஒரு காதலனை சிருஷ்டித்திருந்தால் நடைமுறை உலகத்துக்குத் தவறுக்கும் அதற்கும் ஒரு பிரமாதமான வித்தியாசமும் இருந்துவிடாது. அதனால், விதவை மணத்தின் அவசியம் குறைந்துவிடுமேயன்றி உயர்ந்துவிடாது.

சிறுகதை, அதாவது தற்கால விமர்சனத்தின்படி கருதப்படும் சிறுகதை தமிழ் நாட்டிற்குப் புதிய சரக்கு. மேல்நாட்டு இலக்கிய கர்த்தர்கள் ஒரு நூற்றாண்டு பழகிய கையால் எழுதும் கதைகளுக்கும் தற்பொழுது தோன்றி இருக்கும் ஸ்ரீ. ந. பிச்சமூர்த்தி, ஸ்ரீ. கு. ப. ரா. முதலான எழுத்தாளர்களின் கற்பனைகளுக்கும் ஏற்றத் தாழ்வைக் காணவே முடியாது.

# சிறுகதை

## 3

கதை சொல்லுவதும் கதை கேட்பதும் தலைமுறை தத்துவ மாய் வந்த பொழுதுபோக்கு. சமீப காலம்வரை, ''ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தான்.........'' என்று ஆரம்பிப்பதுதான் கதையின் முறை, வழக்கம், சம்பிரதாயம். பழைய கதைகளுக்கும் நாம் நடந்து மடியும் உலகிற்கும் சிறிதாவது தொடர்பு கிடையாது, இருக்க வேண்டிய அவசியமும் இல்லை, என்பது பழைய சம்பிரதாயம். தெரியாத விஷயங்களில், அல்ல, உலகத்தில் நடவாத விஷயங்களில் மனதிற்கு எப்பொழுதும் ஒரு பிரேமை. அதுதான் தற்பொழுது நடமாடும், துப்பறியும் கதைகளில் இருக்கும் மோகத்தின் அடிப்படையான காரணம்; பழைய கதாசிரியர்களின் சிருஷ்டி ரகஸியம்.

சிறுகதை என்பது தற்காலத்தில் எழுந்த மேனாட்டுச் சரக்கு. சிறுகதை என்றால் சிறியகதை, கொஞ்சப் பக்கங் களில் முடிந்து விடுவது என்பதல்ல. சிறுகதை என்ற பிரிவு இலக்கியத்தில், அதில் எடுத்தாளப்படும் பொருள் பற்றியது. ஒரு சிறு சம்பவம்; ஒரு மனோநிலை ஆகிய இவற்றை எடுத்து எழுதுவது. சிறுகதையில் முக்கிய சம்பவமோ, நிகழ்ச்சியோ அல்லது எடுத்தாளப்படும் வேறு எதுவோ,

அது ஒன்றாக இருக்கவேண்டும். சில சமயங்களில் ஓரோர் சிறுகதை நூறு பக்கங்களுக்கு மேல் போகலாம். உதாரண மாக, மேனாட்டில் ஆங்கிலச் சிறுகதைகள் எப்பொழுதும் பக்கங்களில் அதிக நீளமாகவே இருக்கும். சாதாரணமாகப் பிரெஞ்சுக் கதைகளிலும் ருஷ்யக் கதைகளிலும் சுருக்கமாக விஷயத்தைப் புதிய மாதிரியில் எழுதப்படுகிறது. ஆங்கில நாட்டு கால்ஸ்வொர்த்தி, ஹார்டி, பிரெஞ்சு மொப்பஸான், அனதோலி பிரான்ஸுா முதலிய சிறுகதை ஆசிரியர்கள் சிறு கதை என்ற இலக்கியப் பகுதியை மிகவும் திறமையாக எடுத் தாண்டிருக்கிறார்கள்.

சிறுகதை என்பது வாழ்க்கையின் சிறிய சாளரங்கள். இதற்கும் நாவலுக்கும் வித்தியாசம், நாவல் வாழ்க்கையை, அதன் பல்வேறு சிக்கல்களுடன், கொந்தளிப்புக்களுடன், அப்படியே சித்திரிக்க முயலுகிறது; சிறுகதை ஒரு சிறு சம்ப வத்தைத் தனித்த விஷயத்தை எடுத்து ஆளுகிறது என்பது தான். ஆங்கில நாவலாசிரியர்களான தாக்கரே, ஹார்டி, கால்ஸ்வொர்த்தி என்பவர்களின் நாவல்களை இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். கால்ஸ்வொர்த்தி எழுதிய போர்ஸைட்ஸாகா என்ற நாவல் மூன்று தலை முறைகளை வருணித்து வருகிறது. அதாவது 19-ம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பித்து உலகயுத்தத்தின் வரை நாவல் நடந்த காலமாக எடுத்துக்கொண்டு, ஏராள மான கதாபாத்திரங்களுடன் காலத்தின் வளர்ச்சியோடு கதாபாத்திரங்களின் வளர்ச்சியையும் அதில் சித்திரித்திருக் கிறது. இதுதான் இம்மாதிரியாக ஒரு பெரிய கட்டுக் கோப்பில் அற்புதமாக எழுதப்பட்ட முதல் நாவல். ஹ்யூவால்போல் என்ற ஆங்கில நாவலாசிரியனும் இம்மாதிரி முயன்றிருக்கிறார். அது கால்ஸ்வொர்த்தி யிடனுடையது மாதிரி ஒரு வெற்றி என்று கூற முடியாது. கால்ஸ்வொர்த்தியின் ஒருநாவலையும்,ஒரு சிறுகதையையும்

வாசித்தால், நாவலுக்கும் சிறு கதைக்கும் உள்ள வித்தியாசம் தெரியும்.

தமிழுக்கு, சிறுகதையும் புதிது. நாவலும் புதிது. தமிழ் இலக்கியத்தில், வசனநடையும் புதிது. இதனால் அவ்வளவு உயர்ந்த இலக்கியங்கள் இருக்காது என்று எதிர்பார்ப்பது சகஜம்; ஓரளவு உண்மை. தமிழ்நாட்டு நாவல்களை, இலக்கியத்தில் ஸ்தானம் பெறக்கூடிய நாவல்களை, விரல் விட்டு எண்ணி விடலம். வேதநாயகம் பிள்ளைதான் தமது பிரதாப முதலியார் சரித்திரத்தில் நாவல் என்ற மேல் நாட்டுச் சரக்கைத் தமிழருக்கு அறிமுகப் படுத்துகிறார். இவரைத் தமிழ் நாவலின் தந்தை என்றே கூறிவிடலாம். அது, நாவலின் குறைகளை எல்லாம் தன்னுள் அடக்கியும், சுவைகுறையாமல் இருப்பதுதான் அதன் அழகு. அது உண்மையில் நம் நாட்டில் வழங்கி வரும் மரியாதை ராமன், தெனாலிராமன் கதைகளை ஒரே கதையில் திரட்டி வைக்கப்பட்டதுதான். அதற்குப்பிறகு, ரஜமையரின் 'கமலாம்பாள் சரித்திரம்'. இதன் முற்பாதி நாவல், பிற்பாதி கனவு. ஹிந்து சமுதாயத்தில் எந்த அற்புதமும் சர்வசாதாரணம் என்று கருதப்படுவதினால் தான், நமக்கு அதன் சுவை கடைசிவரை குறையாமல் இருப்பது போல் தோன்றுகிறது. உண்மையில் அந்த ஜீவப்பிரம்ம ஐக்கியம் வேதாந்தத்தில் அற்புதமாக இருக்கலாம். அது கதையின் ரஸனைச் சுவையைக் குறைக்கிறது என்பதில் தடையில்லை. மாதவையாவின் 'பத்மாவதி சரித்திர'த்திற்குத் தமிழ்நாவலில் இரண்டாவது ஸ்தானம் தான் கிடைக்கும். மாதவையா தமது கதையில் தமிழ் நாட்டில் இருபது முப்பது வருடங்களுக்கு முன் இருந்த கிராம, பட்டின வாழ்க்கையை மிகவும் திறமையாகச் சித்திரித்திருக்கிறார். இருந்தாலும் அவருடைய யாவும் பிரச்சார மனப்பான்மையில் எழுந்தவையாதலின், அதிலும்

பிரச்சாரத்தின் அமுலின்கீழ்தான் கதையின் போக்கு இருந்து வருவதாலும், கதாபாத்திரங்கள் அவ்வளவு திறமையுடன் சித்திரிக்கப்படவில்லை யாதலினாலும், அந்த நாவலை அவ்வளவு உயர்வாகச் சொல்ல முடியாது. இந்த வகுப்பில் 'மைதிலி', 'திக்கற்ற இரு குழந்தைகள்,' 'பொற்றொடி' என்பவைகள் எல்லாம் இடம்பெறும். இவையாவும் தமிழ்நாவல்களின்வளர்ச்சியின் மைல்கடளாகக் கொள்ளலாமேயன்றி பூரண வளர்ச்சியைப் பெற்ற தமிழ் நாவலின் இக்ஷியமாக ஒன்றையும் கூறமுடியாது.

ஆனால் சிறு கதைகளில் நாம் அப்படிக் கூற முடியாது; சிறு கதைகள் தமிழில் அற்புதமாக அமைந்திருக்கின்றன. நான் படித்த பழைய கதைகளில் 'கண்ணன் பெருந் தூது' என்ற கதை தமிழ்ச் சிறு கதைகளின் இலக்ஷயம் என்றே கூறலாம். அதன் அமைப்பு வெகு அற்புதமாக விழுந்திருக்கிறது. குசிகர் குட்டிக் கதைகள் என்பவைகளைச் சிறுகதை என்ற ஹோதாவில் நாம் கவனித்தால் அதற்கு அவ்வளவாக ஒரு பெரிய ஸ்தானம் கொடுக்க முடியாது.

வ. வே. . அய்யரின் கதைகள் தமிழிலேயே எந்தநாட்டு நாகரிகத்தையும் உணர்ச்சியையும் சித்திரிக்கலாம். தற்காலத்து நாவலாசிரியர்கள் என்று சம்பிரதாயமாகக் கூறப்படும் மொழி பெயர்ப்பாசிரியர்களுடைய, தமிழுடையணிந்த வெள்ளைக்காரக் கதாபாத்திரங்கள் சித்திரிப்பது அனாவசியம், என்று எடுத்துக் காட்டும் ஒரு அளவுகோலாக இருக்கிறது. அவருடைய லைலா மஜ்னூன், எதிலிரொலியாள், அழேன்ழக்கே முதலிய கதைகளில் அன்னிய நாட்டுக் கதாபாத்திரங்கள் மிகவும் திறமையாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அய்யரவர்களின் சிறுகதைகள் மிகவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவைகள். அவர் தமது சிருஷ்டிகளில் மனிதனின் மேதையை, தெய்வீகத்

துயரத்தை, வீரத்தை, காண்பிப்பதில் களித்தார். இலக்ஷியத்தை சிருஷ்டிப்பதில் லயித்தது.

ஆனால், மனிதனின் சிறுமைகளை, தப்பிதங்களை. அதில் அவன் நாடும் வெற்றியை, இலக்கியமாகச் சிருஷ்டிப்பதற்கு, நல்ல கலைத் திறமையுடன் சிருஷ்டிப்பதற்கு, வெகு காலம் சென்றது. தமிழிற்கே விமோசனம் கிடையாது என்று நினைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் வெள்ளி முளைத்தாற் போல் சிறுகதை எழுதுகிறவர்கள் தோன்றி இருக்கிறார்கள். இவர்களுடைய எழுத்துக்கள், கற்பனைகள் எல்லாம் தமிழுக்குப் புதியவை. புதிய விஷயங்களில், முதலில் வெறுப்பு ஏற்படுவது மனித, அதாவது சாதாரண மனித இயற்கை. இந்த எழுத்தாளர்களின் கற்பனைகளில் யாவும் இடம் பெறுகின்றன. இவர்களுடைய எழுத்துத் திறமையின் நிரந்தர வாழ்வைப் பற்றி வருங் காலந்தான் கூற வேண்டும். ஆனால் இவர்களுக்குள் இரண்டு மூன்று பேர்களின் எழுத்துக்கள் சாகாத எழுத்துக்கள் என்று கூறலாம். 'நட்சித்திரக் குழந்தை'யின் ஆசிரியரும், சமீபத்தில் கலைமகளில் வந்த 'விஜயதசமி' என்ற கதையின் ஆசிரியரும் தமிழ்நாட்டின் கற்பனைப் பொக்கிஷங்கள் என்று கூறவேண்டும். இவருடைய கலையுணர்ச்சியும், சிருஷ்டித்திறனும் இவர்களை எழுத்தாளர்களின் விதி விலக்காக்குகிறது. தமிழ்க் கதை வளர வேண்டுமானால் இவர்கள் சென்ற பாதையில் புதிய விஷயங்களை எழுதும் ஆற்றலுடையவர்கள் தோன்ற வேண்டும்.

# கவிதை

கவிதை, கவிதை என்று சொல்லுகிறார்களே அதைப் பற்றி எழுத வேண்டும் என்று எனக்கு வெகு நாளாக ஆசை. இன்றைக்குத்தான் முடிந்தது.

''பேனா எங்கேயடா? அடே ராசா நீ யெடுத்தையா? குரங்குகளாஒன்றை மேஜை மேல்வைக்க விடாதீர்கள். அது பேனாவாகவா இருக்கிறது? இருந்தாலும், இந்தக் குழந்தைகள் இருக்கிறதே, சனியன்கள், மழலையாம், குழலாம், யாழாம்! அதைவிட ஒரு ஓட்டைக் கிராமபோனை வைத்துக் கொண்டு காதைத் துளைத்துக் கொள்ளலாம்.''

குழந்தைகளால் என்ன பிரயோஜனம்? சுத்தத் தமிழ் பேசத் தெரியுமா? அவைகளுக்குத்தான் என்ன ஒரு கூட்டத்திலே பழகத் தெரியுமா? இன்னும் அழாமல் இருக்கத் தெரியுமா?

எங்கள் வீட்டு ''ராஜா''வைப் பற்றிச் சொல்லவா? சோற்றுக்குத் தாளம் போட்டாலும், வீட்டுக்கொரு 'ராஜா'விற்குக் குறைவில்லை. அதில் மட்டும், பாரதி சொன்னதிற்கு ஒரு படி மேலாகவே யிருக்கிறோம். எல்லாரும் இந்நாட்டு மன்னர்களின் தகப்பன்மார்!

எங்கள்வீட்டு 'ராஜா' இருக்கானே இவன் பேச்செல்லாம் பாட்டு; பாட்டல்லாம் அழுகை. அதுதான் கிடக்

கிறது? அவனிடத்தில் என்ன அதிசயம் இருக்கிறது? அவனுக்கு இருக்கும் அசட்டுத்தனத்திற்கு என்ன சொல்லு கிறது? என்னுடைய கைத்தடியை எடுத்துக் கொண்டான், அதுதான் அவனுக்குக் குதிரையாம்! குதிரைக்கும் தடிக்கம் பிற்கும் வித்தியாசம் தெரியாத அசட்டைப் பார்த்து யாரால் உத்ஸாகப்பட முடியும்? அதற்கும் ஒரு பிரகிருதி இருக்கிறது, அதுதான் அவன் தாயார். குதிரை மட்டுமா? காராக மாறுகிறது, மோட்டாா சைக்கில், இரட்டை மாட்டு வண்டி இன்னும் என்ன வேண்டும்?

அதுதான் கிடக்கிறது தமிழைத் தமிழாகப் பேசத் தெரிகிறதா? இலக்கணம் தெரியுமா? தொல்காப்பியம் படித்திருக்கிறதா? இந்தக் குழந்தைகளினால் என்ன பிர யோஜனம்? உங்களுக்குத் தெரியுமா அவைகளினால் என்ன பிரயோஜனம்?

...... ஓஹோ? கவிதையா? இன்னொரு தடவை பார்த்துக் கொள்ளலாம்.

# நமது கலைச்செல்வம்

இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலிகள்; சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல்கள்; மனித இலக்ஷியத்தின் உயிர்நாடி.

நமது கலைவளம் எந்த நாட்டினரும் பொறாமை கொள்ளத்தக்க அளவு இருக்கத்தான் செய்கிறது. நம்மைப் பொருத்தமட்டுல், நாம் 'குங்குமம்' சுமந்த 'பெரியார்கள்' தான். இப்போது நமக்கு இருக்கும் கலையுணர்ச்சியைப் பற்றி எண்ணும் பொழுதெல்லாம், ஒளவைக் கிழவி, ஒரு அரசனுக்குக் கொடுத்த 'ஸர்டிபிகேட்' (நற்சாட்சிப் பத்திரம், நினைவிற்கு வருகிறது.

**''இருள்தீர் மணிவிளக்கத் தெழிலார் கோவே!**
**குருடேயும் அன்று நின்குற்றம்—பொருள்சேர்**
**பாட்டும் சுவையும் பயிலாதன இரண்டு**
**ஓட்டைச் செவியும் உள''**

''இருளை விரட்டும்படியான ரத்னாபரணங்களை வாரியணைத்துக் கொண்டு சிம்மாசனத்தில் பெருமிதமாய் உட்கார்ந்திருக்கும் எழிலார் அரசனே! மனிதன் அற்புதமான கனவுகளை யெல்லாம், கல்லில் எழுப்பும் சிற்பங்களைப் பொருத்தமட்டில் நீ திருதராஷ்டிரன்தான்; அந்தோ! அது மட்டுமா! அலைமேல் அலையாக எழும் சப்த ஜாலங்களான கவிதையை அனுபவித்தறியாத இரண்டு

ஓட்டைச் செவிகளும் உண்டு உனக்கு'' என்று இரங்குகிறார்.

அந்த எழிலார் பெருமானின் வம்ச வளர்ச்சியோ தமிழ் நாடு என்று சொல்லும்படி இருக்கிறது நமது கலையுணர்ச்சி.

சங்க இலக்கியங்களை அனுபவிப்பதற்கு ஒரு தனிப் பயிற்சி வேண்டும்; அந்த இலக்கியத்தின் சமூகம், அதன் நாகரிகம் இறந்துவிட்டது. அதன் பதப் பிரயோகங்களின் ரகசியத்தை அறிந்த பின்தான் அந்த இலக்கியத்தின் உள்ளத்தைத் தொடமுடியும்.

மற்றவர்கள் இருக்கிறார்களே, அன்பு கசிந்துருகப் பாடும் மாணிக்கவாசகர் முதல் இலக்கியத்தின் சாம்ராட் கம்பன் வரை நமக்கு 'நாடிய பொருள் கைகூட வைக்கும்' கருவிகள் தானே. வீர முரசில் குரலொலி முழங்கும் ,அந்தக் கலிங்கப் போரின் கோஷத்தைத் தனது கவிதையென்னும் மாத்திரைக் கோலால் எழுப்பும் இந்திர ஜாலக் கனவுகளை வைத்துக் கொண்டு ஐயங் கொண்டான் எத்தனை வருஷங்களாகக் காத்திருக்கிறான். சாலையிலே தனிமையும் கவிதையும் துணையாகக் கொண்ட நமது இலக்கியத்தின் 'மகத்தான பிச்சைக்காரி' தன் காலத்து மக்களின் உள்ளத்து நாதத்தை, அப்படியே 'உயிர்பெய் ஓவியங்களாகப் படம் பிடித்து வைத்து விட்டுப் போனாளே, அதைக்காண ஆசையில்லையா? இன்னும் எத்தனை எத்தனைக் கவிஞர்கள், எத்தனை எத்தனை அடியார்கள், தங்கள் கனவுகளை வைத்துக்கொணடு காத்திருக்கிறார்கள்.

இவ்வளவு மகத்தான கலைவளத்திற்கு ஒரு அர்த்தம் இருக்க வேண்டுமானால், பழங்கதைகளை மறைவாக நமக்குள்ளே பேசிக்கொண்டிருப்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. நமது கலைவளர்ச்சி பண்டைப் பழங்கணக்காக

பொருட்காட்சிச் சாலையில் வைத்த 'அபூர்வங்களாகவே', இருக்கின்றன. 'தமிழில்இல்லாதன இல்லை இளங்குமரா' என்ற கிழட்டுத் தத்துவம்—ஆழ்ந்த உணர்ச்சியற்ற 'போலித் தத்துவம்' (Dilletantism) ஒழிய வேண்டும். இப்பொழுது இலக்கியத்தின்பெயரால் நடக்கும் 'ஆராய்ச்சிகள்'. முதல் குரங்கு, தமிழனாகத்தான் மாறியதா என்பது முதல் முதல், கம்பன் சைவனா, வைஷ்ணவனா, தமிழ் எழுத்துக்கள் 'ஓம்!' என்ற முட்டையை உடைத்துக் கொண்டு வெளி வந்த வரலாறு வரையிலுள்ள இலக்கியத்திற்குப் புறம்பான 'தொண்டுகளை' எல்லாம் அப்படியே கட்டி வைத்து விட்டு, இலக்கியத்தை அனுபவிக்கும் முறையை உணர்த்த முன்வர வேண்டும். நமது கவிஞர்களைப் பற்றி நமக்கு இப்பொழுது இருக்கும் அபேதவாதக் கொள்கை (1), கம்பன் முதல் இதர பந்தங்களும்,சப்தபங்கிகளும் எழுதிக்குவிக்கும் இலக்கியத்தின் அகராதிப்புலவன்வரை,எல்லோரும் தங்கள் நாவில் சரஸ்வதியின் யந்திரத்தைப் பொறித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள், என்ற தாரதம்மியமில்லாத—''அருளிப் போந்தாரா'' என்று உத்ஸாகப்பட்டுக்கொணடிருக்கும் அசட்டுக்கலையுணர்ச்சியை நீக்க வேண்டும்.

இந்த செளந்தர்ய உணர்ச்சியற்ற பாழ்வெளி எப்பொழுதும் இம்மாதிரி ஒன்று மற்றதாகவே போய் விடாது என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது.தமிழ் மறுமலர்ச்சியின் (prometheus) பிரமாத்தியூஸ், நமது அசட்டுக் கலையுணர்ச்சிக்குப் பலியான பாரதியார், அவரும் பாவங்களை 'எழுப்ப முடிய வில்லையானால், பழைய நாகரிகச் சின்னங்களை யணிந்து கொண்டு உலாவி வரும் நமது மடாதிபதிகளைப் போல் தமிழும் ஒரு'அனக்கிரானிஸமாகவே'(Anochronism) கால வித்தியாசத்தின் குரூபமாகவே இருக்க முடியும்.

# கடவுளின் கனவும் கவிஞனின் கனவும்

இலக்கியத்தைப் பற்றி விஸ்தரிக்கலாம். விவாதிக்கமுடியாது, சூத்திரத்தால் விளக்க முடியாது; தர்க்கத்திற்கு அடங்கியதல்ல. சிருஷ்டி வகையே அப்படித்தான். தர்க்கத்தின் வழியாக இலக்கியத்தைப் பார்க்கமுடியாது. இலக்கியம் சிருஷ்டியின் மேதையுடன் எதிரெதிரான விஷயங்களை உள்ளடக்கியிருக்கலாம். தர்க்கம் ஒரு படிக்கட்டு வழியாக, ஒரு பரிசோதனை வழியாக விஷயங்களை நோக்க முயலுகிறது. அதற்கு ஒன்று சரி என்று பட்டுவிட்டால்மற்றவை இருக்க நியாயமில்லை; இருக்காது என்ற கொள்கை. ஆனால் இந்த வாழ்க்கை அவ்வளவு லேசான கட்டுக்கோப்பில் சிருஷ்டிக்கப்படவில்லை. தர்க்கத்தின் பிரியமான அந்தரங்கமான கொள்கைகளைச் சிதறடிக்கும்படி வாழ்க்கை இருந்து வருகிறது. அதே மாதிரிதான் இலக்கியமும்; வாழ்க்கைதான் இலக்கியம்; இலக்கியம்தான் வாழ்க்கை.

வாலிவதை நியாயமா, அல்லது கம்பராமாயணம் எந்தப் பொருளாதாரப் பிரச்னையை விளக்குகிறது. என்றெல்லாம் கவிதையில் ஆராய்ந்து கொண்டிருப்பவர்களைக் கண்டால் சிரிப்புத்தான் வருகிறது, இந்த அகண்ட

மான பிரபஞ்சம் என்ன பொருளாதாரத் திட்டத்தை விளக்கச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது? கவிஞனும் அப்படித் தான்.

கடவுள் கனவு கண்டார்; இந்தப் பிரபஞ்சம் பிறந்தது. கவிஞன் கனவு கண்டான்; இலக்கியம் பிறந்தது. இதிலே 'பத்துத்தலை ராவணன் உலகில் இல்லையே; கவிஞன் பொய்யன்தானே' என்று கவிதையிலே சரித்திரத்தையும் பொருளாதாரத்தையும், ஒழுக்கத்தையும் தேடிக்கொண்டிருக்கும் பெரியார்கள் கவிஞனை அறியவில்லை; அறிய முடியாது. சிருஷ்டியின் ரகசியத்தைச் சற்று அறிந்தவர்கள் கவிஞனைத் தராசில் போட்டுப் பார்ப்பவர்கள் அல்ல. கவிஞனது சக்தியை அனுபவிப்பவர்கள்.

சிருஷ்டிகர்த்தர் ஒரு பெரிய கலைஞன். அவனுடைய ஆனந்தக் கனவுதான் இந்தப் பிரபஞ்சம். அதன் ரகஸியம் தத்துவம் வேறு. அது இன்பத்தின் விளைவு. அவனுடைய அம்சத்தின் சிறு துளிதான் கவிஞன். அவன்தான் இரண்டாவது பிரம்மா. கண்கூடாகக் காணக்கூடிய பிரம்மா.

கலை என்பது ஒன்றுபட்ட ஒற்றுமையில் (தாளம், இசை இரண்டும் கலந்ததுபோல) எழுந்த அழகுணர்ச்சி. பிரபஞ்சம் அந்தக் கட்டுக் கோப்பில் அடைபட்டது. அதனால்தான் கவிஞன் சமயத்தை, அதன் உயிர் நாடியை வெகு எளிதில் அறிந்துவிடுகிறான். இதை நினைத்துத்தான் சடகோபாழ்வார் கவிதையை ரஸித்து அனுபவித்த அன்பர் கடவுள் உனக்குக் கட்டுப்பட்டு விட்டார் என்று பொருள் படும்படி,

**''வேதத்தின் முன்செல்க மெய் உணர்ந்தோர்**
**விரிஞ்சன் முதலோர்**
**கோதற்ற ஞானக் கொழுந்தின் முன்செல்க**
**குணங்கடந்த**

**போதக் கடல்எங்கள் தென்குரு கூர்ப்**
**புனிதன் கவியோர்**
**பாதத்தின் முன்செல்லுமோ தொல்லை**
**மூலப் பரஞ்சுடரே''**

என்று பாடினார். அதாவது ''கவிஞனது ஒரு சீரிலேயே கட்டுப்பட்டுவிட்டது சிருஷ்டியின் ரகஸ்யம்'' என்று எண்ணுகிறார். கவிதையில்தான் சிருஷ்டியின் மேதையை அதில் எழுப்பிய ஆனந்தத்தை அனுபவிக்க முடியும், அறிய முடியும். பக்தன் கவிஞனாக இருப்பதில் வியப்பொன்று மில்லை.

தமிழர்க்ள்தான் கலையின் மேதையை அதன் உன்னதத்தை அறிந்தவர்கள். அவர்கள்தான் சிருஷ்டியின் ரகசியத்தைக் கலையினால் இதற்கு முன்னும், இதற்குப் பின்னும் செய்கின்ற வண்ணம், கலையின் முடிவுச் சிகரமாகச் சிருஷ்டித்து விட்டார்கள். அதுதான் நடராஜ விக்கிரகம். கலையின் மேதையை எவ்வளவாகப் பாவித்தார்கள் தமிழர்கள் என்பதற்குப் பின்வரும் பாட்டே சான்று.

ஒரு பக்தன் அவன் கவிஞன், கலைஞன். உலகத்தை விட்டுவிடுவது பந்தத்தைக் களைவது என்பதெல்லாம் சாதாரண உணர்ச்சி. மனிதப் பிறவி வேண்டாம் என்று பாடிவிடுவது எளிது. அந்த வெறுப்புத்தோன்றுவது எளிது. இந்தக் கவிஞனுக்கு அப்படியும் படவில்லை. மனிதப் பிறவியின் அவசியத்தை அவன் பாடுகிறான் எதற்காக?

**''குனித்தப் புருவமும் கொவ்வைச்செவ் வாய்**
**குமிழ் சிரிப்பும்**
**பனித்தச் சடையும் பவளம் போல்மேனியிற்**
**பால்வெண் ணீறும்**

**இனித்தங் கசிய எடுத்த பாற் பாதமும்**
**காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த**
**மாநிலத்தே''**

மனிதப்பிறவி வீண் என்று அழுவதில் அர்த்தமில்லை மனிதப்பிறவி எடுக்காவிட்டால் நடராஜ விக்கிரமத்தின் கலையழகை அநுபவிக்க முடியுமா? அதற்காகவே மனிதப் பிறவி அவசியம் என்கிறான் கவிஞன்.

இதுதான் தமிழ்நாட்டின் கலை இலட்சியம். சமய உணர்ச்சி. இந்த நாடியின் இரகசியத்தை அறிந்தால் தமிழ் இலக்கியத்தை அனுபவிக்க முடியும்.

# சமயத்தையும் கடந்த கலை

கவிதை மனிதனின் அழகுணர்ச்சியையும் உணர்ச்சிப் பான்மையையும் சாந்தி செய்வது. அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றைப் போதிப்பது கவிதை என்பது தமிழ் இலக்கியத்தின் கூற்று. இலக்கியத்தை ஒரு கருவியாகவே சாதனமாகவே கருதி வந்தார்கள். அதாவது அறம், பொருள், இன்பம், வீடு (மோட்சம்) என்ற நான்கையும் பெறுவதற்கு உபயோகமாகும் கருவி.

தமிழர் கவிதையை, அதன் பூரணமான முடிவைப் பற்றிக் கவனிக்கவே இல்லை, தமிழ்க்கவியின் போக்கு முக்கியமாக ஒரு தனிப்பட்ட வழியிலேயே, கடவுள் அல்லது அரசன், இவர்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் கருவியாகவே இருந்ததினால், அது பல துறைகளிலும் கிளைக்கவில்லை.

கவிதை தமிழில் இருக்கலாம்; ஆனால் கவிதையைப் பற்றிய ஆராய்ச்சி தமிழில் கிடையாது. தமிழில் செய்யுளியலைப் பற்றி ஆராய்ச்சி யிருந்திருக்கிறது. அதாவது கவிதையின் வடிவத்தைப் (Form) பற்றி நன்றாக ஆராய்ந்திருக்கிறார்கள். கவிதைக்குத் தமிழ் யாப்பிலக்கணத்தைப் போல் இயற்கையான அமைப்பு வேறு கிடையாதென்றே கூறிவிடலாம். ஆனால் கவிதை என்றால் என்ன என்பதைப் பற்றித் தமிழர் ஆராயவே இல்லை.

உடற்கூறு நூல் படியாவிட்டால் உயிர்வாழ முடியா தென்று சொல்ல முடியாது. அதைப்போல் இலக்கணம் இல்லாவிட்டால் கவிதை இருக்க முடியாதென்று கூறமுடி யாது. ஆனால் கவிதையை ரஸிப்பதற்குக் கவிதை என் றால் என்னவென்று தெரிந்திருக்க வேண்டும். தற்காலத் திய பண்டிதர்கள் இலக்கியம் எது என்று கவனிக்க முடியா மல் எல்லாவற்றையும் புகழ்ந்து கொண்டு இடர்ப்படுவதற் குக் காரணம் அவர்கள் இலக்கியம் என்றால் என்னவென்று அறியாததுதான்.

இவர்கள் ஒழுக்கத்தையோ, தர்மத்தையோ, அல்லது மதத்தையோ பற்றிக் கூறுவது, அதாவது அணியலங்காரங் களுடன் கூறுவது எல்லாம் கவிதை என்று கூறி இடர்ப்படு வதின் காரணம் இதுதான். மதத்தைப் பற்றியும் தர்மத் தைப் பற்றியும் இருப்பது எல்லாம் கவிதையல்லவென்று கூறவில்லை. செய்யுள் அமைப்பில் எழுதப்படுவதெல்லாம் கவிதையல்ல. கவிதையின் ரசனைக்குப் புறம்பாக ஒழுக் கம் என்ற காரணத்திற்காக மட்டும் எழுதப்படுவது கவிதை யல்ல கம்பன் ஒழுக்கத்தையும் தர்மத்தையும் பற்றிப் பாடத்தான் செய்கிறான், மற்ற புலவர்களும் ஒழுக்கத் தைப் பற்றிச் செய்யுள் இயற்றுகிறார்கள். முதலாவதில் ஒழுக்கம் கவிதையில் இடம் பெறுகிறது. மற்றதில் ஒழுக் கத்திற்காகக் கவிதை இயற்றப்படுகிறது.

கவிதையைப் போதனைக்குரிய கருவியாக உபயோகப் படுத்தும் வரை அது கவிதையாக இருக்காது. அதன் ரசனை கெட்டுவிடுகிறது. ஒழுக்கமோ, தர்மமோ அல்லது மோட்ச மோ இவற்றிற்காக எழுதப்படும் கவிதை, கவிதையாகாது. ஒழுக்கமும், தர்மமும், மோட்சமும் கவிஞனது உள்ளத்தில் ஊறி, இருதயத்தின் கனிவாக வெளிப்படும் இசைதான் கவிதையாகும்.

பக்தர்களின் தெய்வக் கவிதைகள், உள்ளத்தின் பொங்குதலில் பிறப்பதாகையால், அவை உள்ளத்தின் நாதத்தை இசைக்கின்றன. இதனால், பக்தர்கள் கவிஞர்களாக இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், பக்தர்கள் கவிஞர்களாகத் தான் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை.

ஒழுக்கம் அற்றிருப்பதுதான் கவிதையின் இலட்சணம் என்பதல்ல நமது கட்சி. கவிதையின் அமைப்பும், உணர்ச்சியும்தான் கவிதையின் உரைகல். தமிழ்க் கவிதையை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று பழைய இலக்கியமான சங்க இலக்கியங்கள். வெறும் யதார்த்த விஸ்தரிப்புக்கள். புகைப்படக் கவிதை என்று கூறிவிடலாம். அதற்குப் பிறகுதான் கவிதையின் உண்மையான வளர்ச்சி, கம்பன் வரையுள்ள பெருங்கனவுகள். அதன் பிறகு கவிதையின் க்ஷீணம். தற்பொழுது ஒரு தப்பு அபிப்பிராயம் இருந்துவருகிறது.. காரணம் மனிதனின் பெரும் கனவுகளை யதார்த்த உண்மையாகக் கருதி வந்ததுதான். இதனால் ஓரளவு நம்பிக்கையற்ற தன்மை வளர்ந்தவுடன், உள்ளதை உள்ளபடி உரைக்கும் சங்க நூல்களுக்குக் கவிதை மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. காரணம் இவர்கள் நம்பக கூடிய உண்மைகள் அணி அலங்காரங்களுடன் எழுதப்பட்டிருக்கிறது என்பது தான்.

தமிழில் இன்னொரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. கவிதையில் சமயம் கூறப்படுவதால், கவிதை சமயத்தை உணர்த்தும் கருவி என நினைத்து இடர்ப்படுவது. இதனால் சைவர்களுக்குத்தான் தமிழ் என்ற அபிப்பிராயம் ஏற்பட்டு உண்மை இலக்கியத்தின் நாதத்தை மறைத்து விடுகிறது. இதனால் காரணமற்ற பூசல்களும், முக்கியமாக இலக்கியத்தைப் பற்றித் தப்பான அபிப்பிராயங்களும் பரவி விடுகின்றன,

சைவம் மகத்தான சமயமாக இருக்கலாம். அதன் அடியார்கள் அற்புதமான கவிதையை இயற்றி இருக்கலாம். அதற்காக, சைவத்திற்குப் புறம்பாக இலக்கியம் இருக்க முடியாது என்று கூறிக்கொண்டிருப்பது பைத்தியக் காரத் தனம்.

இம்மாதிரி கவிதையை வெறும் கருவியாக எண்ணி இடர்ப்படுவதினால், கம்பன் கவிதை மோசமானது என்று கூட எழுதுகிறார்கள், அதையும் போற்றுவதற்கு நான்கு ஆட்கள் கிடைத்துவிடுகிறது.

தற்காலத்தில் தமிழ்க் கவிஞர்கள் என்பதற்கும் வெறும் இனிமையான செய்யுளை இயற்றக்கூடிய புலவன் என்பதற்கும் வித்தியாசம் தெரியாமல் எழுதுகிறார்கள்.

கவிதை உள்ளத்தின் கனவு, புறப்பொருளை, அல்லது அதன் பெருமையைக் குறிக்கும் கருவியல்ல. கவிஞன் பாடும் விஷயம் அறிவுக்கும் புத்திக்கும் ஒவ்வாததாக இருக்கலாம். ஆனால் சிருஷ்டியின் மேதையை அதன் சூட்சமத்தை விளக்கக் கூடியதாக இருந்தால் அது கவிதைதான்.

# இலக்கியத்தின் உட்பிரிவுகள்

வாழ்க்கையின் அர்த்தத்தைச் சொல்வது தத்துவம். வாழ்க்கையைச் சொல்வது, அதன் ரசனையைச் சொல்வது இலக்கியம். ஒரு நூல் இலக்கியமா அல்லவா என்பது அதன் அமைப்பைப் பொருத்துத்தான் இருக்கிறது. ''தட்சிணத்துச் சரித்திர வீரர்'' என்று மகாதேவையா ஒரு சரித்திரம் எழுதியிருக்கிறார். ஸ்ரீனிவாச ஐயங்காரும் பல்லவ சரித்திரம் ஒன்றை எழுதியிருக்கிறார், இரண்டும் சரித்திரம் தான் முன்னது இலக்கியம்; பின்னது சரித்திரம்; அல்ல, வெறும் பஞ்சாங்கம். சரித்திரத்தை இலக்கியத்தின் வாயிலாகத்தான் அறியமுடியும். சென்ற காலத்தை சிருஷ்டிக்க வல்லவன் தான் சரித்திரம் எழுத முடியும். வெறும் வருடத்தைக் கணக்கிட்டு, அரசர்களின் ஜனன மரணக் கணக்குகள் உட்பட சாரமற்று எழுதிக் கொண்டு போவது சரித்திரமுமல்ல; இலக்கியமுமல்ல. நாம் கவனிக்கிறபடி இலக்கியமல்ல.

கவிதையிலும் அமைப்புத்தான் முக்கியம். அமைப்பு (Form) என்றால் வெறும் யாப்பிலக்கண விதிமட்டுமல்ல. பண்டிதர்களும் பாட்டு எழுதுகிறார்கள் கம்பனும் பாடுகிறான். இரண்டுபேரும் உபயோகிக்கும் யாப்பிலக்கணம் ஒன்றுதான். பண்டிதர் எழுதியது செய்யுள். (செய்யப்பட்ட விதியை உள்ளடக்கியது) பின்னது கவி. கவிதை அமைப்பு

என்பது வெறும் யாப்பிலக்கண விதி அல்ல. கவிதையின் ஜீவநாடி கவிதையின் உயிர்பெற்ற வடிவம்.

இலக்கியத்திற்கு ஜீவநாடி அமைப்பு. அதை இழந்தால் இலக்கியம் வெறும் குப்பை. இலக்கியத்தின் அமைப்புத் தன்மை, அமைப்பு ரகசியம் ஒன்றாக இருந்தாலும் அது பல வடிவத்தில் இருக்கும். இலக்கியத்தின் முக்கிய உட்பிரிவுகள் என்ன என்று சிறிது கவனிப்போம். இலக்கியத்தைப்பாட்டு என்றும் வசனம் என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். அதிலும் உட்பிரிவுகள் உண்டு,

**கவி**

காவியம்
தனிப்பாடல் (Lyric)
நாடகம்

**வசனம்**

வசன காவியம்
வியாசம்
சிறுகதை
நாவல்
நாடகம்

கவி என்ற பகுதியைக் கவனிக்கும் பொழுது சங்கீதத்துடன் இணைந்தது என்பது எப்பொழுதும் நினைவில் இருக்கவேண்டும். சங்கீதத்திற்கு ஒரு வடிவத்தை, அர்த்தத்தைக் கொடுப்பது பாட்டு. பாட்டும் சுருதியும் கலந்த கூட்டுறவுதான் பண். பாட்டின் ஜீவநாடி, உணர்ச்சி, அழகு, வாய்மை. அதுதான் கவி.

காவியம் என்பது பெரிய கட்டுக் கோப்பில் கதா ரூபமாக எழுந்த அழகுக் கோவில். அதனுள் நவரசங்களும், பல உணர்ச்சிகளும் குணசம்பந்தங்களும் சித்திரிக்கப்படும்,

ஒரு இலட்சிய புருஷனையோ, மகத்தான வீரர்களையோ. பற்றிப் பாடப்படும் கட்டுக்கோப்பு. இது மனித உள்ளத்தின் ஆரம்பத்திலே இளமையிலே எழுந்த பழஞ்சரக்கு. நாள் தோறும் அழகு குன்றாது வளர்வதுதான் அதன் உயிர்நாடி.

தனிப்பாட்டு, ஒரே உணர்ச்சியை, ஒரே அனுபவத்தை, அல்லது வாழ்க்கையின் ஒரு பகுதியை, அல்லது இயற்கையழகின் ஒருபகுதியைத் தன்னுள் அடக்குவது. இதை ஆங்கில இலக்கியம் 'லிரிக்' என்னும். நமது தனிப் பாடல்களும் அவைதான். பாட்டிற்கும் வசனத்திற்கும் பொதுவான நாடகத்தைத் தனியாகக் கவனிப்போம்.

### வசனம்

இலக்கியத்தில் வசனத்திற்கும் ஒரு ஸ்தானம் இருக்க வேண்டுமா என்று பலர் நினைக்கலாம், ஏனெனில் தமிழுக்கு, வசன இலக்கியம் புதுச் சரக்கு. இதனால் வசனத்தில் என்ன அழகு இருக்கிறது? தினம் தினம் பேசுவது தானே, என்று நினைக்கலாம். கற்பனாசக்தியும், உணர்ச்சியின் உத்வேகமும் நிறைந்த ஒரு வசனகர்த்தனிடம். வசனம் அற்புதமாக வளைந்து கொடுக்கும்.

வசன நடையிலே காவிய அமைப்புகளின் உருப்புக்கள் அடங்கி இருக்கும் கிரந்தம்தான் வசனகாவியம். ஆங்கில கிரந்தகர்த்தாவான ஜான்பனியனின், "இரட்சணிய யாத்திரிகம்" (Pilgrims Progress) ஓர் வசன காவியம். ஒரு மனிதனின் ஆத்மீக வளர்ச்சியை அதன் கஷ்டங்களுடன் எடுத்து எழுதப்பட்டிருக்கிறது. இந்த ரீதியில்தான் இருக்கும் வசனகாவியம். அதாவது காவிய இலட்சணங்களுடன் வசனத்தில் இருப்பது. பாரதியாரின் ஞானரதம் தமிழில் அற்புதமான வசன காவியம்,

வியாசம், மனக்குரங்கின் தங்கு தடையற்ற ஓட்டம் எதைப்பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். அதன் கொள்கைகள், தர்க்கங்கள் யாவும் தப்பிதமாக இருக்கலாம். அதைப்பற்றிக் கவலை இல்லை. கிரந்த கர்த்தாவின் உள்ளத்தைத் திறந்து காண்பிக்கக்கூடியதாக இருந்தால் அது வியாசந்தான்.

சிறு கதை, வாழ்க்கையின் சாளரங்கள். வாழ்க்கையின் ஒரு பகுதியை அல்லது ஒருவரின் தனி உணர்ச்சியை, அல்லது ஒரு குண சம்பவத்தை எடுத்துச் சித்திரிப்பது.

நாவல், வாழ்க்கையை அதன் பல்வேறு அம்சங்களுடன், அவற்றின் சிக்கல்களுடன் அவற்றின் பிணிப்புகளுடன் எடுத்து வாழ்க்கையின் ஜீவநாடி குன்றாமல் எழுதுவது. இதற்கும் வசன காவியத்திற்கும் வித்தியாசம் என்னவெனில் வசனகாவியம் மனிதனின் தெய்வீகத் தன்மையையும், இலட்சிய புருஷனையுமே பற்றி எழுதுகிறது. நாவல் மனிதனை, அவனுடைய சிறுமைக் குணங்களுடன், அவனுடைய வீழ்ச்சிகளுடன், அவனுடைய தவறுகளுடன், அப்படியே மனிதனை மனிதனாக எடுத்துக் காட்டுகிறது. வசன காவியத்தின் மேதை அதனுடைய இலட்சிய சிருஷ்டித் திறமையைப் பொருத்து இருக்கிறது நாவலின் மகத்துவம் மனிதனை சிருஷ்டிக்கும் திறத்தைப் பொருத்திருக்கிறது. பொதுப்பட நோக்கின் இலக்கியத்தின் ஜீவநாடி உணர்ச்சியும் சிருஷ்டி சக்தியும் இந்த இரண்டும் இல்லாவிட்டால் அது வெறும் குப்பை.

# இதயத் துடிப்பின் பேச்சு

கலை என்பது உள்ளத்தில் எழும் உணர்ச்சியின் பிரதிமை; அழகின் வடிவம். கவிஞனோ அல்லது சைத்திரி கனோ ஒரு பொருளைக் காண்கிறான். உள்ளத்தில் நிகழ்ச்சியைக் கவனிக்கிறான். அது அவன் உள்ளத்தைச் சலிப்பிக்கிறது. இருதயத்தை அலைக்கிறது. அந்த உள்ள நெகிழ்ச்சியை, அதன் வேகம் குன்றாமல் வெளிப்படுத்து கிறான். அது கவிதையாக இருக்கலாம், ஓவியமாக இருக்க லாம், அல்லது சிற்பமாக இருக்கலாம். அம்மாதிரி முடிந்த வடிவம்தான் கலை.

கலை என்பது ஒன்றுதான். அதன் இயக்கங்கள் பல துறைகளில் பல வடிவங்களைப் பெறலாம். ஆனால், அதன் நாடி ஒன்று; அதன் ரகஸியமும் ஒன்று. அது இதயத் துடிப்பின் பேச்சு. அழகுணர்ச்சியின் வடிவம். அழகு என்பது உலகத் தோற்றங்கள் மனித எண்ணங்களுடன் ஒன்றுபட்ட ஒற்றுமை; இவ்வித அழகுக்கு அழகு செய்யும் இருதயத்தின் பேச்சுத்தான் கலை.

ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு சமுதாயத் திற்கும்தனிப்பட்ட கலாபாவம் உண்டு. கலையின் தத்துவம் ஒன்றுதான். அதன் அடிப்படையான விதி ஒன்று தான்.ஆனால்அது சமுதாயத்தின் வாழ்க்கைக் கண்ணாடி;

வாழ்க்கைக்கனவு. ஒரு கலையின் மேதையை அந்தச் சமுதாயம்தான் பூரணமாக அறிய முடியும்.

இலக்கியம் கலைகளில் எல்லாம் உயர்ந்தது. கவிதை கலையின் அரசி. ஓவியமும் சிற்பமும் கலைதான். அவை சுாணப்படும் கலை. அதாவது அதன் வடிவம் எண்ணத்தைக் கட்டுப்படுத்துகிறது; எல்லைப்படுத்துகிறது. கவிதை அப்படி அல்ல. கேட்கப்படும் கலை. கம்பன் 'செவிநுகர் கவிகள்' என்று சொல்லுகிறமாதிரி கவிக்குக் காதுகள் பிரதானம். கவிதையில் வடிவெடுக்கும் எண்ணங்கள் உள்ளத்தில் எதிரொலித்தும் பேரலையான கனவுகளை எழுப்புகின்றன. புதிய எண்ணங்களைக் கொண்டுவந்து குவிக்கின்றன. இதனால்தான் "கவிதை கலையின் அரசி" என்று கூறுகிறோம்.

மனிதனின் கனவுகள் வடிவம் பெறும்பொழுது அது கலையாகிறது. அது நடைமுறை உண்மைக்குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை. அதாவது நடைமுறை உலகம் அறிந்த இரண்டும் இரண்டும் நான்கு என்ற உண்மைகளுக்கு அதில் இடமில்லை. கலை, உலகத்தைப் புகைப்படம் பிடிக்கும் கருவியல்ல; சிருஷ்டியின் ரகஸியத்தை சிருஷ்டியின் மகத்துவத்துடன் வெளிப்படுத்தும் ஒரு பாஷை. கலை வாழ்க்கை ரகஸியத்தை உணர்த்துவது; வாழ்க்கைத் தத்துவத்திற்குக் கட்டுப்பட்டது; ஆனால் வெறும் உயிர் வாழ்தல் என்ற தத்துவத்திற்குக் கட்டுப்படாதது. அதனால்தான் கலைக்கும் நடை முறை உண்மைக்கும் எப்பொழுதும் ஒத்துவராமல் இருக்கிறது.

கலை, தர்ம சாஸ்திரம் கற்பிக்க வரவில்லை; ஒழுக்க நூலை இயற்ற வரவில்லை; உடற்கூறு நூலை எடுத்துக் காட்ட வரவில்லை. பத்துத்தலை ராவணனும், ஆறுதலை சுப்ரமண்யனும், உடற்கூறு நூலுக்குப் புறம்பான

அபத்தமாக இருக்கலாம்; ஆனால் ஒரு கொள்கையை இலட்சியத்தை உணர்த்தக்கூடியது. அதுதான் கலையின் இலட்சியம்.

கலை ஒரு பொய்; அதிலும் மகத்தான பொய். அதாவது மனிதனின் கனவுகளும் உலகத்தின் தோற்றங்களும் எவ்வளவு பொய்யோ அவ்வளவு பொய். இந்தக் கலை என்ற நடைமுறைப் பொய்தான், சிருஷ்டி ரகசியம் என்ற மகத்தான மெய்யை உணர்த்தக்கூடிய திறன் படைத்தது, கலை என்ற மகத்தான பொழுது போக்குத்தான், சிருஷ்டியின் மகத்தான விளையாட்டைக் காண்பிக்கக் கூடிய நிலையிலிருக்கிறது.

தத்துவ சாஸ்திரி ஒருநாளும் சிருஷ்டியின் மேதையை அறிய முடியாது. என்ன இருக்கிறது என்று பிரித்துப் பிரித்து அளக்கிறான்; அறிகிறான். ஆனால் எப்படி இருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது. தத்துவ சாஸ்திரிக்கு ஒரு கண்ணீர்த்துளி, ஒரு சொட்டு ஜலமும், சில உப்புகளும் என்றுதான் தெரியும். அந்தக் கண்ணீரின் ரகஸியத்தை, அதன் சரித்திரத்தை அவன் அறிவானா? அது கலைஞனுக்குத்தான் முடியும். அவன்தான் தோற்றங்களை ஒன்றுபட்ட ஒற்றுமையில் எழுந்த அழகுடன் காண்கிறான் அவன் சிருஷ்டிக்கிறான். அதனால்தான் வாழ்க்கையின் மேதையை அவனால் உணர முடிகிறது, கவிஞன் பக்தனாக இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், கவிஞன் பக்தனாக இல்லாமலிருப்பதிலும் அதிசயமில்லை. அவன் சிருஷ்டி அகண்ட சிருஷ்டியுடன் போட்டி போடுகிறது. அதில் பிறக்கும் குதூகலந்தான் கலை இன்பம்.

# உணர்ச்சி வேகமும் நடை நயமும்

கவிதையைக் கலையின் அரசி என்பார்கள்; கல்லாத கலை என்பார்கள். கவிதை என்றால்என்ன? யாப்பிலக்கண விதிகளைக் கவனித்து வார்த்தைகளைக் கோர்த்து அமைத்து விட்டால் கவியாகுமா? கவிதையின் இலட்சணங்கள் என்ன?

கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு. ஆனால் அவைகளின் கூட்டுறவு மட்டும் கவிதையை உண்டாக்கிவிடாது. கவிதையின் முக்கியமான பாகம், அதன் ஜீவசக்தி. அது கவிஞனது உள் மனத்தின் உணர்ச்சி உத்வேகத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு என்றேன். அவை ஒவ்வொன்றும் அவசியம்தான். ஒன்று குறைந்தால் அது பொக்காக இருக்கும். ஆனால் அவற்றின் கூட்டுறவுடன், கவிஞனின் சிருஷ்டி சக்தி லயப்படுகிறதினால்தான் கவிதை பிறக்கிறது. கவிதையின் ஜீவன் சிருஷ்டி சக்தி.

கவிதை மனிதனின் உணர்ச்சியில் பிறந்த உண்மை; உள்ளப் பாற்கடலில் பிறந்த அமிர்த கலசம். மனிதஉள்ளம் யதார்த்த (Realistic) உலகத்துடன் ஒன்றுபட்டோ, பிரிந்தோ கண்ட கனவு. அது உள்ள நெகிழ்ச்சியிலே,

உணர்ச்சி வசப்பட்டு வேகத்துடன் வெளிப்படுகிறது, அது தான் கவிதை.

கம்பனைப் பற்றிய ஒரு கதை-அது வெறும் பொய்க் கதையாக இருக்கலாம் இந்த உண்மையை நன்றாக விளக்கு கிறது. கம்பன் வழிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பொழுது, ஒரு அழுகைக்குரல் கேட்டது. காது கொடுத் தான்; திடுக்கிட்டான். அழுத பெண் ஒரு கவியரசி என்று கணடு விட்டான். நொந்து கொதித்த உள்ளத்தில் பிறந்த உண்மை.

**''சில்லென்று பூத்த**
**சிறு நெருஞ்சிக் காட்டினிலே**
**நில்லென்று சொல்லி**
**நிற்க வழி போனீரே''**

இது பிலாக்கண வார்த்தைகள்தான். வாழ்க்கையே ஒரு பாதை. இரண்டு பக்கத்திலும் மரகதப்பாய் விரித்தது போல் பசும்புல் தரை. இடையிடையே நெருஞ்சியின் மஞ்சள் பூக்கள். பச்சைப் பகைப்புலத்தில், மங்கலத்தின் அறிகுறியாக, கண்ணிற்கே குளிர்ச்சியாக இருக்கிறது. கணவன் தனித்து விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறான். இவள் வழிதெரியாமல், கண்ணிற்குக் குளிர்ச்சியாக இருக்கும்மஞ் சள் பாயின்மேல் கால் வைத்துவிடுகிறாள்; அவ்வளவுதான். குத்திக்குத்தி நடக்க முடியாமல் தவிக்கும்படி செய்துவிடு கிறது. வாழ்க்கைப் பாதையில் கணவனும், மனைவியுமாகச் செல்லுகையில், மஞ்சள் பூப்போல் இருந்த சமூகம், பந்துக் கள் அவன் பிரிந்தவுடன், முட்களாகக் குத்துகிறார்கள். இந்த அநுபவம், அவள் நொறுங்கிய உள்ளத்திலே கவிதை யாகப் பிறக்கிறது.

விவிலிய நூல், ''Out of the abundandance of the heart of the mouth speaketh'' என்று வாய்மையை விளக்கு

கிறது. உள்ளத்தில் பொங்கிய உண்மையை வாய் கிளர்த்து கிறது என்பது. அதுதான் வாய்மைஅதுதான் கவிதை. உண்மை உணர்ச்சி வசப்படாத தத்துவம்; வாய்மைஉள்ளக் கனிவை வெளிப்படுத்தும் நாதம்.

கவிஞன் உலகத்தின் உண்மைகளை, வாழ்க்கையின் ரகஸியங்களை வேறு விதமாகப் பார்க்கிறான். அவன் கண்கள் உணர்ச்சிக் கண்கள். கனவுக் கண்கள். குழந்தை யின் களங்க மற்ற உள்ளத்துடன், அதிசயத்துடன் பார்க் கிறான். குதூகலமோ துக்கமோ பிறக்கிறது. அந்த அநு பவம்தான் கவிதை. கவிஞன் சந்திரோதயத்தைப் பார்க் கிறான். அவன் நினைவுகள், கேட்ட கதைகள், கண்ட தத்துவங்கள் மனதில் குவிகின்றன. கவிஞனின் பார்வையில் சந்திரோதயம் காட்சியளிக்கவில்லை. ஒரு பெரிய காவியமே காட்சியளிக்கிறது. சந்திரோதயத்தைக் காண்பதினால் ஏற் படும் உள்ள நெகிழ்ச்சியின் அனுபவத்தைக் கூறுகிறான். அதுதான் கவிதை.

**''பெருந்திண் நெடுமால் வரைநிறுவிப்**
**பிணித்த பாம்பின் மணித்தாம்பின்**
**விரிந்த திவலை, உதிர்ந்த மணி,**
**விசும்பின் மீனின் மேல் விளங்க**
**அருந்த அமரர் கலக்கிய நாள்**
**அமுதம் நிறைந்த பொற்கலசம்**
**இருந்த திடைவந்து எழுந்ததென**
**எழுந்தது ஆழி வெண் திங்கள்''**

கம்பன் சந்திரோதயத்தைப் பார்க்கவில்லை. அழகின் பிறப்பாகிய, கலையின் பிறப்பாகிய, தேவாசுர யுத்த காப்பி யத்தைக் காணுகிறான்.அவனுக்குச்சந்திரோ தயம் யதார்த்த உண்மையில்லை; அவன் உள்ளத்தின் கனவு. இந்தக் கனவு தான் வாய்மை. அந்தக் கனவு அநுபவத்தில் எழுந்த பாட்டுத்தான் கவிதை.

# 2

கவிதை ஒரு அநுபவம். அதாவது அநுபவத்தை உணர்த்தும் சித்திரம். உண்மைக் கவிதைக்கு உரைகல் செவி. கம்பன் சொல்லுகிறான், "செவிநுகர் கவிகள்" என்று; கவிதையின் உயர்வைக் காதில் போட்டுப் பார்க்க வேண்டும். கவிஞன் தனது உள்ளத்து எழுந்த ஒரு அநுபவத்தைச் சப்த நயங்களினால்தான் உணர்த்த முடியும். அவன் உள்ள நெகிழ்ச்சியை எவ்வளவுக்கெவ்வளவு அப்படியே குறைபடாமல் உணர்த்துகிறானோ, அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய மேதை விளக்குகிறது.

கவிதையில், சரியான வார்த்தைகள், சரியான இடத்தில் அமைய வேண்டும். கவிஞன் வார்த்தைகளை எடுத்து கோர்ப்பதில்லை. உணர்ச்சியின் பெருக்கு, சரியான வார்த்தைகளைச் சரியான இடத்தில் கொண்டு கொட்டுகிறது. கவிஞன் சொல்ல வந்த விஷயத்தை அழுத்தமாகச் சொல்ல ஒரு வழி தான் உண்டு. அது அவனுக்குத் தெரியும். அதில்தான் கவிஞனதுமேதை விளங்குகிறது. உதாரணமாகக்கம்பன், யுத்த காண்டத்தில்,மயங்கிக் கிடந்த ராமனைக் கண்ணுற்று இறந்தானென்று சீதை புலம்பும் பொழுது,

> "எண்ணா மயலோடு இருந்ததுநிங்
> புண்ணாகிய மேனி பொருந்திடவோ
> மண்ணோர் உயிரே, இமையோர் வலியே
> கண்ணே! அமிர்தே! கருணாகரனே!"

என்று பாடுகிறான். மேலும் அதே இடத்தில்,

> "விதியே! கொடியாய்! விளையாடுதியோ?"

என்று சீதை ஏங்குகிறதாகப் போட்டிருக்கிறான். இடிந்த உள்ளத்தின் குமுறலை, இலக்கியத்தில் இதற்கு மேல்

அழுத்தமாகச் சொன்னதே இல்லை என்று கூறிவிடலாம். சரியான இடத்தில் சரியான வார்த்தைகள். இதுதான் கவிதை.

## 3

கவிதை அகநெகிழ்ச்சியின் அநுபவம். கவிஞனின் மேதையை அறிய ஒருவரி போதும். அவன் வார்த்தையில் இடர்ப்படுகிறவனா, மன உணர்ச்சியில் பலவீனமானவனா என்று பார்த்துவிட அந்த ஒரு வரியே போதும். உதாரண மாக பாரதியின்,

**''புல்லை நகையுறுத்தி பூவை வியப்பாக்கி''**

என்ற இயற்கை வருணனை என்ன அதிகாக அமைந்திருக் கிறது. இன்னும் ஒரு கவிஞன் காதலால் வாடும் ஒரு பெண்ணின் மனக் கொதிப்பைக் கூறுகிறான்:

**''பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போல வரும்<br>வெண்ணிலாவே இந்த வேகமுனக் காகாதே''**

என்று கொதிக்கிறளாம் ஒரு பெண். சந்திரோபாலம் பணத்தை வெகு நயமாக எடுத்துக்காட்டும் இந்த வரிகள் இதைப் பாடியவன் ஒரு கவிஞன் என்பதை அழகாக எடுத் துக் காண்பிக்கின்றன.

## 4

கவிஞனுக்கு அவன் உள்ள அநுபவத்தை எடுத்துக் காட்டக்கூடிய நடை வேண்டும், கவிதை கேட்கப்படுவது. உணர்ச்சி உத்வேகத்திற்குத் தகுந்ததுபோல் நடையின் நய மும் வேண்டும். கவிதையின் சாம்ராட்டுகளுக்கு( சக்ரவர்த்தி

களுக்கு) பாஷை அடிபணிகிறது. உணர்ச்சியின் மாறுதலுக்கு ஏற்றபடி நடையும் கதி பெற்று மாறுகிறது.

கம்பன், சீதை மண மண்டபத்தில் புகுவதையும், சூர்ப்பனகை ராமனைச் சந்திக்க வருவதையும் வருணிக்கிறான். ஒன்று இயற்கையழகு—தெய்வ அழகு. மற்றது செயற்கையழகுமாய அழகு.

**சீதை**

**''பொன்னின் ஒளி, பூவின் வெறி**
**சாந்து பொதி சீதம்**
**மின்னின் நிழல், அன்னவள்தன்**
**மேனியொளி மான**
**அன்னமும், அரம்பையாரும்,**
**ஆரமிழ்தும் நாண,**
**மன் அவை யிருந்தமணி**
**மண்டபம் அடைந்தாள்''**

**சூர்ப்பனகை**

**''பொன்னொழுகு பூவிலுறை பூவையெழில் பூவை**
**பின்னெழில் கொள்வாளிணை பிறந்தொளிர் முகத்தாள்**
**கன்னியெழில் கொண்டது கலைத்தட மணித்தேர்**
**மின்னிழிவ, தன்மையிது விண்ணிழிவ தென்ன''**

# வாணன் ஒரு இலக்ஷிய வீரன்

கம்பன் அறிந்த வாணனைப்பற்றிச் சரித்திரத்திற்குத் தெரியாமலிருக்கலாம். ஒரு வேளை சரித்திரம் அறிந்திருக்க முடியாத—தனது திறமைக்குச் சந்தர்ப்பம் வாய்க்காத—சாதாரணப் போர் வீரனாகவே இருந்திருக்கலாம். கர்ண பரம்பரை சொல்லும் வாணன்—முழுப் பெயர் ஏகம்ப வாணன்—கம்பனுக்கு ஒரு இலக்ஷிய வீரனாகவே இருந்திருக்கிறான். இவன் மூவேந்தரையும் அஞ்சியோடும் படி கலக்கிய ஒரு பெரும் போர் வீரனாக மட்டுமல்லாமல், இலக்கியத்தில் நல்ல ரசிகனும் ஒரு வள்ளலுமாக இருந்திருக்கிறான்.

ஆரைப்பாதி ஏகம்பவாணனது தலைநகர். ஆஸ்தான மண்டபத்திலே வாணன் கொலுவிருக்கிறான். நண்பர்கள், மந்திரிகள், கவிஞர்கள் கூடியிருக்கிறார்கள். சபையிலே அன்று வெகு குதூஹலம். சற்று முன் தங்கள் தலைவர் செய்த வீரச் செயலைப்பற்றி, கம்பனும் அரசன் பக்கத்தில் இருக்கிறான். எத்தனையோ புலவர்கள் தங்கள் கவிகளை யரங்கேற்றிப் பரிசில்களைப் பெற்றுச் செல்லுகிறார்கள். ஆஸ்தான மண்டபத்திற்கு வெளியே 'கிளிக் கூண்டுகள்'—அதாவது யுத்தத்தில் சிறைசெய்யப்பட்ட மன்னர்களையும், பெரும் குற்றவாளிகளையும், அடைத்துத் தொங்கவிட்டிருக்கும் பெரும் இருப்புக் கூண்டுகள் — ஒவ்வொன்றிலும் ஓர் அரசன்,

கம்பனும் மிகுந்த சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறான். கண்களில் ஓர் அற்புதமான ஒளி. உதட்டில் ஒரு புன் சிரிப்பு; சற்று எதையோ நோக்கும் கண்கள். மறுபடியும் கண்களில் ஒரு பிரகாசம். பாட ஆரப்பிக்கிறான். சபை நிசப்தமாக இருந்து கேட்கிறது. கம்பீரமான தொனி. சிருஷ்டி உத்ஸாகம். வாணனைப் பார்த்துக் கொண்டே பாடுகிறான்.

**''பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம்**
**மார்பகலம் கண்டு மகிழ்வாரே''**

நிறுத்திவிட்டுச் சுற்றிப் பார்க்கிறான். ''இது இயற்கை தானே; இதில் அதிசயம் என்ன'' என்று நினைப்பதுபோல் பார்க்கிறார்கள். மறுபடியும் திருப்பிச் சொல்லிவிட்டு, பின்னும் பாடிக் கொண்டே போகிறான்.

**''பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம்**
**மார்பகலம் கண்டுமகிழ்வாரே—போர்புரிய**
**வல்லான் அகளங்கன் வாணன் திருநாமம்**
**எல்லாம் எழுதலாம் என்று''**

சிறந்த போர் வீரனின் பெயரைப் பச்சை குத்திக் கொண்டால் தைரியம் வரும் என்பது ஒரு நம்பிக்கை. இதை வைத்துக்கொண்டு மிகுந்த ஓசை நயத்துடன் அமைந்துவிட்டது வாணன் புகழ். ஏகச் சக்ராதிபதிகளின்-'பேராசரின்' என்ற ஓசையே எவ்வளவு பெரியது என்பதைக் குறிக்கிறது பாருங்கள்—பட்டமகிஷிகள் தங்கள் குழந்தைகளின் மார்பின் அகலத்தைக் கண்டு, வாணன் பெயர் எல்லாவற்றையும் எழுதலாம் என்று மகிழ்வார்களாம் ''எல்லாம் எழுதலாம் என்று என்பது மோனையில்'' மிகுந்த அர்த்த விசேஷத்தைக் கொடுக்கும்படிபடி வெகு அழுத்தமாக விழுந்திருக்கிறது!

## 2

கம்பன் சபையை நோக்கித் திரும்பிக்கொண்டு பாடுகிறான்:

''வாணன் பெயரெழுதா
    மார்புண்டோ? மாகதர்கோன்
வாணன் புகழுரையா
    வாயுண்டோ?—வாணன்
கொடி தாங்கி நில்லாத
    கொம்புண்டோ? உண்டோ,
அடி தாங்கி நில்லா அரசு?''

அகலமான மார்புகள் மட்டுமா வாணன் பெயரைத் தாங்கி மகிழ்கின்றன? வாணனது புகழைப் பேசாத வாயுண்டோ? வாணனது வெற்றிக் கொடிகளைத் தாங்கி நிற்காத கொம்புகள் உண்டோ? அல்லது நமது வாணனது பாதங்களை வணங்காத (தாங்காத) அரசன் எங்கேயாவது இருக்கிறானா?

வெறும் கேள்விகள்தான். அதில் என்ன ஆற்றல்! என்ன அழுத்தம்? ஒரு பெரிய பிரசங்கியுடைய சிகர வார்த்தைகளின் முத்தாய்ப்பு மாதிரியல்லவா விழுந்திருக்கிறது? ஒவ்வொரு வரியிலும் ஒரு மோனை, 'உண்டோ, உண்டோ'? என்று திரும்பத் திரும்பக் கேட்பதிலே, இல்லை, இல்லை என்று எதிரொலிக்கும் உள்ளங்களின் அழுத்தம். கேள்விகளை ஒரே மாதிரியில் போட்டு அடுக்கிக் கொண்டே போவதின்—ஆவேசத்தின் முத்தாய்ப்பாக, 'உண்டோ அடிதாங்கி நில்லா அரசு?' என்று சட்டென்று கேள்வியின் வரிசையை மாற்றிப் போடுவது ஒரு அந்தோனியைத்தான் (Antony) நமது நினைவிற்குக் கொண்டு வருகிறது.

# 3

கம்பனது கண்கள் வெளியே தொங்கும் 'கிளிக்கூண்டு' களில் தங்குகிறது. சற்று முன் பரிசில் பெற்ற கூட்டத்தில் நினைவு செல்லுகிறது. ஒரு சிறிய கனவு; மறுபடியும் கண் களில் ஒருவிதப் பிரகாசம்.

திரும்பவும் பாடுகிறான்:

**''என் சிவிகை, என் சிவிகை!**
**என் கவசம், என் துவசம்!**
**என் கரியீ தென் பரியீ**
**தென்பரே—மன் கவனம்**
**மாவேந்தன் வாணன்**
**வரிசைப் பரிசு பெற்ற**
**பாவேந்தரை வேந்தர் பார்த்து ''**

புலவர்கள் கூட்டமாகப் பரிசில் பெற்றுச் செல்லு கிறார்களாம். வாணன் தான் யுத்தத்தில் பிடித்த பொருள் களை யெல்லாம், ஒருவனுக்கு ஓர் அரசனது சந்திர வட்டக் குடை, இன்னொருவனுக்குச் சிவிகை, மற்றொருவனுக்கு ஓர் அரசனின் கவசம், இன்னும் ஒருவனுச்கு ஓர் அரசனின் கொடி இப்படியாகக் கொடுத்து விடுகிறானாம். பின் ஒருவன் ஓர் அரசனுடைய பட்டத்து யானையை ஓட்டிக் கொண்டு வருகிறான். பின்னும் ஒருவன் பட்டத்துக் குதிரையைப் பிடித்துக்கொண்டு வருகிறான். இந்தக் கூட்டத்தைக் 'கிளிக் கூண்டு'களில் சிறைப்பட்டு உட்கார்ந் திருக்கும் அரசர்கள் பார்க்கிறார்களாம்.

ஒரு கூண்டிலிருந்து 'என் கவசம்'' என்கிறான் ஒருவன். ஒவ்வொருவனும் தன் பெருமையைக் காண் பிப்பதற்காக, பொருளைச் சேகரிக்கப்பட்ட கஷ்டங் களை எல்லாம் நினைக்கிறான். அவன் வாயிலிருந்து ஒரு வார்த்தைதான் வருகிறது. இப்படியிருக்கையில்

யானையையும் குதிரையையும் ஓட்டிக் கொண்டு வரும் புலவர்கள் தென்படுகிறார்கள். 'கூண்டி'லிருக்கும் ஒருவனுக்குத் தன் பட்டத்து யானைபோல் தெரிகிறது. தன் குழந்தை மாதிரி, கண்ணிற்குக் கண்ணாக வளர்த்து வந்தான். எருமை மாட்டைக்கூட வளர்த்தறியாத இந்தப் புலவன் கையிலா போகவேண்டும்? "என் கரியீ" தென்று ஏங்குகிறான். "குதிரை! ஐயோ அதைத் தருவிக்க, அதன்பின் அதை வளர்க்கப்பட்ட கஷ்டம் இந்தப் புலவனுக்குத் தெரியுமா? பொதி சுமக்கும் கழுதை மாதிரி முதுகில் ஏட்டுச் சுவடி களையல்லவா போட்டு இழுத்துச் செல்லுகிறான்? ஐயோ! "என்பரி" என்று ஏங்குகிறான் மற்றொருவன்.

கூட்டம் மறைகிறது. கூட்டிலிருப்பவர்களைக் காண்பித்துக் கொண்டு, கம்பன் சொல்லுகிறான்; "இவர்கள், வெறும் வேந்தர்கள். அவர்கள் பாவேந்தர்கள்."

## 4

சற்று நேரம் மௌனம்.

திரும்பவும் ஒரு கனவு.

"ஆரைப்பதியை நோக்கி வரும் சாலை. தனியாக ஒரு புலவன் வந்துகொண்டிருக்கிறான். இவனுக்கு முன்புசற்றுத் தூரத்திலே யானை, குதிரை, குடை கொடி, சிவிகை முதலிய இராஜ சின்னங்கள் தெரிகின்றன. சூரிய வெளிச்சத்திலே கவசம் ஒளி வீசுகிறது. "அரசே தாங்கள் எந்தவூர்? ஆரைப் பகுதிக்குத் திறைகொண்டு வருகிறீர்களோ?" என்று நெருங்கிக் கேட்கிறான். கூட்டத்தில் ஒருவன் பதில் சொல்லுகிறான். "நானும் உம்மைப்போன்ற புலவன் தான். வாணனிடம் பரிசுபெற்று வருகிறேன், நீரும் அங்கு செல்லும்;" என்று சொல்லுகிறான்,

கம்பன் பாடுகிறான்.

''தெருளைப் புரவி வாரணத் தொகுதி
திறை கொணர்ந்து வருமன்னநின்
தேசமே துனது, நாமமேது புகல்.
செங்கையாழ் தடவுபாண கேள்
வாருமொத்த குடிநீரு நாமு(ம்)மக
தேவனாரை நகர் காவலன்
வாணபூபதி, மகிழ்ந்தளிக்க, வெகு
வரிசை மெற்றுவரு புலவன்யான்.
நீருமிப்பரிசு பெற்று மீளவர
லாகுமேகு மவன் முன்றில்வாய்
நித்திலச் சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங் கெலாம்
ஆருநிற்கு முயர் வேம்பு நிற்கும், வளர்
பனையுநிற்கு மதனருகிலே
அரசு நிற்குமர சைச் சுமந்த சில
அத்தி நிற்கு மடை யாளமே.''

சந்தமே குதூஹலத்தை வெளியிடும்படி அமைந்திருக்கிறது. மூவேந்தர்களும், வாணன் முன்வாயிலில் வளரும் மரங்கள் போல் எப்பொழுதும் நிற்கிறார்களாம். அரசர் கொணரும் திறைபோல் புலவர் பெற்றுவருகிறர்களாம்.

## 5

கம்பன் ஒரு கதை சொல்ல ஆரம்பித்துவிட்டான். அக்காலத்தில் பாண்டியன்தான் மூவேந்தரிலும் பாராக்கிரம சாலி, அவனைப் பற்றியத்தான். பாண்டியன் வேப்ப மாலையை அணிபவன் என்பது ஞாபகத்திற்கு வருகிறது. அவன் ஏன் வேப்ப மாலையை அணிய வேண்டும்? காரணம் வேண்டாமா? கம்பன் ஒரு காரணம் சொல்லுகிறான், யுத்த களத்திலே, அம்புகள் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து

கொண்டிருக்குமிடத்திலே, உயிரைத் திரணமாக மதித்து அனாயாசமான வேலைகளைச் செய்யும் வாணனைக் கண்டவர்கள், ''இவன் என்ன யக்ஷணி தெய்வத்தை மசியம் செய்திருக்கிறானா? மேலே ஒரு அம்பு படமாட்டேன் என்கிறதே! இவன் தொட்டதெல்லாம் வெற்றியாகிறதே'' என்று பேசிக் கொள்கிறார்கள், இது நினைவிற்கு வருகிறது. ''பாண்டியன் ஏன் வேப்பமாலையணிந்திருக்கிறான்? தெரியுமா?'' என்று கேட்டுவிட்டுப் பாடுகிறான்;

**''இலகு புழொரை யேகம்ப வாணன்**
**அலகை வரும் வருமென்றஞ்சி—உலகறிய**
**வானவர்கோன்சென்னிமிசை வண்கை வளையெறிந்த**
**மீனவர் கோன் கைவிடான் வேம்பு''**

பிறகு பாண்டியனும் தோற்றுவிட்டான்!

பாண்டியன் ஒருவன் தேவேந்திரன் சிரத்தில் வளையெறிந்து அவனை வென்றதாக ஒரு கதை, கதையைத் தொடரந்து பாடுகிறான்;

**''வாள்(த்) தானை தென்னவர் கோன்**
**மாகதர்க்குத் தோற்ற செய்தி,**
**கேட்டான். அத்தீக்குரலைக் கேட்**
**டதற்பின்—நாட்டம்**
**பொருந்தாயிர விழியான், பொன்**
**முடியைச் சாய்த்தங்**
**கிருந்தானிங் கென்னாகு மென்று''**

பாண்டியன் தோற்ற செய்தி, எதிர்பாராதவிதமாகத் தீப்போல் செவியில் நுழைகிறது. ''வேப்ப மாலையை வைத்திருந்த பாண்டியன் கதியே இப்படியானால்?'' என்றுயோசித்த வண்ணம் தலையைக் கையில் சாய்த்துக் கவலை யுற்றிருக்கிறானாம் இந்திரன்! ஆயிரம் விழிகளும் அப்படியே அசைவற்று நின்று விடுகின்றனவாம் 'நாட்டம் பொருந்தா ஆயிரம் விழியான்' என்று சொல்லி தேவர் இமையாத கண்களுக்கு ஒரு காரணம் கற்பிக்கிறார்.

## 6

கம்பன் பின்னும் ஒரு கதை சொல்ல ஆரம்பிக்கிறான், இன்று குதூஹலம் அவனுக்கு உச்சஸ்தாயி.

"ஒருநாள் வாணன் கழனிக்குச் சென்றிருந்தானாம். அப்பொழுது மூவேந்தரும் அவன் வீட்டிற்கு வந்து, "வாணன் இருக்கிறாரா?" என்று கேட்டதற்கு, அவர் மனைவி, "கழனிக்குப் போயிருக்கிறார்" என்று பதில் சொன்னாளாம். மூவர்களில் ஒருவர் குத்தலாக "முடி நடவா?" என்று கேட்டார்களாம். அதற்கு அவள் பின்வருமாறு பதில் சொன்னாளாம்."

கம்பன் பாடுகிறான்:

**சேனை தலையாக்கி,**
**செங்குருதி நீர் தேக்கி,**
**ஆனைமித்த அடிசேற்றில்—மானபரன்**
**மாவேந்தர் வேந்தன்**
**எங்கோன் பறித்து நட்டான்**
**மூவேந்தர் தங்கள் முடி.**

இதை வாணன் கேள்விப்பட்டானாம், உடனே "விலங்கு கொணடுவா" என்று கட்டளையிட்டானாம். கம்பர் அங்கிருந்த பெண்களைப் பார்த்து, "இவை யாருக்கோ?" என்று இரங்கிக் கேட்கின்றார் :

## 7

**"அலங்கலணி மார்பன்**
**ஆரையர் கோன் வாணன்**
**விலங்கு கொண்டு வரும் :**
**என்றான்—இலங்கிழையீர்!**
**சேரர்க்கோ, சோழர்க்கோ.**
**தென் பாண்டி நாடாளும்**
**வீரர்க்கோ, யார்க்கோ விலங்கு"**

கம்பனை இதுவரையில் கேட்டுக்கொண்டிருந்த வாணனுக்குப் பொறுக்க முடியவில்லை. புன்சிரிப்புடன் "உமது வாணன் புகழுக்கு எல்லையில்லையா?" என்று கேட்டார்.

கம்பன் கண்களில் ஒரு ஒளி தோன்றுகிறது. வாணன் புகழுக்கு மட்டுமல்ல, எல்லாவற்றிற்குமே எல்லையுண்டு என்று சொல்லிவிட்டுப் பாடுகிறான்.

**"வாணன் புகழ்க்கெல்லை**
**வாழ்த்துவோர் நாவெல்லை**
**வாணன் நிலத்லெல்லை**
**மண்ணெல்லை: —வாணன்**
**படைக்கெல்லை திக்கெல்லை**
**பைந்தமிழ் தேர் வாணன**
**கொடைக் கெல்லை**
**ஏற்பவர் தங்கோள்"**

கம்பனுக்கு ஏற்ற வாணன், வாணனுக்கு ஏற்ற கம்பன்!

# பாட்டும் அதன் பாதையும்

ஐந்து குருடர்கள் ஒரு சமயத்தில் யானை என்பது எப்படிப்பட்ட மிருகம் என்பதை முடிவாகக் கண்டு தெளிந்துவிடவேண்டும் என்ற ஆசை மேலீட்டால்? ஆனைக்கவுனியொன்றுக்குச் சென்று அங்குள்ள மாவுத்தன் ஒருவனிடம் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி பெற்றுத் தத்தம் சுய பிரக்ஞையை மட்டும் உபயோகித்து யானை என்பது முறம், உலக்கை, உரல், துடைப்பம், குதிர் என முறையே ஐந்துவிதமான அபிப்பிராயமுடன் வெளிவந்து பிறகு சாகுமட்டும் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டிருந்ததாக ஒரு கதையுண்டு. அக்கதையை யாவரும் படித்ததும் உண்டு. படித்துச் சிரித்ததும் உண்டு. அதைப் பழமொழியாக உபயோகித்துப் பேசுவதும் உண்டு. இப்படிப் பேசுகிற அவர்கள் கவிதை அல்லது பாட்டு என்ற பொருள் பற்றித் தமக்குள் விவாதம் தொடங்கிவிட்டால் வெட்டுப்பழி குத்துப்பழி வரைக்கும்போய் நிற்பார்களேயொழிய தாமும் குருடர்கள் யானை பார்த்த கதையாக கவிதையைப் பார்க்கிறோம் என்பதை உணரமாட்டார்கள். இயல்பாக விவேகத்துடன் பேசுகிறவர்கள் இந்தக் கவிதையென்ற பொருள்பற்றி விவாதம் தொடங்கும்பொழுது ஏன் தம் இயல்பை அறவே மறந்து விடுகிறார்கள்? கவிதையென்ன அத்தனை வசீகரம் பொருந்தி அவரவர் அழகுகளை மட்டும் பிகாண்க்கும் மோகினியா?

கவிதை உண்மையில் ஒரு மோகினிதான். அதாவது மோகினி என்பதற்கு நாம் கொடுக்கும் விகல்பமான மட்டமான பொருள் இல்லாமல், வசீகரத் தன்மை வாய்ந்த என்ற பொருளை மட்டும் கொண்டால் கவிதை மோகினி என்பது பொருந்தும், எடுத்த எடுப்பில் கவிதையில் நம்மைக் கவரும் விஷயம் என்ன? அது இதுவரை இசையில் பொருந்தி வருகிறது என்பது மட்டுமா? இசை மட்டும்தான் அதன் பிரதான கவர்ச்சியா? இசை யில்லாவிடில் கவிதை சோபிக்காதா? இவை இன்று பெருத்த சர்ச்சைக்கு ஆதார மாக இருந்து வரும் கேள்விகள். 'ராமன் காப்பி சாப்பிட் டான்' என்ற வார்த்தைத் தொடர்பு குறிப்பிட்ட செயலை விவரிக்க மனிதர்கள் சங்கேதமாக வகைப்படுத்திக் கொண்ட ஒலித் தொடர்பின் வடிவம். செயலைக் குறிப்பிடுவதுபோல மனிதன் தனது ஆத்திரத்தையும் குறிப்பிடுகிறான். 'ராமன் காப்பி சாப்பிட்டுத் தொலைஞ்சானா?' என்று சொல்லும் போது, ராமன்போய்விட்டது மட்டும் தொனிக்க வில்லை. ராமன் போய்விட்டதினால் ஏற்பட்ட சிக்கல்கள், அதனால் ஒரு மனிதனுக்குண்டான ஆத்திரம் ஆகியவை அந்த வார்த்தைகளுக்குப் பின்னிருந்து குமுறுகின்றன. இதே மாதிரி உணர்ச்சியை உபமான சித்திரங்களாலும் சொல்லுகிறோம். 'பிள்ளையைப் பூப்போல எடு' என்று நாம் சொல்லும்பொழுது, 'பூ' எவ்வளவு மென்மையான பொருள், அதைப்போல குழந்தையும் மென்மையானது என்பதைப்பேச்சளவிலேயே நாம் சொல்லத்தான் செய் கிறோம். இது புறப்பொருள் ஒன்றை நமது இதய பாவத் திற்கு உபமானமாகக்கொண்டு நாம் உபயோகிபபது சர்வ சாதாரணம். 'முத்துப் போல் பல்வரிசை' 'பஞ்சுப் பெட்டி போல் நரைத்த தலை' என்று நாம் உபயோகிக்கும்போது ஒரு காரியத்தை மனதில் நன்றாகப் பதிவதற்காக, புரியும் சித்திரங்களாகச் சொல்லுகிறோம். இம்மாதிரியாகச் சொல்லும் பொழுது இருக்கும் சோபை, பட்டை தீட்டாத

வைரங்கள் போல பேச்சு என்ற கானகத்திலே சிதறிக்கிடக்கின்றன. இவை நிலையான உருவம் பெறுவது, என்றும் மனதையும் மனிதவம்ச நினைவுச் சரட்டையும் பற்றிக் கொண்டு நிலையாக நிற்கும்படி செய்விக்கும் ஒரு காரியம் தான் கவிதை.

சாதாரணமாக நாம் வார்த்தைகளைக் குறிப்பிட்ட பொருளையோ, செயலையோ குறிப்பிட உபயோகிப்பது போலக் கவிஞன் உணர்ச்சிகளை வார்த்தைகளின் ஸ்தானங்களில் வைத்து அவைகள் மூலமாக மனித இயல்பின் அடித் தளத்தில் உள்ள நிலையான உண்மைகளைத் தொட முயற்சிக்கிறான். அதனால்தான் கவிதையில் கவர்ச்சி, மோகனத் தன்மை அமைந்துகிடக்கிறது. சிலர், கவிதை அல்லது பாட்டு, தலைகீழ் நடப்பது, நெருப்புத் தின்பது, கத்தி விழுங்குவது போன்ற இயல்புக்கு மாறான செயல் எனக் கருதி கவியின் இயல்பே, இயல்புக்கு விரோதமாக அமைந்து கிடப்பது என்ற பொருள் கண்டு இடர்ப்படுகிறார்கள். இயல்புக்கு விரோதமான எந்தச் செயலிலும் கவர்ச்சி காண முடிவது துர்லபம். அதைக் கண்டு நாம் பிரமிக்கலாம். நம்மால் செய்யமுடியாத காரியம் என்று அதற்கு ஒரு உயர்ந்த ஸ்தானம் கொடுக்கவும் இணங்கக்கூடும். கத்தி விழுங்குபவனும் கவிராயனும் ஒன்றல்ல. கவிராயன் நாம் செய்யக் கூடிய காரியத்தைத்தான், நாம் எப்படிச் செய்ய விரும்புகிறோமோ அந்த அளவு ஆணித்தரமான அழுத்தத்துடன் செய்கிறான் என்பதைத் தவிர நாம் செய்ய முடியாத காரியத்தை அவன் செய்கிறான் என்பதல்ல.

கவிராயன் உணர்ச்சிகளை வார்த்தைகளின் ஸ்தானத்தில் உபயோகிக்கும் பொழுதுதான் வார்த்தைகளுக்குப் பொருளாழமும் வேகமும் ஏற்படுகிறது. உணர்ச்சி வெற்றுணர்ச்சியாக இல்லாமல் ஓர் கருத்தின் அடியாகப் பிறந்த

வேகமாக இருந்தால் பாட்டுக்கு ஒரு ஸ்திரத் தன்மை அமைந்து விடுகிறது, அதனால்தான் பாட்டு அழியாதவஸ்துவாக இருக்கிறது. பிலாக்கணமும் உணர்ச்சியின் வெளியீடு தான். ராமாயணமும் உணர்ச்சியின் வெளியீடுதான். ஆனால் ராமாயணத்திற்குள்ளமைந்த நிலையான தன்மை பிலாக்கணத்தில் விழாததற்குக் காரணம் ஒன்று வெற்றுணர்ச்சியின் வெளியீடாகவும் மற்றொன்று கருத்தினுடைய வேகத்தின் வெளியீடாகவும் அமைந்து கிடப்பதுதான்.

யாப்பு முறையானது பேச்சு அமைதியின் வேகத்திற்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு ரூபமே யொழிய பேச்சு முறைக்குப் புறம்பான ஒரு தன்மையைப் பின்பற்றி வார்த்தைகளைக் கோர்ப்பதல்ல. வசனம் சமயத்தில் பேச்சு முறைக்குச் சற்று முரணான வகையில் கர்த்தாவைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, செயலை விளக்கும்நிலை அவசியமாகும் பொழுது பின்னிக் கிடந்து வார்த்தைகளை அதன் பொருள் இன்னது என்று விலங்கிட்டு நிறுத்தும். அதாவது சட்ட ரீதியான தத்துவ ரீதியான நியாயங்களைப் பற்றி விவாதங்கள் நடத்தும்பொழுது வார்த்தைகளின் பொருட் திட்பம் இம்மியளவேனும் விலகாது இருப்பதற்காக இன்ன வார்த்தைக்கு இன்ன பொருள்தான் என்று வரையறுத்துக் கொண்டு அவற்றின் மூலமாகச் செயல் நுட்பங்களை நிர்த்தாரணம் செய்து, மனித வம்சம் நிலையாக வாழ்ததற்குப் பூப்பரப்பின் ஒவ்வொரு பகுதியிலும் அமைந்து வாழையடி வாழையாகப் பின்பற்றப்பட்டு வரும் செயல் வகுப்பு, வசனத்தினால்தான் இயலும். இந்தவிதமான வாக்கிய அமைப்புகளை மட்டுமே நாம் வசனமெனக் கொள்ளலாமே யொழிய குறிப்பிட்ட நாமறிந்த யாப்பு அமைதிகளுக்குப் புறம்பான யாவும் வசனம் என நினைத்துவிடக் கூடாது. யாப்பு விலங்கல்ல. வேகத்தின் ஸ்தாயிகளை வடித்துக் காட்டும் ரூபங்கள். குறிப்பிட்ட யாப்பமைதி, பழக்கத்தினா

லும், வகையறியா உபயோகத்தினாலும், மலினப்பட்டு விடும்பொழுது ரூபத்தின் மீது வெறுப்பு ஏற்படுவது இயல்பு. ரூபமில்லாமல் கவிதையிருக்காது. கவிதையுள்ள தெல்லாம் ரூபம் உள்ளது என்றும் கொள்ள வேண்டும். வெண்பாவும், விருத்தமும், கண்ணிகளும் ஒரு விஸ்தார மான அடித்தளமே ஒழிய வெண்பாவிலேயே ஆயிரமாயிர மான ரூப வேறுபாடுகள் பார்க்கலாம். இன்று ரூபமற்ற கவிதையென சிலர் எழுதிவருவது, இன்று எவற்றையெல் லாம் ரூபம் எனப்பெரும்பாலோர் ஒப்புக் கொள்கிறார் களோ, அவற்றிற்குப் புறம்பான ரூபத்தை யமைக்க முயலு கிறார்கள் எனக்கொள்ள வேண்டும் யொழிய அவர்கள் வசனத்தில் கவிதை எழுதுகிறார்கள் என்று நினைக்கக் கூடாது. அவர்கள் எழுதுவது கவிதையா இல்லையாயென்பது வேறு பிரச்னை, இன்று வசன கவிதை என்ற தலைப்பில் வெளிவரும் வார்த்தைச் சேர்க்கைகள் வசனமுமல்ல, கவிதை யுமல்ல, தமிழில் புதிய கற்பனை என்பது சற்றுக்கடினமான விஷயம். ஆனால் பாட்டு எழுதுவது லகுவான விஷயம். காரணம் நமது இலக்கியமானது நெடுநாள் பட்ட வளர்ச்சி கண்டது. அதன் வார்த்தை அமைதிகளே கவிதைப் பண்பு கொண்டு, நடைபயிலும் சிறு குழந்தைக்கு நடை வண்டி போல அமைந்து கிடப்பதால், பேரிகை கொட்டிப் பிழைப் பதைவிட, கவிதை கட்டிப் பிழைப்பது இலகுவான காரிய மாகி விட்டது. இன்று உள்ள நிலைமையில் தமிழ்ப் பாட்டுச் சீர்பெற வேண்டுமெனில், அதாவது இன்று பாட்டு எழுத வேண்டுமெனில், பாஷையின் வளத்தை யறிந்து அதைச் சாகசமாக உதறித் தள்ளவும், ஏற்றுப் பயன்படுத்தவும், தகுதிவாய்ந்த பயிற்சியும் உணர்ச்சியின் வேகத்தை அநுபவித்து அறிய அறிவிக்கக் கூடியவர்களா லேயே இயலும். இன்று அப்படிப்பட்டவர்கள் யாருமே கிடையாது என்பது என் கட்சி. இனி வருங்காலத்தில் வரட்சியா, வளமா என்பது இன்றைய நிலையில் ஊகிக்க

முடியாத விஷயம். ஒன்றை, பாரதியை வைத்துக்கொண்டு உடுக்கடித்துக் காலந்தள்ளியது நமக்குப் பெருமை தரும் காரியம் அல்ல. ஆனால் கடையில் 'பிஸ்கோத்து' வாங்கு வதுபோலவோ, கவர்மெண்ட் அதிகாரம் செய்வது போல வோ, கவிராயருக்கு 'ஆர்டர்' கொடுக்க முடியாது, அவன் பிறப்பது பாஷையின் அதிருஷ்டம். அவனுக்கு உபயோக மாகும் பாஷையை மலினப்படுத்தாமலிருப்பது நமது கடமை.

# குயில்-ஒரு நெட்டைக் கனவு

உலகம் அசட்டுத்தன்மை, மிருகத்தன்மை, பயம் கொடுமை என்ற அரசு வர்க்கங்களின் ஏகபோக மானாங் காணியாக இருக்கின்றது. அசட்டுத்தனமும் கோழைத் தனமும் இதைச் சில சமயம் போற்றுகின்றன, சிலசமயம் இதைக்கண்டு பாதவிக்கின்றன. இந்த அசட்டுத்தனத்தை யும், மிருகத்தனத்தையும் உணர்ச்சி யுடையவன் பொறுத் துக் கொண்டிருக்க முடியுமா?

"தனிமை கண்ட துண்டு—அதிலே சாரமிருக்குதம்மா"

இந்த இருளைப்போக்கி, ஒளியைக் கொண்டுவர முய லும் கவிஞனும் மலைத்து விடுகிறான். தனியிடத்திலே அவன் மனம் குமுறுகிறது, கொந்தளிக்கிறது.

நந்தவனத்தில் சாந்தி ஏற்படாதா? நந்தவனம் இயற்கை யின் அன்பை ஊட்டுவதுபோல் அழகின் பெருமையைப் பரிந்து அளிக்கின்றது. கவிஞனது உள்ளம் அதை ஏற்கும் நிலையில் இல்லை. இருளின் ஒளி சிதறி மனத்தைக் கறுப் பில் மின்ன வைக்கிறது.

எங்கிருந்தோ ஒரு குயில் கூவுகிறது. அந்தக் குயிலின் ஏக்கம், சோகம்கலந்த குரல் கவிஞனது உள்ளத்தில் கலக் கிறது. இரண்டும் ஒன்றுபட்டது.

கவிஞன் இப்பொழுது சுற்றிலும் கவனிக்கிறான். அந்தச் சோகம் கலந்த குயிலின் குரலில் ஒரு நம்பிக்கை

அவனுக்குத் தோன்றுகிறது. அவன் குதூஹல மடைகிறான். உலகத்தின் இன்ப ஒளி அவனுக்குத் தெரிகிறது.

சூர்யோதயம் ஒரு களிப்பை மனதிற்குத் தருகிறது. உலக இருள் அகலுகின்றது, அதிலிருந்து எத்தனையோ கற்பனைகள், கனவுகள் அவனுக்குத் தோன்றுகின்றன.

மறுபடியும் குயில் கூவுகிறது,

இப்பொழுது இந்த இன்ப ஒளித்திரளான இயற்கை வனப்பிலே அந்தக் குயிலின் சோகம் துணையை நாடுவது போல் படுகிறது. ஒரே விதமாகத் துடிக்கும் இரண்டு இருதயங்கள் பிணிக்கப்படுவதில் அதிசயமில்லை.

குயில் கவிஞனை யழைப்பதுபோல் கூவுகிறது.

கவிஞன் குயிலைத் தேடுவதுபோல் பாடுகிறான்.

அவன் உலகை மறந்துவிட்டான். குயிலும் அவனும் தவிர இந்த அகண்ட உலகில் வேறு ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை.

குயில் அவன் கண்களுக்குத் தென்படுகிறது. அவனை யழைக்கிறது. அந்த அழைப்பிலே, ஒரு கட்டுக்கடங்காத பாசம், ஒரு விள்ள முடியாத காதல் புலப்படுகிறது. குயில் அவனை வசீகரித்தது. அவன் உள்ளத்தை அப்படியே திருடி விட்டது. குயிலுக்கு அவன் அடிமை. அன்பில் வசப்படாமல் யார்தான் இருக்க முடியும்? அதிலும் ஒரு கவிஞன்...

மறுபடியும் ஒரு கனவு...

குயிலைத் தேடுகிறான், என்ன ஆவேசம்! என்ன காதல்! கட்டுக் கடங்காத காட்டாறு போன்ற மோகம். முன்பு குயில் இவனை நாடியது. இப்பொழுதோ? அங்கே குயில் இருக்கிறது குயில்மட்டுமா? ஒரு குரங்கினுடன் முன்போல் குலாவுகிறது. அதே காதல்! அதே உணர்ச்சி!

கவிஞன் மனம் அப்படியே இடிந்துவிடுகிறது. நீசக்குயில்! வஞ்சனையான பெண்மை; உலகத்தின் இலக்ஷியங்கள் கனவுகள் எல்லாம் வெறும் பைத்தியக்காரத்தனமா? ஒப்புக்காகக் கூறும் மோசக்காரப் பேச்சா? ஒளியாக வந்தது கானலாக மறைந்ததே! இதுவும் இருளின் ஒரு பொய்த் தோற்றமா? எல்லாவற்றையும் ஒரேயடியாக நசித்து, ஒரே ஊழியின் இறுதிக் கூத்தாக முடித்து விட்டால்.........மனம் குமுறுகிறது. இருள் கவ்வுகிறது. மறுபடியும் இருள்...

மறுபடியும் ஒரு கனவு...

மறுபடியும் குரலோசை. ஐக்கியப்படாமல் இருக்க முடியுமா? காதல் ஏகச்சக்ராதிபத்தியமா? அவனால் குயிலின் பாசத்தைக் களைய முடியவில்லை. அதெப்படி முடியும்? உண்மைக் காதல் என்ன உத்தரீமா?—நினைத்த பொழுது களைந்து விடுவதற்கு. மறுபடியும் அந்தக் குயில் தென்படுகிறது. ஆனால் இப்பொழுது... இப்பொழுது ஒரு மாடு. குரங்கின் கதி என்ன? இந்த மாட்டின் கதி என்ன? அதை எப்படி இவனால் நினைக்க முடியும்? அவனுக்குப் போட்டியாக, எதிரியாக இருப்பவர்களை, அதுவும் மிருகங்களை, மனம் குமுறுகிறது. இப்பொழுது கொன்றால்......சற்று நேரங்கழித்துக்கொன்றால் என்ன? அவ்வளவு நேரமாவது குரலின் இனிமையைக் கேட்டால் என்ன? கொல்லவேண்டியதுதான். கத்தியை வீசுகிறான்......எல்லாம் மறைகிறது இருள் இருந்த.

மனதில் இடையற்ற கொந்தளிப்பு.

மறுபடியும் ஒரு கனவு.

குயிலைத் தேடிச் செல்வதில்லை. மனங்கசந்து. விட்டது. அதை இன்னும் எப்படித் தேடமுடியும். திரும்பத் திரும்ப மனத்தைப் புண் படுத்திய குயிலை எப்படி நினைப்பது. காதலைக்களைய முடியவில்லை. உயிரைத் தின்னும்

காதலை உள்ளத்தை உள்ளூரப் பூச்சி யரித்த மாதிரி, வெறும் பொக்காக, பாழ்வெளியாக ஆக்கிய குயிலை நினைக்கக் கூடாது என்று அறிவு சொல்லுகிறது. உள்ளம் கேட்கிறதா? அம்மாதிரித் துன்பத்தில் ஒரு சுகத்தைக் காணும் பொழுது குயிலிடம் ஒரு பாசம் வராமல் இருக்குமா? இப்பொழுது அறிவு கொஞ்சம் திடப்பட்டு விட்டது. அல்லது உள்ளம் கொஞ்சம் கோழையாகி விட்டடதா? போக ஒப்பவில்லை. ஆனால் குயில்......அது துணையை வேண்டியே தவிக்கும் பொழுது, அது நாடுகிறது. தூரத்திலே குயில், கவிஞனுக்கு அறிவின் கட்டுப்பாடு எங்கோ பறந்தது.பேசாமல் தொடர்கிறான். முந்திய இடம், முந்திய குயில்... ஆனால் இடையில் எவ்வளவு பெரிய சோக நாடகம் நடந்து முடிந்துவிட்டது.கவிஞன் தனது உள்ளத்தின் ஆவேசத்தை, தன் காதலின் உரிமையால் ஏற்பட்ட கேசுபத்தைத் தழலாகச்சண்டமாருதமாகக் குயிலின் மீது கொட்டி விடுகிறான். இரண்டு கைதட்டினால் தானேசப்தம்.இரண்டுமனம்போராடினால் தானே இறுதி. குயில் இந்த ஆவேசத்தை எதிர்க்கவில்லை, 'உமது கனவு' என்று சொல்லி நம்பிக்கையின்மையில் பழிபோடுகிறது. பிறகு ஒரு நீண்ட கனவு. ஒரு காதலின்முடிவு பெறாத இறுதி. இரத்தம், சோகம், கொலை... இருள்...குயில் அவன் கைகளில் விழுகிறது குயிலா... கனவா! பெண்ணா! கவிதையா...! எல்லாம் மறைகிறது.

குயில் கூவுகிறது.

கவிஞன் மனதில் ஒரு நம்பிக்கை, சாந்தி.

# பகற் கனவு

மோகனமான பகற் கனவுகள் காண்பதில் கவிஞனுக்கு இணையாகக் காதலர்களைத்தான் ஒருவாறு கூறலாம். காதலர்களுக்கு ஒரேவிதமான மனநிலை. ஒரே பொருள் பற்றி—தேக சம்பந்தமான காதலும் தேவ சம்பந்தமான ஒரே மாதிரி. ஆனால் கவிஞனுக்கு அப்படியல்ல. சூரியாஸ்தமனந்தான் ஒரு பாரதிக்கு என்னென்ன அற்புதக் கனவுகளை உணர்ச்சிகளை எழுப்புகின்றது. ஒரு இரத்தந் தோய்ந்த கத்தி முதல், அதோ அந்த மூலையில் பூத்திருக்கும் பெயர் தெரியாத சிறிய புஷ்பம் வரை அவன் வழிபடும் அழகுத் தெய்வத்தின் அணிகலன்கள்; அல்ல, உருவ வேறுபாடுகள்.

**காட்டு வழிகளிலே—மலைக்**
**காட்சியிலே புனல் வீட்சியிலே பல**
**நாட்டுப் புறங்களிலே—நகர்**
**நண்ணுசில சுடர்மாடத்திலே, சில**
**வேட்டுவர் சார்பினிலே—சில**
**வீரரிடத்திலும், வேந்தரிடத்திலும்**
**மீட்டுமவள் வருவாள்—கண்ட**
**விந்தையிலே யின்ப மேற்கொண்டு போமம்மா!**

என்ற பாரதியாரின் கவிதை நமக்கு ஒருவாறு கவிஞரின் அழகுத் தெய்வத்தின் பல திறப்பட்ட அம்சங்களை

எடுத்துக் காட்டுகிறது. இவ்வவுலகத்தில் காணப்படும் கணக்கிலடங்காத காட்சிகள் எல்லாம் அந்த அழகுத் தெய்வத்தின் 'அலகிலா விளையாட்டு', சந்திர உதயந்தான் ஒரு கம்பனுக்கு ஒரு இதிகாசத்தையல்லவா நடித்துக் காட்டிவிடுகிறது. பாரதியின் 'குயில்' ஒரு நெட்டைக் கனவுதானே!

கவிஞன் எப்பொழுதும் ஒரு இலக்ஷிய உலகில்வசிப் பவன். அவனது உள் மனத்தின் உணர்ச்சி—ஊற்றுக்களி லிருந்து ஜீவசக்தி பெற்றுவரும் வார்த்தைகள்தாம் கவிதைகள்.

ஃ ஃ ஃ

நல்ல பௌர்ணமி, ஊருக்குப் புறத்திலுள்ள மைதானம். சற்றுத் தூரத்தில் உயர்ந்த சிகரங்கள். அந்த மைதானத்தில் அவ்வூர்த் தலைவன், அக்காலத்தில் அரசன் என்று சொல்லுவார்கள். அவனுடைய தர்பார், பக்கத்துத் தலைவர்களை வென்று வாகை சூடியதனால்.

சற்று உயர்ந்தவிடத்தில் புலித்தோல் ஆசனம், பின் ஒரு கொற்றக்குடை,—ஓலைக்குடைதான், அதன் கீழ் வெற்றிவீரனான ஒரு இளைஞன்,மேலே பொன் ஆபரணம், கையில் சூலம், இடையில் வாள், காலில் வீரக்கழல். வெகு உற்சாகமாகச் சற்றுமுன் கிடைத்த வெற்றியைப் பற்றித் தனது துணை வீரர்கள் மந்திரிகளுடன் பேசிக் கொண்டி ருக்கிறான்.

இவர்களிடையே ஒரு கவிஞன், வீரனது நண்பன். பேச்சில் மனம் செல்லவில்லை.நண்பனின் வெற்றி, பூரணச் சந்திரன், கரிய சிகரங்கள், இவற்றிடையே மனம் சுற்றிக் கொண்டிருக்கிறது. கண்ணுக்கெதிரில் தெரியும் ஓலைக் குடையில் ஒரு நிமிஷம். சீ! இந்த வெற்றி வீரனுக்கு இந்த

ஓலைத் தரித்திரமா! அந்தக்கரிய சிகரமே குடைக் காம்பாக வும், இந்த அற்புத நீலவானமே குடைச்சிலையாகவும், பால் போன்ற பூரண சந்திரனே அதன் நடுவில் சித்திரிக்கப்படும் திலகமாகவும் இந்த அற்புதக் குடையின் கீழ் அதன் பெரு மைக் கேற்ற வெற்றி வீரன். கனவே சுழித்துக் கொண்டு ஓர் பாட்டாக வெளி வருகிறது:

**மந்தரம் காம்பா மணிவிசும்பு ஓலையாத்**
**திங்கள் அதற்கோர் திலகமா—எங்கணு**
**முற்றுநீர் வையம் முழுது நிழற்றுமே**
**கொற்றப் போர் கிள்ளிக் குடை.**

இந்த இனிமையான கனவிற்கு என்ன கொடுக்கலாம்

# பஞ்சமோ பஞ்சம்

கவிராயர்களுக்கும் தரித்திரத்திற்கும் எக்காலத்திலும் நீங்காத நட்புரிமை உண்டு போலும். தரித்திரமில்லாத கவிராயர் விதிவிலக்கு என்றே கூறிவிடலாம். ஔவை முதல் பாரதி ஈறாக எல்லாம் தரித்திரத்தின் தவப்புதல்வர்கள் தான். ஒருவேளை இந்தத் தரித்திரம் மனிதன் மனதில் உதிக்கும் கவிதை யுணர்ச்சியை இயக்கும் சாட்டை போலும்.

இப்படிப்பட்ட ஒரு கவிராயர். வருஷத்தில் முக்கால் வாசி ஏகதேச உபவாசம்; மற்ற நாட்கள் பசியின் கூர்மையை அதிகப்படுத்தும் பழ உணவு. மிகுந்த நகைச் சுவை யுடைய இவருக்கு வறுமையும் ஏமாற்றமும் கொஞ்சம் துர்வாச குணத்தைக் கொடுத்திருந்தது.

இவர் தம் கவிகளை வைத்துக்கொண்டு வயிற்றுக்கு முக்தி தேடியலைந்து கொண்டிருக்கையில் ஓர் ஊருக்கு வந்தார். அரங்கன் என்ற வள்ளலைப் பற்றிக் கேள்விப்பட்டார். உடனே அவரது கால்கள் அரங்கனது தலைவாசலை நோக்கி நடந்தன. என்றும்போல் உபவாசம்தான்; ஆனால் உற்சாகம் அவருக்குப் புத்துயிரளித்தது. ஆம்! அதோ வீட்டை நெருங்கி விட்டார். அங்கு கண்ட காட்சி உற்சாகத்திற்கு ஒரு புதிய ஊக்கத்தைக் கொடுத்தது. என்ன! அந்த வள்ளலே தன் முற்றத்தில் கூடியிருந்த பிச்சைக்காரர்களுக்கு ஒவ்வொரு பிடியரிசி போட்டுக்கொண்டு இருந்

தார். கூடியிருந்த பிச்சைக்காரர்கள் பிரபுவின் பொறுமைக்கு எல்லை கண்டுபிடிக்க வாரம்பித்து விட்டனர். என்ன இரைச்சல்; என்ன நெருக்கம்; என்ன தள்ளு?

இச்சமயம் ஒருவர், கூடியிருந்தவர்களின் நடை யுடை பாவனைகளில் சற்றும் வித்தியாசமில்லாதவர்—நெருக்கியடித்துத் தள்ளிக்கொண்டு வந்தார். பிரபுவின் பொறுமை பறந்தது. ''அடே, பறக்காதே!'' என்றார். வந்தவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்ன அபசகுனம்! பளிச் சென்று கோபம் வந்தது. அவர் தன்னையறியாமலே,

**பொக்குப் பறக்கும், புறாப் பறக்கும்,**
**குருவி பறக்கும், குயில் பறக்கும்,**
**நக்குப் பொறுக்கிகளும் பறப்பார்,**
**நானேன் பறப்பேன்—**

என்று ஆரம்பித்தார். உடனே வயிற்றாழ்வார் அவரது ஆத்திரப் புத்தியில் ஒரு குட்டுக் குட்டினார்; சுய அறிவு வந்தது. உடனே புகழ ஆரம்பித்தார்.

**.........நராதிபனே,**
**திக்குவிசயம் செலுத்தியுயர்**
**செங்கோல் நடாத்தும் அரங்கா நின்**
**பக்கமிருக்கு ஒரு நாளும்**
**பறவேன் பறவேன் பறவேனே!**

என்று தன்னைத் தடுத்தாட்கொள்ளும்படி (!) அவனை வானமளவும் தூக்கிப் புகழ்ந்தார். வயிற்றுக் கொடுமை சாதாரணப் பண்ணையாரைத் திக்குவிசயம் செய்யும் வீர தீரப் பராக்கிரம மன்னனாக முடிசூட்டுவிக்கிறது. ''பறப்பது'' என்பதிலிருக்கும் சிலேடையானது கீழ்த்தர நகைச் சுவைதான். ஆனால் பண்டிதரின் நிலைமையை நன்றாக எடுத்துக் காட்டுகிறது. புலவர் ஏதோ பரிசில் பெற்றார் என்பது சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்!

# கைவண்டிச் சரக்கு

உடம்புக்கு நம்மை அடிமைப்படுத்திக் கொள்ளுவதை நாம் எல்லோரும் வெறுக்கிறோம்; உணர்ச்சிக்கு அடிமைப் படுத்திக் கொள்ளுவதைக் கண்டிக்கிறோம்; ஆனால் ஒரு கொள்கை நம்மைத் தனக்கு அடிமைப்படுத்திக் கொள் வதைப் பற்றிக் கவனிக்கிறோமில்லை.

முன்னிரண்டையும் 'மகான்கள்' என்பவர்கள் 'புலன டக்கம்' என்ற முத்திரைக் குட்படுத்தி நமது மரியாதைக்கு உரியவனவாகச்செய்துவிட்டார்கள். கொள்கைக்கு, அதைப் பிறப்பிக்கும் அறிவுக்கு அடிமைப்படுத்திக் கொள்வதும் இந்த ரகத்தில் ஒன்றுதான் என்பதை அவர்கள் கூறவில்லை; ஆனால் நாம் மறுக்கப் பயப்படுகிறோம். ஏனென்றால் கொள்கைதான் மனித வர்க்கத்திற்கு வழி காட்டியாக. அறிவு தாங்கும் தீப்பந்தமாகக் கருதப்படுகிறது. கொள்கை என்பது உயரத் தூரத்தில் தூக்கிப் பிடித்த தீப்பந்தம் போல், எட்ட இருப்பதாலேயே வெளிச்சம் நன்றாக விழு கிறது. அது எட்ட இருப்பது அவசியம். இந்தக் கொள்கை என்பது நாம் ஏற்றிய பந்தம் என்பதை மறக்கும் படி செய்து நமக்கு அது கொடுக்கும் வெளிச்சத்தினாலேயே நமது கவனத்தை, கவித்து அது நம்மைத் தாங்குகிறது

என்ற மனப்பான்மையை ஏற்படுத்தி நமக்கு வழிகாட்டியாக இருக்க முயலுகிறது. நமது கவனம் அதன் வெளிச்சத்தில் கவிவதால் அது நம் கையில் உள்ள, நாம் ஏற்றிவைத்த தீப்பந்தம்தான் என்பதை மறக்கும் படி செய்விக்கிறது. வெளிச்சத்தால் அதற்கு ஏற்படும் கௌரவம், அது ஏற்றப் படுவதற்குக் கருவியாக இருந்த அறிவையே மங்கவைத்து விடுகிறது. இவ்வாறு அறிவு மங்கும் நிலையில்தான் 'முன்னேற்றம்' என்ற தோற்றப் பிரமை சாத்தியம்.

கொள்கைக்கு அடிமைப் படுத்துவது யாக குண்டத்தில் எழுப்பிய விசுவ ரூபத்திற்கு (அசுரனானாலும் அமரனானாலும் ஒன்றுதான். நமது நோக்க வேறுபாடு தவிர இவர்களிடையே பேதம் கிடையாது) தானே அடிமைப்படுவது போலத்தான். தனது இந்த விசுவ சிருஷ்டியைத் தான் கருதிய தேவை என்ற பிரமை தீர்ந்தவுடன் கொன்று விடுவதே சரியான மார்க்கம். ஆனால் நமது 'யாக குண்டத்தில்' பிறப்பவைகளை அவ்வளவு எளிதில் கொன்றுவிட முடியாது. தேவைப் பிரமை தீர்ந்த பின்பும் அது நம்மை ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறது. அதாவது நாம் இது போல வேறு ஒன்றைச் சிருஷ்டித்து இதைக் கொல்லும் வரை, யாக குண்டத்தில் பிறப்பவைகளுக்குச் சாவு ஏற்பட வேண்டுமானால், குண்டம் எப்பொழுதும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டே இருக்க வேண்டும். யாக குண்டங்களின் தன்மையும் அமைப்பும் அப்படியில்லாவிடில் எரிய வைத்துக் கொண்டிருப்பதற்கு நமக்குச் சக்தி கிடையாது. சில சமயம் கொழுந்துவிடும்; சில சமயம் கனிந்து எரிந்து கொண்டிருக்கும். அப்பொழுது மெல்லிய பூம்பனி போன்ற சாம்பல் அதை மூடிப் போர்த்து அது எரிவதை 'வெக்கை,' யில் மட்டிலும் காட்டிக் கொண்டிருக்கும். சில சமயம் புகைந்து எரியும். புகைச்சலுக்கு விறகு ஈரமாய் இருப் பதோ அல்லது குண்டத்தில் அளவுக்கு மிஞ்சிய விறகுகள்

அடுக்கப்படுவதோ காரணமாக இருக்கலாம். ஆனால் இம் முயற்சியின் காரணமாகப் பழைய அனலும் அவிந்து போகக் கூடிய சந்தர்ப்பமும் உண்டு.

யாக குண்டத்தின் தன்மை அதில் தீயுடன் பிறக்கும் விசுவரூபத்தின் தன்மையைப் பாதிக்கும். மறுபடியும், மறு படியும் உபயோகிக்கப்படும் யாக குண்டத்தில் எத்தனையோ விதமான புதுப்புதுவிதமான விறகுகள் போட்டாலும் பழைய சாம்பல்கள், கரித்துண்டுகள் இவற்றின் ஆதிக்கமும் போய்விடுவதில்லை. அதனால் குடும்பத்தின் வாரிசு மாதிரித் தாய் லழியாக வெளி ரத்தம் புகுவதற்குச் சந்தர்ப்பம் இருந்தாலும் குடும்ப முத்திரையைத் தாங்காத விசுவ ரூபம் பிறக்காது.

மனிதவர்க்கம் தனது பிரமைகளைச் சாந்தி செய்து கொள்வதற்குப் புதிய யாக குண்டம் அமைக்கும் வழக்கம் கொண்டதே கிடையாது. அவ்வாறு செய்தால் அது மனிதத் தன்மையை இழந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் இயற்கை தனது பழைய யாக குண்டத்தில் உண்டாக்கிய கடைசி (?) உருவந்தானே மனிதனும். இயற்கையே பழமையில் இவ்வளவு தூரம் நம்பிக்கை வைத்திருக்கும் பொழுது புது யாக குண்டம் அமைப்பதற்கு மனிதன் சிரமப்படுவதில், பயப்படுவதில் (?) அதிசயமேது?

புதியவை என்று ஒன்றும் கிடையாது. ஏனென்றால் பழயவை என்று பிரித்து வைக்கவேண்டியவையே கிடையாது. பெயர் மாற்றமும் உபயோக மாறுதலும் சந்தர்ப்பங்களுக்குக்கட்டுப்பட்டிருப்பதால் வேறு வேறு ரூபத்தில் வேறு வேறு கோணத்திலிருந்து பார்க்கப்படும் ஒரே தன்மை தான் இருந்து வருகிறது. இந்த நிலையில் புதிதேது, பழசேது, யாக குண்டந்தான் ஏது?

இவை யாவும் அறிவு எழுப்பும், அதாவது தன்னை மங்க வைத்துக்கொள்ள எழுப்பும் பிரமைகள். அது விளையாட்டா, அசட்டுத்தனமா—அல்லது எப்பொழுதும் சலித்துக் கொண்டிருப்பதால் ஏற்படும் அதன் அசைவா?

அறிவு அடங்கவேணும்; மங்கலாகாது. அதற்குக் கொள்கை துணை செய்யாது. பந்தத்தை அணைத்து வைக்கும் வரை, யாக குண்டத்தை இடித்து மூடும்வரை அறிவு அடங்காது. அறிவு அடங்கினால்தான் அவனுக்குக் கண் திறக்கிறது. அறிவின் தன்மை அறிவுக்குத் தெரிய அதுதான் வழி.

# புஸ்தக உலகம்

தெரிந்ததைச் சொல்லுவதற்குப் புஸ்தகமா, தெரியாததை அறிவதற்குப் புஸ்தகமா? இரண்டிற்கும்தான். முதலாவது இலக்கியம்; இரண்டாவது சாஸ்திரம். முதல் கலை; இரண்டாவது ஸயன்ஸ். முதல் உணர்ச்சி நூல்; இரண்டாவது அறிவு நூல்.

தெரியாததை அறிவதற்கு இலக்கியத்தினிடம் போக வேண்டாம்; தெரிந்ததைக் கேட்பதற்குக் ஸயன்ஸிடம் செல்ல வேண்டாம்.

கலையில் உணர்ச்சி விசாலப்படுகிறது, சக்தி பிறக்கிறது. நூதன வாழ்விற்குத் தைரியம் கொடுக்கிறது.

ஸயன்ஸ் அறிவை விசாலப்படுத்துகிறது. வாழ்க்கையின் இரகசியங்களை அறிவிக்கிறது; வாழ்க்கையை அனுபவிப்பதற்கு அஸ்திவாரமாக இருக்கிறது.

ஒரு ஸி. வி. ராமன், ஒரு ஜகதீச சந்திரவசு, ஒரு மார்க்கோனி, ஒரு எடிஸன், ஒரு கார்ல் மார்க்ஸ், ஒரு கீத் பிறக்காவிட்டால் நாகரிக வளர்ச்சிக்குச்சாதனம் இருக்காது.

ஒரு பாரதி, ஒரு கம்பன், ஒரு தாகூர், ஒரு வால்ட் விட்மன் பிறக்காவிட்டால் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படாது; வாழ்க்கை ரஸிக்காது. வெறும் வெட்ட வெளியாய், காரண காரியங்களால் பிணிக்கப்பட்ட ஒரு இருதயமற்ற கட்டுக்கோப்பாக இருக்கும்.

ஸயன்டிஸ்ட் (விஞ்ஞான சாஸ்திரி) ஒரு புதிய உலகத்தை, அதன் நெளிவு சுளுவு தெரிந்து, நன்றாக அசையாத கட்டடமாகக் கட்டிவிடுவான். அதற்கு உயிர் இருக்காது! உணர்ச்சி இருக்காது. வெறும் மெக்கானிக்கல் யந்திரமாக ஜனங்களைப் பிணிக்கும்.

கவிஞன் அப்படியல்ல. இலக்கியகர்த்தாக்கள் எல்லாம் ஓரளவு கவிஞர்கள்தான்; அவர்களுடைய உலகம் உணர்ச்சி. அவர்கள் குயில், அவர்கள் காதலர், அவர்கள் தெய்வம். உள் மனத்தின் உதவியால் உண்மைகளை, சிருஷ்டியின் துடிதுடிப்போடு சொல்லி விடுவார்கள். அவர்களுக்குத் தர்க்க சாஸ்திரப் படிக்கட்டு வேண்டாம்.

இருவருக்கும் ஒரு வித்தியாசம். ஒருவன் அறிவைக் கொண்டு துருவித்துருவி பிரித்துப் பிரித்து உலகத்தைக் கவனிக்கிறான். இன்னொருவன், சிருஷ்டியின் உண்மைகளை, அப்படியே முழுக் கனவாகப பார்த்துக் களிக்கிறான்

இரண்டும் அவசியம்தான். இரண்டும் எதிர்க்கட்சி போடவில்லை. இரண்டும் ஒன்றை ஒன்று முற்றுப்படுத்துகிறது.

ஸயன்ஸ் இல்லாவிட்டால் அசட்டுத்தனம் மலியும். இலக்கியம் இல்லாவிட்டால், நாம் உணர்ச்சியற்ற யந்திரங்களாகிவிடுவோம்.

தெய்வத்தைப் படைப்பது கவிஞன்; தெய்வத்தை அறிபவன், ஸயன்டிஸ்ட்

தெய்வம் என்றால் என்ன? இலக்ஷியம். அது எந்த வடிவத்தை எடுத்தால் என்ன? மனித வர்க்கத்தை ஒரு படி உயரச் செய்தால் அது தெய்வத்தின் சக்தி படைத்தது, அதுதான் தெய்வம் என்று ஏன், சொல்லக் கூடாது?

# சின்ன விஷயம்

பெரிய விஷயங்களைப்பற்றி ஒற்றுமை ஏற்படுவது இயற்கை. தெரியாத விஷயத்தைப்பற்றி ஒற்றுமை ஏற் ஏற்படுவது சகஜம், தெரிந்த விஷயத்தில் இருப்பதுபோல. ஒரு வீடு தீப்பிடித்ததென்றால் ஊர் கூடி அணைக்க வருவார்கள். ஊரில் ஒரு பெண் குற்றம் செய்தால் ஊர் கூடித் திட்டுவார்கள். இதுதான் ஒற்றுமை.

ஆனால் சின்ன விஷயத்தில் அற்பக் காரியத்தில் மனிதனுக்கு மனிதன் விட்டுக்கொடுக்க மாட்டான். இது என்ன அதிசயமோ? ஒற்றுமை என்பது சமூகப் பிரமையா? அல்லது சமூகப் போதை வஸ்துவா? அது ஏன் தனி மனிதனில் காணப்படவில்லை?

இன்று எங்கள் வீட்டில் ஒரு சின்னச் சம்பவம். எனக்குக் காலைக் காப்பி இல்லாவிட்டால் உலகமே பொரு ளாதார நெருக்கடியில் தவிக்கிற மாதிரி. காப்பிப் பிரச்னை வீட்டில் ஏக ரகளையை உண்டு பண்ணி விட்டது. விட்டுக் கொடுப்பது என்ற மனப்பான்மை இருந்தால் ஒற்றுமை ஏற்படும்.

நான் ஒட்டுக் குடித்தனம். பக்கத்தில் நண்பர் வீட்டில் அவர் மனைவி வீட்டிற்கு விலக்கம். என் வீட்டில் தள்ள முடியாத நண்பர், சங்கோஜப் பிராணி வந்தார். இரவில் தங்கவேண்டி இருந்தது. ஒரு பொதுக்கூடம். அதிலே இட

மிருந்தாலும் பக்கத்துவீட்டார்கள் உரிமை என்ற வஸ்துவை நிலைநாட்டினார்கள். நணபரை என்னுடன் படுக்கக்கூறினேன். அவர் வீட்டினுள் படுப்பதைவிட உயிரை விட்டுவிடலாம் என்று நினைத்துவிட்டார். அதிலே என்மனைவிக்கும் உடம்புகுணமில்லை. அவளை வெளியிலே படுக்க வைத்து இந்தப் பிரச்னையை ஒழிக்க இருவருக்கும், இந்த இரண்டு குடும்பத் தாருக்கும் ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால் இருவரும் சற்று விட்டுக் கொடுக்க வேண்டும்.

பிறகு எப்படி இந்த ஒற்றுமைச் சரக்கு பெரிய கூட்டத்தில் காணப்படுகிறது. மனிதர் கூட்டம் கூட்ட மாக வசிக்கும் பிரயாணிகள்தான். அதற்குத் தனிமனிதன் என்பதின் பொருளே தெரியாது தனி மனிதன் உயிருடன் வாழ முடியாது; அதாவது தனியாக இருந்தால் மனிதனால் வாழமுடியாது என்பது மனிதப் பிராணிகள் கஷ்டப்பட்டு அறிந்த உண்மை. உயிர் வாழவேண்டும் என்ற ஆசைதான் நாகரிகத்தின் அஸ்திவாரக்கல். அதை வைத்துத்தான் மனிதக்கூட்டம் நசித்துப் போகாமல் இதுவரையில் உலகில் இருந்துவருகிறது. அது தனியாக விடப்பட்ட சமயம், பயம் தான் சுயகுணம். மற்றவை தன்னை நாசம் செய்யாமல் இருக்க, அது மற்றதை நசிக்க முயலுகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு பொருளும் ஜீவஜந்துவும் அதன் எதிரி. இந்தத் தத்துவத்தை வைத்துத்தான் மனிதன் மற்றவனை வெறுக்கப் பழகிக்கொண்டான். பயத்தின் விளைவு வெறுப்பு.

சமயத்திலே எப்படி ஒற்றுமை வருகிறது? ஒரு பெரிய மனிதக் கூட்டம் தெரியாத விஷயத்தைப்பற்றி எவ்வளவு விடாப்பிடியாக, உயிரைக் கொடுத்தும் நம்புகிறது? அதிலும் இந்த வேடிக்கைதான் மரணபயத்தில், எழுந்த நம்பிக்கை சமயம், அதிலிருந்து விடுவிக்கப்படலாம் என்ற

நம்பிக்கை சமயம், அதை வைத்துக் கொண்டுதான்—அது பிரமையோ உண்மையோ அதைப்பற்றியே கவலையில்லை —அதை வைத்துத்தான் இந்த மரணத்திலிருக்கும் பயத்தை நீக்க முடியும், இதனால்தான் எல்லோரும் விடாப்பிடியாக சமயத்தில் நம்பிக்கை வைப்பது, அதற்கு உயிரைக்கொடுக்க வும் துணிவது! உயிரைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கைக் காக உயிரைக்கொடுப்பது, கொடுக்காமல் இருக்க முடியாது. அது மனித உணர்ச்சியின் சாதாரண உண்மை.

இதைச் சற்றுக் குலைத்து விட்டால் நாசம்தான். நெல்லிக் காய் மூட்டைதான். உதறினால் போச்சு. நாசம். வேறொரு பிடிப்பு, அதுவும் உண்மையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை-ஏற்படுகிறவரை பயத்தின் மிகுதியால் விளைவன பகைமை, சந்தேகம், கொலை.

இந்த உலகத்தில் ஒன்றும் நிரந்தரமான, அசைக்க முடி யாத உண்மையாக இருக்கமுடியாது. மனித குணத்தின் வரம்பு, சக்தி அவ்வளவுதான். ஒரு பார்வைக்கு உண்மை யெனத் தோன்றுவது ஆயிரம் காரணத்திற்கு எதிரிடை யாக இருக்கலாம். ஆனால் அது மனித சமூகத்தை லேசாகத் தள்ளிக்கொண்டு போகும்.

கடவுள் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? ஒரு கூட்டத்தின் பாதுகாப்பிற்கு அது அவசியமானால் ஒரு பொயைச் சொல்லித்தான், கடவுள் என்ற பிரமையைச் சிருஷ்டித்தால் என்ன? இந்தக் கடவுள் விஷயம் ரொம்ப ஸ்வாராஸ்யமானது. அது தனிமனிதனுக்கு ஒரு தைரி யத்தைக்கொடுக்கிறது. சமூகத்திற்கு ஒரு சக்தியைக் கொடுப்பதுபோல், நாஸ்திகம் தர்க்கத்தில் நிஜமாக இருக் கலாம். அது சுவாரஸ்யமற்றது, வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்த முடியாதது. அது தனி மனிதனுக்கு அதாவது விதி விலக்கான தனிமனிதனுக்குச் சாந்தியை

அளிக்கலாம்; ஆனால் ரஸனையற்றது, சுவையற்றது. அதனால்தான் ஜைனமதம் நாஸ்திகக் கொள்கையால் அழிந்தது. புத்தமதம் நாசமுறாதிருக்க புத்தனைக் கடவுளாக்கித் தப்பித்தது.

வாழ்க்கையில் ஒரு வெறிஏற்பட்டால்தான் பிடிப்புடன் முன்னேறி வாழமுடியும். அதைச் சமயம் கொடுக்கிறது. அது சொல்லுகிற மோக்ஷத்தைக் கொடுக்காவிட்டாலும் இது போதும். அந்த மோக்ஷத்தைவிட இது மேலானது.

# என்ன எழுதுவது?

சில சமயம் எழுத்தாளர்களுக்கு 'எழுத்துச் சிக்கல்' என்ற வியாதி பிடித்துவிடும். **என்ன எழுதுவது? என்ன எழுதுவது? என்ன எழுதுவது?**

இந்தப் பிரச்னை எழுந்துவிட்டால் அதுதான் வியாதியின் ஆரம்பம். இந்தச் சமயத்தில்தான் குப்பைக் கூடைக்கு எழுத்தாளர், அஜீரணம் ஏற்பட்டு வாந்தி எடுக்கும்படி உண்பிக்க ஆரம்பித்து விடுவார்! முதல் பக்கத்தில் இரண்டு வரி......சீ...டர்ர் என்ற கிழிப்பு, காகிதம் இரண்யசம்மாரம் மாதிரி இரண்டாகக் கிழிபட்டு வாயைப் பிளந்து காத்திருக்கும் குப்பைக்கூடைப் பெரியாரை நோக்கிச் சென்றுவிடும். பிறகு இரண்டு வரி. ஏன் இரண்டு எழுத்து—அதே கதிதான். இதற்கிடையில் வியாதியை அதிகப்படுத்தும்படி, டிகிரி ஏற்றும்படி, கம்பாஸிட்டர் பக்கத்திலிருந்து கொண்டு, மரியாதையாக சார் 'மாட்டர்' (Matter) என்பான். இந்த அச்சு அரக்கனின் பிரதிநிதி இருக்கிறானே... அப்பப்பா...இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரமும் கவியாகச் சுடச்சுட உற்பத்தி செய்யும் காளமேகத்தையும் எல்லை கண்டு பிடித்து விடுவான். காளமேகம் எமகண்டம்பாடி லேசாகத் தப்பித்துக் கொண்டான் என்பது எனது அபிப்பிராயம் இல்லை, திடமான நம்பிக்கை. அவனைப் பத்திரிகை ஆபீஸில் போட்டுப் பார்த்தால்...அகிலாண்ட நாயகி! தந்த

வரப்பிரசாதத்தைப் பெற்ற அந்த நாளைத் தனது உயிர் உள்ளளவும் சபித்துக்கொண்டு

**என்ன எழுதவென்று ஏங்கித் தவித்தழுது**
**பின்னத் தொழில் பெறவோ, பேதையேன்—அன்னாளில்**
**தாயின் அருள் பெற்றேன்? தாரில்இது வேண்டேன்**
**பேயிதுவென் றேசிடுவான் பின்**

என்று அடைத்துக் கிடக்கும் கோவிலில் கடவுளின் முன்பு தூக்குப் போட்டுக்கொள்வான் என்பது நிச்சயம்.

அது கிடக்கட்டும்.........

எனக்கு ஒருநாள் அந்த வியாதி பீடித்தது. பெரிய பெரிய டாக்டர்கள் இருக்கிறார்களே! அவர்கள் இந்த வியாதிக்கு மருந்து கண்டுபிடிக்கவேயில்லை; கண்டுபிடிக்கவும் முடியாது! எந்த டாக்டராவது ஒரு நூறு ரூபா பந்தயம் கட்டுங்கள் பார்க்கலாம். அவ்வளவுக்குத் தைரியம் இருந்தால்...எனக்கு ரூ.100 நிச்சயம்.

எனக்கும் அந்த வியாதி வந்தது. என்ன எழுதுவது? ஹிட்லரைப் பற்றியா? பொருளாதாரமா? இதை யார் படிக்கிறார்கள்? தமிழைப்பற்றி எழுதினால், நாம்தான் படித்துக்கொள்ளவேண்டும். கதை எழுதினால், ஆமாம் கதை, அதிலும் நவரசம் சொட்டச் சொட்டக் காதல் கதை......

காலை யிளம்பரிதி வீசும் கதிர்களில்......

'ஸ்!'

பாரதியைக் காப்பியடிக்கிறான் என்றால்......எனக்கே அப்படித்தான் தெரிகிறது...... கிழித்துத் தள்ளு.

கதை வேண்டாம். கதை என்றால் கலியாணம் கலியாணம் செய்து வைத்தால்தான் வாசகருக்கு மனம் சாந்தியடையும்; போயும் போயும் புரோகிதத் தொழில் தானா... இது வேண்டாம்,

பின் என்ன செய்வது? அறிவை விருத்தி செய்யும் விஷயம், அல்லது ஹாஸ்யம்......ஆமாம் ஹாஸ்யம்,...... யாரும் சிரிப்பதற்குக்கூட மனுப் போடுவார்களா?

''ஸார் மாட்டர்'' என்று பின்னேயிருந்து ஒரு குரல்.

இந்தக் கூத்தில் சிரிப்பு வருமா? அல்லது சிரிப்பு ஒருவருக்கு ஊட்ட முடியுமா?

எனக்கு வேறு ஒன்றுதான் வந்தது. நெற்றிக்கண் இல்லையே என்ற வருத்தம்.

ஏதாவது எழுதுவது. மைப் புட்டியைப் பற்றி எழுதலாமா? அதற்குள் இங்கிதான் இருக்கும் என்று வாசகருக்குத் தெரியாதாக்கும். சில சமயங்களில், சில இடங்களில் இருக்காது...ஆனால் பத்திரிகை ஆலயங்களைப் பொறுத்த மட்டில் அதில் நீந்தலாம்.

பழைய பத்திரிகையைப் பார்த்தால்? ...கடைக்காரனுக்குக் கொடுத்து ஒரு துண்டு வெல்லம் வாங்கலாம், கடைக்காரன் ஒருவேளை அதைச் சிறிது ஆசையுடன் கவனிக்கலாம். 'மிஸ்டர் வாசகர்,' பார்த்ததுந்தான் ''சுவாமி, வேறு சரக்கிருந்தால் சொல்லும்'' என்று விடுவாரே.

அதோ இருக்கிறதே மணி, 'காலிங் பெல்' அதைப் பற்றி எழுதினால்...அதன் உற்பத்தி, உபயோகம், ஸ்! சாரமற்ற பேச்சு, பள்ளிக்கூட மாணவன் மார்க்கிற்கு ஆசைப்பட்டு எழுதலாம், பத்திரிகைத் தொழிலில்.

அதுவும் வேண்டாம்,

பின் என்ன எழுத?

''ஸார் மாட்டர்'' என்று கேட்டது பின்னிருந்து ஒரு குரல்.

எனக்குக் கோபம் வந்துவிட்டது. இதைப் பார் என்று குப்பைக் கூடையை அவன் கையில் திணித்து விட்டு,

'தேர்தல் கலவரம்' என்று வெகு வேகமாக எழுதிக் கொண்டு போனேன். என்ன எழுதினேன் என்று எனக்குத் தெரியாது. அதுதான் சுவாரஸ்யம்.

எவ்வளவு நேரம் சென்றதோ?

''ஸார்!''

''என்ன மறுபடியும்?''

''புரூப் ஸார்'' என்றான்

அவன் புதுசாக வந்த பையன். குப்பைக்கூடை மான் மியத்தை புரூப் (Proof) போட்டு வந்துவிட்டான் நல்ல பையன். அவனை வைத்துக்கொண்டு...இவனைப் பொருட் காட்சி சாலையில் வைப்பதா? அல்லது...யாரை?

''இந்தா இதை எடுத்துப்போ' என்று எரிந்து விழுந் தேன்.

சாவதானமாக ''ஆகட்டும் சார்'' என்று எழுதிய கத் தையைக் கொண்டுபோனான்.

யாருக்கு வெற்றி?

எழுத முடியாவிட்டால், அச்சுக் கோர்க்க மூளையை யாவது கொடுக்கவேண்டும்.

# நாட்டுப் பாடல்கள்

கிராமத்துக்காரனுக்குப் பட்டணம், பூலோக கைலாசம்; செத்தால் சிவலோகம், கெட்டாலும் பட்டணம் என்பது அவன் கனவு. பட்டணத்து அங்காடியிலே காதடைத்துப் போனவனுக்கு, ‘அப்பாடி’ என்று தலை சாய்க்க அரசமரத்து நிழல் பரமபதம். இது மன நிலை-இல்லாமையை நாடித் தவிக்கும் மனநிலை. பட்டணத்துக் கிறுகிறுப்பு பட்டைச் சாராயம்போல கிரங்கவைக்கும் பட்டிக் காட்டானுக்கு. அவன் மண்ணோடு மோதி வியர்வையைப் பெருக்கி ஏற்ற மிறைத்தால்தான் பட்டணத்துப் பசி, நாற்ற மடித்துப் போகாது. பட்டணம் தேச வளத்தை வெளி ஊரானுக்குக் கொட்டிப் கொடுக்கவோ, ஊரான் கண்ணில் படாமல் ஒதுக்கி வைக்கவோ, வாய்ந்த கருவூலம், நாட்டு வளப்பம் பட்டினத்துச் சந்தையிலே கப்பலேறும், பட்டணத்துப் புழுதியும், புனுகும், ஆலடி மோகினிப் பிசாசு மாதிரி, தொட்டிழுத்து, உயிரை உறிஞ்சிவிடும் என்று பயப்படுகிறான் பட்டிக்காட்டான். ஆனால், பட்டணத்துச் சங்கப் பலகையிலே. யாப்புத் திரியாமல், வார்ப்புக் கோணாமல், வரும் சரக்குகள் எல்லாம், பகட்டுக் காட்டி அவனை ஏமாற்றிவிட முடியாது. யாப்பும், வார்ப்பும், கிராமத்துக்காரன், அதாவது நெஞ்சு செத்துப்.போகாதவன் மனசிலே இன்பமும், துன்பமும் எழுப்பிய எதிரொலிப்பு என்ற கருவின் பூர்ண வடிவமாகும். ஆகையால்தான் இன்று பட்ட

ணத்துக்காரன் மனசு, கிராமத்துப் பிள்ளை யாரோடு பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளுமானால் உள்ளம் நிறைவு கொண்டு விடுகிறது. அவரைப் போலவே அருகிலிருக்கும் ஓடைக்கரையில் உறுமீன் வருமளவும் வாடியிருக்கிறது கொக்கு. கொக்குக்கு மீன் கிடைத்தாலும், பிள்ளை யாருக்குப் பெண் கிடைக்கவில்லை. அரசு சுற்ற ஆயிரமா யிரமாகக் காலம் என்ற ராஜபாதையில் வந்துவந்து சென்று கொண்டுதானிருக்கிறார்கள் பெண்கள். அவருக்கு என்று ஒரு பெண் இதுவரை வரவில்லை. கொக்கும் பிள்ளை யாரும் பெற்று விட்ட மன நிலை, அதாவது காத்திருக்கும் மனப்பான்மையைக் கொஞ்சம் நாமும் கடன் வாங்கிக் கொள்ளுவோம். அதோ காற்றோடு காற்றாக மிதந்து வந்து சேர்கிறதே அது என்று சற்றுக் காது கொடுத்துக் கேட்போமா.

**வேலமரப் பாதையிலே – வேலையா**
**வேலையிலே கண்ணிருக்கு – சுப்பையா**
**வேலிஒரம் போகுதுபார் - வேலையா**
**வேட்டி துணி போட்டிருக்கோ - சுப்பையா**
**சித்தாடை கட்டிருக்கு – வேலையா**
**சின்னக் குட்டி போலிருக்கு – சுப்பையா?**

சீ! என்ன காத்து; இப்படிக் காதையடைக்கிறது. ஊறு காய்க்கு உப்புச் செலுத்தினது போலல்லவா, புழுதி மண் கப்புகிறது. முகத்தைத் துடைத்துக் கொள்ளவும் சூறாவளி நிற்கவும், வேலையாவும் சுப்பையாவும் பாடிப் பேசும் வியவகாரம் மறுபடியும் காதில் கேட்கிறது.

**கஞ்சிகொண்டு வாராளோடா – சுப்பையா?**
**கதிரருவாள் இருக்குதடா - வேலையா**
**கதிரறுக்கும் காலமல்ல – சுப்பையா**
**ஆட்டுத்தழை அறுப்பாளடா – வேலையா**
**அண்டையிலே வந்துட்டாளோ – சுப்பையா**

**அன்னம்போலே முன்ன வாரா – வேலையா**
**அவ அத்தெமவ ரத்தினண்டா - சுப்பையா**
**அவ அருமைப் புருசனோநீ - வேலையா**
**அடுத்த மாசம் பரிசம்வைப்பேன் - சுப்பையா**

என்று நாணிக் கோணுகிறான் வேலையா, வேலையிலே கண்ணிருக்கும் வேலையன் காதல் இப்படி இருக்கட்டும். ஏற்றம் இறைத்தால்தான் கட்டுக் கலங்காணும் கதிருழக்கு நெற்காணும் வயலுக்குள் விழுந்து சகதியைப் பூசிக் கொள்ள நமக்கு ஆகாது. கொஞ்சம் ஒதுக்கமாக ஊருக்குள் புகுந்து விடுவோம். பரிசப் பணம் கொடுத்துக் கலியாணம் செய்து கொள்ள ஆசைப்படும் வேலையாவோடு ஒரு மாசம் காத்திருக்க முடியுமா? தெருவிலே ஒருகுழந்தை சிற்றாடை இடற அதையும் பொருட்படுத்தாமல் ஓடி வருகிறது.

**சும்மா இருக்கிற சிட்டுக்குருவிக்கு**
**சோற்றை வைப்பானேன் – அது**
**கொண்டையை கொண்டையை – ஆட்டிக்கிட்டு**
**கொத்த வருவானேன்**

என்று குதிபோட்டுப் பாடிக்கொண்டு நம்மையும் தாண்டி ஓடிவிடுகிறது. அதைத் தொடர்ந்து பிசைந்த சோற்றைக் கையிலேந்தி ''ஏ, வள்ளி வள்ளி'' என்று தொடரும் தாயாருக்கு அது உபதேசம் செய்கிறது போலும்.

கிராமத்திலே, உட்கார்ந்தால் பாட்டு, எழுந்திருந்தால் பாட்டு, கழலாடப் பாட்டு, உழவுக்குப் பாட்டு, சாவுக்குப் பாட்டு மயம், சம்மந்தியை ஏசுவதற்குப் பாட்டு, எல்லாம் பாட்டு மயம். கருத்தும், உணர்வும், அநுபவமும் லயித்த இடத்திலேதான் பாட்டு அரசி பிறக்கிறாள். அவள் அங்கே வேதத்தைப் போல் எழுதாக் கிளவி. நாட்டின் நாவிலே சஞ்சரிக்கும் சரசுவதி தான் கிராமத்துப் பாட்டு.

குப்பத்து ராணியானாலும், கும்பேனிப் பட்டாளமானாலும், குப்புகுப்பென்று தீயெரிய குப்பண்ணசாமி கொலுவிருக்கும் அந்த சன்னதி முன் தலைவணங்கித் தொழவேண்டும். கிராமத்துக் கடவுள்கள் சிவலோகம் வைகுந்தத்தில் அமர்ந்தபடி கண்பார்த்து நின்றால் போதாது. கூடவந்து நின்று கலப்பை பிடிக்கவேண்டும், கதிரறுக்க வேணும், சூடடித்து நெல்லைச் சேருக்குச் சுமந்து சேர்ப்பிக்கவேண்டும். துரிய, துரியாதிர்த்த விவகாரங்களில் எல்லாம், நிர்க் குணனாய் நிராமயனாய் அமர்ந்து கொண்டால், கதை நடக்காது. உழவர்கள் கருத்துக்கிசைய, கூடநின்று களங்காக்கவேணும், கதிருழக்குக் காணும்படி செய்விக்க வேண்டும். கடவுள்களுடன் தோழமை பூண்டவர்கள் கிராமவாசிகள்.

கிராமத்துச் சரக்கு இவ்வளவு மட்டோடு இல்லை. விலா வெடிக்கச் சிரிப்பு மூட்டும் சுண்டெலி ராஜாக்கள், கொசுவனார், ஆஷாடபூதிப் பூனையார் எல்லாம் உண்டு.

**சுண்டெலி ராசாவுக்குக் கலியாணமாம்**
**சோளத்தட்டைப் பல்லாக்கில் ஊர்கோலமாம்!**
**ஒரு எலி ஓடிப்போய் ஊருக்கெல்லாம் சொன்னதாம்!**
**நான்கெலி சேர்ந்துகொண்டுநாதசுரம் வாசித்ததாம்!**
**அஞ்செலி சேர்ந்துகொண்டு பஞ்சாங்கம் பார்த்ததாம்**
**பத்தெலி சேர்ந்துகொண்டு பல்லாக்குத் தூக்கித்தாம்!**

இப்படி நடக்கிறது சுண்டெலி ராஜா கலியாணம்

ஆனால் கொசுவனாருக்கு அமுத்தல் அதிகம்,

**அடுக்கு மோதிரமாம்— கொசுவுக்கு**
**ஆனந்தக் கைவீச்சாம்**
**ஆனை குதிரைகளாம்—கொசுவுக்கு**
**ஆயிரம் வண்டிகளாம்**
**பாகவதம் பாட—கொசுவுக்கு**

பிராமணர் நாலுபேராம்
பச்சைப் பல்லாக்கில் ஏறி—கொசுவனார்
பார்வேட்டை போனாராம்
பல்லாக்கைக் கண்டவுடன்—பாளையக்காரன்
சலாம் போட்டானாம்!
வாரும் வாரும் காணும்—கொசுவனார்
இருந்து பேசுங் காணும்!
இருந்து பேசினாக்கால்—பாளையக்காரா
எந்த ராஜ்யம் தருவாய்?

ராஜதந்திர உறவுகளை நடத்தும் கொசுவனாரை விட்டு, மேலும் கொஞ்சம் நடந்து பார்ப்போம்.

மண்டபத்திலே ஏதோ பாட்டுச் சத்தம் கேட்கிறதே அதையும் அருகிலிருந்து கேட்டுவிடுவோம்.

நெல்லிக்குநெல்லி நேரே திருநவேலி
நெல்லையப்பர் கோயிலிலே நிற்குமாம்? கல்லெருது
கல்லெருது புல்மேயக் காண்பாளாம் காந்திமதி.

காந்திமதி யம்மனுக்குக் கிடைத்த பாக்கியம் இருக்கட்டும். அம்பிகைக்குத்தான் என்ன கரிசனை.

மாலை கொடுத்தக்கால் வாடிப்போம் என்று சொல்லி
திரு நீறுதந்த கோயில் சிந்திப்போம் என்று சொல்லி
திருக்காதுக்கொப்பை சிறப்பாகத் தந்தாளே

அம்பிகை அருள்வரம் கொடுத்ததோடு நிற்காமல்,

பார்காத்து பாலிக்க
வெள்ளி விளக்கெரிய வெண்கலிர்கள் ஓசையிட
தங்க விளக்கெரியும் சாதிலிங்கங் கோட்டையிலே
ஒப்பனையும் பால்வணனும் ஊர்வழியே போகையிலே
பழுதுபடா ஒப்பனையை பாங்கியென்று சொன்னாரே
கட்டைதட்டிக் கல்லிடறி கடையாலும் பகல்கவிழ்ந்து
வெட்ட வெட்டப் பாலூரும் வெற்றியுள்ள பால் வணரே

தல விசேஷத்தில் தோய்ந்து மெல்லிய நறுமணம் போல் காற்றோடு இழையும் இந்தக் கனவுகள் ஒரு பக்கம் இருக்கட்டும். கம்பர்ராமாயணம் கேட்டிருப்பீர்கள். அது இப்பொழுதைய ரசிகத் தன்மைக்கு ஒரு அறிகுறியாகி விட்டது. கம்பன் இசைகளைச் சற்று மறந்து இந்த இராமாயணத்தைப் பாருங்கள்.

**ஏதுடா ராவணா இறங்கடா மேடைவிட்டு**
**பாரடா ராவணா ராமர்படைபொருதும் பாவனையை**
**வாளி தொடுத்து அனுமாரைத் தூதுவிட்டு**
**திரு ஆழிகை கொடுத்து சீதை சிறைமீட்டாரே.**

காதல் பாட்டுத்தானே நாட்டின் கனிவையும் நாகரிக உயர்வையும் இதயப் பண்பையும் காட்டுவதாக விவரிக்கிறார்கள். கிராமத்துக் காதலி முயல்கறை''பயிலாத் திங்கள் முகத்தியர்''போல சந்திரகாந்தக் கல் மண்டபத்திலிருந்து, 'பெண்ணிலா வூரில் பிறந்தாரைப்போல வரும் வெண்ணிலாவேஇந்த வேகமுனைக்காகாதே' என்று பாடமாட்டார்கள்'செந்தழலின் சாற்றைப்பிழிந்து செழுஞ்சீ தச்சந்தனம் என்றாரோ தடவினார்'' என்று சமத்காரமாகச் சொல்லத் தெரியாது. நிலவைத் துகிலாக எடுத்து உடுத்திருக்கும் சித்திராங்கிகள் அல்ல அவர்கள். அவர்களது காதிலிலே ஸ்படிகமான இச்சை தெறிக்கும்; திறைபோட்டு மறைக்காத சிற்றம்பலம் அவர்கள் மன அரங்கு. மனசில் உள்ள இச்சைவடுப்படாமல் வார்த்தையில் துள்ளாட விடுவதுதானே கவிதை. கிராமத்து ஜூலியட்டுகள் மனப்பண்பைச் சற்று பார்ப்போம்.

**கதிர் விளைந்த கொல்லையிலே கதிர் மயங்கும் எல்லையிலே**
**காத்திருந்த காளையவன் கண்ணடித்துப் போய் மறைந்தான்**
என்று ஏங்குகிறாள் ஒரு வள்ளி.

இன்னும் ஒரு சின்னிக்கு ஏன் இன்னும் தாய் படுத்துத் தூங்கவில்லை என்று கோபம் கோபமாக வருகிறது. நிலாவில் காதலன் வந்து காத்திருப்பானாம்.

அவள் கண்ட நிலா வெண்ணிற நறை நிறை வெள்ளமென்ன பரந்து கிடக்கவில்லை. ஆனால் சோளப் பொறி மத்தியிலே சுட்டுவச்ச தோசையைப் போலத் தானிருந்தது!

**சோளப் பொறி மத்தியிலே**
**சுட்டுவச்ச தோசையைப் போல்**
**தோன்றுமிந்தச் சோதி நிலா**
**சோதி நிலா மறையுமட்டும்**

**தாய் படுத்துத் தூங்குமட்டும்**
**சொன்னகுறி பார்த்து வந்து**
**சேர்ந்திருப்பான் என் துரையே!**

'கண்டாங்கிச் சேலை காதோலை பாடகம்' என்று சொல்லி ஒரு வருஷம் பேச்சி முத்து ஏமாற்றிய பெண்ணின் கோபத்துக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி வந்து விடுவோம். இன்னும் ஒன்றுதான் கேட்கவில்லை. அதாவது அழுகைச் சத்தம். காதலுக்குப் பிறகு பிலாக்கணம் என்றால் பலருக்கு ரசனைக் குழப்பம் தென்படும். நாம் ஏன் அவர்களது அழுகையைக் கிளப்பிவிட வேண்டும்? ''எழுத்தாணியை மடக்கி வையடா தம்பி, நாம் பாட்டு எழுதினது போதும்'' எனக் கம்பர் தம் கற்றுச் சொல்லியைப் பார்த்துச் சொல்லுவதற்குக் காரணமாக இருந்தது, வேதனையில் உதித்த பாட்டு தானே.

**''சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டினிலே**
**நில்லென்று சொல்ல''**

நின்று அழுத பெண்ணின் ஏக்கந்தானே, சீதையின் வேதனைக்கும், மண்டோதரியின் புலம்பலுக்கும் ஆதாரக்

கருவாக இருந்ததாம். தெரிந்த அழுகையை விட்டு, இத்தனை நேரம் நாம் கேட்டு வந்ததைக் கோவைப்படுத்திப் பார்ப்போம். சுப்பிரமணிய பாரதியாரின் சின்னக் குயிலி,

**வட்டமிட்டுக் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்க**
**கொட்டி இசைந்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்**
**சுண்ண மிடிப்பார் தம்சுவை மிகுந்த பண்களிலும்**
**பண்ணை மடவார் பழகுபல பாடலிலும்**
**ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும்**

கேட்டதுதான் தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையாள் வாக்குக்கு ஆதாரசக்தி! இலக்கியத்தைப் புரிந்து கொள்ள நாட்டின் இதய பாவம் தெரியவேணும். கிராமத்துப் பாட்டுக்களே அதற்குச் சாதனங்கள்.

# இலக்கியத்தின் இரகசியம்

வாழ்க்கையில் இலக்கியத்திற்கு ஸ்தானம் என்ன? இதற்கு இரண்டுவிதமான பதில்கள் இருக்கின்றன. இரண டும் பாதி உண்மைகள். இலக்கியம் ஒரு சுகத்தான பொழுது போக்கு, மோகனமான கனவு என்பதுஒரு கொள்கை. வாழ்க்கையின் இரகசியத்தையறிந்து, வாழ்க்கையின் முன் னேற்றத்தைக் கோருவது இலக்கியம் என்பது மற்றொரு கட்சி.

இலக்கியம் மனிதனது மோகனமான கனவு, ஆனால் பயனற்ற கனவு என்று கொண்டுவிடுவது சரித்திரத்திற்குப் பொருந்தாத கூற்று. இலக்கியம் பிறக்கிறது. புதிய விழிப் பும் மக்களிடையே பிறக்கிறது.பிரஞ்சுப் புரட்சியே இதற்கு ஆதாரம். "புதிய உதயக்கன்னியை" முதன் முதலாகவரவேற் பவன் கவிஞன்தான். அவனது தரிசனம், மக்களிடையே ஓர் புதிய சமுதாயத்தைச் சிருஷ்டித்து விடுகிறது.

ஆனால் இதைத் தர்க்கத்தின் அந்தம்வரை சென்று ஆராய்ந்தால்; வெறும் பருகசிப்பிற்குரிய கேலிக் கூத்தா கிறது. ஏன் எனில் இந்தக் கொள்கைக்குப் புறம்பான உன்னத இலக்கியங்கள் இருந்து, அந்தத் தர்க்க வாதத்தைச் சிதற வடிக்கிறது. தர்மத்தின் உயர்ச்சிக்காகத்தான் இலக் கியம் என்றால், ரோஜாப் புஷ்பத்தின் அழகு, அதிலிருந்து

அத்தர் எடுக்கும் தொழிலில் இருக்கும் லாபத்தைப் பொருத்திருக்கிறது என்று கொள்ளவேண்டும்.

கீட்ஸின், 'என்டிமியன்' என்ற காவியம் எந்தத் தர்ம சாஸ்திரத்தைத் தூக்கிவைக்க இருக்கிறது? அதன் ஒருவரியின் முன்பு, உலகத்தைத் தூக்கி நிறுத்துவதற்காகப் பாடுபடும் ஷாவின் நாடகங்கள் பூராவும் நிற்க முடியுமா?

இலக்கியம் என்பது ''நாடிய பொருளைக் கூட்டுவிக்கும்,' சாதனம் என்று நினைத்திருப்பதைப் போன்ற தவறான அபிப்பிராயம் வேறு கிடையாது. இலக்கியம் உள்ளத்தின் விரிவு: உள்ளத்தின் எழுச்சி, மலர்ச்சி.

இலக்கிய கர்த்தா வாழ்க்கையை அதன் பல்வேறு சிக்கல்களுடன், நுணுக்கத்துடன் பின்னல்களுடன் காண்கிறான். அதன் சார்பாக அவன் உள்ளத்திலே ஒரு உணர்ச்சி பிறக்கிறதுஅந்த உணர்ச்சி நதியின் நாதம்தான் இலக்கியம்.

அவன் நோக்கில் பட்டது, பெயர் தெரியாத புஷ்பமாக இருக்கலாம்: வெறுக்கத்தக்க ராஜீய சூழ்ச்சியாக இருக்காலம்;அல்லது மனித வர்க்கத்துக் கொடுமையின் கோரமாக இருக்கலாம் அதைப் பற்றிக் கவலையில்லை. அந்த அம்சத்தை நோக்கியவுடன் அவனதுமனமும் இருதயமும் சலிக்கின்றன. அந்தச் சலனத்தின் பிரதிமையே இலக்கியம்.

கம்பராமாயணம் ஒரு மோகமான கனவு. இலட்சியத்தின் தரிசனம். அது ஒரு புதிய சமுதாயத்தை எழுப்பியது. ஆனால் கம்பராமாயணத்தின் மேதை, அதன் சமுதாய சிருஷ்டி சக்தியைத்தான் பொறுத்து இருக்கிறது என்று நினைக்க வேண்டுமானால் அது தாக்க ஆதாரமாகப் பொழுது போக்குச் சம்பாஷணைக்குதவும் பேச்சு. கம்பராமாயணத்தின் மேதையை அறியாதவர்கள்தான் அப்படிக் கூறிக்கொண்டிருக்க முடியும்.

மாணிக்கவாசகர் சடகோபாழ்வார் பதிகங்கள். சமயத்தை ஸ்தாபிப்பதற்கான எண்ணத்திலிருந்து உதித்தவை என்று எண்ணுவதைப்போல் தவறு கிடையாது. அகண்ட அறிவில், வாழ்க்கை ரகசியங்களில், அவர்கள் மனம் லயித்தது. அந்த லயிப்பின் முடிவே அவர்களுடைய கவிதை. அது பிற்காலத்தவர்களால் பிரசாரத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கலாம். அதனால் அதைப் பிரசாரத்திற்காகப் பிறந்தது என்று கூறிவிட முடியாது.

நெப்போலியன் ஒரு தடவை ''ஹோமரின் கவிதையை வைத்துக்கொண்டு, பாரிஸ்நகரை எழுப்பி விடுவேன்'' என்று கூறினானாம். அதில் ஒரு உண்மை இருக்கிறது. இலக்கியத்தின் உயிர்நாடி உணர்ச்சி. உணர்ச்சியில் எழாத தர்ம சாஸ்திரங்கள், வாழ்க்கையைக் கீழே இழுக்கும் பாறாங்கல்லுகள். இந்த உணர்ச்சியின் உண்மைதான் புதிய விழிப்பிற்குக் காரணம்: உண்மையே **இலக்கியத்தின் இரகசியம்.**

# சாம்ராட்டுகளின் சப்தஜாலம்

## 1

### வார்த்தைப் பெருங்கோவில்

கவிஞன் வார்த்தைகளின் நாதத்தை அறிந்தவன். பாஷையின் இரகஸிய சக்தியை, அதன் உயிர் நாடியைக் கண்டவன். அவன் உள்ள அனுபவத்திற்கு ஒத்த வார்த்தைகள் வந்துவிழும். ஒரு பெண் பந்து விளையாடுகிறாள். அதை வருணிக்கப் புகுந்த கவிஞன் விளையாட்டு வேகத்தில் ஆபரணம் ஒலி செய்வதை,

**செங்கையில் வண்டு**
**கலின் கலினென்று**
**செயஞ்செய மென்றாட—இடை**
**சங்கதமென்று,**
**சிலம்பு புலம்பொடு**
**தண்டை கலந்தாட**

என்று அப்படியே படம் பிடித்து விடுகிறான்.

இன்னொரு கவிஞன் அரண்மனை வாயிலை அதன் பிரகாசமான, கண்களைச் கூசச் செய்யும் வர்ண ஒளிகளை,

**பொன் இலங்க;**
**வஜ்ரப் பொடியிலங்க**

**முன் இலங்க பின் இலங்க**
**முத்திலங்கும் வாசலினான்**

என்று பொன்னாலும் வயிரத்தாலும் இழைக்கப்பட்ட வாயிலை அப்படியே கண்முன் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறான்.

கம்பனும் விராதனின் கரத்தின் ஆபரண ஒலியைக் கொண்டுவர, இந்த சப்த ஜாலத்தைக் கையாளுகிறான்.

**வெகங்ணங் கவலயங்களும் விலங்க விரவிச்**
**சங்கணங்கிய சஞ்சல மலம்பு தவளக்**
**கங்கணங்களும் இலங்கிய கரம்பிறழவே**

இம்மாதிரியாக வார்த்தை இயக்கத்தினால் உண்டாகும் சப்த ஜாலங்கள் செய்வது கவிஞனுக்கு வெகு எளிது. ஓரளவு உணர்ச்சியும், பயிற்சியும் இருந்தால் லேசாக அமைத்துவிடலாம். ஆனால் உணர்ச்சியனுபவத்தை வெகு சூக்ஷமமாக அமைக்கும் ஆற்றல், கம்பனைப்போன்ற இலக்கிய சாம்ராட்டுகளுக்குத்தான் உண்டு. ஒரு கம்பன் பிறக்கிறான். ஆனால் கவிதை யுள்ளத்தைப் பண்படுத்தும் பயிறசியும், அனுபவமும் அதற்கேற்றதுபோல், வேண்டும். கைதேர்ந்த சிற்பியின் விரல் நுட்பத்தைப்போல், பாஷையைப் பற்றிய அந்தரங்க அனுபவம் வேண்டும்.

கம்பன், பெரும் சீற்றம் தணிந்ததை,

**கண்ணிய சீற்றம் தீர்ந்தான்**

என்று கூறுகிறான். **கண்ணிய சீற்றம்** பெருமிதமான கோபம். உணர்ச்சியின் முழு சக்தியையும் எடுத்துக் காட்டும் வார்த்தை. மேலும் இன்னொரு இடத்தில்:

**மழைக்குன்றம் அனையான்**
**மௌலி கவித்தனன் வரும் என்றென்று**
**தழைக்கின்ற உள்ளத்தன்னாள்**

என்று கோசலையின் உள்ளத்தை வருணிப்பது வார்த்தைகளின் ரகஸியத்தை அறிந்தவன் என்று காண்பிக்கிறது.

இன்னும் மற்றொரு இடத்தில்,

**காளிமை தழைந்து தவழ...**

என்று விராதனின் கோர சொரூபத்தை வருணிக்கிறான். **காளிமை;** காளித்தன்மை, காளியின் கோர சொரூபத் தன்மை என்று உபயோகிக்கிறான். வார்த்தைக்குப் புதிய உபயோகத்தைக் கொடுக்க, ஏன், புதிய வார்த்தைகளையே சிருஷ்டிக்க, மகத்தான கவிஞர்களால்தான் முடியும்.

## 2

### அழகின் கனவு

அழகு என்பதற்கு நடைமுறை அர்த்தம் கண்ணுக்கு இனிமையானது என்பது. அந்தச் சித்திரம் அழகாக இருக்கிறது, அந்தப் பெண் அழகாக இருக்கிறாள் என்றால், படமோ பெண்ணோ பார்ப்பதற்கு இன்பமாக இருக்கிறது என்று நாம் சொல்லி வருகிறோம். அழகு என்றால் என்ன? அழகு மனதில் பிறந்த லட்சியத்தின் வடிவம். பல பாகங்களின் சரியான கூட்டுறவில், அதாவது ஜீவனுள்ள ஒற்றுமையில் பிறந்த வாய்மை. உள்ளத்தின் அநுபவத்தின் சரியான வெளியீடு. கவிதையின் வடிவம்தான் இதற்குச் சரியான அமைப்பு. வார்த்தைகளின் பூரணசக்தியையும், அதன் அர்த்த புஷ்டியையும் இந்த அமைப்புத்தான் கொண்டு வர முடியும். ஒரு பாட்டில்—வார்த்தைகள் அவைகளுக்கேற்ற அர்த்த புஷ்டியுடனும், அழுத்தத்துடனும் அமையும்-கவிதையில் வார்த்தைகளை இடம் பெயர்க்க முடியாது. வேறு வார்த்தைகளைப் போட முடியாது. இதுதான் அதன் அழகு. அனுபவம்தான் வாய்மை. அழகே வாய்மை, வாய்மைதான் அழகு.

**வில் இழந்தனனெனினும் விழித்த வாள் முகத்தில்**
**எல் இழந்திலன், இழந்திலன் வெங்கத மிடிக்கும்**
**சொல், இழந்திலன் தோள்வலி, இழந்திலன் சொரியும்**
**கல் இழந்திலன் கரங்கெ னெத்திரிதல்**

நிராயுதபாணியாக இருந்தும், விடாது போர் தொடுக்கும் வீரன், அவனது போர்த் திறத்தை நடிக்கும் படமாகக் கண் முன்பு கொண்டுவந்து நிறுத்தி விட்டான். அவனது 'ஓட்ட சாட்டங்களை'யும் ஆரவாரங்களையும் கொண்டு வருவதற்குக் கையாளும் முறையைச் சற்று கவனிப்போம். வில் இழந்துவிட்டான். அவ்வளவுதான்; அவன் இழக்காதது பல. முகத்திலிருக்கும் பிரகாசம் போகவில்லை என்பதை விருத்தத்தின் முதல்வார்த்தை அழுத்தமாக எல் இழந்திலன் என்று சொல்லி, பிறகு, 'இழந்திலன் வெங்கதம் இடிக்கும் சொல்' என்ற வார்த்தைகளில் விழுந்து, அவை இரண்டையும் பிணிக்கிறது. மேலும் இழந்திலன், இழந்திலன் என்று திருப்பித் திருப்பிச் சொல்லுவதிய், யுத்தத்தில் முக்கியமாகக் கருதப்படும் படைக்கலம் ஒன்றை இழந்தான் என்றாலும், அவன் இழக்காதது என்ன என்பது அற்புதமாக விஸ்தரிக்கப்படுகிறது.

கவிதைத் ஒரு கனவு என்றேன். அதாவது அநுபவத்தின் வெளியீடு.

# இலைக் குணம்

அன்று நானும் எனது நண்பரும், ஒரு வேலையாகச் சென்றிருந்தோம். திரும்பும் பொழுது நல்ல வெயில். எனக்குக் கொஞ்சம் தாகமெடுத்தது. எனது நண்பருக்கோ காப்பி பிடிக்காது. இப்படிப்பட்ட பிரகிருதிகளும் உண்டா என்று ஆச்சரியப் படாதீர்கள். அதற்காகச் சாப்பாட்டுக் கடை யென்று சொல்லப்படும் ஒரு கீழ்த்தர ஹோட்டலுக்குப் போய் சுக்கு வென்னீர் கொண்டுவரச் சொன்னோம். அங்கே இருவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

ஒருவர் விநாயக பகவானுக்கு அண்ணா என்று சொல்லலாம். மற்றவரோ எனில் உண்ணாவிரத உபவாச மகிமைகளை அநுபவத்தில் அறிந்த மகான் போல் தோன்றினார். முதற் கூறப்பட்ட மனிதர் சுமார் ஒரு அரைப்படி மோர் சாதத்தைச் சட்னியுடன் வேட்டையாடின காட்சியை எப்படி யுரைப்பேன்! இலை யாழ்வானிடத்தில் இடையறாத அன்பு! ஒன்று மாத்திரம் சொல்கிறேன்; அவரது கை தறியின் ஓடம் போல் இலைக்கும் வாய்க்குமாகப் பறந்தது. கடைசியாக இலையை வழித்து நக்கிவிட்டு, பக்கத்திலிருந்த ஒரு செம்பு ஜலத்தையும் ஒரே மூச்சில் தனது குட்சியில் செலுத்தி விட்டு 'ஹாய்' என்ற சப்தத்துடன் சுவரில் சாய்ந்தார். என்ன! எரிமலைகள் நெருப்பைக் கக்கும் பொழுது, பாதாளத்திலிருந்து ஒரு பெரும் ஹூங்கார

சப்தம் புரண்டு கொண்டே வருமாம். அதுபோல், எங்கே வாந்தி எடுக்கப் போகிறாரோ என்று நினைத்தேன். நல்ல காலம் அது சாதாரணமான ஏப்பந்தான். சாப்பாட்டை எப்படி அனுபவித்தாரோ அப்படியே ஏப்பத்தையும் நன்றாக அனுபவித்துத்தான் விட்டார். 'குறள்' புலவர் வேடிக்கையாக,

**தின்றதனால் ஆயபயன் என்கொல்**
**ஏப்பந்தான் நன்றுவராஅ தெனின்**

என்றதின் உண்மையைக் கண்டேன்.

''சரி நாம் சேர்மாதேவியில் இறங்க வேண்டுமானால், இந்த ரயிலுக்கே புறப்படவேண்டும்'' என்று எழுந்தார் வினாயகர் அண்ணா.

சேர்மாதேவி, திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து முக்கால் மணி நேரப் பிரயாணம்.

''ஏன் நாம் சேர்மாதேவியில் இறங்க வேண்டும்?' என்று தயங்கினார் உபவாச விரதர்.

''ஏன் நாம் சேர்மாதேவியில் இறங்க வேண்டும்?'' என்று ஆச்சரியமும் கோபமும் கலந்த குரலில் திருப்பிச் சொல்லி விட்டு, ''ஏன்? என்ன காபி சாப்பிட வேண்டாமா?'' என்றார் இந்தப் பூலோக வினாயகர்.

இவர் இப்படிப் பதில் சொல்லும் பொழுது அவரது அந்த ராத்மாவின் ''மருமத்தில் எறிவேல்'' பட்டதுபோல் தோன்றியது அவரது குரலின் தொனி. திருச்செந்தூர் போய் விட்டு வருகிறவர்கள் திருநெல்வேலி ஜங்ஷனில் மத்தியான போஜனத்தை முடித்து விட்டு, சேர்மாதெவியில் காப்பி சாப்பிட வேண்டும் என்று தெரியாத ஒரு மனிதனும் உண்டோ என்று ஆச்சிரியப் பட்டார் இந்தக் கலிகாலக் கவந்தன். அவரது மனவுலகில், திருநெல்வேலி என்றால்

திருப்தியான 'சாம்பார் சாதம், தயிர் சாதம்' என்றும். சேர்மாதேவி என்றால் ஒரு டஜன் இட்லி சட்னிகளை அடித்துச் செல்லும் பெரு வெள்ளமாகிய காப்பி என்ற சிற்றுண்டி என்றும் பொருள்பட்டு நின்றது.

இம்மாதிரி இலையாழ்வாருக்குப் பக்தி செலுத்தும் அன்பர்களை மரியாதைக்குறைவாக எழுதுவதாக நினைக்கக் கூடாது. என்ன! நமது பண்டைக் கிழவியின் கவிகள், நமது இலக்கியத்தில் அவள் உண்ட விருந்துகளின் ஜாப்தாக் களாகப் பரிமளிக்கின்றன அல்லவா?

**அடகென்று சொல்லி அமுதத்தையிட்ட**
**கடகம் செறிந்த கை**

மட்டுமா ஔவையின் ஓவியத்தில் பாதிக்கப்படுகிறது! கைக்குப் பின் நங்கையின் மனமும் வன்மையுமன்றோ நமது மனக்கண் முன் நிற்கிறது.

மற்றும்,

**வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்**
**முரமுரெனவே புளித்த மோரும்**

பரிந்திட்ட புல்வேளூர், அவனது வண்மையையும் நமது கிழவி காலவாரியை எதிர்த்துப் புகழ் பெறுவதன் கவிகளில் நமக்குக் காண்பிக்கிறான். விந்து மணக்கும் இக்கவிகள் அவள் காலத்துச் சாதாரண மக்களின் உள்ள நிலையையும் வள்ளன்மையையும் நமக்குக் காட்டுகின்றன.

நான் எப்பொழுதும் ராமலிங்க சுவாமியைச் சாப்பாட்டுச் சாமி என்று சொல்லுவது வழக்கம். கடவுள் என்றால் எத்தனை டஜன் மாம்பழங்கள் என்று சொல்லி விடுவார் போலிருக்கிறது. அவர் திருவாசகத்தை யனுபவித்த அருமையைப் பாருங்கள்!

**வான் கலந்த மாணிக்க வாசகத்நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து, பால்கலந்துசெழுங்கனித் தீஞ்சுவைகலந்தென்**
**ஊன்கந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!**

இந்த 'மோஸ்தர்' இலக்கிய ஆராய்ச்சி நமக்குள் இன்னும் புறப்படவில்லை. வந்தால் நமக்குக் கம்ப ராமாயணம் எத்தனை பதிர்பேணிக்குச் சமானம் என்று சொல்லி இலக்கியச் சுவையை லேசாக எடுத்து ஊட்டி விடுவார்கள்.

இவ்வடியார் கூட்டத்தில் நானும் ஒருவன். எனது அனுபவத்தைச் சிறிது கேளுங்கள்.

எனது நண்பரும் குருநாதருமானவர் பெயரைச் சொல்ல இஷ்டமில்லை, 'ரஸிகர்' என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் மாணவனாக இருந்த காலத்தில் தமிழ் இலக்கியம்என்றால், சமணரைக் கழுவேற்றுவதற்கும், "காதைக் குறும்பையளவாகத் தோண்டி எடுப்பதற்கும்" இடை இடையே "முதலையுண்ட பாலனை யழைத்தல்," "எலும்பைப் பெண்ணுரு வாக்குதல்" முதலிய செப்பிடு வித்தைகள் செய்வதற்கும், தற்காலத்தில் சர்வகலாசாலைப் பண்டிதர்கள் கால ஆராய்ச்சிகள் செய்து பால் மணம் மாறாத மாணவர் தலையில் சுமத்துவதற்கும், ஏற்பட்ட சித்திரவதை செய்யும் ஸ்பானிய யந்திரம் (Spanish enginas of inquisition) என்று எண்ணியிருந்தேன்.

ரஸிகர்தன் தமிழ் இலக்கியத்தின் உண்மை இனிமையைக் காட்டி என்னை யநுபிவிக்கச் செய்பவர்.

அவருடன் பேசுவதே ஓர் அநுபவம் என்று சொல்லுவேன்.

அவர் இப்பொழுது சென்னையில் இருக்கிறார். கொஞ்ச நாட்களுக்கு முன் அவர்களைச் சந்திக்க

நேர்ந்தது. அதைப் பற்றித் தான் நான் சொல்ல வந்தது.

குசலம் விசாரித்த பிறகு காப்பிட உட்கார்ந்தோம். சமையல் அன்று விசேஷம், ஆனால் விருந்தல்ல. நான் பொறித்த குழம்பை. விளக்கெண்ணைப் பிள்ளைக்கும் நோயாளிக்கும் நெருங்கிய பந்து என்று நினைத்திருந்தேன். நான் அன்று உண்ட பொறித்த குழம்பு எந்த வெங்காயச் சாம்பாரையும் தூக்கியடித்துவிடுல்.

பேச்சின் போக்கில் பாரதியாரின் ''நெஞ்சு பொறுக்கு தில்லையே,'' என்ற நொண்டிச் சிந்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர், சிலரைப் போல் பிரசங்க மாருதத்தால் என் மூளையைச் சிதற அடிக்கவில்லை; பாரதியின் பாட்டுக்கு ''ஸ்பெஷல் ப்ளீடிங்'' மாதிரி இன்ஷூரன்ஸ் ஏஜண்ட் வேலை செய்யவில்லை, அதைக் கேட்ட பிறகு பாரதி உண்மைக் கவி என்பதற்கு அந்தப் பாட்டு ஒன்று போதும் என்று பட்டது. அன்று பாரதியாரின் ஆவேசமும் மனக் கொதிப்பும் அந்தப் பொறித்த குழம்பு பெற்றது என்றால் வியப்பென்ன? பாட்டை அநுபவித்த தினால் உண்டான குதூஹலமும் எக்களிப்பும் அன்று உணவிற்கு ஒரு கவிதை யுணர்ச்சியைக் கொடுத்தது.

ஆனால் ஒன்று. தயிர்ச் சாதமும் மாங்காம் ஊறுகாயும் வாழ்க்கையின் ஓர் உன்னத ஆதர்சமாக வைப்பது சரியல்ல. சாப்பாடு உயிர் வாழ்வதற்கு அவசியந்தான். ஆனால் வாழ்க்கை வேறு; உயிர் வாழ்தல் வேறு. வாழ்க்கை ஓர் அநுபவம். சிலர் உலகம் முழுவதையுமே சாப்பாட்டுக் கடையாக மதித்துவிடுகிறார்கள்.

ஃ ஃ ஃ

கொஞ்ச நாளைக்கு முன் இந்த மாதிரி மனிதனை நான் சந்திக்க நேர்ந்தது. அவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள க்ஷேத்திரங்கள் எல்லாம் தரிசிக்க வந்திருந்தார். உண்மையில் வாழ்க்கையின்பத்தை அநுபவிக்க வேண்டுமென்றால் தாமிர வருணி தீரத்திலுள்ள கிராமாந்தரத்தில்தான் வசிக்க வேண்டும். நான் சந்தித்த மனிதனுக்கும் அதேதான் ஆசை! ஆனால் காரணம் வேறு. அவருக்கு வாய் அரை நிமிஷம் சும்மா யிராது. சாப்பிட்டுக் கொண்டாவது அல்லது அதன் பெருமைகளைப்பற்றிப் பேசிக்கொண்டாவது இருக்க வேண்டும். ''அப்படிப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.''

''சார்! போளி என்றால் கடம்பூர் போளிதான் சார். நானும் எங்கெங்கேயோ பார்த்திருக்கிறேன்; அதற்கு ஈடு ஜோடு இந்த உலகத்திலேயே கிடையாது சார்.'' இவர் இப்படிப்பேசி வருவதைப் பார்த்தால், உண்மையில் சைவப் பற்றுடைய பக்தர் ஒருவர் தேவாரத் திருமுறைகளைப் பக்தி சிரத்தையுடன் எடுத்து ஓதுவது போலிருந்தது. உண்பதே பெரிய சமயமாக் கொண்ட சாப்பாட்டு நாயன்மாராக இருந்தார்.

உடனே சித்திரான்னத்திற்குப் பாய்ந்தார். ''ஆமாம் சார்! ஜங்ஷனில் இறங்கும் பொழுது பசி அதிகம். அதுதான் முதல் தடவைபோனது. அந்த ஹிந்துக் காலேஜ் பக்கத்தில் ஒரு பிராம்மணன் இருக்கிறான் சார். சித்திரான்னம் என்றால் அங்குதான் சார். செலவு ஜாஸ்தியில்லை-நான் வயிற்றுக்கு வஞ்சகம் செய்து மிச்சம் பிடிப்பவனல்ல, என்ன! போங்க, அந்த ஐயன் என்னதான் போடுவானோ...'' என்று ஆரம்பித்து சித்திரான்ன மான்மியத்தை முடிப்பதற்குள் நாங்கள் ஜங்ஷனுக்கு வந்து சேர்ந்தோம்.

இப்படி இந்த மனிதன். தேடிக் கண்டு பிடித்த அம்பா சமுத்திரம் முறுக்கு; ஆழ்வார் திருநகரி தேங்குழல், நாங்கு நேரி நெய்யப்பம், இந்தியாதி பொருள்களின் அருமை பெருமைகளை, கொலம்பஸ் அமெரிக்கா கண்டுபிடித்த மாதிரி, எங்களுக்கு எடுத்துச் சொல்லி திருநெல்வேலி ஜில்லா சாப்பாட்டுப் பூகோள சாஸ்திரத்தை எங்களுக்குக் கற்பித்தார்.

அவர் கண்ட திருநெல்வேலியை நான் கனவிலும் கண்டதில்லை. கடம்பூர் போளியும் பழனி பஞ்சாமிர்தமும் வாழ்க்கையின் ஆதர்சமாகக் கொண்டிருப்பவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் நடமாட வேண்டும்.

# பாரதிதாசன்

பாரதியார் இன்று நமக்கு வைத்துவிட்டுப் போன சொத்துக்கள் பல. இவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞானரதம், குயில் பாட்டு, பாஞ் சாலி சபதம், கனக சுப்புரத்தினம் என்ற பாரதிதாஸன் என்று சொல்ல வேண்டும்.

**எங்கெங்கு காணினும் சக்தியடா?- தம்பி**
**ஏழுகடல் அவள் வண்ணமடா**

என ஸ்ரீ கனக சுப்புரத்தினம் தமது கன்னிக் கவிதையைக் கொணர்ந்து சமர்பித்த பொழுது, பாரதியாரின். ''தராசு'' 'எழுக புலவன்' என ஆசீர்வதித்தது. அன்று முதல் பாரதி தாஸன் ஆகிவிட்ட ஸ்ரீ கனகசுப்புரத்தினம் பாரதி வகுத்த பாதையிலே பல அழகுக் கனவுகளை நிர்மாணித்துத் தந்திருக்கிறார். பாரிச வாய்வும், பக்கவாதமும் போட்ட லைக்கும் இன்றையக் கவிதையுலகிலே, அவருடைய பாட்டுக்கள் ஒன்றுதான் நிமிர்ந்து நடக்கின்றன, எனது நண்பர் ஸ்ரீ கனசசுப்புரத்தினம் நம்மிடையே வாழ்பவர்; நம்மைப் போல, கருத்து விசித்திரங்களும், கருத்து விருப்பு வெறுப்புக்களும், ஆணித்தரமான அபிப்பிராயங்களும் கொண்டவர்; பாரதிதாஸன் கவி; கனவுக் கோயில்களைக் கட்டி நம்மை அதில் குடியேற்றி மகிழ்கிறவர். 'குள்ளச் சிறு மனிதர்களின் எத்து' நூல் வைத்து அவரது காவிய

மாளிகைகளை முழம்போட முயலுகிறவர்களுக்கு, ஸ்ரீ கனக சுப்புரத்தினம், இடை மறித்து நின்று தம் கருத்துக்களைக் காட்டி மிரட்டி ஓட்டி விடுவார். பாரதிதாஸனைப் பழகி அனுபவிக்க வேண்டுமெனில் ஸ்ரீ கனக சுப்புரத்தினத்தின் கருத்துக்களைக் கண்டு பயப்படுவது விவேகமல்ல; ''நட்ட கல்லும் பேசுமோ'' என்று பாடியவரை விட இவர் பிரமாத மான தவறு எதுவும் செய்துவிடவில்லை. அவருடைய காவியங்களில், ராமாயணம் என்னும் பெரும் புளுகும், 'எங்கள் மடாதிபதி' 'சைவத்தை ஆரம்பித்த' விமரிசையும், இருந்தால் என்ன குற்றம்? அவர் கவி.

**கோட்டைப் பவுன் உருக்கிச் செய்த**
**குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகளைப்**

பார்க்கத் தெரியாத ரஸிகர்களைக் 'குருடேயும்,அன்று நின் குற்றம்' என்று அவ்வையுடன் சேர்ந்தே ஆசிர்வதிக்க வேண்டியிருக்கிறது. பாரதிதாஸன் கட்டி வைத்துள்ள கவிதைக் கோயிலிலே எத்தனையோ பிரகாரங்கள் உண்டு. எத்தனையோ ஆயிரக்கால் மண்டபங்கள் உண்டு. அவற்றில் நடுநாயகமாக விளங்குவது என நான் கருதுவது புரட்சிக் கவி என்ற அவரது பாட்டு. கதை எல்லாம்பழைய கதைதான், ஆனால் பழசு என்று சொல்லிவிட்டால் போதுமா? 'முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் பெற்றிய தாக' உள்ள மனுஷ இதிகாசக் கருத்து. விஷயம் தெரிந்த விவேகிகள், பில்ஹணீயத்தின் கருத்துதானே என்று அதைத் தாண்டிச் சென்று விடுவார்கள். அரசன், கவி. என்னதான் கவிராயர்கள் தம்மைப் புவியரசர்களுக்கு மேல் எனக் கற்பனை பண்ணிக் கொண்டிருப்பதை, அந்தப் புவியரசர்கள் புன்சிரிப்புடன் சகித்துக் கொண்டிருந் தாலும், தம் நெஞ்சை, அந்தஸ்தைத் தொடும் காரியத்துக் குள், கவிராயர்கள் பிரவேசித்து விட்டால், தமது சுய

உருவைக் காட்டி விடுவார்கள் என்பதுதான் ஆதாரக் கருத்து. பழைய பில்ஹணீயம் உருவாகும் காலத்திலே பிராமணர்கள் பூலோகப் பிரம்மர்கள், பிரபீக்கப்பட்டு வந்தார்கள். பிராமணனைக் கொல்வது பஞ்சமா பாதகங் களில் ஒன்று என்று நம்பப்பட்ட காலம். தன் அந்தஸ்துக் காக ஆசைக் குமரியின் வாழ்வையே பாழ்படுத்திவிடத் துணிந்த மன்னனைப் பிரம்மஹத்தி தோஷம் என்ற பயந்தான் தடுக்கிறது. அந்த நாகரிகம் இன்று நாம் ஏட்டில் பார்த்து நுகரும் ஒரு விவகாரம். இன்றைய நாகரிகத்தில் பிராம்மணர்களும், மன்னர்களும், தம் பழைய அந்தஸ்து களை இழந்துவிட்டார்கள், தன்னுடைய அந்தஸ்துக்காக ஒருவனை உயிர் வதை செய்யத் துணியும் மன்னனுக்கு ராஜ்யத்தில் இடமில்லை என்பதுதான் இந்தப் புதிய புரட்சிக் கவியின் ஆதாரக் கருத்து. களவையும் நிலவையும் பற்றிப் பாடிக்கொண்டிருந்த கவிஞன்பிரெஞ்சுப் புரட்சிக்கு உதயகீதம் பாடிய ரூஸோவைப் போல கனல் விடுகிறான். 'அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே' என்று கொண்டு பட்டினத்தார் தம் வீட்டுக்குத்தான் நெருப்பு வைக்கப் பார்க்கிறார். புரட்சிக்கவியான உதாரனது பேச்சு, வீண் கருவம், டம்பம், வரம் பற்ற தன்னிச்சை, கொலை வெறி, அந்தஸ்து என்ற உச்சாணிக் கொப்பு என்ற உழுத்துப் போன கருத்துக்களைச் சுட்டுச் சாம்பலாக்குகிறது. கூளங்கள் கொதித்தெழுந்து உயிர்வதைக்குத் துணிந்திட்ட மன்னனைத் தேடி வரும்போது மன்னன், இன்றைய வள முறைப்படி, நாட்டைவிட்டு வெளியேறி விடுகிறான். ஓடிப் போன ராஜா மான்டிகார்லோவில் பந்தயக் குதிரை வளர்க் கிறாரா அல்லது ஹாலிவுட் அழகியை மணக்கிறாரா என்று நாம் தேடிச் சென்று கொண்டிருக்க வேண்டாம். ஓடிப் போகிற ராஜாக்கள் அப்படித்தான் செய்வார்கள். பழைய பில்ஹணீயத்துக்கும், இந்தப் புதிய புரட்சிக் கவிக்கும் இவ்வளவுதான் ஒற்றுமை, இவ்வளவு வேற்றுமை. இவை

இரண்டும் இரண்டு விதமான மனப்பக்குவங்களைக் காண்பிக்கிறது. நாம் வெகு நேரமாகப் புரட்சிக் கவியின் முற்றத்தில் நின்றே பேசிக்கொண்டிருந்துவிட்டோம். காவியத்தைப் பார்ப்போம், அதிலே வரும் ஒவ்வொரு பாத்திரமும் பச்சைத் தமிழன்; சாயச்சரக்கல்ல; மழை பெய்த மூன்றாம் நாள் சாயம் விட்டுப் போகும் பண்ருட்டிப் பொம்மை அல்ல.

அரசன் தனது மகளான அமுதவல்லிக்கு, அகத்தில் எழுந்த கவிதையை, புறத்தில் பிறர்க்குப் புலப்படுத்து தற்குச் செய்யுள் இலக்கணம் கற்பித்துக் கொடுக்க, நல்ல தொரு ஆசான் வேண்டும் என அறிவிக்கிறான். அமைச் சனின் சிபார்சுப்படி உதாரன் என்ற உயர்கவிஞன் அமர்த்தப்படுகிறான். கவியின் வாலிபத்தையும் கன்னியின் மனசையும் சேரவொட்டாமல் தடைசெய்துவிட. அமைச்ச னுடைய குள்ளத்தனமான யோசனை கையாளப்படுகிறது உதாரன் குருடனெனவும், அமுதவல்லி பெருநோய் கண்டவள் எனவும் சொல்லி இடையில் ஒரு திரையிடு கிறார்கள்.

**மன்னவன் ஆணைப்படி – கன்னி**
**மாடத்தைச் சேர்ந்ததொரு**
**பன்னரும் பூஞ்சோலை...நடுப்**
**பாங்கிலோர் பொன்மேடை**
**அன்னதோர் மேடையிலே—திரை**
**ஆர்ந்த மறைவினிலே**
**மின்னொளி கேட்டிருப்பாள்—கவி**
**வேந்தன் உரைத்திடுவான்.**

இவ்வாறு யாப்பிலக்கணம் கேட்டு வரலானாள் அமுத வல்லி. விழி அற்றவனைப்பார்ப்பது அபசகுனம் என்றிருந் தாள் அவள்; பெருநோயை நினைத்து உதாரனும் பார்க்க வில்லை, இவ்வாறிருக்கையிலே இவர்களிடையே கிடந்த

திரைச் சீலையைக் கிழித்தெறிந்தது பௌர்ணமி நிலா. நிலாவைக் கண்டு பாடினான் உதாரன். திரைச் சீலைக்குள் நிற்கும் தன்னை உவமித்ததுபோல அமுதவல்லி நினைத்துக் கொள்ளும் படி இருந்தது அந்தப் பாட்டு.

நீலவான் ஆடைக்குள் உடல்மறைத்து
நிலாவென்று காட்டுகிறாய், ஒளிமுகத்தைக்
கோலமுழுதும் காட்டிவிட்டால் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோநீதான்
சொக்கவெள்ளிப் பாற்குடமோ, அமுதவூற்றோ
காலைவந்த செம்பருதி கடலில்மூழ்கி
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ!
''அந்தி இருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்;
பிந்தியந்தக் காரிருள் தான் சிரித்ததுண்டோ
பெரும் சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவேநீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகைஎல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
'இந்தா' வென்றே இயற்கை அன்னைவானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந்தானோ?''

என்று சாதகப்புள் மாதிரி உதாரன் தன்னை மறந்து பாடுகிறான். ''ஏதடா குருடனாச்சே'' என்று பிரமிக்கிறாள் அமுதுவல்லி. திரைச்சீலை விலகுகிறது. பயமறியாது சிரிக்கின்றன இரண்டு இளம் நெஞ்சுகள். உதாரன் முதலில் தடுத்துத்தான் பார்க்கிறான். ஆனால் அது தனது நெஞ்சத்தையே பொய்த்துப் பேசும் சமத்காரம். அவன் சொல்லுகிறான்.

நன்றுமடமயிலே, நான் பசியால் வாடுகிறேன்;
குன்றுபோலன்னம் குவிந்திருக்கு தென்னெதிரில்!
உண்ணமுடியாதே ஊராள்வோன் கூர்வாளும்
வண்ணமுடிச் செல்வாக்கும் வந்துமறிக்குதடி!

**வேல்விழியால் என்னை விலாப்புறறத்தில் கொத்தாதே!**
**பால்போல் மொழியால் பதைக்க உயிர் வாங்காதே?**
**காதல் நெருப்பால் கடலுன் மேல் தாவிடுவேன்,**
**சாதி எனும் சங்கிலி என் தாளைப் பிணிக்குதடி!**
**பாளைச் சிரிப்பில்நான் இன்று பதறிவிட்டால்**
**நாளைக்குவேந்தன் எனும் நச்சரவுக்கென் செய்வேன்?**

என்று சொல்லித்தடுக்கிறான். அதற்கு அமுதவல்லி சொல்லுகிறாள்.

**வாளை உருவிவந்து மன்னன் எனதுடலை**
**நாளையே வெட்டி நடுக்கடலில் போடட்டும்**
**வேறு கதியறியேன் வேந்தன் சதுர்வருணம்**
**சீறும்எனில் இந்தவுடல் தீர்ந்தபின்னும் சீறிடுமே.**

பிறகு

**இன்பவுலகில் இருவர்களும் நாள் கழித்தார்**
**பின்பொருநாள் அந்தப் பெருமாட்டி அங்கமெல்லாம்**
**மாறுபடக் கண்டு மனம்பதறித் தோழியர்கள்**
**வேறுவழியின்றி வேந்தனிடம் ஓடி**

அறிவிக்கிறார்கள்

அரசனே நேராக வந்து ஒளிந்திருந்து பார்க்கிறான். மண்டையிலே ஆயிரந்தேள் மாட்டியதுபோல மன முளைந் தான். உதாரனைக் கைப்பிடியாகப் பிடித்து வரும்படி காவலரை ஏவுகிறான். கடுஞ்சினத்துடன்,

**வாள் பிடித்தே புவி ஆளுமரசர் ஏன்**
**தாள்பிடித்தே கிடப்பார்!—அட**
**ஆள்பிடித்தால் பிடி ஒன்றிருப்பாய், என்ன**
**ஆணவமோ உனக்கு?**
**மீள்வதற்கோ இந்தத் தீமை புரிந்தனை**
**வெல்லத் தகுந்தவனோ—இல்லை**
**மாள்வதற்கே இன்று மாள்வதற்கே**

என்று மன்னன் கர்ஜிக்கிறான்,

அதற்கு உதாரன் தனது குற்றத்தைச் சமத்காரமாக ஒப்புக் கொள்கிறான்.

**மாமயில் கண்டு மகிழ்ந்தாடும் முகில்**
**ஆர்க்கும் மலைநாடா—குற்றம்**
**ஆம் என்று நீ யுரைத்தால் குற்றமே, குற்றம்**
**அன்றெனில் அவ்விதமே!**
**கோமகள் என்னைக் குறைஇரந்தாள் அவள்**
**கொள்ளைவனப்பினிலே—எனைக்**
**காமனும் தள்ளிடக் கால்இடறிற்று**
**கவிழ்ந்த வண்ணம் விழுந்தேன்!**

இவன் பேச்சு அரசனது கோபத்தை இன்னும் அதிகப் படுத்துகிறது. சேதி கேட்டு அமுதவல்லி ஓடிவருகிறாள். "சாதி வருணக்கரிசனம் இருந்தால், இலக்கணம் சொல்லிக் கொடுக்க அவனை அமர்த்துவதேன்?" என்று கேட்கிறாள். கவிஞன் பக்கத்தில் சென்று நிற்கிறாள். அவளை இழுத்துத் தள்ளிவிட்டு, உதாரனை அழைத்துச் செல்லக் கட்டளை இடுகிறான். அதிலும் என்ன சமத்காரம் பாருங்கள்.

**நின்றகொலைஞர் உதாரனையும் 'நட**
**நீ' என்ற தட்டினர்......** அச்சமயம்,

மந்திரி ஒருவன் மகளை மட்டுமாவது கொல்லவேண்டாம் என்கிறான். "நீதி நன்று மந்திரியே" என்று சிரிக்கிறாள் அமுதவல்லி.

மன்னன் கர்ஜிக்கிறான்:

**"என் ஆணை மறுப்பீரோ சபையில் உள்ளீர்!**
**இசைகிடைந்த என் செங்கோல் தன்னை வேற்றார்**
**நான் நாணும் படிசும்மா இருப்பதுண்டோ?**
**பிழைபுரிந்தால் சகியேன் நான்! உறுதிகண்டீர்**

**என் ஆணை என் ஆணை! உதாரனோடே**
**எதிரிலுறும் அமுதவல்லி இருவர் தம்மை**
**கல்மீதிலே கிடத்திக் கொலை செய்வீர்கள்**
**கடிது செல்வீர்! கடிது செல்வீர்......''**

அமுதவல்லியும் சொல்லுகிறாள்;

**அவையினிலே அசைவில்லை பேச்சுமில்லை**
**அச்சடித்த பதுமைகள் போல் இருந்தார் யாரும்—**
**இருந்திங்கே அநீதியிடை வாழவேண்டாம்**
**இறப்புலகில் இடையறா இன்பம் கொள்வோம்;**
**பருந்தும் கண்மூடாத நரியும் நாயும்**
**பலிபீட வரிசைகளும்கொடு வாள்கட்குப்**
**பொருந்தட்டும், கொலைசெய்யும் எதேச்சை மன்னன்**
**பொருந்தட்டும், பொதுமக்கள் ரத்தச்சேற்றை**
**அருந்தட்டும்......**

கொலைக்களத்துக்கு உதாரனும் அமுதவல்லியும் இழுத்து வரப்படுகிறார்கள். வேடிக்கை பார்ப்பதற்காக நாட்டு மக்கள் வீடுபூட்டி வந்திருக்கிறார்கள். தலைப்பாகை அதிகாரி கொடுத்த வசதியை உபயோகித்து, உதாரன் பேசுகிறான். அவன் மனசு எரிமலைபோல் கொப்புளிக்கிறது. புரட்சிக் கனலை அவன் நினைவறிந்து ஏற்றினானோ என்பது சந்தேகம். அவன் பேச்சு ஊரைச் சுட்டது! ஊரில் உள்ள உளுத்த கருத்துக்களைச் சுட்டது. அவனுடைய பேச்சே தமிழ் இலக்கிய வரிசையிலே உயர்ந்த ஸ்தானம் வகிக்கிறது. முதலிலே ஜனங்களுக்கு அவர்களது திறமையை எடுத்துச் சொல்லுகிறான்.

# தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை

நாகரிகம் என்பது என்ன? தராதஸ்னானம், திரு நீற்றுச் சம்புடம் ஆகியவற்றை வைத்துச் சிலர் நாகரிகத்தை அளக்கிறார்கள். வேறு சிலர் ஒரு வெடி குண்டுக்கு இருக்கும் நாச சத்தியையும், மின்சார விளக்கின் வெளிச்ச உக்கிரத்தையும் கொண்டு கணிக்கிறார்கள். இன்னும் சிலருக்கு—ஏன்-இப்படியே எத்தனை விதமானாலும் அடுக்கிக் கொண்டே போகலாம். நாகரிகம் என்ற கருத்து ஓரளவு மேற்சொன்னவற்றின் களையுடன் சோபிக்கும் ஒரு தன்மை என்பதுடன் அதற்கு அதீதமானதுமாகும். நாகரிகம் என்பது, சமுதாயம் இற்றுப்போகாமல் எடுத்துக் கட்டிய ஞாபகச் சரடு; நினைவுப் பாதை; சமுதாயம், எறும்புச் சாரைபோல் ஊர்ந்து ஊர்ந்து, பழக்கப்பட்டுப் போன பாதை;அது இருந்து வருவதற்கு உயிர் கொடுத்து வருவது. இந்த ரீதியில் கவனித்தால், நாகரிகம் என்பது வெறும் பிழைப்புக்கும், பிறகு சுகானுபவத்துக்கும்: அதன் பிறகு உள்ளத்தில் உடைந்து மசியும் நினைவுக் கோயில்களுக்கும் ஆதாரபீடமாக அமைந்திருப்பதாகும், நாகரிகத்தை அமைக்கிறதற்குக் கிராமம் என்ன செய்கிறது?

கிராம வாழ்க்கை என்பது கிராமியமான ஒரு காரியம் அல்ல. ஏதோ வன போஜனத்துக்காகப் போகிறவர்கள்,

வழக்கமாக உட்காரும் ஸோபாவை இழப்பதால், தமக்குக் கிடைப்பதாகக் கருதிக் கொள்ளும் சுகானுபவம் போன்றதல்ல. ''கிராமத்துககுப் போங்கள்'' என்று உருக்கமான பிரசங்கங்கள் பட்டனத்துக்காராகளை நெட்டி நெட்டித் தள்ளுகின்றன. ''சார், நான் ரிட்டயரானதும் ஏதாவது சுகமா ஒரு கிராமத்திலே போய்க் கழிக்கலாம்னு ப்ளான் போட்டிருக்கேன். நீங்க என்ன நினைக்கிறியள்?'' என்கிறார் ஒருவர். இருபத்தியைந்து வருஷ உழைப்பால் உடலைக் கெடுத்துக் கொண்டதுடன், நேர்ச்சைக் கடனுக்காகக் கை களைக் கும்பிட்டபடி உயரத் தூக்கி சூம்ப வைத்துக் கொண்ட பைராகி மாதிரிக் காலை பத்து மணி முதல் 5 மணி வரை மூளையை ஒரே திசையில் விரட்டி விரட்டி இற்றுப்போக வைத்துக்கொண்ட ஒருவருக்குத் தாம் எரிந்து சாம்பலாக வேண்டிய சுடுகாட்டுக்கும், தம்முடைய மிச்ச வாழ்வுக்கும் இடையில் கிடக்கும் ரேழியாக கிராமம் தென்படுவதில் அதிசயமில்லை. அது அவர் பண்ணின புண்ணியம். டில்லி சர்க்கார் காரியலாயத்தில் ஒரு மகன், என்ஜினியரின் கம்பெனியில் ஒரு மகன், ஒரு அட்வகேட் ஜெனரலின் மகனுக்கு சகதர்மிணியாக ஒரு மகள். காலேஜுக்கு ஐம்பது மைல் வேகத்தில் மோட்டார் சைக்கிளில் போவதுதான் மோட்ச சாம்ராஜ்யம் என்று நினைக்கும் சுந்தா, இவ்வாறு ஒரு படியாகத் தமது வாரிஸ் வர்க்கத்தைப் பங்கீடு செய்துவிட்டு, தம்முடைய அஜீர்ணம் 1936-வருஷ மோட்டார்கார், தொய்ந்து போன காதில் வைத்து ஊசலாடும் வைரக்கம்மல் மனைவி, விட்டமின் விசாரம் திருக்குறள் உபாசனை ஆகியவற்றுடன் இவர் போய் ஒரு கிராமத்தில் குடியேறுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். பத்திரிகையும், பழக்கூடையும், பட்டணத்திலிருந்து வந்து கொண்டே இருக்கும். ஆறு நிறையத் தண்ணீர் போனாலும் வென்னீரில் தான் குளிப்பார். உடம்புக்குள் உயிர் பெய்வதுபோல தென்றல் இழைந்

தாலும் பிளானல் சட்டை போட்டுக் கொண்டு, வெள்ளிப் பூண் தடியோடு உலாவ, அதாவது வாக்கிங் போவார். எதிரே உட்கார்ந்திருக்கும் வெட்டியான் கைதட்டி வாய் புதைந்து, ''எசமான் புத்தி'' என்று சொல்லிக் கொண்டு எழுந்திருப்பான். அவ்வளவுதான். அவர் கிராமத்தில் அனுபவிக்கப் போகிறதும், அனுபவிக்குறதும். ராவணன், மண்ணோடு பெயர்த்துச் சீதையைத் தூக்கிக் கொண்டு போய், அசோக வனத்தில் சிறை வைத்தானம். அது நிஜமோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் சொன்னேனே, இந்த மாஜி உத்யோக வர்க்கம், அது, பட்டணத்தில் கொஞ்சம் பெயர்த்துக்கொண்டு போய், கிராமத்தில் போட்டு, அதன்மேல் உட்கார்ந்து கொண்டு தான் கிராமத்தைப் பார்க்கிறார்கள், கிராமத்தை அனுபவிக் கிறார்கள். இவர்களுக்குக் கிராமம் தென்படாது; அனுபவத்துக்கும் கிட்டாது. இவர்களது இந்த ராவண கைங்கரியத்துக்குள் அகப்படாத கிராமம் என்பது என்ன என்று கேட்கிறீர்களா? அப்படிக் கேளுங்கள்.

நீங்கள் நெல்லுக் காய்ச்சி மரம் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? உணவு வகையில் ஒன்றைக் கொடுக்கும் புல் வகையில் ஒன்றல்லவா என்று தாவர நிபுணர் உறுமு கிறார். ஆமாம். அப்படியும் சொல்லுவார்கள். நெல்லுக் காய்ச்சி மரம் என்றால், பட்டணத்துக்காரனைப்பற்றிக் கிராமவாசி செய்யும் கிண்டல் என்று அர்த்தம். உங்கள் மோட்டார் காரை அவன் உன்னிப்பாகப் பார்த்தால், நீர் அவனை உதாசீனமாகப் பார்க்கிறீர் அல்லவா? அதற்கு அவனுடைய பதில் அது.

கிராமத்தில் சினிமா இருக்காது, ஷேவிங் ஸோப் கிடைக் காது; சிகரெட் அகப்படாது; ஆனால் சுகம் உண்டு; அதாவது வாழத் தெரிந்தவர்களுக்கு.

எனக்குத் தெரிந்த கிராமத்தைக் கொஞ்சம் வர்ணிக்கிறேன். அதற்கு ஒரே ஒரு தெருதான் உண்டு. அக்கிரஹாரம் இல்லை. தெருவின் ஒரு கோடியில் கிராம முனிஸீபும் மறுகோடியில் கணக்கப்பிள்ளையும் இருக்கிறார்கள். இருவர் கோபத்துக்கும் ஆளாகாமல் பிழைத்துக் கொள்ளத் தெரிந்த தலையாரி, இந்தத் தெருவுக்கு கூப்பிடு தூரத்தில் உள்ள மறவர் தெருவில் இருக்கிறான். இன்னும் பத்துப் பதினைந்து வீடுகள், இந்த வீர மறக் குலத்துக்கு நிழல் தருகிறது. இவர்கள் வாளையும் வேல்கம்பையும் விட்டெறிந்து ரொம்ப காலமாச்சு "சாதியிலே மறவனாக்கும்" என்று அதட்டிக்கொண்டு, ஏர் பிடித்து உழுகிறார்கள். இவர்களுக்கும் எட்டாத் தொலைவில் பள்ளர்கள் சேரி. நாம் நினைவை விட்டு விரட்ட முயலும் கெட்ட நினைப்பைப்போல, அவர்கள் அங்கு அக்ஞாதவாசம் பண்ணுகிறார்கள். ஊருக்கு ஒரு மைதானம் உண்டு. சாதாரணமாக மாடுபடுத்திருக்கும் ஊர்த் தேவதை திருவிழாவில், வானத்தையே கூரையாகக் கொண்ட கலை மண்டபமாகும். சாணி தட்டவும், நெல் உலர்த்தவும் ஏற்றவையானது. இந்த ஊரிலே சைவ சாப்பாட்டைச் சமயா சமயத்தில் நிவேதனமாகவும் பொதுவாக அந்தக் கிராமத்தான் வணக்கத்தையும் பார்த்துப் பசியாறும் பிள்ளையாருடைய கோவில் உண்டு.

ஊர் எல்லையிலே ஊரின் காவல் தேவதை பேராய்ச்சி கோவில் உண்டு. கோவில்—கோவில் என்றதும் பிரமாதமான கற்கனவுகள் என்று நினைத்து விடவேண்டாம், கிராம முனிசிபு பிள்ளையவர்கள் வீட்டைப்போல அடக்கமானதுதான்; அவரது மன இருட்டைப்போல இங்கே கர்ப்பக்கிரகமும் இருட்டிக் கிடக்கும். கலசம் மட்டும் பேராய்ச்சி கோவிலை, கோவிலென்று வேறுபடுத்திக் காட்டும், மற்றபடி ஒன்றுதான். இந்த தேவதை அசைவம்.

வருஷத்துக்கு ஒரு தடவையாவது ரத்தம் காணவேணும். இல்லாவிட்டால், குடியே முழுகிப் போச்சு.

பட்டப் பகலானாலும் கர்ப்பக்கிரகத்தில் கும்மிருட்டு. கூர்மையாகக் கவனித்தால், வெள்ளையும் அதற்கப்புறம் அதன் மையத்தில் ஒரு கறுப்பு. இன்னும் பார்த்தால், விரைத்துப்பார்க்கும் கண்கள், பிறகு இருட்டு திரண்டு திரண்டு பத்தாயிரம் கைகளில் வேலும் சூலமும் தாங்கி எல்லையையே இமை கொட்டாமல் காத்து நிற்பது தெரிய வரும். பட்டப் பகலானாலும், அதைக் கண்டு பயப்படு வோரைக் கண்டால், நாம் அவர்களைக் கேலி செய்யக் கூடாது. நாகரிகம் பட்டுப்போன பிறகு மனிதவர்க்கம், ஏதோ எப்போதோ ஒரு காலத்தில். எது பயத்துக்கு வித்தாக இருந்ததோ, அதைப் பயம் போக்க மருந்தாக வசக்கிக்கொள்ள முற்பட்ட ஒரு சாதனத்தைக் கண்டு மிரளாமலிருப்பது பிசகு. இருட்டிலே, காட்டிலே மின்னுகிற புலிக் கண்ணைப் பார்த்து அதில் அன்புபெய்து வைத்துக் கற்பனை பண்ணின காரியம் இந்தப் பேராய்ச்சி. இந்தத் தாயின் மகத்துவத்தைப் பற்றிக் கிராமத்துப் புலவர் பாடுவதைக் கேட்டால், ஆஸ்பத்திரி எதற்கு, மலேரியா மகமாரி எதிர்ப்பு மருந்துவகை ஊசிகுத்து முறை எல்லாம் எதற்கு என்றெல்லாம் படும். அந்த வூரில் நிஜமான ஆட்சி பேராய்ச்சியின் ஆட்சிதான். அந்த ஊர்க் காரர்கள் பயப்படுகிறதுபோல, அவ்வளவு கொடுமைக்காரி அல்ல அவள், மகா கண்டிப்புக்காரி.

அந்த வூர்க்காரர்கள் மனப்பண்பாடு நீங்கள் எதிர் பார்க்கிற மாதிரி அவ்வளவு நாஸுக்காக இருக்காது. மிஞ்சி மிஞ்சிப் போனாலும் அவர்கள் கற்பனை எல்லாம்.

**சோளப் பொறி மத்தியிலே**
**சுட்டு வச்ச தோசையைப் போல்**

**சுட்டு வச்ச தோசையைப்போல்**
**தோணுமிந்தச் சோதி நிலா**

என்றுதான் அவர்கள் பாடுவார்கள்.

**அருந்த அமரர் கலக்கிய நாள் அமுதம்**
**நிறைந்த பாற்கலசம்**
**இருந்திடை வந்து எழுந்ததென**
**எழுந்ததாழி வெண்திங்கள்**

என்று ஒரு சந்திரோதயத்தில் இதிகாச நாடகத்தைப் பார்க்கும் மனப்பண்பு அவர்களிடம் தென்படாது, நெஞ்சிலும் தோளிலும் உரம் உண்டு, உள்ளத்திலே பரிவு உண்டு.

**மேழி பிடிக்கும்கை,**
**வேல் வேந்தர் நோக்கும்கை**
**ஆழி பிடித்தே அருளும்கை**

என்று அவ்வைக் கிழவி சொன்னதுபோல, ரொம்பவும் பின்னனிப் பிணைந்த கைத்தொழில் நாகரிகமாக இருந்தாலும், சமுதாயத்தின் ஸ்திரத் தன்மைக்கு அவசியமும் ஆதாரமுமானது விவசாயம்; பலர் எண்ணுகிறதுபோல மட்டம் அல்ல

தமிழ் இலக்கியத்தில் ஒரு கிழவி திரிந்து வருகிறாள். அவளுக்குப் பட்டணத்து நாகரிகத்தின் நெடி பிடிக்காது. எடுத்தெறிந்து பேசி உதறியடித்து விடுவாள் கிராமவாசிகள் உள்ளப் பண்பைக் காண்பதற்கு செய்து வைத்ததுபோல இருக்கிறது அவளுடைய பாட்டு.

**அண்டி நெருக்குண்டேன்,**
**தள்ளுண்டேன் நீள் பசியினாலே**
**சுருக்குண்டேன் சோறுண்டிலேன்**

என்று சுருக்கமாகச் சொல்லுகிறாள். இது எங்கே என்று கேட்டால் அதைவிட வினோதமாக இருக்கும்.

**''வண் தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்தில்**
**உண்டபெருக்கம் உரைக்கக்கேள்''**

என்று பொக்கை வாயைக் காட்டிக் கேலி செய்கிறாள் கிழவி. அவள் பார்த்தது எல்லாம், ''நான்மாடக்கூடல் வலிது'' என்பதுதான்.

**''வெய்தாய் நருவிதாய் வேண்டளவும் தின்பதாய்**
**நெய்தான் அளாவிநிறம்–பசந்து–பொய்யாய்**
**அடகென்று சொல்லி அமுதத்தை ஈந்தாள்**
**கடகம் செறிந்த கையாள்''**

என்று பெண்ணின் வளைபோட்ட கை இலக்கியத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது- அவள்கண்டகைகள்தான் அது.

இன்னொருவன் அவன் பேர் பூதன், பெயர்தான் ஆளை மிரட்டுகிறமாதி.

**வரகரிசிச் சோறுப் வழுதுணங்காய் வாட்டும்**
**முறமுறெனவே புளித்த மோரும்,**

அவ்வைக் கிழவியின் பசியை ஆற்றுகிறது.

கிராமங்கள், இந்த மாதிரி திசைமாறித் திரிவோருக்கு மட்டும் அன்ன சத்திரமல்ல; நாகரிகத்தின் முதல்படி அன்ன விசாரம். பசிப்பகையை விரட்டும் முதல் மதிள் கிராமங்கள். சமுதாயத்தின் சித்தம் அல்லது விவேகம் மாதிரி நகரங்கள் இருக்கலாம்; இருக்கவேண்டும்; ஆனால் அவற்றின் உயிர்ப் புக்கும் தெம்புக்கும் தெளிவுக்கும் அவசியமான ரத்தத்தைத் தருபவை கிராமங்களேயாகும். கிராமம் தூர்ந்து விட்டால், நகரம் பாழ். இது பொது நியதி, மிகவும் பின்னிப்போன

யந்திர நாகரிகம் வந்துவிட்டாலும், அந்த அடிப்படைக்கு வாய்ப்பான கிராமங்கள் இருந்துதான் தீரும். எல்லாம் பட்டணங்களாகிவிட முடியாது. பட்டணங்கள் என்றால், சிந்தனையின் பயனால் இயற்கையின் கை பார்க்காமல் வாழ மனிதன் வகுத்துக்கொள்ளும் ஏற்பாடு என்பதுதான் பொருள்.

**கன்னலென்ற சிறு குருவி ககனமழைக் காற்றாமல்**
**மின்னலெனும் பூழுவெடுத்து விளக்கேற்றும் கார்காலம்**

என்று பட்டணத்துக் கவிராயர் சமத்காரமாகப் பாடிவிடுவார்கள்; ஆனால், உடை முள்ளையும் இண்டஞ் செடியையும், சுள்ளென்று அடிக்கும் வெயிலையும், ஆற்றுவெள்ளத்தையும் கொடுங் காற்றையும் சகாக்களாகப் பாவித்து, அவற்றுடன் சேர்ந்து அவற்றையும் வசக்கி வயலில் வளத்தைப் பார்க்கிறவன் வாழுமிடந்தான் கிராமம்.

**''வரப்பு உயர நீருயரும்**
**நீருயர நெல்லுயரும்''**

இதுதான் சமுதாய வளர்ச்சியின் ஆதார சக்தி. பட்டணத்தில் பிழைக்கலாம். வாழமுடியாது. தனிமையாக நடமாடப் பட்டணம் வாக்கானது. ஆனால் கிராமத்தில் ஒதுங்கி வாழ உங்களை விடமாட்டார்கள். யாராவது புதிதாக வந்துவிட்டால் போதும். ''யாரைத்தேடுதிய? ஓ! அவுகளா; ஏலே காத்தான், நாவன்னா வீட்டுக்குக் கூட்டிக் விட்டுப் போ'' என்று வீட்டு வரைக்கும் கொண்டு போய் கிட்டுத் திரும்புவார்கள். மறுநாள் விடியற்காலம் பார்த்து விட்டால் நீங்கள் ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் உங்களை வாயைத் திறந்து நாலு வார்த்தையாவது பேச வைத்து விடுவார்கள். அவர்களுக்கு நேரம், அவகாசம் பார்க்காமல் வந்து

உட்கார்ந்து பேசுவதற்குத் தெரியும். கிராமத்துக்காரன் ஒவ்வொருவனும், அந்த ஊர் சரித்திர ஆசிரியன். அந்த ஊர்ப் பிள்ளையார் பிரதிஷ்டை பண்ணினது, ஆலடி வயலில் வெள்ளம் மண்ணடித்துவிட்டது. மூக்கன் மதகைத் திறக்காது போயிருந்தால், கரையே உடைத்துக் கொண்டு ஊர் அழிந்து போயிருக்கக்கூடிய ஆபத்து, நல்ல பாம்பை மண் வெட்டியினால் ஒரே வெட்டில் இரண்டு துண்டாக்கிப் போட்ட செம்பிலி, நடுச்சாமத்தில் பேராய்ச்சி ஊர் பார்த்து வருவதைப் பார்த்து ரத்தம் கக்கிச் செத்துப்போன தொப்ளான் ஆகிய எல்லோரையும் நீங்கள் வெகு சீக்கிரத்தில் பரிச்சியம் செய்துகொள்ள முடியும். அச்சடித்த புஸ்தகங்களைப்போல இவர்களுடைய சரித்திரங்களும் கொஞ்சம் அமிதமான புளுகுகள் நிறைந்திருக்கும். சமூக நலத்துக்காக அங்கீகரிக்கப்பட வேண்டிய சில பொய்களைச் சரித்திர சித்தாந்தம் அமைக்கிற மாதிரி இந்தக் கிராமத்து மனிதக் கும்பலும் தன்னுடைய வம்சபரம்பரை இற்றுப் போகாமல் இருக்கக் கட்டிவைக்கும் ஞாபகக் கோவைதான் இவையும். சிறிது மட்டரகமான பொய்களாக இருந்தாலும் சரித்திரமென்றே மதிப்போம்.

**''ஆற்றங்கரை மரமும், அரசவையில்**
**வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே''**

என்று பயப்படுகிறான் கிராமத்துக்காரன். கிராமத்துக்காரனுக்குத் தன்னிச்சையாக நடமாடித் திரிவதற்கு இடவசதி வேண்டும். அவன் சிந்தனை சொற்பமாக இருந்தாலும், அது பறந்து திரிந்துவர விசாலமான இடம் வேண்டும் என்று ஆசைப்படுகிறான். பட்டணத்திலே தென்படும், குடுப்பிட்ட ஒழுங்கு முறை, ஜன நெருக்கத்தினால் எடுத்துக் கூட்டி அமைத்துக் கொணட ஏற்பாடுகள் எல்லாம் அவனுக்குக் கட்டோடு பிடிக்காது. அவன் பசி வந்தபோது தான் சாப்பிட ஆசைப்படுவான்; ஆனால் உங்கள் ஹோட்

டல்களில் பத்து மணிக்குப் போனால் மோரும் சாதமும் கிடைத்தால் உங்கள் அதிர்ஷ்டம். பட்டணத்துக்கு வந்தால், முங்கி முழுகிக் குளிக்க, அவனுக்குக் குழாய்த் தண்ணீர் போதாது. இரண்டாவது நாள், ''அய்யா நான் போய்விட்டு வருகிறேன்'' என்று மூட்டை கட்டி விடுவான். நீங்கள் அங்கே போன இரண்டாவது நாளே ''ரொம்ப டல்லா இருக்கு சார்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டு விடவில்லையா?

# ரேடியோ

நான் இன்று ஏதோ பிரமாதமாக ரேடியோ நுட்பங்களைப் பற்றிப் பக்கத்து வீட்டுக்காரர் என்ன நினைக்கிறார் என்பதை விஸ்தாரமாகவும், நுணுக்கமாகவும் பேசப்போகிறேன் என்று நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக இருந்தால், ஏமாந்து போவதற்கு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள உரிமையை உபயோகித்துக் கொள்வதற்கு உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் அளிக்கப்போகிறேன். ரேடியோசெட் வைத்துக் கொண்டிருப்பவர்களை அவர்களுடைய பக்கத்து வீட்டுக்காரர்கள் என்னவென்று நினைக்கிறார்கள்? இதைத்தான் உங்களிடம் வம்பளந்து கொண்டிருக்கப் போகிறேன்; வம்பளப்பது பேசிக் கொண்டிருப்பவருக்கு சுவாரஸ்யமான விஷயமல்லவா?

தற்காலத்தை அரசியல் யுகம் என்பார்கள். எல்லா விஷயங்களையும் உரிமை, சலுகை, வோட்டு மூலம் நிர்ணயிப்பதுதான் ஒப்புக்கொள்ளப்பட்ட சம்பிரதாயம். இந்த மூன்றையும் வைத்துக்கொண்டு ரேடியோ வைத்திருப்பவர்களை நான் அளக்கப்போவதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். அப்படியும் செய்யப்போவதில்லை. ரேடியோ செட் வைத்திருப்பவர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் தான் என் குறி; அவரைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கப்போகின்றேன்.

பழைய காலத்தில் ஔவைக் கிழவி, உலகத்தை இரண்டு ஜாதியாகப் பிரித்தார்; பிச்சை போடுகிறவர்கள்; பிச்சை போடாதவர்கள் என்று. அவள் சௌகரியமாக மூன்றாவது ஜாதியை மறந்துவிட்டாள். அதாவது பிச்சை வாங்குகிறவர்கள். அவ்வையாரின் ஜாப்தா மாதிரி ரேடியோ செட்டை வைத்துக்கொண்டும் லோகத்தை மூன்று ஜாதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று ரேடியோ கேட்க சொந்தமாகச் சௌகரியம் படைத்தவர்கள்; இரண்டாவது அவ்வாறு கேட்காதிருக்க சௌகரியம் படைத்தவர்கள்; மூன்றாவதாகக் கேட்காதிருக்கச் சௌகரியம் படைக்காதவர்கள் தான்.

முதல்வகுப்பு இஷ்டப்பட்ட நேரத்தில் செட்டைத் திருப்பி வைத்துக்கொண்டு கேட்டுக்கொண்டிருப்பார்கள். இரண்டாவது வர்க்கம் கேட்கப் பிரியமில்லா விட்டால் எழுந்து போய்விடுவார்கள். அவ்வாறு அவர்களால் தப்பித்துக்கொள்ள முடியும். இந்த மூன்றாவது வர்க்கம் இருக்கிறதே அதனால் கேட்காதிருக்க முடியமீவ முடியாது. அதற்குத்தான் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்று பெயர். இவர்களுக்குப் பூர்வீகத்தில் பிரிட்டிஷ் காமன்ஸ் சபைக்கு இருந்த உரிமைதான்; அதாவது முறையிட்டுக் கொள்ளும் உரிமை செட் வைத்திருப்பவரிடம் என்றா நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை. ''படமுடியாதினித் துயரம் பட்டதெல்லாம் போதும்......'' என்று மனித வர்க்சம் தோன்று தொட்டு இதுவரை முறையிட்டுக் கொண்டு வந்தவரிடத்திலோ அல்லது இப்பொழுது என் குரலை ஏற்றி வரும் ஈதர் என்ற ஆகாசத்தினிடத்திலோதான் முறையிட்டுக் கொள்ள வேண்டும்.

''இந்த ரகசியங்களை எல்லாம் எப்படிக் கண்டு பிடித்தீர்?'' என்று துப்பறிவோனிடம் பதினான்காம் அத்தியாயத்தில் கதாநாயகன் கேட்கிற மாதிரி நீங்கள் என்னைக் கேட்க

விரும்புகிறீர்கள்; உங்கள் ஆசையையும் திருப்தி செய்து விடுகிறேன்.

எனக்கு ஒரு காலத்தில் ரேடியோ செட் வைத்திருக்கிறவர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரனாக இருக்க வேண்டும் என்பதில் அபார ஆசையிருந்தது. அந்த ஆசையை அனுபவித்ததின் பயன் இது. நான் இப்பொழுது மாஜி-பக்கத்து வீட்டுக்காரன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என்னை ரேடியோ செட்காரர்கள் ஒன்றும் செய்துவிட முடியாது.

எனது பூர்வா சிரமத்தை அதாவது ரேடியோ செட் வைத்திருந்தவரின் பக்கத்து வீட்டுக்காரராக இருந்த அந்தக் காலத்துக் கதையைக் கேளுங்கள். அது எனது சுய சரித்திரத்தின் கிருஷ்ணபட்சம்.

ஸ்ரீமான் பிள்ளை ரேடியோ செட் வாங்கினார்; செட் வந்த தினத்திலேயே அதனுடன் சண்டமாருதமும் வந்தது. திடீரென்று துத்தநாகத் தகட்டில் ஆணி வைத்துக் கிழிப்பதுடன் மரம் அறுக்கும் சப்தமும் கலந்து உறவாடினால் என்ன கேட்குமோ அது கேட்டது. அதைச் சப்தம் என்று இப்பொழுது சொல்வதற்குக்கூட பயமாக இருக்கிறது. சப்தம் என்ற வார்த்தையின் அந்தஸ்தை மீறியது அது. அதெல்லாம் ஒடுங்கும்வரை அவர் செட்டைத் திருகிக் கொண்டே இருந்தார். யுகம் கழித்துப் பாட்டு மாதிரி ஒன்று கேட்டது. "பாட்டுதான் சார்" என்று அவர் திட சித்தத்துடன் நிர்த்தாரணம் செய்தார். நான் நம்பினேன். கண் இமைக்கு முன் மறுபடியும் பூத கர்ஜனை கேட்க ஆரம்பித்துவிட்டது. இப்பொழுது விறகு வெட்டும் சப்தம், வீடு இடிந்து விழும் சப்தம் எல்லாம் கூடப் புரியும்படியாகக் கேட்க ஆரம்பித்துவிட்டன. கவனித்துப் பார்த்தால் அவரது விரல்கள் மறுபடியும் அப்பொத்தான்களைத் திருகிக்கொண்டிருந்தன. ஏன்

என்று கேட்டேன். வேறு ஒரு ஸ்டேஷனைக் கேட்பதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதாகத் தெளிவு படுத்தினார். கல்கத்தா சங்கீதம் ஐந்து நிமிஷத்தில் பம்பாய்ககுத் தாவியது; அப்புறம் இரண்டே நிமிஷம் ஒரே பாய்ச்சலில் டில்லி. டில்லியா என்று கேட்கு முன் கொழும்பு, பீஷாவர், மைசூர்... இவ்வளவுதானே என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். அவர் கையில் ரேடியோ புரோகிராம் புஸ்தகம் ஒன்றிருந்தது. ஒரு மணி நேரத்திற்கு அவர் தமது 38-நெ வீட்டுக்குள் இருந்து கொண்டே ஓர் அகில அந்திய சுற்றுப் பிரயாணம் செய்து விட்டார். உண்மையில் அவர் ஒரு அடிகூடக் காலை எட்டி எடுத்து வைக்கவில்லை. ரேடியோ க்ஷேத்திரங்கள் யாவும் இடிமுழக்கத்துடன் கர்ஜனை செயதுகொண்டு அவரை நோக்கிப் பாய்ந்து ஓடி வந்தன. "சார்! நேரமாயிட்டுது ஆபீஸுக்குப் போகணும்" என்று சாதுரிய வசனத்தைப் பிரயோகித்துத் தப்பினேன். அதாவது தப்பினதாக நினைத்தேன். எங்கெங்கோ சுற்றி வந்தேன். பிரளய முழக்கம் கேட்கவில்லை. அவ்வளவுதான் என்று நினைத்து விடாதீர்கள்; ஏமாந்து போவீர்கள்.

சாதாரணமாக எல்லோரும் பீச்சான்கரைக்குப் போகிற நேரத்தில்தான், நான் ஒரு டோஸ் வெற்றிலை போட்டுக் கொண்ட தெம்பில் குடும்பத்து நிதி மந்திரி சமர்ப்பிக்கும் பட்ஜெட் திட்டத்தைப் பரிசீலனை செய்வேன். சப்லிமெண்டரி மான்யம் கோரப்படும் என்று தெரிந்திருந்தால் கத்தரிக்காய் இனத்தில் ஏற்பட்டிருக்கும் அநேக செலவின் மீது ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து தீவிரமாகப் போராடுவேன். எங்கள் குடும்ப சர்க்கார் ஓர் அபூர்வமான இரட்டை ஆட்சி ஆதிபத்திய உரிமை எந்த இலாகாவில் இருக்கிறது என்று நிர்ணயிப்பது சாத்தியமற்ற காரியம். ஆகையால்

சர்க்கார் பெஞ்சுகளுக்குள்ளாகவே வாதப் பிரதி வாதங்கள் நடைபெறும். பொக்கிஷ அதிகாரி ஒருவர் செலவு இனத்தைக் கவனிக்கும் நிதி மந்திரி ஒருவர். பொக்கிஷ அதிகாரிகளுக்கு ஒரு ஓட்டு. நிதி மந்திரிக்கு இரண்டு வோட்டு. இரண்டாவது வோட்டு. இரண்டாவது வோட்டுக்குக் கண்ணீர் என்று பெயர். இதனால் தான் வெற்றியாருக்கு என்பதைநான் உங்களுக்கு வியாக்கியானம் செய்யவில்லை இந்த அபூர்வ விலகாரங்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்கள்என்றால், இவ்வுலகவாழ்வில் இரண்றி வருஷ அனுபவம் உள்ளவர்கள் என்று அதுவரை நினைத்திருந்தேன். அவர்கள் ஆர்ப்பாட்டங்கள் யாவும் வார்த்தைக்கு மீறியது; வார்த்தைக்குள் அடைபடாதது; மனித வர்க்கத்தின் சிந்தனைக் கொழுந்து போல.

திடீர் திடீரென்று பிரளய எச்சரிக்கைகள் போல முழக்கங்கள் பக்கத்து வீட்டிலிருந்து வருவதைக் கேட்ட பிற்பாடுதான், இந்த லோகத்தில் 'இல்லாதன இல்லை இளங்குமரா' என்ற கம்பன் வாக்கு எனக்கு அர்த்தமாயிற்று.

பக்கத்து வீட்டுக்காரர்கள் இருக்கிறார்களே அவர்கள் மிகுந்த பொறுமைசாலிகள்; அவர்களுக்குக் கோவில் கட்டி வைக்க வேண்டும்; நல்ல புரோகிறாம் என்றால் நேராக விட்டுக்குள் வந்து கேட்கத்தயங்குவதில்லை. அப்படியல்லவென்றால் சகித்துக்கொண்டிருப்பதிலும் பொறுமையை இழப்பதில்லை. 'நண்பனைச் சொல்; அவன் குணத்தைத் தெரிவிக்கிறேன்' என்பது ஒரு இங்கிலீஷ் பழமொழி. அதைப்போல ஒருவன் பொறுமைசாலியா அல்லவா என்பதை நிர்ணயிக்க அவன் எப்பொழுதாவது ரேடியோ செட் இருந்த வீட்டுக்குப் பக்கத்துவீட்டில் வசித்தானா என்பதைக் கண்டுபிடித்தால் போதும். ''துள்ளித் திரிகின்ற காலத்துத் துடுக்கு அடக்க, பள்ளிக்குவைக்காமல் பக்கத்து

வீட்டில் ரேடியோ வைத்திடுமே!'' என்று யாப்பு இலக்கணத்தையும் உடைத்துக் கொண்டு புதுக்கவி பாடுகிறான். கொண்டு வேறு என்ன வேண்டும்? ரேடியோ வேண்டும்.

வைராக்கியம் வந்தால் விரக்தி ஏற்படுவது நிச்சயம். இப்பொழுது இன்னொரு டிவிஷனில் வேறு ஒரு 38-ம் நம்பர் வீட்டில் குடியிருக்கிறேன். எனக்கு போதிமரமாக இருந்த அந்த ரேடியோ, ரேடியோவாகவே இருக்கட்டுமாக!

பொதுவாக செட் வாங்குகிறவர்கள் வாங்குவதைத் தேர்த் திருவிழாப் பார்க்கப் போவதுபோல் என்று நினைத்துக் கொள்கிறார்கள். 24 மணி நேரமும் (நான் ஸ்டாப்) ரேடியோ இருந்தால் நிசப்தத்திற்கு அல்லவா தவங்கிடக்க வேண்டும். குழலிருப்பதை எல்லாம் கொடுத்த காசுக்கு ஊதித் தள்ளி விடு என்பது மாதிரி ஓயாது ஒழியாது செட்டை நோண்டிக்கொண்டிருப்பது புதுமாதிரி விளையாட்டாக இருக்கலாம். ஆனால் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு சித்ரவதை பொதுவாக அவர்களும் ஒரு ஜதை காதுள்ளவர்கள். படிக்காமல் தெருச்சுற்றிவிட்டுவிந்து மகனைக்கோபித்துக் கொள்ளும் பொழுது ''திருவே என் செல்வமே'' என்ற பக்கப்பாட்டு இருந்தால் சாத்யமா? அல்லது காலர் பொத்தானைப் பெட்டியடியில் தேடிக் கொண்டிருக்கும் பொழுது மாட்டு உடம்பில் உண்ணியைப் போக்குவது எப்படி என்பதைப் புஷ்டு பாஷையில் கேட்டு ரசித்துக்கொண்டிருக்க முடியுமா? பேயும் உறங்கும் நள்ளிரவு, என்று சொல்லுகிறார்களே, அதெல்லாம் புதிதாகச் செட் வாங்கியிருப்பவர்கள் நம்பாத கதைகள். பேய்களும் உறங்கும் தாலாட்டுகளை, மனிதர்கள்கேட்க விரும்புவதை அல்ல, ரேடியோ செட்டுகளிலிருந்து எழுப்புவதில் இவர்கள் நிபுணர்கள். நான் புல்லாங்குழலை உபயோகித்து வருகிற மாதிரி அவர்கள் செட்டை உபயோகிக்கிறார்களோ என்ற சந்தேகங்கூடத் தோன்றியதுண்டு. பக்கத்து வீட்டுக்

காரர்கள் போடும் கூச்சலின் மீதுள்ள அதிருப்தியைக்காட்ட நான் புல்லாங்குழலை உபயோகிக்கிறேன். இந்தப் புல்லாங் குழல் என்ற விசேஷாதிகாரத்தை செட் வைத்திருப்பவர் கள் மீது பிரயோகிக்க முடியாது. அவர்களது அசுர சக்தி யின் முன் இந்த நாணல் தட்டை என்ன செய்துவிட முடியும்? அதனால் தான் இப்பொழுது வேறு ஒரு 8-ம் நம்பர் வீட்டு வாசம்.

வைராக்கியம் ஏற்பட்ட பின்பு பூர்வாசிரமத்தின் மீது ஆசை விழக்கூடாது என்பார்கள். எதிர்பாராத விதமாக ஆசை விழுந்தது. நான் பழைய வீட்டு வழியாகச் சென் றேன். ஆனால். அங்கு மௌனம், எல்லையற்ற மௌனம்.

காரணம் அவர் செட்டை விற்றுவிட்டார் என்றா நினைக்கிறீர்? அதோ அவர் வீட்டு மாடியின்மேல் கயிற்றுக் கொடி மாதிரி ஏரியல் கட்டப்பட்டிருக்கிறதே, இப்பொழுது அவர் அந்த செட் இருந்த பக்கத்தில் போவது கூடக் கிடை யாதாம். முன்னிருந்த ரேடியோ பக்தி அவரிடை காண வில்லை. காரணம் என்னவாக இருக்கலாம் என்று நினைக் கிறீர்கள்? அவருக்கு ரேடியோமீது இருந்த பிரியம் எல்லாம், குழந்தைக்குப் புதுப் பொம்மைமீது இருந்த மோகம் மாதிரிதான். ரேடியோ புஸ்தகம் மாதிரிஒரே மூச் சில் கண்டபடி புரட்டிக் கொண்டிருப்பதினால் ஏற் படும். நான் ரேடியோவின் சித்ரவதையால் விரக்தியடைந் தேன். அவர் அதை ஒரே மூச்சில் ரசித்துவிட முயற்சித்ததில் சோர்வடைந்து விரக்தியடைந்து விட்டார். தானும் விரக்தி யடைந்து பக்கத்து வீட்டுக்காரனையும் சித்திரவதை செய் வதற்காகவா பணத்தைக் கொடுத்து ரோடியோ செட் வாங்க வேண்டும்? அதைவிடச் செலவில்லாமல் பக்கத்து வீட்டுக்காரனிடம் போய் உட்கார்ந்துகொண்டு பெருக்கல் வாய்ப்பாட்டைப் படித்துக் காட்டிக் கொண்டிருக்கலாமே! சுருக்கமான செலவில் அதே பயனை அடைந்து விடலாமே!

# முடிவில் எதற்கு வெற்றி?

தர்மம் அதர்மம் என்று இரண்டு கட்சிகள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. முடிவில் தர்மத்துக்கு வெற்றி கொடுக்கவேண்டியது கலைத் தொழிலில் ஈடுபடுகிறவனுடைய கடமை என்பது இதனடியாகப் பிறந்த ஒரு நியதி. உண்மையில் தர்மத்துக்கு வெற்றியைச்சம்பாதித்துக் கொடுக்கும் ஒரு உபாசகனுடைய கிரந்தத்தைப் படித்து முடிந்ததும்,

''வானிலே தெய்வமுண்டு—
வையம் தழைப்பதுண்மை''

எனப் பாடித் திரியும் அந்தச் சிறுமியின் அனாவசியமான நிம்மதியுடன் தான் கண்களை மூடிக் கொட்டாவி விட்டு விரல்களைச் சுடக்கு முறித்து, மனமறிந்து பொய் விவரித்துப் பிசகான காரியத்துக்குச் சப்பை கட்ட முயலுகிறோம். தர்மம் இலக்கியத்தில் மட்டும் வெற்றிபெற்றுக கொண்டிருப்பதால் வாழ்வு அப்படியேயாகிவிடுமோ? ராமராஜ்யத்தை கனவுகண்டவனும் 18 நாள் போரிடை சித்தாந்த சிகரத்தை சிருஷ்டித்தவனும் இந்த மாதிரி மனம் ஒப்பப் பொய்யைத்தான் சொல்கிறார்களா? சற்று கவன

மாகப் பார்த்தால், அவர்கள் கட்டின கனவுகள் எல்லாம் நம் விருப்பத்துக் கொத்தடிமைகள் அல்ல. ராவணனைக் கொன்ற வீர புருஷனுடைய ராமராஜ்யத்தில்தான், சீதைக்கு அசோகவனங்கூடக் கிடைக்காமல் போய்விடு கிறது! சிருஷ்டியின் சகல அம்சங்களையும் தன்னுள் காட்டி சங்கரனும், சாணக்கியனும், மதனும், பொய்யனுமாக நின்று, ஐந்து பேர் கட்சியை ஜெயிக்க வைத்த கிருஷ்ண னுடைய சாவு விர மரணம் அல்ல. பாண்டவர்கள் வாகை சூடிக் குடி புகுந்த அத்தி நகரில் பிணவாடையும் பிலாக்கண மும் கமறுகிறது.

தன்னுடைய சிடப் பிள்ளைகள் யாருக்கும் ''தோற்றான்'' என்ற பெயர் வந்துவிடக்கூடாது என்று சர்வ ஜாக்கிரதையுடன், ஏகலைவனுடைய கைக்கட்டை விரல்களைக் குருதட்சிணையாக வாங்கிய துரோணர்தான். பாண்டவ வியூகங்களுக்கு எதிராக வந்து நிற்கிறார். மனம், பாண்டவர் கட்சியில்தான் இருந்திருக்கக்கூடும். ஆனால், நிலைமையில் மாறுதலை விரும்பாமையினால் வில்லேந்தி வந்து நிற்கிறார். பிராணன் போகும் கடைசி நிமிஷம்வரை பிராமணனாகவே இருந்து உயிர் நீத்த துரோணன் சாதித் தது என்ன? அப்பிராமண வியவகாரங்களைப் பிரா மணத்துவம் குன்றாமல் நடத்திக் காட்டிய மகாபிராமணன் துரோணன். இது மட்டுமா? ஊர்வசி மோகித்து நாடிய அர்ச்சுனன் சேடிப்பெண் காலடியே சதம் என்கிறான் துரியோதனன் எல்லோருடைய வெறுப்புக்கும் பாத்திர மாக வேண்டியவன். அவனுடைய வார்ப்பு அதி அற்புத மானது. தாயாதிச்சண்டையை ஒரு ராஜீயப் போராட்ட மாக, இரண்டு விதமான மனப்போக்குகளின் போராட்ட மாக, மாற்றிவிட்ட மகானுபாவன். அவனுக்கும் பாண்டவ ரோடு ரத்தபந்தம் உள்ள ஒருவனுக்கும், விளைந்த நட்பும்

அன்னியோன்னியமும் அவனிடமும் நம்மனசை இளகவைக் கிறது. பொறாமைத் தீ தான் அவன்; ஆனால் கடைசி நிமிஷம்வரை, 18நாள் சண்டை மூளும் வரை, ரத்தம் சிந்துதலை நடக்காத காரியமாக்கித் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டவன்தானே அவன். அவனுடைய ஆசை நாம் ஒப்புக்கொள்ளக் கூடாது என்று விவரிக்கப்பட்ட ஒரு காரியமாக இருக்கலாம். பாண்டவர்கள்போர்க் கோலம் பூண்டு, ''அடுபோர் வேண்டு'' என்று திரண்டு நின்று ஆள் விடும்வரை, ரத்தம் சிந்துவதைத் தவிர்த்து, சமுதாய பங்கம் ஏற்படாமல் காரிய சாதனை செய்துகொள்ள முயன்றவன அவன்தானே, அதுவும் போகட்டும். அவன் சார்பில் நின்றவர்கள் யாவரும், அவனும் அவன் சகோதரர் களும் போல, நம்முடைய வெறுப்புக்குப் பாத்திரமாக வேண்டியவர்களா? துரோணன் என்ன, கர்ணன் என்ன, இப்பேர்க்கொத்த நம் விருப்பத்துக்கு உவப்பாக வேண்டிய வீரர்கள் பலர் அவன் சார்பில், ரத்தத்தையும் உயிரையும் ஏன் சிந்துகிறார்கள்? பாண்டவர்கள் கட்சியில் இருக்கும் நியாயத்தையும் சற்று அலசிப் பார்த்தால் சாயம் இளகு கிறது. துரியோதனன் தன் வம்சத்தாருக்குச் சிங்காதனம் அடைப்பிக்க, அதைச்சுற்றி வேலிபோட முயன்றான். பாண்டவர்கள் உயிர்வாழும் வசதி என்ற கோஷத்துடன் இந்த வேலியை அப்புறப் படுத்த முயன்றார்கள்; அம் முயற்சியில், சமுதாயமே அழிந்து விடுகிறது. பாண்டவர்கள் பெற்ற வெற்றி யாருடைய ஆத்ம திருப்திக்கு? நிற்கட்டும்.

தர்மனுக்கும் சகுனிக்கும் சூதாட்ட மோகம் ஒரே மாதிரி தானே; திறமையில் இரண்டு பேரும் சளைத்தவர் களா? சகுனி, தன்னுடைய மருமகனுக்கு லேசாக நாடு பிடித்துக் கொடுக்க அதை உபயோகிக்கிறான். தருமனோ தனது சிந்தனை ஓட்டத்துக்குத்துணைபுரியும் சாதனமாகப்

பகடைக்காயை உருட்டுகிறான், தருமனும் சகல பிரக்ஞைகளையும் இழந்து, தோல்விக்குமேல் தோல்வி வரும்படியும் மறந்து காயுருட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் காண அவன்மீது யாருக்குத்தான் அனுதாபம் தோன்ற முடியும்?

வாழ்வின் ரகசியம் இதுதான். மகா இலக்கியங்கள், பலவித கோணங்களிலிருந்தும் வாழ்வை நோக்குவதைத் தடை செய்வதற்காகச் சட்டம் போட்டு மாட்டப்பட்ட படங்கள் அல்ல.

# அரிஸ்டாட்டில் கண்ட ராஜீயப் பிராணி

[அரிஸ்டாட்டில் என்பவர் மேல் நாட்டில் சகலசாஸ் திரங்களுக்கும் பிதா என்று கருதப்படுகிறார். அவர் எழுதிய கிரந்தங்கள் பலவற்றுள் **பாலிடிக்ஸ்** என்பது மேல்நாட்டு அரசியல் சாஸ்திரம் என்ற ஆயிரக்கால் மண்டபத்தின் கேந்திரத் தூண் என்று கூறவேண்டும். இவர் மாஸிடோன் அரசனான அலெக்ஸாண்டரின் குரு. சிந்துநதி தீரம்வரை கீழ்த்திசையில் திக்விஜயம் செய்து ஒரு பெரிய சாம்ராஜ் யத்தை ஸ்தாபித்த அலெக்ஸாண்டர் காலத்து ராஜீயப் போக்குகள், மோதல்கள், உருக்குலைவுகள் முதலியவற்றி லிருந்து பிறந்தது, அரிஸ்டாட்டிலின் சித்தாந்தம். தவிரவும் பிளேட்டோவின் சீடர் இவர். அதாவது அறிவுக் கோயில் வழிபாடு உரிமையைப் பிரதானமாக மதித்து, அதற்காகப் பெற்ற மரண தண்டனையை ஏற்றுப் பிரயோபவேசம் செய்து விட்ட ஸாக்ரடீஸ் ஏற்றிய தீபச்சுடரின் இரண்டா வது விளக்கு அரிஸ்டாட்டில். இவர் ஏதென்ஸ் நகரில் சிறிது காலம், அதாவது அலெக்ஸாண்டரைப் பிரிந்த பின்பு ஒரு குருகுலம் நடத்தி வந்தார். அவருடைய ஜீவிய காலம் கி.மு. 384 முதல் 322 வரை. அரிஸ்டாட்டில் தாம் எழுதி யுள்ள பாலிடிக்ஸ் என்ற அரசியல் சாஸ்திரத்தில் ராஜ்யத்

தின் தன்மை என்ன என்பது பற்றி விவரித்துள்ள பகுதி கீழே மொழி பெயர்த்துத் தரப்பட்டுள்ளது.]

ஒவ்வொரு ராஜ்யமும் ஏதோ ஒரு மாதிரியான சமாஜமேயாகும். ஒவ்வொரு சமாஜமும் ஏதோ ஒரு நலத்தை முன்னிட்டே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் மனுஷ வர்க்கம், எப்பொழுதும் தாம் எதை நலம் பயக்கும் எனக் கருதுகிறதோ அதைப் பெறுவதற்கு இயங்குகிறது. சமாஜங்கள் யாவுமே ஏதாவது ஒரு நலத்தை நாடுவதாக இருப்பின், சமாஜங்கள் எல்லாவற்றிலுமே மிகவும் சிறந்ததும், எல்லாவற்றையுமே தன்னுள் கொண்டதுமான ராஜ்யம் என்ற அரசியல் சமாஜம், மற்றவை எல்லாவற்றையும் விட மிகவும் அதிகமாக நலத்தை நாடுகிறது; அதாவது தலைசிறந்த நலத்தையே நாடுகிறது.

ராஜ்ய புருஷன், அரசன், குடும்பத் தலைவன், எஜமான் முதலிய பலரகப்பட்டோரின் தன்மை ஒன்றுதான்; வேறுபாடு ரகத்தில் அல்ல. அவர்களடியில் உள்ளோரின் எண்ணிக்கையைப் பொருத்ததேயாகும் என்று சிலர் கருதுகிறார்கள். உதாரணமாகச் சிலர்மீது ஆட்சி நடத்துபவனை எஜமான் என்கிறோம். தொகை இன்னும் அதிகமானால் குடும்ப நிர்வாகி என்கிறோம். இப்படியாகவே தொகையானது இன்னும் சற்றுப் பெருகிவிட்டால், ராஜ்ய-புருஷன் எனவோ அரசன் எனவோ கூறுகிறோம். இம்மாதிரி விவரித்துச் சொல்லுவது பெரிய குடும்பத் தலைவன் ஒருவனுக்கும் சிறு ராஜ்யத்தின் தலைவனுக்கும் வித்தியாசமே கிடையாது என்பதுபோலக் காட்டப்படுகிறது. அரசனுக்கும், ராஜ்ய புருஷனுக்கும் கீழ்க்கண்டவாறு வேறுபாடு கூறப்படுகிறது. ஆட்சியானது சொந்த நிர்வாகமாக இருந்தால், ஆட்சி நடத்துவோன் மன்னன்; ராஜீய சாஸ்திர சட்ட திட்டங்களின் பிரகாரம், பிரஜைகள் ஆட்சி நடத்தி,

ஆட்சிக்கும் உட்பட்டால். அங்கு தலைவனை ராஜ்ய-புருஷன் என்று சொல்லவேணடும்.

ஆனால், இவ்வாறு கூறுவது எல்லாம் பிசகாகும்; ஏனெனில், சர்க்கார்கள் ரகத்தில் வேறுபாடுடையவை; நம்மை இதுவரை வழிகாட்டி நடத்தி வந்த தர்க்கமுறையின் படி இவ்வியவகாரத்தைப் பரிசோதனை செய்வோருக்கு இது புலனாகும். இதர சாஸ்திர துறைகளில் இருப்பது போல, ராஜீயத்திலும், கதம்பப் பிண்டங்கள் யாவும் தனி இனங்களாகவோ அல்லது ஒரு முழுப்பிண்டத்தின் உட் பகுதிகளாகவோ சோதித்துப் பார்க்க வேண்டும். இப்படி ஆட்சியின் ரக வேறுபாடு எதனால் என்பதைப் பார்க்க முடியுமா, அவை ஓவ்வொன்றைப் பற்றியும் சாஸ்திரீயமாக ஏதாவது முடிவு பெறுவதற்கு இடமுண்டா என்பதைத் தெரிந்துகொள்ள நாம் ராஜ்யத்தை உருவாக்கும் தனி இனங்களைக் கவனித்தாக வேண்டும்.

இவ்வாறாக, யாரொருவன், ராஜ்யத்தைப் பற்றியோ அல்லது வேறு எதையுமோ, அதன் உற்பவத்தையும் வளர்ச்சியையும் கவனிப்பானாகில், அவைப்பற்றித் தெளி வாகத் தெரிந்து கொள்ளுவான். முதல் முதலாக, வேறு ஒன்றின் துணை இல்லாமல் வாழமுடியாத சேர்க்கைப்பாடு; அதாவது. வர்க்கம் நசித்துப் போகாதிருக்க ஆண் பெண் சேர்க்கைப்பாடு. இந்த சேர்க்கைப் பாடானது ஜாக்கிரதா வஸ்தையில் விளைந்த ஒரு அமைப்பல்ல; தாவர ஜங்கம ஜீவவர்க்கத்தைப் போல மனுஷவர்க்கத்துக்கும் தம்மைப் போன்ற ரூபங்களை விட்டும் போகப் பொதுவான வேட்கை ஒன்று இருந்துவருகிறது. இயல்பாக ஆளுவோ னும் ஆளப்படுவோனும் நசித்துப் போகாமல் இருக்கவேண் டும் எனத் தோன்றும் வேட்கையும் இதில் அடங்கியுள்ளது. மானஸீகமாக முன்கூட்டி எதிர்பார்க்கும் இயல்பு உள்ள வன் எஜமான், தலைவன். முன்கூட்டி எதிர்பார்க்கும் காரி யத்துக்காக உடம்பைக் கொடுக்கும் இயல்பு உள்ளவன் ஆளப்படுவோன், அதாவது அடிமை. ஆகையால்தான் எஜ மானுக்கும் அடிமைக்கும் நோக்கம் ஒன்றாக இருக்கிறது. ஆனால் இயற்கையானது பெண்ணுக்கும் அடிமைக்கும் வேறுபாட்டை அமைத்திருக்கிறது. இயற்கை லுப்தன்

அல்ல; பல காரியங்களுக்கும் உபயோகப்படுத்துவதற்கு டெல்பிய கத்தியைச் சமைக்கும் கருமான் அல்ல. ஒவ்வொரு பயனை நாடி அதற்கு எனத் தனியாக ஒரு காரியத்தைச் செய்கிறது. பல காரியங்களைச் செய்வதற்கு அல்லாமல் குறிப்பிட்ட ஒரு காரியத்துக்காகச் செய்யப்படுவதே சிறந்த சாதனம் என்று கொள்ளவேண்டும். ஆனால் கிரேக்கர் அல்லாதோரிடைப் பெண்ணுக்கும் அடிமைக்கும் வித்தியாசம் கிடையாது; ஏனெனில் ஆளும் இயல்பு படைத்தவன் அவர்களிடைக் கிடையாது. அவர்கள் ஆண பெண் அடங்கலும் அடிமை சமாஜமே. ''ஹெலனியர், பார்பேரியர்கள்* மீது ஆட்சி புரிவது பொருத்தமான காரியம்'' என்று கவிகள் சொல்லுகிறார்கள்; பார்பேரியர்களும் அடிமைகளும் ஒன்று என அவர்கள் கருதுவது போலவே தெரிகிறது.

ஆணுக்கும் பெண்ணுக்கும், ஆண்டைக்கும்,அடிமைக்கும் இடையில் ஏற்படும் இவ்விரண்டு விதமான உறவு முறைகளிலிருந்து முதல் முதலில் எழும் வியவகாரம் குடும்பமாகும். ஆகையால்தான் கவி ஹேஸியாட் ''முதலில் மனையும் மனைவியும், பிறகு காளையும் கலப்பையும்'' என்று சொல்லுவது முற்றிலும் பொருந்தும். ஏனெனில், ஏழையின் அடிமைதான் எருது. மனிதனுடைய அன்றாட வேலைகளைத் தீர்க்க இயல்பாக அமைந்த ஏற்பாடே குடும்பம்.

சாரண்டாஸ் என்பவன் குடும்ப அங்கத்தினரைச் ''சமபந்தி சகாக்கள்'' என்கிறான். கிரீட் தேசத்து ஏப்பிமெனிடிஸ் ''ஒற்றைத்தொழுவத்து சகாக்கள்'' என்கிறான். பல குடும்பங்கள் ஐக்கியப்படும்போது, சேர்க்கையின் நோக்கம் அன்றாடத் தேவைகளைத் திருப்தி செய்து கொள்ளுவது என்பதறகுச் சற்று மேம்படுகிறது. முதல் முதலாக உருவாகும் சமாஜம் கிராமமே. கிராமத்தின் இயல்பான தன்மை ''ஸ்தன்யபந்தத்தில்'' படர்ந்த ஒற்றைக் குடும்ப ராசிகள் கொழுந்தோடிப் படர்ந்து வேரூன்றுவது எனச் சொல்லலாம். இதனால்தான் ஹெலனிய ராஜ்யங்கள் பூர்வத்தில் மன்னராட்சியின் கீழிருந்தன. பார்பேரியர்

---

*பார்பேரியர் - கிரேக்கர்கள், தம் நாட்டினர் அல்லாதோரைக் குறிப்பிடும் பதம், ஆரியர், மிலேச்சர் என இதரர்களைக் குறிப்பிடுவது போல.

கள் இப்பொழுதும் இருந்து வருவதைப்போல, ஹெலனியர்கள் ஒன்றுபடுவதற்கு முன்பு, மன்னன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் மூத்தவன் ஆண்டான். ஆகையால்தான் குடும்பங்கள் நிறைந்த குடியேற்றங்களில் மன்னர் ஆட்சி இருந்து வந்தது; இதன் அடிச்சரடு ரத்தபந்தம் ஒன்றேயாகும். ஹோமர் கூறுவது போல், ''ஒவ்வொருவனும் தனது குழந்தைகளுக்கும் மனைவிகளுக்கும் சட்டத்தை வகுத்துத் தருகிறான்''. அவர்கள் சிதறி வாழ்ந்தார்கள்; புராதன பழக்கம் அப்படி. மனிதர்கள் இன்றோ முற்காலத்திலோ மன்னராளுகைக்கு உட்பட்டிருந்ததினால்தான் தெய்வங்களுக்குள்ளும் அரசன் உண்டு என்று சொல்லுகிறார்கள். தெய்வங்களின் ரூபங்களைப் போல அவற்றின் வாழ்வும் வழியும் தம் போன்றதே என இவர்கள் கற்பனை செய்கின்றார்கள்.

பல கிராமங்கள் பரிபூர்ணமான ஐக்கியப்பாடு கொண்ட சமாஜமாகி, தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ள, அல்லது சுமாராக நிறைவேற்றிக் கொள்ளத் தகுந்த ரீதியில், படரும்பொழுது ராஜ்யம் உருவாகிறது. அதன் பூர்வமானது ஜீவியத்தின் சாதாரண அவசியங்களைத் திருப்தி செய்வதற்காக எழுந்து நல்வாழ்வு என்ற நோக்கத்துடன் பிறகு இயங்கி வருகிறது. மனித சமூகங்களின் ஆரம்ப ரூபங்கள் இயல்பானவை எனின், ராஜ்யமும் இயல்பானதேயாகும். ஏனெனில் அதுவே அதன் முடிவான வடிவம்! அதாவது, இயல்புதான் அதன் வடிவம். ஏனெனில் எது ஒன்று, அது இயல்பாகப் பெறவேண்டிய பூரண வடிவம் பெற்றதோ அதைத்தான் அதன் இயல்பு என்கிறோம். மனிதனாகிலும் குதிரையாகிலும் குடும்பமாகிலும் எதுவாகிலும் அப்படித்தான். மேலும், முடிவான காரணமும், ஒன்றின் முடிவான தன்மையுமே சிறந்ததாகும். தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதுதான் முடிவான, சிறந்த நோக்கமாகும்.

ஆகையால், ராஜ்யம் என்பது இயற்கையின் சிருஷ்டியாகும்; மனிதன் இயல்பிலேயே ராஜீயப்பிராணி. சந்தர்ப்ப விகாப்பத்தால் அவ்வாறு இயல்பாகவே ராஜ்யம் இல்லாதவன், கெட்டவனாக இருக்க வேண்டும். அல்லது மனித வர்க்கத்துக்கு மேம்பட்டவனாக இருக்கவேண்டும்.

ஹோமர் "இனம் இல்லாத, சட்டமில்லாத, வீடுவாச லில்லாத ஒருவன்" என்று கண்டிக்கும் ஒருவனே அவன். இயல்பிலேயே புறம்பாக்கப்பட்டவன் உடனே போரில் ஆசை கொண்டு விடுகிறான். தன்னந் தனியாகச் சிதறிக் கிடக்கும் பகடைக் காய்க்கு அவனை ஒப்பிடலாம், தேனீ முதலிய இதர ஜீவராசிகளைவிட மனிதன் ராஜீயப் பிராணி என்பது கண்கூடான விஷயமாகும். இயற்கை வீணாக ஒரு காரியத்தைச் செய்கிறதில்லை என்று நாம் அடிக்கடி சொல்லுகிறோம்.பேசும் திறமையை இயற்கை மனிதனுக்கு மட்டுமே அளித்திருக்கிறது. இன்பத்துக்கும் வலிக்கும் அறிகுறியாகவே குரல் இருக்கிறது. ஆகையால்தான் இதர பிராணிகளிடம் அது காணப்படுகிறது; (அவற்றின்இயல்பு இன்பத்தையும் வலியையும் உணர்ந்து தன்னொத்த மற்றோருக்குக் குரல் கொடுப்பதுடன் அது நின்றுவிடு கிறது) எது சாத்தியமானது, எது சாத்தியமற்றது என்பதைச் சொல்லுவதற்கு,—பேச்சு ஏற்பட்டுள்ளது. மேலும் மனுஷன் ஒருவனுக்குத்தான் நன்மை, தீமை, நீதி, அநீதி என்பவைபற்றி உணர்வு எதுவும் ஏற்பட்டிருக் கிறது. இந்த உணர்வு படைத்தவர்களின் சேர்க்கையில் தான் குடும்பம், ராஜ்யம் என்பவை உதிக்கின்றன.

மேலும் ராஜ்யம் என்பது இயல்பில் குடும்பம் என்ப தற்கும் தனி மனிதன் என்ற பாவத்துக்கும் முந்தியது; ஏனெனில் முழுமை என்பது ஒன்று இருந்தால்தானே உட்பிரிவு, பகுதி என ஒன்று இருக்கமுடியும். உதாரண மாக முழு உடம்பும் அழிந்துவிட்டால், கை கால் என்பவை தன்மை இழந்து வெற்று, அர்த்தமற்ற பொருளாகவே உறுப்புக்கள் இருக்க முடியும்; அழிந்துபோன பிற்பாடு கல்லில் அடித்து வைத்த கைக்கும், கூறுபட்டுக் கிடக்கும் கைக்கும் வித்தியாசம் கிடையாது. ஒவ்வொரு விஷயமும் அதன் இயக்கத்தையும், சக்தியையும் வைத்தே விவரிக்கப் படுகின்றன. அவற்றுக்கேற்ற குணத்தை இழந்து பெயரை மட்டும் தாங்கி இருப்பதனால் அவை ஒன்றே என நாம் கூறக்கூடாது. ராஜ்யம் என்பது இயற்கையின் சிருஷ்டி, தனிமனிதனுக்கு முன்பிறந்தது என்பதற்கு அத்தாட்சி.தனி மனிதன், தனிமைப்படுத்தப்பட்டவுடன் தன்தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ள முடியாதவனாக இருக்

கிறான் என்பதே போதுமானது. முழுமையுடன் தொடர்பு கொண்ட அதன் ஒரு பகுதியே தனி மனிதன். சமூகத்துள் வாழ இயலாத மனிதன், அல்லது வேறு தேவைகளற்றுத் தானே தனக்காக உள்ள மனிதன் மிருகமோ தெய்வமோ என்றுதான் சொல்லவேண்டும். அவன் ராஜ்யத்தின் ஒரு பகுதி அல்ல. கூடிவாழும் உணர்வு சகல மனிதர் உள்ளத்திலும் இயல்பாக இருந்துவருகிறது. இருந்தாலும் ராஜ்யத்துக்கு அடி கோலியவன்தான் நலமியற்றியோருள் மிகவும் சிறந்தவனாகும். ஏனெனில் மனிதன் பண்படுத்தப்பட்டால் பிராணி வர்க்கத்தில் மிகவும் சிறந்தவனாகிறான். ஆனால் சட்டத்துக்கும் நீதிக்கும் புறம்பாக்கப்படும் பொழுது, அவனைவிட மோசமான மிருகம் கிடையாது. ஆயுதம் பூண்ட அநீதம் அபாயத்தன்மை மிக்கதாகையால், புத்தியையும் விவேகத்தையும் உபயோகித்து இயங்குவதற்காகப் பிறப்பில் கரங்கள் மட்டும் அளிக்கப்பட்டிருக்கிறான் மனிதன். அக்கரங்களை மிகவும் மோசமான நோக்கங்களுக்கு உபயோகப்படுத்தவும் முடியும். சீலம் படைத்திராவிட்டால், பவித்திரமற்றதும் மிகவும் பேய்த்தன்மை வாய்ந்ததுமான மிருகம் மனிதனேயாகும்; காமமும் வயிற்றுத் தேட்டமும் எல்லையில்லாமல் பெற்றுவிடுகிறான் அவன். ஆனால் ராஜ்யங்களிலே நீதிதான் மனிதர்களிடையே உள்ள பந்தம். நீதி நிர்வாகம் என்பது எது நீதி என்பதை நிர்ணயிப்பதாகும்; அதுவே ராஜீய சமாஜத்தின் பிரதான ஒழுக்கமாகும்.

# கலையும் இலக்கியமும்

(ஆபர் கிராம்பி எழுதிய வியாசத்தில் ஒரு பகுதியின் மொழி பெயர்ப்பு)

பாஷையினுடைய கலைப் பெருக்கின் வெளியீடுதான் இலக்கியம். தற்காலிகமாக இதை இலக்கியத்தின் விளக்கமாகக் கொள்ளலாம். ஆனால் இலக்கியம் என்றால் என்னவென்பதற்கு இதைச் சூத்திரமாக வைத்துக்கொள்ள முடியாது; இந்த விளக்கத்திற்கு உள்ளடங்கியதெல்லாம் இலக்கியம் என்றும் கூறிவிட முடியாது. இலக்கியம் என்ற பதம் சரியான அர்த்தத்துடன் இருக்க வேண்டுமானால் இதை முடிவான சூத்திரமாகக் கொள்ளக்கூடாது. சம்பாஷணை இலக்கியமல்ல. ஆனால் சம்பாஷணையும் கலை என்று கூறுகிறோம். இதேமாதிரி பாகசாஸ்திரத்தின் கலை, யுத்தசாஸ்திரத்தின் கலை என்றெல்லாம் கூறுகிறோம். இக்கலை என்ற பதம் இவ்வளவு பதப் பிரயோகத்திலும் ஒரு அடிப்படையான அர்த்தத்தைப் பெற்றுத்தான் இருக்கிறது. கலை என்றால் திறமை. எதிர்பார்க்கும் முடிவைப் பூரணமாகச் செய்ய உபயோகப்படுத்தும்திறமை. இதனால் இலக்கியத்தைப் பற்றிக் கூறும் பொழுது கலை என்பதைச் சரியான பதப்பிரயோகம் என்று கொள்ளமுடியாது. அப்படி உபயோகித்தால் சொன்னதையேதான் திரும்பக்கூறுவோம். இலக்கியத்தை உற்பத்தி செய்யும திறமை என்றால் ஏதாவது விளங்குகிறதா? நாம் இலக்கியம் என்பது என்னவென்பதைத் தெரிந்து கொண்டால், கலை என்பது என்னவென்று அறிந்து கொள்ளுவோம். திறமையில் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. இலக்கியத்தில், வெறும் சம்பாஷணையில் இருப்பதைவிட அதிகமாகப் பாஷைப் பயிற்சியும் திறமையும் இருக்கிறது என்பது சாதாரண உண்மை. இலக்கியத்தில் இத்திறமை வார்த்தைகளைப் பொருத்தமட்டில்தான். ஆனால் சம்பாஷணையில் ஒருவரு

டைய மனிதத்துவத்தின் திறமும் கலந்திருக்கிறது. சில சமயங்களில் இதுதான் பேச்சில் வார்த்தைகளைவிட முக்கிய மாக இருக்கிறது. கவிதைகள் பாடப்படலாம். நாடகங்கள் நடிக்கப்படலாம். வாய்விட்டுப் பாடப்பட்டாலும், மௌன மாக வாசிக்கப்பட்டாலும் இலக்கியத்தின் கலைத்தத்துவம் வித்தியாசப்படுவதில்லை.

ஆகையினால் நாம் இலக்கியத்தைப்பற்றி விளக்கும் பொழுது அச்சடிக்கப்பட்ட வார்த்தைகளையே நினைவில் வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. கண்ணினால் பார்த் தாலும் வார்த்தைகள் எப்பொழுதும் (மானஸீகமாகவா வது) கேட்கப்படுவது என்று அறியவேண்டும். இதனால் இலக்கியத்தில் வார்த்தைகள் பளிச்சென்று கேட்கப்படு பவையாக இருக்கவேண்டும்.

இதனால் இலக்கியத்தில் கலை என்னும் பொழுது என்னவென்பது, இலக்கியம் என்றால் என்னவென்ற விவாதமாகக் குறுகி விடுகிறது. இலக்கியம் உள்ளத்தின் ஒரு விதமான வெளியீடு என்று முன்பு கூறி இருக்கிறோம். அது இலக்கியத்தின் ஒரு பகுதிதான். இலக்கியம் உள்ளத் தின் வெளியீட்டை மட்டும் குறிக்கவில்லை. அந்த வெளியீட்டிலிருந்து ஒருவர் பெறும் அனுபவத்தை யும் குறிக்கிறது. நான் எனது அனுபவத்தைக் கூறும்பொழுது, அது எனது உள்ளத்தின் வெளி யீட்டைக் குறிக்கிறது. இதனால் இலக்கியம் உள்ளத் தின் வெளியீடு என்பதைப்போல் அனுபவத்தை குறிப்பது என்றும் கூறலாம். இலக்கியத்தை இவ்விரு விதத்தினாலும் ஆராய்வதினால் இலக்கியத்தின் விமர்சனத்தை மட்டு மல்லாமல் இலக்கியத்தையே பாதிக்கும் ஒரு தத்துவம் பிறக்கிறது என்று கூற வேண்டியிருக்கிறது. இலக்கியம், ஆசிரியனின் உள்ளத்தின் போக்கைத்தான் வெளியிடுகிறது என்று கூறுவது இலக்கியத்தின் அகப்பகுதியைக் குறிக் கிறது. இதுதான் ரோமான்டிஸிஸம் என்ற மேனாட்டு இலக்கியத் தத்துவத்தில் கொண்டுபோய் விடுகிறது.

ஆசிரியரின் உள்ள நிகழ்ச்சியும் அனுபவமும்தான் இலக்கியத்தில் பிரதானம் என்பது அக்கொள்கையின் சாரம். இதற்கு எதிராக இலக்கியத்தைக் கவனிப்பது புறப்பகுதி என்று கூறலாம். இது வாசகனின் நிலையில் இருந்து இலக்கியத்தை விளக்குவது. இத்தத்துவம் உள்ளத்தை உள்ளபடியே சொல்ல வேண்டும் என்னும் எதார்த்த வாதம் (realism) என்ற கொள்கையில் கொண்டு விடுகிறது. இதில் சொல்லப்படும் விஷயந்தான் பிரதானம். இரண்டு விதமான பகுதிகளும் ஓரளவு உண்மைதான். ஆனால் முழு உண்மையல்ல. இவ்விரண்டுவித நிலைகளையும் ஒருங்கே கவனித்தால்தான் இலக்கியம் என்றால் என்னவென்பது பூரணமாக விளங்கும். இதை ஆங்கிலத்தில் கம்யூனிகேஷன் (Communication) என்று கூறுகிறார்கள். அதை உணர்த்தும் திறன் என்று நாம் கூறலாம். இவ்விதமான உணர்த்தும் திறன் இல்லாவிட்டால் இலக்கியம் கிடையாது. இலக்கியத்தில் இவ்விதமான உணர்த்தும் திறமையைத்தான் கலை என்கிறோம்.

நாம் இலக்கியத்தில் கலை என்று குறிப்பிடும்பொழுது மூன்று விஷயங்கள் இருப்பதைக் குறிக்கிறோம். முதலில் ஆசிரியன், இரண்டாவதாக வாசகன், இவர்களுக்கிடையில் முக்கியமானதாக விருக்கும் மூன்றாவதான பாஷை. இலக்கியமே, உணர்த்தும் சம்பந்தம் என்று கூறும்பொழுது இதைத்தான் குறிப்பிடுகிறோம். ஆசிரியன் வாசகனுக்கு எப்படி உணர்த்துகிறான், இவ்விருவரிடையிலும் எப்படிச் சம்பந்தம் ஏற்படுகிறது என்று கவனிக்கும்பொழுது, அனுபவத்தின் வெளியீட்டில் அது பெறும் உருவத்தைப் பொருத்திருக்கிறது என்ற முடிவிற்கு வருகிறோம். வாசகனுக்கும் ஆசிரியனுக்கும் நீண்ட காலமாகப் பழக்கப்பட்ட ரூபத்தின் மூலம்தான் இலக்கியத்தை உணர்த்த முடியும். இவ்விதமான உணர்த்தும் சக்தி அதன் உருவத்தைப் பொருத்துத்தான் இருக்கிறது.

★

# புதுமைப் பித்தன் கவிதைகள்

கவிதையைக் கலையின் அரசி என்பார்கள். கல்லாத கலை என்பார்கள். கவிதை என்றால் என்ன? யாப்பிலக்கண விதிகளைக் கவனித்து வார்த்தைகளைக் கோர்த்து அமைத்து விட்டால் கவியாகுமா? கவிதையின் இலட்சணங்கள் என்ன? கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு ஆனால் அவைகளின் கூட்டுறவு மட்டும் கவிதையை உண்டாக்கி விடாது. கவிதையின் முக்கியபாகம் அதன் ஜீவ சக்தி. அது கவிஞனது உள் மனத்தின் உணர்ச்சி உத்வேகத்தைப் பொருத்துத்தான் இருக்கிறது.

—புதுமைப்பித்தன்

# நிசந்தானோ சொப்பனமோ!

## 1

பட்டமரம் தழைக்க,
பைரவியார் சன்னிதியில்
வெட்டெருமை துள்ள,
விளக்கெடுக்க,

வட்டமுலை மின்னார்
வசமிழந்த காமத்தால்,
நீலமணி மாடத்து
நெடியதொரு சாளரத்தைத்
தொட்டுத் தடவிவந்து
தோயும்நிலாப் பிழம்பை,
எட்டி, எடுத்து,—
இடைசுற்றிச் சேலையென
ஒல்கி நடப்பதாய்
உவமை சொல

நோட்டெழுத, சீட்டெழுத
நூறுநுணாப் பேய் விரட்ட,
உடுக்கடித்து—
உள்ளத்தனல் அடிக்கும்
கடுப்புக் கதை சொல்ல,

காவிரியின் வளமை சொல,
வடுப்படாக் காதல்
வானுலகத் தெழில்படர,
பூவிரிந்த பந்தரிலே
புது மணத்தின் தேன் நுகர,

சித்தம் பரத்துச்
சிவனார் நடங்கூற,
வத்திவச்சுப் பேச,
வாய்ப்பந்தல் தானெடுக்க,

செல்லரித்த நெஞ்சின்
சிறகொடிந்த கற்பனைகள்
இடுப்பொடிந்த சந்தத்தில்
இடறிவிழும் வார்த்தைகளில்
ஊரில் பவனி வர,
உவப்புடனே நீயிருந்து

முத்தமிழை—
பாலித்து, பயிராக்கி,
பசிய உயிர் தான் தோன்ற
வளர்த்து வரும் வார்த்தை
நிசந்தானோ?

சத்தியமாய்க் கேட்கின்றேன்
சரஸ்வதியே நிசந்தானோ?

## 2

கள்ளம் விளைந்த களர்
கவியா மோ? காவியங்கள்,
நொள்ளைக் கதை சொல்லி
நோஞ்ச நடை பயின்று
உன்னை வணங்கிடுமோ?
ஒரு வார்த்தை,

நிசமாகக் கேட்கின்றேன்
ஒரு வார்த்தை!

துச்சா தனனுரிந்த
துகில் என்ன சருகென்ன,
தொட்டுரிய, தொட்டுரிய,
தோன்றாத சூனியமாம்
ஒன்று மற்ற பாழ் வெளியை
உள்ளடக்கும்
வெங்காயம் போல்
விகற்ப உலகமென
வித்தகர்கள் சொல்வதுபோல்,

நீயுமிருத்தல், நினைவணங்கே,
நிசந்தானோ?
நீயுமிருத்தல் நிசந்தானோ?

உள்ளத்து ஊஞ்சலினை
உந்தி உவகை துள
சிந்தும் சிரிப்பெல்லாம்
சொப்பனமோ? சிரிக்காதே

சிந்தும் சிரிப்பெல்லாம்
சொப்பனமோ?

# ஓடாதீர்

## 1

ஓகோ, உலகத்தீர்,
ஓடாதீர்'—
சாகா வரம் பெற்ற,
சரஸ்வதியார் அருள் பெற்ற
வன்னக் கவிராயன்
நானல்ல
உன்னிப்பாய்க் கேளுங்கள்,
ஓடாதீர்!
வானக் கனவுகளை
வக்கணையாச் சொல்லும்
உண்மைக் கவிராயன்
நானல்ல.
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்;
சரஸ்வதியார் நாவினிலே
வந்து நடம் புரியும்
வளமை கிடையாது!

## 2

உம்மைப்போல் நானும்
ஒருவன் காண்;
உம்மைப்போல் நானும்
ஊக்கம் குறையாமல்
பொய்கள் புனைந்திடுவேன்
புளுகுகளைக் கொண்டும்மை
கட்டி வைத்துக் காசை
ஏமாந்தால்,—
கறந்திடுவேன்.
ஊருக்கு மேற்கே
ஊருணியில் கண்டவளை
ஆருக்கும் வாய்க்கா
அரம்பை என்று,
கனவென்று,
சொல்லில் வனைந்திடுவேன்:
சோற்றுக்கு அலைக்காதீர்
''கன்னி எழில் வேண்டாம்;
காதல் கதை வேண்டாம்;
சொன்னபடி, தேச
பக்தி எழுப்பிடுவாய்,''—
என்றக்கால்,
''அப்படியே, ஆஹா
அடியேன் இதோ'' என்று
கல்லும் உயிர் பெற்று
காலன் போல், நடமாட
''வெல்லு, வெல்லு'' என்று குத்தும்
வீறாப்புத் தார்க்குச்சி
எத்தனை வேணும்?-செய்து
இணையடியில் வைத்திடுவேன்

## 3

சற்று, பொறும் ஐயா
சங்கதியைச் சொல்லுகிறேன்:
இன்றைக்குக் காசு
இருக்கிறது: இனிமேலே
என்றைக்கோ, எப்போதோ
எதிரில் எனைக் கண்டக்கால்
ஓடி ஒளியாதீர்!
உம்மிடம் நாம் கேட்கவில்லை.

## 4

இத்தனைக்கும் மேலே
இனி ஒன்று ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளம்புகட்டி,
கல்லில் வடித்து
வையாதீர்:
''வானத்து அமரன்
வந்தான் காண்! வந்தது போல்
போனான்காண்'' என்று
புலம்பாதீர்!
அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டுவிடும்,

## 5

சித்தே பசியாற
செல்லரிக்கும் நெஞ்சாற
மெத்தப் பழங்கதைக்கு
மெத்தப் பழங்கதையை
புத்தி தடுமாறிப்
புகன்றாலும்,
அத்தனையும், ஐயோ,—
அவையாவும் லட்சியங்கள்!
வானத்துக் கற்பனைகள்!
வையம் வளர்க்க வந்த
மோகன மந்திரங்கள்!
மோட்ச வழிகாட்டிகள், ஓய்!
அத்தனையும் உங்கள்
அறிவை வளர்க்க வந்த
சொத்துக்கள் ஓய்!...

சொல்லுக்குச் சோர்வேது
சோகக்கதை என்றால்
சோடி ரெண்டு ரூபா!
காதல் கதை என்றால்
கை நிறையத் தரவேணும்!
ஆசாரக் கதை என்றால்
ஆளுக்கு ஏற்றது போல்;
பேரம் குறையாது
பேச்சுக்கு மாறில்லை.
ஆசை வைத்துப் பேசி எமை
ஆட்டிவைக்க முடியாது!
காசைவையும் கீழே,—பின்

கனவு தமை வாங்கும்:—
இந்தா!...இது
காலத்தால் சாகாது,
காலத்தின்
ஏலத்தால் மலியாது!
ஏங்காணும் ஓடுகிறீர்!
ஓடாதீர்!
உம்மைப்போல் நானும்
ஒருவன் காண்!
ஓடாதீர்!

# உருக்கமுள்ள வித்தகரே

## 1

ஓடும், உழையும்
உழைத்து உருப்படியாய்
வாழுமென்று—
நம்மிடமே
வித்தாரமாக விளக்கும்
வினோதரே!
பொறுமையுடன் கேட்டிருந்து
புத்திமதி சொல்லவந்த
புரவலரே!
அத்தனைக்கும்
அடியோம் கடப்பாடு!

## 2

குப்பைகூளம், செத்தை
கூட்டிவைத்த

தூசு தும்பட்டம்.
அத்தனைக்கும்—
உப்பு, பருப்பு,
உளுத்தம் பயிறு
சித்தரத்தை, புளி
சீமை இலந்தை
எனவே,
செப்பி விலை கூறும்
வாணிபத்துக்(கு)
ஒத்து வருமோ
உயர் கவிதை?

புத்தி சொலவந்தவர் போல்,
ஏனையா
வித்தாரக் கவிதை
கையாண்டீர்?
ஒத்து வராது
ஓட்டாண்டிப் பாட்டு;
உமக்கேன் இப்
பொல்லாப்பு!

## 3

விட்டு விடும்
வேறே கணக்கிருந்தால்
பாரும்!
ஐந்தொகையில் புத்திதனை
கட்டியழும்!
ஆசைக் கனவெழுப்பும்
அமிஞ்சிப் பையல்களின்

காசுக்குதவா,
கவைக்குதவா,
கவிதையிலே
செல்லாதீர்!
புத்திசொல வந்தவரே
புத்திதடுமாறி விட்டால்
புத்தியெமக் கெப்படியோ
சித்திக்கும்?
வீணாம் கனவுகளை
எங்களுக்கே விட்டுவிட்டு
பெட்டியடி சொர்க்கத்தில்
புகுந்துவிடும்!

## 4

கொட்டிக் கிடக்கும்
கைத்தொழில்கள் கைவிட்டு
வெட்டிப் பேச்சுப் பேசி
வீண் கதைகள் சொல்லி
தட்டிக் கழிப்பதுபோல்,
ஏனையா
தவிக்கின்றீர்

## 5

யோக்கியமாய்
வாழ இங்கே
எந்தத் தொழில்
உண்டு?

பாரளந்த மாயோன் படியளக்க
பக்கத்தில்,
வேறொருவன் வீற்றிருக்கும்
மாட்சி தெரியலையோ?

வேற்றரசர் நிழலிலே,
வேலைக்கும் வழியுண்டு!
கூடை முறம் பின்னிடலாம்
தேசத்து லெச்சுமியை,
மானத்தை,
கவுரவத்தை,
கூட்டிக் கொடுத்திடலாம்;
நச்சி வந்த பேருக்கு
நாமங்கள் சாத்திடலாம்
வேற்றரசர் ஆட்சியிலே
வேலைக்கும் வழியுண்டு
கூலிக்கும் அட்டியில்லை!

இந்தத் தொழில்செய்ய
எத்தனையோ பேருண்டு;
இந்தத் தொழில்செய்ய
என்னை அழைக்காதீர்!

## 6

நிற்க.
ஊருணிக் கரையருகே
உட்கார்ந்திருந்து கொண்டு
ஊர்வம்பு பேசுவதாய்
ஏனையா உளறுகிறீர்?

ஊருணிக் கதை யெல்லாம்
ஊரறிந்த ரகசியம்காண்!
அன்றொரு நாள்,

உம்முடைய மச்சாவி
ஊருணிக் கரையருகே
உட்கார்ந்திருந்தானாம் ;
உப்பிலியன் கோயில்
உப்புக் குறத்திமகள்
உள்ளான் பிடிக்க வந்தாள்;
உள்ளான் பிடிக்க வந்த
'ஊர்வசி'யின்,
உள்ளம் பிடிக்க எண்ணி
உம்முடைய மச்சாவி
கன்னங்கரிய திரள்
மேனியிலே கை வைத்தான்!
தத்துப்பித் தென்று ஏதோ
தடமாறிப் பேசிவிட்டான்!

இந்த
ஊருணிக் காதை
ஊரெல்லாம்—
சிரிப்பாய்ச் சிரித்ததுகாண்!
அந்தக் கதையைத்தான்
அடியேன் குறிப்பிட்டேன்.

## 7

ஏனையா? உமக்கிந்த
நொள்ளாப்பு?

போமையா போம்!
நும்முடைய
பெட்டியடி சொர்க்கத்தில்
புகுந்து வீடும்!
உருப்படியாய் வாழும்;
உலகத்தைக்
கட்டியழும்.
இடுப்பில் வலி இல்லாதான்
இராமேசுரம் போனால்
'புள்ளை' வரம் பெற்றிடலாம்
புத்தைக் கடந்திடலாம்

என்பதுபோல்—

சொத்தைக் கதை எல்லாம்
அளக்காதீர்.

ஒற்றைச் சிதையினிலே
உம்மெல் லோரையும்
வைத்து எரித் திட்டாலும்
வயிற்றெரிச்சல் தீராது!

# காதல் பாட்டு

## 1

நிலவு வரவேண்டும்:
நீலமணிக் குயிலோசை
காதில் விழவேண்டும்:
தென்னங்கீற்றும் சற்றே
சலசலக்கும் பாவனையில்,
தென்றலுமாங்கே சற்று
திரிந்திடவும் வேண்டும்.
நிச்சயமாய்க் காதல் வரும்,
நீர் இருந்து பாரும்!
நிச்சயமாய்க் காதல்வரும்
நீர் இருந்து பாரும்!

## 2

ஆறுகெஜச் சேலை
அங்கமெலாம் கவ்வி

தோளில் உலாவி
தோகையவள் மேனிதனை
விள்ளாமற் சொல்லி
வினயமாய் அழகிழைக்கும்!

கரும்பட்டுப் பின்னல்வலை
காரிகையின் கூந்தலினை
கபோலச் சுருள்மட்டும்
காற்றிலசைந்தாடவிட்டு
பெட்டிக் கருநாகம்
பிறழுவது போலடக்கும்:

விற்புருவம் கோணாமல்
விதானம் எடுக்கையிலே,
இமை ரோமப்பந்தி
ஏந்திழையாள் கண்ணழகை
'கார்மன் மிராண்டா
கல்ச்சர்'க் கிசைந்தபடி
வெட்டிக் குதித்து
விளையாடும்.

காதல்மது ஊறுகின்ற
கன்னக் குழிவினிலே
காற்றிழைக்கும் நினைவினைப்போல்
கிரீமின் மணங்கமழும்

அதரச்சாயம் அன்னாள்
ஆதாரக் காதலுக்கு
வெறியூட்டி, வெற்றிக்
களியூட்டி,

அருகில், வாவென்று
அவசரமாய் அழைக்கும்

அஞ்சிருக்கும் மாரன்
அரங்க அணங்கினுக்கு
நெஞ்சிருக்கும் நேர்த்தி
நிகழ்த்த இயலாதே?

எங்கோ, எப்போதோ,
எவ்விடத்தோ
கேட்ட கருத்து
குடியேறும் பாவனையில்
செல்காற்றுச் செத்தையாய்,
சென்மாந்தர வாசனையாய்,
இருந்தும் இல்லாததுபோல்,
இல்லையெனச் சொல்வதற்கும்
ஏலாமல்,
அச்சம், மடம், நாணம்,
என்றினைய அத்தனையும்
ஒருங்கே குடிபுகுந்த
ஓரிடமாய்
ஜம்பருக்குப் பின்னால்—
சங்கரனார் நடம்புரிந்த
தில்லைத் தலத்துத்
திரைக்குப்பின் மந்திரமாய்,
கன்னியவள் கட்டழகை
கார்வையிட்டுக் காட்டும்
காதல் மணங்கமழும்
காலேஜுக் கன்னி
பேபி எனப் பெயராள்

பெதும்பைப் பருவத்தாள்
கைப்பையும் வாட்சும்
கால்செருப்பின் நாஸுக்கும்
தரையின் தவம் என்ன,
தார்ரோட்டுக் கனவென்ன
வெற்றிப் பராக்கு சொல
வேகமாய் நடந்துவந்தாள்.

## 3

ஒற்றைக் கையுரிந்து
ஒய்யாரக் கோட்டு
ஒற்றைத்தோள் சுமக்க
ஓர்மையாய் திசை நோக்க
வெள்ளெழுத்துக் கண்ணாடி,
வெட்டிச் சிரிப்புடனே
வேற்றூரான் பாசையிலே
வித்தாரக் காதல் சொலி
கிட்ட நெருங்கிவந்த
கண்ணனுடன்—
எட்டி அடியெடுத்து
யாருமிலா ஓரிடத்தில்
உட்கார்ந்து
உள்ளத்துக் காதல்
உற்றவிகாரம் எலாம்
விள்ளத் துணிந்துவிட்டார்—
வீற்றிருந்து கேட்டிடுவோம்!

காதல் இது காதல்! ஆமாம்
காதல் இது காதல்

## 4

கண்ணன் கழறிடுவான்;
''காரிகையே
கச்சேரி வேலை அது!
நிச்சயமாய் நீ நம்பு.
முப்பது ரூபாய்க்கு மோசமிலை,
அலவன்சும் உண்டு
அடியேபேபி, உன்னை
சினிமாவுக்கத்தனைக்கும்
சோர்வு சற்றும் காட்டாமல்,
அழைத்தழைத்துச் சென்றிடுவேன்
இனியும் கவலை உனக்
கெதற்கு?
தயக்கம் எதற்கு?
தர்மம் விளைந்த
தமிழ்நாட்டுக் கன்னிக்கு
நயக்கம் எதற்கு?
கையடித்துக் கொடுத்தால்
காலேஜு வாசலிலே
கண்ணடித்த பயனடைவேன்!

## 5

கண்ணன் உரைத்திடவும்
காரிகையும் தானுரைப்பாள்;
''பண்ணமைந்த காதல்
பரமபதம் கிடைக்கப்
பதைக்கின்றேன்.
ஆனாலும்—

பாங்கியிலே கொஞ்சம்
பணம் ஏதும் வேண்டாமா?
காதல் பெரிது!—
அதுதான் எனக்கும் தெரிகிறது!
காசு பெரிதென்பதை நீ
கருத்திலேன் கொள்ளவில்லை?
காசு இல்லாமல் என்ன
கதை நடக்கும்?''

## 6

கண்ணன் மறுபடியும்
கருத்தை உருக்கிடுவான்.
''போடிபோ! பேதாய்!
பேசத் தேரியாமல்
பிதற்றாதே!
காசுக்கு என்ன பிரமாதம்?
கடன்வாங்கினால் போச்சு;
கலியாணம் எப்போது?''

## 7

''அப்பாவைக் கேட்டிடுவோம்
அதற்கென்ன அவசரம்காண்!
தொல்லை வராமல்நாம்
தொட்டுப் பழகிடுவோம்,
எல்லை தெரியாதோ நமக்கெல்லாம்?''
என்றிட்டாள்.

பின்னர்,
அன்றுவந்த மாடல்

அதிரூப வல்லியவள்
கொன்றுவிடும் பார்வையுடன்
கொவ்வை இதழ் பூக்க
நின்று;
நினைவு எங்கோ நடமாட
சாயக்
கட்டியெடுத்து
கனிவாய் இதழ் பொருத்தி
முத்தமிட்டு முத்தமிட்டு
மோகக் கருத்தை யங்கே
மோத விடுவது போல்
வேகத்துடன் தீட்டி
விளக்கிட்டாள்,

ஏதோ நினைத்தவள்போல்
கைவாட் சைப்பார்த்து
கருத்தில் கனிவூறி
''சீனுவுடன் நாளைக்கு
சினிமாவுக்குப் போறேன்;
நாளைக்கியலாது; மறு
நாளைக்கு மப்படியே
வீணுக்கு அலையாதே
விட்டுக்குப்போ'' வென்றாள்.

## 8

காதல் இதுகாதல்!
ஆமாம்.
காதல் இதுகாதல்!

# மாகாவியம்

## 1

### மகா காவியம்

காளான் குடை நிழலில்
கரப்பான் அரசிருக்க,
வேளான் குடியூரில்
வெள்ளெருக்கு மூட்டருகே
கள்ளி தலைதூக்க
காட்டெருமை புறத்தேறி
சிட்டுக் குருவியவள்
சிங்காரப் பாட்டிசைத்தாள்

வரிசை வைக்கும் பாங்கிமார்
வலசாரி இடசாரி
சில்லென்ற ரீங்கார
சிலம்புச் சிறகோடு
பம்புக் கருமேகப்

பந்தல் எடுத்து வர
ஆறாயிரம் பூச்சி
அமர்ந்த சபை நடுவே
அத்தாணி மண்டபத்தின்
அரியாசனத் தருகே
பல்லி யமர்ந்திருந்து
பதிவாய்க் குறிசொல்லும்.
உள்ளகுறி யத்தனையும்
உண்மை யுண்மை என்பது போல்
ஓணான் தலையசைத்து
மண்ணாளும் மாராசன்
மனசைக் கவர்ந்திருக்கும்.

அச்சமயம்,—
உயரப் பறந்து வரும்
வண்ணாத்திப் பூச்சியவள்
வாகாய் விலகி, ஒரு
தும்பை மலர் அமர்ந்து
துதி நீட்டித் தேன் எடுக்க,
தேனெடுக்கும் வேளையிலே
தெய்வச் சினத்தாலோ,
தேவர் அருளாலோ,
மண்டு மகரந்தம்
மங்கையவள் நாசியிலே
சுழிமாறிப் போனதினால்
சுருக்கென்று தும்மல்வர,
தும்மல் வரத் தும்மல்வர
தும்மல் பெருகிவர,
அத்தாணி மண்டபமே
அதிர நடுங்கிற்று.

அத்தாணி மண்டபத்துக்
கணியாய் இலங்கி நின்ற
கொற்றக் குடையும்
கோணிச் சரிந்தது காண்!
கோணிச் சரிந்த குடை
கொற்றவனார் தன் தலையில்
வீழ்ந்து பொடியு முன்னம்
வீரத் திரு மார்பன்
வீசி நடந்து,
வீயன் சிறகைத் தான் விரித்துப்
பல்லிக்கு எட்டாத
பாழ்த்த இடுக்கினிலே
ஒண்டி உயிர் காத்து
உடல் நடுங்கி நின்றாரே!

சிங்காரப் பாட்டிசைத்த
சிட்டுக் குருவியவள்
சிரிப்பாணி மண்ட,
சிறகு விரித்து, அலகில்
நெளியும் புழுவேந்தி
நீள்வெளியில் தான் பறக்க
வந்திருந்த மந்திரிமார்
வரிசை பல கொணர்ந்த
குடிபடைகள் யாவருமே
உடல்பாரம் காக்க,
ஓடி ஒளிந்தனரே!

காளான் நிழல் வட்டம்
கண்ணுறங்கிப் போயிற்றே!
வேளான் குடியூரில்

வெள்ளெருக்கு மூட்டருகே
கள்ளி தலை தூக்கும்
கரை யருகே,
ஆளற்றுப் போச்சுது காண்,
அந்தோ அரசாட்சி!

## 2

### மகா ரசிகர்

"வாரும்வோய் கவி ராயரே நுமது
கவியோ விதென்ன புகலும்?
வாக்கிலே பொருளிலே கருதி நீர் மறைவாக
வைத்ததெப் புதையல் ஐயா?
மாகாவியம் என, மனசிலே கொண்டு நீர்
மார் தட்டி வந்து நின்று,
கோரிய காசிலே குறிவைத்து எம்மை நீர்
குடுசங்கி போட வந்தீர்?
அங்குமிங்கும் ஓடும் அரணையைப் பல்லியை
அல்திணை ராசி ஒன்றை
அரியா சனத்தேற்றி அதனிலும் கடையான
அருவருப்பைக் கவியிலே
சிங்காரமாய்க் கூட்டிச் சின்னத் தனமிகு
சிறுமையைக் காட்டி விட்டீர்!

ஆலால முண்டவன் அற்றை நாள் மதுரையில்
அணி செய்த தமிழணங் கை,
வாலாயமாய் வந்து வாக்கிலே குப்பையை
வாரிச் சொரிந்த கவியே!

ஏலாத செயலிலே ஏனையா முயலுதீர்?
ஏதும் பிழைக்க மார்க்கம்
அறியாது, அறியாத அவலட்சணத் துறை
அதிசயக் கருவின் விளைவை
மூலைக் கொருத்தராய் மூச்சுத் திணரவே
முயன்றிடில் கவி யாகுமோ?

## 3

**மகா கவி:**

தாளால் உலகளந்தான்
தனை மறந்து தூங்கி விட்டான்,
மூளாத சீற்ற
முக்கண்ணனும் இன்று
ஆளாக்கு அரிசிக்காய்
அல்லாடித் திரிகின்றான்.

காளான் அரசாட்சி
கசப்பாகத் தோற்றுகிற
ஆளான பெரியவரே,
அடியேன் ஒரு வார்த்தை.

இன்றைக்கு,
யாரையா காட்டுக்கு
அப்பன் மடத்தனத்தை
அப்படியே ஏற்றுத்தன்
பெண்டாட்டி கைப்பிடித்து,
பெரிய நிதியிழந்து,
திண்டாடி நின்று,

தீமைதனை சங்கரிக்க,
ராவணனார் காதுக்கு
'ரதி போல்வாள் என் மனைவி'
என்பதனைச் சொல்லுதற்கு
இடும்பு பல புரிந்து,
அன்னவளைத் தானிழந்து
அதற்கப்பால் மதியிழந்து
போகும் வழியினிலே
பொல்லாப்புக் கச்சாரம்
வாலி வயிறெறிய
வாங்கிச் சுமந்துகொண்டு,
பெரிய கடல் கடந்து
பெண்ணை, தன் நாயகியை
வில்லால், திறத்தால்,
விதி வலியால், மீட்டுப் பின்
அன்னவளைத் தீக்குழியில்
அருகிருந்தோர் நம்புதற்காய்
இறக்கி, தருமத்தை
ஏந்தி, எடுத்து,
அரியாசனத் தேற்றும்
அதிசயங்கள் உண்டோ காண்!

கரப்பான் அரசிருக்க
கடுக்குதோ, உம்மனசு!
கரப்பானைப் போன்ற பல
காலறுவான் எத்தனைபேர்
மொண்டி யரசாட்சி
மூடக் குரோதமுடன்
தண்டெடுத்து,
தானே யறிந்த

தற்பெருமைச் சூனியத்தை,
பிறக்கும், இறக்கும் பின்
பேதுற்று மாளுகின்ற
அண்டாண்ட மூலத்தின்
அழியா விதி போல
நினைத்துத் தருக்கி
நடப்பதுவும் சரிதானோ?

# "இணையற்ற இந்தியா"

இந்தியா தேசம்-அது
இணையற்ற தேசம்!-என்று
யாங்களு மறிவோம்-வெள்ளை
ஆங்கில ரறிவார்-பிள்ளைத்
துருக்கனு மறிவான்-அறிவால்
சூழ்ந்தது தொல்லை.

### வேறு

சிந்தையிலே பின்னிவைத்த சிலந்திவலைச் செல்வி
செல்வழியில் கண்ணியிட்டு செயத்தம்பம் நாட்டும்!
"எந்தையர்கள் நாடல்லோ இமையவர்கள் நாடு!
இமவானின் ஆதரவில் இருந்துவரும் நாடு!
கந்தமலர் பூச்செறிவில் கடவுளர்களோடு
கன்னியர்கள் கந்தருவர் களித்துவளர் நாடு"
என்று பல சொல்லியதை சொல்லளவில் நம்பி
எவனுக்கும் மண்டியிடும் ஏந்து புய நாடு!
ஆற்றுக் கரையருகே அணிவயல்கள் உண்டு;
சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்லி முடியாது!

## வேறு

வேதம் படித்திடுவோம் வெறுங்கை முழம் போட்டிடு
[வோம்
சாதத்துக் காகச் சங்கரனை விற்றிடுவோம்!
அத்தனைக்கும் மேலல்லோ அஹிம்சைக் கதைபேசி
வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்!

இந்தியா தேசம்-அது
இணையற்ற தேசம்

# தொழில்

எழில் எடுத்த மலர்க்கமல ஏந்திழையாள் சன்னதிக்கு
தொழில் அடுத்து நல்ல கவி சொல்லணுமாம்-அழல் அடுத்த
கண்ணுதலான் தன் மகனே! காய்சினத்து வேலுடையாய்!
வண்ணத் தமிழ் எனக்குத் தா. 1

கந்தா, கடம்பா, கதிர்வேலா கட்டழகா
சந்தார் தடந்தோளா சட்டுணுவா-இந்தவூர்
ரேடியோக் காரரெனை நெருக்குகிறார் 'லேட்'டாச்சாம்
ஓடியா, ஓடியே வா. 2

வந்தாலும் போதாது வாகைபுனை வேலவனே
சொந்தமாய்க் கவியேதும் தோணுதிலை-செந்தமிழில்
பாட்டு ரெடிமேடாய்ப் பண்ணிவச்சால் கொண்டுவந்து
லேட்டேதும் பண்ணாமற் றா. 3

கும்பிடுவார், குழைவார்; கூத்தாடிப் பல்லிளிப்பார்,
வம்பிடுவார் பின்னால் வழக்கிடுவார்—அம்புவியில்
அன்னார் தொழிலை அழகாகப் பண்ணிவச்சேன்
என்னமோ காணாமல் போச்சு. 4

காப்பியடித் திட்டேன், கயிறு திரித்து வச்சேன்
எப்படியோ பாட்டென் றெழுதினேன்-அப்படியும்
வாகையடி முக்கிலது வந்து குடி போட்டதடா.
தோகை மயில் ஏறி வா. 5

நாலே வினாடி தான், நல்லதாய் ஒன்று சொலு
ஏலே முருகையா எத்தாதே—வாலே
வந்து இருந்திங்கே வக்கணையாய்ப் பாட்டெழுது
தெந்தனங்கள் பண்ணாதே வா. 6

துருப்பிடித்த வேலைத் தூரஎறி இங்கே வா
உருப்படியாய்ப் பாட்டொன்று சொல்லு-விருப்புடனே
கவியரங்கம் கூட்டிக் கன்னித் தமிழ் வளர்ப்பார்
செவிக்கமுதமாய் ஒன்று சொல்லு. 7

வேலன் உரைக்கின்றான். ''வேளூரா இன்னமு நீ
காலம் கலி என றறியாயோ?-ஆலம்
உண்டவனும் நானும் உடுக்கடித்துப் பாடினும்
அண்டி வந்து கேட்பவரார் சொல்? 8

''பண் என்பார் பாவம் என்பார் பண்பு மரபென்றிடுவார்
கண்ணைச் சொருகிக் கவி என்பார்-அண்ணாந்து
கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ்ப் பாட்டாச்சே
முட்டாளே இன்னமுமா பாட்டு?'' 9

உழைப்புக்குப் பாட்டென்றேன் ஓங்கும் சினம் எடுத்து
பிழைப்புக்கே ஆபத்தாய்ப்பண்ணிவிட்டான்-அழைத்த
நல்லவரே, தமிழின் நயங்கள் வளர்ப்பவரே
கொல்லாதீர் என்னை விடும். 10

# இருட்டு

நடந்தேன், நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்.
நடந்தேன், நடக்கின்றேன்,
நடந்து நடந்தேகுகின்றேன்.

செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு,
சிந்தை அறிவினிலும்
தனி இருட்டு.

நடையால் வழிவளரும்
நடப்பதனால் நடை தொடரும்;
அடியெடுத்து வைப்பதற்கு
ஆதி வழி ஏதுமில்லை.

சுமையகற்றிச் சுமையேற்றும்,
சுமைதாங்கியாய் விளங்கும்
சுமைக்குள்ளே தானியங்கிச்
சுமையேற்றும் சும்மாடே!

''எங்கு, எதற்கு,
ஏனெ''ன்று கேட்டக்கால்
'எங்கு ஏதற்கு
ஏனெ'ன்றே கேள்வி வரும்!

என்னை அணைத்தேகும்
இருட்டுக் குரல் தானோ?
என்னை அணைக்க வரும்
மருட்டுக் குரல் தானோ?

நடந்தேன், நடக்கின்றேன்,
நடந்து நடந்தேகுகின்றேன்;
நடந்தேன், நடக்கின்றேன்,
நடந்து நடந்தே குகின்றேன்.

# பாதை

மண்டும் பெரு இருட்டு 1
மானுடவர் தம் நினைவில்
கண்டும் அறியாத
காரிருட்டு

மேலே இருள் முகடு 2
மேவிளனைச் சூழ
நாலு திசையினிலும்
இருட் படலம்

செல்லும் வழி இருட்டு 3
செல்லும் மனம் இருட்டு
சிந்தை அறிவினிலும்
தனி இருட்டு

பாதம் இயங்குவதால் 4
பாதை பிறக்கின் றதுவால்
விதி எனத் தனியாய்
வகுத்த வழி ஏதுமில்லை,

சாக்காடு எனும் தூக்கம் 5
சலித்திடும் என் கால்களுக்கு
நோக்காடு போக்கும்
நொடிப் பொழுது சத்திரங்கள்

எங்கு, எதற்கு 6
ஏனென்றறியேனை
''தங்கு'' எனக்கூறத்
தனியொருவனாருமில்லை.

நடந்தேன்; நடக்கின்றேன் 7
நடந்து நடந்தேகுகின்றேன்
நடந்தேன், நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்.

# திரு ஆங்கில அரசாங்கத் தொண்டரடிப்பொடி யாள்வார் வைபவம்

*[ஶ்ரீயப்பதியாய் ஸிம்லாச் சிகரத்தில் எழுந்தருளா நின்ற அரசாங்க ஈச்வரன் வில்லிங்டன் மூர்த்தியாய் சேவை காட்டிய திருக்கல்யாண குணங்களையும், வீரப் பிரதாபத்தையும், தான் சரண்புகுந்து உஜ்ஜீவித்ததையும் பாடுகிறார்.]*

**பதிகம்**

*1. உற்றாரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன்,*
*பேர்வேண்டேன்,*
*மற்றுமிந்த வாணிபத்தின் புன்செல்வம்*
*யான்வேண்டேன்,*
*பொற்றோளாய்! உன்னுடைய பெருமைமிகு*
*சர்விஸில்*
*சிற்றுருவ மானதொரு அட்டெண்டர் ஆகேனோ!*

2. விந்தையுறு மானிடனோர் வேடிக்கைத் துணியதனால்
இந்தியராம் உன்னடியார் உனைமறக்கச் செய்தவனை
தந்தியைப் போல் பாயுமுன தவசரச்சட்டமதனால்
சிந்தியே நிலைகுலையச் செய்தவினை மறவேனே.

3. வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்
மீளாத நரகமெனச் சிறையதனில் உற்றாரை
ஆளாக்கி வருத்திடினும் அதனையும்யான் பரவுவனே!

4. ஊனேறு செல்வத்துடன் பிறவியான் வேண்டேன்
தேனார் மொழிக்கிள்ளைத் தேவியரும் யான்
வேண்டேன்
வானோங்கு புகழ்மிகுந்த நின்வாயி லிட்டுண்ணும்
மீனாய்ப் பிறக்கும் தவமுடைய னாவேனோ?

5. செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோர்க் கல்லால் அலராவால்:
எந்தமரே ஏமாற எப்பதவி சொல்லினுநின்
அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே.

6. வேலைக்குக் கூலிதந்து அப்புறமும் பாதிதந்த
சீலத்தைப் போற்றுதற்குச் சிறுவாயும் போதுமோ!
ஞாலத்தை யொருகுடைகீழ் நடத்துநின் சீலத்தைக்
காலைக்கதிரழகின் கற்பனை என்றோதுவனே!

7. மன்னியதண்சாரல் சிம்லாவில் உறைவான்றன்
பொன்னியலும் சேவடியில் அமர்வான்
புரிந்திறைஞ்சும்
சென்னியன்சீர் தொண்டரடிப்பொடியான் சொல்
வார்த்தைகளை
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பக்தர்களே!

ஆள்வார் திருவடிகளே சரணம்.

# கடவுளுக்குக் கண்ணுண்டு

கடவுளுக்குக் கண்ணுண்டு
கண்ணோ நெருப்பு வைக்க;
தலையில் பிறையுண்டு—
தணல் கையில் உண்டுண்டு! 1

கங்கை முடிசூடி
கால்தூக்கி ஆடுவதால்
அங்கை மழுவை
ஆரும் மறப்பாரோ? 2

பேய்க்கணங்கள் சூழப்
பித்தாடும் வேடமிட்டால்
வாய்க்கும் சுடலையிலே
வளரும் பொருள் எதுவோ? 3

கரிக்காலன் பாதம்
கைலாசம் காட்டிற்றாம்
நரிக்கால் நடமிட்ட
நான்மாடக் கூடலிலே! 4

நீடு பொருள் கண்டு
    நிமலன் அருள் கண்டு
வீடு பெற நின்ற
    வித்தகர்கள் கண்டாராம்! 5

பாம்புக்குப் பல்லில்
    பரனுக்குக் கண்டத்தில்
தங்கும் விஷம் தரணி
    தங்கும் விஷம் அம்மா! 6

பூத்திருக்கும் பொட்டுப்போல்
    பொறி கனலும் நெற்றிக்கண்
காத்திருக்கும் பூத
    கணங்களுக்கே கைலாசம்! 7

# பொங்கல் நம்பிக்கை

குட்டுதற்கும் வெட்டுதற்கும்
கூட்டமுடன் அன்னவரைச்
சுட்டு எரித்துத்
தகிப்பதற்கும்—வெட்டரிவாள்
பாட்டுண்டு; நானுண்டு;
நீயுண்டு; பாவறியா
மோட்டெருமைக் கவிராயன்
உண்டு. 1

மோட்டெருமைக் கவிராயன்
'முக்காரம்' கேட்டால்தான்
நாட்டமுள்ள பாட்டின்
நயம் தெரியும்—பாட்டுள்ள
ரகுநாதா, நெஞ்சே
ரவை வைத்துப் பாட்டிசைக்கும்
ரகுநாதா, ஏங்காதே
நீ! 2

# 'அல்வா'

அல்வா எனச்சொல்லி
அங்கோடி விட்டாலும்
செல்வா நீ தப்ப
முடியாதே—அல்வா
விருது நகர்க் கெடியில்
உன்னுடனே கட்டாயம்
வருது எனக் காத்திருப்பேன்
நான். 1

சென்னைக்குப் பதினேழில்
சீட்டுக் கொடுத்துவிட்டு
உன்னைப் பிறகங்கே
சந்தித்து—பின்னை
ஊருக்குப் போவேன்
உறுதியாய் வா அங்கே
நேருக்கு மற்றவையப்
பா, 2

# காலைக் கடல்

கதிரவன் உதயமாகவில்லை.
மோகனமான இருள் உன்னைத் தழுவுகிறது.
உன்னைத் தன்னுள் ஆக்குகிறது.
காதலின் திரையா?
உன் வதனத்தில், உன் கண்களில்
உறக்கத்திலும் விழிப்பிலும்
என்ன சாந்தி!
இந்த சப்தமற்ற ஒளியில், காணும் இருளில்
உன் முகத்தில், உன் கண்களில்
என்ன சாந்தி!

என் வார்த்தைகள், என் கவிதை
இந்தக் காலையில்
தடுமாறுகின்றன.
நான் உனக்கு இளையவன் அல்லவா?
உனது கனிந்த பார்வை
என்னைச் சில சமயங்களிலாவது

நோக்காதா?
உன் ஹிருதயத்தில் ஒலிக்கும் கவிதை
என் உள்ளத்திலும்
ஒலி செய்கின்றது.

# அசரீரி

தருமத்தின் நெறி தொடர்ந்து
தருமம் தன் நெறி தொடர
நிருமித்த உலகம் தன்
நீள் வலியால் நிலை கலங்க
வாள் விசித்த வயவேந்தர் வலியொடுங்க
தோள் அசைத்து நிலைநின்ற துயரத்தோன்றல்
கோள் இசைத்த குறுமதியை மதியாத்தோன்றல்
நாள் பசப்பும் நமன் வலியை நகைத்த தோன்றல்

ஒன்றிடுக்கண் உண்டெனவும்
ஓயாது துயர் எனவும்
நின்றெடுத்த தனி வலியால்
நிலையாது வலியெனவும்
மன்றடுத்துச் சொன்னவரை
மதி நுட்பம் கொண்டவரை
கொன்றடுக்கும் சீற்றத்தால்
கோட் புலிபோல் இடித்து ஏறி
உலகீன்ற அம்மையுடை

உலகின்ற துயர் ஏற்று
உலகின்ற துயர் ஏற்ற
உயர்தோள் வாலி
பலகாலம், பலகாலம்
பயன் நைந்த பலகாலம்
உலையாத தனிக் கருணை
உன்மத்தன் வருங்காலம்
நலியாத நம்பிக்கை
நலியாதார் தனிக்காலம்
சலியாத பெருந்தவத்தால்
சார்ந்ததொரு நற்காலம்
உருவு ஆயது உறவு பெற்றது

உறவு நீத்தது உறவு மாய்த்தது
கனிவு கொண்டது கான் நடந்தது
கரவு செய்தது கரவு செய்தது
கரவு செய்து நீள் கைவிலேந்தியே

உறவு தம்பியை அணுகி நின்றது
சித்தங் கலங்கச் சிலையெடுத்து
சித்தங்கலங்கச் சினமெடுத்து
உத்தமத் தொழில் புரிந்து
ஊனுடைத்து உணர்வுதந்து
வந்தது சென்றது சென்றதென
சந்ததம் சொல்பவர் சொல்லிடவே
நொந்த மனத்தவர் சொல்லெனவே
அந்த மறிந்தவர் சொல்லெனவே
கனவின் நெறி பயின்ற
நனவின் நெறி தொடர்ந்து

நலிவுற்று
உயர் தோள் வாலி
நலிவுற்று நிலைபெற்ற
உயர்தோள் வாலி

ஃ ஃ

# பாரதிக்குப் பின்

பாரதிக்குப் பின்பிறந்தார்
பாடை கட்டி வச்சி விட்டார்
ஆரதட்டிச் சொல்வார்
அவரிஷ்டம்—நாரதனே

ஃ ஃ

வேளைக்கு வேளை
விருதாக் கவிசொல்லி
நாளும் பொழுதும்
களிஞ்சாச்சே—ஆளாக்குப்
பாலுக்கோ விதியில்லை;
பச்சரிசிக்கோ தாளம்
மேலுக் கேன் ஆசாரப்
பேச்சு?

# கங்கை நதி

கங்கை நதி,— 1
கடவுளர்கள் வாழுகிற
பனிக் கோட் டிமயம்
என்பார்
பார்வதியார் தந்தை
இமவானே ஈசனுக்கு
ஈந்த மலை என்பார்
அந்த மலை முகட்டின்
அரனார் பிறைக் கொழுந்தின்
சின்னச் சிரிப்பான
சிங்கார நிலவெல்லாம்
சங்கரனார் தன் சிரிப்பாய்
சகல நிலைக்கும் எமனாய்
அழிப்பதே ஆனந்தம்
என்பது பின்பற்றாமல்
உமையவளின்
உள்ளம் மலர்ந்ததினால்
உவகை நிலவு-அம்மா

வெள்ளம் எனப் பொங்கிவர
விரைந்து அதனைத் தழுவி
ஒன்றாய் உறைந்த
உறைபனிப்பா றைமிகுந்த
வெள்ளிமலை என்பார்
விரிகதிரோன் சந்நிதியில்
சொர்ணமலை என்பார்
பின்
சொர்க்கமலை என்பார்
வர்ணக் கலவை
மயக்கால் மதுவேறி!

ஃ ஃ

# பாட்டுக் களஞ்சியமே!

ஃ ஃ

வாக்கின் முதுகினிலே
வந்துவிழும் நினைவெல்லாம்
கற்பனையென்றே சொல்லி
காலமெனும் வீதியிலே
அந்திச் சரக்குவிற்கும்
அங்காடிக்காரிகள் போல்
முதுசொற் புலவோர்கள்
முன்பெழுதி முன்பெழுதி
முறைமுறையாய்த் தானெழுதி
கருத்தை எலும்பாக்கி
காசநோய் பற்றியபோல்
தன்னுருவைத் தானிழந்து
தத்துவத்தால் மேதினியில்
தன்னை யழித்தவர்போல்
தன்னிலே சூனியத்தைக்
காட்டிப் பின்—
சொல்வோர் முகத்தில்
சோதி ஒளிகாட்டியந்தச்

சொல்லில் படுவோர்
சொல்லிலெதோ உண்டென்று
வரட்டெலும்புதான் கடித்து
வாலாட்டிப் பொழுதயரும்
அலர்மகளின் அட்டமத்துச்
சனியான
அருமைத் திருமகனே!
பாட்டுக் களஞ்சியமே
பலசரக்குக் கடைவையேன்!
இருக்கின்ற துன்பத்தை
எடுத்தேந்தும் வல்வினையே!
சற்றேநீ மவுனம்
சாதித்தால் போதுமடா!
எழுத்தை மறந்துவிடு
எருவடுக்கிப் பிழையப்பா!
கிடக்கட்டும்...

ஃ ஃ

அடடா! சண்டாளா!
சரஸ்வதியாள் சனிவீடே!
ளகர லகரம் புரியா
நினக்கோ
லகரத்தில் அர்ச்சனைசெய்
சடையப்ப வள்ளல்பலர்!
ஏண்டா இடும்பு? இந்த
சோலிக்கு ஏன் வந்தாய்?
உடும்புப் பிடியாலே
ஊட்டிதனை நெருக்கும்...

ஃ ஃ

நாட்டுக்கவி யென்பார்
நாகணவாய்ப்புள் என்பார்
கோட்டுக்குயில் என்பார்
குருக்கத்திப்பூ என்பார்
பட்டணத்துப் பஸ்எல்லை
தாண்டி யறியார்தமை
தண்டியெனவே புகழ்வார்
பகவானருளால்
பகல்குருடர் சஞ்சீவி—
புளிய மரத்தைப்
புத்தகத்திலே மட்டும்
பார்த்தறிந்த பண்டிதரின்
பக்கபலமாய் விளங்கும்
அபிதான சிந்தா
மணியடித்து
கிராமக் கவிதைஎனும்
கிண்ணாரக் குப்பைதனை
ஊரில் சுமடேற்றும்
உண்மைசொல யாருண்டு?
கும்பல் கோமாளியைப்போல்
வேடமிட்டே நடந்தால்
கோமாளிக்கார் சிரிப்பார்?
ஊரே திரண்டு...

ஃ ஃ

# உதிரிக் கவிகள்

## 1

சிக்கறுக்க வந்தோர்
சேதி புரியாமல்
வக்கரித்த புத்தி
வழிமாறிப்போன மனம்
கொக்கரிக்க, கூடி
கூனல் மனிசரெலாம்
பொக்கை முழம்போடும்
புன்மை இயல்பம்மா!
வய்யம் சமைக்க வந்தோர்
'வளமை' புரியாமல்
பொய்யில் குளித்து, விஷப்
புகை மண்டும் கேலியம்பு
நொய்யல் மனிசர் விட
நூறாய்க் குமையுமம்மா!

## 2

வண்ண மதுக்கிண்ணம்
　　வார்த்த கவிதை யெலாம்
எண்ணக் குகையினிலே
　　எதிரொலித்து விம்முதடா.

## 3

ஏட்டையா வந்து விட்டார்
　　எழுந்திரடா, நில்லு
'ஏ'வகுப்புக் கைதியென்று
　　இடையிடையே சொல்லு!

## 4

உண்ட விஷம் போக
　　உள்ள விஷம் அத்தனையும்
கண்டு முதல் செய்தான் அக்
　　கண்ணுதலோன்—கொண்டவிழி
மானே அனைய அம்
　　மாதேவியும் அதனை
ஏனோ தரித்தாள்
　　கரு?

பாம்புக்குப் பல்லில்
　　பரனுக்கோ கண்டத்தில்

வீம்பு மனிசருக்கு
என்றாலோ?—ஓம்பும்
தருமத்தில் உண்டு
தனிவிஷம்தான் அந்த
மருமத்தை யாரறிவார்
இங்கு?

## 5

அரும்பு மலர்வதென
ஆசை முகம்தான் விரிய
விரும்பு விவாகம்
மணம்தரவே—கரும்பினிய
வாழ்வரசி கைப்பிடித்து
வளரும் நலம்பெற்று
வாழ்கவே சண்முக
நண்ப.

## 6

அவ்வை எனச்சொல்லி
ஆள்விட்டுக் கூப்பிட்டுக்
கவ்வக் கொடுத்தடித்தால்
கட்டுமா?—சவ்வாது
பொட்டுவச்சுப் பூச்சணிந்து
பூப்போல ஆடைகட்டும்
மொட்டைத் தலையனையே
கேளு.

## 7

திருச்சிக்கு என்றான்;
தென்திசைக்கே சென்று விட்டான்
கிரிச்சிச் சடாச் சத்தம்
கேட்டாயோ? உரிசசி
வச்சமடையா? வக்கு
அத்த மடையா! எச்சிற்
காசுமடையா! போ
டா!

## 8

வருகின்றேன் சென்னைக்கு;
வந்தவுடனே கதையைத்
தருகின்றேன்; தவணை சொலித்
தப்பாதே—உருவான
பாதிக்கதை இங்கே
பஞ்சணையின் கீழிருக்கு;
மீதிக்கதை அங்கே
வந்து!

## 9

பண்ணாத வம்பெல்லாம்
பண்ணிவச்சி இன்னைக்குக்
கண்ணால மின்னா
கசக்குதோ!—அண்ணாத்தே!
ஆயா வந்தாலுன்னை
அடுப்பில் முறிச்சி வைப்பாள்
போயேன் தொலைஞ்சி
போயேன்,

## 10

கையது கொண்டு மெய்யது பொத்தி
போர்வையுள் கிடக்கும் பெட்டிப் பாம்பென
சுருண்டு மடங்கி சொல்லுக்கு இருமுறை
லொக்கு லொக்கென இருமிக்கிடக்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே!

## 11

பசியா வரம் அருள்வாய் அல்லால்
நசியா நலம் அருள்வாய் முருகா

### சரணம்

கருணைமலர் பாதம் விட்டு
  காதகர்கள் வாசல்தொட்டு
கையேந்தி நின்று நின்று
  மெய்யேந்து மாசைகொன்று
கைவேல் எடுத்து வருவாய்
  மைவேல் குறத்திமுருகா!

ஃ ஃ

## 12

எங்கும் பராசக்தி கோலம்—அவள்
  எழில் இளமை இந்த்ரஜாலம்

ஃ ஃ

வண்ணத் தாமரையைக் கண்டு
சொக்கிப் பாடும் கருவண்டு

ஃ ஃ

சிந்தும் மழைமலரில் நின்று
சிற்பக் கலாபமயில் ஆடும்
கூடும் மரக்கிளையில் அன்றில் பேடு
நடாமடும் மயிலைக் கண்டு வாடும்.

ஃ ஃ

# குறிப்புக்கள்

## 1. நிசந்தானோ, சொப்பனமோ?

இந்தப் பாடல் 'சிவாஜி' 12-வது ஆண்டு மலரில் (1946-ம் ஆண்டில்) வெளி வந்தது. கவிதா தேவியான சரசுவதியை முன்னிறுத்திக் கேட்கின்ற பாவனையில் பாடப் பெற்றது. மந்திரம், தந்திரம், செய்வினை, செய்பவன் முதலியோரைப் போலவே, 'கள்ளம் விளைந்த களரை'ப் பரப்பி 'நொள்ளைக்கதை' சொல்வோரும் கூடத்தான் சரசுவதியைக் கலாதேவியாகக் கொண்டாடுகிறார்கள். இத்தனை சித்திரவதைகளையும் தாங்கிக் கொண்டு, கலாதேவி உயிர்வாழ முடியுமா? அல்லது இந்தப் புன்மைகள் எல்லாம் தன்னை வணங்க, அவள் கொலு அமர முடியுமா?—இது ஆசிரியரின் சந்தேகபாவம்: பாடல் கருத்து. புதுமைப்பித்தனின் சிறந்த பாடலில் இது ஒன்று. 'வட்ட முலை மின்னார்...ஒல்கி நடப்பதாய் உவமை சொல' என்ற வரிகள் கலிங்கத்துப் பரணி கடை திறப்புப் பாடலில் 'கலைபோயகன்ற தறியாமல் நிலவைத் துகிலாய் எடுத்துடுப்பதாய்ச்' சொல்லப்பட்டுள்ளது பற்றிய குறிப்பு.

## 2. ஓடாதீர்

இந்தப் பாடல் 1944-ம் ஆண்டில் 'கிராம ஊழியன்' ஆண்டு மலரில் வெளிவந்தது. வேளூர். வே. கந்தசாமிப் பிள்ளை என்ற புனைபெயரில் 'புதுமைப்பித்தன்' எழுதிய முதல் பாட்டு இதுதான். இந்தப் பாடல் வெளி வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர்தான் கு. ப. ராஜகோபாலன் காலமானார். அவர் இறந்த பின்னர் அவரது குடும்பத்துக்குத் தமிழ்நாடு சகாயநிதி திரட்ட முன் வந்தது. தமிழர்களின் இந்த 'தாராள மனப்பான்மை' கொண்ட நன்றியறிதலைக் கண்டெழுந்த வயிற்றெரிச்சலைத்தான்,

**ஐயா, நான்**
**செத்ததற்குப் பின்னால்**
**நிதிகள் திரட்டாதீர்!**

என்ற வரிகள் பிரதிபலிக்கின்றன. கலைஞனைச் சாக விட்டு விட்டு, அவனது புகழுடம்பைத் தூக்கி வைத்துக் கூத்தாடும் ரசிகத்தனத்தைக் குத்திக் காட்ட எழுந்த 'வீறாப்புத் தார்க் குச்சி' தான் இந்தப்பாடல்.

**3. உருக்கமுள்ள வித்தகரே!**

'ஓடாதீர்!' என்ற பாடலைப் படித்த ஒரு எழுத்தாளர் 'மளிகைக் கடை மாணிக்கம் செட்டியார்' என்ற புனைபெயரில் 'ஓடும்ஓய், உம்மால் ஒரு மண்ணும் ஆகாது!' என்றுபுதுமைப்பித்தனின் பாணியிலேயே புதுமைப்பித்தனின் பாடலுக்கு ஒரு எதிர் வெட்டுப் பாடல் எழுதி. 'கலாமோஹினி' என்ற பத்திரிகையில் வெளியிட்டார். அந்தச் 'செட்டியா'ருக்கு மீண்டும் 'கிராம ஊழியன்' மூலம் புதுமைப்பித்தன் அளித்த பதில்தான் 'உருக்கமுள்ள வித்தகரே! என்ற பாடல்

**4. காதல் பாட்டு**

இது 'சிவாஜி' பத்திரிகையில் வெளிவந்தது. இன்றைய நவநாகரிக யுவ யுவதிகளின் வாழ்வில் காதல் என்பது எவ்வளவு மலிவாக, இழிவாகப் போய்விட்டது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக எழுதப்பட்ட நையாண்டிப் பாடல் இது. இந்தப் பாடலுக்கும் ஒரு எதிர்ப் பாடல் வந்தது. 'துறைவன்' என்ற புனைப் பெயரில் கவிதை எழுதும் ஒரு கவிஞர் 'பத்திரகிரிக் கும்பல்' என்று மகுடமிட்டு அந்தப் பாடலை எழுதினார். அந்தப் பாடல் புதுமைப்பித்தனுக்குக் கிடைத்தது. எனினும் அது எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை.

**5. மாகாவியம்**

இது திருவனந்தபுரம் எஸ். சிதம்பரம் வெளியிட்ட 'கவிக்குயில் மல'ரில் வெளிவந்த பாடல். இந்தப் பாடலின்

முதல் நான்கு வரிகள் புதுமைப்பித்தனும் நானும் சென்னை தமிழ்ப் புத்தகாலய மாடியில்,புத்தகாலய அதிபர் கண முத்தையாவுடன் பேசிக் கொண்டிருந்த போது எழுந்தன; எதையோ கிண்டல் செய்வதற்காக, பேச்சு வாக்கில் இந்தப் பாடல் அவரது வாக்கில் எழுந்தது. எனினும் 'மாகாவியம்' திருவனந்தபுரத்திலேதான் பூர்ண உருப் பெற்றது; உருப் பெற்ற வரலாறும் ருசிகரமானது. அது பற்றி நான் எனது 'புதுமைப்பித்தன்' நூலில் குறிப்பிட்டிருக்கிறேன். (பக்கம் 134—135)

இந்தப்பாடலில் ராம கதையைப் பற்றிப் புதுமைப்பித்தன் பாடியுள்ள பகுதி ராமாயண ரசிகர்களுக்கு ஒரு கேள்விக் குறியையே எழுப்பக் கூடியது. தருமத்தை நிர்த்தாரணம் செய்ய வந்த தெய்வப் பிறவியின் தர்மா தர்மத்தைப் பற்றிய சர்ச்சையை அந்தப் பகுதி கிளப்பிவிடுகிறது.

**அன்னவளைத் தீக்குழியில்**
**அருகிருந்தோர் நம்புதற்காய்**
**இறக்கி, தருமத்தை**
**ஏந்தி எடுத்து**
**அரியாசனத் தேற்றும்**
**அதிசயங்கள்**

பற்றிய விசாரணைதான் புதுமைப்பித்தன் எழுதிய 'சாப விமோசனம்' என்ற அகலிகை பற்றிய கதையிலும் பிரதி பலிக்கிறது.

## 6. இணையற்ற இந்தியா

இந்தப் பாடல் 'கலா மோஹினி' பத்திகையில் வெளி வந்தது. 1945-ம் ஆண்டில் எழுதியது. 'இந்தியா தேசம்— இணையற்றதோர் தேசம்!' என்ற அடிகளில் பொதிந்துள்ள சிலேடை, நையாண்டி பாவத்துக்கு மேலும் வலுக் கொடுக்கிறது. நமது நாடு இருந்த இழிநிலையைக் குத்திக் காட்டும் நையாண்டிக் கவிதை இது.

## 7 தொழில்

14—10—1945 அன்று திருச்சி ரேடியோ நிலையத்தார் 'தொழில்' என்ற தலைப்பில் ஒரு கவியரங்கம் நடத்தினார்கள். அந்தக் கவியரங்கில் புதுமைப்பித்தன் அரங்கேற்றிய பாடலே இது. தொழிலைப் பற்றி எதுவும் சொல்லாமலே, 'கொல்லாதீர், என்னை விடும்' என்று சமத்காரமாக விடை பெறுவதும் கவியரங்கின் முன்னிலையிலேயே,

**கொட்டாவி விட்டதெல்லாம்**
**கூறுதமிழ்ப் பாட்டாச்சே**
**முட்டாளே இன்னமுமா பாட்டு?**

என்று அறைந்து கேட்பதும் ரசிக்கத்தக்க விஷயங்கள்.

**வாகையடி முக்கு**: இது திருநெல்வேலி ரதவீதி மூலைகளில் ஒன்று; தேர்த் திருவிழாவில் தேர் திரும்ப வேண்டிய முதல் திருப்பம் இது. அதாவது நாலு ரத வீதிகளையும் சுற்றிவர வேண்டிய தேர் முதல் திருப்பத்திலேயே சக்கரம் புதைந்து கிளம்ப மாட்டாமல் தவிப்பது போல், எடுத்த எடுப்பிலேயே அதாவது பாட்டின் நான்கு அடிகளில்-முதலடியிலேயே பாட்டுத் தடைப்பட்டு நின்றுவிட்டது என்ற அங்கலாய்ப்பைப் புலப்படுத்துவதற்காகக் கையாண்ட உருவகம் இது.

## 8 இருட்டு

இது புதுமைப்பித்தன் என்னிடம் எழுதிக் கொடுத்த பாடல். அவர் முதலில் எழுதிய 'பாதை' என்ற பாடலின் மறு உருவம். இரண்டிலும் கருத்து ஒன்றுதான். பாதை என்ற பாடல் அவருக்குத் திருப்தியளிக்காததால், அதை வேறுவிதமாக எழுதியதன் பலன் இந்தப் பாடல். 'இருட்டு' என்ற தலைப்பு நான் கொடுத்தது. இந்தப் பாடல் புதுமைப்பித்தன் காலமான சமயத்தில் 'சக்தி' பத்திரிகை

யில் வெளி வந்தது. இந்தப் பாடலின் கருத்தைவிட, உருவம்தான் அதி அற்புதமாக விளங்குகிறது.

**9 பாதை**

'இருட்டு' என்ற பாடலின் முந்திய உருவம்; இது இப்போதுதான் முதன் முறையாக அச்சேறுகிறது.

**10 திரு ஆங்கில அரசாங்கம்**

இது 'ஊழியன்' பத்திரிகையில் வெளிவந்த பாடல். மகாத்மா காந்தியின் தேசிய இயக்கம் உச்ச நிலையில் இருந்த சமயத்தில் 1934-ம் ஆண்டில் எழுதப்பட்டது. சமயாசார்யப் புலவர்களின் பதிக முறையைப் பின்பற்றிப் பாடிய நையாண்டி இது. 'ஆள்வார்' என்ற சொல்லில் உள்ள சிலேடை பாடலுக்கு மேலும் வலுவூட்டுகிறது.

**11 கடவுளுக்குக் கண்ணுண்டு!**

இந்தப் பாடல் 'கிராம ஊழியன்' ஆண்டு மலரில் வெளிவந்தது. தெய்வத்தைப் பற்றிய கற்பனையைக் கொண்டு தெய்வத்தைப் பற்றிய ஒரு எச்சரிக்கையை விடுக்கிறது இந்தப் பாடல்.

**தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலே**
**தீத்தானும் உன்றன் சிரிப்பிலே—தீத்தானுன்**
**மெய்யெல்லாம் புள்ளிருக்கும் வேளூரா, உன்னையிந்தத்**
**தையலாள் எப்படிச் சேர்ந் தாள்?**

என்ற காளமேகக் கவிராயரின் பாடல், 'கடவுளுக்குக் கண்ணுண்டு' என்ற இந்தப் பாடலுக்குரிய கற்பனையைப் புதுமைப்பித்தனுக்கு அடியெடுத்துக் கொடுத்திருக்கலாம் எனக் கருதுகிறேன்.

**12 பொங்கல் நம்பிக்கை**

1946-ம் வருஷத்தில் நான் பொங்கல் தினத்தன்று "பொங்கல் செய்தி" என்ற தலைப்பில் 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனாரிங்கில்லை...' என்ற பாடலில் சில திருத்தங்கள் செய்து பலருக்கு அனுப்பிவைத்தேன். அவர்

களில் புதுமைப்பித்தனும் ஒருவர். அதற்கு அவர் எழுதிய பதிலே 'பொங்கல் நம்பிக்கை' என்ற பாடல். இந்தப் பாடலுக்கு நானும் நாலு வெண்பாக்களில் அவருக்குப் பதில் எழுதினேன். அந்தப் பதில் இங்கு தேவையில்லை அல்லவா? இதுபற்றி விவரமாக நான் எனது "புதுமைப் பித்தன்" சரிதையில் [பக். 174-175] குறிப்பிட்டிருக் கிறேன்.

**13 அல்வா**

இந்தப் பாடலும் 1946-ம் ஆண்டில் புதுமைப்பித்தன் எனக்கு எழுதிய பாடல்தான். திருநெல்வேலி அல்வா வாங்கி வா என்று எனக்குக் கட்டளையிட்டுவிட்டு, விருதுநகர் ஸ்டேஷனில் தம்மைச் சந்திக்குமாறு தெரிவித்து எழுதிய சீட்டுக்கவி இது. இதுபற்றிய ருசிகரமான விவரங்களை புதுமைப்பித்தன் சரிதையில் [பக்கம் 172—73] காண லாம்.

**14 காலைக் கடல்**

இது 'மணிக் கொடி' பத்திரிகையில் வெளிவந்த வசன கவிதை! வசன கவிதையில் புதுமைப்பித்தனுக்கு நம்பிக்கை கிடையாது. எனினும், மணிக்கொடி எழுத்தாளர்கள் தமிழில் வசன கவிதை என்ற புதிய சோதனையைச் சிருஷ்டித்து வந்த காலத்தில், புதுமைப்பித்தன் இந்தப் பாடலை ஆங்கில மூலத்திலிருந்து மொழிபெயர்த்து உரை நடை உருவத்தில் எழுதினார். எனினும் இந்தப் பாடலுக்கு வசன கவிதை என்று மகுடமிட்டு, 'மணிக்கொடி'யாளர்கள் பதிப்பித்திருந்ததால், இந்தத் தொகுதியில் இந்தப் பாட லும் இடம் பெறுகிறது.

**15 அசரீரி**

இது ஒரு முற்றுப் பெறாத கவிதை முயற்சி வாலி வதையைக் கருத்தாகக் கொண்டு புதுமைப்பித்தன் எழுத முயன்ற ஒரு கவிதை நாடகத்தின் தொடக்கம் எனத் தெரிய

வருகிறது. பாடலுக்கு முன்னர் கீழ்க்காணும் முன்னுரை காணப்படுகிறது.

### முதல் காட்சி

'கிஷ்கிந்தை மலைச்சாரல், நேரம் இரவு. வாலிக்குப் பிறகு அரசுரிமை வகித்து வரும் சுக்ரீவனுடைய தலை நகரின் கோட்டை கொத்தளங்கள், மலைப் பாறைகள், குன்றுகளுக்கிடையே தூரத்தில் தெரிகின்றன. இருட்டு என்ற அரக்கன் தனது தோள்மீது தூக்கிச் சுமக்கும் மாயக் கோட்டைபோல, இருட்டுக்குமேலிருட்டாகத் தூரத்தில் தெரிகிறது.

வலது பக்கத்தில் செங்குத்தான பள்ளத்தில் பம்பைப் பொய்கை; கொடிகளும் மரங்களும் இச்சைப்படி வளர்ந்து செறிந்த காடு. அதனிடையே மேடை போன்ற கற்பாறையும் அதையடுத்த குகையும் இருட்டுக்குள் இருட்டாக அமைந்து மயக்குகிறது.

இரவில் புயல் சங்கார மூர்த்தி போல நடம்புரிகிறது; சிங்கநாதம் செய்கிறது; சிரிக்கிறது. பிரளய கால ருத்திரனது பேய்க்கணங்கள் போல, காட்டு மரங்கள் தலை விரித்து ஆடுகின்றன. எலும்புக்கூடுகள் நெறுநெறென இற்று விழுவது போல, மரக்கிளைகள் ஒடிந்து விழுகின்றன. சங்காரமூர்த்தியின் கற்றைச் சடையில் தேங்கிய கங்கை, கூத்தின் வேகம் தாங்க முடியாது சிதறுவது போல மழைத்தாரைகள். சடையுடன் நெரிந்து சீறும் நாகத்தின் சீறல் போன்ற காற்றின் ஊங்காரம். சிவன் சிரிப்புப் போன்ற மின்னல் இடி.'

0 0 0

இந்த முன்னுரையின் வசனமும், கற்பனையும் வளமும் ரசிகர்களுக்குப் பெரு விருந்து. 'அசரீரி' என்ற தலைப்புடன் இசை நாடகம் தொடங்குகிறது. பாடலின் போக்கையும் உருவத்தையும் பார்த்தால் மறைமுகமான பல

குரல்கள் அசரீரி போன்று மாறி மாறி ஒவ்வொரு அடியையும் பாடிவர வேண்டும் என்று புதுமைப் பித்தன் கருதியிருக்கலாம் என நினைக்கிறேன். வாலியின் புகழை மாறி மாறிக் குரல் மாற்றத்தோடு பாடினால்தான் உண்மையான வேகம் தொனிக்கும்.

## 16 "பாரதிக்குப் பின்"

இது பாரதியைப் பற்றி நானும் புதுமைப்பித்தனும் சென்னை டிராம் ஸ்டாப்பில் நின்றுகொண்டு பேசிக் கொண்டிருந்தபோது, அவர் கூற முனைந்த பாடலின் குறையுருவம். இதுவும் முற்றுப் பெறாமலே நின்று விட்டது; அகப்பட்ட நறுக்குத் தாளிலும் இந்தக் கவிதை அபூர்ணமாகவே உள்ளது.

## 17 கங்கை நதி

கங்கை நதியைக் கருப்பொருளாகக் கொண்டு புதுமைப் பித்தன் பாடிய அரைகுறைக் கவிதை. இந்தப் பாடல் நறுக்குத்தாளில்தான் காணப்பட்டது. புதுமைப்புத்தன் பூனாவில் இருந்த சமயத்தில் எழுத முயன்ற முயற்சி என்று தெரிகிறது.

## 18 "பாட்டுக் களஞ்சியமே"

இந்தப் பாடலும் 'கங்கை நதி'யின் நறுக்குகளுடனேயே காணப்பட்டது. தனித்தனித் தாள்களில் அரையும் குறையுமாகப் பல பகுதிகள் காணப்பட்டன. அவற்றைக் கூடிய வரை தொடர்புறுத்திய வரிசைதான் இதிலுள்ள பகுதிகள். இந்தப் பாடலும் புதுமைப்பித்தன் பூனாவில் இருந்தபோது எழுதப்பட்டதெனத் தெரிகிறது. பாடல் பகுதிகளைப் பார்க்கும் போது, புதுமைப்பித்தன் இந்தப் பாடலை யார் மீதோ பிரயோகித்துப் பாட முயன்றதாகவே தெரிகிறது. எனினும் அந்தப் 'பாட்டுடைத் தலைவன்' யாரெனப் புரியவில்லை,

## 19 உதிரிக் கவிகள்

புதுமைப்பித்தன் தம் வாழ்நாளில் எழுதிய கடிதங்களில் கூட சில கவிதைகளைத் தீட்டிவிடுவார். சில சந்தர்ப்பங்களில் ஆசுகவி போலப் பாடல்கள் சொல்வார்; எழுதுவார். அப்படிப் பல பாடல்கள் உண்டு. மேலும் அவர் எழுத முயன்ற பல பாடல்கள் உருப்பெறாமல் இடைவழியில் நின்று போனதுமுண்டு. அப்படிப்பட்ட பாடல்களே இந்த உதிரிகள்.

**1. ''சிக்கறுக்க வந்தோர்...**

இந்தப் பாடலை எப்போது எதற்காக எழுதினார் என்று தெரியவில்லை. ஒரு துண்டு நறுக்குத் தாளில் இந்தப் பாடல் காணப்பட்டது. 'கூனல் மனிசரின் போக்கை முழம் போடும் புன்மை' யைப் பற்றிய பாடல் இது.

**2. ''வண்ண மதுக்கிண்ணம்...**

இந்தச் சிறுபாடல் 'சோமு'வின் 'இளவேனில்' என்ற பாடல் தொகுதியைப் பாராட்டி, புதுமைப்புத்தன் எழுதிய கடிதத்தில் உள்ளது. 'முல்லை'யில் வெளிவந்தது.

**3. ''ஏட்டையா வந்துவிட்டார்...**

இதுவும் 'சோமு'வுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் உள்ளது. அஞ்சியஞ்சிச் சாகும் தமிழரின் 'ரெண்டுங்கெட்டான்' நிலையைச் சுட்டிக்காட்ட எழுதியது. இது 'கலைமகள்' பத்திரிகையில் வெளிவந்தது.

**4. ''உண்ட விஷம்போக...**

இந்த இரு பாடல்களும் 'சோமு'வுக்கு எழுதிய வேறொரு கடிதத்தில் காணப்படுபவை. 'ரிப்பேர் செய்யவும்' என்ற குறிப்புடன் அனுப்பப்பட்ட பாடல்கள். இதுவும் 'கலைமகள்' பத்திரிகையில் வெளிவந்தது.

**5. ''அரும்பு மலர்வதென...**

இது சென்னை நவயுகப் பதிப்பகத்தின் உரிமையாளர் ராம. சண்முகத்தின் திருமணத்துக்கு அனுப்பிவைத்த வாழ்த்துப்பா. எழுதிய தேதி 22-8-47.

**6. ''அவ்வை எனச் சொல்லி...**

ஜெமினியின் அவ்வையார்படத்துக்குப் புதுமைப்பித்தன் கதை வசனம் எழுதி வந்த காலத்தில் எழுதிய பாடல் எனத் தெரிகிறது; அவர் கைப்பட எழுதிய ஒரு நறுக்குத் தாளில் காணப்பட்டது.

**7. ''திருச்சிக்கு என்றான்...**

இது ஒரு ரேடியோப் பேச்சுக்காக எழுதப்பட்ட கட்டுரையில் உள்ள பாடல். இந்தப் பாடலை அவர் ஏன் எழுதினார் என்ற விவரம் 'புதுமைப்பிததன்' சரிதையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (அத். 17, பக்கங்கள் 101—103)

**8. ''வருகின்றேன் சென்னைக்கு...**

புதுமைப்பித்தன் ஒரு சினிமாப் படத்துக்கு வசனம் எழுதுவதற்காக மதுரை சென்றார். கூட்டிச்சென்ற நபர் குறிப்பிட்ட காலத்தில் புதுமைப்பித்தனைச் சந்தியாத காரணத்தால்,புதுமைப்பித்தன் மீண்டும் சென்னைக்கே திரும்பி வந்துவிட்டார். வரும் சமயம், மதுரையில் தமது ஜாகையில் அந்த நபருக்காக புதுமைப்பித்தன் விட்டுவந்த நறுக்கு இது 1947-ம் ஆண்டில் நடந்தது.

**9. ''பண்ணாத வம்பெல்லாம்...**

இந்தப் பாடலும் அவர் ஒரு சமயம் வேடிக்கையாகச் சொன்ன பாடல்தான். இது பற்றிய குறிப்பையும் புதுமைப் பித்தன் சரிதையில் (பக். 180—81) காணலாம்.

**10. கையது கொண்டு...**

தற்சமயம் கோயமுத்தூர் சக்தி காரியாலய அதிபராயிருக்கும் கே. டி, தேவர் பம்பாயிலிருந்த காலத்தில் புதுமைப்பித்தன் பூனாவிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில் உள்ள வரிகள் இவை. அந்தக் கடிதத்தில்,

''...பழைய காலத்துத் தர்பாராக இருந்தால், மதுரை மண்டபத்தில் முடங்கிக்கிடந்து நாரை மூலம் தூது விட

லாம்'' என்ற வரிகளோடு இந்தப் பாடலை எழுதி ''என ஒருரங்கூன் வைரத்தைத் தயார் செய்து அனுப்பி அவளைத் திருப்தி செய்விக்கலாம். ஆனால் இது தபால் யுகமாச்சுதே!' என்று புதுமைப்பித்தன் முடித்திருக்கிறார். காச நோயால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சமயத்திலும் அவரிடம் ஹாஸ்ய உணர்ச்சி எப்படியிருந்தது என்பதை நிரூபிக்கும் அத்தாட்சி இந்தப் பாடல். ''நாராய், நாராய், செங்கால் நாராய்!'' என்று தொடங்கும் சத்திமுத்தப் புலவரின் பாடலை அடிப்படையாகக் கொண்டு எழுதிய நையாண்டி இது.

**11 ''பசியா வரம் அருள்வாய்**

'வாக்கும் வக்கும்' என்ற தமது நாடகத்தில் சேர்த்துக் கொள்வதற்காக, புதுமைப்பித்தன் இநதப் பாடலை எழுதியிருக்கிறார் என்று தெரியவருகிறது.(வாக்கும் வக்கும்-பக். 15ஐப் பார்க்கவும்.) புதுமைப்பித்தன் சாகித்தியங்கள் கூட எழுதியிருக்கிறாரா என்று பலர் வியக்கலாம்.சாகித்ய இலக்கணத்துக்கு இந்தப் பாடல் கட்டுப்பட்டால்,இது சாகித்யம் தான். ஏனெனில் புதுமைப்பித்தனின் சங்கீத ஞானம் அப்படி. அதைப்பற்றிய ருசிகரமான தகவல்களை அறிய விரும்புவோர் புதுமைப்பித்தன் சரிதையில் (அத். 20 பக். 150—153) படித்து ரசிக்கலாம்.

**12. ''எங்கும் பராசக்தி கோலம்...**

இந்தப் பாடலும் 11—வது பாடலைப் போன்றதொரு முயற்சிதான். புதுமைப்பித்தனின் 'பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்' படத்துக்காக எழுதிய பாடல் என நினைக்கிறேன். 'பர்வதகுமாரி'பற்றிய விவரங்கள் புதுமைப்பித்தன் சரிதையில் (அத். 15.) விரிவாகக் காணப்படும்.

—ரகுநாதன்

# சிற்றன்னை

## 'மார்க்' பார்க்க வந்த மன்மதன்!

சுந்தரவடிவேலு சர்வகலாசாலை பி. ஏ. பரீட்சையில் இங்கிலீஷ் இலக்கியத்தில் பிரதம பரீட்சகர். அவருக்குக் கீழ் பல உதவிப் பரிசோதகர்கள் உண்டு. மாணவர்கள் எழுதிய பதில்களைத் திருத்தி மார்க்கிட்டுப் பட்டியல் அனுப்புவதை எல்லாம் சரிபார்த்துப் பரீட்சை போர்டுக்குச் சமர்ப்பிக்கும் பொறுப்புடன், சில பதில்களைத் தாமே திருத்தி நிர்ணயிக்கும் பொறுப்பையும் இழுத்துப்போட்டுக் கொண்டிருக்கிறார்.

தன் மகன் ராஜாவைப் பறிகொடுத்து உன்மத்தனாகி மனம் ஸ்தம்பித்துப் போய், சொல்ல முடியாத மன உளைச்சல் என்ற சிலுவையை ஏற்ற பிறகு, இந்த வருமானமுள்ள வேலை வேப்பங்காயாகவே இருந்தது; என்றாலும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு கடைசி நேரத்தில் உதறித் தள்ளுவதற்கு சர்வகலாசாலையில் மாற்றுக் கைகள் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார்களா?

அதனால் அசுரகதியில் வேலையில் ஈடுபடுகிறார். இந்த வேலை அவருடைய மனவேதனைக்கு 'ஒத்தடம்' கொடுத்தது.

சுந்தரவடிவேலு குஞ்சுவையும் மறந்தார் என்று சொல்லும்படி தம்முடைய வாசிக்கும் அறையிலேயே அடைந்து கிடந்து வேலை பார்க்கிறார். என்ஜினுக்குத் தண்ணீர் ஊற்றுவதுபோல் குஞ்சுவோ மரகதமோ காப்பி கொண்டு போவார்கள்.

''அப்பா காப்பி!'' என்ற குழந்தையின் மழலை மந்திரம் அவருடைய கைகளை நீட்டச் செய்யும். சமயா சமயங்களில் அவளை இழுத்து முத்தமிடச் சொல்லும்.

மரகதம் அவருடைய வேலைக்குக் குந்தகம் வராமலும் வேலையால் அவரது உடல் க்ஷீணிக்காமலும் அவர் அறியா மலே அவரைப் போஷித்துப் பணிவிடை செய்தாள். பணி விடையில் மனம் சிறிது ஆறுதல் கொண்டது. பணிவிடை யில் குஞ்சுவும் மரகதமும் ஒன்றினர்.

மாணவர்—உலகத்தில் சர்வ விவேக அளவுகோல்—கடவுள் தமக்கு அந்தத் தன்மையைப் பெறுவதற்கு எத்தனை மார்க் வாங்கினார் என்றுகூடக் கேட்கும் சர்வ சூன்ய மனத்தெம்பு படைத்தவர்கள். மாணவர்களும் அவர்கள் புத்தியைப் 'பாலிஷ்' செய்து தயாரிக்கும் அவர் களுடைய ஆசிரியர்களும் சர்வகலாசாலைகள் வித்வத்தின் விசேஷத் தன்மைபூண்டு, தன் திறமையால் பூத்து மலராமல் சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டின் எட்டாங்கிளைத் தாயாதியாக சிவப்பு நாடா வித்தையைச் செய்து வருவதால், மார்க்கை நம்பாத ஆசிரியர், பூஜை செய்யும் விக்கிரகத்தின் தெய்வீகச் சக்தியை நம்பாத பூசாரி மாதிரி ஆகிவிடுகிறார்.

அப்படிப்பட்ட பூசாரி சுந்தரவடிவேலு. இந்த சர்வ கலாசாலைக்கு அவர் தகுதியற்றவர். நிர்வாணலோக உபமானம் மாதிரி. இருந்தாலும் செய்கிறதைச் சரியாகச் செய்ய வேண்டும் என்பதில் அபார 'உரித்து' உள்ளவர்.

சுந்தரவடிவேலு தம் வீட்டுக்குள் அடைபட்டுப் பையன்கள், ''அதற்கென்ன சந்தேகம்'' என்று பேத்தி

அழைப்பதையெல்லாம் சகித்து, அவர்கள் விதியை நிர்ணயிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கையில், தெருவில், அவர் வசம் தன் விதியைச் சிக்கவைத்துத் தவிக்கும் ஒரு மாணவன் நடைபோடுகிறான். மார்க்கை அறிந்து கொள்ளுவதிலும் சாத்தியமானால் அதைத் திருத்துவதிலும் மாணவர் காட்டும் பிரயாசை மஹிராவணன் உயிரைத் தேடிப் போன அநுமாருக்குக்கூட இருக்காது. பணத் தெம்பு சிறிது இருந்துவிட்டாலோ கேட்கவே வேண்டியதில்லை. குறிப்பிட்ட ஆசிரியர் இந்த விபசாரித்தனத்தில் ஈடுபடுகிறவராக இல்லாவிட்டால், அவர் வீட்டு வேலைக்காரனின் யோக்கியதாம்சம் அவர்கள் கவனத்திற்கு வரும்.

அப்படி வந்தவனுக்கு சுந்தரவடிவேலுவுடைய வேலைக்காரன் எஜமான் வெளியே போயிருக்கும் சமயத்தில் பையனை அனுமதிப்பதாக வாக்களித்து விட்டான். ஆனால் சுந்தரவடிவேலு வீட்டை விட்டு வெளியேறுகிறவராகத் தென்படவில்லை.

இந்தப் பையன் தெருவில் நடைபோட்டுக் கொண்டு மார்க்கின்மேல் ஏகாக்கிர சிந்தையுடன் எவ்வளவு நாழி யோகம் செய்ய முடியும்? கண்களை நாலா திசையிலும் திருப்பி விட்டான்.

சுந்தரவடி வேலுவின் படுக்கையறை வீட்டின் மாடியில் இருந்தது. அதில்தான் மரகதம் தன் உடைகளை வைத்துக் கொண்டிருப்பது. அவள் உடை மாற்றுவது என்றாலும் தலை கோதிச் சீவிக் கொள்ளுவது என்றாலும் அங்கே தான்.

மாணவன், பலமுறை பரீட்சை மண்டபத்தில், புத்தி சாலித்தனத்தைச் சூது விளையாடிப் பார்த்தும் 'சலியாத தனியாண்மைத் தருகண் வீரன்.' Moffussal Graduate மோஸ்தர். ஆயிரக்கால் மண்டபம் அமைக்க ஆரம்பித்து

இரண்டு தூண்களை நிறுத்தியபின் காரியத்தையே மறந்து போனதுபோலக் கன்னத்திற்கு ஒரு தூண் கட்டிய கேரா. தண்ணீர் விட்டுத் தளதளப்பாக வளர்க்காதது போன்ற கனத்த மயிரை அரும்பு மீசையாக்கும் முயற்சி. வர்ணம் பூசிய வெள்ளைக்காரச்சி உதடுபோலச் சிவப்பேறிய உதடு. நீளக் கிராப்பு—சீவாமல் பேணாமல் இருந்தால் அகில இந்திய பேன் காங்கிரஸ் கூடுதற்கேற்ற இடவசதி. கழுத்திலே மனத்தின் பெட்டைத் தனத்தைக் காட்டும் மெல்லிய தங்கச் சங்கிலி. இங்கிலீஷ் ட்வில் ஷர்ட்; கழுதை பொதி சுமந்த மாதிரி பாத் டவல் அலங்காரம். இடையில் நிர்வாணமில்லை என்பதை உய்விக்க வேஷ்டி. காலில் பெட்டைமாறி சிலிப்பர். (Second Rate cinema actor cum saloon barber appearance)

இப்படியான அலங்காராதிகளுடன் 'ரோந்து வந்து கொண்டிருக்கும் வாலிபன் கண்கள்; சட்டைக்காரச்சியைக் கண்டால் பயத்தில் கண்களைத் திருப்பிக்கொள்வதும், தமிழச்சியைக் கண்டால் Field glass Lens மாதிரிக் கண் களைத் திறப்பதுமாகக் காலங் கழிக்கிறான். கிராமப்புறத் துப் பயம். இவன் கண்களுக்கு மரகதம் தென்பட்டாள்.

வகிடு எடுக்க ஜன்னல் பக்கம் வெளிச்சத்திற்காக நின் றால், தன் பிரத்தியேகக் கண்களுக்கு என்று நினைத்து விட்டான் இந்த மன்மதன். நிர்ப்பயமாக மச்சில் உடை மாற்றிக்கொள்ளுபவளுக்குக் கீழே ஒரு ஜோடிக் கண்கள் தெறிகெட்டு வெறித்துக்கொண்டு ஏறச் சொருகுகின்றன என்பது தெரியாது. இவன் தனக்காகவே இந்த பிரத்தி யேகக்காட்சிகள் என்று முடிவு கட்டி 'சந்தர்ப்பத்திற்காக'க் காத்திருக்கிறான்.

சந்தர்ப்பம் வந்து சேருகிறது.

சுந்தரவடிவேலு வேலை முடிந்து விட்டதால் பட்டியல் களுடன் பரீட்சை போர்டுக்குப் புறப்படுகிறார்.

வேலைக்காரனுக்குத் தெரியுமா மார்க் பட்டியல் போய் விட்டது என்று? எஜமானியம்மாள் வீட்டுக்குள்ளிருக்கும் சமயம் பார்த்து முன் வாசல் கதவைத் திறந்து வைத்து விடுவதாகவும் ஓசைப்படாமல் போய் 'மார்க்' பார்த்துக் கொண்டு திரும்பிவிடவேண்டும் என்றும் ஏற்பாடு செய்கிறான்.

வேலைக்காரன் மெதுவாகக் கதவைத் திறந்து வைத்து விட்டுப் போய்த் தெருக்கோடியில் நிற்கும் பையனிடம் சொல்லிவிட்டுப் போய்விடுகிறான். 'சந்தர்ப்பம்' வந்து விட்டது. எப்படி உபயோகப்படுத்திக் கொள்ளுவது என்ற பிரச்னையாகிவிட்டது. எப்படி இருந்தாலும் மோட்டாரும் கீட்டாரும் வைத்த புரொபஸர் அல்லவா?

குஞ்சு தனியாகத் தானே விளையாட்டுக் காட்டிக் கொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறது. சிறிது தூரத்தில் பால் நிறைந்த ஒரு பீடிங் பாட்டில்; அந்தக் கயிறு கட்டிய ரயில் என்ஜின் கேட் குத்துக்கல் போல் இருக்கிறது.

குழந்தை, வட்டு விளையாடுகிறது. "நீ தான் தோத்தே!" என்று யாரையோ சொல்லிக்கொண்டு மறுபடியும் தன் ஆட்டத்தை ஆடுகிறது.

குழந்தைக்கு நொண்டியடிக்க வரவில்லை; நொண்டியடிப்பது போலக் காலை உயர்த்திவிட்டுக் கடகடவென்று ஓடி நின்று காலைத் தூக்கிக் கொள்கிறது.

இப்படியாகக் கிட்டு......சர சரவென்று வெளிக் கேட்டைத் தாண்டிக் கொண்டு உள்ளே பிரவேசிக்கிறான்.

மரகதம் வியவகார அறிவு ஜாஸ்தியாக இருந்தாலும் குழந்தைதான். படம் பார்ப்பதில் ரொம்பப் பிரியம்.

குஞ்சுவுக்கென்று சுந்தரவடிவேலு வாங்கிக் குவித்த படப் புத்தகங்களை எல்லாம், யாரும் இல்லாத சமயத்தில் தனியாக இருந்துகொண்டு ரசிப்பாள்,

குழந்தை வெளியே விளையாடிக் கொண்டிருக்கிறது. அவர்களோ வெளியே போயிருக்கிறார்கள் என்று நடு ஹாலில் நாற்காலியில் கூட உட்காராமல் தரையில் குப்புறப் படுத்த வண்ணம், மிருகங்கள், பட்சி ஜாதிகள் முதலியவை உள்ள படப் புத்தகம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். உடை குலைந்து முன்தானை சற்று விலகிக் கிடக்கிறது.

வேலைக்காரன் வந்து சொல்லிவிட்டுப் போகும்முன் வழியில் வந்து படுத்துக் கிடந்தால் நிச்சயம் 'காதல்' தான் என்று காகதாளி நியாயமாக நிச்சயப்படுத்திக் கொள்கிறார் ஸ்ரீமான் மாணவர்! சிறிது நேரம் ஜன்னல் அருகிலேயே நின்று கொண்டிருக்கிறான் மாணவன்; அழைப்பு வரும் என்று. பாவம் அப்படி ஒன்றும் வரவில்லை.

மரகதத்தைக் கவர்ச்சித்த படம் பஞ்சவர்ணக் கிளி. முட்டையுடன் கூடிய கூண்டு. பட்சி பறந்துவந்து கூண்டருகில் உட்காரும் பாவனையில் இருக்கிறது. தாய் வீட்டில் இருக்கும்பொழுதே அவளுக்குக் கிளி வளர்க்க வேண்டும் என்ற ஆசை. ஆனால் பிறந்த வீட்டில் அதற்கு இருந்த நிரந்தரத் தடை புருஷனிடமும் அதைச் சொல்ல மனத் தெம்பு கொடுக்கவில்லை.

அதற்கு அப்புறம் அடுத்த படத்தைத் திருப்புகிறாள்.

பையன் கதவைத் திறக்கிறான்.

அடுத்த படம் குரங்குப் படம், ஊராங்-ஊடாங் ஜாதி. பெரிசும் சிறிசுமாகக் கிளையில் உட்கார்ந்திருக்கின்றன. அதன் கிழடுதட்டிய முகத்தைக் கண்டால் அவளுக்கு எப்பொழுதும் சிரிப்பு வரும். ஆகையினால் 'களுக்' என்ற சிரிப்பு அத்துடன் நின்றது...

பையனுக்கு 'லவ்வே' என்று ஊர்ஜிதமாகிவிட்டது.

அவள் நிறுத்திய காரணம் சோக அலைகளே.

ராஜா இருக்கும்போது, ராஜாவும் குஞ்சுவும் அதைப பார்த்து ரசிப்பதும் சிரிப்பதும், "உன்னைப்போல் இருக் குடா" என்று குஞ்சு சொல்வதும், அவன் அதற்கப்புறம் அவளைப் போலத்தான் இருக்கு என அழுத்திக் கத்து வதும், அப்பாவின் தீர்ப்புக்குப் போவதும், அப்பா இரண்டு பேரையும் நையாண்டி செய்வதும் எல்லாம் நினைக்கிறாள்.

கண்களிலிருந்து நீர் சொட்டுகிறது; குரங்குப் படத்தை நனைக்கிறது.

தவிக்கும் யுவதிகளை எல்லாம் ஆற்றவேண்டும் என்று காதல் துறைகள் பறைசாற்றுகின்றனவே.

பயல் 'சுரணாவுகிற' தொழிலில் ஆரம்பிக்கிறான். கண்கள் ஏற ஏறச் சொருகுகிறது. பல் தன்னையறியாமல் இளிக்கிறது. இந்த அலங்கோலக் காட்சியில், மனிதனுடைய அசம்பாவிதமான அசட்டுத்தன அலங்கோலத்தைப் பரி பூரணமாகத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்த அவளுடைய தேங்கிய துக்கம், வந்த சிரிப்பையும் அடக்கிக் கோபாவேச மாக மாறுகிறது. தன் வீட்டுக்குள் தன் கௌரவத்தைக் கெடுக்க யாருக்குத் தைரியம் என்ற சீற்றம்.

"யாருடா நீ களவாணிப் பயலே? எங்கே வந்தே? யாரைக் கேட்டுக்கிட்டு உள்ளே நொளஞ்சே? எடு செருப்பை!" என்று புத்தகத்தால் மண்டையில் போடு கிறாள்.

அவன் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு "மார்க்குப் பார்க்க வந்தேன்" என ஊளையிடுகிறான். எதிர்ப்பை எதிர்பாராததால் அவ்வளவு பீதி.

"உன்னை லவ் பண்ணினேன்; தூரத்திலிருந்தே லவ் பண்ணினேன்" எனப் பேத்துகிறான்.

"போடா வெளியே! மொதல்லெ வெளியே போ!" என்று அதட்டிக் கைகளை ஓங்குகிறாள்.

அவன் அவசர அவசரமாக ஓடுகிறான். சுற்றும்முற்றும் பார்க்கிறாள். கைக்கு வசமாக ஒன்றும் அகப்படவில்லை. ஒரு ஜதை செருப்புத் தென்படுகிறது. இரண்டையும் விரல் களில் இறுக்கிக் கொண்டு, வராந்தாவிலிருந்து இறங்குகிற வன் மீது விட்டெறிந்து, "போடா கரப்பான் பூச்சி!" என்று கதவைப் படால் என்று சாத்தித் தாழிட்டு விடு கிறாள். அதற்குள் வசைமொழி அவ்வளவும் அவளுக்குக் காலியாகி விட்டது.

ஆவேசம் ஒடுங்க, பயம் தலைவிரித்தாடுகிறது. தான் தப்பித்த ஆபத்தின் பூரணத் தன்மையைப் புரிந்துகொள்ள அவகாசம் ஏற்படுகிறது.

நாற்காலியில் உட்காருகிறாள். மேல் மூச்சு வாங்க, உடல் நடுங்க, வியர்வை முகத்தில் அரும்புகிறது. அவன் போய் விட்டானா என்று பார்க்கவும் பயம். கூச்சலிடவும் வாய் எழவில்லை.

சிறிது நேரத்தில் மனம் கொஞ்சம் நிலைகொள்ளு கிறது.

வெளியில் போய் பூட்ஸை எடுக்கக் கூடப் பயம்.

ஜன்னல் பக்கத்தில் நின்றுகொண்டு, வெளியே விளை யாடும் குழந்தையை, "குஞ்சம்மா! குஞ்சம்மா!" என்று கூப்பிடுகிறாள்.

குழந்தை தன் பொக்கிஷங்களை வாரிச் சுருட்டிக் கொண்டு, பயிற்சியற்ற குழந்தை ஓட்டத்துடன் "என்னாச் சித்தீ" என்று சொல்லிக்கொண்டு ஓடிவருகிறது.

"அந்த பூடுசெ எடுத்துகிட்டு உள்ளே வாடி" என்று கதவைத் திறந்து குழந்தை உள்ளே வந்ததும் கதவைச் சாத்தித் தாழிட்டுக்கொள்ளுகிறாள்.

குழந்தையை அருகில் அணைத்து இறுகப் பிடித்துக் கொண்டு நாற்காலியில் உட்காருகிறாள்.

அவள் உடல் நடுங்குகிறது.

''ஏஞ்சித்தி ஆடுறே!'' என்று அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கிறது குழந்தை.

''இப்டிக் கள்ளன் வந்தானே நீ பார்க்கலியா?''

''கள்ளன்னா?''

''திருடன்!''

''அப்படின்னா?''

''இப்பச் சட்டையுங்கிட்டையும் போட்டுக்கிட்டு ஒருத்தன் வரலே?...''

''ஆமாம், இப்பிடி இப்பிடி நடந்து வந்தானே!'' எனப் பையனுடைய அந்தஸ்து நடையைக் காப்பி அடித்துக் காண்பிக்கிறது.

குழந்தையின் நடையைக் கண்டு சிரித்துக்கொண்டு, ''ஆமாண்டி கண்ணு'' என முத்தமிடுகிறாள்.

''படம் பார்க்கலாம் வாரியா?'' என்கிறாள் மரகதம்.

''ஆகட்டும்...'' என்கிறது குழந்தை.

குரங்குப் படத்தைக் காட்டிக்கொண்டு ''இது யாரு மாதிரி இருக்கு?'' என்கிறாள்.

''ஒம்மாதிரித்தான் இருக்குது சித்தி—''எனத் தீர்ப்புக் கூறுவதுபோல் முகத்தை வைத்துக்கொண்டு சிரிக்கிறது குழந்தை.

''உன்னைப்போலதான்'' என்று முகத்தில் செல்லமாக இடிக்கிறாள் மரகதம்.

குழந்தை ''வவ்-வவ்'' என வலித்துக் காட்டுகிறது.

''வவ்-வவ்'' எனப் பதிலுக்கு வலித்துக் காட்டுகிறாள் மரகதம்.

''வவ்-வவ்'' என்கிறது மற்றொரு குரல். திரும்பிப் பார்க்கிறார்கள்.

ஜன்னலருகில் சுந்தரவடிவேலு.

கதவைத் திறந்தார். ''ரிப்பேராப் போச்சு!'' என்றபடி உள்ளே நுழைந்து, ''ஏதேது அம்மையும் மகளும் ரொம்பக் குழையிறீகளே'' எனக் குழந்தையைத் தோளில் நிறுத்தி மரகதத்தையும் இழுத்துக்கொண்டு தான்வாசிக்கும் அறைக்குப் போகிறார்.

## பூனை வாண்டாம், அப்பா!

இப்படியாக ரஜாக் காலமும் ஏறக்குறைய முடிந்து விட்டது.

அறுவடையாகி விட்டதால் மறு சாகுபடிக்கு ஏற்பாடு கள் எல்லாம் செய்துவிட்டு இன்னும் ஒரு வாரத்தில் 'குழந்தைகளை' என ஆரம்பித்து அடித்து, 'குழந்தையை' எனத்திருத்தி—பார்த்துவிட்டுப் போக வருவதாகத் தாத்தா விடமிருந்து கடிதம் வந்தது.

''குஞ்சு, ஒன்னைப் பார்க்கத் தாத்தா வரப் போறாங்க'' குழந்தையின் குதூகலத்தில் பங்கு போட்டுக் கொள்ளுகிறவர் பொலக் கூறுகிறார். சாப்பிட்டுவிட்டுப் புறப்படும்போது, ''சாயங்காலம் காப்பிக்குத்தான் வரு வேன்'' என அறிவித்த சுந்தரவடிவேலு காரில் ஏறிக் கொண்டு நண்பர் ஒருவரைப் பார்ப்பதற்காகச் சென்று விடுகிறார்.

மரகதமும் குஞ்சுவும் கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளே வருகிறார்கள்.

''ஏட்டி வெய்யிலா இருக்கு, இப்படி எங்கூடப் படுத்துத் தூங்கிறியா?'' என்கிறாள் மரகதம்.

''ஆகட்டும் அம்மா!'' என்று மச்சிலுக்கு ஏறுகிறது.

''அங்கெ வாண்டாம். இந்த நடேலெ தலையெச் சாய்ப் போம்'' என்று வெற்றிலைச் செல்லத்தைத் தலைக்கு

வைத்துக் கொண்டு முந்தானையை விரித்துப் படுக்கிறாள் மரகதம். குழந்தையும் முந்தானை விளிம்பில் மல்லாக்காகப் படுத்துக் கொண்டு கண்ணை ஒரு கையால் மூடிக் கொள்ளுகிறது.

வேலைக்காரர்களை, அடுக்களையில் ஏற்றும் சாதி கெட்ட வழக்கத்திற்கு இணங்காமல் உழைத்ததின் பயனோ என்னவோ அயர்ந்து விடுகிறாள்.

குழந்தைக்குத் தூக்கம் வரவில்லை.

எழுந்து உட்காருகிறது.

'தாத்தா வருவாங்களே' எனத் தனக்குத்தானே அறிவித்துக் கொள்ளுகிறது.

தூரத்தில் கிடந்த என்ஜின் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு வந்து புரட்டுகிறது. என்ஜின்களின் ஓட்டம் கூட ரசிக்கவில்லை. இப்படியும் அப்படியுமாக விருவிரு என்று புரட்டிவிட்டு, 'டபார்' என்ற சத்தத்துடன் மூடுகிறது.

மரகதம் சிறிது விழிக்கிறாள்.

"என்ன, தூங்கு" என இழுத்துப் படுக்க வைத்துக் கொண்டு தட்டிக் கொடுத்த வண்ணம் தூங்கிப் போகிறாள்.

குழந்தை மறுபடியும் எழுந்து உட்கார்ந்து கொள்ளுகிறது.

ஹாலில் உள்ள பெரிய கடிகாரம் அரை மணியைக் குறிக்க டணார் என்று ஒரு அடி அடிக்கிறது.

குழந்தை ஓடிப்போய்க் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு வந்து நேரம் தெரிந்ததுபோல "மணியடிச்சாச்சு அம்மா?" என எழுப்புகிறது.

"நீ தூங்குடி. நேரமாகலே?" என்று மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொள்கிறாள் மரகதம்.

குழந்தை ஓசைப்படாமல் புழக்கடைப் பக்கம் போகிறது.

ஒரு டம்ளரை எடுத்து அண்டாவில் இருக்கும் தண்ணீரை மொண்டுவந்து புழக்கடை வெராண்டா ஓரத்தில் நின்று கொண்டு ஊற்றி, தாரையாகத் தரையில் சுர் என்ற சப்தத்துடன் விழுவதை ரசித்துக் கொண்டிருக் கிறது.

ஒரு டம்ளர் ஆனதும் மறு டம்ளர், மறு டம்ளர், மறு டம்ளர்.........

இந்த விவகாரத்தில் குழந்தையின் உடம்பும் பாவாடை யும் நனைந்து விடுகிறது.

பால்காரன் அந்தச் சமயம் பார்த்துப் புழக்கடை வெராண்டாவில் 'அம்மா' என்று பால் கொண்டு வந்து நிற்கிறான்.

"அம்மா தூங்கறாங்க" என்று தண்ணீர் விடுவதை ரசித்துக் கொண்டே பதிலளிக்கிறது குழந்தை.

"ஏம்மா இப்படித் தண்ணியைக் கொட்றெ?" என் கிறான் பால்காரன்.

"இங்கே வந்து பாரு, சுர்ர் என்னுகிட்டு விழுது" என்று அவனையும் ரசிக்கும்படி அழைக்கிறது குழந்தை.

"ஊத்தாதே அம்மா, ராஜால்லெ" என்கிறான் பால் காரன்.

"அப்படித்தான் ஊத்துவேன்" என்று மறுபடியும் டம்ளரை அண்டாவில் முக்குகிறது.

"நான் பால் குடுக்கணுமே, முருவன் எங்கெம்மா?" என்கிறான் பால்காரன்.

குழந்தை டம்ளரைக் கீழே வைத்துவிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி விரித்துக்கொண்டு "அவன் போக் களிஞ்சே போனானே!" என மரகதத்தைக் காப்பியடித்துக் காண்பிக்கிறது.

இந்த நடிப்பைக் கண்டு ரசித்து ஒரு "பாட்டம்" சிரித்து ஓய்ந்த பால்காரன், "நீ அந்தச் சொம்பை எடுத்தாம்மா, நான் பாலை ஊத்தித்தாரேன், ஊட்லே கொண்டி வச்சி, அந்த ஜோடுதாலையைப் போட்டு மூடிப்போடு" என்கிறான்.

குழந்தை பாலை வாங்கிக்கொண்டு உள்ளே வைத்து மூடி விட்டுத் தாயாரை எழுப்ப ஓடுகிறது.

அது தாயாரை அணுகும் சமயம், ஹால் கெடிகாரம் மணி மூன்று அடிக்கிறது;

"அம்மா அம்மா" என்று தோளைப் பிடித்து உலுப்புகிறது.

"இன்னும் என்னடி?" என்கிறாள் மரகதம்.

"அம்புட்டு மணியும் அடிச்சாச்சு" என்கிறது.

"போடி போ" என்கிறாள் மரகதம்.

"இல்லெம்மா நெசமா அம்புட்டு மணியும் இப்பத் தாம்மா அடிச்சிது; நான் கேட்டேனே" என்று துடிக்கிறது குழந்தை.

"அப்பா வர்ரத்துக்கு நேரமாகும், நீ போ" என்று சொல்லிவிட்டு மறுபுறம் புரண்டுகொள்ளுகிறாள்.

"நேரமாகும்" என வாயைக் குவிய வைத்துக்கொண்டு வலிப்புக் காட்டிவிட்டு, கடிகாரத்தைப் போய்ப் பார்க்கிறது.

மெதுவாக அடுக்களைக்குப் போகிறது.

பாலை எடுத்துக் கொண்டு வந்து அடுப்பு முன் வைக்கிறது. அலமாரி எட்டவில்லை. ஒரு முக்காலியை எடுத்துப் போட்டு அதன் மேல் ஏறி நின்றுகொண்டு, காப்பிப்பொடி டப்பியை எடுக்கிறது. கஷ்டப்பட்டுத் திறந்து காப்பிப் பொடி உடம்பில் சிதறியதைக் கூடச் சட்டை பண்ணாமல் கைகொண்ட மட்டும் குத்துக் குத்தாக மூன்றுபிடி அள்ளிப் பாலுக்குள் போட்டுக் கையைவிட்டுக் கலக்குகிறது. பிறகு ருசி பார்க்கிறது. கசப்பு வாயைப் பிடுங்க, 'தூ தூ' எனத் துப்பி விட்டு, சர்க்கரை டின்னை எடுக்க ஏறுகிறது. நல்ல காலமாக அது திறக்க அவ்வளவு கஷ்டமில்லை. ஏனென்றால் அதை முன்பே யாரோ திறந்து வைத்து மூடமறந்து விட்டிருந்தார்கள். முக்காலியில் நின்றபடியே ஒரு குத்துச் சர்க்கரையை எடுத்துக் கொண்டு ஒரு கையில் டின்னும் மறு கையில் சர்க்கரையும் வைத்துக் கொண்டு இறங்கியதின் விளைவாக, அலமாரியின் கீழ்த்தட்டில் உள்ள டின்கள் கடபடா சத்தத்துடன் கீழே சரிந்து சிதறுகின்றன. ஆனால் குழந்தை சர்க்கரையை அள்ளி அள்ளிப் போட்டுக் கலக்கி ருசி பார்த்துக் கொண்டிருக்கிறது. கசப்பைப் போக்குவதற்காக மனம் கொண்ட மட்டும் சர்க்கரையை அள்ளி அள்ளிப் போடுகிறது.

இந்த டின்கள் விழுந்த சப்தத்தைக் கேட்டு என்னவோ ஏதோ என்று எழுந்து ஓடிவந்த மரகதம், இவள் வேலையைப் பார்த்துப் பிரமித்து வாசற்படியில் நிற்கிறாள்.

அதே சமயத்தில் புழக்கடை வாசற்படியாக ஒரு கருப்புப் பூனை ''மியாவ்'' என்ற சப்தத்துடன் வாலைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைகிறது.

குழந்தை அவள் வந்ததைக் கண்டு கொண்டு, ''அம்மா காப்பி போட்டாச்சு, வென்னி இல்லே, பாலுலியே காப்பிப் பொடியெ போட்டு காப்பி போட்டாச்சு'' என்று தன் வேலையை விவரிக்கிறது.

''தேடீதேடீ பார்த்தேம்மா, வென்னியே இல்லியே'' என மீண்டும் விவரிக்கிறது.

''பாலெத் தொலச்சு குட்டிச் செவராக்கி யாச்சில்லே ஏண்டி இண்ணைக்கிப் பூரா இப்பிடி படுத்திக்கிட்டிருக்கே? பொண்ணாப் பொறந்தவளுக்கு இது ஆகாது! பாரு ஒன்னே, ஒன்னே என்ன செய்யுறேன்னு பாரு, பாரு, அப்பா வரட்டும்!'' எனக் கடுகடுக்கிறாள் மரகதம்.

குழந்தை சீற்றத்தை எதிர்பார்க்கவில்லை. முகம் 'புஸ்' என்று மாறுகிறது.

''அக்கா!'' என்று ஒரு வார்த்தை மட்டும் சொல்லு கிறது.

''நீ தான் அக்கா! யாரெப் பார்த்து அக்காங்கறே!''

''அக்கா!'' என்கிறது மறுபடியும்.

''சொல்லாதே! சொல்லமாட்டேன்னுசொல்லு! இல் லாட்டா அந்தப் பூனையைப் புடிச்சு மேலே போடுவேன்.''

பூனை என்றதும் வெருவி விடுகிறது குழந்தை. கண்கள் பயத்தைக் கக்க, ''எங்கம்மாகிட்ட சொல்றேன் பாரு'' என அவள் காலுக்கிடை வழியாக மச்சு நோக்கி ஓடுகிறது.

''என்ன அடம்!'' என கோபாவேசம் கொண்டவ ளாகப் பூனையை மறித்துப் பிடிக்கிறாள், குழந்தைக்குப் புத்தி கற்பிக்க.

அவள் அதை மறித்துப் பிடித்துத் தொடர்வதற்குள் குழந்தை பறந்து பறந்து மச்சுக்கு ஓடுகிறது.

தன் ரூமுக்குள் நுழைகிறது. தாயின் படத்தைப் பார்த்துப் புகார் செய்ய ஆரம்பித்து விடுகிறாள்.

''அம்மா அம்மா! இந்த அக்காவெப்பாரு, பூனெயெ மேலே போடவர்றா அம்மா'' என்று சொல்லிக் கொண் டிருக்கையில் மரகதமும் கறுப்புப் பூனை சகிதம் உள்ளே நுழைந்து விடுகிறாள்.

குழந்தை பயந்து போய் சுற்று முற்றும் ஓடி, பிறகு படத்தின் அடியில் வந்து நின்று கொள்ளுகிறது.

"சொல்ல மாட்டேன்னு சொல்லு" எனப் பூனையை நீட்டுகிறாள் மரகதம்.

"அக்கா" என்கிறது குழந்தை.

பூனையை வீசப் போவது போல் பாவனை செய்கிறாள் மரகதம்.

"அம்மா! பாரேம்மா! பூனையைப் போடறாளே!— ஐயோடி பூனெயெப் போடறாளே!" எனக் கத்திக் கீச்சிடு கிறது குழந்தை.

மரகதம் பூனையைக் குழந்தையின் முகத்தினிடம் கொண்டு வருகிறாள்.

குழந்தை சுவருடன் அமுங்க முயற்சிப்பது போல் தன் னைப் பதிய வைத்துக்கொண்டு, "ஐயோ பூனே! பூனை வருதே! பூனை வேண்டாம்மா! அம்மா பூனை வேண்டாம்" எனக் கிரீச்சிடுகிறது.

மாடிப் படியில் தடதடவென்று ஏறிவரும் சப்தம்.

மரகதம் மறுபடியும் முகத்தருகில் கொண்டு போகிறாள்.

"பூனை வேண்டாம்மா!..." எனப் பயத்தில் கிரீச்சிடு கிறது குழந்தை.

சுந்தரவடிவேலு பரக்கப் பரக்க உள்ளே நுழைந்து மரகதத்தைத் தள்ளிவிட்டுக் குழந்தையை எடுத்து அணைத் துக்கொள்கிறார்.

குழந்தை ஒரே கத்தாகக் கத்துகிறது; அழ முடியாமல் விக்குகிறது; அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொள்ளு கிறது...

ஜன்னி கண்டமாதிரி கிரீச்சிடுகிறது.

நெஞ்சைத் தடவுகிறார்......என்னென்னமோ செய்கிறார்...சிறிது மயங்குகிறது.

படுக்க வைத்து நெற்றியில் கைக்குட்டையை எடுத்துப் போடுகிறார். விக்கிக்கொண்டே கிடந்த குழந்தை, ''பூனை வேண்டாம்மா!'' எனக் கத்துகிறது.

''குஞ்சம்மா பூனெ ஓடியே போச்சே, அதெ அடி அடின்னு அடிச்சுப்போட்டென். வரவே வராது'' என்கிறார்.

குழந்தை மனத்தில் அவர் வார்த்தை பதியவில்லை.

படுக்க வைத்துக்கொண்டு நெற்றியில் ஜலத்தை நனைத்துப் போடுகிறார்; நெஞ்சைத் தடவுகிறார்—பயம் ஓயவில்லை.

''பூனெ வேண்டாம்மா!'' என்ற ஒரே வார்த்தையைக் கத்துகிறது.

மரகதம் கையைப் பிசைந்துகொண்டு கண்கலங்க வாசலடியில் நிற்கிறாள். அவளை அவர் ஏறிட்டுக்கூடப் பார்க்க வில்லை.

குழந்தையைக் கொஞ்சம் அமர வைத்துவிட்டு டெலி போனுக்குச் செல்லுகிறார்.

எண்களைத் திருப்புகிறார். ''ஹல்லோ—கிருஷ்ணசாமி தானேபேசறது? நான்தான் சுந்தரம்...குஞ்சத்துக்கு...ஹிஸ்டீரியா மாதிரி கத்துறா; பயந்திருக்கா, Intense terror..... ஏதும் Sleeping dose கொண்டாந்தாத் தேவலே—இப்பொவெ வா-'சில்றனெட்' பாத்துக் கொள்ள ஆள் வேணும்னு கலியாணம் பண்ணிக்கப் போய் மூணு கொழந்தைகளாச்சு, அப்றம் ரெண்டாச்சு...'' என்று கூறிவிட்டு டெலிபோனைக் கீழே வைக்கிறார்.....

......இப்படியாகக் குழந்தை குஞ்சுவுக்கு அதிர்ச்சியால் ஏற்பட்ட ஜுரம் தெளிய மூன்று நாட்களாகின்றன.

மூன்று நாட்களும் குழந்தையின் பணிவிடையிலேயே செலவிடுகிறார் சுந்தரவடிவேலு.

மூன்று நாட்களும் மரகதத்துடன் சிரித்துப் பேசுவது, ஏன் சாதாரணமாகப் பேசுவதே நின்று விட்டது. அவள் இல்லாதது போலவே நடக்க ஆரம்பித்துவிட்டார்.

கண்ணீருடன் கைகளைப் பிசைந்து கொண்டு தலைவிரி கோலமாய் நின்றது தான் மரகதத்திற்கு மிச்சம். காப்பிகொண்டுவந்தால் வாங்குவார்; சாப்பிடுவார். உணவு கொண்டு வந்தால் உண்பார். 'போதும்,' 'வேண்டாம்' என்பதுடன் அச்சமயங்களில் பேச்சு நின்று விடும். அவரது இந்த நிலையையும் உறுதியையும் கண்டு பயந்துவிட்டாள் மரகதம். மன்னிப்புக் கேட்டுக் காலில் விழுவதற்குக் கூட அஞ்சினாள்.

அச்சம் சீற்றமாக மாறியது. சமரச முயற்சி நின்றது. வருவதும் பணிவிடை செய்வதும் நின்றது.

வீட்டில் மறுபடியும் சமையல்காரன் சமையல் செய்யத் தொடங்கினான். அவன் காப்பி கொண்டு வருவான், குழந்தைக்குப் பால்கொண்டு வருவான். வேலைக்காரனும் இருந்தான்.

மரகதம் தனக்கு மட்டும் தன் கையால் சமைப்பது சாப்பிடுவது, உக்கிராணப் பிறையில் தலைவிரி கோலமாக மன நிம்மதி இல்லாமல் படுத்துக்கிடப்பது......மனத்துடன் போராடுவது.

யார் குற்றம்? குழந்தையின் பிடிவாதத்தைத் தீர்க்க வேண்டாமா, நான் என்ன அடித்தேனா, வைதேனா?...... லேசாய் பயங்காட்டினால் என்ன பிரமாதம்!......

இவ்வாறாக மனம் சித்தாந்தம் செய்ய ஆரம்பித்து விட்டது.

இருவரும் பேசவில்லை.

இந்தப் புதிருக்கு-இரு-'குழந்தைகளை'யும் இவ்வாறு பிரிந்து விலகும்படி செய்யாதிருக்க என்ன வழி என்பது அவருக்குப் புரியவில்லை.

குழந்தைக்கு 'நர்ஸ்' அமர்த்தி விடுவோமா...அல்லது Orphanage-இல் சேர்த்து விடுவோமா என்றெல்லாம் மனம் ஓடியது...புதிருக்கு விடைஇல்லை.

குழந்தை எழுந்து நடமாட ஆரம்பித்து விட்டது, முன் போல ஓடி ஆட ஆரம்பித்து விட்டது. ஆனால் 'மியாவ்' என்ற சப்தம் கேட்டால் உடல் நடுங்க ஆரம்பித்துவிடும். குழந்தை உறுதிகொண்ட குழந்தை. பயத்தை வெளியில் காட்டுவதில்லை.

இப்பொழுது முன்போல, 'அம்மாகிட்ட சொல்லு வேன்' என்ற வார்த்தை அதன் வாயிலிருந்து வருவதில்லை.

சுந்தரவடிவேலுக்குக் கலாசாலையும் திறந்துவிட்டது.

அன்று விடியற்காலம். குழந்தை தன் சின்னக் கட்டிலில் இருந்து எழுந்திருக்கிறது. குலைந்து கிடந்த சிறுபாவாடையை நன்றாகக் கட்டிக் கொள்ளுகிறது.

ஜன்னல் விளிம்பில் உள்ள கடுதாசிப் பொட்டலத்திலிருந்து இரண்டு திராட்சைப் பழங்களை எடுத்துக் கொண்டு வருகிறது.

தாயார் படத்தின்முன் நின்று சிறிது நேரம் அதையே கவனிக்கிறது.

அப்புறம் இரண்டு பழங்களையும் படத்திற்கு நேராகத் தரையில் வைக்கிறது. தன் சித்தி குத்துவிளக்கின் முன்பு மண்டியிட்டு, தலை தரையில் படும்படி கும்பிடுவது போலப் படுத்து வணங்குகிறது. யாரையும் காப்டாற்றும் படி கேட்டுக் கொள்ளவில்லை.

பிறகு திராட்சைப் பழங்கள் இரண்டையும் எடுத்து வாயில் போட்டுத் தின்று கொண்டு, தன்னுடைய ஓட்டை எஞ்சின் சகிதம் புழக்கடைப் பக்கம் சென்று பல்விளக்கு கிறது. நேராகத் திரும்பி வந்து தெரு வாசல்படியில் உட்கார்ந்து குனிந்து கொண்டு எஞ்சினைக் கைகளால் உருட்டி உருட்டி விளையாடுகிறது.

சில சமயம் 'குச்குச்' என்ற சப்தம் அதன் வாயி லிருந்து வரும்.

இந்த நிலையில், ''குஞ்சு! குஞ்சு! குஞ்சம்மா!'' என்று தகப்பனாரின் குரல்.

''என்னாப்பா!'' என்று நிமிராமலே சத்தம் கொடுக் கிறது குழந்தை.

''உன்னை எங்கெல்லாமடி தேட, என் கண்ணு! என்ன செய்யறே?'' என்று கூறிக்கொண்டு வெளியில் வந்து குழந்தையை வாரி அணைத்துக் கொள்ளுகிறார்.

''காப்பி சாப்பிட வேண்டாமா?''

''ஊம்'' என நீட்டுகிறது குழந்தை.

மணி பத்து.

கார் வாசலில் நிற்கிறது......

குழந்தை சட்டை போட்டுக்கொண்டு கையில் ரயில்—படப் புத்தகமும் எஞ்சினுமாக வாசல் படியில் வந்து நிற் கிறது.

தகப்பனார் வெள்ளைக்கார மோஸ்தரில் உடையணிந்து கொண்டு, கையில் ஐந்தாறு கனமான புஸ்தகங்களுடன் வெளியே வருகிறார்.

அப்பாவைக் கண்டதும் குழந்தை தன்கையில் உள்ள ரயில் பட புஸ்தகத்தையும் எஞ்சினையும் காருக்குள் வைக்க முயலுகிறது.

''எங்கடியம்மா குஞ்சு இந்த அவசரம்?'' என்கிறார் சுந்தரவடிவேலு.

''அப்பா! அப்பா, நானும் ஒங்கூடவாறேன் அப்பா'' எனக் கெஞ்சுகிறது குழந்தை.

இதுவரை குழந்தையிடம் இந்தக் கெஞ்சல் வியாபாரமே கிடையாது; எல்லாம் அதிகார மயம்தான். அதிசயித்துச் சிரித்துக்கொண்டு, ''நான் இன்னக்கிப் பள்ளிக்கூடமில்லா போகிறேன். நீ வரலாமா, போய் விளையாடிக் கொண்டிரு, சாயங்காலம் வந்து ஒன்னைப் பீச்சுக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன்'' என்கிறார்.

''பீச்சுக்கில்லே அப்பா, நான் ஒண்ணுமே செய்ய மாட்டேன்; கார்லியே உட்கார்ந்திருக்கேன். ஒண்ணுமே செய்ய மாட்டேன்...நானும் வரேன் அப்பா'' என்று மறுபடியும் கெஞ்சுகிறது.

குழந்தையின் பிடிவாதத்தையும் கெஞ்சலையும் கண்டு ஏதோ காரணம் இருக்கவேண்டும் என ஊகித்து, அவளை வாரி எடுத்து முகத்தைத் தடவிக் கொடுத்து ''ஏண்டியம்மா நீ கெட்டிக்காரியில்லியா......'' என ஆரம்பிக்கிறார்.

குழந்தை ரகசியமாகக் காதோடு காதாக, ''சித்தி—பூனெ'' என்று சொல்லுகிறது.

பிள்ளையின் முகம் மாறுகிறது. சொல்ல முடியாத மன வேதனை, புத்தியில்லாமல் குழந்தையை எப்படிப் பய மூட்டி விட்டாள்...பயம் எப்படி வேரூன்றி விட்டது... இதை எப்படிப் போக்குவது...என மனசு நிலை கொள் ளாது தத்தளித்தது.

என்ன செய்யலாம்? குழந்தையை எப்படிப் பள்ளிக் கூடத்திற்கு எடுத்துக்கொண்டு போவது? வேலைக்காரர்க ளிடம் நிற்காதே! தானே ஓடியாடித் திரிகிற குழந்தைக்கு பயம் பிறந்து விட்டதே என நினைக்கிறார்.

"கண்ணு நீ சும்மா வெளையாடிக்கிட்டிரு......சித்தி ஒண்ணுமே செய்யமாட்டா...பூனெ வரவே வராது...... அண்ணெக்கே அடிச்சு வெரட்டியாச்சே...நான் சீக்கிரமா வந்திடறேன்...அப்பரம் நாம் ரெண்டு பேருமா வெளை யாடுவோமாம் ...பிஸ்கோத்து தரட்டா?"...

"தா......"எனச் சோர்ந்தாற்போல் நீட்டுகிறது குழந்தை.

"அப்பொ......"என மறுபடியும் ஆரம்பிக்கிறது...

"அப்பொ......என்ன?" என்கிறார் சுந்தரவடிவேலு.

"பாலும்......எடுத்துத் தந்திரேன்......" என்கிறது குழந்தை.

"ஏம்மா...சித்தி தருவாளே......"

"மாட்டேன், நீ தான்—" என்கிறது மறுபடியும்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்று இரண்டுபை நிறையவும் பிஸ்கோத்து போட்டுத் தருகிறார். அடுக்களைக்கு அழைத்துக் கொண்டு போய் பாட்டிலில் பாலை ஊற்றி ரப்பரைப் போட்டு அதன் கையில் கொடுக் கிறார். இருவரும் வெளியே வருகின்றனர்.

"சரிதானா?" என்று சொல்லிக் கீழே இறக்கி விடுகிறார்.

"சரிதான்—" என நீட்டுகிறது குழந்தை.

ஸ்ரீமான் சுந்தரவடிவேலு காரில் உட்கார்ந்து கொண்டு வண்டியை ஓட்ட ஆரம்பிக்கிறார்.

"அப்பா அப்பா!" என்கிறது குழந்தை.

"இப்பொ என்ன?" என்கிறார்.

"எம் பொஸ்தகத்தையும் எஞ்சினையும் குடு" என்கிறது குழந்தை.

"ஓஹோ!" என்றுகொண்டு எடுத்துக் கொடுக்கிறார்.

"நான் புறப்படட்டா?" என்று கொண்டு வண்டியை ஓட்டுகிறார்.

"ஊம்" என்று கொண்டு நீட்டுகிறது.

வண்டி புறப்பட்டுப் போகிறது. அது வெளிகேட்வரை சென்று திரும்பும்வரை அதையே பார்த்துக்கொண்டிருக்கிறது குழந்தை.

பிறகு மெதுவாக அக்குளில் புத்தகத்தை இடுக்கிக் கொள்ளுகிறது. ஒரு கையில் என்ஜின் கயிற்றைப் பிடித்துக்கொண்டு இழுக்கிறது. மற்றொரு கையில் பாட்டில், —இந்த சன்னத்தங்களுடன் குழந்தை வெளியே புறப்படுகிறது...மெதுவாக நடந்து செல்லுகிறது...

இவ்வளவு கூத்தையும் மரகதம் ஒரு ஜன்னலில் நின்று பார்த்துக்கொண்டு நிற்கிறாள். கண் கலங்குகிறது. வாயில் சிரிப்பு வருகிறது...குழந்தையையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்...

குழந்தை வெளி கேட்டு அருகில் நிற்கும் வாதமுடக்கி மரநிழலுக்குப் போகிறது. பாட்டிலை வாசல் கேட்

காறைக்கு அருகில் உள்ள குத்துக்கல்மீது வைக்கிறது. நிழலில் வந்து உட்கார்ந்து கொஞ்ச நேரம் பொம்மை பார்க்கிறது...அது அவ்வளவாக ரசிக்கவில்லை.

வட்டு விளையாட முயலுகிறது. அதற்குக் கட்டம் போடத் தெரியவில்லை. இஷ்டம்போல் கோணல் மாணலாக இரண்டு மூன்று கோடுகள் கீச்சிவிட்டு தூரத்தில் வந்து நின்று கொள்ளுகிறது.

கையிலிருக்கும் ஓட்டாஞ்சில்லியைக்கோட்டுக்குள் வீசுகிறது.

நொண்டியடிப்பது போல ஒற்றைக்காலைத் தூக்கிக் கொள்ளுகிறது. வராததனால் படபடவென்று இரண்டு காலையும் வைத்து ஓடி, விழுந்து கிடந்த சில்லியின்மேல் ‘பட்’ என்று காலை வைத்துக்கொண்டு, நொண்டியடித்து வந்ததுபோல ஒற்றைக்காலைத் தூக்கிக்கொண்டு சிறிது நிற்கிறது. அதற்கு இந்த ‘சில்லாட்டம்’ தெரியாது. எப்பவோ ஒரு தடவை ராஜாவுடன் விளையாடியிருக்கிறது.

இப்படி நின்றுவிட்டால் ஒரு ஆட்டம் ஜயித்தாச்சு என்பது அதன் சித்தாந்தம். சில சமயம் வேறு யாரையோ ஆடச் சொல்வதுபோல் பாவனை செய்து அந்தக் கற்பனை நபராகத் தன்னை ஆக்கிக்கொண்டு விளையாடும்.

இப்படி இது விளையாடிக்கொண்டிருக்கையிலே, கருத்த தாடியும் மீசையும், கையிலே திருவோடுமாக ஒரு ஆண்டி அந்தப்பக்கமாக வருகிறான். அவன் கட்டியிருக்கும் உடை தூய வெள்ளையாக இருக்கிறது. பரதேசிக் கோலத்தில் காணப்பட்டாலும் பிச்சைக்காரன் அல்ல என்று தெரிகிறது. நல்லவன் என்று சொல்லும்படியாகக் கண்ணிலே ஒரு ‘குளுமை’ தேங்கி நிற்கிறது. சிறிது எடுத்த மூக்கு, எடுத்த நெற்றி, சிறிது தடித்த உதடு, மீசைக்குப்பின், மேகப்படலத்திற்குப் பின்னால் பாறை தோன்றுவது போல வெளுத்த ஆனால் சிறிது எடுப்பான

பல். ஒரு கையில் இலையால் மூடிய திருவோடு...மறு கையில் சிறு மூட்டை. நிழலுக்காக உள்ளே நுழைகிறான். குழந்தை நின்ற இடத்திற்குப் பின்புறமாக மரத்தடியில் வந்து உட்கார்ந்து திருவோட்டிலிருந்த ஜலம் விட்ட சாதத்தை எடுத்துச் சாப்பிட ஆரம்பிக்கிறான். துணைக் கறியாக ஒரு துண்டு இலையில் இரண்டு மிளகாய் வற்றல் களும் கொஞ்சம் உப்புக்கல்லும் வைத்துக்கொண்டிருக் கிறான். குழந்தை அவன் வந்ததைக் கவனிக்கவில்லை.

விளையாடிக்கொண்டிருக்கிறது...

வட்டை எடுத்துப் போடுகிறது. குழந்தைக்கு ஒரு பொருளை வாட்டமாக முன் பக்கம் விட்டு எறிவதில் பழக்கம் கிடையாது. உள்ளங்கையில் வைத்துக்கொண்டு கீழிருந்து மேல் வாட்டமாக எறியும்; அல்லது தலைக்கு மேல் ரொம்ப உயர்த்திக்கொண்டு வேகமாகக் கையை வீசிப் பின்புறமாகக் கொண்டு வரும். இந்த முயற்சி களால் சில சமயங்களில் வட்டு பின்புறமாகப் பார்த்துப் பறந்துவிடும்.

அப்படிச் சம்பவிக்கவே, குழந்தை பின்பக்கம் திரும்பு கிறது. நாடோடியைப் பார்த்து விடுகிறது.

"ஐயோ! பூச்சாண்டி...!" என்று உச்சஸ்தாயியில் கிரீச்சிட்டுவிட்டு பிரமித்து நின்றுவிடுகிறது. குழந்தையின் கண்கள் பயத்தில் வெளியே தள்ளுகிறது.

ஒரு கவளத்தை வாயில் போடுவதற்குத் தலையை அண்ணாந்த நாடோடி குழந்தையின் பீதியை உணர்ந்து விட்டான். கவளத்தைத் திருவோட்டில் கரைத்துவிட்டு, "இல்லேம்மா பாப்பா. நான் பூச்சாண்டியில்லே! பயப் படாதே...!" எனச் சிரிக்கிறான்.

குழந்தை அப்படியே நிற்கிறது.

''இதோ பாரு, இது தாடி வெறும் மசிரு. பயப்படா தேம்மா, இங்கே வாம்மா, கண்ணுல்லெ...''

குழந்தைக்குப் பயம் இவனது பரிவால் சிறிது தெளி கிறது. ஆனால் இடம் பெயர, கால்கள் சுவாதீனப்பட வில்லை.

''அப்பொ நீ பூச்சாண்டியில்லே...?'' எனச் சந்தேகத் தோடு வினாவுகிறது.

''இல்லேம்மா! நீ தான் இப்படி வந்து தொட்டுப் பாரேன்...''

''நெசமா. சத்தியமா சத்தியமா, சத்தியமா!''

''நீ இங்கே வாடி...கண்ணு...'' என மறுபடியும் அழைக்கிறான்.

குழந்தை மெதுவாக அவன் கிட்டப்போய், நின்று கொண்டு அவன் தாடியை இழுத்துப் பார்க்கிறது.

''பாத்தியா, வெறும் மசிரு; ஒந்தலைலே இருக்குபாரு, அது மாதிரி'' என்று அதன் தலையைத் தடவிக் கொடுத்துக் கொண்டே பக்கத்தில் உட்காரவைத்துக் கொளளுகிறான்

''கண்ணு பயந்தே பூட்டாளே!'' என்று குழந்தையின் நெஞ்சைத் தடவிக் கொடுக்கிறான்: ''கண்ணு பயப்படா தம்மா, இந்தா இங்க பாரு, நான் சாப்பிடட்டா!'' என்று குழந்தையை ஒரு கையால் அரவணைத்தபடி ஒரு கவளத்தை எடுத்து அண்ணாந்து வாயில் போட்டுக் கொள்ளுகிறான். குழந்தையின் கண்கள் கவளங்களுடன் அவன் வாய்க்கும் திருவோட்டுக்குமாக யாத்திரை செய்கின் றன. தலையை நீட்டி, நீட்டிப் பார்க்கிறது.

ஒரு மிளகாய் வற்றலை எடுத்துக் கடித்துக் கொள்ளு கிறான். குழந்தை அதைக் கவனிக்கிறது.

''எரிக்கலே!'' என ஆச்சரியத்துடன் கேட்கிறது.

''இந்தக் கட்டைக்கு இதெல்லாம் எரிக்காது அம்மா'' எனச் சிரிக்கிறான்.

''எனக்கும் பசிக்கிறது'' என்கிறது குழந்தை.

''பாப்பா, இன்னுமா சாப்பிடலே, ரொம்ப நேரமாச்சே!'' என அவன் கூறுவதற்குள், ஓடிப்போய்க் கதவருகில் வைத்திருந்த பாட்டில், புத்தகம், எஞ்சின் வகையராக்களை எடுத்துக் கொண்டு ஓடி வருகிறது. அவன் எதிரில் உட்கார்ந்து கொண்டு, பாலைக் குடிக்கிறது.

குழந்தையின் செயல்களைக் கவனித்துக் கொண்ட நாடோடி ஒரு விதமாக, ஆனால் சிறிது தவறுதலாக ஊகித்துக் கொள்ளுகிறான். வீட்டில் குழந்தையைப் பார்த்துக்கொள்ள ஆள் கிடையாது, ஆண் போஷணையில் மட்டும் வளரும் குழந்தை என நினைக்கிறான்.

''சம்போ மஹாதேவா! இதுவும் ஒரு திருவிளையாட்டா!'' என்று சொல்லுகிறான்.

''விளையாடலே, பாலு சாப்பிடறேன் புட்டிலே பாலு இருக்கு பாரு'' என வாயிலிருந்து எடுத்துவிட்டுக் காண்பிக்கிறது.

நாடோடி சிரித்துக்கொண்டே ''உன்பேரு என்னம்மா?'' என்கிறான்.

''குஞ்சு...மீனாச்சின்னும் அப்பா சொல்லுவாங்க'' என்கிறது.

குழந்தைக்குப் பைக்குள் இருக்கும் பிஸ்கட் ஞாபகம் வந்துவிடுகிறது. பாட்டிலைக் கீழே வைத்துவிட்டுச் சட்டைப் பைக்குள் கையை விட்டு இரண்டு ஜம் பிஸ்கட்டை எடுத்துக் காண்பித்துவிட்டு, ''நீ சாப்பிடு, சாப்டப்பிறவு தாறேன்'' எனப் பையில் வைத்துக் கொள்ளுகிறது.

மறுபடியும் பாட்டிலை எடுத்து வாயில் வைத்துக் குடிக்கிறது.

இடையில் நிறுத்திக்கொண்டு, ஒரு கண்ணைச் சிறிது மூடியவாக்கில், "இனூச்சுக் கெடக்கும்!"

பிஸ்கட்டின் உயர்வை ரசித்துச் சிபாரிசு செய்கிறது.

இருவரும் சாப்பிட்டு முடிக்கிறார்கள்.

நாடோடி, திருவோட்டைக் கழுவ எதிரே ரஸ்தாவுக்கு மறுபுறத்தில் இருக்கும் குழாயடிக்குப் போகிறான். குழந்தை பாட்டிலை எடுத்துக்கொண்டு தொடருகிறது.

"இதையும் கழுவிக் குடு" என்கிறது.

குழந்தையின் பாட்டிலைப் பத்திரமாக வாங்கிக் கழுவிக் கொடுத்துவிட்டு அதற்கும் முகம், கைகால்களைக்கழுவிவிடுகிறான்.

இருவரும் திரும்புகிறார்கள்.

அவனது ஒரு எட்டுக்கு மூன்று எட்டாக, குழந்தை ஓடி—நடந்து வருகிறது.

"அப்பா, சாப்பிட்டாச்சு" என்று பெரிய மனுஷி மாதிரி சொல்லிக்கொண்டு, "வெளையாடலாம் வாரியா" என்று ரொம்ப சரசமாக நாடோடியிடம் கேட்கிறது.

நாடோடியின் கண்கள் ஜொலிக்கின்றன. குழந்தையின் குதூகலத்தைப் பெற்றுவிடுகிறான். "என்ன வெளையாட்டு வெளையாடுவோம்?" என்று கேட்கிறான்.

"ரயில் வெளையாட்டு ஆடுவமா? நாந்தான் ரயிலாம், நீ டேசன், கைகாட்டி" என்கிறது குழந்தை.

குழந்தை அவனை ஒற்றைக் கையை 'ஸிக்னல் போஸ்ட்' மாதிரி நீற்கச் சொல்லிவிட்டு, தூரத்தில் ஓடிப் போய் அங்கிருந்து 'குச்-குச்' என்று சத்தமிட்டுக் கொண்டு கைகளைப் பிஸ்டலாக அசைத்தபடி நாடோடியை நோக்கி வேகமாக வருகிறது. அது போடுகிற 'குச்-குச்'சும் கை சுழற்றலும் வண்டி மெயில் மாதிரி வருவதாகப் பாவனை. குழந்தையின் முகம்,மனசு விளையாட்டில் ரசித்திருப்பதைப் படமெடுத்துக் காட்டுகிறது.

'வண்டி' வந்துவிட்டது. கைகாட்டியை நெருங்கி விட்டது. கைகாட்டி கிட்ட வந்து விட்டது. எஞ்சின் ஊது கிறது. இரண்டு முறை, மூன்று முறை...

கைகாட்டி தன் வேலையை மறந்து குழந்தையைப் பார்த்துக் கொண்டே இருக்கிறது...

எஞ்சின் குழந்தையாகி விட்டது. ''போடிம்மா... உனக்கு வெளையாடவே தெரியலியே... கைகாட்டி சாயாமே ரயிலு வருமா?...வாண்டாம் போ...'' என்று தரையில் காலை உதைத்துவிட்டு முகத்தைத் தொங்கப் போட்டபடி மரத்தடியில் போய் உட்கார்ந்து கொள்ளுகிறது.

தனக்கு விளையாடத் தெரியவில்லை என்பதையும் ரசித்துக் கொண்டு குழந்தையிடம் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு ''குஞ்சம்மா, குஞ்சம்மா வேறே வெளையாட்டுச் சொல்லேன். விளையாடுவோம்...வட்டாடு வோமா?'' என்று தனக்கு ஞாபகமுள்ள விளையாட்டைக் குறிப்பிடுகிறான்.

மனதில் அது ரசிக்காததினால் ''வாண்டாமா, ஒனக் குத்தான் ராசா மாதிரி வெளையாடவே தெரியலியே'' என் கிறது.

''ராசா யாரும்மா?'' என்று கேட்கிறான் நாடோடி.

"எங்கண்ணன்!" என்று நெஞ்சைத் தட்டிக் கொள்கிறது.

"பள்ளிக்கூடம் போயிருக்கானாம்மா?" என்கிறான் நாடோடி.

"செத்துப் போயிட்டான்" என்கிறாள் இரண்டு கைகளையும் விரியத் திறந்து காட்டிவிட்டு. "எங்கப்பாதான் பள்ளிக் கொடத்துக்குப் போயிருக்காங்க" என்கிறது.

மரணத்தின் பரிபூரண அர்த்தத்தையும் கிரகியாமல், இரண்டு பிரிவின் தன்மையையும் ஒரே அளவில் வைக்கும் குழந்தையின் மனப்பான்மை அவனை அதிசயத்தில் ஆழ்த்துகிறது.

அவன் வேறு ஏதோ கேட்கிறதற்கு வாயெடுக்கையில், குழந்தை 'பூச்சிக் கண்' மாதிரி வைத்துக்கொண்டு, "எங்க தாத்தா வரப்போறாங்களே எனக்கு!"- அவனுக்குத் தலையை ஆட்டிக் கொண்டு அறிவிக்கிறது.

"உங்கப்பா பேரு என்னம்மா?" என்கிறான்.

"சுந்தலவடி வேரு" எனக் குழந்தை லகர, ரகரத்தைக் குழப்பியடிக்கிறது.

"பெரிய பள்ளிக்கூடம் அங்கே இருக்கு பாரு, அதுலெ வாத்தியாரு" என்று வியாக்கியானம் செய்கிறது.

குழந்தையின் மரண—ஞானத்தைப் பற்றி இன்னும் தெரிந்து கொள்ள நாடோடிக்கு ஆவல் "உங்க அண்ணெ, —ராசா எப்பிடியம்மா செத்துப் போனான்?" என்று கேட்டான்.

"அண்ணெக்கி மளெபேயலே பெரியமெள,—அப்பொ —இந்த சித்தி இருக்காள்ள,...அவெள கொடையப்புடிச்சுக்

கிட்டு போகச் சென்னா,—அவென் வந்ததும், அப்பா வந்தாங்க,— கோவிச்சிக்கிட்டாங்க. அவுங்க போனம்பரவு எப்பவோ செத்துப் போயிட்டான்; நானுங் கூடவேதான் இருந்தேன்'' என்று உணர்ச்சியுடன் சொல்கிறது.

நாடோடி, அவன் ஓரளவு ஊகித்தது சரியாகி விட்டது என்ற நினைப்புடன், சுந்தரவடிவேலுவைப் பற்றி வெகுவாகத் தப்பபிப்பிராயம் கொண்டு விட்டான்.

''நீ என்கூட வந்துடிறியா?'' என்று கேட்டுவிட்டான்.

''நான் வந்தா யாரு அவுங்க கூட வெளையாடுறது?'' என சாவதானமாகப் பதில் கொடுக்கிறது குழந்தை.

அதன் வாயைக் கிண்டி விட்டுப் பார்க்கும் தன் அசட்டுத் தனத்தையே நொந்து கொண்டு பராக்காகக் குழந்தையின் நினைப்பை வேறுபுறம் திருப்ப, ''அதென்னம்மா புத்தகம்?'' என்கிறான்.

''அதா, ரயில் பொத்தகம்'' என்று அதை எடுத்துக் கொண்டு ஓடி வருகிறது.

''படம் பாப்பமா?'' என்று புஸ்தகத்தை விரித்துப் போடுகிறது.

''உனக்குப் படிக்கத் தெரியுமாம்மா?'' என நாடோடி கேட்கிறான்.

''ஒனக்குத் தெரியுமா'' எனக் குழந்தை திருப்பிக் கேட்கிறது.

''தெரியாதே...!'' என்கிறான்.

''எனக்கும் தெரியாது'' என்று கொண்டு படத்தைப் புரட்டிக் கொண்டே பையிலிருந்து பிஸ்கட்டுகளை எடுக்கிறது. தான் ஒன்றை வாயில் போட்டுக் கொண்டு மற்

றொன்றை நாடோடியிடம் கொடுக்கிறது. "எனக்கு வேண்டாம். நீ சாப்பிடு" என்று சொல்லியும் கேட்காமல், எழுந்து நின்று அவன் வாயில் திணிக்க முயல்கிறது.

அவன் அதை வாங்கிக் கொண்டு, "பாப்பா நான் ஒரு வித்தை செய்கிறேன் பாக்கிறியா?" என்று கையில் உள்ள பிஸ்கட்டைக் காண்பித்து விட்டு, "சூ! மந்திரக்காளி என்று கையைத் தட்டி விட்டுக் காண்பிக்கிறான். பிஸ்கட்டைக் காணவில்லை.

குழந்தைக்கு ஆச்சரியம் சகிக்க முடியவில்லை.

"எப்பிடி! எப்படி—இன்னொரு தரம் காட்டு" என்கிறது.

"இதோ பாரு, இப்பொ எந்தக் கையிலிருக்கிறது காட்டு!" என்கிறான்.

குழந்தை முதலில் ஒரு கையை விரித்துப் பார்க்கிறது. பிறகு மறு கையை விரித்துப் பார்க்கிறது. இரண்டிலும் இல்லை.

"தின்னுப்புட்டியா?" எனக் கேட்கிறது.

"வரச்சொல்லட்டா?" எனக் கையை மூடித் திறந்து காட்டுகிறான்.

பிஸ்கோத்து உட்கார்ந்திருக்கிறது!

"அது எப்படி?"

"மந்திரம்!"

"நான் செய்யட்டுமா?"

"ஊம்"

‘‘நீ கொஞ்சம் கண்ணெ மூடிக்கோ’’

நாடோடி சரியென்று கண்ணை மூடிக்கொள்கிறான்.

‘‘நல்லா மூடிக்கணும்’’ என்று சொல்லிக்கொண்டே ஒரு பிஸ்கட்டை வாயில் போட்டுக்கொண்டு ‘‘உம்’’ என்கிறது.

அவன் கண்ணைத் திறக்கிறான்.

குழந்தை இரு கைகளையும் மூடிக்கொண்டு நீட்டுகிறது. அவன் ஒவ்வொன்றாக விரித்துப் பார்த்து விட்டு, ‘‘வரச் சொல்லு பார்க்கலாம்’’என்கிறான்.குழந்தை அவசர அவசரமாக வாயிலிருந்ததைக் கையில் போட்டுத் துடைத்து விட்டுக் காட்டிச் சிரிக்கிறது.

‘‘அப்படியில்லேம்மா!’’ என்று அவளுக்கு விரல்களுக்கிடையில்பிஸ்கட்டை மறைத்து மறுபடியும் கொண்டுவரும் சாகசத்தைக் கற்பித்துக் கொடுக்கிறான்.

இப்படியே விளையாடிக்கொண்டிருந்தவன், பற்றற்று இருப்பதற்காக ஓடிவந்த தன்னைப் பாசம் மீண்டும் தன்னை அறியாமலே பிணிப்பதைக் கண்டு திடுக்கிட்டு உணர்ந்து கொண்டவன் போலக் காரணமற்ற சிறிது கடுகடுப்போடு குழந்தையின் நெற்றியிலே திருநீற்றை அள்ளி அப்பிவிட்டுத் திருவோடு மூட்டையுடன் வெளியே விரைந்து விடுகிறான்.

விபூதிப் பொடி கண்ணில் விழும் என்று கண்ணை மூடிக் கொண்டு சாம்பல் பொடி வாயில் கிடைக்கும் என வாயைத் திறந்து ஒன்றும் கிடைக்காததால் ஏமாந்த குழந்தை கண்களைத் திறந்து கொண்டு அவன் போகும் திசையைப் பார்த்து ‘வவ் வவ்’ என வலித்துக்காட்டுகிறது

பிறகு தன் ‘மூட்டைகள்’ எல்லாவற்றையும் சுருட்டி வாரிக் கட்டிக்கொண்டு வெளிக் கேட்டுக்கருகில் உட்கார்ந்து

கைப்பிடிச் சுவரில் சாய்கிறது. தகப்பனார் வரும் திசையை நோக்கியபடியே தூங்கிவிடுகிறது.

மணி நான்கு இருக்கும்.

சுந்தரவடிவேலு காரில் திரும்பி வருகிறார். மனசு நிலை கொள்ளாதிருக்கிறது. குழந்தையின் நினைவு பகல் முழுவதும் மனத்தை வாட்டியது, அவரது முகத்தில் பிரதி பலிக்கிறது.

தூரத்திலிருந்தே குழந்தை வாசலில் சாய்ந்திருப் பதைக் கண்டு, காரைத் துரிதப்படுத்துகிறார். அருகே வரவரக் குழந்தை தூங்குவது தெரிகிறது. தானும் சிறு குழந்தை மாதிரி மரகதத்திடம் நடந்துகொண்டதின் விளைவே இம்மாதிரி வீட்டில் பிளவு ஏற்படவும், குழந் தைக்கு இந்தத் தனிமை லபிக்கவும் காரணம் என அவர் தீர்மானித்து, அதை உடனே நிவர்த்திக்கவேண்டும் என நினைக்கிறார்.

பலமாக 'ஹார்ண்' அடித்துக்கொண்டு வெளிவாசலை நெருங்குகிறார். குழந்தை விழித்துக்கொண்டு, கொட்டாவி விட்டபடி கண்ணைத் துடைத்துக் கொண்டு நிற்கிறது.

சுந்தரவடிவேலு காரை நிறுத்தி இறங்கி குழந்தை, 'குழந்தையின் பரிவாரம்' சகலத்தையும் காரில் ஏற்றிக் கொண்டு வண்டியை உள்ளே திருப்பிக்கொண்டு வீட்டுக்குச் செல்லுகிறார்.

வீண் முரண்டால் மனக்கசப்பைத் தவிர ஆகிற காரியம் ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்த மரகதம், அன்று தலையை ஒழுங்காகச் சீவி முடித்துக் கொண்டு, சாயங்காலக் காப்பி எல்லாம் தயாரித்து வைத்து விட்டு, வெளியே கார் வரும் சப்தத்தைக்கேட்டு நடுக்கூடத்திற்கு வரும்போது வெளியிலிருந்து, ''சித்தியைக் கூப்பிட்டு காப்பியை இங்கே கொண்டாரச் சொல்லுவோம், மரகதம்! மரகதம்'' எனக் கூப்பிடும் குரல் கேட்கிறது.

''வாண்டாம் அப்பா, நாம்போயி வெளையாடுவோம்'' என்கிற குழந்தையின் குரலும் கேட்கிறது.

சுந்தரவடிவேலு விழுந்து சிரிக்கும் சப்தம்...

''சித்தி நல்லவள்ளா,—அண்ணெக்கேதான் பூனெய அடிச்சு வெரட்டியாச்சே'' என்கிறார்.

''பூனெக்கில்லெப்பா...'' என்கிறது குழந்தை.

இவ்வளவையும் கேட்டுகொண்டே காப்பி பலகாரங்களுடன் வெளியே வருகிறாள் மரகதம். அவள் முகத்தில் நாணம், வருத்தம் இரண்டும் கலந்திருந்தும் ஒரு மலர்ச்சியும் புன்சிரிப்பும் இருக்கிறது.

''ஏதேது'' எனத் தமது 'வேலையில்' பாதி முடிந்து விட்டதை உணர்ந்து கொண்ட சுந்தரவடிவேலு, ''இந்தா நான் நாக்காலியே எடுத்துப் போடுறேன்; இந்தச் சட்டையெல்லாம் போட்டுவிட்டு வா'' எனத் தன் கோட்டைக் கழற்றிக் கொடுக்கிறார்.

பக்ஷணத் தட்டை ஒரு மேஜை மேல் வைத்து விட்டு கோட்டை வாங்கிக் கொண்டு உள்ளே செல்லுகிறாள் மரகதம்.

தகப்பனாரும் குழந்தையுமாக நாற்காலிகளை இழுத்துப் போடுகிறார்கள்.

''குஞ்சு, குஞ்சு. நீ கொஞ்சம் சும்மா இரு. நானே போடுகிறேன்.''

''ஒனக்குத்தெரியாதப்பா...'' என்று,ஒரு நாற்காலியை முக்கி முனகி இழுக்கிறது.

மரகதம் திரும்பி வருகிறாள்.

மத்தியில் மேஜையை வைத்து அதில் பலகாரங்களை வைக்கிறாள். ஒரு புறம் குழந்தையும், மறு புறம் மரகதமுமாக உட்காருகிறார்கள்...

"என்ன மரகதம், நீயும் என்ன சிறு பிள்ளைத்தனமா அண்ணக்கி நடந்துகிட்டே...அவ 'அக்கா' என்று சொல் லிட்டா குத்தமென்ன; அதிலெ என்ன வசெ...?" என்று ஒரு டீ பிஸ்கட்டை முறிக்கிறார் சுந்தரவடிவேலு...

"இது ஓங்கிளுக்குத் தெரியாதாக்கும். அக்கான்னா மூதேவி; நல்ல ஆம்பிளைதான்" என்கிறாள்.

"குஞ்சம்மா நீ ஏண்டியம்மா அண்ணெக்கி சித்தியை அக்காண்ணே?"

"அண்ணெக்கி, ஊருலே, மோளம் அடிச்சுதே அண் ணெக்கி நீ சொல்லலே, அக்கா என்று சொல்லப்படா துன்னு!" என அந்த வார்த்தை தனக்கு வசவாக மாறிய விதத்தை விளக்குகிறது குழந்தை. இருவரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்...

"குஞ்சு நீ இண்ணைக்கி எங்கெல்லாம் வெளையாட்டு வெளையாடினே சொல்லு பார்ப்போம்" என்று கொண்டு நாற்காலியில் சாய்ந்து கொள்ளுகிறார்.

"இண்ணெக்கா, வட்டாடுனேன்; அப்புறம் பூச்சாண்டி வந்தான்..."

"பூச்சாண்டியா?" எனக் குழந்தை பயந்து விட்டதோ என்ற கவலையும் கொள்ளுகிறார்; மரகதத்தின் முகத்தி லும் கவலை தேங்குகிறது.

"ஆமாம்ப்பா! நல்ல பூச்சாண்டி; அவன் கூட விளை யாடினேன்..."

"பாத்தியளா, குழந்தை கண்ட பிச்சைக்காரனோட எல்லாம் போய்ச் சேர்ந்து உழப்புது" என்கிறாள் மரகதம்.

"அப்பா அவன் பிச்சைக்காரன் இல்லை, பூச்சாண்டி. சாப்பிட்டுப்புட்டுக் கையைக் கொளாயிலே களுவினான்;

பிச்சைக்காரன் மாதிரி, துணியில தொடச்சுக்கலெ'' என்றது.

இருவரும் குழந்தையின் வியாக்கியானத்தைக் கண்டு சிரிக்கிறார்கள்.

''அவன் கூட என்ன வெளையாடினே?''

''மந்திரம்!'' என்கிறது.

''என்ன மந்திரம்?'' என்கிறார் சுந்தரவடிவேலு ஆச்சரியத்துடன்.

''ஒரு பிசுக்கோத்துக் குடு. செஞ்சு காட்டுறேன்''-என்கிறது. அவர் ஒரு பிஸ்கட் துண்டை எடுத்துக் கொடுக்கிறார்.

குழந்தை கை மாற்று வித்தையைத் தனக்குத் தெரிந்தபடி செய்து செய்து சிரிக்க வைக்கையில், வாசலில் ஒரு ரிக்ஷா வந்து நிற்கிறது.

அதிலிருந்து ஒரு பெரியவர் மடிசஞ்சியுடன் இறங்குகிறார்.

குழந்தை அவரைக் கண்டு கொண்டு ''தாத்தா'' எனக் கத்தியபடி நாற்காலியை விட்டு அவரை நோக்கி ஓடுகிறது.

மரகதமும் சுந்தரவடிவேலுவும் எழுந்து நிற்கிறார்கள்.

''மாமா! வாருங்க!'' எனக் கும்பிடுகிறார்.

''அப்பா சேவிக்கிறேன்'' என்று விழுந்து வணங்குகிறாள் மரகதம்.

''மங்களமா இருக்கணும்...'' எனக் கிழவனார் ஆசீர்வதிக்கிறார்.

"மரகதம், நீ போய் முருகனைப் பார்த்து மாமாவுக்கு வென்னி போடப்பாரு; சீக்கிரம்—அவசரமா ரயில்லே ஏறி உக்காந்தாங்கண்ணா பல்லுலே தண்ணி பட்டிருக்காது என்று அர்த்தம்" ஏன்கிறார் சுந்தரவடிவேலு.

"நான்தான், ஏ முருவா தாத்தாவுக்கு வென்னிப் போடு" என்று கீச்சிட்டுக் கொண்டு உள்ளே ஓடுகிறது குழந்தை.

"ஏட்டி பைய, பைய,—எதமாப் போ!" என்று எச்சரிக்கிறார் பாட்டனார். குழந்தையின் கீச்சுக் குரல் "முருவா முருவா!" என உள் வீட்டில் முழங்குகிறது.

மரகதம் பின்தொடருகிறாள்.

"ராசாவுக்கு என்ன சீக்கு! அப்படித் திடீருன்னு,......" என்கிறார் மாமனார்.

"எம் முட்டாத்தனம்; அவன் எண்ணெக்கிமே பெலஹீனம்; நான் வெளியிலே போனப்போ மழையிலே சுத்தியிருக்காப் போலிருக்கு; திடீருன்னு ஜன்னியும் வலிப்பும் கண்டுது...அவனுக்கு அடிக்கடி ஒரு வலிப்பு வந்து கொண்டிருந்தது......" என்கிறார் சுந்தரவடிவேலு குரல் கம்மலுடன்.

இருவர் கண்களும் கலங்குகின்றன.

"அவ்வளவுதான் நமக்கு அதிஷ்டம். குடுத்து வைக்கலே, வருத்தப்படாதே போ......" என்கிறார் கிழவர்.

இருவரும் மௌனமாக இருக்கின்றனர். சுந்தரவடிவேலு மனம் அவரையே சுடுகிறது.

"நம்மூரிலே ஒரு பிள்ளையார் கோயில் கட்டணும் என்று எனக்கு ரொம்ப நாளா ஆசை. வாய்க்கால் பக்கம்

இருக்கே முக்கோணமாக ஒரு நெலம், நந்தவனத்துக்குப் பக்கத்திலே, அதே நீ குடுத்தா நல்லாருக்கும்'' என்று பேச்சை வேறு திசையில் திருப்புகிறார் கிழவர்.

பிராயச்சித்தம் போல இவ்வார்த்தைகள் சுந்தரவடி வேலுக்கு ஒரு மனக்குளுமையை ஏற்படுத்துகிறது.

''அப்படியே செய்து விடுவோம்......அதற்கென்ன'' என்கிறார்.

மனக்கண் முன் பிள்ளையார் சிலை ஒன்று பூதாகரமாக ஆனால் மனசுக்குக் குளுமை ஏற்படுத்தும் தன்மையோடு கூடி நிலைக்கிறது.

மறுநாள் விடியற்காலம்......

''தும்பிக்கையொன்றே துணை'' என்ற கிழவனார் குரல்......

''தும்பிக்கையொன்றே தொணை'' என்கிறது குஞ்சு வின்குரல்...

கி: காட்டு வழியானாலும்...

கு: காட்டு வழியானாலும்...

கி: கள்ளர் பயமானாலும்...

கு: கள்ளர் பயமானாலும்...

கி: ஏட்டு வழிக்காரருக்கே...

கு: ஏட்டு வழிக்காரருக்கே...

கி: இதமுண்டு...

கு: இதமுண்டு...

இவ்வாறு கிழவர் குழந்தையை எழுப்பி வைத்துக் கொண்டு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். முகம் தெரியாத இருட்டு. குஞ்சு போர்வைக்குள் உட்கார்ந்து கொண்டிருக்கிறது; சின்னக் கட்டிலில்.

''மகா தேவா—சொல்லு''

''மகா தேவா...''

குழந்தை எழுந்து ஒரு கால் சட்டையை முடிந்து விடும்படி, தாத்தாவிடம் கொண்டு வருகிறது.

தாத்தா: ஏட்டி! பாவாடெ எங்கே?

கு: இருட்லெ தெரியலே தாத்தா! இதைத்தான் கட்டி வுடு.

கி: இதெ எப்போ எடுத்தாந்தெ?

கு: கட்டில்லே கெடந்தது...

கி: நல்லாத்தான் இருக்கு; நீ என்ன ஆம்பளப் புள்ளெயா...?

நாடாவை முடித்து விடுகிறார்.

கு: ரொம்ப இறுக்கபதே......ஷ...வயித்தெ வலிக்கு மாம்.

''இங்கே வா! திரு நீறு பூசட்டும்'' எனத் தானும் இட்டுக் கொண்டு, குழந்தைக்கும் பூசுகிறார். சிறிது வாயில் போடுகிறார்.

''இன்னும் கொஞ்சூண்டு தாத்தா'' என்கிறது குழந்தை.

''உம்! அதெல்லாம் சோகெ புடிக்கும். ஒண்ணு ரெண்டு, மூணு சொல்லு...ஒனக்குத் தெரியுமா?''

''நீ சொல்லு, நான் கேட்டுகிட்டிருக்கேன்.''

''அடி போடி சொல்லுடின்னா!''

''தாத்தா! நீ இங்கியே உக்காந்துகிட்டு இரு, நான் உள்ளே போயிட்டு வாரேன்'' எனப் புறப்படுகிறது.

''எங்கடி இருட்லே, இப்படி உட்காரு''

''நீ இரேன் இதோ வாரேன்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய் மச்சிலுக்கு ஏறுகிறது.

இருட்டில் கஷ்டப்படக் கூடாதே எனக் கிழவரும் தொடர்கிறார். அதன் வேகத்தைப் பிடிக்க முடியவில்லை.

அது மச்சிலில் நேராக ஒரு அறைக்குள் நுழைவதைக் கண்டு பின் தொடர்கிறார்.

வாசலை நெருங்கியதும் திக்பிரமையடைந்து நின்று விடுகிறார்.

குழந்தை தாயாரின் படத்தின் முன் கும்பிட்டுக் கொண்டு நிற்பதையும் பார்த்துவிடுகிறார்.

குமுறிக்கொண்டுவரும் அழுகையை வாயில் துணியை வைத்து அமுக்கிக்கொண்டு இறங்கி வந்து படுக்கையில் உட்கார்ந்து விடுகிறார்.

சிறிது நேரம் கழித்துக் குழந்தை திரும்பி வருகிறது.

''தாத்தா பல்லு வெளக்கலே; அப்பா ஏந்திரிச்சாச்சு!'' என்று அவரை அசைக்கிறது.

மெதுவாக எழுந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டு தொடருகிறார்.

ஃ ஃ ஃ

பகல். மத்தியானம் இரண்டு மணி இருக்கும்.

குழந்தை சிவப்பழமாக வாசலில் நின்று கொண்டிருக்கிறது. நெற்றியில் விபூதி, சந்தனப்பொட்டு, உடம்பிலும் மூன்று மூன்று வரைகள்—புலிவேஷம் போட்ட மாதிரி. குழந்தை அதைப் பார்த்துப் பார்த்து ரசித்துக்கொண்டு நிற்கிறது.

வீட்டு உள்கூடத்தில் தாத்தா நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். எதிரில் கலங்கிய கண்களுடன் தன் குறைகளை எல்லாம் தெரிவித்துக் கொண்டிருக்கிறாள் மரகதம்.

ஆற அமர அவர் கேட்டுக் கொண்டிருக்கையில் குழந்தையின் குரல் கேட்கிறது.

''தாத்தா, கள்ளன் வந்திருக்கிறான்'' என்று அறிவிக்கிறது.

''என்னட்டி.''

' கள்ளன் தாத்தா,—திருடன், களவாணி'' என விளக்குகிறது.

இருவரும் பதறிப்போய் என்னவென்று ஓடுகிறார்கள் வாசலில் நீளக் கிராப்புத் தலையும் ஷர்ட்டும், டாககி டவலும் அணிந்த ஒருவன் சிரித்துக்கொண்டு நிற்கிறான்.

''சார் இருக்கிறாங்களா'' எனக்கேட்டுவிட்டு ''ஏது குழந்தை ரொம்ப ஜாக்கிரதை போலிருக்கிறதே!'' எனச் சிரிக்கிறான்.

''அது உளருகிறது. அவாள்இல்லை'' என்று சொல்லியனுப்பி விடுகிறார் கிழவர்.

''பாத்தியளா கூத்தை;இந்த மாதிரிதான்;அண்ணைக்கி ஒருத்தென் இவன்மாதிரிதான் சட்டையும் கிட்டையும்

போட்டுகிட்டு வந்தான்,—இவர் இல்லெ. புள்ளே வெளியே தனியா வெளையாடிக்கிட்டிருந்தது. உள்ள கூப்பிடுறதுக்கு இப்படிச் சொல்லி வச்சேன்,—நம்மையே பரிசி கெடுத்து விட்டது'' என்கிறாள் மரகதம்.

''அப்பொ நான் சொல்லுகிறதைக் கேளு. உன் மாப்பிளைக்கி மொறைக்கு ஒரு அக்கா இருக்கா. வயசானவ. ரொம்ப ஏழை. ஏழெட்டு வயசுப் பையனும் அவளுந்தான், அவளை இங்கே கூட்டி வச்சுக்கோ. வீட்டையும் பார்த்துக்குவா,—புள்ளையெயும் பார்த்துக்குவா,—என்னசொல்லுறே,—சம்மதமா?''

''நீங்க சொன்னாச் சரிதான், இல்லேங்கப் போறனா நான்'' என்கிறாள்.

''நான் இண்ணெக்கே புறப்படுறேன். புள்ளையும் கூட்டிக்கிட்டுப் போறேன்;அங்கெல்லாரும் பார்க்க ஆசைப் படுறாக'' என்கிறார் கிழவர்.

இரவு ரயில்வே ஸ்டேஷன்.

இரண்டாவது வகுப்பு வண்டியில் கிழவனாரும் குஞ்சுவும் உட்கார்ந்திருக்கிறார்கள். பிளாட்பாரத்தில் சுந்தரவடிவேலுவும் மரகதமும் நிற்கிறார்கள்.

ரயில் ஊதிவிட்டது; புறப்படப் போகிறது.

''ஊருக்குப் போறியாக்கும்'' எனக் குழந்தையை ஜன்னல் வழியாக முத்தமிடுகிறார்.

ரயில் நகருகிறது.

''ஏட்டி, போயிட்டு வாறியா? என்கிறாள் மரகதம்.

''ஒன் கூட டூ. ஆனமேலே, அம்பாரி மேலே டூ'' என ஜன்னல் வழியாகக் கையை நீட்டிக் கொண்டு கத்துகிறது குழந்தை.கிழவனார் அதன் இடுப்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருக்கிறார்.

# திருமணம்

ஒரு கலியாண வீடு; அதாவது கலியாண வீட்டின் முன் முகப்பு. சட்டத்தால் வாரிசுகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமே என்று சட்டத்தையும் பொதுஜன அபிப் பிராயத்தையும் ஒருங்கே திருப்தி செய்விக்கும் நோக்கத் துடன் நடப்பது போல அவ்வளவு படாடோபமற்ற அலங் காரம்.

வாசலில் தெருவுக்கு எதிர்ப்புறத்தில் ஒரு பூவரசமரம் நாலைந்து பேர்கள் கலியாண 'மஜா'வில் கும்மாள மடித்து நிற்கிறார்கள்: அவர்களுள் ஒரு சிறுவன்; ஒற்றை நாடியான சரீரம்! தீட்சண்யமான கண்கள்—எண்ணை கொஞ்சம் வழிய விட்டுச் சீவிய கிராப்புத் தலை. இடையில் பட்டு வேஷ்டி, பட்டு ஷர்ட்; இடுப்பில் பட்டுக் கரை மேல்வேஷ் டியைப் பிரிமணையாகச் சுற்றிக் கட்டியிருக்கிறான். வெற் றிலை அளவுக்கு மிஞ்சிப் போட்டதால், வாயும் ஷர்ட்டும் சிவப்புக் கறையுடன் காணப்படுகிறது. வாய் அசைபோட் டுக் கொண்டிருக்கிறது.

சிறுவர்கள் கும்பல் சும்மா நிற்கவில்லை. ஒருவரை யொருவர் பிடித்துத் தள்ளி விளையாடிக் கொண்டிருக்கின் றனர். ஒரு பையன் வாழைமட்டை ஒன்றை வைத்துக் கொண்டு பக்கத்தில் யாரும் கவனிக்காமல் பராக்காக இருக் கும் சமயத்தில் பின் பக்கமாகப் போய், படார் என்று தரையில் அடித்து அதனால் திடுக்கிடுவதைக்கண்டு சிரித்து மகிழுகிறான்.

உள்ளே நாதசுரக்காரன் குரலெடுக்கிறான். சாதாரணக் கலியாணம் என்பதைக் காட்டும் சாதாரணத்திறமை.

பட்டு வேஷ்டி அலங்காரத்துடன் இருக்கும் பையன், ரொம்பப் பெருமையாக முகத்தை வைத்துக்கொண்டு, அப்பொழுதுதான் அங்கு வந்த ஒருவனிடம் "எங்கப்பாவுக்குக் கலியாணம்டா!" என்று பெருமையடித்துக்கொண்டான்.

கேட்டவன், சொன்னவனுடைய அறியாமைக்குப் பரிதவிப்பவன் போல "இவங்க அப்பாவுக்காண்டா. —எங்க மதினிக்குக் கலியாணண்டா!" என மற்றவர்களுக்கு உண்மையை, நிர்த்தாரணம் செய்து பாராட்டுதலைச் சுற்று முற்றும் எதிர்பார்க்கிறான்.

"எங்கப்பாவுக்குத் தாண்டா!" எனக் கிரீச்சிட்டுக் கொண்டு, கலியாணக்கடுதாசிலேகூட அச்சுப் போட்டிருக்கு" என்றவாறு இடுப்பில் சுற்றியிருந்த பட்டுலேஞ்சியை அவிழ்த்து கந்தரகோளமாகக் கழுத்தில் போட்டுக் கொண்டு, துருத்திக் கொண்டிருந்த மடிப்பொட்டளத்தை அவிழ்க்கிறான். அதில் ஒரு லட்டு, கசங்கி வெதும்பும் ஒரு கட்டு வெற்றிலை, சாயப்பாக்கு வகையறாக்களுடன் நசுங்கும் கலியாணக் கடுதாசியை வெளியே எடுத்து நிமிர்த்தி விரித்து, எழுத்துக் கூட்டிப் பெயரை வாசிக்க ஆரம்பிக்கிறான்.

"ஏ.எஸ். சு. இந்-தி-ர...வடி...வடி...வேலுப் பிள்ளை ...! எங்க அப்பா."

அதே சமயத்தில் எதிர்க்கட்சியாடிய பையன், "ம-ர-க-தா-ம்-பா-ள்...எங்க மதினி."

"அப்படின்னா நாம சொந்தம்." என்று கழுத்தில் கையைப் போட்டுக்கொண்டு இறுக்குகிறான் மாப்பிள்ளையின் மகன்.

அதே சமயத்தில் கூட்டத்திலிருந்த இன்னொருவனுக்குப் பூவரச மரத்தில் ஏறித் தழை பிடுங்கி ஊதல் செய்ய வேண்டுமென்று தோன்றி விடுகிறது. விருவிருவென்று ஏறிக் கிளையில் உட்கார்ந்து கொண்டு ஒரு இலையைச் சுருட்டி வாயில் வைத்துக் கொண்டு ஊதுகிறான். அந்தச் சப்தத்தைக் கேட்ட மற்ற சிறுவர்கள் இலைக்காகக் கெஞ்சுகிறார்கள்.

கிளை கிளையாக ஒடித்துப்போடுகிறான் உயர இருப்பவன். கீழே ரகமயமான ஊதல் சப்தம்.

சுந்தரவடிவேலுப் பிள்ளையின் மகனும் ஒரு இலையை எடுத்துக் கொண்டு யாரும் பிடுங்கிக் கொள்ளாமல் தூரத்தில் ஓடி நின்று கொண்டு சுருட்டி வாயில் வைத்துக் கொண்டு ஊதுகிறான். அவசரத்தில் உருட்டியதால் சத்தம்...பக்-பக்-என திக்கித் திக்கித் தாரை வாசிக்கிறது.

அச்சமயம் கலியாண வீட்டை நோக்கி ஒரு பெரியவர் கையில் மடிசஞ்சி மூட்டையுடன் நடந்து வருகிறார்.

அவரைக் கண்டதுதான் தாமதம். ''தாத்தா வந்திட்டாங்க...'' என உச்சஸ்தாயியில் கத்திக் கொண்டு உள்ளே ஓடுகிறான்.

ஆளில்லாமல் அலங்காரத்துடன் நிற்கும் மணவறை, பந்தலில் ஒரு மூலையில் மேளகாரன். நடுவில் வெற்றிலைத் தட்டு. யாரோ ஒரு பெரியவர் மட்டும் உட்கார்ந்திருக்கிறார். அவரையும் தாண்டி விழுந்து உள்ளே ஓடுகிறான். வீட்டு வெளி ஓர வழியாக உள்ளே பெண்கள் கும்பலைச் சுற்றிக் கொண்டு மச்சுப்படிகளில் வேகமாக ஓடுகிறான்.

ஓடுகிற வேகத்திலும் அவன் வாயில் ஊதல் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

மச்சில் ஒரு அறைக்குள் திரும்புகிறான்.

வாசற்படியில் நின்றுகொண்டு விரைக்க வியர்க்க, "அப்பா, அப்பா! தாத்தா வந்திட்டாங்க!" என்று இளைப்பால் கம்மிக் கம்மிச் செய்தியைக் கக்குகிறான்.

அறையில் விரித்த ஜமுக்காளத்தில் வெற்றிலைத் தட்டைச் சுற்றி ஐந்தாறுபேர் உட்கார்த்திருக்கிறார்கள்.

ஒருவர் பக்கத்தில் உள்ள திண்டின்மேல் முழங்கையை மட்டும் சாய வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

மடியில் ஒரு மூன்று வயதுப் பெண் குழந்தை உட்கார்ந்து கொண்டு அவர் கன்னத்தைத் தொட்டுத் தொட்டு "அப்பா! அப்பா!" என்ற வண்ணம் பெரியவர்கள் பேச்சில் தலையிட்டுப் தன்குதலையால் குழப்புகிறது. அவர் குழந்தையின் தலையைத் தடவிக் கொடுத்தபடி மற்றவர்கள் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மகன் சப்தம் கேட்டதும் ஏறிட்டு அந்தத் திசையைப் பார்க்கிறார்.

"எங்கெடா..."

குழந்தை, சிறுவன் கையிலிருக்கும் ஊதலைப் பார்த்துவிட்டு, 'எனக்கும் ஊதல்' எனக் கத்துகிறது,

"தரமாட்டேன்......அப்பா, தாத்தாவைக் கூட்டியாரேன்" என்று கத்தியவண்ணம் கீழே ஓடுகிறான்.

குழந்தை ஊதல் வேண்டும் என்று கத்த ஆரம்பிக்கிறது.

"டே கண்ணு..." எனத் தகப்பனார் பேச்சு எடுக்குமுன் மாடிப்படிகளில் இருவர் மோதிக் கொள்ளும் சப்தம்... சிரிப்பு.

"எங்கடா இந்த ரயில் அவசரம்?" என்ற பெரியவர் குரல்.

"இல்லே தாத்தா; உங்களைக் கூட்டியாரத்தான் ஓடி யாந்தேன்..."

"அட போடா! படுக்காளிப் பயலெ, மாடிப்படியிலே இப்படி ஓடலாமா?...பல்லு தெறிச்சுப் போகாது, விழுந்தா......?"

"விழ மாட்டேன் தாத்தா!"

பாட்டனும் பேரனும் உள்ளே வருகிறார்கள்.

"நமஸ்காரம் மாமா! வரவேணும்..."

கிழவனார் தன் பேத்தியைக் கையில் வாங்கிக்கொண்டு முத்தமிடுகிறார். குழந்தை அவர் தோள் வழியாகப் பின் புறத்தில் நிற்கும் அண்ணனிடமிருக்கும் ஊதலைப் பார்த்துக் கொண்டே அது தனக்கு வேண்டும் எனக் கத்துகிறது.

கிழவனாரும் மருமகனும் ஜமுக்காளத்தில் அமரு கிறார்கள்.

பக்கத்தில் நின்ற வாலிபன் வந்தவரைப் பன்னீர் தாம்பூலம் பரிமாறி உபசரிக்கிறான்.

பேரன் பன்னீரைத் தெளித்து வழுக்கையில் அது வழி வதைக் கண்டு ரசிக்கிறான்.

கிழவர் பையனைச் செல்லமாகக் கண்டித்துக்கொண்டு, "சீ! படுக்காளிப் பயலே, இங்கே வா; இப்படி உட்காரு, படிக்கியால" என்று கேட்கிறார்.

"இப்போ ரெண்டாங் கிளாஸ்" என்று பெருமை அடித்துக் கொள்ளுகிற மாதிரி ஆரம்பித்து "பெயிலாப் போச்சு" என்று முடிக்கிறான்.

சிறு குழந்தையின் நச்சுக்காக அவர் எழுந்திருந்து ஜன்னலுக்கு வெளியே நின்ற தென்னையின் மடலிலிருந்து ஒரு ஓலையைப் பிய்த்துக்கொண்டு வந்து, உட்கார்ந்து மடியி

லிருந்த சூரிக்கத்தியால் அதைத் திருத்தி, ஊதல் ஒன்று செய்ய ஆரம்பிக்கிறார் கிழவர்.

முகூர்த்த நேரம் நெருங்கிவிட மாப்பிள்ளைச் சடங்கு ஆரம்பமாகிறது.

மாப்பிள்ளை மணவறைக்கு அழைத்துச் செல்லப் படுகிறார்.

புகை மண்டிய ஹோமம் நடக்கிறது. பிறகு பெண் சடங்கு.

இந்த நேரத்தில் கிழவனார் தன் பேரப்பிள்ளைகள் இருவரையும் மடியில் உட்கார வைத்துக் கொண்டு மணப் பந்தலில் வருகிற விருந்தினர்களை உபசரிப்பதில் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்.

மணமேடையில் மாப்பிள்ளையும் பெண்ணும் வந்து உட்காருகிறார்கள்.

திருமாங்கல்யதாரண சமயம்...மௌனமும் இரைச்ச லும்.

சந்தடியில் பெண் குழந்தை கிழவனார் மடியிலிருந்து நழுவி ஓடித் தகப்பனார் மடியில் உட்கார்ந்து கொண்டு கையிலிருந்த ஊதலை வாசிக்கிறது.

மணப்பெண் கடைக்கண் போட்டுக் குழந்தையைப் பார்க்கிறாள்—முகத்தில் வெட்கம் கவிகிறது.

அவள் பார்வையைக் கண்டுகொண்ட குழந்தை அவள் மூஞ்சிக்கு நேராக ஊதலை நீட்டிக் கொண்டு ஊதுகிறது.

மணவறையில் ஏக ரகளை; எல்லோரும் சிரிக்கிறார் கள்.

மாப்பிள்ளை சிரித்துக்கொண்டு "குஞ்சு, பாட்டா மடியிலே இருந்துக்கோம்மா!" என்று பக்கத்திலிருந்தவர் களிடம் எடுத்துக் கொடுக்கிறார்.

குழந்தை கைமாற்றிப் பாட்டையாவிடம் சேர்ப்பிக்கப் படுகிறது. ஊதல் சப்தத்தை மாத்திரம் விடவில்லை.

அதே சமயத்தில் திருமாங்கல்ய தாரணமும் நிகழ் கிறது... பெண்ணின் கழுத்தில் தாலி ஏறுகிறது... மாப்பிள் ளையின் கையில் மட்டும் சிறிது நடுக்கம்......முகத்தில் மலர்ச்சி யானாலும்...!

கிழவனார் பேரன் கிராப்புத் தலையைத் தடவிக் கொண்டு மணமேடையைப் பார்க்கிறார். என்றாலும் பார்வையுடன் நினைவு லயிக்கவில்லை.

அம்மி மிதித்து அருந்ததி காட்டும் சடங்குகள்...யாவும் நடைபெறுகின்றன.

ஆசீர்வாதம்...

பெரியோர் யாவர் முன்பும் தம்பதிகள் வந்து வணங்கு கின்றனர். ஒவ்வொருவரும் திருநீறு இட்டு ஆசீர்வதிக் கின்றனர்.

கடைசியாக முதல் மாமனார் முறை.

அவர் முன் வந்ததும் சுந்தரவடிவேலு சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறார்...பெண்ணும் விழுந்துகும்பிடுகிறாள்.

பெரியவர் கண் கலங்குகிறது...திருநீற்றை இருவர் நெற்றியிலும் இடுகையில் அவர் கை நடுங்குகிறது.

சின்னக் குழந்தை?

“அப்பா! நான்தான் நல்லா ஊதியை ஊதினேன்! அந்த அக்கா மூஞ்சிலேகூட ஊதினேனே...” என்கிறது. மணப் பெண்ணின் முகம் சிவக்கிறது. யாவரும் சிரிக் கின்றனர்.

மாப்பிள்ளையும் குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு முத்தமிட்டு "அக்கா இல்லேடி...சித்தி" என்று கொண்டே—ஏதோ யோசனை தட்டியது போலப் பிரகாசமான முகத்துடன் குழந்தையைப் புது மனைவி கையில் கொடுக்கிறார்.

சற்று நேரம் தயங்கி நின்ற பெண் தயக்கத்துடன் வாங்கிப் பெண்களுக்குரிய பழக்கப்படி இடுப்பில் உட்கார வைக்கிறாள். பக்கத்தில் நிற்கும் பெண்கள் சிரித்து ரகளை செய்கின்றனர்.

இடுப்பிலிருந்த குழந்தை இறங்கி, "சித்தி! வா நான் கூட்டிக் கொண்டு போகிறேன்" என அவள் நடு விரலைப் பிடித்துக்கொண்டு முன் நடக்கிறது.

"ஒனக்கென்னம்மா கவலெ! மகளே உன்னைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டாள்" என்கிறாள் பெண் தோழி.

மறுபடியும் சிரிப்பும் அட்டகாசமும்.

பெண்கள் கூட்டம் மணப் பெண்ணுடன் வீட்டுக்குள் செல்லுகிறது.

மாப்பிள்ளையும் முதல் மாமனாரும் தனித்து நின்றனர்.

மாப்பிள்ளை "என்ன மாமா, நீங்க மட்டுந்தான் வந்தீர்களா? மதினியைக் காணலியே"

மாமனார்: "அவள் குளத்தூர் கலியாணத்திற்குப் போயிருக்கிறாள்...நான் உங்களை எல்லாம் கூட்டிக் கொண்டு போகலாம் என்றுதான் வந்தேன். நாளை சாயங்காலம் வந்திடுவாள்."

மாப்பிள்ளை சிரித்துகொண்டு, "இரண்டு நாள்தான் லீவு எடுத்து வந்தேன்! நாளைச் சாயங்காலம் ரயில்லே இருப்போம்..."

# ரயிலில்

நல்ல இருட்டு.ஓடுகிற ரயில் வண்டியில் இரண்டாவது வகுப்பு. நீட்டு போக்கில் சீட்டுகள் அமைந்த விசாலமான வண்டி. முழுதும் ரிஸர்வ் செய்யப்படடிருப்பதால் வண்டியில் சுந்தரவடிவேலு, அவரது புது மனைவி மரகதம், குழந்தைகள் உட்கார்ந்திருக்கின்றனர்.

சுந்தரவடிவேலு வெறும் ஷர்ட்டும் பைஜாமா கால்ச் சட்டையும் அணிந்துகொண்டு உட்கார்ந்திருக்கிறார் மரகதம் ஜன்னலடியில் உட்கார்ந்து வெளியே பார்ப்பதும் உள்ளே குழந்தைகள் விளையாடுவதைக் கவனிப்பதுமாக இருக்கிறாள்.

குழந்தை குஞ்சு ரயில் வண்டி மாதிரி புஸ்-புஸ்-புஸ் என்ற வண்ணம் கைகளை பிஸ்டனைப்போல் ஆட்டிக் கொண்டு,ரயில் ஊதுகுழலைப்போல் வாயால் ஊதுகிறதும் மறுபடியும் வண்டி பெட்டிக்குள் சுற்றிச் சுற்றி ஓடிவருகிறதுமாக இருக்கிறாள். வண்டி ஓடுவதனால் சில சமயம் தள்ளாடி விழுவாள். மறுபடியும் எழுந்து நின்றுகொண்டு எஞ்சின் புறப்படும்.

அவளுடைய அண்ணன் ராஜா பத்திரிகையின் சிவப்பு அட்டை ஒன்றையும் சித்தியின் பச்சைக் கைக்குட்டையையும் வைத்துக்கொண்டு ‘ஸ்டேஷன் மாஸ்டர்’ உத்தியோகம் பார்க்கிறான். எதிர்ப்புறத்து சீட்டு, (seat) ராஜா வேலை பார்க்கும் ரயில்வே ஸ்டேஷன் பதவி வகிக்கிறது.

"என்ன? சின்ன எஞ்சினுக்கும் பசிக்கலியா?" என்கிறார் சுந்தரவடிவேலு.

"இஞ்சின் தண்ணி குடிக்கிற டேஷன் வரலியே அப்பா" என்று குழலூதிக்கொண்டு புறப்படுகிறது குஞ்சு.

"மணி எட்டாச்சு, நீங்கள்ளாம் தூங்க வாண்டாம்? டே ராஜா, கையைக் கழுவிக்கடா;—மரகதம் குஞ்சுவுக்கு பாட்டில்லெ பாலை ஊத்திக் குடு" என்கிறார் சுந்தர வடிவேலு.

மரகதம் கீழே குனிந்து டிபன் பெட்டியை வெளியே இழுத்துக்கொண்டு அதன்எதிரே உட்கார்ந்து பெட்டியைத் திறந்து துணியில் சுற்றி வைத்திருந்த பாட்டில் ரப்பர் இரண்டையும் எடுத்துக் கழுவிக்கொண்டே, "இன்னும் புட்டியிலா பாலைக் குடுப்பா? ரப்பர் வச்சு உறிஞ்சினா உதடுல்லே பெருத்துப் போகும்..." என்று அவரைப் பார்த்துக் கேட்கிறாள்.

"பாட்டில்லெ குடுத்தாத்தான் சிந்தாது; அவ உதட்டுக்கென்ன, அழகாகத்தான் இருக்கிறது" எனக் குஞ்சுவை எடுத்து உதட்டில் முத்தமிடுகிறார்.

"குத்துது அப்பா" என்று முகத்தைப் புறங்கையால் துடைத்துக் கொண்டே இறங்க முயல்கிறது,குழந்தை.

"இதோ பாரு குஞ்சு, இந்தப் பாலைக் குடிச்சிட்டுப் படுத்துக்கணும். நீ குடிக்கிறத்துக்குள்ளே, மெத்தையைப் போட்டு வைப்பனாம்..."

"ஆகட்டும் அப்பா" என அவர் உட்கார்ந்திருந்த இடத்தில் தலையணை மீது சாய்ந்தபடி பால் பாட்டிலை வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கிறது.

''டே ராஜா, நீ என்ன சாப்பிடப்போறே? இட்லியா, தயிர்ச்சாதமா...? உனக்கென்ன வேணும்?'' என்கிறார் சுந்தரவடிவேலு.

''அப்பா, நான் அந்தப் பழத்தை மாத்திரம் சாப்பிட்டு விட்டுப் படுத்துக்கறேனே...''

''சீ இதென்ன வழக்கம். தயிர்ச்சாதமா பலகாரமா— எது வேணும்? மரகதம் நமக்கும் எடுத்து வையேன்...''

''பின்ன இட்லியைத்தான் சாப்பிடுகிறேன்'' என வந்து உடகாருகிறான்.

மூவரும் சாப்பிட உட்காருகிறார்கள். ''நீ என்ன சும்மா இருக்கே,—நீயும் இப்பவே உக்காந்திடேன்...'' என்கிறார் சுந்தரவடிவேலு.

''நீங்கள்ளாம் சாப்பிட்டு முடியுங்க...''

''இதுதானே...சாப்பாட்டுக் கடையே ஒண்ணா முடிச்சுப்புட்டா எல்லாத்தையும் உதறிக்கட்டி வச்சுப்பிடலாமே, நீயும் உட்காரு —அந்தக் கூஜாத் தண்ணியை எடு...''

''அதுக்காகத்தான்—அப்புறம் என்றேன்.'' குஞ்சு சாப்பிட்டுவிட்டு, ''அப்பா இந்தா பாட்டில்...'' என்கிறாள்.

''மரகதம் அதை வாங்கி வை.''

எல்லோரும் சாப்பிட்டு முடிக்கிறார்கள்.

சுந்தரவடிவேலு குழந்தைகளைப் படுக்கவைத்து விட்டு விளக்கின் மீது கருப்புத் திரையை இழுத்துவிட்டு விட்டு, சீட்டில் வந்து உட்காருகிறார்.

மரகதம் உடைகளை மாற்றிக்கொண்டு மெல்லிய உடையுடன் வந்து உட்காருகிறாள்,

இருவரும் மௌனமாக இருக்கிறார்கள்.

"என்ன யோசிக்கிறே...?"

"நீங்கதான் சொல்லுங்களே..."

"எனக்கு ஆயிரம் யோசனைகள் இருக்கும்; அதெல்லாம் உனக்குப் புரியாது...நீ என்ன யோசிக்கிறே..."

"குஞ்சுவெப் பார்க்கப்போ இவ்வளவு துடியாக இருக்கிறாளே என்று பயமாக இருக்கு! அக்கா எப்படிப்பட்டவர்களோ? என்று நினைச்சுக்கொண்டு இருந்தேன். அக்கா ரொம்பப் படிச்சவுகளாமே...எனக்குக் கையெழுத்துக் கூடப் போடத் தெரியாது...எங்கம்மா போனப்புறம் என்னெப் பாத்துக்க யாரிருந்தா—?"

"குஞ்சுவெப் பாத்தா அவுக அம்மாளேப் பாக்க வாண்டாம். வயசுக்கு மிஞ்சின புத்தி...அவளிடம் ரொம்ப ஜாக்கிரதையாக இருந்து கொள்ளவேண்டும், —பளிச்சென்று நம்மைத் தூக்கிவாரிப் போடும்படியாச் சொல்லுவா. செய்வா, —அவுகம்மா...(கொஞ்சம் யோசனையிலாழ்கிறார்) அவுகம்மா போன அண்ணைக்கி கத்து கத்துன்னு கத்தினா...அவளை வளர்க்கிறதுதான் பெரும்பாடு ...அவள் சில சமயம் என்னையே வளர்க்க ஆரம்பித்துவிடுவாள்..."

"நீதான் படிக்காதே போனா என்னா? குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளப் படிப்பெதற்கு? ஆமாம் மாற்றாந்தாய்க் கஷ்டம் என்றால் உனக்கு நல்லாத் தெரியுமே ...அதுகள் ரெண்டும் சொந்த அம்மா என்று உணரும்படி நடந்துகொள்ள வேண்டும்...

"என்ன ரொம்ப உபதேசம் பண்ரனேன்னு நினைக்காதே. நீ நல்லதுன்னு நினைச்சு எதையாவது செய்வே;அது தகராறில் கொண்டு வந்து விட்டுவிடும்...,எதற்கும் ஜாக்கிரதை...,"

"நிலா வருது பாருங்க...எப்படி அளகா இருக்கு..."

கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரன். கிரணங்கள் மெதுவாகத் தூங்கும் குஞ்சுவின் முகத்தில் விழுகின்றன.

அவள் தூக்கத்திலேயே ரயில் எஞ்சின் மாதிரி குச்—குச் என்று கொண்டு முகத்தைப் புறங்கையால் தேய்க்கிறாள்.

சுந்தரவடிவேலு எழுந்து அருகில் சென்று குனிந்து பார்த்துவிட்டு மெதுவாகத் தட்டிக்கொடுக்கிறார். குழந்தை தூங்கிவிடுகிறது.

அவர் விளக்கை அணைக்கிறார்.

வண்டியில் சந்திரனொளியுடன் கூடிய அரைகுறை இருட்டு.

மெதுவாக வந்து மனைவியின் பக்கத்தில் உட்கார்ந்து வலது கையால் அவளை அணைக்கிறார். மரகதமும் அவர் மீது சாய அவளை முத்தமிடுகிறார்.

"குஞ்சுவுக்கு மட்டுமா குத்தும்...!" எனச் சிரித்துக் கொண்டு பதில் முத்தம் கொடுக்கிறாள்.

## முதல் நாள்

அதிகாலை. சுந்தரவடிவேலுவின் பங்களா. இன்னும் யாரும் எழுந்திருக்கவில்லை. குழந்தைகளின் அறை. குஞ்சுவுடைய தாயாரின் பெரிய படம் ஒன்று தொங்கு கிறது.

அறையின் ஒரு புறத்தில் குஞ்சுவின் படுக்கை. மற்றொரு புறத்தில் ராஜா...தூங்குகிறான்.

குஞ்சு மெதுவாக எழுந்திருக்கிறாள். தத்தித் தடுக்கி, போர்வையைத் தள்ளிவிட்டுக் கீழே இறங்கி நின்று தானே சிறு பாவாடையை எடுத்துக் கட்டிக்கொண்டு. சட்டையைப் போட்டுக்கொள்ள முயன்று முடியாமல், கீழே போட்டு விடுகிறாள்.

தாயார் படத்தின் முன் நின்று, ''அம்மா அப்பாக் காப்பாத்து, ராசாக் காப்பாத்து, என்னைக் காப்பாத்து'' என்று விழுந்து கும்பிடுகிறாள். காரியம் முடிந்த மாதிரி, மூலையில் ஒரு கயிற்றில் கட்டப்பட்டிருந்த எஞ்சினிடம் போகிறாள். ஏதோ ஞாபகம் வந்தவள்போல, படத்திடம் திரும்பிவந்து, 'சித்தியைக் காப்பாத்து' என்று படத்திற்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு ரயில் வண்டி சகிதம் சட்டை யையும் தூக்கிக்கொண்டு கதவைத் திறந்துகொண்டு மாடிப் படிகள் வழியாகப் பங்களாவின் பின்புறம் நோக்கிப் போகிறாள்.

வேலைக்காரன் குழாயைத் திறந்து எஜமானுக்குக் குளிக்கத் தண்ணீர் நிரப்பிக் கொண்டிருக்கிறான். சன்னலில் வைத்திருக்கும் பல்பொடியை எடுத்துக்கொண்டு

போய்த் தானே பல்த் தேய்க்க ஆரம்பிக்கிறாள். எல்லாம் ரொம்ப அவசரமாக நடக்கிறது. வாய் கொப்பளித்தாச்சு. பாவாடையைக் கொண்டு முகத்தைத் துடைத்துக்கொண்டு உள்ளே போக யத்தனிக்கிறாள்.

அப்பொழுது ஸ்நான அறையில் தகப்பனார் துண்டைக் கட்டிக்கொண்டு தலையில் ஒரு சொம்பு ஜலத்தை ஊற்றுவதைப் பார்த்து விடுகிறாள்.

அக்குளில் இருக்கும் சட்டை எறியப்படுகிறது. இடுப்புப் பாவாடையும் கீழே விழுகிறது. எஞ்சின் சகிதம் தகப்பனார் காலடியில் போய் நின்றுகொண்டு, அண்ணாந்து பார்த்துக்கொண்டு நிற்கிறாள். அவர் தனது தலை வழியாக ஊற்றுவது இவளையும் நனைக்கிறது. குளிர்ந்த ஜலமாகையால் உடல் வெடவெடக்கிறது. 'சளுக் சளுக்' என்று சிரித்துக்கொண்டு, ''எனக்கும் அப்பா!'' என்கிறாள்.

முகத்திலிருந்த சோப்நுரையால் கண்ணை மூடியிருந்த சுந்தரவடிவேலு முகத்தைக் கழுவிக்கொண்டு, குனிந்து பார்த்து, ''நீ எங்கடி வந்தே, பச்செத் தண்ணிலே குளிக்கப்படாது'' என்கிறார்.

''நான்தான் குளிச்சாச்சே; சோப்போடு'' என்று கையை நீட்டுகிறது குழந்தை.

அவர் உட்கார்ந்துகொண்டு குழந்தையைக் குளிப்பாட்டுகிறார். குழந்தை எஞ்சினுக்குக் குளிப்பாட்டி அதற்கு சோப் போடுகிறது.

''இதோ பார் குஞ்சு எஞ்சின் எங்கேயாவது சோப் போட்டுக் குளிக்குமோ?'' என்கிறார்.

''குளிக்குமே...'' என்கிறது குழந்தை.

''எங்கே பார்த்தே...!''

“இதோ” என்று தன்வசம் உள்ள எஞ்சினைக் காட்டுகிறது.

அவர் சிரித்துக்கொண்டு அவளைக் குளிப்பாட்டி உலர்ந்த துண்டால் துடைத்துத் தூக்கிக்கொண்டு வருகிறார்.

என்ஜின் குழந்தையின் கையில் இருக்கிறது. அதன் நனைந்த கயிறு சுந்தரவடிவேலுவின் முதுகில் நனைக்கிறது. “அது என்னடி பின்னாலே?” என்கிறார்.

குழந்தை, கப்பியில்லாக் கிணற்றில் தாம்புக் கயிற்றுடன் குடத்தைக் குனிந்து கையால் வலித்து இழுப்பது போலத் தூக்கிக்கொண்டு “கயிறு அப்பா!” என்கிறது.

அவர் குழந்தையை அறைக்குள் எடுத்துக்கொண்டு போய் சலவை செய்த சட்டை பாவாடை எல்லாம் அணிவித்து, தலையைச் சீவிவிட்டு, முகத்திற்குப் பவுடர் போட்டுவிடுகிறார்.

“இனிமே நீ யாருகிட்டப் போய்ச் சட்டை போடச் சொல்லணும் தெரியுமா—சித்தி கிட்டெ!” என்று சொல்லிக் கொண்டு அவள் கன்னத்தைத் தட்டுகிறார்.

“மாட்டேன்!”

“பின்ன என்ன செய்வே?”

“நானே போட்டுக்குவேன்.”

“நான் போட்டுவிடட்டுமா?”

“வாண்டாம்.”

அச்சமயம் பார்த்து மரகதம் காப்பி பலகாரங்களுடன் உள்ளே வருகிறாள். “நீங்கள் இன்னும் உடுத்தி முடியலியா?” என்று சிரித்துக்கொண்டு சொல்லுகிறாள்.

சுந்தரவடிவேலு அவசர அவசரமாக ஷர்ட்டை அணிந்து கொண்டு தலையை வாரிக் கொள்ளுகிறார். அவ்வளவு அவசரம் —ஈரத்துணிகள் யாவும் கீழே எறியப் படுகின்றன.

குழந்தை பொறுக்க ஆரம்பிக்கிறது. அதன் முகம் 'ஊம்' என்றிருக்கிறது.

அதைக்கண்ட மரகதம், "என்ன புத்திசாலி" என்று கொண்டு குழந்தையை ஒரு கையில் எடுத்த வண்ணம் மறு கையால் ஈரத்துணிகளை எடுத்துக் கொண்டு, "குஞ்சு, நாம ரெண்டுபேரும் சாப்பிடுவோமாம்!" என்கிறாள்.

குழந்தை பேசாமலிருக்கிறது.

மரகதம் குழந்தையை எடுத்துக் கொண்டு சமையல் கட்டுப் பக்கமாகப் போகிறாள்.

சமையல் கட்டில் ராஜா தயிரிட்டுப் பிசைந்த பழைய சாதத்தை வைத்துக் கொண்டு முழித்துக் கொண்டிருக் கிறான்.

இதைக் கண்டதும் குழந்தை, "ஐயோ, தோச்சை திங்கலே!" என்கிறது.

குஞ்சுவைத் தன்முன் உட்கார வைத்துக்கொண்டு, "கண்ணு! ஒரே ஒரு உருண்டை பழையது சாப்பிடு. அப் புறம் காப்பி தரேன்...நல்லாத் தயிரு போட்டுப் பிசைந் திருக்கிறேன் பாரு!" என்று எடுக்கிறாள்.

"நாங்கள் பழையது தின்கிற சாதியில்லே!" என்கிறது குழந்தை.

மரகதம் திடுக்கிடுகிறாள்; பிறகு சிரித்துக்கொண்டு, எவ்வளவோ செல்லமாக மல்லுக்கட்டியும் 'தூ! தூ!' என்று துப்பி இரைத்து விடுகிறது.

குழந்தையின் வாயைத் துடைத்துவிட்டு பாட்டிலில் காப்பியை ஊற்றிக் கொடுக்கிறாள். குழந்தை பாட்டிலை வாங்கிக் கொண்டு உட்கார்ந்து கூடச் சாப்பிடாமல் வெளியே புறப்பட்டு விடுகிறது.

இந்த ரகளையில் ராஜா சாப்பாட்டை அப்படியே வைத்து விட்டு ஓட்டம் பிடிக்கிறான். அனுக்குத் தோசை கூட வேண்டாம் என்றாகி விட்டது.

இந்தக் கூத்தைக் கண்டு திடுக்கிடுகிறாள் மரகதம்; ஆனால் சாவதானமாகத் தனக்குப் பழையதை வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பிக்கிறாள். குழந்தையின் அட்டகாசம் அவள் மன நிம்மதியைப் போக்கி விட்டதால் சாப்பாடு செல்ல மாட்டேன் என்கிறது.

சமையல்காரனை அழைக்கக் கூடாது என்று விட்டுத் தானே வேலைகளை ஆரம்பிக்கிறாள்...

வேலைக்காரியைக் கூப்பிட்டு அரங்கில் இருந்த குத்து விளக்கைத் தேய்த்துக் கழுவி நடு ஹாலில் வைக்கும்படி உத்திரவிடுகிறாள். தினசரி சாயங்காலம் விளக்கு பூஜை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறது.

ஃ ஃ ஃ

சுந்தரவடிவேலு சாயங்காலம் கலாசாலையிலிருந்து திரும்பி வருகிறார் இன்று சற்று நேரமாகிவிட்டது. பொழுது மங்கும் சமயம் அவருடைய கார் பங்களா கேட்டில் திரும்பியது தான் தாமதம்...

குழந்தைகள் இரண்டும் மோட்டார் வண்டியிலேயே போய் விழுந்து விடுவது போல் படிகளிலிறங்கி "அப்பா! அப்பா!" எனக் குதூகலித்துக் கொண்டு ஓடி வருகின்றன.

ராஜா கையில் ஒரு சின்ன Foot ball. குஞ்சுவின் என்ஜின் தரையில் மல்லாக்காக இழுபடுகிறது...

அவர் வண்டியிலிருந்து இறங்கி நின்றதுதான் தாமதம். ஆளுக்கொரு காலைப் பிடித்துக் கொணடு மரமேறுகின்றனர். குஞ்சுவை வாரி எடுத்துத் தோள்மேல் சாத்திக் கொண்டு, ராஜாவைக் கையில் பிடித்துக் கொண்டபடி வீட்டுக்குள் போகிறார்.

நடு ஹாலைத் தாண்டித் தான் வசிக்கும் அறைக்குள் செல்லுகிறார். அங்குள்ள அலமாரியைத் திறந்து, குஞ்சுவின் கை ஒன்றுக்கு ஒவ்வொரு பிஸ்கோத்துக் கொடுக்கிறார். பையன் "அப்பா, அப்பா" எனப் பையையே திறந்து நீட்டுகிறான்.

"ரொம்ப நேரமாச்சு, ராத்திரிச் சாப்பிட வேண்டாமா" என்று கொண்டு அவனுக்கும் அதைப் போலவே இரண்டு மட்டும் கொடுக்கிறார். பிஸ்கட் சாப்பிடும் குஞ்சுவைப் பார்த்து "ஏண்டி, கண்ணு காப்பி சாப்பிட்டாச்சா, எனக்கு ரொம்பப் பசிக்கிறதம்மா. ஒரே ஒரு துண்டு எனக்குக் கொடுக்கிறியா" எனக் கெஞ்சுகிறார். குழந்தை கையிலிருப்பதை ரொம்பச் சிரமப்பட்டு ஒடித்து ஒரு பொடியை மட்டும் (அதுதான் அதன் பலத்தில் விண்டது) தகப்பனார் வாயில் வைக்கிறது. "அப்பா, இவ்வளவு போதும். வயிறு ரொம்பிப் போச்சு" என்று குழந்தையை முத்தமிட்டுக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியே வந்து வீட்டுக்குப் பின்புறம் நுழைகிறார்...

"அப்பா வந்ததும் காப்பி சாப்பிடலாம் என்று அம்மா சொன்னாங்க" என்று கொண்டே அசை போடுகிறான் ராஜா.

உள்ளே இரண்டாவது கட்டில் மரகதம் குத்து விளக்கின் முன் விழுந்து நமஸ்கரித்துக் கண்ணை மூடியபடி ஏதோ மானஸீகமாகப் பிரார்த்தனை செய்வதைப் பார்க்கிறார். மறுபடியும் விழுந்து நமஸ்கரித்து, விளக்கைத்

தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு திருநீற்றை நெற்றியில் அணிந்து கொண்ட பின் திரும்பிப் பார்க்கிறாள்.

பூஜையை எதிர்பாராததினால் அதில் ஒரு ஆச்சரியமும் பிரமிப்பும் பரவசமும் கொண்ட சுந்தரவடிவேலு குழந்தைகளுடன் நடையண்டையில் நின்றுகொண்டிருக்கிறார்.

மரகதம் சிரித்துக்கொண்டு ''நீங்கள் வந்தது எனக்குத் தெரியும்'' என்று நெருங்கி வந்து, குழந்தை குஞ்சுவின் நெற்றியில் விபூதியை இட்டு, அதன் வாயில் பூஜைக்கு நிவேதனமாக வைத்த திராட்சைப் பழம் ஒன்றைப் போடுகிறாள். திருநீற்றுப் பொடி கண்ணில் விழுவதால் கண்ணை மூடித் திறந்துகொண்டு நிற்கிறாள் குஞ்சு; வாய் அசைபோடுகிறது.

''ரொம்ப நேரமாச்சே, காப்பி எடுத்துக்கொண்டு வாரேன்; நீங்க இன்னம் என்ன இந்த வேசத்தைக் களையாமே நிக்கிறளே'' என்கிறாள் மரகதம்.

''நாங்க வெளியே உட்கார்ந்திருக்கோம்; நீ அங்கே கொண்டு வந்து விடேன்'' என்று கொண்டே குழந்தைகளுடன் வெளியே வாசல் பக்கம் வருகிறார்.

வேலைக்காரனிடம் நாற்காலிகளை எடுத்துப் போடச் சொல்லிவிட்டுக் குழந்தைகளுடன் பந்து விளையாடுகிறார்.

ஏகக் கூச்சலும் இரைச்சலும் போட்டுக்கொண்டு பந்தை அடிப்பதில் ஏமாறுகிறது குஞ்சு. ராஜா பந்தை உதைக்கிறான். இடைமறிக்க, குஞ்சு ஓடுகிறது.

மரகதம் காப்பி பலகாரவகைகளை எடுத்துக்கொண்டு வந்து மேஜைமீது வைக்கிறாள்.

''ஆட்டம் குளோஸ், play over! காப்பி சாப்பிட வாருங்கோ'' என்று கோஷித்துக் கொண்டு குழந்தை

களும் தகப்பனாரும் நாற்காலிகளுக்கு ஓடி வருகின்றனர். குஞ்சு முக்கி முயன்று ஒரு நாற்காலியில் ஏறி உட்கார்ந்து கொள்ளுகிறது. அவளுக்கும் மரகதத்திற்குமிடையே ராஜா உட்காருகிறான்.

சுந்தரவடிவேலு முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு, "இவ்வளவு மணி நேரத்திற்கப்புறம் இத்தினி பக்ஷணம்...! ராத்திரி சாப்பிடக்கீப்பிட வேண்டாமா? எனக்கு வெறும் காப்பி போதும்!"

"கொஞ்சம் நேரம் கழித்துப் பசிக்கிறப்ப சாப்பிடு கிறது; எட்டு மணிக்குத்தான் சாப்பிடனும் என்று சாஸ்திரத்திலே எழுதியா வச்சிருக்கு!" என்கிறாள் மரகதம்.

"நமக்காகக் குழந்தைகள் முழித்துக் கொண்டிருக் குமா?" என்று குழந்தைகளுக்குப் பலகாரங்களில் ஒரொரு துண்டு கொடுத்துவிட்டுக் காப்பியைக் கொடுக்கிறார். தம் ளரில் பாதி முகம் மறைய நாற்காலியில் நின்று கொண்டு காப்பியைக் குடிக்கிறது குஞ்சு. தம்ளரில் குடிப்பதால் சட்டையில் வழிகிறது. "அவளுக்குப் பாட்டிலில் கொடுக்கக் கூடாது?" என்கிறார் சுந்தரவடிவேலு.

பையன் அவர் பக்கமாக வந்து காதோடு காதாக, "எனக்குப் பழையது வாண்டாம் அப்பா, அம்மாகிட்டச் சொல்லு" என்கிறான்.

அவர் சிரித்துக்கொண்டு, "என்ன மரகதம், குழந்தை களுக்குப் பழையதா குடுத்தே! பிடிக்கலேன்னா விட்டுடு!" என்கிறார்.

"காலம்பரத் தயிரும் பழையதும் சாப்பிட்டாத் தானே உடம்புக்கு பெலன்" என்கிறாள் மரகதம்.

''பலத்துக்கு வேண்டுமானால் டானிக்கிருக்கிறது...... வேண்டாம் என்றால் விட்டுடு—சரி, நாளாண்ணைக்கு ஒரு இடத்துக்குப் போகணும்; சாயங்காலக் காப்பிக்குக் கூட வரமாட்டேன். இப்போ உள்ளே போனதும் ஒரு கடுதாசிக் கட்டு எடுத்துத் தரேன்; அதெ ஞாபகமா நான் போரப்ப என் கைப் பையிலே வச்சுப்புடு...எனக்கு இப்பொகிப்போ மறதி ஜாஸ்தியாகுது...'' என்கிறார்.

''ஆகட்டும்'' என்கிறாள் மரகதம்.

நன்றாக இருட்டி விடுகிறது.

''அப்பா, அப்பா! ஒரு கதை சொல்லு'' என்கிறான் ராஜா......

''என்ன கதை வேணும்? குஞ்சு நீ சொல்லு!''

''குருவிக் கதை'' என்கிறது குழந்தை.

''ஒரே ஒரு மரத்திலே சின்னக்குருவி இருந்துதாம். கூண்டிலே உக்காந்துக் கிட்டு எட்டி எட்டிப் பாத்துதாம். எட்டி எட்டி...... பாத்துதாம்'' என இரு குழந்தைகளும் கோஷிக்கின்றன.

''திடீலுன்னு மழையும் காத்துமா அடிச்சுது, இடி இடிச்சுது; பளிச்சு பளிச்சுன்னு மின்னிச்சு; பெரிய காத்தும் மழையுமா அடிச்சுது. அந்தச் சின்னக குரிவிக்குஞ்சு நனஞ்சே போச்சு. குரிவிக் கூண்டிலே இருந்து எட்டி எட்டிப் பார்த்துதாம்...அப்பொ ஒரு கொரங்கு நனைஞ்சிக் கிட்டு உக்காந்திருந்துதாம்.''

''கொரங்கு யார் மாதிரிடா இருந்துது.''

''ராசா மாதிரி'' என்கிறது குஞ்சு. குஞ்சு மாதிரி என்று கத்துகிறான் ராஜா.

"அப்புறம் குருவிக் குஞ்சு "அண்ணே அண்ணே! "நீ ஏன் கூண்டு கட்டிக்கப்படாது?" என்று கேட்டுதாம். குரங்கு ஒரே பாச்சல்லே வந்து கூண்டெடப்பிச்சே எறிஞ்சு போட்டுதாம்...குரிவியும் குரங்கும் மழைலெயும் காத்துலெ யும் நனைஞ்சுகிட்டே உட்கார்ந்திருந்துதாம்!"

மரகதம் தனிமையாக விடப்பட்டவள் போல ஏதோ யோசனையிலாழ்ந்திருக்கிறாள்...

"கதை காட்டிலே, எலிமோட்டிலே, நீயும் நானும் வீட்டிலே..."

"பொசலடிச்சதாம்..." என மறுபடியும் ஆரம்பிக்கிறது குழந்தை...

## புயல் வந்த விதம்

திடீர் என்று காற்றும் மழையும் கவிந்து அடிக்கிறது. கோடைப் புயல் மின்னலும் இடியும் கிடுகிடுபாய்கின்றன.

மத்யானம்; சுமார் மூன்று மூன்றரை மணி. இருந்தாலும் புயல் மழைக் கடுமையால் வீட்டுக்குள் வெளிச்சக் குறைவு.

குழந்தைகள் மாடியில் உள்ள தம் அறையில் விளையாடிக் கொண்டிருக்கின்றன. ஆளுக்கொரு சாக் (Chalk) கட்டி எடுத்துக் கொண்டு படம் போட்டு விளையாடுகின்றன.

குஞ்சு கையில் உள்ள சாக்குக் கட்டியைக் கரும்பலகையில் மாவு அரைக்கிறது போல இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு வாய் 'ஹோ! ஹோ!' என்று சப்திக்க மேலும் கீழுமாகத் தேய்த்துக் கண்ட மேனியில் அழுத்தி அழுத்திக் கோணல் மாணலாகக் கோடு கிழித்துக் கொண்டிருக்கிறாள். மற்றொரு ஓரத்தில் நின்று கொண்டு கரும்பலகையில் 'பொம்மை' போட்டுக் கொண்டிருக்கிறான் ராஜா.

''ஐயே! என்னடி இப்படிச் சாக்குக் கட்டியைப் போட்டுத் தேய்க்கரே?'' என்கிறான் ராஜா.

''படம் போடுரேண்டா!'' என்று விட்டு மறுபடியும் மும்முரமாகத் தேய்க்கிறாள்.

''என்ன படமாம்?''

''மளெப் படம், மளெபெயிதுபாரு அந்தப்படம்!'' என்று விட்டுக் கரும்பலகையில் விட்டுச் சிறிது பின்னுக்கு எட்டி நின்று தன் திறமையை ஏறிட்டுப் பார்த்துவிட்டு மறுபடியும் வேலையில் ஈடுபடப் போகிறாள்.

''ஏடி நாம் போட்ட படத்தை பார்த்தியா— அப்பாவும் அம்மாவும்!'' என்றான் ராஜா.

''அம்மா இப்படித்தான் இருக்காங்களாக்கும்''— மேலே தாயின் படத்தைப் பார்த்துக்கொண்டு, ''நீ இப்பிடியாம்மா இருக்கே!'' என்கிறது குழந்தை.

''நம்ம அம்மா இல்லடி—இந்த அம்மா...'' என்று விளக்குகிறான் ராஜா.

''ஏ ராசா! ராசா!'' என்று கூப்பிட்டுக்கொண்டு உள்ளே நுழைகிறாள் மரகதம்.

''என்னாம்மா!

''பால்காரன் வரக்காணோம். நம்ம வேலைக்காரனும் போக்களிஞ்சு போனான். நீ போய் அவனைக் கொஞ்சம் சத்தம் காட்டி விட்டு வரமாட்டியா,—அப்பா வார நேரமாச்சு; காப்பி போட வேண்டாம். கொடையை எடுத்துக்கிட்டுப்போ,—பைய, பதனமா போயிட்டுவரணும்!''

''ஆகட்டும் அம்மா!'' என்று கொண்டு புறப்படுகிறான்.

இருவரும் கீழே இறங்கி வருகிறார்கள். மரகதம் வாசல் வரை வந்து குடையை விரித்து அவன் கையில் கொடுத்து விட்டு உள்ளே போகிறாள்.

இரண்டு கைகளாலும் நெஞ்சுடன் சேர்த்து அமுக்கிப் பிடித்துக்கொண்டு சிறுவன் தள்ளாடித் தள்ளாடி நடக்கிறான். எதிரே வருவதையும் கவனிக்கமுடியவில்லை. குடை மழைக்குப் பாதுகாப்பாக இருப்பதற்குப் பதிலாக காற்றின் வேகத்தால் அவனுடைய சக்தியை முழுவதும் உறிஞ்சி விடும் பேயாக மாறிவிடுகிறது.

தள்ளாடித் தள்ளாடி நடக்கிறான். உடல் முழுவதும் நனைந்து தலையும் ஈரம் சொட்டிக் கண்களை மறைக்கிறது.

இந்த நிலையில்...!

ரஸ்தாவில் கவனிக்காமல் குடையைத் தாழ்த்திப் பிடித்துக்கொண்டு, இவன், சாதுவாக நின்ற பசுவை அணுகி விடுகிறான். பசு வெறித்துக் கொள்ளுகிறது. வாலை முறுக்கி உயர்த்திக்கொண்டு இவனை விரட்டுகிறது. முதலில் பையனுக்கு மோதலின் காரணம் தெரியவில்லை. பிறகு மாடு தென்படுகிறது. பயத்தில் கிறீச்சிட்டுக்கொண்டு ஸ்தம்பித்து நிற்கிறான். பயம் அவனை உந்த மூளை குழம்பித் தெறிகெட்டு ஓடுகிறான். பொத்தென்று விழுந்தவன் குடைப்பிடியை விடாமல் எழுந்திருக்கிறான்.

தெருவில் நின்ற யாரோ ஒருவர் ''குடையைப் போட்டு விடு'' என்று கத்தி எச்சரிக்கிறார். உதவிக்கு வரவில்லை. குடையைப் போட்டு விட்டு ஓடுகிறான். விழுந்ததில் ஊமையடி இருந்தும் பயமே வேகத்தைக் கொடுக்கிறது... ஓடுகிறான்.

மாடு குடையை மிதித்து நசுக்கி ஒடித்து மோந்து பார்த்து விட்டுச் சாந்தமாக நிற்கிறது.

பையன் ஓடுகிறான்.

வீட்டில் வாசல் படியில் பாலுக்காகக் காத்து நிற்கும் மரகதத்திற்கு இவனது பயனற்ற வரவு கடுகடுப்பையும் சீற்றத்தையும் ஏற்படுத்துகிறது. கணவனுக்குக் காப்பி தயார் செய்ய வேண்டும் என்ற பிரமாதத்தில் குடையைத் தொலைத்து விட்டு வந்தது பெருங் குற்றமாகப்படுகிறது. பால்காரனிடம் சொல்லிப் பாலை வாங்கிக் கொண்டுதான் வீட்டுக்குள் வரலாம் என்று விடுகிறாள்.

பையனுக்கு மாட்டுப் பயம். தொழுவுக்கே போகமாட்டேன் என்கிறான். இருவரும் நடு ஹாலில் நின்று தர்க்கம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அப்பொழுது வாசலில் திருதிருவேன்று கார் வந்து நிற்கிறது. ரௌத்திராகாரமாக சுந்தரவடிவேலு வீட்டுக்குள் நுழைகிறார்.

''ஒருவேலை சொன்னா அதைச் செய்ய இந்த வீட்டில் ஆள் இல்லை'' என்று இரைந்துகொண்டு தன் அறைக்குள் சென்று ஏதோ தஸ்தாவேஜ்களை எடுத்துக்கொண்டு திரும்பவும் விரைந்து வருகிறார்.

''இங்கே பாருங்க உங்க மகனே, புதுக் கொடையைத் தொலச்சுப்புட்டு வந்து நிற்கிற நெலையை! நீங்களும் செல்லம் குடுத்துச் செல்லம் குடுத்து...''

தகப்பனார் சப்தத்தைக் கேட்டுகொண்டு மச்சிலிருந்து ஓடிவந்த குஞ்சு, ரௌத்திராகாரமான இரைச்சலைக் கேட்டு வெருகிப் போய்ப் படிக்கட்டிலேயே நின்று விடுகிறது.

''ஏ கொரங்கே, முந்தாநாளே உனக்கு அந்தக் கடுதாசிக் கட்டே எடுத்துவை என்று சொன்னது மண்டெலெ உறைக்கலையாக்கும்'' என்று மரகதம் கன்னத்தில் ஒரு அறை கொடுக்கிறார்.

பையன் சமயம் தெரியாமல், ''நான் போடலே அப்பா, மாடு வந்து......'' என்று ஆரம்பிப்பதைக் கண்டு தன்னை மீறிய மிருகத்தனத்துடன் அவன் நெஞ்சில் பூட்ஸ் காலால் உதைத்துவிட்டு, கதவைப் படால் என்று சாற்றிக் கொண்டு, ''எல்லாக் குரங்குகளையும் ஒரெயடியாத் தொலைச்சு முழுகினாத்தான் க்ஷேமம்'' என்று இரைந்தபடி ஓடுகிறார்.

கார் புறப்படும் சப்தம்,

பட்ட அறையில் பிரமித்துப்போன மரகதம் உள் கதவைப் படாரென்று சாத்திக் கொண்டு வீட்டுக்குள் சென்று விடுகிறாள்...

உதைவிழப் போவதைக் கண்டதும் "அம்மா கிட்டச் சொல்றேன்" என்று முணுமுணுத்துக்கொண்டு மச்சுக்கு ஓடுகிறது குழந்தை.

மாட்டின் முட்டலுடன் இந்த உதையும் வர்மத்தில் விழுந்துவிட அழுகவும் முடியாமல் துடிக்கிறான் ராஜா. உள்வாக்கில் என்ன அடியோடு...? அது பலவீனமான குழந்தை. சுருண்டு சுருண்டு முணங்குகிறான்... அழுகை வரவில்லை...!

முனகல் மட்டும் கேட்கிறது.

உள்ளே எங்கிருந்தோ தேம்பல்.

மற்றப்படி நிசப்தம்.

குஞ்சு மறுபடியும் கீழே வருகிறாள்......

அண்ணனிடம் வந்து மெதுவாகக் குனிந்து பார்க்கிறாள்...

"பத்துக்கோ,—வா" என்று அழைக்கிறாள்...

அவன் எழுந்து நிற்க முடியாமல் ஊர்ந்து ஊர்ந்து வெகு கஷ்டத்தின் பேரில் மச்சை அடைகிறான். குழந்தை தன் பலம் கொண்டமட்டும் மேலே இழுக்கிறது...

இவ்வாறு மச்சை அடைகின்றன குழந்தைகள்.

ராஜா குஞ்சுவின் சின்னக் கட்டிலில் படுத்துக் கொள்ளுகிறான். குழந்தை தன் சிறு துணிகளை எடுத்துப் போர்த்திப் பார்க்கிறது. சரியாக மூடாததினால் சிரமப் பட்டுக்கொண்டு வருகிறது.

அவனுக்குப் போர்த்துகிறது.

கட்டிலுக்குப் பக்கத்தில் தன் சிறிய நாற்காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்து கொண்டு,— "வலிக்கிதாம்மா கண்ணு? தடவட்டா" எனப் போர்வைக்குமேல் அவன் கையைத் தடவுகிறது. நெஞ்சில் தடவக் கட்டிலின் மேல் ஏறுகிறது......

"நெஞ்சு வலிக்குடி; ......அம்மாடி!" என்கிறான் ராஜா.

குழந்தை மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அவன் கையையும் காலையும் தடவுகிறது.

ராஜா முனகிக் கொண்டு படுத்திருக்கிறான்.

மழை ஓய்ந்துவிட்டது.

சந்திரன் உதயமாகிவிட்டது.

அறையில் மற்றப்படி வெளிச்சமில்லை.

"குஞ்சு, அப்பா வந்திட்டாங்களா?" என்கிறான் ராஜா.

"இல்லியே" என இரு கைகளையும் விரிக்கிறது குழந்தை.

"குஞ்சு, கொஞ்சம் தண்ணி கொண்டாரியா?" என்கிறான் மறுபடியும்.

"பாலு இருக்குது குடிக்கிறாயா?" மத்தியானம் தான் குடிக்காமல் மிச்சம் வைத்திருந்த பாலைப் பாட்டிலுடன் எடுத்துக்கொண்டு வந்து அவன் கையில் வைக்கிறது. அவன் குழந்தை மாதிரி பாட்டிலில் பாலைக் குடிக்கிறான்...

கொஞ்சம் நேரம் கழித்து...

"குஞ்சு அப்பா வந்திட்டாங்களா? எனக்கு எப்படியெல்லாமோ வருதே?" என்கிறான் ராஜா.

"இல்லியே!" என்று விட்டு, நான் "ரா ராரோ சொல்லட்டுமா தூங்கு!" என "ஆராரோ ஆரிரரோ என்னப்பன் ரா ரா ரோ; ரா ரா ரோ!" எனத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

ராஜாவுக்கு அந்திம தசை அணுகி விட்டது...... "அம்மா, குஞ்சு" என்ற ஏக்கத்துடன் ஆவி பிரிகிறது...

குழந்தை அவனை ஏறிட்டுப் பார்க்கிறது. அவன் செத்து விட்டான் என்பதை அறியாமல், "கண்ணே முளிச்சிருக்காதே, —தூங்கு" எனக் கட்டிலில் ஏறி அவன் கண்களை மூடுகிறது. ராஜாவின் தலை கொளக்கென்று சாய, "நல்லாப் படுத்துக்கடா" எனத் தலையை இழுத்து வைத்துவிட்டு,

"ரா ரா ரோ! ரா ரி ர ரோ!" எனத் திருப்பி ஆராட்டுகிறது.

சொல்லிச் சொல்லிக் குழந்தைக்கும் தூக்கம் வந்துவிடுகிறது. "ரா ரா ரோ" என்ற இழுப்புடன் அவன் கையில் தலைசாயத் தூங்குகிறது...

வெகு நேரம் கழித்து...

வெளியே கார் வந்து நிற்கும் சப்தம்.

சுந்தரவடிவேலு இறங்குகிறார். மனதில் புயலோய்ந்து விட்டது. ஆனால் மிருகத்தனமாக நடந்து கொண்டதின் சுமை விலகவில்லை. அவசர அவசரமாக வீட்டுக்குள் நுழைகிறார்.

இருட்டிக் கிடக்கிறது.

சுவிட்சைப் போடுகிறார்.

நிசப்தத்தைக் கண்டு கோட்டைக் கழற்றிக் கையிலேந்தியபடி மச்சுக்கு ஓடுகிறார்.

அங்கும் இருட்டு. மறுபடியும் சுவிட்சைப் போடுகிறார். பையன்மேல் சாய்ந்து தூங்கும் குழந்தையை எடுத்துத் தோளில் சாத்திக்கொண்டு பையனைத் தொடுகிறார்.

குழந்தை தூக்கக் கலக்கத்தில் கொட்டாவி விட்டுக் கண்களைப் புறக்கையால் துடைத்தபடி "ரா ரா ரோ" சொல்கிறது.

சுந்தரவடிவேலு பையன் மேல் வைத்த கையைத் திடுக் கிட்டு எடுத்துவிட்டு "மரகதம்! மரகதம்!" என அலறு கிறார்.

எதிர்பாராத துயரத்தால் நிராதரவாக்கப்பட்ட மனத் தின் பிளிறல்...!

"என்ன என்ன!" என்று கீழிருந்து கவலையுடன் எதி ரொலிக்கும் மரகதத்தின் குரல்...தடதடவென்று மாடிப் படியேறும் சப்தம்.

"இங்கே வா, ராசாவைப் பாரு! என்னமோ மாதிரி யாக் கெடக்கானே! மேலெல்லாம் குளிந்திருக்கே!" எனப் பதறுகிறார்.

அவள் பையனைத் தொட்டுப் பார்த்துவிட்டு அடித்து விழுந்து அலறுகிறாள்.

சுந்தரவடிவேலு குழந்தையைத் தூக்கிக்கொண்டு கீழுள்ள டெலிபோனுக்கு ஓடுகிறார்.

குழந்தை "என்னப்பா?" எனக் கேட்கிறது.

சுந்தரவடிவேலு தன்னையறியாமல் "ராசா செத்துப் போயிட்டாண்டா!" என்று விடுகிறார்.

"நம்ம அம்மா மாதிரியா செத்துப்போயிட்டான் அப்பா?" எனக் கவலையுடன் ஆனால் மரணம் என்பதில் அர்த்தம் புரியாமல் கேட்கிறது குழந்தை.

''ஆமாண்டா! நம்ம அம்மா மாதிரி செத்துப் போயிட்டாண்டா'' என எதிரொலித்து அலறுகிறார் சுந்தரவடிவேலு.

சுந்தரவடிவேலு குழந்தையை இறக்கி விட்டுவிட்டு டெலிபோனில், எண்களைப் பதட்டத்துடன் திருப்புகிறார்...

டாக்டரை விரைவாக வரும்படி அழைக்கிறார்.

உயரவிருந்து மரகதத்தின் பிலாக்கணம். அலைமேல் அலையாகச் சுருண்டு புடைத்து விம்முகிறது. அதனுடன் சங்கு சப்தமும் ஒலித்து ஓய்கிறது.

ராஜாவின் அந்திமக் கிரியைகள் கழிந்து இரண்டு மூன்று நாட்கள் கழிந்தபின்...

சுந்தரவடிவேலுக்கு எதிரில் உள்ள ரேடியோவிலிருந்து ராகம் வருகிறது. அவரது வாசிக்கும் அறைதான். அவர் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். கையில் கர்மத் தொடர்பை விளக்கும் சித்தாந்தப் புத்தகம்—ஆங்கிலத்தில்! புஸ்தகத்தில் மனம் பதியவில்லை.

திறந்த பக்கங்கள் கர்மத் தொடர்பின் ரகசியங்களை அவர் மனத்தில் பதிய வைக்கவில்லை. பக்கங்களிலிருந்து ராஜாதான் எட்டி எட்டிப் பார்க்கிறான். மனம் அவரையே குத்திக்கொண்டிருக்கிறது.

நினைவு தேங்கிய கண்களுடன் ஒன்றிலும் பதியாத பார்வையுடன் உட்கார்ந்திருக்கிறார். எப்பொழுதும் போல் அல்லாமல் தலை சிறிது குலைந்து கிடக்கிறது. ஷர்ட்டில் பட்டன்கள் துவாரம் மாறிப் போடப்பட்டிருக்கின்றன.

குஞ்சு மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வருகிறது. அதன் கையில் என்ஜின்கள் படம் உள்ள பெரிய படப் புத்தகம்...

தகப்பனார் புத்தகத்தை விரித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு, ''நீ பாட்டுக்குப் படியப்பா, நான் பாட்டுக்குப் படிக்கிறேன்'' என்று தரையில் உட்கார்ந்து கொண்டு படங்களைப் புரட்ட ஆரம்பிக்கிறது...

தகப்பனார் குழந்தை வந்ததைக் கவனிக்கவில்லை...

குழந்தைக்குப் படத்தின் சுவாரஸ்யம்...ரயில் பிஸ்டன் மாதிரி கைகளை ஆட்டிக்கொண்டு ''குச்—குச்—'' என்கிறது...

படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த குழந்தை திடீரென்று அப்பாவைப் பார்க்கிறது. அப்பா எப்பொழுதும் போலல்லாமல் வித்தியாசமாக இருப்பதைக் கண்டு கொள்ளுகிறது.

''ஏம்ப்பா, என்னமோ மாதிரியா இருக்கே?'' என்கிறது.

குழந்தை யிருப்பதை உணர்ந்த சுந்தரவடிவேலு, ''இங்க வாடிகண்ணு, எப்பம்மா வந்தே!'' என்றார்.

''அப்பவே வந்தேனே! ஏம்ப்பா ஒரு மாதிரியா இருக்கே! கிச்சுகிச்சு காட்டட்டா'' என்று அவருக்குக் கூச்சம் காட்டிச் சிரிக்க வைக்க முயலுகிறது. முயற்சி பலிக்கவில்லை. குழந்தையின் தலையைக் கோதிக் கொடுத்து விட்டு, மடியில் தூக்கி வைத்துக்கொண்டு அதன் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறார்.

குழந்தை அவர் மனத்தைத் தேற்ற மறுபடியும் முயற்சிக்கிறது.

''அப்பா, ஒரு கதை சொல்லட்டுமா? என்ன கதை சொல்ல,...குருவிக் கதை சொல்லட்டா, காக்காக் கதை சொல்லட்டா?'' என்கிறது.

அவர் சிரித்துக் கொண்டு ''காக்காக் கதை சொல்லம்மா'' என்கிறார்.

''ஒரே ஒரு ஊர்லே ஒரு வடை இருந்துதாம்...அந்த வடை ரொம்ப ரொம்ப நல்ல வடையாம்...நல்ல ருசியா இருக்குமாம்.

''ஒரு காக்கா அதைத் தூக்கிக்கிட்டே பறந்து ஓடிப் போயிட்டுதாம். ஒரு மரத்துலே ஏறி உட்கார்ந்துகிட்டு தாம்...

''அப்பொ ஒரு நரி வந்துதாம்...நரி வந்து, ஏ! காக்கா, காக்கா நல்லா ஒரு பாட்டுப் பாடென்னு கேட்டுதாம்... காக்கா, கா-கா-கா-கா...''

[இச்சமயத்தில் காக்கையாகவே தன்னைப் பாவித்துக் கொண்டிருக்கிறாள்]

''அப்புறம்...'' என்கிறார்.

''அப்புறம் நரி வடையைத் தூக்கிக்கிட்டு ஓடியே போயிட்டுதாம்...ஓட்டம் ஓட்டம் ஓ......அதே காட்லே எலி...'' என்று ஆரம்பிக்கிறது குழந்தை...

''அந்த நரிதாண்டா விதி; அந்த நரிதாண்டா விதி'' எனச் சொல்லிக்கொண்டே குழந்தையை வெறிகொண்டவர் போல முகத்திலும் கன்னத்திலும் முத்தமிடுகிறார். குழந்தைக்குத் திணறுகிறது.

இறுக இறுகக் கட்டியணைத்துக் கொள்கிறார்.

''குஞ்சம்மா, நீ பாலு சாப்பிட்டியா?'' என்கிறார்.

''நான் அப்பவே சாப்பிட்டேனே, அம்மா குடுத்தாளே'' என்கிறது குழந்தை-மரகதத்தை முதல் முறையாக அம்மா என்று அழைக்கிறது.

''நீ மடிலே படுத்துக்கோ!...நான் கொஞ்சம் படிக்கிறேன்...'' எனப் புத்தகத்தில் மன உளைச்சலை மறக்க முயற்சிக்கிறார்.

குழந்தை சிறிது நேரத்தில் அயர்ந்து விடுகிறது.

மரகதம் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு வருகிறாள்.

அவள் தலை குனிந்து,மனம் நிலைகுலைந்து கிடப்பதைக் காட்டுகிறது. அவரை ஏறெடுத்துப் பார்க்கவும் கூசிக் காலடியில் வந்து உட்காருகிறாள். பேச வாயெழவில்லை. கைவிரல் நகத்தால் தரையைக் கீறிக் கொண்டிருக்கிறாள். அவள் கண்களிலிருந்து நீர்ச்சொட்டுத் தரையில் விழுந்து அவள் நகத்தையும் நனைக்கிறது.

சுந்தரவடிவேலு, மெதுவாக அவள் தலையைத் தடவுகிறார்.

"குஞ்சு தூங்கிவிட்டாள், நாற்காலியில் படுக்கவைக்கிறேன்..." என்று எழுகிறார்.

"நானே படுக்க வைக்கிறேனே" எனக் குழந்தையை வாங்கிப் பக்கத்து சோபாவில் கிடத்தித் தட்டிக் கொடுத்துவிட்டு மறுபடியும் வந்து உட்காருகிறாள்.

"எண்ணைக்குமே எனக்குக் கோபம் வராதே...ஏன் அப்படி வந்தது தெரியுமா...?" என ஒரு காய்ந்துபோன புன்சிரிப்புடன் கேட்கிறார்.

பதிலை எதிர்பார்க்காதவர் போல, "நேத்து வந்தானே அந்த டாக்டருக்குத் தான்...குஞ்சுவோட அம்மாவுக்கும் அவன் தான் பார்த்தான்...அப்பொ எங்கிட்டே அவ்வளவு ஜாஸ்தியாகக் கிடையாது...சினேகிதத்துக்காக எவ்வளவோ செஞ்சான்...இப்பொ ஒரு கஷ்டம் அவனுக்கு வந்தது...வேலையே போயிடும்...அதுக்காக நான் நம்மாலானதைச் செய்யத்தான் ஆசைப்பட்டேன்...அவனுக்காகத்தான்...நீ மறந்து போனென்னதும் அதனாலே தான் அவ்வளவு கோபம் வந்தது..."என்று சொல்லி விட்டு,... சிறிது நேரம் கழித்து, "எல்லாம் விதி" என்கிறார்.

''விதியா, —எங்க குடும்பப் பாவம், —நாஞ்செய்த வெனெ...எங்கம்மா பாவத்தை என் தலையிலே வச்சிட்டுப் போயிட்டா...எங்கப்பாவுக்கு எங்கம்மா இரண்டாந் தார மில்லை.முதல் தாரத்துக்காரிக்கு ஒரு அண்ணா இருந்தான். அவனுக்குப் பதினாலு வயசு இருக்கும். வயத்து வலின்னு பளெயது சாப்பிடமாட்டான். பள்ளிக்கூடம் போக மாட்டேன்னான். அம்மெ போய் அப்பாகிட்டச் சொன்னா ...அப்பாவுக்குக் கோவமா வந்திட்டுது. அவனைத் தூணொடே கெட்டி வச்சு உதைத்து அவுத்து விடாதே சோறு போடாதேன்னு...மத்தியானமா அவன் கத்துக்கத் துனு கத்தினான். அவுத்தே விடலே,—அவ்வளவுதான்; செத்தே போனான். தூண் வெடிச்சுப் போயிருந்த பொந் திலே ஒரு பாம்பு இருந்து கடிச்சுப்புட்டுது...சாயங்காலமா அவுத்து விடரப்ப பொணமாத்தான் இருந்தான்,—அந்தப் பாவந்தான்...''

இவ்வாறு நிலைகுலைந்த இரு மனங்களும் காரணகாரி யத் தொடர்பு கண்டு பிடிக்க முயன்று கொண்டு...குழம் பின...

வெளியிலே வழிப் போக்குப் பிச்சைக்காரன், ''உலகமேபைத்தியக்காரக் கும்பல்,காரண காரியத் தொடர் பற்றகுழப்பம்'' என்ற பொருள் கொண்டபாட்டை உச்சஸ் தாயியில் கர்ணகடூரமான குரலில் பாடுகிறான்.

முற்றும்

# வாக்கும் வக்கும்

(சரஸ்வதித் திருநாள், சகல லோகங்களும் அறிவின் விளக்கான வாணியைக் கொண் டாடும் நல்ல நாள்.)

**பூவுலகத்தில்**

ஒரு பள்ளிக்கூடம். வாணியின் படம் மாலையலங்காரங் களுடன் விளங்குகிறது. உபாத்தியாயர் சரஸ்வதி யந்தாதி யிலிருந்து ஒரு விருத்தத்தைப் பாடி தீபாராதனை செய்கி றார். பிறகு மாணவர்களிடை பொரி, கடலை வழங்கு கிறார். யாவரும் சேர்ந்து வாணியின் பேரில் ஒரு பாட்டுப் பாடுகிறார்கள்.

**ஒரு தனவைசியர் வீடு**

தனவைசியர் எழுத்து வாசனையற்ற லட்சாதிபதி. அவருடைய கடையில் கோலாகலமாக சரஸ்வதி பூஜை நடக்கிறது.

வெள்ளியில் செய்த சரஸ்வதி படம். அதனடியில் சந்த னமும், குங்குமமும் பொட்டுப் பொட்டாகக் காட்சியளிக் கும் கல்லாப் பெட்டி. அதன் பேரில் பேரேடும் சிட்டையும் மற்றும் கடைக் கணக்குப் புத்தகங்களும் வைக்கப்பட் டுள்ளன.

செட்டியார் : என்ன அய்யரே! பூசே நேரம் தவறிப் போயிடும் போலிருக்கே. லேனா எங்கே...

செட்டியார் மகன் : அப்பச்சி! எனக்குப் பொரி...

செட்டியார் : சித்த இருடா. அய்யிரு பாட்டுப் படிப்பாரு... அப்பரம் தூவங் காட்டிப்புட்டு...என்ன அய்யரே, வாயிலென்ன கொழுக்கட்டையா? லேனா எங்கன்னு கேட்டாக்க...

(தோரணத்தைச் சரியாகக் கட்டமுயலும் கடைக் கணக்குப் பிள்ளையான அய்யர் பதறித் திரும்பி "...லேனா ஒரு வினாடியிலே வரதாக வெளியே வண்டியை எடுத்துக்கிட்டு...")

('லேனா' என்ற விலாசமுள்ள செட்டியார் பிரவேசம்)

லேனா: நம்ப பூசெலெ நின்னு கும்பட றப்போ நீலக்கல்லு விரல்லே கெடக்க வேண்டாமா? அதான் நம்ம வண்டியை எடுத்துக்கிட்டு ஓடினேன்...நமக்கு அவகருணை வரணும்னா, அரிச்சுவடியும், குளிப்பெருக்கமுமாவது அதுமேலே வைக்க வேண்டாமா?...என்ன அய்யரே! தட்டுலே எத்தனை பொட்டணம்?...

அய்யர் :ஆயிரத்தெட்டு...

லேனா : ஆயிரத்தெட்டுப் பொரி கடலைப் பொட்டணமா! உருப்பட்டாப்பிலேதான். என்ன? உங்கப்பன் வீட்டுச் சொத்துன்னு நினைச்சிக்கிட்டையா?எட்டே எடுத்துக் கடைப் பயலுக்குக் கொடுத்துப் போட்டு மீதியெ வாங்கின கடையிலேயே...

முதல் செட்டியார் : என்ன லேனா, பூசை நேரத்திலே... அய்யன் மொரச்சுக்கிட்டா,ஆரு படிக்கிறது பாட்டெ! சீக்கிரம் ஆகட்டும்!......

(கடைக் கணக்குப் பிள்ளையான அய்யர் 'மாணிக் காவீணா" என்ற ஸம்ஸ்கிருத ஸ்லோகத்தைக் கர்ண கடூரமான குரலில் ஆரம்பித்து தீபாராதனை செய்கிறார்.)

**கவிஞன் வீடு**

கூடத்தில் கிழக்குப் பார்த்த ஒரு பிறையில் மஞ்சளில் செய்து வைத்த சரஸ்வதி தலையுள்ள கும்பம். எதிரில் சில சுவடிகள், முன்பு பரப்பியுள்ள இலையில் சில புஷ்பங்கள், தாமரை மலர்கள்...

சுமார் ஐம்பது வயதுள்ள வயோதிகர் தெய்வத்தினருகில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார். அவருக்குப் பின்புறம் ஒரு வாலிபன் கைகூப்பி நிற்கிறான். மிகவும் அழகான வடிவம். ஆனால் முகத்தில் களையில்லை. கண்களில் அறிவின் தீட்சண்யம் இல்லை.

கிழவர் : தாயே, தெய்வங்களுக்கு அரும்பொருளும் கொடுக்கும் தாமரைக் கனவே! உன்னைத் திரிகரண சுத்தியாக வாழ்வையே, திரியாக ஏற்றி, வணங்கி வழிபட்டேன். பூர்வ வினை வசத்தால் உன்னை அணுக வொட்டாமல் எனது செயல் பயன் பிணித்து விட்டது. நானோ பட்டமரம். வாழையடி வாழையாக என் குடும்பத்தில் தவழ் நின்னருள் என் குழந்தைக்காவது கிட்டும் என நம்பி நம்பிப் பணிந்தேன். அவனுக்கு வாக்கேயில்லாது அவிந்து விட்டது. உன்னருள் கொண்டு காளமேகம் காளமேகமாகக் கவி பொழியவில்லையா? பேசாத குமரகுருபரன் பேசவில்லையா? இமையவர் தம் மௌலி இணையடிதான்நிற்க ஒவ்வொரு சமயத்திலும் நின்று விளையாடும் தையலே! எனது மகனுக்கு வாக்கைக் கொடு அல்லது என் நாக்கைக் கெடு...

(கிழவர் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிய, தாமரை மலர்களை எடுத்து அர்ச்சனை செய்கிறார்)

இத்தனை நேரம் சிலைபோல் நின்ற பையன் வாய் திறந்து பேசுவதுபோல் அசைக்கிறான். மிருகத்தின் குரல்

போல வெறும் சப்தங்கள் வெளி வர அவனும் குனிந்து பூவை எடுக்கிறான்.

கிழவர் திரும்பிக் கண்களை உருட்டிப் பத்திரம் காண்பிக்கிறார். பையன் அடங்கி ஒடுங்கி நிற்கிறான்.

கிழவர் மணியடித்துக் கற்பூரம் ஏற்றி, 'சகலகலாவல்லி மாலை'யிலிருந்து இரண்டு பாசுரங்களைச் சொல்கிறார். அப்பொழுது உட்கட்டிலிருந்து ஒரு கிழவி, அவர் மனைவி, கூடத்துக்கு வந்து வணங்குகிறாள். வாலிபனும் விழுந்து கும்பிடுகிறான். கிழவரின் இனிமையான குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

**ஒரு நர்த்தன மண்டபம்**

மத்தியில் கிழக்குப் பார்த்து, ஏடு அலர்ந்த தாமரையில் அமர்ந்து வீணை வாசிக்கும் பாவனையில் பளிங்கில் செதுக்கப் பட்ட வாணியின் உருவம், மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

மண்டபத்தின் மையத்தில் சரவிளக்குக் கோத்தது போலக் கையில் விளக்கேந்திய யுவதிகள் இரு வரிசையாக நின்று வாணியின் புகழ்பாடுகிறார்கள். பாடிக்கொண்டே நாட்டியமாடுகிறார்கள்.

நாட்டியத்தின் சதங்கை ஒலி மட்டும் கேட்கிறது. வாணியின் உருவச் சிலையில் மங்கிய வீணையின் நாதம் கேட்பது போல ஒரு பிரமை.

## 2

**பிரம்ம லோகத்தில்**

பளிங்குச் சிலை மெதுவாகக் கரைந்து அதிலிருந்து வெள்ளைப் பளிக்கு ஆசனத்தின்மீது அமர்ந்த சரஸ்வதியின் உருவம் தெளிவாகிறது. அவள் கையில் வீணை ஏந்தி

வாசித்துக்கொண்டிருக்கிறாள். அவள் அமர்ந்துள்ள கொலு மண்டபம், மகாகவியின் மனம்போல தூய வெண் வண்ணம்...... அறுபத்துநான்கு கலைகளும் அங்கு அவளது கொலு மண்டபத்தில் பரிமளிக்கின்றன. வெள்ளை ஆடைகளணிந்த பணிப் பெண்கள் பலர் கொலு மண்டபத்தின் அணிகலனாக விளங்குகின்றனர்.

ஃ ஃ ஃ

பிரமன் நிஷ்டையில் அமர்ந்திருக்கிறார். வீணையின் நாதம் கேட்டுக் கண்களை விழித்து எழுந்து நிற்கிறார். மெதுவாக நடந்து பிரமதேவர் தேவியின் கொலு மண்டபத்தைச் சுற்றுமுற்றும் கவனிக்கிறார். முகத்தில் திருப்தியும் புன்னகையும் அரும்புகின்றன.

பிரமன்: இன்று உன் கொலு மண்டபம் எப்படியிருக்கிறது தெரியுமா? கண் தொட்ட இடமெல்லாம் மனம் குளிரும் காட்சி! லட்சுமிகரமான பசுமை, அழகு......

(சரஸ்வதியின் கையிலிருந்த வீணையின் நாதம் நிற்கிறது. அவள் முகம் வாடுகிறது. எழுந்து நிற்கிறாள்...

பிரமதேவன்: (திடுக்கிட்டு) என்ன?...

சரஸ்வதி: இன்று என்னுடைய தினம் என்று பெருமிதம் கொண்டிருந்தேன். இன்றும் எனக்கு என்று ஒதுக்கப் பட்ட இந்த ஒரு நாளிலும்......

பிரமதேவன்: இந்த ஒரு நாளில் உனக்கென்ன குறை?......

சரஸ்வதி: எனக்குக் குறை ஒன்றுமில்லை என்றுதான் இந்தக் கணம் வரை நினைத்திருந்தேன். எப்படி இருந்தாலும் இன்றைக்குக்கூட உங்கள் தாயார்தானே உங்களுக்குப் பெரிதாகப்படுகிறது...?

பிரமதேவன்: இதென்ன விகல்பமாகப்படுகிறது உனக்கு? சகல சௌபாக்கியங்களுக்கும் தாய் அவள்தானே? மேலும்...

சரஸ்வதி: உங்கள் சிருஷ்டிக்குப் பொருள் கொடுக்கும் வேதத்தைத் தாங்கள் உபதேசிக்கத் தங்கள் நாவில் அமர்ந்து உழைத்த உழைப்பிற்குப் பலன் இது.

பிரமதேவன்: இது என்ன வேடிக்கையாக இருக்கிறது. நான் என்ன அதிசயமாக உன்னைக் குறைத்துச் சொல்லிவிட்டேன்? உலகத்தில் கண்ணும் மனமும் கவர்ந்த எதையும் லக்ஷ்மிகரமாகத் தென்படுகிறது என்று சொல்லுவதுதானே இயல்பு.

சரஸ்வதி: இது பூலோகமல்ல. பிரம்மலோகம். அதன் இயல்பு இங்கு எப்படிப் பொருந்தும்? மனித வம்சம் கற்பகோடி காலம் தவமிருந்துதான் எனது பக்தனைப் பெறுகிறது. உங்கள் அன்னையின் அருள்பெற்ற வர்கள் புற்றீசல் போலத் தோன்றுவதும் மடிவதும் தாங்கள் அறியாததல்லவே.

பிரமன்: உன்னுடைய பக்தன் அபூர்வப் பிறவி. ஆனால்...

சரஸ்வதி: ஆனாலாவது, கீனாலாவது. உங்களுக்கு உங்கள் தாயார் தான் பெரிது. அப்படிச் சொல்லிவிட்டுப் போங்களேன். அம்மாவைப் பிரமாதமாக நினைத்துக் கொண்டு ஆற்றங்கரையிலே ஒரு பிள்ளை போயிருக் கிறது. தெய்வங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கே இந்த மாதிரி......

பிரமன்: (காதைப் பொத்திக் கொண்டு) என்ன பேச்சுப் பேசுகிறாய், உன் வாக்கிலிருந்து வேதம் சொன்ன உன் வாக்கிலிருந்து இப்படி வரலாமா?

சரஸ்வதி: என் வாக்குத் தெவிட்டாத தெய்வ கீதமாகவும் இருக்கும். சங்கர மூர்த்தியின் நெற்றிக்கண் போலவும்

சுடும். என்னை நீங்கள், தொட்டால் உதிரும் இதழ் அலர்ந்த தாமரை மலர் என்று நினைத்துக்கொள்ள வேண்டாம்.

பிரமன்: உனது திருநாளிலேயே உன் மனம் கோணலாமா? உலகம் என்ன நினைக்கும்? அசடு, அசடு...

சரஸ்வதி: வேதம் சொன்னவளுக்கு அசட்டுப் பட்டம்; பிரம்மலோகமே இப்படி இருந்தால்...

(வெளியில் வீணாகானம் கேட்கிறது. நாரதர் உள்ளே சிரித்த முகத்துடன் பிரவேசிக்கிறார். இருவரையும் வணங்கி விட்டு)

நாரதர்: பிரம்மலோகத்துக்கு என்ன குறைச்சல்? அதுவும் தங்கள் திருநாள் கண்ணும், மனமும் குளிரும்படி லக்ஷ்மிகரமாக இருக்கிறது.

சரஸ்வதி: லக்ஷ்மிகரமாக இருக்கிறது! ஏன் சரஸ்வதிகர மாக இருக்கிறது என்று சொல்லக்கூடாதோ?

நாரதர்: சொன்னால் என்ன! பேஷாய்ச் சொல்லிவிட்டுப் போகிறது. ஆனால் கேட்பவர்களுக்குத்தான் நாம் இன்னது சொல்கிறோம் என்று புரியாது.

சரஸ்வதி: என் வாக்குப் புரியாது! அடே நாரதா, யாரிடம் பேசுகிறோம் என்பதை நினைத்துப் பேசு.

நாரதர்: (பயந்ததுபோல் பாவனை செய்து) தேவி, நான் யாரிடம் பேசுகிறேன் என்பதை க்ஷணமும் மறப்பேனா? லோக இயல்பை ஒட்டி நான் சொல்ல வந்தேன். உலகத்தில் மங்களகரமான எதையும் அப்படித்தான் குறிப்பிடுகிறார்கள்.

சரஸ்வதி: உலகத்துக்கு உண்மையறிய சக்தி உண்டா? ஏன், சிருஷ்டியின் நாடியான பிரமதேவருக்கும், உனக்

குமே தெரியாது. போகும்போது பிறப்புக்கும் சாவுக்கும் மத்தியில் ஊசலாடும் மனிதர்கள் பிரமாதமா? என் சக்தியை நிரூபிக்கிறேன். கல்வியின் வாசனை சற்றுமே இல்லாத ஒருவனுக்கு வரமளித்து அவன் வாழ்வில் சுகம் பெறுகிறான் என்பதை நிரூபிக்கிறேன். அப்பொழுது தெரிகிறது உங்கள் அசட்டுத்தனம் எம் மட்டும் என்பது.

நாரதர்: தாங்கள் நினைத்தால் நடக்காதது உண்டா? கண்ணால் கண்ட பிறகு எனக்கும், ஏன் பிரமதேவருக்குமே இந்தச் சந்தேகம் அடிபட்டுவிடும். தங்கள் சக்திக்கு எல்லையுண்டா?

சரஸ்வதி: என் சக்திக்கு உலகம் எத்தனை கடமைப்பட்டிருக்கிறது என்பதை நிரூபிக்கிறேன்.

(நாரதர் வணங்கிவிட்டு வெளியே செல்கிறார். வீணையின் நாதம் ஒலிக்கிறது)

**காட்சி மறைந்து பரமபதத்தில் உருவாகிறது**

ஆதிசேஷன் மீது அறிதுயிலமர்ந்த, மகாவிஷ்ணு பாதத்தருகில் மகாலக்ஷ்மி அமர்ந்து கால்களை வருடிக்கொண்டிருக்கிறாள். மண்டபத்தில் நித்திய ஆசிகள் எம்பெருமான் நினைவும் தானுமாக நிற்கின்றனர். வீணையின் நாதம் கேட்கின்றது. நாரதர் உள்ளே பிரவேசிக்கிறார்; வணங்குகிறார்.

மகாலக்ஷ்மி: நாரதனா! வா, நீயோ திரிலோக சஞ்சாரி, உன்னிடம் கேட்டால்தான் அனந்தகோடி ஜீவராசிகளின் சௌக்கியமும் சௌபாக்கியமும் தெரியவரும். உனது சஞ்சாரத்தில் என்ன கண்டாய்......?

(மகா விஷ்ணு அறிதுயிலிலும் புன்னகை காட்டுகிறார்.)

நாரதர்: தேவி, நான் திரிபுவனங்களையும் சுற்றித் திரிந்து பார்த்துவிட்டுத்தான் வருகிறேன். அனந்த கோடி ஜீவராசிகளையும், தேவர், யக்ஷர், கின்னரர், கிம்புருடர் இத்தியாதி தேவகணங்களையும் நேரில் கண்டுவிட்டுத்தான் வருகிறேன். எங்கும் தங்களது மங்களகரமான கருணை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. எல்லோருடைய மனமும் எல்லா இடமும் சரஸ்வதிகரமாக இருக்கிறது!

லக்ஷ்மி: என்ன நாரதா, நீ சொல்லுவது புரியவில்லையே! என் கருணை என்கிறாய், சரஸ்வதிகரமாக இருக்கிறது என்கிறாய்! எதை நினைத்துக்கொண்டு எதைச் சொல் கிறாய்?

நாரதர்: தாயே, வேதம் சொல்லியவள் வாக்குப் புரிய வில்லை என்று சொல்லலாமா? சொல்லின் தெய்வம் சொல்வதைப் புரியவில்லை என்று தாங்கள்......

லக்ஷ்மி: எனது கருணையால் சௌபாக்கியத்துக்கும் சரஸ்வதிக்கும் என்னடா சம்பந்தம்...

நாரதர்: தேவி, நான் இன்று பிரம்ம லோகத்திற்குச் சென் றிருந்தேன். வாக்கின் அன்னையின் திருநாள் அல்லவா? அவளைத் தரிசிக்கச் சென்றேன். அங்கு சென்ற இடத்தில் மங்களகரமான காரியங்களை சரஸ்வதிகரமானது என்று சொல்வதுதான் சரியென் பதைத் தாமரையின் எழிலான அன்னையிடம் கற் றேன்.

லக்ஷ்மி: அவள் என்ன சொன்னாள்?

நாரதர்: வாழ்வில் சௌக்கியமாக இருப்பதற்குத் தனது கருணைதான் அவசியமென்றும், தங்களுடைய சக்திக்கு மேலானது அது என்பதை நிரூபிக்கப் போவதாகவும் சொன்னாள்.

லக்ஷ்மி: என்ன பார்த்தீர்களா? தங்கள் மகன் குடும்பம் நடத்துகிற சம்பிரமத்தை? கொண்டவன் இடம் கொடுத்தால் குடும்பம் கூத்தாடிக் கதையாகத்தான் போகும். உங்கள் மருமகள் போடுகிற உத்தரவு களை, போடுகிற பந்தயங்களைப் பார்த்தீர்களா?

மகா விஷ்ணு: (கண்களைத் திறந்து முழங் கையை ஊன்றியமர்ந்து கடகடவென்று சிரிக்கிறார்) என்ன சொன்னாய், லக்ஷ்மி?

லக்ஷ்மி: நான் சொல்வது உங்கள் காதில் ஏன் விழுகிறது? உங்கள் மருமகள் நானே அவசியமில்லை என்று நினைத்துவிட்டாளே, அது உங்களுக்குத் தெரியுமா?

மகா விஷ்ணு: வாழ்விலே உன் கருணை, பசியைப் போக்கும்; சுகத்தைத் தரும். அவள் அருள் வாழ்வைத் தரும்; வாழ்வுக்குப் பொருளைத் தரும்; வாழ்விற்குச் சந்துஷ்டியைத் தரும்; இப்படி அவள் நினைப்பதில் என்ன தவறு?

லக்ஷ்மி: நீங்களும் அவள் கட்சியில் சேர்ந்துகொண்டீர் களா? வேதத்தில் ஒளிந்துகொண்டு, உங்களைப் புகழ்ந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்! என்ன நாரதா, அவள் நிரூபிக்கப் போகிறாளாக்கும். உம்!

நாரதர்: ஏன் தங்கள் கட்சி சரியென்றால், தாங்களும் அதை நிரூபிப்பது எளிதுதானே?

லக்ஷ்மி: என் கட்சியில் சரி தப்புப்பற்றி உனக்கு எதற்குச் சந்தேகம்? எனது அருளால் சுகப்படுகிறவர்கள் அனந்தம் இருந்தாலும் அவளது கட்சி சரி இல்லை என்பதை நான் நிரூபிக்கிறேன்.

நாரதர்: தேவியார் நினைத்தால் நடக்காத காரியமுண்டா?

# 3

நடுப்பகல்—கவிஞனிருக்கும் வீதி. ஊமைச் சிறுவன் திண்ணையிலமர்ந்து சாக்கடைக்குள் கூழாங்கற்களை விட்டெறிந்து ஒவ்வொன்றும் விழுந்து 'டுளக்' என்ற சப்தத்துடன் மறைவதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறான்.

அப்பொழுது சற்று தூரத்தில் இரு பிச்சைக்காரர்கள் பசியால் சோர்ந்து தள்ளாடிப் பிச்சையெடுத்து வருகிறார்கள். ஒன்று ஆண்; மற்றது பெண். பிச்சைக்காரனுக்கு வயது சுமார் 40 அல்லது 45. க்ஷவரம் காணாத முகம். எண்ணெய் காணாத தலை. உடம்பெல்லாம் காட்டும் கிழிசல் உடை. அவனுக்கு ஒரு வியாதி. முகத்தை ஒரு பக்கம் வினாடிக்கொரு தரம் வெட்டியிழுப்பது, கண்ணடிப்பது மாதிரி இருக்கும். கையில் திருவோடு, தோளில் மூட்டை.

பிச்சைக்காரிக்கு வயது 16க்குமேல் இராது, பிரமாதமான அழகி. வாரி ஒழுங்குபடுத்தாத கூந்தலும் அவளுக்கு ஒரு சோபையைக் கொடுக்கிறது. தோளிலே மூட்டை. கையிலே தகர டப்பா. விரலில் உள்ள கண்ணாடி மோதிரத்தைத் தட்டித் தாளத்துக்கு இசையப் பாடிப் பிச்சையெடுக்கிறாள்.

கவிஞன் வீட்டிற்கு எதிர்ச் சரகத்தில் இவ்விரு பிச்சைக்காரர்களும் குரல் எழுப்பிப் பிச்சை கேட்கிறார்கள். பிச்சைக்காரப் பெண் 'பசியா வரம் அருள்வாய் முருகா' என்ற கருத்துள்ள பாட்டை இரண்டடி பாடுகிறாள். ''அப்பா நாக்கு இழுக்குது, கண்ணு சுத்துது, பாட முடியல்லே...நீ கொஞ்சம்...''

பிச்சைக்காரன்: பாட முடியல்லைன்னு சொன்னா படியளப்பாங்களா? பசிக்குப் பதறித்தானே பாடுரோம்

அம்மா, தாயே, அகிலாண்டேச்வரி, அன்ன தாதா இந்த ஏழை ஜீவன்களுக்குப் பிடியமுது போடம்மா. ஓடுகிற சீவனை ஓடாமெத் தடுக்கிற புண்ணியம் அம்மா தாயே......மகாலக்ஷ்மி

[எதிர்ச் சரகத்து வீட்டு வாசல் திறக்கவில்லை. பெண் கையிலுள்ள தகர டப்பாவில் தாளம் தட்டுகிறாள். கிழவன் கைத்தடியை நடையில் தட்டுகிறான்.]

பிச்சைக்காரன்: படபடக்கும் வெய்யிலிலே படியளக்கும் பகவானே, பிடியமுது போடுங்க தாயே மகாலெட்சுமி, அன்னத் தண்ணி கண்டு ஆறு நாளாச்சு! கவளஞ் சோறு போடம்மா...

பிச்சைக்காரி: அம்மா தாயே!

(அவளுக்கு மேலும் பேச முடியாமல் தள்ளாடித் திண்ணையில் சாய்கிறாள். கிழவன் ஓடி நெருங்கி, அவளைக் கீழே விழவொட்டாமல் கையில் தாங்கி, தரையில் உட்கார வைக்கிறான்...)

திண்ணையிலிருந்த சிறுவன் அவர்கள் பாடுவதையும் சாய்வதையும் கவனிக்கிறான்.

அச்சமயம் உள்ளிருந்து அவனுடைய தாயார் வந்து வாசலில் எச்சில் இலைகளை எறிந்துவிட்டு, சொம்புத் தண்ணீரை விட்டுக் கைகழுவியபடி உள்ளே போகிறாள்.

எதிர்ச் சரகத்தில் நின்ற பிச்சைக்காரன் விழுந்த எச்சில் இலைகளைக் கண்டு ஓட்டமாக ஓடி வருகிறான்.

அவனை முந்திக்கொண்டு ஒரு நாய் ஒன்று இலைகளை முகத்தைக் கொண்டு நிமிர்த்தி வாய் வைக்கிறது.

ஓடிவந்த பிச்சைக்காரன் குனிந்து ஒரு கல்லை எடுத்து, ''நாசமாப் போர நாயே, அதுக்கும் பங்குக்கு வாரியா'' என்று கண்களைக் கோணிக்கொண்டு எறிகிறான். நாய் பதறிப்போய் இலையை இழுத்துக்கொண்டு ஓட முயலு கிறது. இலை சாக்கடையில் விழுந்து மறைகிறது.

ஆத்திரம் மிஞ்சிய பிச்சைக்காரன் குனிந்து மற்றொரு கல்லையெடுத்து வீசப் போகிறான். அப்பொழுது அவனைத் தொடர்ந்து தள்ளாடி நடந்து வந்த பிச்சைக்காரி அவன் கைகளைப் பிடித்துத் தடுக்கிறாள்.

பிச்சைக்காரி: அதை நாம கல்லாலே அடிச்சா, விதி நம்மெ பசியாலே அடிக்கிறது நின்னு போவுமா!

பிச்சைக்காரன்: போம்மே, நீ எப்போப் பார்த்தாலும் இப்படித்தான்.

(கோபத்தால் முகம் வெட்டி வெட்டி இழுக்கிறது)

இதைப் பார்த்த திண்ணையிலிருந்த வாலிபன் இவர் களைப் பார்த்து, ''வாவா, உள்ளே சென்று வருகிறேன்'' என்பது போலக் கைகளால் சைகை செய்துவிட்டு உள்ளே போகிறான். நிறையப் பழம், தேங்காய், பொரி கடலை, வடை, அப்பம், விபூதி குங்குமம் உள்ள இலையைக் கொண்டுவந்து பிச்சைக்காரி கையில் கொடுத்துவிட்டுச் சிரித்துக்கொண்டு நிற்கிறான்.

''பூஜை நைவேத்தியங்களை எங்கேடா கொண்டு ஓடு கிறாய்?'' என்ற தாயின் குரல் கேட்கிறது.

வாலிபன் திரும்பி நின்று ஊமை பாஷையில் மிருகம் போலக் கத்தி ஏதோ சைகை செய்கிறான்.

பிச்சைக்காரி: ஊமை, மனம் நிறைந்தவர்களுக்கு வாய்ப் பூட்டா? வீடு நிரெஞ்ச மகராசிகள் கைக்குப் பூட்டுப்

போட்டியே. இது என்ன பாவம் பண்ணிச்சு...விதி... விதி.

'பசியா வரம் அருள்வாய்' எனப் பாடுகிறாள்.

# 4

நட்ட நடுநிசி, கவிராயர் வீட்டுக்கூடம், பிறையில் உள்ள சரஸ்வதி கும்பத்தின்மீது மங்கிய குத்துவிளக்கின் ஒளி, எதிரில் வாலிபன் உட்கார்ந்து கையில் ஏடு பிடித்து ஏதோ வாசிப்பதுபோல ஊன்றிக்கவனிக்கிறான். தூரத்தில் உள்ள கோவிலில் நடைபெறும் அர்த்தசாம பூஜையின் மணிச் சத்தம்.

முன் கட்டில் கிழவர் படுத்துத் தூங்குகிறார். பின் கட்டில் தலைக்கு ஒரு மணையை அண்டைக் கொடுத்து இவனது தாயார் தூங்குகிறாள். தூக்கத்தில் அவளுக்கு ஒரு பெரு மூச்சு வருகிறது.

விளக்கெதிரிலிருந்த வாலிபன் யாரும் பார்க்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்க்கிறான். சரியாக உட்காருவது போலக் கால்களை இறுக மடக்கிக்கொண்டு நிமிர்ந்து உட்காருகிறான். கையிலிருந்த ஏட்டைச் சரியாகப் பிடித்துக் கொண்டு படிக்கப் போகிறவன்போல முகத்தைச் சுளித்துவிட்டுக் கவனிக்கிறான்.

மெதுவாய் முனகுகிற அவனுடைய மிருகக் குரல் லேசாகக் கேட்கிறது. புஷ்பாஞ்சலி செய்வதுபோல விரல்களால் எதிரிலிருந்த தரையைத் தொட்டு, பிறையை நோக்கி விட்டெறிகிறான். குரல் படிப்படியாக உயருகிறது. மிருகக் குரல் உச்சஸ்தாயியில் எட்டும் பொழுது தாளக் கட்டில் அடங்கி இசைக்குப் பொருந்தியதுபோல அமைகிறது.

தன்னுடைய குரலைக் கண்டே பயந்தவன் போலச் சுற்று முற்றும் கவனிக்கிறான்.

மறுபடியும் வாய் மெதுவாக முனகுகிறது. எங்கோ வெளியில் மணியும் சேகண்டியும் கலந்து அர்த்த ஜாம பூஜா காலத்தை, தீபாராதனை நேரத்தைக் குறிக்கிறது.

ஏட்டிலே மங்கிய எழுத்துக்களாகத் தெரிந்த வரி வடிவங்கள் மெதுவாகத் தங்க எழுத்துக்கள் மாதிரி மின்னுகின்றன. ஏட்டிலே மெதுவாக ஒரு பிம்பம் தெரிகிறது. தரித்திர நிலையில் இல்லாமல் சாந்தமாகவும் புன்சிரிப்புடனும் தோன்றும் பிச்சைக்காரியின் உருவம் க்ஷணத்துக்குள் அது மறைந்து சரஸ்வதி தேவியின் உருவம் தெரிகிறது.

வாலிபன் கண்களில் ஒரு மாறுதல். முகத்தில் ஒரு பிரகாசம், மலர்ச்சி. ஊமையனாக இருந்தபோது அடைந்த நிலை மாறி முகத்தில் தேஜஸ் தெரிகிறது. வாய் விட்டுப் பேசுகிறான், பாடுகிறான்.

வாலிபன் : அம்மா! அம்மா! அம்மா!

அம்மா அம்மா என்ற பதம் இசையில் பொருந்தி வருகிறது. கையில் உள்ள ஏட்டில் அம்மா என்றுஆரம்பிக்கும் பாடலின் வரிகளைப் பிறவிச் செல்வம் பெற்றவன் போல அனாயாஸமாகப் பாடுகிறான்.

பின் கட்டிலுள்ள தாய் திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள்.

கிழவி : சொப்பனமா! என் குழந்தையின் குரல் மாதிரி இருக்கிறதே, அந்தக் கூடத்தில் கேட்கிறது...

கிழவி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து வருகிறாள். அதே சமயத்தில் கிழவர் திடுக்கிட்டு எழுந்து உடகாருகிறார்.

கிழவர் : கூடத்தில் யாரது? என்ன இந்த நேரத்தில்?... எழுந்து விரைந்து வருகிறார்.

கிழவரும் கிழவியும் எதிர் எதிர் வாசற்படியில் நின்று வாலிபன் தன்னை மறந்து பாடுவதைப் பார்க்கிறார்கள்.

கிழவர் ஓடியே வந்து பிறையின் முன்பு சாஷ்டாங்கமாக விழுந்து உணர்ச்சி மிகுந்த குரலில் சரஸ்வதியை அஞ்சலி செய்கிறார்.

கிழவி ஓடியே வந்து மகனைக் கட்டிக் கொள்கிறாள்.

கிழவர் : தாமரையின் தாயே, வாக்கின் பத்தினியே! உன்னை வணங்குவேனா, வாழ்த்துவேனா, ஆடிப் பாடி அஞ்சலி செய்வேனா? வறண்டுபோன வாழ்விலே கற்பக நிழலை வருவித்த தெய்வமே, உன்னருள் கிடைத்த பின் ஊன் பாரம் உடற்பொதி என்ற நினைவு அகன்று உடல் எலாம் நாவாய் காலமும் கணக்கும் நீத்த நிலையிலே சர்வசதா உன்னையே வழுத்த விரும்புகிறேன். வாக்கருளிய கலி கால தெய்வமே, என் வாழ்விலே விளக்கேற்றிய ஏந்திழையே!...

கிழவர் ஒரு பாட்டு பாடுகிறார்.

கிழவி : (வாலிபனது முகத்தைத் தடவியபடி) அம்மான்னு சொல்லு!

வாலிபன் : அம்மா!...

கிழவி : அப்பான்னு சொல்லு!

வாலிபன் : அப்பா!

கிழவர் : அகிலத்தையே வாக்கால் அளக்க அவள் அருள் பெற்றவன் அம்மா, அப்பா என்று மட்டுமா சொல்லப் போகிறான்! அவன் இனிமேல், திருவிக்ரமன் பாதத்தால் அளந்த உலகை வாக்கால் அளப்பான் கனவை நனவாக்குவான். நனவை நிலையாக்குவான். அவன்

இனி நம்முடைய மகன் அல்ல. வாக்கருளிய வாணியின் புதல்வன். அப்பா, இனிமேல் நீ உன் பெயரை வாணி புத்திரன் என்று வைத்துக்கொள்.

வாலிபன் : தங்கள் சொல் எனக்கு உத்தரவு.

கிழவர் : அதிருக்கட்டும். நான் நெடுங்காலமாக ஒருவிரதம் பூண்டிருக்கிறேன். இத்தனை காலம் எவ்வளவுதான் சஞ்சலமடைந்தாலும் என் மனம் மட்டும் உனதுகுறை அகலும் என்று சொல்லிக்கொண்டே வந்தது. உனக்கு எந்தக் கணத்தில் வாக்கு வருகிறதோ அச்சமயத்திலே வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தீர்த்த யாத்திரை செய்து திரும்புவது என்று வைராக்கியம் கொண்டிருந்தேன். அதை நடத்தப் போகிறேன்.

கிழவி : இந்தத் தள்ளாத வயசிலா!

கிழவர் : (சிரித்தபடி தள்ளுகிற விதி தள்ளிக் கொண்டு போகிறபோது தள்ளாத வயதாவது தள்ளுகிற வயதாவது. வாணிபுத்திரன் இருக்கும்போது, உனக்குக் குறை என்ன? அப்பா, உனக்கு நான் புத்திசொல்வது பொருந்தாது. கிழவனுடைய வாத்சல்யம். வாக்கைத் திரியாக அமைத்து அன்பு விளக்கேற்று. இருட்டுக்கும் பொய்மைக்கும் பணியாதே. வாக்கின் செருக்குக் கொள்ளாதே நான் வருகிறேன்.

கிழவி : இருட்டிலே புறப்படுகிறீர்களே!...

வாலிபன் : அவர் மனத்தில் இருட்டில்லை...அம்மா! வா.

கிழவி : (அன்பு ததும்ப) அம்மான்னு சொல்லு!

வாலிபன் : (புன்சிரிப்புடன்) அம்மா!...

## விலாசபுரி அரண்மனை

விலாசபுரி அரண்மனைச் சயன க்ருஹம்! மஞ்சத்திற்கு எதிரே அறையின் மையத்தில் அன்ன விளக்கு ஒன்று எரிகிறது. நடுநசி. மஞ்சத்தில் வேந்தன் வீரபராக்ரமன் உறங்குகிறான். வயது எழுபதுக்குமேல் இருக்கும். காடு வா வா என அழைக்கும் உடல் கட்டு.

உறக்கத்தில் அவன் ''அம்மா'' என ஏங்குகிறான். மறுபடியும் நிதானமாக மூச்சு.

விளக்கு பிரகாசமாகச் சுடர் விடுகிறது. கதவு திறவாமலே லக்ஷ்மிதேவி வருகிறாள். மஞ்சம் நோக்கிக் கையை நீட்டுகிறாள். மன்னன் திடுக்கிட்டு எழுந்து உட்காருகிறான்.

மன்னன் : பெண்! யாரம்மா? கதவு சாத்தி இருக்கிறது, எப்படி வந்தாய்!...

லக்ஷ்மி : (புன்சிரிப்புடன்) என்னைத் தெரியவில்லையா? உன் தேஜஸிலே என்னை சௌபாக்கியலக்ஷ்மி என்பார்கள். உன்தோளிலே வீரலக்ஷ்மி என்பார்கள். உனது கைகளிலே தன-தான லக்ஷ்மி என்பார்கள்.

மன்னன்: (விழுந்து வணங்கி) தேவி! புலன் வலைப்பட்டவனுக்கு உண்மை புலனாகுமா? நனவிலே தோன்றிய நலமே! என் வாழ்வின் பலனை இன்று அடைந்தேன்.

லக்ஷ்மி: உனக்கோ மூப்பு மிகுந்துவிட்டது. உன்னைச் சாந்த லக்ஷ்மி அழைக்கிறாள். தீர்த்த யாத்திரையின் எல்லையிலே அவளைக் காண்பாய். ராஜ்யம் என்னவாகுமோ என்று மருகாதே; அதோ அந்த நிலைக் கண்ணாடியைப் பார்!

(நிலைக் கண்ணாடியிலே அந்தப் பிச்சைக்காரனின் உருவம் தெரிகிறது.)

லக்ஷ்மி: நாளைக்கு உதயகாலத்தில் உனது மந்திரி பிரதானிகளுடன் கிழக்குக்கோட்டை வாசலுக்குப் போ. அவனைச் சந்திப்பாய். ராஜ மரியாதை கொடுத்து அவனிடம் அங்கேயே ராஜ்ய பாரத்தை ஒப்படைத்து விட்டுப் புறப்படு.

மன்னன்: உன் ஆக்ஞை என் கடமை.

லக்ஷ்மியின் உருவம் மறைகிறது. உறக்கம் கலைந்து மன்னன் அறையில் முன்னும் பின்னுமாக நடக்கிறான். ஏதோ தீர்மானித்தவன் போல மணியடிக்கிறான்.

## 5

காலைநேரம் டிங்டிங் என்ற மணியோசையுடன் அசைந்து செல்லும் பட்டத்து யானை. அதைத் தொடர்ந்து உருகிய வாளேந்திச் செல்லும் வீரர்கள்.

சற்று இடைவிட்டு, வெள்ளுடையில் ராஜ சின்னங்களின்றி வீரபராக்ரமன் நடந்து செல்கிறான். அவனைத் தொடர்ந்து அமைச்சர், சேனாதிபதி, ஆஸ்தான அர்ச்சகர் ஆகியோர் வருகிறார்கள்.

அவர்களுக்குப் பின்புறம் பிரதானிகள், பணியாட்கள் யாவரும் வருகிறார்கள். பின்புறம் ஒரு பல்லக்குக் காலியாக வருகிறது.

ஊர்வலம் கிழக்கு ராஜவீதி வழியாக நகரத்தின் வெளி வாசலை நோக்கிச் செல்கிறது.

வழியில் ஒருவன்: (ரகசியமாகப் பக்கத்தில் நின்றவனிடம்)

மகா ராசா கால்நடையா எங்கே போறாரு?...

பக்கத்திலிருப்பவன்: யார் கண்டா! அவுங்க அவுங்க அதிர்ஷ்டம். ராசா நடையா நடக்க யார் முகத்திலே முளிச்சாரோ?

முதல் மனிதன்: நாமும் கூடப் போய்ப் பார்ப்போம்.

**குடிசை**

குடிசைக்குள் பிச்சைக்காரி ஒரு மூட்டையைத் தலைக்கு அணை கொடுத்துப் படுத்திருக்கிறாள்.

பிச்சைக்காரன்: அதிகாலையானதால் தனது தோளில் மூட்டையையும் கையில் திருவோட்டையும் எடுத்துக் கொண்டு புறப்படத் தயாராகிறான்.

பிச்சைக்காரன்: என்னமே இன்னந் தூங்கிக்கிட்டு, வெயில் எழுகிற முந்தி பொறப்புட்டாத்தானே, காயிர வயித்துக்குக் கஞ்சி ஊத்தலாம். எந்திரி! உம்!

பிச்சைக்காரி: அப்பா, மேலெல்லாம் அடிச்சுப் போட்டாப் புலே வலிக்குது. தலை தூக்க முடியலே. என்னால் எந்திரிச்சு ஒரு அடிகூட வைக்க முடியாது. நீங்க மாத்திரம் போய்ட்டு வந்திருங்களேன்.

பிச்சைக்காரன்: (திடுக்கிட்டு) என்ன காய்ச்சலா! (நெற்றியைத் தொட்டுப் பார்க்கிறான்) கொதிக்குதே! நாலு நாளா வவுறு காஞ்சுதில்லே? அதான் மேலு காயுது! பயப்படாதே, நெத்தியிலே இந்த ஈரத் துணியை நனைச்சுப் போடு, (கிழிந்த துணி ஒன்றை நனைத்து அவளது நெற்றியில் போடுகிறான்) அப்ப நான் வரேன் எந்திரிச்சு நடமாடாதே!

பிச்சைக்காரி: அப்பா, முருகான்னு நெனச்சு முந்தியை விரியுங்க! திருமால்மருகான்னு நினச்சுத் திருவோட்டை நீட்டுங்க. காயுதுண்ணு கண்ணு மண்ணு தெரியாமே எச்சியெ கிச்சியெ எடுத்தாராதிங்க!

*பிச்சைக்காரன்:* வயிறு காயிரப்ப எச்சியாவது பிச்சை யாவது! எல்லாம் ஏழுப்பட்டா ஓண்ணாத்தான் தெரியுமம்மா!

*பிச்சைக்காரி:* அப்பா, அப்பா, அது மட்டும் சொல்ல றேன். பிடியரிசி கொண்டாந்தாலும் போதும். எச்சியை மட்டும் எடுத்தாராதிங்க.

ஃ ஃ ஃ

## கிழக்குக் கோட்டை வாசல்

பிச்சைக் காரன் நடந்து வருகிறான். பட்டத்து யானை யும் பரிவாரமுமாக எதிரே ஒரு பெரிய ஊர்வலம் வருவதைப் பார்க்கிறான். ராஜ கோலாகலமாய் வரும் ஊர்வலத்தை அண்டிக் கை நீட்டினால் யாராவது கொடுக்கமாட்டார்களா என்ற நம்பிக்கை வருகிறது.

*பிச்சைக்காரன்:* (கனைத்துக் கொண்டு) அவமொகத்திலே முளிச்ச அண்ணைக்கி அரிசிக்குப் பஞ்சமில்லே. (மறு படியும் கனைத்துக்கொண்டு பாடுகிறான்)

ஐந்து கல்லால் ஒரு கோட்டை
அந்தஆசாரக் கோட்டைக்குள்
ஆயிரமாசை ஆயிரமாசை
(ஐந்து கல்லாலொரு கோட்டை)
அண்டங்கள் கொண்டாலும் ஐயா
அவியாது ஆர்த்திடும்
ஆயிரம் ஆசை, ஆயிரமாசை...

பாடிக்கொண்டே ஊர்வலத்தை நெருங்குகிறான். ஊர் வலம் நிற்கிறது. யானை ஒருபுறம் ஒதுங்கி நிற்கிறது. முன் புறம் பந்தியாக நின்ற வீரர்கள் இரு பிளவாக இருபுறமும்

ஒதுங்குகிறார்கள். பின்புறம் நடு மையத்தில் அரசனும் அவனுக்குப் பின்புறம் நிற்பவர்களும் தெரிகிறது.

பிச்சைக்காரன்: (கனைத்துக்கொண்டு) ஐயா தரும தொரைகளே மகாராஜா. ஆறு நாளாப் பட்டினி. அடி வயிறு காயுது.

(பிச்சைக்காரன் திருவோட்டை நீட்டுகிறான்.)

அரசன்: (பக்கத்தில் நிற்கும் மந்திரியைப் பார்த்து) அதே முகம், அதே ஜாடை, அதே உருவம். நேற்று நிலைக் கண்ணாடியில் பார்த்தது அவரைத்தான். (பிச்சைக் காரனைச் சுட்டிக் காண்பித்து) அவர்தான். சந்தேக மில்லை. அவர்தான்.

பிச்சைக்காரன்: (திடுக்கிட்டுத் தனக்கு ஆபத்துதான்என்று பயந்து) நான் ஒரு தப்பும் பண்ணலிங்க எசமானே! பிச்சை கேட்டாத் தப்பிதமா!

பிச்சைகாரன் தறிகெட்டு ஓடுகிறான். அரசனுக் குப் பக்கத்தில் நிற்கும் சேனாதிபதி கண்ணைக்காட்ட வாளேந்திய வீரர்கள் இருபுறமும் கவிந்து மடக்கி ஓடாமல் தடுக்கிறார்கள். பிச்சைக்காரன் ஓடிப்போய் ஒரு மரத்துக்கு அப்பால் போக முடியாமல் அதோடு ஒண்டிக்கொள்கிறான். இருபுறமும் வாள் உருவிய வீரர்கள் நிற்கிறார்கள். இடது பக்கமாகப் பிச்சைக் காரன் தலையைத் திருப்புகிறான். உணர்ச்சி மிகுதி யால் முகம் கோணி இழுக்கிறது.

பிச்சைக்காரன்: நான் என்னய்யா பண்ணேன்? இப்படி மடக்கிக்கிட்டுக் கொல்லுறீங்களே; நான் உங்களை என்னய்யா பண்ணிப்புடடேன்! ஐயோ, என்னை விட்டுடுங்களேன்.

(அழுகிறான்)

அரசன்: (அவனை நெருங்கி) விலாசபுரியின் ராஜ பதவி தங்களை நாடி வருகிறது. ஏற்று எங்களைக் கௌர விக்க வேண்டும்.

பிச்சைக்காரன்: ஏனய்யா! உங்களுக்கு ஏழைப்பட்ட வங்களை பாத்தா எளக்காரமா இருக்கோ? கையை நீட்டாதெடா கயுதேன்னா ஒதுங்கிப்போறேன்.

அரசன்: தாங்கள் தான் இந்தக் கணத்திலிருந்து விலாசபுரி யின் அரசர். நேற்று வரை நான்தான் அந்தப் பொறுப்பை வகித்து நடத்தி வந்தேன். இனிமேல் தாங்கள்தான் அரசர். தங்களைத் தேடித்தான் வந்தேன்!

பிச்சைக்காரன்: நானா-ராஜாவா! சொல்லிவிடப்படாது- அப்ப குடிசெலே சூந்திக்கிட்டு இருப்பேனே! நான்— ராஜா (அழுகிறான். சிரிக்கிறான். கண்ணீரும் சிரிப்பும் வருகிறது) நெசம்மா நான்தான் ராஜாவா! எங்கே எந்தலையிலே அடிச்சு சத்தியம் பண்ணு பார்ப்போம்! (சுற்றுமுற்றும் திரும்பிப் பார்க்கிறான். முகம் வெட்டி இழுக்கிறது.)

அரசன்: அரசர் தலையில் ஆணையிடுவதா? நிச்சயமாக நம்புங்கள்...

பிச்சைக்காரன்: சத்தியம் பண்ணமாட்டேல்ல, எனக்கு அப்பவே தெரியுமே! ராஜாவாம்...கூஜாவாம் ராஜா. (சிரிக்கிறான்)

முதல்மந்திரி: அரசே! வேடிக்கை பேச நாங்கள் சகல பரி வாரங்களும் வருவோமா? இதோ பணியாள் தங்கள் ராஜாங்க உடைகளை எடுத்து வந்திருக்கிறான்— அடே இங்கு கொண்டுவா. தயை செய்து அங்கீகரிக்க வேண்டும்

பிச்சைக்காரன்: (பணியாட்கள் கொண்டு வந்த உடைகளைத் தொட்டுத் தொட்டுப்பார்த்து) நெசத்துக்கும் நான் தான் ராஜா!-அப்போ நீங்க என்ன பண்ணப் போறீங்க?

அரசன்: தேசாந்திரியாக க்ஷேத்ராடனம் செய்ய உத்தேசம்.

பிச்சைக்காரன்: சோத்துக்கு?

பிச்சைக்காரன்: அதெல்லாஞ் சரிதான்—என்னக்கேளுங்க நான் சொல்றேன். கரடியாக் கத்தினாலும் அன்பா பேசுவாங்க, ஆசையாக சிரிப்பாங்க, பிடி அரிசின்னா பொத்துக்கிட்டு வரும் கோபம்! அவுங்களை நம்பி நடக்காதிங்க.

அரசன்: அவள் அருள் உள்ளபோது...

பிச்சைக்காரன்: அதெல்லாஞ் சரிதான், பளைய மவராசா, எனக்குத் தெரியும். கையை நீட்டிப் பாருங்க நீங்களே தெரிஞ்சிக்குவீங்க. நம்ம திருவோடு இருக்கே இது ஆகி வந்த திருவோடு, வேணும்னா எடுத்துக் கொள்ளுங்க.

(திருவோட்டை நீட்டுகிறான்)

அரசன்: வேண்டாம், வேண்டாம். ஊன் பாரம் தவிர வேறு ஒரு பாரமும் சுமப்பதாக உத்தேசமில்லை. தங்களை ராஜாங்கக் கோலத்தில் பார்க்க ஆசை. இந்த உடைகளை அணிந்து கொள்ள வேண்டும்...

பிச்சைக்காரன்: என்னாங்க நடுத் தெருவிலா!

(பணியாட்கள் பெரிய திரைச் சிலை கொண்டு வந்து அவனைச் சூழ மறைத்து நிற்கிறார்கள்)

அர்ச்சகர்: (சேனைத் தலைவனைப் பார்த்து) விதி, விலாசபுரியைப் பார்த்துச் சிரிக்கிறது.

சேனைத் தலைவன்: (அவரை ஏற இறங்கப் பார்த்து விட்டுச் சிரிக்கிறான்.)

அரசன்: யார் சிரிக்கிறது? (திரும்பிப் பார்த்து) என்ன?

சேனைத் தலைவன்: விலாசபுரியின் வருங்காலம் பற்றி அர்ச்சகர் ஆரூடம்.

(சேனைத் தலைவர் சிரிக்கிறார்)

பிச்சைக்காரன்: (திரையை அகற்றி வெளி வருகிறான். அதிகாரமாக) என்ன ஐயா சிரிக்கிறே, இப்பொ எப்படி இருக்கு?

(முகத்தில் மூன்று நாள் தாடி களைந்து திலகமும் ராஜ உடையுமாகக் கம்பீரமாக நிற்கும் பாவனையில் காலைப் பரப்பிக் கொண்டு நிற்கிறான்.

ஊர்வலத்தில் பின்புறம் சிரிப்பு. ஒரு பணியாள் அகன்ற தாம்பாளத்தில் கிரீடமும், வாளும் கொண்டு வந்து நீட்டுகிறான்.

பிச்சைக்காரன்: எதுக்கு?

அரசன்: இவை ராஜ சின்னங்கள். நானே கிரீடத்தைத் தங்களுக்குச் சூட்டுகிறேன்.

(அரசன் கிரீடத்தை எடுத்துப் பிச்சைகாரன் தலையில் சூட்டினான். பிச்சைக்காரன் முகம் வெட்டி இழுக்கிறது)

வந்திருந்தவர்கள் : விலாசபுரி வேந்தன் வாழ்க!

அர்ச்சகர் வேத மந்திரம் சொல்லிப் புண்ணிய தீர்த்தம் புரோட்சிக்கிறார். மற்றொரு பணியாள் பிச்சைக்கார அரச

னிடம் வாளைத் தாம்பாளத்தில் வைத்து நீட்டுகிறான். அவன் மிரண்டு விலகுகிறான்.

சேனைத் தலைவன்: தாங்கள் வீரத்தின் சின்னம். எடுக்க வேண்டும்.

பிச்சைக்கார மன்னன் வாளை உறையிலிருந்து எடுக்காமல் மற்ற வீரர்கள் பிடித்துக்கொண்டு நிற்பது போல் கவாத்துப் பிடித்து நிற்கிறான்.

சேனைத் தலைவன்: (நெருங்கி) அப்படியல்ல. அது தங்கள் இடையில் இப்படி இருக்க வேண்டும்!

பிச்சைக்காரன்: அப்படியா?

பழைய மன்னர்: நான் வருகிறேன்.

பிச்சைக்காரன்: அப்பப் போரீங்களா? நீங்க வரவேண்டாம். நானே பார்த்துக்கிடுவேன். கவலைப்படாதீங்க.

அரசன் திரும்பிப் பாராமல் செல்கிறான். முதல் மந்திரி பெருமூச்சு விடுகிறார். கண் கலங்குகிறது. சேனைத் தலைவன் முகத்தில் புன்னகை.

முதன் மந்திரி: தள்ளாத வயது!

சேனைத் தலைவன்: (அவன் காதருகில்) விலாசபுரியின் விதி!

பிச்சைக்காரன்: என்னா அவரு போனாப்புலியே காதைக் கடிக்கிறியே?

சேனைத் தலைவன்: அரசே, தங்கள் பவனிக்குப் பட்டத்து யானையை அருகில் வரும்படி உத்தரவு போடச் சொன்னேன்.

பிச்சைக்காரன்: பட்டத்து யானையா? மொதல்லே அதைக் கொண்டு போயிடச் சொல்லு, தள்ளாதவரே

அதோ நடக்கலே. நான் நடந்தே வரேன்—ராசாவாயி உசிரையா விடச் சொல்றே?

சேனைத் தலைவன் : அப்படியல்ல மகாராஜா. பதவிக்கு ஏற்றபடி...

பிச்சைக்காரன் : பட்டத்து யானை வாண்டவே வாண்டாம்.

சேனைத் தலைவன் : பல்லக்கிலாவது...

பிச்சைக்காரன் : கொண்டாரச் சொல்லு! (பல்லக்கு வருகிறது. அதைச் சுற்றி வந்து பார்க்கிறான். குனிந்து உள்ளே தலையைவிட்டுப் பார்க்கிறான்.)

பிச்சைக்காரன் : (நிமிர்ந்து) கீழே போட்டுடமாட்டங்களே.

சேனைத் தலைவன் : கீழே போட்டால் அவர்கள் தலை கீழே உருளும்.

பிச்சைக்காரன் : அய்யோ! ஆத்தாடி! (மெதுவாக உள்ளே குனிந்து உட்காருகிறான். போயிகள் பல்லக்கை உயரத் தூக்குகிறார்கள். (உள்ளிருந்தபடி) எறக்கு, எறக்கு. எறக்கய்யா எறக்கு.

பல்லக்குக் கீழே வைக்கப்படுகிறது. பிச்சைக்காரன் இறங்கி வெளியே அவசர அவசரமாக வந்து தனது பழைய மூட்டையையும் திருவோட்டையும் தூக்கிக்கொண்டு ஓடிப் பல்லக்கில் ஏறிக்கொள்கிறான்.

பிச்சைக்காரன் : (உள்ளிருந்தபடி) ஊம் நடக்கட்டும்.

சேனைத் தலைவன் : (அர்ச்சகரிடம் ரகசியமாக) விதி நம்மிடம் தோழமைகொள்கிறது.

பிச்சைக்காரன் பல்லக்கிலிருந்து எட்டிப் பார்க்கிறான். அவன் முகம் வெட்டி இழுக்கிறது.

## 6

விலாசபுரியின் கொலு மண்டபம். மையத்தில் காலி யான சிங்காதனம். முகப்பில் பிச்சைக்காரன் முன்னே வர, பரிவாரம் பின் தொடர்ந்து வருகிறது.

**பிச்சைக்கார மன்னன் :** (கொலு மண்டபத்தின் மையத்தில் வந்து நின்று சுற்றுமுற்றும் அண்ணாந்து பார்க்கிறான்.) இதான் நம்ம வூடாக்கும். கூரை தலை இடிக்காது. நல்லாத்தான் இருக்கு. இந்தத் தரையிலே போட்டிருக்கே மெத்து மெத்துன்னு கம்பளி, குளிருக்கு அடக்கமாயிருக்கும். சுருட்டி நம்ம கையிலே கொடுக்கச் சொல்லு.

**மந்திரி :** தங்கள் மேனி நலந்தீண்ட சீனத்துப்பட்டும் காஷ்மீரச் சால்வையும் தவங்கிடக்கும்போது நாலு பேர் காலில் படும் இதை நாடுவது பொருந்துமா?

**மன்னன்:** அப்படியா, அது கெடக்கட்டும். (சிங்காதனத்தைச் சுட்டிக் காண்பித்து) அதுதானே நான் உட்கார எடம்...

**மந்திரி :** ஆமாம் அரசே, தங்கள் அரியணை.

**மன்னன் :** அதென்ன அரியணை, அறுவாமணை, அதுக்குப் பேரு சிங்காசனம், எனக்குத் தெரியாதோ!—என்னை ஏமாத்தலாம்னு பாக்கிறியா,—அவனுங்க ஏன் வெட்ராப்பலே கத்தியை ஓங்கிக்கிட்டு நிக்கிறான்கள்?

**சேனாதிபதி :** தங்கள் மெய்க்காப்பாளர்கள், தாங்கள் இட்ட வேலையைச் செய்வார்கள்.

**மன்னன் :** நான் சொன்னபடி கேட்பாங்களா? பொய்யி...

**சேனாதிபதி :** வாஸ்தவம் அரசே! நீங்கள் வேண்டுமென்றால் பரீட்சித்துப் பாருங்களேன்.

மன்னன் : டேய், (சேனைத் தலைவரைக் காண்பித்து) இவனை ரெண்டு துண்டா வெட்டிப் போடுங்கடா!

மந்திரி திடுக்கிட்டுப் பிரமிக்கிறார். சேனாதிபதி தனது வாளை நிலத்தில் ஊன்றியபடி சிரித்துக்கொண்டு நிற்கிறான். வீரர்கள் உருவிய கத்தியுடன் சேனாதிபதியை நோக்கி ஓடி வருகிறார்கள். சிரித்துக்கொண்டே பார்த்த மன்னன் அவர்கள் வெகு சமீபத்தில் நெருங்குவதைக் கண்டு ''ஓடய்யா, வெட்டிப் போடப் போராங்க. ஓடு, ஓடு!'

வீரர்கள் ஓங்கிய வாட்கள் சிதறி விழும்படி சேனாதிபதி வாளைச் சுழற்றுகிறான். மன்னன் ஒரு தூண் பக்கம் ஓடி ஒளிகிறான். முகம் வெட்டுகிறது.

சேனாதிபதி : அரசே, தங்கள் பணியாட்களின் விசுவாசத்தையும் என் தைரியத்தையும் சோதித்துப் பார்த்து விட்டீர்கள். இனித் தங்களுக்குக் கவலை இருக்காது.

(ஒரு கணம் நிசப்தம்)

தூணருகில் நின்று நடுங்கிய அரசன் பயம் தெளிந்து வருகிறான்.

மன்னன் : அடேயப்பா? பசங்க பொல்லாப் பசங்க.

மந்திரி!: தாங்கள் சிம்மாசனத்தில் அமரவேண்டும்.

மன்னன் : அட தெரியும்பா! சும்மா நொண நொணன்னு பேசிக்கிட்டு. தள்ளாதவருதான் நான் ராசான்னு அப்பவே சொல்லிப்பிட்டாரே.

மன்னன் போய்ச் சிம்மாசனத்தில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கைகளை முறுக்கி உடம்பை நெருக்குகிறான்.

மன்னன் : எனக்கு ராசாங்கம் நடத்தத் தெரியாதுன்னு உங்க நினைப்புல்ல,—என்னய்யா முளிக்கிறே, உம்மத் தானே?

மந்திரி : அரசே...?

மன்னன் : உங்களாலே என்னெ ஏமாத்த முடியாது! நான் ராசாங்கம் நடத்துறேன் பாக்கிறியா! என்ன...

மந்திரி : அரசே?

மன்னன் : (கூத்தில் அரசன் பிரவேசம்போல் தாளம் போட்டுக் குதித்துவிட்டு) இதிலிருந்து சபையிலுள்ள சகல கனதனவான்களுக்கும் தெரிவிப்ப தென்னவென் றால் (கை வீசி ஒய்யாரமாக நடந்து) ராஜாதி ராஜன் வந்தேனே, அதி வீரசூர ராஜன் வந்தேனே! (ஆட்டம் போட்டுவிட்டுச் சிங்காதனத்தில் அமர்ந்து) அடே சேவகா! (அவனே குரலை மாற்றிக் கொண்டு) ஏன் மகராஜ்! (தன் குரலில்) மந்திரியை அழைத்துவா!

(மந்திரியின் குரலில்) : மந்திரி வந்தேன்! நன்மந்திரி வந்தேன். சபையோருக்கும் சகலருக்கும் வணக்கம். அரசே தாங்கள் அழைக்க வந்தேன்.

(தன் குரலில்) : அஹோவாராய் மதிமந்திரி! மாதம் மும்மாரி பெய்து வருகிறதா!

(மந்திரி குரலில்) : ஆம் அரசே!

(தன் குரலில்) : அந்தணர் அர்ச்சனை புரிகின்றனரா? ஆவினம் மேய்கின்றதா?

(மந்திரி குரலில்) : ஆம் அரசே!

(தன் குரலில்) புலியும்......புலியும்......(விரைவாக) புலியும் பசுவும் தண்ணி குடிக்கின்றனவா?

(மந்திரி குரலில்) ஆற்றில் தண்ணீர் இல்லை.

(தன் குரலில்) : அப்படியானால் அந்தணரை அழைத்து வருண ஜபம் செய்யச் சொல்லு.

(மந்திரி குரலில்) : ஆகட்டும் அரசே!

(தன் குரலில்) : அதுவே சரி. சபை கலைந்தது. (பாட்டாக) போய் வருகிறேன், போய்வருகிறேன் சபையோரே. (பாடி ஆடிவிட்டுச் சிங்காதனத்தில் வந்து உட்காருகிறான்.)

மன்னன் : எப்பிடி? (முகம் இழுக்கிறது)

(சபையில் நிசப்தம்)

சேனாதிபதி : அரசே, வந்த சிரமம் தீரக் களைப்பாற வேண்டாமா? தங்களுக்காக அறுசுவை விருந்து காத்திருக்கிறது.

மன்னன் : அப்படிச் சொல்லுடா தம்பீ! (நாடக ரீதியில்) சபை கலைந்தது. போய்வருகிறேன் போய்வருகிறேன் சபையோரே.

(சேனைத் தலைவனும் அரசனும் போகிறார்கள்)

## 7

அரண்மனைக்குள் ஒரு அறை. சேனைத் தலைவனும் அரசனும் உள்ளே பிரவேசிக்கிறார்கள். அரசன் உள்ளே குனிந்து நுழைந்து தலையை உயர்த்திச் சுற்றுமுற்றும் பார்க்கிறான். ஒரு பணியாள் அவனுடைய பிச்சைக்கார மூட்டையையும், திருவோட்டையும் கொண்டு வந்து வைத்துப் போகிறான்.

சேனைத் தலைவன் : ராஜாங்க உடைகளை மாற்றிக் கொள்ளலாமே?

மன்னன் : அறைக்குள்ளாரக் கூட்டியாந்து எல்லாத்தை யும் பிடிங்கிக்கலாம்னு பாக்கிரியா? (சற்று நடுங்கு கிறான்)

சேனைத் தலைவன் : அப்படி அல்ல அரசே! உணவு அருந்த ஏற்ற உடைகளை மாற்றிக்கொள்ளலாமே? —அங்கே யாரடா!

சில பணியாட்கள் ஓடி வருகிறார்கள். அரசனிடம் அணுகி உடைகளைக் களைய முயலுகிறார்கள்.

மன்னன் : வெலகி நில்லுங்கடா. நான் எடுத்துத் தாரேன் எனக்கு இந்தப் பசங்க வாரது போரது புடிக்கலெ...

சேனைத் தலைவன் : அதற்கென்ன, மாற்றிவிடுகிறது! அரசன் கண்கள் மெதுவாக எதிரில் உள்ள பழத் தட்டைக் கவனிக்கின்றன.

அரசன் : அதோ வெளியே தெரியுதே தோட்டம், அதெல் லாம் நமக்குத்தானா?

சேனைத் தலைவன் : அவையா — அவைமட்டுமென்ன? கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் தங்கள் பொருள்கள் தான்.

(ஜன்னலருகில் சென்று தூரத்தில் கைகளைக் காட்டுகிறான். அவனுடைய பார்வை வேறு திசை திரும்பியதும் மன்னன் 'லபக்' என்று ஒரு பழத்தை எடுத்து ஒளித்துக் கொள்கிறான்.)

அரசன் : சாப்பாடு சாப்பாடு எங்கரே, எல்லாம் வெறும் பேச்சாருக்கு.

சேனைத் தலைவன் : இதோ, இந்தக்கணத்திலே... (வெகு வேகமாக ஓடுகிறான்.)

அரசன் : சனியன் ஒழிந்தது. ஓரண்ட தனியா உட்கார உட்ராங்களா?

(பழத்தைக் கடித்துக் கடித்து விழுங்குகிறான் கதவு திறப்பதைக் கண்டு, பழத்தை மறைத்துக் கொண்டு)

மன்னன் : சனியங்க, இப்ப என்னவாம்?

சேனைத் தலைவன் : உணவுக்கு வரவேண்டும்...

மன்னன் : சாப்பிடக் கூப்பிட்றியா...வெளியே இருந்தே சொல்லப்படாது! (எழுந்து) எங்கே?

(இருவரும் அடுத்த அறைக்கு வருகிறார்கள். அங்கே இரு இலைகளில் உணவு பரிமாறப்பட்டுள்ளது. உணவு ருசி பார்ப்பவனும் சுயம்பாகியும் நிற்கிறார்கள்)

அரசன் : எதுக்கு ரெண்டு எலை? நீயும் எங்கூட குந்திக்கப்போறியா?

சேனைத் தலைவன் : அல்ல அரசே. ஒன்று தங்களுக்கு, மற்றொன்று அங்கே நிற்கும் உணவு ருசி பார்ப்பவருக்கு!

அரசன் : அப்போ. எனக்கென்ன ருசிகிசி தெரியாதுன்னு நெனச்சுக்கிட்டியா? என்னய்யா காது குத்தப்பாக்கிறே?

சேனைத் தலைவன்: அப்படியல்ல அரசே, ஒரு வேளை உணவில் விஷங்கலந்திருந்தால் தங்களுக்கு ஆபத்து ஏற்படாமலிருக்க...

அரசன்: உணவிலே விஷத்தை ஏன் கலக்கணும்...நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு, இப்போ இதிலே விஷம் கலந்திருக்கா...

சேனைத் தலைவன்: இல்லை என்று நினைக்கிறேன்—நிச்சயமாகச் சொல்ல முடியாதே...

அரசன்: டே. அவன் சோறு திங்கரதுக்காக எங்கிட்ட தபாய்க்காதே. எங்கிடி வெஷமா, வெஷம்! அப்படிச் சொல்லிக்கிட்டே மொக்குவியாக்கும். இந்தக் காலத்திலே எங்கணாச்சும் பிடி சோறு போடுவாங்களா! அதான் வெஷமே இருந்துதுன்னு வச்சுக்க, துண்ணுப்புட்டு நீட்டுப் படுத்துட்டான்னா அந்த ஒரு வேளைச் சோறு நட்டந்தானே! அதெ யாரு குடுப்பா? உங்கப்பன் வீட்டுச்சொத்தோ எடுத்துத் தானம் பண்ண வந்துட்டே. எல்லாரும் போங்கடா வெளியே போங்கடா, போங்கடா, போங்கடா!

எல்லோரையும் விரட்டிக் கதவைச் சாத்துகிறான். போங்கடா போங்கடா என்று அடித் தொண்டையினால் பாடிக்கொண்டே இலையில் உட்காருகிறான். படைத்திருந்த வெறும் அன்னத்தை உருட்டி உருட்டி விழுங்குகிறான். காய் கறிகளைத் தனித்தனியாக விழுங்குகிறான். பிறகு சாதத்தில் குழம்பையும் ரசத்தையும் சேர்த்து ஊத்தி இரண்டு கவளம் போட்டுக்கொண்டு நாக்கைச் சப்புக் கொட்டுகிறான். மற்றொரு பாத்திரத்தில் பாயசத்தைப் பார்க்கிறான். எழுந்து சென்று இரண்டு கைகளாலும் ஆற்றுத் தண்ணீர் குடிப்பது போல அள்ளிக்குடிக்கிறான். தட்டிலிருந்த லட்டைக் கடிக்கிறான். என்னது சாப்பிடுவது என்று தோன்றாமல் தவிக்கிறான்.

மன்னன்: இப்படிப் பண்ணா சரிப்படாது.

இலையில் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து பேய் போல விழுங்குகிறான், முடிவில் தண்ணீர் என நெய்யைக் குடித்துவிட்டு ''நெய்யா'' எனச் சொல்லிக்கொண்டே மோரைக் குடிக்கிறான். பிறகு கைகளை மேல் துண்டில்

துடைத்துக் கொள்கிறான். கடைசியாகச் சுற்றிப் பார்த்து இரண்டு லட்டை மடியில் கட்டிக்கொண்டு கதவைத் திறந்து கொண்டு வெளி வருகிறான்.

மன்னன்: (பணியாட்களைப் பார்த்து) இலையை எடுத்து ஏழைப் பரதேசிங்களுக்குப் போடு. நீயே மொக்கிப் பிடாதே.

(மன்னன் தனது அறைக்குச் செல்கிறான்)

சேனைத் தலைவன் வாசலில் காத்து நிற்கிறான்.

மன்னன்: (அவனைக் கண்டு) என்னய்யா குட்டி போட்ட பூனை மாதிரி சுற்றிச் சுற்றி வர்ரே...

சேனைத் தலைவன்: தங்கள் உத்தரவுக்காக...

மன்னன்: கிட்டவா! அந்த மந்திரீன்னு ஒரு கிழம் வந்துதே அது மூஞ்சி ஓனக்குப் புடிக்குதா?

சேனைத் தலைவன் திடுக்கிடுகிறான்!

மன்னன்: எனக்குப் புடிக்கலே, நம்ப ஊட்லே ஜயில் இருக்கா?

சேனைத் தலைவன்: தங்கள் முத்திரை மோதிரத்தைக் காட்டி அனுப்புகிறேன் சிறைக்கு; அதற்கென்ன.

மன்னன்: மோதிரத்தைத் திருப்பித் தரணும். சத்திய மாகத் தரணும் (அவிழ்த்துக் கொடுக்கிறான். ஒரு வேலைக்காரனைப் பார்த்து) அவருகூடவே, கை யோடவே போயி மோதிரத்தை வாங்கியாந்துரு... ஜாக்கிரதை!

## 8

இரவு மாளிகையில் சயனக்கிரகம். அறையின் உச்சியி லிருந்து ஏழு திரியிட்டவெண்கல அன்ன விளக்குத் தொங்கு

கிறது. கிழக்குச் சுவரில் ஒரு நிலைக்கண்ணாடி; விளக்கு வெளிச்சம் மங்கித் தெரிகிறது. மஞ்சத்தின் மையத்தில் பிச்சைக்கார மன்னன் உட்கார்ந்து தனது கிரீடத்தினுள் கைவிட்டு எடுத்து ஒவ்வொரு மலை வாழைப் பழமாகத் தின்று கொண்டிருக்கிறான்.

கைவிட்டுப் பார்க்க, பழம் தட்டுப்படாததினால், தான் ஏற்கனவே தின்றுவிட்டுக் கிரீடத்தில் போட்டு வைத்திருந்த பழத்தோல்களில் உள்ள சதைப்பற்றை நகத்தினால் நோண்டித் தின்று தோலை மறுபடியும் கிரீடத்துக்குள் போட்டுக் கொள்கிறான்.

எதிர்ச் சுவர் அருகில் உள்ள ஆசனத்தின் மீது தட்டில் வைத்துள்ள பழங்கள் அவன் பார்வையில் விழுகின்றன.

இடது குடங்கையில் கிரீடத்தை ஏந்தியபடி மெதுவாக எடுத்து தட்டருகிலே சென்று ஒரு பழத்தை எடுத்துக் கொண்டு நிலைக்கண்ணாடி அருகில் சென்று பிம்பத்தைப் பார்த்தபடி பழத்தை ஒரு கடி கடிக்கிறான். முகம் வெட்டி இழுக்கிறது.

''இருந்தாலும் இப்போ நீ தாண்டா ராசா'' என்று சொல்லிவிட்டு உரக்க வாய்விட்டுச் சிரிக்கிறான்.

சிரித்துக் கொண்டே மறுபடியும் மஞ்சத்தருகில் வந்து உட்கார்ந்து கொள்கிறான். கையிலிருக்கும் பழத்தை மறந்தவன் போல, சிரிப்பு ஓய, ஏதோ யோசனையில் ஆழ்ந்தவன் போல இருக்கிறான். வெளியே காவல்காரர்கள் முன்னும் பின்னுமாக நடந்து காவல் செய்யும் காலடிச் சத்தம் கேட்கிறது.

ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்து ''என்னடா சுத்திக் கிட்டுத் திரியரே. உனக்குத் தூக்கம் கீக்கம் வரலே'' என்று அதட்டுகிறான்.

பதறிப்போன காவல்காரர்கள் "மகாராசா சமூகத்துக்குக் காவல்."

பிச்சைக்கார மன்னன்: (யோஜனையுடன்) வெளியே போரதுக்கும் காவலா?

காவல்காரர்கள் மன்னனைத் திருப்தி செய்விக்கும் நோக்கத்துடன் "ஆமாம் மவராசா."

மன்னன்: அப்பொத் தள்ளிப்போய் நின்னு காவப் பாருங்க. உங்க சத்தம் எனக்குப் புடிக்கலே. வேணும்னா போய்த் தூங்குங்க.

காவல்காரர்கள்: மகராசா!

மன்னன்: தூங்குங்கடா!

காவல்காரர்கள்: நாங்க தூங்கலாமா?

மன்னன்: (கடுமையாக)பின்னெ நான் தூங்கவேண்டாமா? போங்கடான்னா போங்க போங்க...

காவல்காரர்கள் திருதிருவென்று விழித்துக்கொண்டு செல்கிறார்கள்.

அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த மன்னன் ஜன்னலருகிலிருந்து மறுபடியும் மஞ்சத்தருகில் வந்து கையில் இருந்த கிரீடத்தை மஞ்சத்தில் போடுகிறான்.

மெதுவாகத் திரும்பி அறைக் கதவு அருகில் சென்று தாள் சரியாகப் போட்டிருக்கிறதா என்பதை அழுத்திப் பார்க்கிறான்; தாள் பலமாக இருக்கிறது என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு மறுபடியும் அறையின் மத்திக்கு வருகிறான். கையிலிருந்த முத்திரை மோதிரத்தைக் கழற்றி இடுப்பு வேட்டி முனையில் இறுக முடிந்து வேட்டியைப் பலமாக வரிந்து கட்டிக் கொள்கிறான்.

அவனுடைய பார்வை தனது பட்டயத்தின் மீது விழுகிறது. திடுக்கிடுகிறான். (தனக்குள்) "தூங்கரப்ப மெதுவா வந்து வெட்டிப் போட்டா? எமன்க, செய்வாங்கள்!"...

தனது உத்தரீயத்தை எடுத்து அதற்குள் கத்தியை வரிய வரியச் சுற்றிப் பொதிகிறான். மஞ்சத்தினடியில் சென்று தரையில் விரித்திருக்கும் கம்பளத்தின் கீழ் மறைத்து வைக்கிறான்.

(சிரித்துக்கொண்டு) "இப்போ என்னடா பண்ணுவே, வந்தின்னாலும் என்னை எழுப்பித்தாண்டா கத்தி எங்கேண்ணு கேக்கணும்!"

மெதுவாக மஞ்சத்தினடியிலிருந்து வருகிறான். நேராகப் பழத்தட்டருகில் சென்று மறுபடியும் ஒரு பழத்தை எடுத்துக்கொண்டு மஞ்சத்தின் மீது உட்காருகிறான்.

மன்னன்: கொள்ளு மட்டும் திண்ணு. நேத்து, எச்சி எலைக்கு ஏங்கிக்கிட்டுக் கெடந்தயே. துண்ணு, கொள்ளு மட்டும் துண்ணுடா, துண்ணு.

கையிலுள்ள பழத்தை ஆவேசத்துடன் கடித்துக் கடித்துத் தின்கிறான்.

முகம் வெட்டி வெட்டி இழுக்கிறது. கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் வருகிறது. வாயைக் குவித்துக்கொண்டு சிரிக்கிறான். சிரிப்பு எக்காளச் சிரிப்பாகிறது; பேய்ச்சிரிப்பாகிறது. ஒரே பாய்ச்சலில் நிலைக் கண்ணாடி அருகில் போய் நின்று கொள்கிறான். விரைப்பாக நிற்கிறான். முகத்தை வலித்துக் கோரணி செய்து கொள்கிறான். மஞ்சத்தினருகில் ஒரு பதுமையின் கையிலிருக்கும் பந்தம் போன்ற விளக்கை வெடுக்கென்று எடுத்துக் கொண்டு பேய்ச்சிரிப்புடன், பேய்ச சங்கீதத்துடன் குதித்து ஆடுகிறான். ஒரே வெறியாட்டம்.

சட்டென்று நிற்கிறான். உடம்பு வெட வெட என்று நடுங்குகிறது; விளக்கை வீசியடித்துவிட்டுக் கட்டிலில் பாய்ந்து படுத்துக்கொண்டு போர்வையை இழுத்து மூடிக் கொள்கிறான். விம்மும் சப்தம் கேட்கிறது. ஓய்கிறது.

தலைக்கருகில் பழத்தோல் நிறைந்த கிரீடம்.

## 9

அரசனுடைய சயனக் கிரகத்தின் வெளிப்பக்கம். சாத்திய கதவு. அதன் எதிரில் இருவர் நிற்கிறார்கள். ஒருவன் சேனாதிபதி, மற்றவன் ஒரு பணியாள்.

சேனாதிபதி : டேய், இனிமேல் நீ மகாராஜாவுக்குப் பக்கத்திலேயே இருக்கிற பணியாள்.

பணியாள் : (கண்ணைச் சுழற்றிக்கொண்டு) பக்கத்திலேயே இருக்கிற பணியாள்.

சேனாதிபதி : சரி அளக்காதே. அவரைப் பார்த்திருக்கிறாயா?

பணியாள் : (பணிவுடன்) இனிமேல்தான் பார்க்கப் போறேனுங்க.

சேனாதிபதி : அட மடையா! மெதுவாகக் கதவைத் தட்டி மகாராஜா மகாராஜான்னு கூப்பிடு.

பணியாள் : கூப்பிடலாமா?

சேனாதிபதி : ஆமாண்டா.

(பணியாள் மெதுவாக அடி எடுத்து வைத்துச் சென்று லேசாகக் கதவைத் தட்டி) "மகாராசா, மகாராசா" என்று அடித் தொண்டையில் ரகசியம் போலக் கூப்பிடுகிறான்,

சேனாதிபதி : சத்தம் போட்டுக் கூப்பிடுடா.

பணியாள் தொண்டை கிழியக் கத்துகிறான்.

சேனாதிபதி : (திடுக்கிட்டு, உதட்டைக் கடித்து) "டேய், மடையா" என்று இரண்டடி பின் வாங்குகிறான்.

அறைக்குள் சலனமேயில்லை.

சேனாதிபதி : நல்ல தூக்கம், நேரமாகிறது. எழுப்பியாகணும். இருவரும் சுற்றி, திறந்த ஜன்னலருகில் வருகிறார்கள்.

சேனாதிபதி : டேய் எட்டிப் பார்!

பணியாள் : (உள்ளே தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டே) அதோ கட்டில்லே தூங்குராருங்க.

சேனாதிபதி : நீ உள்ளே குதிச்சுப்போய், சத்தம் போடாமெ கதவைத்திற. அப்புறம் மகாராஜாவை மரியாதையாய் எழுப்பு.

பணியாள் ஜன்னல் வழியாகக் குதிக்கிறான். ஓசைப் படாமல் போய்க் கதவைத் திறந்த பிற்பாடு மஞ்சத் தருகில் நின்று தலையிலிருந்த முண்டாசை மரியாதையாக இடுப்பில் கட்டிக்கொண்டு வாய் புதைத்து அடித்தொண்டையில் 'மகாராசா' என்று எழுப்புகிறான். அசையவில்லை. சுற்று முற்றும் திரும்பிப் பார்த்து, ஒன்றும் தட்டுப் படாததி னால் மெதுவாக உலுக்கி எழுப்புகிறான்.

மன்னன் : (தூக்கவெறியில்) போம்மே! இன்னிக்கு நீதாம் போயிச் சீக்கிரம் ஏதாச்சும் எடுத்தாயேன். எச்சியெலைகிலைன்னு பார்த்துகிட்டுத் திரியாதே.

பணியாள் : மகாராசா!

மன்னன் : (தூக்கத்திலேயே) போமே.

பணியாள் வெகுவேகமாக வாசல் வழியாக ஓடுகிறான்.

சேனாதிபதி : எங்கேயடா!

பணியாள் : ராசா உத்தரவு!

வெகுவேகமாக ஓடி மறைகிறான். சேனாதிபதி அவனையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வாசலுக்குள் நுழைந்து உரத்த குரலில் "மகாராஜா" என்று அழைக்கிறான்.

மன்னன் : (திடுக்கிட்டுக் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து) யாரது! என்ன? (முகம் வெட்டி இழுக்கிறது)

சேனாதிபதி : தங்கள் ஊழியன் சேனாதிபதி. தங்களுக்கு ஏற்ற...

மன்னன் : நீ யெப்படி உள்ளே வந்தே?

பணியாள் துணியிட்டு மூடிய தாம்பாளம் ஒன்றை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைகிறான்.

மன்னன் : யாரடா? என்னது?

பணியாள் : உங்க நாய்க்குட்டி. உத்தரவுப்படி கொண்டாந்தேன்.

சேனாதிபதி : இவனைத் தங்களுக்கு ஏற்ற ஊழியன் என அழைத்து வந்தேன். இவன் தான் உள்ளே குதித்துக் கதவைத் திறந்தான். பிறகு தங்கள் உத்தரவு கேட்டு...

மன்னன் : உத்தரவா!

பணியாள் . ஆமாம், எசமான். நீங்க தூங்கரப்ப மருவாதியா உசுப்புனேன். இத்த கொண்டாரா உத்தரவாச்சு...

மன்னன் : எதை?

பணியாள் : இதை! (துணியை எடுத்து எச்சில் இலைகளைக் காண்பிக்கிறான்.)

சேனாதிபதி : சீ மடையா! அரசருடன் விளையாடு கிறாயா?

பணியாள் : நான் விளையாடுவேனா!

மன்னன் : (உரக்கச் சிரிக்கிறான். முகம் வெட்டுகிறது) தூக்கத்திலே நான் ராசா இல்லை. முளிச்சுக்கிட்டு இருக்கப்பத்தான் ராசா! தூக்கத்திலே போடுற உத்த ரவைக் கேக்காதே. கெட்டிக்காரனா இருக்கியே! ஓம் பேரென்ன?

பணியாளன் : எம்பேரு பூரணம்.

மன்னன் : அதான் ஓம் மூஞ்சியப் பார்த்தாக் கொழுக் கட்டை மாதிரியிருக்கு. பூரணத்தை வாயிலே திணுச்சுப்பிட்டா அசல் கொழுக்கட்டேதான்.

பணியாள் மெதுவாக நிலைக்கண்ணாடியருகில் சென்று முகத்தைச் சோதிக்கிறான்.

பணியாள் : எனக்கும் அப்படித்தான் தோணுது மகா ராசா. கொஞ்சம் பூரணத்துக்கு உத்தரவானா, நான் கொழுக் கட்டை ஆயிடுவேன்.

சேனைத்தலைவன் : சரிதாண்டா. ராஜகாரியம் எத்த னையோ, மரியாதையாய்ப் பேசு.

மன்னன் : அவனை ஏன் அதட்டரே? அவன் நம்ம வேலைக்காரன். ஓங்க ராசாங்கத்திலே அவனைப்போல புத்திசாலி உண்டா? ஆமாம் கேக்கறேன்!

பணியாள் : ஆமாம் கேக்கிறேன்!

சேனைத் தலைவன் தலைவணங்கி விட்டு வெளியே போகிறான்.

# 10

கவிஞன் வீடு. திண்ணையில் அவன் அமர்ந்திருக் கிறான். நிலைக்குப் பின் அவனுடைய தாயார் தரையில் உட்கார்ந்து, வெற்றிலைஉரலில் வெற்றிலை தட்டிக் கொண்டிருக்கிறாள்.

தாயார் : அப்பா உனக்கு தெய்வசகாயத்தால் வாக்கு வந்துவிட்டது. வாக்கு இருந்தால் வயிறு நிறையுமா? இப்பொ வயிறு பேச ஆரம்பித்து விட்டதே!

கவிஞன் : அவள் அருள் இருக்கும்போது நமக்கு எதுக் கம்மா கவலை? பேசாத என்னைப் பேசவைக்க வில்லையா? ஊரிலே என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாம் மந்திரவாதி என்று பேயோட்டச் சொல்லு கிறார்கள். வேலைக்குப் போக ஆசைதான். கொடுக் கிறது யார்? மேலும் வாணியை வாழ்த்திக்கொண்டே இருந்தால் போதும் என்று...

தாயார் : அது சரிதானப்பா... வேலைதான் பார்க்கப் புடிக்கலேன்னா ராசாவைப் போயிப்பாரு... நம்ம பரம்பரைத் தொழில்தான் பாடுவதாச்சே...

கவிஞன் : வயிற்றுக்காக வாணியை அடகு வைக்கச் சொல்லுகிறாயாக்கும்...

தாயார் : என்னப்பா செய்யரது? உலகம் அப்படி.

கவிஞன் : அம்மா, எனக்கு இந்த உலகம் வேண்டாம். வேண்டுமானால் ஊமையாகவே இருந்து விட்டுப் போகிறேன்.

தாயார் : துக்குறித் தனமாப் பேசாதே.நான் சொல்லுகிற தைக் கேளு (ரகசியமா) ஏதோ புது ராசா வந்துட் டார் என்று பக்கத்து வீட்டிலே சொல்கிறார்களே...

மேலக்கோட்டை வாசல்லெ வச்சு இவரை அவர் அழைச்சு அனுப்பிச்சாராம். இவர் ஏழை எளியதுக கஷ்டம் தெரிஞ்சவராம். நீ தான் போயிப்பாரேன்......

கவிஞன் : ஆமாம்...என்னமோ பிச்சைக்காரன்னு சொல்றாங்க.

தாயார் : சத்தம் போட்டுச் சொல்லாதே.

கவிஞன் : உள்ளத்தைச் சொன்னா என்ன? உள்ளதை மூடிப் பொதியப்படாது அம்மா...

தாயார் : மூடிப் பொதிகிறதை மூடித்தான் பொதியணும். உலகம் உன்னைப்போல இல்லை. ராசா கோபம் வீண் பொல்லாப்பு. நமக்கு ஏன் இந்தத் தொல்லை? இன்னைக்கு அவன் ராசா. உன் தொழில் பாடுவது. சன்மானம் கேட்டுப் போய்ப் பாடு. சொல்வதைக் கேளு...

கவிஞன் : உனக்காகத்தான் போகிறேன். எனக்கு மனம் ஒப்பவில்லை.

## 11

கடைவீதி. பிச்சைக்காரப் பெண் கவலை கொண்ட முகத்துடன் வருகிறாள்.

ஒரு கடைக்குச் சற்று விலகி நின்று, அங்கு நின்று கொண்டிருந்த இரண்டு ஆண்டிகளை அணுகிப் பேச எத்தனிக்கிறாள்.

பிச்சைக்காரி :எங்கப்பாரைப் பார்த்தீங்களா? நேத்து முச்சூடும் அவரைக் காணவே இல்லை.

முதல் ஆண்டி : உலகம் மாயை அம்மா! தெரியரது தெரியாது; தெரியாதது தெரியும்.

பிச்சைக்காரி : அப்பொ எங்கப்பாரு?(கண் கலங்குகிறது)

இரண்டாவது ஆண்டி · இனிமே அவரைப் பார்க்க ஒன்னாலேயும் முடியாது, என்னாலையும் முடியாது. அவரெப் படைச்ச ஆண்டவன் வந்தாலும் முடியாது. நீ கவலெப் படாதே. கையிலே ஓடும் கழுத்துக்குள்ளே குரலும் இருக்கப்பக் கவலை எதுக்கு? எங்ககூடச் சேர்ந்துக்கோ...

பிச்சைக்காரி : எங்கப்பாரு செத்தா ஓங்களுக்கு எளக்காரமாப் போச்சாக்கும். கசமாலம்... கசமாலம்...

முதல் ஆண்டி : யாரம்மா அவரு செத்துப் போனாருன்னு சொன்னா! நாங்க சொல்லாததை நீ நடுத்தெருவிலே ஞாயத்தை மறந்து சொல்லலாமா?

பிக்சைக்காரி : (நம்பிக்கையுடன்) அப்ப சாவுலீங்களா?

இரண்டாவது ஆண்டி : யாரம்மா அப்படிச் சொன்னா? அப்பாரைச் சாமி பார்த்துதா? எல்லாம் மாயை, இல்லாதது இருக்கு. இருக்கிறது தெரியலே...

பிச்சைக்காரி : என்னிடம் விளையாடாதிங்க. உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு...

முதல் ஆண்டி : சம்பிரதிப் பிள்ளை வீட்டு முதல் பந்தி முடிஞ்சிருக்கும். சின்ன மாயைக்கூடப் பேசிப் பொழுதைக் களிச்சா, பசிமாயை தொலைச்சி சம்மாரம் பண்ணிப்புடும். சப்பரைச் சாமி இப்படி நடக்கட்டும்...

இருவரும் வேகமாக நடக்கிறார்கள்.

பிச்சைக்காரி : உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு...

இருவரும் : கூட வராப்பிலியா?

பிச்சைக்காரி : கசமாலம்.

பிச்சைக்காரி மறுபடியும் தெரு வழியா நடந்து செல்லுகிறாள். பதிவாகப் பிச்சை வாங்கும் ஒரு கடையை நெருங்கி ஓரத்தில் நிற்கிறாள்.

கடைக்காரன் : கடன்காரி, கடன்காரி, கடையைத் திறக்கரதுக்கு முன்னே கையை நீட்டிக்கிட்டு வந்திட்டியாக்கும். கொடுத்து வைச்சவன் தவணை தண்ட வர மாதிரி வந்துட்டியாக்கும். போ மூதேவி. போ. போ!

பிச்சைக்காரி : எசமான், எங்கப்பாரே நேத்து முச்சூடும் பாக்கலே. கடைப்பக்கமா வந்தாரான்னுட்டு கேக்கலா முன்னு வந்தேன். கோவிச்சுக்காதிங்க எசமான்...

கடைக்காரன் : ஓங்கப்பன் வந்தானா தொலஞ்சானான்னு பாக்கரதா எஞ்சோலி? கழுதே அப்பெனத் தேடிக்கிட்டு வாராப்பிலே இதுவேரெ வேசமாக்கும். தொலைஞ்சு போ.

ஒரு காலணைவை விட்டு எறிகிறான்.

பிச்சைக்காரி காலணாவை ஏறிட்டுப் பார்த்தபடி நின்றுவிட்டு, அதை எடுத்துக் கொள்ளாமல் போகிறாள்.

கடைக்காரன் : கொளுப்பப் பாரு கொளுப்பெ. ஏமூதேவி எடுத்துக்கிட்டுப் போரியா இல்லியா...

பிச்சைக்காரி திரும்பிப் பாராமல் செல்லுகிறாள்.

வேறு ஒரு பிச்சைக்காரன் வந்து குனிந்து அந்தக் காலணாவை எடுத்துத் துடைத்து மடியில் கட்டிக்கொண்டு கடைக்காரனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு வருகிறான்.

கடைக்காரன் : என்ன! மொறவச்சுக் கொள்ளையடிக்க நெனப்போ? தடியா...

பிச்சைக்காரன் : கூச்சப் போடாதிங்க எசமான். ஆபத்து.

கடைக்காரன் : என்னடா ஆபத்தைக் கண்டுபிட்டே.

பிச்சைக்காரன் : கூச்சப் போடாதீங்க; அவ இருக்காளே, அவ எங்க சாதிக்காரிதான். இப்போ (ரகசியமாக) ராசாவா ஆயிப்புட்டாரே அவரு மவ. அவரு எங்க சித்தாப்பாரு மகன். இண்ணக்கிக் கண்ணு தெரியுமா? அவரு யோசனெலதான் இந்தப் பொண்ணு இப்படிப் பழைய கோலத்துலெ திரிஞ்சு ஆராருகிட்டப் பணம் இருக்குன்னு நோட்டம் பாக்குது. நீங்க காலணாவெ விட்டெறிஞ்சிங்க பாரு, உங்களுக்குத் தீம்புதான்.

கடைக்காரன் : ராசா மவளா? அவளெக் கூப்புடடா கால்லெ உளுந்து...

பிச்சைக்காரன் : அவளக் கூப்புடவா? யாராவது நாகப் பாம்பெக் கூப்பிடுவாங்களா? நீங்க, இருக்கிற ரொக்கத் தைக்கட்டி முடிச்சிக்கிட்டு, வாருங்க. தலெமறெவா உங்களக் கூட்டிக்கிட்டுப் போறேன்...

கடைக்காரன்: இரு, இரு. இப்பவே வரேன் (உள்ளே ஓடித் திரும்பி) பொம்பிளைங்களையும் அழைச்சுக் கிட்டுப் போயிருவமா?

பிச்சைக்காரன்: ஊரறிஞ்சு போகும். பொறவு ஆபத்து. நீங்க ரொக்கத்தையும், நகையையும் எடுத்துக்கிட்டு சீக்கிரமா வந்திருங்க...

## 12

அரண்மனையில் ஒரு அறை. மஞ்சத்தில் மன்னன் உட் கார்ந்திருக்கிறான். அவனுடைய காலடியில் பூரணம் உட்கார்ந்திருக்கிறான். மன்னன் கிரீடத்தில் வேர்க்கடலை களைப் போட்டு வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாய்

உரித்துத் தின்பதும் சமயத்தில் கீழே இருக்கும் வேலைக்காரனுக்கு ஒன்று கொடுப்பதுமாக மென்று மென்று தின்று கொண்டிருக்கிறான்.

கீழே தரையில் உட்கார்ந்திருக்கும் பூரணம் ஒரு வேர்க் கடலையை உரித்துத் தோலை விட்டெறிந்துவிட்டு, வித்தின் மெல்லிய தோலை நிமிண்டி ஊதிவிட்டுக் கடலையை வாயில் போட்டுச் சுவைத்துக் கொண்டே பேசுகிறான்.

பூரணம்: மகாராசா, எனக்கு ஒண்ணு தோணுது. அரண்மனைன்னா ரொம்ப லக்ஷ்மிகரமாக இருக்கவாண்டாமா- எங்க பார்த்தாலும் தடித்தடியா...

மன்னன்: (அவனை முதுகில் ஓங்கித் தட்டி) அப்படிச் சொல்லுடா அதிரசமேன்னு. டே, பூரணம்! இந்த அரமனைக்கு வந்ததம் பரவு நானும் எத்தினியோ பயலுவளெப் பார்த்தேன். ஒன்னியப்போல எனக்குப் புடிச்சாப்புலே பேச ஒரு பயலுக்கும் தெரியுதில்லெ.

பூரணம்: (வலியைக் காட்டாமல் முதுகைத் தடவிக் கொண்டே) ஆமாம் மகராசா.

மன்னன்: (வேர்க்கடலையை உரித்துத் தோலை எதிர்ச் சுவரிலுள்ள சரஸ்வதி படத்தின் மீது விட்டெறிந்து) சொல்லு...

பூரணம்: (மன்னனைப் போலவே வேறு ஒரு கடலைத் தோலை விட்டெறிந்து) என் புத்திக்குப் படுது—நீங்க இந்த அந்தப்புரத்தைவுட்டே வெளியே வரப்புடாது. நான் தான் வெளியே நடமாட இருக்கேனே. நீங்க இங்கே லக்ஷ்மி மாதிரி இருக்கிற பொம்புளெங்களெ அளச்சு வச்சுக்கிட்டு, கிட்ணசாமி மாதிரி இருக்கணும்.

மன்னன்: (ஒரு அசட்டுச் சிரிப்புடன்) அப்படிச் சொல்லுடா ஆம்புளை சிங்கம்! டே பூரணம், இந்த நிமிசத்திலே இருந்து நீ தான் நமக்கு மந்திரி...தெரியுமா!

பூரணம்: நான் தான் மந்திரி!...

மன்னன்: அதிருக்கட்டும், எதுக்க மாட்டியிருக்கே, அந்தப் பொம்புள படம் யாரு?

பூரணம்: சரஸ்வதி மாதிரி என் புத்திக்குப் படுது. நிச்சயமாச் சொல்ல...

மன்னன்: (கோபமாக) மடையா—மந்திரிக்கு என்னா வேலை தெரியுமா?

பூரணம்: தெரியும் மகராசா. வரும் பொருளுரைத்தல். சேனாதிபதி வாராரு!

மன்னன்: எங்கே!

சேனைத் தலைவன்: அவசர காரியம். அதனால்தான்.

மன்னன்: அவசர காரியமா? இங்கே நம்ம மந்திரிகூடக் கலந்து பேசிக்கிட்டு இருக்கேன்...இனிமே பூரணம், நம்ம மந்திரி தெரிஞ்சுக்கோ.

சேனைத்தலைவன் பூரணத்தைக் கூர்ந்து கவனிக்கிறான்.

பூரணம்: (சரஸ்வதி படத்தைப் பார்த்துக் கொண்டு) இது சரஸ்வதி படந்தானே, மகராசா கேட்டாங்க...

சேனைத் தலைவன்: நீதான் மந்திரியாச்சே, நீ சொல்லு. (கோபமாகச் செல்கிறான்)

மன்னன்: சனி தொலஞ்சுது!

பூரணம்: எனக்கு அப்படித்தான் தோத்துது. இது சரஸ்வதி படம்தான் மவராசா. கையிலே வீணை இருக்கு!

மன்னன்: (யோசித்துவிட்டு) இந்த மோதிரத்தைப் பார்த்தியா? (அவன் முகம் வெட்டுகிறது)

பூரணம்: ஆமாம்.

மன்னன்: இதைக் கொண்டு போயி (ரகசியமாக) அவங்கிட்டக் காமி. அவன் ஜெயிலுக்குப் போயிடுவான்!

பூரணம்: (பயந்துகொண்டு) போகாட்டா?

மன்னன்: போவாண்டா. நீ போ, போவாட்டா நீ மோதிரத்தை எடுத்திட்டு ஓடியாந்திரு. போ...

## 13

அரண்மனை அத்தாணி மண்டபம், சேனாதிபதி தனியாக முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கிறான்.

உள்ளிருந்து பூரணம் வருகிறான். தயங்கித் தயங்கி அவன் எதிரில் வந்து நிற்கிறான்.

சேனாதிபதி: (கோபச் சிரிப்புடன்) வருக மந்திரியாரே?

பூரணம்: (தலையைச் சொரிந்து கொண்டே) இல்லீங்க...

சேனாதிபதி: அற்பனுக்கு எடம் கொடுத்தால்...இப்ப என்னவாம், எங்க வந்தே?

பூரணம்: இல்லீங்க (மடியிலிருந்து முத்திரையை எடுத்து அவரிடம் காண்பித்து) இத்தெ ஓங்ககிட்டக் காமிக்கச் சொன்னாருங்க...

சேனாதிபதி: (உரக்கச் சிரித்துவிட்டு) காண்பித்துவிட்டு?

பூரணம்: காமிச்சா நீங்க ஜெயிலுக்குள்ளே போயி உக்காந்துக்குவிங்கன்னு சொன்னாரு...

சேனாதிபதி: (விழுந்து விழுந்து சிரித்துவிட்டு) நான் ஜெயிலுக்குப் போயாச்சுன்னு போய்ச் சொல்லு. வேறெதும் சொன்னியோ...? (கத்தியை எடுத்துச் சுழற்றுகிறான்)

பூரணம்: நான் சொல்லுவேனா? நீங்களும் அவரைக் கண்டா அப்படி நான்சொன்னேன்னு சொல்லுங்க...

சேனாதிபதி: மடையன்கள் மடையன்கள்...

**சிறைச்சாலை**

சிறையில் சேனைத்தலைவனும் மந்திரியும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

சேனாதிபதி: மடையனை ராசாவாக்கினால் ஊர் சிரிச்சுப் போகும். நான் அப்பொழுது சொன்னது உங்கள் காதில் ஏறி இருக்காது; அதனால்தான் அவன் உத்தரவுப்படி உங்களை இங்கே அனுப்பினேன். நான் சொல்லுகிறபடி...

மந்திரி: நீங்கள் சொல்லுவது சரியில்லை. அவருக்கு ஆள் விடுவோம். அல்லது ஜனங்கள் சம்மதப்படி நடப்போம்.

சேனைத் தலைவன்: வெள்ளம் வந்த பின் அணைபோட முடியுமா? ஜனங்களுக்கு என்ன தெரியும்? என்ன சொல்லப்போகிறார்கள்? ஒரு வேளைச் சோறு போடுகிறவன் அவர்கள் உள்ளத்தைக் கைக்குள்ளாக்க முடியும். வேண்டுமெனில் அவர்களை நமக்குச் சாதகமாக...

மந்திரி: அது வெறும் பேச்சு, ராஜ்யத்தின் உயிர் ஜனங்கள். அவர்கள் வாக்கு ராஜ்யத்தின் வாக்கு.

## 14

நகரத்தின் சவுக்கையின் முன்பு ஏராளமான கூட்டம். நகரத்துப் பெரிய மனிதர்கள் சவுக்கையில் உட்கார்ந் திருக்கிறார்கள். அவர்களுக்கு மத்தியில் கவிஞன் உட்கார்ந் திருக்கிறான்.

கூட்டத்தில் ஒருவன் : நம்ப கவிராயரின் மகன் ஊமையல்ல.

2-வது நபர் : சீ! வாயை மூடு எச்சிணி மந்திரத்திலே அவன் ரொம்பக் கெட்டிக்காரண்டா. அதனாலேதான் பேச்சு வந்திடுத்து. துண்ணூரு குடுத்தா பேயி, பிசாசு நோயி எல்லாம் நொடியிலே பறந்து போகும். (ரகசியமாக) அவன் சொந்த அப்பாரேப் பலி குடுத்து இந்தச் சக்தியை வரம் வாங்கி இருக்கானாம். கண ணைப்பாரு தெரியும்...

3-வது ஆசாமி : அப்படியா! தகப்பனெக் கொண்டா?

2-வது நபர் : உம், சத்தம் போடாதே. அதோ பேசறான் பாரு!

கவிஞன் : (அருகிலிருப்பவரைப் பார்த்து) அறியாமை அரியணையில் அமருவதா? தருமம் தலையிறங்கி விட்டதா? உலக நாயகி ஒடுங்கிவிட்டாளா? நீங்கள் சொல்வது...

முதல் பெரியவர் : அரண்மனையில் நடப்பதை நேரில் கண்டவர்கள் சொன்னதைத்தான் உங்களுக்குச் சொல்கிறேன். அமைச்சரைச் சிறையில் தள்ளி விட்டானாம்.

2-வது பெரியவர் : திடீரென்று அதிர்ஷ்டம் வந்தால் மூளை பேதலித்துப்போவது சகஜம். போன பணம் கிடைத்தது என்பதைக் கேட்ட மேகலிங்கம் பிள்ளை வேஷ்டியைக் கிழித்துக் கொண்டது தெரியாதா? கிடைத்ததை இன்று வரை சித்த சுவாதீனத்துடன் அனுபவிக்க முடிந்ததா?

கவிஞன் : அப்பொழுது அரசருக்குப் பைத்தியமா?

முதல் பெரியவர் : நிச்சயமாக எப்படித் தெரியும்?

கவிஞன் : நேரில் போய்ப் பார்ப்பது!

2-வது பெரியவர் : அரசர் கொலுவில் வந்து இருந்தால் தானே?

கவிஞன் : ஊர்ப் பெரியவர்களாகப் பார்த்து ஏகோபித்துச் சொன்னால்!

முதல் பெரியவர் : பைத்தியக்காரனிடம் போய் வலுவில் மாட்டிக்கொள்வதா? அந்த விவகாரம் நமக்கு ஒத்து வராது.

கவிஞன் : நான் போய் வருகிறேன்.

கூட்டத்திலிருந்து : என்னையா உட்கார்ந்துக்கிட்டுப் பேசுறிங்க. ரெண்டு பாட்டுப் பாடுங்க—

மறுபக்கத்திலிருந்து அவன் ஊமைடா சும்மா டபாய்க்கிறாங்க.

கவிஞன் சிரித்துக் கொண்டு எழுந்திருக்கிறான். ஜனங்கள் ஆரவாரம் செய்கிறார்கள். பிறகு நிசப்தம்.

கவிஞன்: நான் இது பரியந்தமும் ஊமையாக இருந்ததை நீங்கள் அறிவீர்கள். எனக்கு வாக்கு வந்துவிட்டது. ஆனால் நீங்கள் யாவரும் ஊமையாகக் கிடக்கிறீர்கள்,

அரசன் என்ற பெயரில் அறியாமை இன்று உங்கள் சிங்காதனத்தில் உட்கார்ந்து கெக்கலி கொட்டுகிறது. அதை அடக்க வாயற்று ஊமையாகி விட்டீர்கள். பைத்தியக்காரர்களையும் மூடர்களையும் அரசன் என்று சம்மதித்து நீங்கள் தலை வணங்க வேண்டு மென்று தர்ம சாஸ்திரங்கள் சொல்லவில்லை. உங்கள் மந்திரியைக் காரணமில்லாமல் சிறை செய்ததை எதிர்த்தீர்களா? உங்கள் சொத்துக்களை நாளை பிடுங்குவதற்கு உத்தரவுகளைப் போட்டால் அதற்கும் தலை குனிவீர்களா?

கவிஞன் பாடுகிறான்: (தேசத்தின் வளம் பிரஜைகளின் உழைப்பு; அவ்வளவையும் உறிஞ்சும் வேதாளம்தான் அரசன்; அறிவுத் தெய்வம் காளியின் கோலம் பூண்டு புன்மையை அழித்து விடும்.)

கூட்டம் அவசர அவசரமாகக் கலைகிறது.

ஒருவன் : என்னென்னமோ பேசராண்டா!

மற்றவன் : இங்கே நின்னா நம்மையும் பிடிச்சுகிட்டுப் போயிருவாங்க. சவுக்கையிலிருந்தவர்களும் வேகமாகப் போகிறார்கள்.

கவிஞன் : ஜனங்களின் சன்மானம் இப்படி. ராஜ சன்மானம் எப்படியோ. (கசங்கிய பூவுடன் நடக்கிறான்)

## 15

மாலை நேரம். கையில் ஒரு கசங்கிய மாலையுடன் கடைத் தெரு வழியாக நடந்து வந்து கொண்டிருக்கிறான்.

'கசங்குகிற ஜனங்களுக்காகப் பேசினால் கசங்கின மாலைதான் மிச்சம். வீட்டுக்குப் போய் விடிய விடியப் பட்டினியுடன் தோழமை கொள்ள வேண்டியதுதான்.நான் என்றாலும் பெரிய காரியமில்லை. அம்மாவுக்கு என்ன பதில் சொல்வது? ஊர் வழக்குத் தீர்க்கப் போனேன் என்பதா...''

கடைகளைத் தாண்டிச் சற்று நடமாட்டமில்லாத இடத்திலிருந்து ஒரு அலறல் கேட்கிறது.

''அறியாப் பிள்ளைகிட்ட அநியாயம் பேசுராங்களே, கேக்க ஆளில்லையா?''

கவிஞன் அத்திசையை நோக்கி ஓடுகிறான். எதிரில் ஒரு பிச்சைக்கார யுவதி ஒருவனிடம் திமிறிக் கொண்டிருக்கிறாள்.

கவிஞன் அந்த இடத்துக்கு வெகு வேகமாக விரைந்து ஓடி ''அடேஅவளை விடு, அவளை விடு'' என்று அதட்டிக் கொண்டு அந்த விடனைப் பிடித்துத் தள்ளுகிறான்.

**விடன்:** நீ யாரடா, சாக்கி சொல்லிக்கிட்டு வாரது? என் பொண்டாட்டியே நான் அடிப்பேன், கொல்லுவேன். என் இஷ்டம்!

மீண்டும் அவள் கையை எட்டிப் பிடிக்கிறான்.

**கவிஞன்:** பொய் சொல்லாதே. பதரே! அவளைத் தெரியும். (அந்த விடன் கன்னத்தில் கவிஞன் ஓங்கி ஒரு அறைவிடுகிறான். அறை பொறுக்க மாட்டாமல் அம்மாடி என்று அலறிக்கொண்டு ஓடி விடுகிறான்.)

**கவிஞன்:** இப்படி வாம்மா, இருட்டிலே இப்படி வரலாமா?

பிச்சைக்காரி: பிச்சைக்காரிக்கு இருட்டுன்னு ஒண்ணு இருக்குங்களா?

இருவரும் விளக்கருகில் வருகிறார்கள்.

பிச்சைக்காரி: நீங்களா! நெசமா நீங்களா!

கவிஞன்: (சிரித்துக்கொண்டு) என்னை இன்னும் ஞாபகமிருக்கிறதா?

பிச்சைக்காரி: கைநீட்டிப் போட்டவங்களை மறக்க முடியுமா? அதுவும் அன்னக்கி உங்களைப் பார்த்த மாதிரி பொய்யா, அல்லது இன்னிக்கு உங்களைக் காதாலே கேக்கரேனே அது பொய்யான்னு மலப்பாருக்கு.

கவிஞன்: இரண்டும் நிஜம். அன்று ஊமை, இன்றைக்கு பேசுகிற ஊமை...!

பிச்சைக்காரி: என்னாங்க அப்படிச் சொல்லிப்புட்டிங்க?

கவிஞன்: வாயிலிருந்து வார்த்தை வந்தால் போதுமா? உன்னைப் பார்த்த அதிர்ஷ்டம் அன்று எனக்கு வாக்குக் கிடைத்தது என்று நினைத்தேன். இன்று அதே (வாக்கு) வார்த்தை தன்னுடைய திறமைக் குறைவை நிமிஷத்துக்கு நிமிஷம் இடித்துக் காட்டுகிறது. வா போவோம். எங்க வீட்டிலே மூன்று பேர் பட்டினியாகப் பேசிக் கொண்டிருக்க இடமிருக்கிறது. இரண்டு பேர் என்றுதான் நான் நினைத்தேன்.

பிச்சைக்காரி: ஏங்க பட்டினி? என் பையிலே அரிசி இருக்குதுங்க. நல்லாச் சொன்னிங்க வாங்க வூட்டுக்கு...

கவிஞன்: (சிரித்துக் கொண்டு) நீ சிரமப்பட்டுச் சேகரித்ததை நான் தட்டிப் பிடுங்குவதா? உன் மனம் போல உலகத்து மனம் இருந்தால் வேதனையே இருக்காது!

பிச்சைக்காரி: எம் மனசு குளிந்திருக்குன்னு நீங்கதான் சொல்லனும். அது வேவுர வேவு கொதி கஞ்சிகூட வேவாது. நேத்திக் காத்தாலே எங்கப்பாரு பிச்சை வாங்கப் போனாரு, பொறவு காணலே. இண்ணக்கி முச்சூடும் தேடித் தேடிக் காலு கடுத்துப் போச்சு. இருக்காரா செத்தாரா தெரியல்லே!

கவிஞன்: அப்போ உன் தகப்பனாரைத் தேடிப் பிடிக்கும் வரை எங்கள் வீட்டிலேயே இருந்துவிடு.

பிச்சைக்காரி: அது எப்படி சாமி, உலகம் ஒப்புமா? நான் ஒப்பி இருந்தாலும் உலகம் ஒப்புமா...நான் உங்ககூட நடக்கரதே தப்பு. இந்தாங்க அரிசி. சும்மா எடுத்துக் கிடுங்க.

கவிஞன்: (சிரித்துக்கொண்டு) நீ ஒப்பினாலும் உலகம் ஒப்புமா?

பிச்சைக்காரி: ஆமாம் சாமி. எப்படியானாலும் பிச்சைக் காரச் சாதிதானே, நான் வர்ரேனுங்க...

(பிச்சைக்காரி வெகு வேகமாக இருட்டில் மறைகிறாள்.)

கவிஞன்: இவளா பிச்சைக்காரி!...

## 16

அரண்மனை அந்தப்புரம். வாசலருகில் பூரணம் நின்று சொண்டிருக்கிறான்.

பூரணம்: (உள்ளே தலையை நீட்டி) மகாராசா கூப்பிட் டிங்களா?

உள்ளிருந்து மன்னனின் குரல்: ஒன்னத்தாணடா கூப்பிடு றேன், உள்ளார வா!

பூரணம்: புத்தி மகாராசா, (உள்ளே விரைந்து செல்கிறான்.)

பத்து, இருபது பணிப் பெண்கள் சூழ மன்னன் ஒரு மஞ்சத்தில் படுத்திருக்கிறான். ஒருத்தி கால் பிடிக்க, ஒருத்தி வீச, இன்னொருத்தி பன்னீர் தெளிக்க, வேறு ஒருத்தி கிரீடம் நிறைய இருக்கும் பொரி கடலையை ஒவ்வொரு குத்தாக அள்ளி அள்ளி வாயில் போட, வாயைக் குதப்பிக் குதப்பி அசை போட்டுக் கொண்டே, "என்ன மந்திரி பூரணத்தாரே, நம்மை பாத்தா எப்படி இருக்கு?" என்று கேட்கிறான்.

பூரணம்: பசுந்தா இருக்கு!

மன்னன்: (தலையைத் திருப்பி அவனைப் பார்த்து) என்னப் பாத்தா கிட்ணசாமி மாதிரி இல்லே?

பூரணம்: மஹாராசா சொல்வது வாஸ்தவம். அச்சுந்தரமும் அப்படியே இருக்கு. இனிமேல் நான் கிட்ணசாமியைக் கூட நேரில் பாரக்க வேண்டாம். இப்பவே துண்டைப் போட்டுத் தாண்டி சத்தியம் பண்ணுவேன்.

மன்னன்: அப்படிச் சொல்லு, அதிசயத்தை விள்ளு. இந்தா ஒரு பிடி பொரிகடலை, இந்தா...

(பூரணம் வாங்கிப் பையில் போட்டுக் கொள்கிறான் )

மன்னன்: (வேறு பக்கம் திரும்பி, எதிர்ப்பட்ட சேடியிடம்) ஏம்மா பொறச்சுப் பாக்கிறே? உனக்கு நெசமாத் தெரியலையாக்கும்.

பணிப்பெண்; இல்லே மகாராஜா! தாங்கள் கிருஷ்ணன் என்றால் அவர்...

மன்னன்: அவனா, அருச்சுனன். இது தெரியலையாங் காட்டியும் போம்மே...

பூரணம்: அருச்சுனனா...நானா...

மன்னன்: (உத்சாகமாக) வில்லுப் பாத்திருக்கிரியா... வில்லு...

பூரணம்: ஆமாங்க, வண்டிக்கு அடியிலே வச்சுருக்குமெ.

மன்னன்: (படுத்திருந்தவன் முழங்கையை ஊன்றி எழுந்து கொண்டு) சீ, அதல்லடா, சண்டெலெ தோள்ளெ வச்சிக்கிட்டுட் போவாங்களே, அது...

பூரணம்: நான் அதைப் பாக்கரதில்லை மகாராசா...

மன்னன்: ஏண்டா...

பூரணம்: அருச்சுனனாயிப்பிடுவேனோன்னு பயம்...

மன்னன்: பயம் எதுக்கு?

பூரணம்: ஏதாச்சும் ஒரு ஊருக்குத்தான் போனோம்னு வச்சுக்குங்க. (குனிந்து பொரி கடலையை எடுத்து வாயில் போட்டு மென்று கொண்டே) அங்கேயாவது அக்காடான்னு தலெயச் சாய்க்க முடியுமா? அங்கே ஒரு பெண்டாட்டி வந்து தலைமாட்டிலே உக்காந்துக் கிட்டு, அத்தெக் குடு இத்தெக்குடுன்னு கொடஞ்சு தள்ளிப் புடுவா; அதுக்காவத்தான் எங்கப்பாரு என்னெ அர்ச்சுனனா ஆவாதெ ஆவாதென்னு அடிச்சுக்குவாரு...

மன்னன்: ஏம்மெ, வாயைப் பிளந்துக்கிட்டு கதை கேட்டுக்கிணு, வேலை இருந்தாப் பாருங்களேன், கொப்பியடிங்க. நாட்டியமாடுங்க. பாடுங்க. நான் மந்திரி கூட ராசாங்கம் பண்ணிக்கிட்டிருக்கேன்...

ஓரேயடியாக ஏகக் கதம்பமாக நாட்டியமும் கூத்தும் காதைத் துளைக்கின்றன.

மன்னன்: அப்பொ உனக்குக் கண்ணால மாவலியா?

பூரணம்: ஆவுமா மவராசா! அப்படி வலுவிலே மாட்டிக்குவனா!

## 17

அரண்மனை உப்பரிகை. மன்னனும் பூரணமும் நிற்கிறார்கள்.

மன்னன்: அதோ வாசல் கிட்டத் தெரியுதே, அவ ஆரு பாரு!

பூரணம்: எனக்குப் புதுசாத்தான் தெரியுது! வயசுப் பிள்ளே. பிச்சைக்காரசனம், மவராசா.

மன்னன்: எம்மவடா! உம் பார்வையும் அருச்சுனன் பார்வையா இருக்கே, அவளே இங்கே அவசியமா அளச்சிக்கிட்டு வா...

ஃ ஃ ஃ

**அரண்மனை வாசல்**

பிச்சைக்காரப் பெண்: உள்ளே நான் கட்டாயம் போய்த்தான் ஆகணும். ராசா இருக்காரே அவரு எங்கப்பாரு. (காவல்காரர்கள் இருவரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.)

முதல் காவல்காரன்: மவராசா ஒங்கப்பாரா?

பிச்சைக்காரி: ஆமாம் ஐயா! எத்தினி தரம் சொல்ல.

2-வது காவல்காரன்: அந்த மூலையிலே கல்லு குவிச்சு வச்சிருக்கே பார்த்தியா?

பிச்சைக்காரி: எங்கிட்ட வம்பு பேசாதிங்க ஐயா...

முதல் காவலாளி: உன்னியும் சேத்தா மகாராசாவுக்கு இரு நூத்தி ஐம்பத்திரண்டு புள்ளங்க இருக்கணும். டேய், கணக்குச் சரியா ஆவட்டும், புள்ளேக் குவியல்லே ஒரு கல்லெப் போட்டுக் கணக்கைச் சரிக்கட்டு.

2-வது காவலாளி: (ஒரு சிறு கல்லை எடுத்துப் போட்டுவிட்டு) அதில்லாமே முந்நூறு மச்சான் நூத்தி எளுவத்தி எட்டு அண்ணேன் இன்னம்...

பிச்சைக்காரி: பொய் சொல்லிப் பலர் வந்து நின்றால் நான் சொல்வதும் பொய் ஆகிவிடுமா?

முதல் காவலாளி: நீ சொல்லுகிறது நிசமாகவே யிருக்கலாம். பொய்யாக்கூட இருக்கலாம். போகக்கூடாது என்று தான் சொல்லுகிறேன்......

அப்பொழுது பூரணம் வெகு வேகமாக வந்து அவளைக் கும்பிட்டு "மகராசா அளச்சிக்கிட்டு வரச் சொன்னாங்க... அட தள்ளி நில்லுங்கடா; இவங்க ராசாவோட மக" என்று அதட்டுகிறான்.

காவல்காரர்கள்: புத்தி, புத்தி. உள்ளாரப் போங்கம்மா. நாங்க காவல்கார நாக்குட்டிங்க; தெரியாமச் சொன்னதை மன்னிக்கணும்.

பூரணமும் பிச்சைக்காரியும் உள்ளே போகிறார்கள்.

முதல் காவலன்: அப்பவே யோசிச்சேன். மொகத்திலே லேசா அந்தச் சாயல் தெரியுதுல்லெ? நீ ஏண்டா சொல்லப்படாது......?

2-வது காவலாளி: சாயல் தெரியுதா? ராசாவுக்கு மூஞ்சி பிடிச்சிப் போனா மகளாயிடுவாங்களாக்கும். ஏண்டா புத்தியெக் கடன் குடுக்கறே......

முதல் காவலன்: வீண் பாவம் சொல்லாதே. தலைக்குத் தீம்பு வரப் போவுது......

2-வது காவலன்: நீ தான் போயி ராசாக்கிட்டச் சொல்லிப் பாரு. ஓங்க ராசாவும் நீயும்......

## 18

நகரத்துச் சவுக்கை. சேனாதிபதி, ஊர்ப் பெரியவர்கள் சிலர் உட்கார்ந்திருக்கிறார்கள்.

சேனாதிபதி: நான் சொல்லுகிறபடி நடந்தால்தான் இந்தப் பைத்தியங்களிடத்திலிருந்து தப்புவதற்கு வழியுண்டு. ஜனங்களைக் கூட்டிக் கொண்டு, திரளாகப் போய் அரண்மனையைச் சூழ்ந்துகொண்டால்...

பெரியவர்: நீங்கள் சொல்லுகிறது சரிதான். பூனைக்கு மணி கட்டின கதையாய்ப் போச்சுன்னா? யாரு உள்ளே போரது? மந்திரியை ஜெயிலுக்குள்ளே போட்டவன்...

சேனாதிபதி: என்னையும் ஜெயிலில் போடத்தான் முயன்றான்? என் புத்தியினால் தப்பித்துக் கொண்டேன். நானிருக்கும் போது உங்களுக்கு என்ன பயம்?

மற்றொருவர்: ஜனங்களே எப்படித் திரட்டுகிறது?

இன்னொருவர்: அண்ணைக்கு அந்தக் கவிராயர் வந்தானே. அவனைக் கொண்டு ஜனங்களைத் தூண்டிவிட்டா...

சேனாதிபதி: அவன் யாரு?

முதலில் பேசியவர்: அன்று இந்தச் சவுக்கைக்கு முன்னாலே பேசினானெ, சாமுண்டி கதை சொல்கிறேன் என்று ஜனங்களைப் பார்த்து உருக்கமாகப் பேசினான். உருப் படாக் கழுதைங்க ஓடிப்போச்சு......

வேறு ஒருவர்: அவன் எதுக்கும் துணிஞ்ச கட்டை, நாம்?

சேனாதிபதி: நீங்கள் மனதைத் திடப்படுத்திக் கொண்டு வரிந்து கட்டுமுன்னே ஊர் எரிந்து சாம்பல் கூட இல்லாமல் போய்விடும். என்ன சொல்கிறீர்கள்? மந்திரி உங்கள் வாக்குப்படி நடக்க ஆசைப்படுகிறார். இரண்டில் ஒன்று தீர்மானமாகச் சொல்லுங்கள்......

## 19

அரசனுடைய அந்தப்புரம். உள்ளே பாட்டும் சதங்கைச் சத்தமும் கேட்கின்றன.

வாசலில் பொக்கிஷக் கணக்கன் வந்து நிற்கிறான்.

காவல் நிற்கும் பூரணம் அவனை நோக்கி ''என்ன விசேஷமாம்?'' என்று கேட்கிறான்.

பொக்கிஷக் கணக்கன்: அரசரிடம் சிலசெலவு சம்பந்த மாகக் கையெழுத்து வாங்க வேண்டும். அவசரம்...

பூரணம்: மகாராசா மந்திராலோசனை பண்ணிக்கிட்டிருக் காரு. சத்தம் காதிலே விழலே.

பொ.க.: விளுதப்பா, நல்லா விளுது. அதான் அவசரம்னு சீக்கிரம் போயிச் சொல்லு. வாசலெக் காத்துக் கிட்டுக் கெடக்கரதெ விட்டு வாய் பேசாதே.

பூரணம்: நான் மந்திரியாக்கும், நினெச்சுப் பேசுங்க...

பொ. க. : சரிதாண்டா. மூஞ்சியைப் பார்த்தாலே தெரியுது. நீ போயிச் சொல்லு. எத்தினி நாளடா இந்தச் சேவுகம்?

பூரணம்: போய்ச் சொல்ரேங்க எசமான். (தலையைச் சொரிந்துகொண்டு) போன திங்களுக்குத் திங்கள் எட்டு நாளாச்சு. அப்புறம் ஒரு...

பொ.க : சரிதாண்டா. உள்ளே போயிச் சொல்லு. கணக்கும் நீயும்...

பூரணம்: புத்தி எசமான்.

(உள்ளே செல்லுகிறான்)

**உள்ளே**

ஒரு விசாலமான அறையில் ஏராளமான பணிப் பெண்கள் மத்தியில் மன்னன் நின்றுகொண்டிருக்கிறான். தலையிலே ஒரு சிறு பாத்திரத்தை வைத்துக்கொண்டு கும்பம் ஆடுகிறவன் அடியெடுத்து வைப்பதைச் செய்து காண்பித்து ஒரு பணிப் பெண்ணிடம் அதைக் கொடுத்து விட்டு வந்து உட்காருகிறான்.

அருகில் உள்ள வயலினையும் வில்லையும் எடுத்துக் கொண்டு "இப்போ..."

பூரணம்: மகாராசா, பொக்கிசக் கணக்கரு வந்திருக்காரு, அவசரமாம்.

மன்னன்: அப்படி என்ன அவசரம்? வரச்சொல்லு... இங்கே பாரு (வில்லைக் காட்டி) இத்தெ இப்படிக் கீழேஇளுத்தா, காலெ, எடது காலெ நீட்டி வலது காலெக்கொண்டு குத்த வச்சு உக்காரணும், தெரிஞ் சுதா? ஏம்மே கும்பம் பதனம் ஒன்னிய வித்தாலும் ஈடாகாது...

389 TO 404 PAGES MISSING IN BOOK

பிச்சைக்காரி : (இருட்டில் சிரித்துக் கொள்கிறாள்) அம்மா தாயே! தரும தேவதையே! ஒரு பிடி கவளம் போடுங்கம்மா. ஒரு ஜீவன் தருமத்துக்காக ஜீவனைப் பணயம் வைத்துவிட்டது.

கவிஞன் தாயார் : ஏனம்மா, ராத்திரி இப்பொ எத்தினி ஜாமம் கழிஞ்சிருக்கும்...?

பிச்சைக்காரி : நாலாஞ் சாமம் ஆயிருக்கும் அம்மா, ஒரு ஜீவனுக்காக ஒரு கவளம்.

தாயார் : நீயாவது துணிஞ்சு கையை நீட்டி வாங்கப் படிச்சுக்கிட்டே. ஒரு கவளம் தேடிவரப் போரேன்னு போன சீவனுக்காகத்தான் இங்கு ஒரு சீவன் தவிக்கிறது.

பிச்சைக்காரி : அதுக்கு ஒரு நாளும் ஒருகொரவும் வராது; நீங்க கவலைப்படாதீங்க...

தாயார் : சம்பாதிச்சுக்கிட்டு வாடான்னு அனுப்பின பிள்ளை திரும்பல்லைன்னா கவலை இருக்காதாம்மா —அதுவும் இல்லாமெ—எனக்கு ஒங்கிட்ட எங்குறையெல்லாம் சொல்லணும்னு தோணுது—சொல்றேன். —ஊருலே ராசாவெ எதிர்த்துக்கிட்டு என்னமோ நடக்குது. அதிலெ இவனும் போயி, சிறு பிள்ளைத் தனமா...

பிச்சைக்காரி : தருமத்தைக் காப்பாத்த ஆசைப்படறது தப்பில்லெ அம்மா.

தாயார் : ஏழெ எளியதுக்கு அந்த ஆசை பொறக்கக்கூடாதம்மா. உன்னைப் பார்த்தா பிச்சைக்காரியாட்டமாத் தெரியில்லையே அம்மா. ஏம்மா, உனக்கு இந்தக் கதி வந்தது? இந்தக் காலத்திலே...

பிச்சைக்காரி : (சிரித்துக்கொண்டு) ஆச்சி ஒங்க பார்வை பளுதாகலியே ஆச்சி. நீண்ணு பேசினா வவுரு ரொம்புமா? நாலெடத்திலெ போனாத்தாம்மா...

தாயார் : எனக்கு வீட்டிலெ இருப்புக் கொள்ளலெ. அவனைப் பார்த்துத் தேடிக்கிட்டுவரலாம்னு இருக்கு.

பிச்சைக்காரி : நீங்க இருட்டிலே கிடந்து தடமாட வேண்டாம். நான் விசாரிச்சிக்கிட்டு வந்து சொல்றேன்.

தாயார் : எனக்கு இருப்புக் கொள்ளலெ. நானும் வரேன்.

பிச்சைக்காரி : ஆமாம். ஒங்களோட வந்தாலும் ஒரு நல்ல காரியம் செஞ்சாப்பிலே ஆச்சு. இங்கே ஒரு கவளம் அன்னம் வாங்குகிறதுத்துக்குள்ளே தெய்வங்கள் கிட்டே ஒரு கோடிவரம் வாங்கிடலாம் போல இருக்கு.

தாயார் : என் மகன் தெய்வத்துக்கிட்ட வரம் வாங்கித்தான் அந்தக் கவளத்தைக்கூட மறந்து விட்டான்.

## 16

**சிறைச் சாலை**

மந்திரியும் கவிஞனும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

கவிஞன் : இந்த அரசன் அறிவீனன்தான்; கொடூர சிந்தை படைத்தவனல்ல.

மந்திரி : இல்லாவிட்டால் தன்னைச் சூழ ஆபத்து வருவதைப் பற்றிக் கொஞ்சமும் சட்டை செய்யாதிருப்பானா? சிறைக்கு எல்லாரையும் அனுப்புகிறானே, சிறைக்காவலைப் பற்றிக் கொஞ்சமாவது சிரத்தை இருக்கிறதா? சேனைத் தலைவனிடம் அவன் கொஞ்சம் பயப்படுகிற மாதிரி நினைத்தேன். அவன்

சிறையில் தானிருக்கிறானா சிறையைச் சதிக்கிடங்காக உபயோகிக்கிறானா என்பதுபற்றிக் கொஞ்சமாவது சட்டை செய்வதாகத் தெரியவில்லை. சேனைத் தலைவன் வெளியில் போவதுகூடத் தெரியும் என்று சந்தேகிக்கிறேன்.

கவிஞன் : அவன் நினைத்தால் க்ஷணத்தில் யாரையும் கொல்லலாமே...

மந்திரி : இதுவரையும் அந்த யோசனையே தட்டவில்லை. கண்ணெதிரிலிருந்து அகன்றால் அவன் மனதைவிட்டு யாரையும் அகற்றி விடுகிறான்.

கவிஞன் : மேற்கொண்டு...

மந்திரி : இனி நடக்கப்போவதை நினைத்தால்தான் எனக்குப் பயமாக இருக்கிறது. சேனைத் தலைவனுக்குச் சிங்காதனத்தின் பேரில் நாட்டமிருக்கிறது. சிங்காதனம் அவனுக்கு இடம் கொடுத்தால்...

கவிஞன் : சிறு குழந்தைகளுக்கு நாம் ஒரு கதை சொல்வோமே, தவளைகள் வரங்கேட்டு வாங்கிய மரக்கட்டை ராசாவுக்குப் பதில்...

சிறைக் கதவு திறக்கின்றது. இருவரும் திடுக்கிட்டு விலகுகிறார்கள். கவிஞனின் தாயார் உள்ளே வருகிறாள்.

கவிஞன் : (அதிசயத்துடன்) அம்மா!

தாயார் : (சிரித்துக் கொண்டு) தருமத்தைக் காப்பாற்ற நீ எந்தக் கோட்டைக்குள்ளே வந்து அகப்பட்டுக் கொண்டாலும் சோற்றுப் பொட்டணத்தைத் தூக்கிக் கொண்டு நான்தான் வரவேண்டும். ஒரு மகராசியோட உதவியாலெ நீ இருக்கிற எடமும் இந்தச் சாப்பாடும் கிடைத்தது. அந்த அம்மா அதோ நிற்கிறார்கள்.

கவிஞன் : எங்கே?

தாயார் ; அதோ தெரியவில்லையா உனக்கு?

சிறைக்குள் அரசனுடைய மகள் வருகிறாள். மந்திரியும் கவிஞனும் திடுக்கிட்டு எழுந்திருக்கிறார்கள்.

கவிஞன் : இவர்களா?

மன்னன் மகள் : என்ன? (சுற்று முற்றும் பார்க்கிறாள்) வெளியில் ஒருவருமில்லையே...

தாயார் : என்ன உன் கண்ணுக்குக்கூடத் தெரியவில்லையா? யாராயிருந்தால் உனக்கென்ன? இதைச் சாப்பிடு.

மன்னன் மகள் : சாப்பிடுங்கள். முதலில் சாப்பிடுங்கள். அரசனின் போக்கு எந்த மாதிரி மாறுமோ? நீங்கள் தப்பித்துக்கொண்டு ஓடி விடவேண்டும். அதற்காகத் தான் சிறைச் சாவியைக்கூடச் சிரமப்பட்டுக் களவாடினேன்.

கவிஞன் : அன்று வயிற்றைக் காக்கப் பிடி அரிசி தர முற்பட்டீர்கள். இன்று உயிரைக் காப்பாற்றச் சிறைச் சாவி கொண்டுவந்து விட்டீர்கள். உங்கள் மனதுக்கு ஈடாக...

மன்னன் மகள் : நல்லவர்களைக் காப்பாற்றுவது ஒரு பெரிய செயலா? மேலும் நீங்களும் பிரதிப் பிரயோஜன நினைப்பின்றிப் பிச்சையிட்டவர்கள் தானே? அதற்கு ஈடாக...

கவிஞன்: அதொன்றும் பிரமாதமில்லை. இன்று உங்கள் தந்தையால் யாருக்கும் ஆபத்து விளையாது. நீங்கள் அதைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டாம். சிறைக்குள் வேறு ஆட்கள் கையில் அகப்பட்டுச் சாகாம

விருக்க விடுதலை தரும்படி சொல்லுங்கள். அதைப் பிரமாதமாகக் கருதாமல் செய்வார். அவர் குணத்தை நான் அறிவேன். நாங்கள் எங்கிருந்தாலும் அவரால் எங்களுக்கு ஆபத்தில்லை.

மன்னன் மகள் : எதற்கும் இந்தச் சாவி உங்கள் கையில் இருக்கட்டும், நான் வருகிறேன்.

கவிஞன் : அம்மா நீயும் வீட்டுக்குப் போ. நான் நாளைக் காலைக்குள் வந்து சேருகிறேன்.

தாயார் பதில் பேசாமல் வெளியே செல்லுகிறாள். கவிஞன் முன்னும் பின்னுமாக நடக்கிறான்.

கவிஞன் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

மந்திரி : என்ன?

கவிஞன் : இளவரசிக்கு முடி சூட்டிவிட்டால்...

மந்திரி : கடகடவென்று சிரிக்கிறார். ''என்ன, உற்சாகம் தாங்க முடியவில்லையா? சிறையே இப்படி இருந்தால்...'' இருட்டிலிருந்து சேனாதிபதியின் உருவம் வருகிறது.

மந்திரி: இந்த அரசன் சிரிப்பது ஒன்றுக்குத்தானே வரி விதிக்கவில்லை. அதையாவது அனுபவிப்போமே என்று தான்...

சேனாதிபதி: என்ன, உங்கள் மனம் அதற்குள் கசந்து விட்டது? நாளைக் காலை அத்தாணி மண்டபத்திலே கணக்குத் தீர்ந்துவிடும்.

வெளியே ஜல்ஜல் என்ற கழற்சத்தம் கேட்கிறது. சிறைக் கதவுகள் திறக்கப்படுகின்றன. நாலைந்து காவலர்கள் உள்ளே பிரவேசிக்கிறார்கள்.

காவலர் தலைவன்: அரசர் தமது ஜன்ம தினத்தை முன்னிட்டு மந்திரிக்கும் கவிஞருக்கும் விடுதலை அளித்திருக்கிறார். சேனைத் தலைவர் சிறைக்குள் இருந்தால் அவருக்கும் விடுதலையளித்திருப்பதாகச் சொல்லச் சொன்னார்.

நிசப்தம்.

சேனைத் தலைவன் திடுக்கிடுகிறான். திரு திருவென்று இருவரையும் கவனிக்கிறான்.

சேனைத் தலைவன்: துரோகம். எப்படியானால் என்ன? நாளை கணக்குத் தீர்ந்துவிடும்.

## 27

**அரசன் அந்தப்புரம்**

அரசன் தனது மஞ்சத்தில் சாய்ந்திருக்கிறான். வழக்கம் போலப் பணிப் பெண்கள் அவனைச் சூழ நிற்கிறார்கள்.

மன்னன்: நாளைக் காலை ஒரு வழியாகக் கணக்குத் தீர்ந்து போய்விடும்.

ஒருத்தி: என்ன மகாராசா!

மன்னன்: நாளைக்கு என் பொறந்த நாளில்லையா? என் பொளப்புலே ஒரு வருசக்கணக்குத் தீர்ந்துவிடும் என்று நினைச்சேன். இதற்கு முந்தி, போன வருஷத்துலே எப்படி நான் இருந்தேன் தெரியுமா? நீங்கள் எல்லோரும் வரிசையா தூணுக்குத் தூண் நில்லுங்க. ஒவ்வொரு தூணும் ஒரு வூடு. நான் திருவோடு எடுத்துக் கொண்டு இப்படி (கிரீடத்தைத் திருவோடு

மாதிரி பிடித்துக் கொண்டு முத்திரை மோதிரத்தைக் கொண்டு தட்டித் தாளம் உண்டாக்குகிறான்) பாடிக் கொண்டு நடந்தேன். அந்தத் தாய்மாருங்க ஒரு புடி அரிசி போடலெ. நீங்க செளிப்புலெ இருக்க வுங்க. என் மனசே செளிக்கப் பண்ண ஏதாச்சும் போடுங்க, நான் பாடிக்கொண்டு வர்ரேன் பாருங்க. பரம்பரை ஆண்டிக்குத்தான் தெரியும், எப் படிப் பாடணம்னு. கொரல்லே சோகம் காட்டணும்... இப்படி...

மன்னன் தூணுக்குத் தூண் நின்று அங்கு நிற்கும் சேடிப் பெண்கள் வசம் தான் ஏற்கனவே கொடுத்திருந்த நகை நட்டுக்களைப் பிச்சைவாங்குகிற பாவனையில் வாங்கிவிடுகிறான். கடைசிச் சுற்றில் மேல் முன்றானையை யும் பறித்துக் கொண்டு முகத்தில் ஆவேசத்துடன் பேசு கிறான்.

மன்னன்: அண்ணக்கி நான் என்னை கிட்ணசாமிண்ணு சொன்னதை நீங்க நம்பலேல்ல. நம்ப வைக்கத்தான் இப்படிப் பண்ணினேன். அவன் திருப்பிக்கொடுக்கிம கிட்ணசாமி. இது நாமம் சாத்தர கிட்ணசாமி. யாரை மொட்டை அடிக்கலாம்னு நெனப்பு? ஓடுங்க கழுதை களா.

சாட்டையைக் கொண்டு ஓட்டி விரட்டுகிறான். முதலில் விளையாட்டு என்று நினைத்த பணிப்பெண்கள் அவனுக்குச் சித்தப் பிரமை என்று நினைத்துக் கூக்குர லிட்டு ஓடுகிறார்கள்.

பணிப்பெண்கள்: அரசருக்குப் பைத்தியம்! அடிக்கிறாரே, அரசருக்கு...

மன்னன்: (சாட்டையைச் சுடக்கிக்கொண்டு) யாருக்கடி? உங்கள் பேராசைக்கு, முட்டாத்தனத்துக்கு...

சாட்டையின் சுடக்குச் சத்தம் கேட்கிறது.

## 28

விலாசபுரி நகரம் முழுவதும் தோரணங்களாலும் கமான்களாலும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. 'பராக்ரமகேது வாழ்க' என்று அரசனைப் புகழ்ந்து வாக்கியங்கள் தொங்கப் போடப்பட்டுள்ளன.

ஆக்ரோஷமாக ஜனக் கும்பல் ஒன்று இந்த அலங்காரங்களையெல்லாம் பிய்த்தெறிந்து கொண்டு வருகிறது.

கூட்டத்தில் ஒருவன்: இவன் பேரும் பராக்ரம கேது வாண்டா?

வேறு ஒருவன்: சொந்தமாப் பேரு வச்சுக்கக்கூடத் தெரியலே. அந்த ராசா பொறந்த நாளைத்தானெ இரவல் வாங்கிக் கொண்டாடுறான்!

மற்றும் ஒருவன்: அவன் பரம்பரை ஆண்டிடா! எதையும் பிச்சை எடுப்பாண்டா!

இன்னும் ஒருவன் அவசரமாக ஒரு சுவர் அருகில் ஓடி கோணி வலித்துக் கொண்டிருக்கும் முகத்தைப் படம் வரைகிறான்.

உடம்பெல்லாம் கரி பூசிக் கோமாளிக் குல்லாயுடன் ஒருவன் கழுதைமேல் சவாரி வருகிறான்

அடிக்கடி முகத்தைக் கோணிக் கோணி அரசனைக் கேலி செய்து ஒரு பாட்டும் பாடிக்கொண்டிருக்கச் சுற்றியிருக்கும் ஜனக்கும்பல் அவமானகரமாக ''ஆண்டி பராக்!''

''கோணமூஞ்சி பராக்'', ''இரவல் பவிஷு பராக்'' என்று கூக்குரலிட்டு நடக்கிறது.

இந்தக் கூட்டங்கள் வழியில் இருக்கும் அலங்காரங்கள் எல்லாவற்றையும் அழித்துக்கொண்டு அரண்மனை நோக்கி நடக்கின்றன.

## 29

**அரசனுடைய அத்தாணி மண்டபம்**

மன்னன் சிங்காதனத்தில் உட்கார்ந்திருக்கிறான். அவனருகில் அவன் மகள் சர்வாலங்கார பூஷிதையாக அமர்ந்திருக்கிறாள்.

அரசனுடைய காலடியில் அவனுடைய பட்டாக்கத்தி துணியில் பொதிந்து வைக்கப்பட்டிருக்கிறது.

மேடைக்குக் கீழ் இரண்டு வரிசையிலும் மந்திரி பிர தானிகள் உட்கார்ந்திருக்கிறார்கள். சிறையிலிருந்து வீடுவிக் கப்பட்ட மந்திரி, அவரருகில் கவிஞன், பிறகு பொக்கிஷக் கணக்கன் முதலியோர் இருக்கின்றனர்.

எதிர் வரிசையில் சேனைத் தலைவன் ஆசனம் மட்டும் காலியாக இருக்கிறது. அதைத் தொடர்ந்த ஆசனங்களில் நகரத்துப் பெரியவர்கள் ஏழ்மையின் சின்னமாக இருக் கிறார்கள்.

முதலில் நாட்டியம் நடைபெறுகிறது. பின்னர் ஒரு சங்கீத வித்தான் வந்து அமர்ந்து குரலைக் கனைத்துக் கொண்டு பரிசை எதிர்பார்த்துப் பாட ஆரம்பிக்கிறார்.

அப்பொழுது சேனைத் தலைவன் பூரண யுத்த சன்னத் தனாக உள்ளே பிரவேசிக்கிறான். அவன் முகத்தில் ஒரு கொடுமையான புன்சிரிப்புத் தெரிகிறது. அவனைத்

தொடர்ந்து ஆயுதபாணிகளான பலர் சிற்றெறும்புச்சாரை போல் வருகின்றனர். தொடர், மண்டபத்துக்கு வெளியிலும் செல்கிறது.

சேனைத் தலைவன் வந்து, காலால் சங்கீத வித்வானை ஒதுங்கிப் போகும்படி சமிக்ஞை செய்து அந்த இடத்தில் நின்று வணங்கி, "என்னை விடுவித்ததற்குத் தங்களுக்கு நன்றி" என்று சுற்று முற்றும் பார்க்கிறான்.

மன்னன் ; உன்னை உள்ளே அனுப்பினதும் வெளியே அனுப்பினதும் என் இஷ்டம். அதிலே நன்றி எதற்கு? நீ உள்ளே இருந்தியா? இஷ்டம்போலத் தானே சுத்துனெ...

சேனைத்தலைவன் : (திடுக்கிட்டுச் சுற்று முற்றும் பார்க்கிறான்) தனி மனிதன் இச்சைப்படி ராஜ்யம் நடந்தால்...

மன்னன் : என்ன குடி முழுகிப் போச்சாம்?

சேனைத்தலைவன்: போலிப் பிறந்த நாள் கொண்டாடும் பதரே, உன்னைக் கொன்று சிங்காதனத்தை உன் ரத்தத்தில் கழுவி அதைப் புனிதப்படுத்துகிறேன்.

கத்தியை ஓங்கிக்கொண்டு ஓடி வருகிறான்.

மன்னன் : (சிரித்துக்கொண்டு) வெட்ட வாரியா வந்துக்கோ. எதுக்கும் துணிஞ்ச கட்டையடா இது. அண்ணக்கிப் பிச்சைக்காரச் சவம், இண்ணக்கிப் பேரரசன் சவம், எப்படியானாலும் போர உசிரு ஒண்ணுதான்.

கவிஞன் ஒரே பாய்ச்சலில் சிங்காதனத்தருகில் பாய்கிறான். சேனைத் தலைவனும் அவனும் மோதுகிறார்கள். கவிஞனை இழுத்துத் தள்ளிவிட்டு அரசனை நெருங்குகிறான்.

அச்சமயம் இருவருக்கு மிடையில் லக்ஷ்மி தோன்று கிறாள். அவளது பார்வையில் சேனைத் தலைவன் ஸ்தம் பித்துப் போகிறான்.

மன்னன் : எனக்காகத் திடீரென்று அவனைக் கல்லாக்கிப் பிட்ட நீ யாரம்மா? இந்த வட்டாரத்திலெ இருக்க தாய்மாரெல்லாரையும் எனக்குத் தெரியும்.

லக்ஷ்மி : (அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு) உனக்கு எப்படித் தெரியப் போகிறது?

மற்றொரு புறத்திலிருந்து நாரதரும் சரஸ்வதியும் வரு கிறார்கள்.

லக்ஷ்மி : என்ன நாரதரே, யார் தோற்றது?

நாரதர் : கோபப்படாவிட்டால் உண்மையைச் சொல்லு கிறேன்.

லக்ஷ்மி: கோபமென்ன இருக்கிறது, சும்மா சொல்லும்.

நாரதர் : யாரும் ஜெயிக்கவில்லை.

மன்னன் : சுவாமி நாரதரே, நீ தான் கதையிலே வர்ர நாரதர்னா, நல்ல நாளும் பெரிய நாளுமா இங்கே வந்து கலகத்தை மூட்டிப்பிட வேண்டாம். இந்த அம்மா யாரு? அந்த அம்மா யாரு?

நாரதர் : அரச, உன்னைக் காப்பாற்றியவர் மகாலக்ஷ்மி. இதோ நிற்பவர் வாணி, சரஸ்வதி.

மன்னன் : அப்படியா! இப்பத்தான் புரிகிறது. நாரதரே, நீர் சொன்னது தப்பு. ரெண்டு பேரும் ஜெயிக்கலேங் கரது மாத்திரமில்லே. தோத்தும் போனாங்க. ஊமை யைப் பேச வைக்கிறது, ஓட்டாண்டியை ஒசத்தி வைக் கிறது அப்பரம் ரெண்டு பேரும் கீழே விளுகிறதைப் பார்த்துக் கை கொட்டிச் சிரிக்கரது. தேவதைகளே,

உங்களுக்குப் பந்தயமும் வெளயாட்டுமாக இருக்கிறது. எங்களுக்கு உயிர்வாதை. அது புரிஞ்சுதா...

ஏ மாகலக்ஷ்மித் தாயே! எம் மூஞ்சியெப் பாரு. கோணிக் கோணி வலிக்குது. வயசு ஐம்பதுக்கு அந்தப் பக்கம். படிப்பு? பரம்பரை ஆண்டிக்குப் படிப்பு ஏதம்மா? என்னைத் தூக்கி இங்கே கொண்டாந்து போட்டு எனக்கு முட்டாப் பட்டம் கட்டப் பாத்தியே, எனக்கா முட்டாப் பட்டம்? உனக்கு உன் பந்தய ஆசைக்கு. உன் கடாச்சம் உளுகிறதுன்னா அதுக் கேத்த மத்ததும் வாண்டாமா? ஏ சரஸ்வதித் தாயே, எனக்காக உயிரைக் கொடுக்க ஓடியாந்துதே, இந்தச் சிறு பிள்ளை, இதுக்கு வாக்கைக் குடுத்தியே வக்கு வேண்டாமா அது சோபிக்க? உன் வாக்கு மகிமையிலே அவன் சொப்பனமில்லெ கண்டுக் கிட்டுக் கிடப்பான். வீட்டிலெ பூனை படுத்துடாது?

ஏ தேவதைகளே, நேரிலே என்னைப் பார்த்துச் சொல்லுங்க. மனிசப் பிறவியெ உங்க இஷ்டத்துக்குப் போட்டு உருட்டறதுக்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கு? என்னெக் குளிக்குள்ளே தள்ளிக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுத்தியே அதுக்கு யாரம்மா பொறுப்பு? பிச்சைக்காக வந்தவனிடம் போன ராசா இந்த ராச்சியத்தைப் பிச்சையாகப் போட்டான். அது பிச்சைக்காரப் பொளப்பாப் போச்சு. இன்னக்கி நான் உசிரோட இருக்கக் காரணம் உங்க அருள்னாலெ இல்லெ. நான் பைத்தியக்கார வேசம் போட்டது னாலெ. இந்த ராச்சியத்தை யாருவானாலும் ஆளட் டும். நான் கேட்டு வரல்லெ. எங்கிட்டக் கேட்டு எடுத் துக்கொள்ளனும்னு நான் சொல்லலெ.

**கவிஞன்** : இளவரசிக்குப் பட்டம் கட்டினால் யாவருக்கும் திருப்தியாக இருக்கும்.

மந்திரி : எனக்கும் சம்மதம்.

மன்னன் : (கடகடவென்று சிரித்துவிட்டு) என்ன தம்பீ இன்னம் சொப்பனம் காணுறே. ஆம்பிளெ முட்டாத் தனத்தெவிடப் பொம்புளை முட்டாத்தனம் எந்த விதத்திலெ தேவலை?

சபையில் நிசப்தம்

நாரதர் : எனக்குத் தோன்றுவதை நான் சொல்கிறேன். கவிஞனுக்கு முடிசூட்டி அவரை இளவரசிக்கு மணம் செய்து வைக்கவேண்டும். அப்பொழுது தேவியார் இருவருடைய கடாட்சமும் ராஜ்யத்தின் மீது விழும்.

ஜனங்களின் சந்தோஷ ஆரவாரம்.

மன்னன் : ஓய் நாரதரே, என் கதையிலேதான் நீர் கலகம் பண்ணாமெ ஒளுங்கா நடந்துக்கிட்டீர்...ஏ தேவதைகளே, எனக்கு ராஜ்யத்தெக் குடுத்து அவமானப்படுத்த வேண்டாம். புத்தியெக் குடுங்க. அந்தா, மரமா நிக்கிறானே அவனையும் ஒளுங்காக்குங்க...

மன்னன் முகம் வெட்டுகிறது.

மன்னன் : கடெசியா ஒங்களெக் கேக்கிறேன்; மனிசப் பிறவியெக் குளியிலெ தள்ளிப் பரிச்சை பாக்காதிங்க.

# சார், நிச்சயமா நாளைக்கு!

**பாத்திரங்கள்**

திருவிசாரம் பிள்ளை—சென்னையில் காலம் தள்ளும் ஒரு ஜந்து.

வள்ளியம்மை—வியாதியாகப் படுத்திருக்கும் மனைவி.

கமலாம்பாள்—கஷ்டத்தைப் பார்க்காமல் பிறந்த குழந்தை.

**கடன்காரர்கள்**

(சென்னையில் முப்பது ரூபாயில் குடித்தனம் நடத்துவது ஒரு செப்பிடு வித்தை. இது யதார்த்தவாத உலகம் என்றாலும் பட்டணத்தில் இந்த மாதிரியான செப்பிடு வித்தைக்காரர்களே நிறைய இருக்கிறார்கள். திருவிசாரம் பிள்ளை அவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அல்லவென்றாலும், அவர்களின் ஓர் அம்சம்.

மாரிசெட்டித் தெரு 71-ஆம் நெம்பர் வீட்டில் அவர் ஓட்டுக் குடித்தனம் செய்கிறார். பகல் முழுவதும் சேட் கடையில் வேலை. முப்பது ரூபாய் சம்பளம். அவர் குடியிருக்கும் பகுதியில், தெருவுக்கு அடுத்தாற்போல் இருக்கும் ஓர் அறையும் அதற்கு எதிரில் இருக்கும் சிறு கூடமும் காற்றுப் போகாத சின்ன அடுப்பங்கரையும் இருக்கின்றன. காலையில் மனைவிக்கும் குழந்தைக்கும் சிச்ருஷை செய்து

விட்டுப் புறப்பட்டால் மாலை 7மணிக்குத்தான் திரும்பு வார். அவர் வந்த பின்பே வீட்டுக் காரியங்கள் கவனிக்கப் படும்.

மாலை ஏழுமணி. தெருவில் உள்ள மின்சாரக் கம்பத்தின் வெளிச்சந்தான் அறையில். வள்ளியம்மை பாயில் படுத்திருக்கிறாள். குழந்தை ஜன்னலருகில் வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு வெண்கலத் தம்ளரில் கரண்டியைப் போட்டு ஆட்டிச் சப்தத்தை ரசித்துக்கொண்டிருக்கிறது. வெளியில் போவோர் வரு வோர் பேச்சுக் குரல்; மோட்டார் சப்தம்; 'இரும் படுப்பு' என்று சுமை வியாபாரியின் அலறல்; கதம்பம் விற்கும் பெண் குரல்.

(வள்ளியம்மை பலமாக இருமிக்கொண்டிருக் கிறாள். இருமல் இரண்டொரு வினாடி நீடிக்கிறது. பிறகு கபத்தைப் 'பேசினி'ல் துப்பும் சப்தம்.)

வள்ளி : அம்மாடி! அப்பா! ஏட்டி! அதெ அடக்கி சும்மாத் தான் இரியேன்!

கமலா : சும்மாத்தானேம்மா இருக்கேன்.

வள்ளி : அந்தத்தம்ளரிலே தண்ணி கொஞ்சம் எடு. அப்பா இன்னும் வரலே?

(கதம்பம் விற்கும் பெண்குரல் ஜன்னல் ஓரமாகக் கேட்கிறது.)

கமலா : அம்மா, பூ!

வள்ளி : தண்ணியெக் குடிச்சிட்டு அவளெக் கூப்பிடு.

(குழந்தை கதவைத் திறந்து அடைத்துக்கொண்டு படபடவென்று ஓடுகிறது. தூரத்தில், "ஏ கதம்பம்!" என்ற குழந்தையின் கீச்சுக் குரல். சில வினாடிகள் கழித்து)

கமலா: மோந்து பாரம்மா, பூ, நல்ல வாசனையா இருக்கு. துட்டுக் கேக்கா.

வள்ளி: அந்தச் சோப் பொட்டிலே காலணா இருக்கும் எடுத்துக் குடு.

(குழந்தை பெட்டியைத் திறந்து பார்த்து விட்டு, "இல்லியே" என்கிறது.)

வள்ளி: ஆமாம்! தீப்பெட்டி வாங்கினமே. நீ போய்க் கோமதியத்தெகிட்டே காலணா வாங்கிக் கொண்டாந்து குடு.

(வெளியிலிருந்து பூக்காரியின் 'அம்மா!' என்ற குரல்.)

வள்ளி: உம்! சீக்கிரம்.

(சில வினாடிகள் கழித்து)

குழ: அவ கிட்டே துட்டில்லியாம்!

வள்ளி: ஏ கதம்பம், இப்படி உள்ளே வந்துட்டுப் போ. ஒங்கிட்டே ரூபாய்க்குச் சில்லறை இருக்கா?

பூ: எங்கிட்டே ஏதம்மா? இதுக்கா இத்தினி நேரம் காக்க வச்சீங்க?

வள்ளி: நாளைக்குத்தான் வாங்கிக்கியேன்.

பூ: என்னம்மா நல்ல வேலையா இருக்கே! போணி பண்ணலே; பூ வாங்கறவளெப்பாரு, பூ வாங்கற வளே! அத்தெ இப்படிப் போடு.

குழ: அம்மா, எனக்குப் பூவூ.

வள்ளி: ஏட்டி, பேசாமே இருக்கலியா; அப்பா வரட்டும்... (இருமுகிறாள்).

(வெளியில் கதம்பக்காரியின் குரல், தூரத்தில் மங்குகிறது.)

(சில வினாடிகள் கழித்துச் செருப்புச் சப்தம். கதவுதிறக்கிறது. திருவிசாரம் பிள்ளை உள்ளே வந்து, சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டுகிறார். கையி லிருந்த ரூபாயும் சில்லரையும் கீழே விழுந்து சிதறு கின்றன.)

குழ: அப்பா எனக்குத் துட்டு.

வள்ளி: ஏன் எவ்வளவு நேரம்? சம்பளம் போட்டாச்சா?

பிள்ளை: நாளைக்குத்தான் போடுவார்களாம். நம்ம கோவிந்தன் கிட்டே கைமாத்தாப் பத்துரூபா வாங்கிட்டு வந்தேன். மருந்துக்குப் பணம் வாண்டாமா? நீ மத்தியானம் அந்த மருந்தெச் சாப்பிட்டியா? எப்பிடி இருக்கு?

வள்ளி: எப்படியிருக்கும்? வீட்டுக்காரன் வாடகைக்கு வந்துட்டுப் போனான். கடைக்காரப் பிள்ளை பாக்கி கேட்டு ஆள் அனுப்பிவிட்டார். ரெண்டு பேரும் ஒம்பது மணிக்கு வருவார்களாம்.

பிள்ளை: வந்தா வெறுங்கையாகத் திரும்ப வேண்டியது தான். இத்தினி நாள் பொறுத்தவனுக்கு ஒரு நாளைக் குள்ளெ என்ன அவசரம்? இந்தா, பால்ப் பொடி காச்சித்தரேன்; சாப்புடு.

(ஸ்டோவ் பற்றவைக்கும் சப்தம்.)

குழ: அப்பா, எனக்குக் காப்பி.

பிள்ளை: இப்போ என்ன காப்பி? பால் சாப்பிட்டுத் துச்சணம் பண்ணாமெப் படுத்துக்கிடக்கணும் தெரி யுமா?

(ஸ்டோவ் பம்ப் செய்யும் சப்தம்)

வள்ளி: என்ன பத்து ரூபாயா வாங்கிக்கிட்டு வந்திய?

பிள்ளை: வர்ர வழியிலே காப்பி சாப்பிட்டேன். அப்புறம் நம்ம ராமசாமியெ வழிலே கண்டேன்; அவனுக்குத் தான் நாம் போனமாசமே ஒரு ரூபா குடுக்கணுமே; அதெக் குடுத்துட்டேன். பொட்டியிலே ரெண்டு ரூபா கெடந்துதே, அதெயும் சேத்தாப் பத்து. நாளைக்கு மருந்து வாங்க, டாக்டருக்குக் குடுக்கச் சரியா இருக்கும்.

வள்ளி: அதுவும் நல்ல கூத்துத்தான்! மத்தியானமே வண்ணாத்தி வந்தாள்; பால்காரி வந்தாள். நாக்கிலே நரம்பில்லாமேப் பேசினாளுக. கெடக்குற கெடை யிலே அது வேறயா கேக்கணும்! ஆளுக்கு ஒரு ரூபாயெக் குடுத்தேன்.

பிள்ளை: அதுவுஞ் சரிதான். எம் பெட்டியை ஏன் தொட்டே? நான் இல்லெண்ணு சொல்லப்படாதா? ஏட்டி கமலம், அந்தப் பாத்திரத்தெக் கழுவிக் கொண்டு வா சீக்கிரம்.

குழ: ஆவட்டும் அப்பா.

(வெளியிலிருந்து "திருவிசாரம்! திருவிசாரம்!" என்ற ஆண் குரல்.)

வள்ளி: என்ன, ராமுவா? ஒரு நிமிஷம், உள்ளே வாயேன். (உள்ளே வரும் செருப்புச் சப்தம்; கதவு திறக்கும் சப்தம்.)

ராமு: ஒரு நிமிஷம்! அந்த மருந்து பேர் சொல்லுகிறேன் னியே; கேட்டுண்டு போகலாம் என்று வந்தேன்.

இங்கே வா! இன்னும் ஒரு ரூபா இருக்குமா? நாளைக்கு அவசியம் தாரேன் ரொம்ப அவசரம்.

பிள்ளை: உனக்குத்தான் தெரியுமே. நாளைக்குக் காலம் பர ஏழு மணிக்குள்ளே டாக்டரெப் பார்க்கணும். வேறே எங்கிட்டே சில்லரை இல்லையே! அந்த மருந்து பேரு அன்டன். இப்பொ கெடைக்காது. நானும் கடைலெ இண்ணைக்குத்தான் விசாரிச்சேன்.

ராமு: ரொம்ப அவசரண்டா. மானம்போயிடும். கடெசியிலே நீதான் கெதியின்னு வந்திருக்கேன்.

குழ: அப்பா இந்தாப்பா, பால் சட்டி.

பிள்ளை: உள்ளே கொண்டுவை...இதோ வர்ரேன்.

(சில்லரை குலுங்கும் சப்தம்.)

ராமு: ரொம்ப தாங்க்ஸ்! நாளைக்கு எப்போப் பாக்கலாம்?

பிள்ளை: அதுக்கென்ன பரவாயில்லை; நான் எப்படியும் சமாளித்துக் கொள்ளுகிறேன்.

(உள்ளிருந்து, "அப்பா! அப்பா!" என்ற குழந்தையின் குரல்.)

வள்ளி: உங்களெத்தானே! கொஞ்சம் இப்படி வந்துட்டுப் போங்க.

பிள்ளை: ராமு போயிட்டானே! நாந்தான் இதோ இருக்கேனே. என்ன வேணும்! இரு; பாலெ அடுப்பிலே வச்சுப்பிட்டு வாரேன்.

வள்ளி: துட்டுக்குடுத்து வாங்கின மண்எண்ணெ இப்பிடியா வீணா எரிஞ்சுபோகணும்! என்ன, அவுகளுக்கு எவ்வளவு குடுத்திய?

(பாலைப் பாத்திரத்தில் ஊற்றும் சப்தம்)

பிள்ளை: ராமுவுக்கா? ஒரு ரூபா குடுத்தேன், அதுக் கென்ன? நாளைக்கு டாக்டரெப் பாக்க முடியுமாண்ணு தானே கவலெப்படறே? அதுக்கு ஒண்ணும் பயப்பட வேண்டாம். இருக்கறதெ வச்சு நான் இல்லா கூட்டிக் கிட்டுப் போறேன்?

(வெளியிலிருந்து ''ஐயா, சார், சார் ஐயா!'' என்ற குரல்.)

பிள்ளை: யாரது?

(ஸ்டோவுக்குப் பம்ப் செய்கிறார்.)

குரல்: லக்ஷ்மி ஸ்டோர் சார்,

பிள்ளை: சுந்தரமா! இந்தா. இந்த நடைகிட்ட இப்படி வா. நாளைக்குச் சாயங்காலம் அஞ்சு மணிக்கு வந்தா, பாக்கி யில்லாமெக் கணக்கெ முடிச்சுடறேன். ஐயரு கிட்டே, இன்னும் சம்பளம் போடலியாம். அதனால் தான் தாமசமாம், நாளைக்கு நிச்சியமாக் கொடுக்கி றேன்னு சொல்லு.

சுந்த: அதென்னமோ சார். ஐயரு வந்திருக்காரு. நீங்களே சொல்லிடுங்க.

பிள்ளை: எங்கே? உள்ளே வரச்சொல்லு. ஏன் அப்பவே சொல்லலே.

குரல்: (வெளியிலிருந்து) நான் இங்கேயே இருக்கேன்; கொஞ்சம் வந்துட்டுப் போயிடுங்க.

(பிள்ளையும் வெளியில் சென்று பேசுகிறார். தூரத்திலிருந்து சப்தம் கேட்கிறது.)

பிள்ளை : நாளைவரைக்கும் பொறுத்துக்குங்க, சார் நாளைக்கு நிச்சயம் சம்பளம் போட்டுடுவா. சாயங் காலம் ஆபீஸிலிருந்து வரும்பொழுது அப்படியே வந்து குடுத்துட்டு வர்ரேன்.

கடைக் : என்ன சார், போங்க; மூணு மாசமா இப்படித் தான் சொல்றேள். எங்களுக்கும் வந்தாத்தானே போட்டுப் பெரட்ட முடியும்?

பிள்ளை : அது எனக்குத் தெரியாதா?

கடைக் : தெரிஞ்சு என்ன பண்ண?

பிள்ளை : உங்களுக்குத் தெரியாதா வீட்டு நிலைமை? கொஞ்சம் சிரமம்.

கடைக் : வீட்டுக்கு வீடு வாசப்படிதான்; அவாளவாளுக் குத் தெரியும் அவாளவாள் கஷ்டம். மூணுமாசமாயும் மூணேவீசம் பாக்கி...கணக்கெ ஏத்திண்டேபோனா யாருக்கு லாபம்?

பிள்ளை : நாளைக்கு ஒர் அஞ்சுரூபா தர்ரேன்; வரவு வச்சுக்கிங்க.மீதியை மூணுநாளைக்குள்ளேயே பைசல் பண்ணிடறேன்.

கடைக் : இன்னிக்கி ஏதாவது சில்லரையா ரெண்டு ஒண்ணு இருந்தாக் குடுங்களேன்.

பிள்ளை : கையிலே தம்பிடி இல்லே, வச்சுக்கிட்டு ஓங்க கிட்டெ இல்லேம்பேனா?

கடைக் : சரி. நாளைக்காவது அஞ்சு ரூபா வரட்டும். இல்லாட்டி அப்பறம் கணக்கே முடிச்சிக்க வேண்டி யிருக்கும்.

பிள்ளை : என்ன சார்! நீங்கள்ளாம் அப்படிச் சொல்ல லாமா? நாளைக்கு வீட்டுக்குச் சாமான் வாங்க வேண்டி

யிருக்கும். அதையும் கொஞ்சம் ஏறக்கொறையப் பாத்துக்கணும். இன்னும் ஒரு மாசம் கொஞ்சம் முடை.

(உள்ளிருந்து, ''அப்பா! அப்பா பால் பொங்குது! ஐயோ, இங்கே வாயேன்'' என்ற குழந்தையின் குரல்.)

பிள்ளை : (வெளியிலிருந்தே) இதோ வந்துட்டேண்டா ...நாளைக்குக் கட்டாயமா வர்றேன். (உள்ளே வந்த பின்) அந்த ஓவல்டின் டின்னை எடு. இந்தா. பாரு; ஒன்னைத் தானே! அதுக்குள்ளியா தூங்கிட்டே? ஓவல்டின் போட்டுத் தாரேன்; சாப்பிடு. மெதுவா எழுந்திருச்சு கொஞ்சம் சாஞ்சுக்கோ. பாப்பா, அந்தச் சக்கரை டின்னை எடம்மா.

(வள்ளியம்மை இருமிக்கொண்டே எழுந்திருக்கிறாள். இருமல் பலமாகி வாந்திக்கு முன்னெச்சரிக்கையான ஓங்காரமாகிறது.)

பிள்ளை : என்ன, வாந்தி வருதா? பேசினை எடுத்து வைக்கிறேன்.

(வள்ளியம்மை இருமிக் கபத்தைப் பேசின் ஜலத்தில் துப்பும் சத்தம்)

வள்ளி : (இளைப்புடன்) அவருக்கு என்ன சொன்னிய?

பிள்ளை : அதெப்பத்தி இப்ப என்னத்துக்குக் கவலை? இந்தா, இதெ ஆத்தித் தாரேன்; கொஞ்சம் சாப்பிட்டுப் பாரு.

(தம்ளரில் ஓவல்டினை ஆற்றும் சப்தம்; வெளியிலிருந்து ''சார், பிள்ளே,...அம்மா! அவரு வந்துட்டாரா?'' என்னும் குரல்.)

வள்ளி : வீட்டுக்காரச் செட்டியாரு வந்திருக்காரு போங்க,

பிள்ளை : செட்டியாரா? வாருங்க உள்ளே. எங்க வீட்டுக்குள்ளே வரதுன்னா என்ன கூச்சம்? வாருங்க.

(வெளியில் நின்று கொண்டே, "வூடுமாச்சு, வாசலுமாச்சு! நீங்க என்ன ஒவ்வொரு மாசமும் இப்படிப் பண்ணா, இது நண்ணா இல்லே; நமக்கு இந்தச் சள்ளே ஆவாது. இந்த மாசமே வீட்டெக் காலி பண்ணிடுங்க" என்று செட்டியார் இரைகிறார். பிள்ளையவர்கள் ஓவல்டின் ஆற்றும் சப்தம் அவர் காதில் படுகிறது,)

பிள்ளை : என்ன செட்டியார்? என்னெ மின்னெப் பின்னெத் தெரியாதது மாதிரி பேசுறீர்! என் கஷ்டம் உங்களுக்குத் தெரியாதா?

செட்டி : எங் கஷ்டத்தையும் மறந்துபூட்டாயே; நாளைக்கு வீட்டு வரிக்கு ஜெண்டா கட்டிப்பிடுவான் —என்ன இப்பத்தான் காப்பி ஆவுதா?

பிள்ளை : இல்லெ. வீட்டிலே கொஞ்சம் ஓவல்டின் போட்டுக் குடுக்கறேன். இப்பத்தான் ஆபீஸிலே இருந்து வந்தேன். கொஞ்சம் ஓவல்டின் சாப்பிடுவீரா.

செட்டி : எங்கே, கொஞ்சம் குடுங்கோ, தாகமாத்தான் இருக்கு. எங்க கடலெ இருக்கறப்ப, வரிக்காரன் வந்து மெரட்டிப்புட்டுப் போயிட்டான். நாளைக்குக் காலம்பர வருவானாம். என்ன பண்ணுறதுண்ணு தெரியலே. அம்மாவுக்கு எப்படி இருக்குது?

பிள்ளை : என்ன? கொஞ்சம் குணம்னுதான் சொல்லணும். இந்தாருங்க; உக்காந்து வெத்திலெ போடுங்க. அதுக்கென்ன பரவாயில்லே—அவ அங்கேதானே படுத்திருக்கா?

குழ : அப்பா, எனக்கு...

பிள்ளை : அம்மாளுக்குக் குடுத்துட்டு ஒனக்குத் தாரேன். ஒன் கெண்டியை எடுத்துக்கிட்டு வா...இந்தா நீ இதெச் சாப்பிடு; நல்லா ஆறிப் போச்சு.

செட்டி : இலும்பலுங்களா? ரொம்ப நாளா இருக்குதே; மார்லே ரொம்ப நோவுதுங்களா, அம்மா—ஊரெவுட்டு ஊருவந்தா தண்ணி புடிக்காது, சீமெ டாக்டருங்களெ நம்பாதே; தண்ணியெத் தண்ணிய ஊத்திக் குடுப்பான்.

பிள்ளை : இல்லெ. இவரு பெரிய டாக்டரு. நாளைக்கு ஊசி குத்தப் போராரு. இதுவரை பத்து ஊசி போட்டாச்சு.

செட்டி : அதுக்குப் பணம்?

பிள்ளை : நமக்குத் தெரிஞ்சவர் ஒருத்தர் கிட்டே கடன் வாங்கிகிட்டு வந்தேன். நாளைக்குச் சம்பளம் போட்டுடுவாங்க; குடுத்துப்புடனும்.

செட்டி : எவ்வளவு?

பிள்ளை : பத்து ரூபா.

செட்டி : அப்போ, ஒரு அஞ்சுரூபா குடேன்.

பிள்ளை : டாக்டருக்கு வேணும், மருந்துக்கு வேணும்.

செட்டி : இதுவரைக்கும் அவன் கிட்டயேதானே ஊசி குத்திக்கிட்டே, சாயங்காலம் குடுத்தாப் போவுது.

பிள்ளை : இல்லெ, செட்டியார். எனக்கு அவரு அவ்வளவு பழக்கமில்லை.

செட்டி : பின்னெ ஒரு மூணு ரூபாயாவது குடு.

பிள்ளை : என்ன செட்டியார், தெரிஞ்சுகிட்டு இப்படிக் கேட்கிறீரே. முடிஞ்சாத் தரமாட்டேன்?

செட்டி: என்னா, எங்கிட்டியே வேலெ உட்றியே! மூணு மாசமா நடையா நடந்துகிட்டு இருக்கேன்; இப்போ அப்போண்ணு தகல்பாஜித்தனம் பண்றே—எங் கஸ்டம் ஒனக்குத் தெரியுதில்லே.

குழ: எனக்குக் காப்பீ...

பிள்ளை: இரு.

செட்டி: காசெ வக்காதெ போனா சாமானெத் தூக்கி வெளியே எறிவேன்—ஹூம்! எங்கிட்டியே வேலெ உட்றியே!

வள்ளி: மூணுரூபாய் எடுத்துக்குங்க; செட்டியாரே, இந்த மாசமே நாங்க பணத்தெக் குடுத்துப்புட்டுக் காலி பண்ணிப் புடுறோம். ராத்திரிலே வந்து மானெத்தெ வாங்காதியும்.

(தட்டி எண்ணுவதால் ரூபாய் குலுங்கும் சப்தம்; பிறகு சில வினாடிகள் மௌனம். வெளியில் தூரத்தில் செட்டியின் குரல் "என்ன பயமுறுத்திரியெ, காலி பண்ணானா ஆளு வராதோ?")

பிள்ளை: இந்தா, காப்பி காப்பின்னு கத்தினியெ; பாலெக் குடிச்சுப்புட்டுப் போய்ப்படு.

வள்ளி: நம்ம கஷ்டத்துக்கு அவமேலே ஏன் விளுகிறக? பசலைக்கு என்ன தெரியப்போவுது! இங்க வாடி கண்ணா— படைக்கப்பவே அதுந்தலேலே அப்படி எழுதிப்புட்டான்,

(மௌனம்; வெளியில் "கட்டு வெத்லெ பைசா! கட்டு வெத்லே பைசா!" என்ற குரல் கேட்டு மங்குகிறது.)

சில வினாடிகள் கழித்து வெளியில் பிச்சைக்காரன் குரல்:

''அம்மா தாயே! சந்திப்பிச்சை! ரெண்டுநாள் பட்டினி அம்மா.''

கர்ணகடூரமான குரலில் பிச்சைக்காரன் பாடுகிறான்:

''பொய்திகழும் உலகநடை
என்சொல்கேன் என் சொல்கேன்
பொழுது போக்கே தென்னிலோ
பொய்யுடல் நிமித்தப் புசிப்புக் கலைந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்.''

(மறுபடியும் அதே அடிகளைப் பிச்சைக்காரன் பாடுகிறான்.)

பிள்ளை: யாரது? வேலையில்லே; போடா, தடிச் சோம்பேறி!

பிச்சைக்காரன்: (வெளியிலிருந்து) இல்லெண்ணாப் போரேன்! என்னமோ ரொம்ப எரிஞ்சு விளுறியே!

(அதே சமயத்தில் வெளியிலிருந்து பதற்றத்துடன் ''திருவிசாரம்! திருவிசாரம்!'' என்ற குரல்.)

பிள்ளை: (உள்ளிருந்தபடியே) யாரது? கோவிந்தனா? என்ன இந்த ராத்திரியிலே.

கோவிந்தன்: (உள்ளே வந்து) வீட்டிலே அபார்ஷன் ஆரம்பிச்சுட்டது. டாக்டரெப் பார்க்கணும். பத்து ரூபா குடுத்தேனே; அதெக் கொஞ்சம் தந்தாத் தேவலை. நெலமெ அப்படியாயிப் போச்சு.

சார்! நிச்சயமா நாளைக்கு!

பிள்ளை: அஞ்சு ரூபாதான் இருக்கு. மீதிக்கு மருந்து வாங்கினேன்... அதெ வேணும்னா—

வள்ளி: வேணாம்னாவா? மொதல்லே எடுத்துக் குடுங்க.

பிள்ளை: டாக்டரெப் பாத்தியா!

கோவி: போற வழி?

பிள்ளை: எப்படி இருக்குது? நாளைக்கு வந்து பாக்கறேன்

(சில வினாடிகள் நிசப்தம்.)

பிள்ளை: விதி விளையாடுது!

வள்ளி: அண்ணெக்கி எழுதினவன் அழிச்சி எழுதப் போகிறானா?

(இதே சமயத்தில் வெளியில் ''ரோஜாப்பூ ஆரம் அரையணா'' என்ற குரல்.)

குழ: அப்பா; பூவூ!

வள்ளி: ஏட்டி நீ இன்னங் தூங்கலே?

பிள்ளை: கண்ணே, அது பொணத்துலே போட்ட பூவா இருக்குண்டா—ஒனக்கு நான் நாளைக்கு நல்ல கதம்பம் வாங்கிட்டு வாரேன்.

வள்ளி: கதம்பந்தான் ஒண்ணு கொறெ!

(இரும ஆரம்பிக்கிறாள். இருமல் பலமாகிக் கொண்டே வருகிறது. மூச்சுத் திணற ''அம்மாடி'' என்று மறுபடியும் இருமல்.)

பிள்ளை: ஏ வள்ளீ! வள்ளீ! என்னமாடா வருது? முதுகெத் தடவட்டா? கொஞ்சப் தலகாணிலே சாஞ்சு உக்காந்துக்கோ—டாக்டரை ஓடிக் கூட்டியாரேன்,

பாப்பா! அம்மா பக்கத்துலே உக்காந்துக்கம்மா; இதோ வாரேன்.

(விரைவாக நடக்கும் செருப்புச் சப்தம் தூரத்தில் மறைகிறது.)

# பக்த குசேலா

## (கலியுக மாடல்)

வறுமை முதலாளித்துவத்தின் விலக்கமுடியாத நியதி; வியாதியும் கூட. அதனுடன் ஒரு சித்த ஸ்வாதீன மற்ற நிலைக்கு ஒப்பான பிரமையும் கூடிக் கொண்டால்...!

'கலியுக மாடல் குசேலர்' சனாதன தர்மம் என்ற பழைய நங்கைக்கும், இரும்பு நாகரிகம் என்ற புது அரக்கனுக்கும் ஏற்பட்ட பலவந்த சம்பந்தத்தில் ஜனித்த குழந்தை.

மனித சமூகத்தின் அபார, அற்புதக் கற்பனையான தெய்வம் என்ற பிரமை தனக்கு ஆக்கவும், வளர்க்கவும், அழிக்கவும் சக்தி இருக்கிறது என்று வேண்டுமானால் பெருமை யடித்துக் கொள்ளலாம். ஆனால், இந்தக் 'குசேல வியாதி'யைப் போக்கும் சஞ்சீவி மனிதன் வசம் தான் உண்டு.

### என் நாடகத்தில் வருகிறவர்கள்

குசேலர்: கலியுக மாடல்: தென்கலை வைஷ்ணவர்; பட்டண வாசி. பவழக்காரத் தெருவில் கிருஷ்ணன் கோயில் பக்கத்தில் ஒரு சந்தில், இவரை விட்டுப் பிரியாத குடும்பம், கிருஷ்ண விக்ரகம், (இது ஒரு பண்

ருட்டி பொம்மை. அபிஷேகம் செய்துசெய்து மூக்கு கன்னத்தின் மட்டத்திற்கு வந்துவிட்டது) பூஜைப் பெட்டி, தம்புரு' சப்ளாக் கட்டை, முதலிய சம்பிரமங்க ளுடன் ஒரு வீட்டில் ஒட்டுக் குடித்தனம் செய்கிறார். மெலிந்த தேகி; இடுப்பைச் சுற்றிலும் முதுகு வரை யிலும் வண்ணான் சொறி. இவருடைய அன்புக்குக் கிருஷ்ண பக்தியும், சிரங்கு உபாதையும் போட்டியிடு கின்றன.

சுசீலை : ரொம்பப் பொறுமைசாலி. ஆனால், பழைய பதிப்பைப் போல தீர்க்க தரிசனம் வாய்ந்தவள் அல்லள். தன் இருபத்தேழு குழந்தைகளுக்கும், முதலில் தன் உறவினர் பெயர்களை இட ஆரம்பித்து, உறவினர் லிஸ்டு திடீரென்று முடிந்து விட்டதால், அப்போதைக்கப்போது முதல் முதலாகக் கவனம்வரும் பெயரை உபயோகித்து அழைக்கிறாள்.

குழந்தைகள் : குசேலர் குழந்தைகள் பெயர்களை யெல்லாம் இலகுவில் லிஸ்டு எடுக்க முடியாது. ஒரு ஸெட் 'பிளேட் டானிக்-சர்மா ஆலை'களில் வேலை பார்க்கிறது. மற்றொரு ஸெட் புது மோஸ்தர் 'கபே'க் கள் என்ற 'பிராமணாள் ஹோட்டல்'களில் வேலை பார்க்கிறது. மீதி குசேலருடன் பட்டினி இருக்கின் றன.

ஆலையில் வேலைபார்க்கும் ஸெட்டில் இருவர் "கிட்டுவும், பார்த்தசாரதியும்." பார்த்தசாரதி சென்னைத் தொழிலாளர் சங்கம், தொழிலாளர் பாது காப்புச் சங்கம், சென்னைத் தொழிலாளர் அபேத வாதச் சங்கம் எல்லாவற்றிலும் அங்கத்தினன். கிட்டு வும் அண்ணனைப் போல். ஆனால், அப்பா மேல் கொஞ்சம் கோபம் ஜாஸ்தி.

கோதை : குசேலரின் மகள்: கலியாண வயதைத் தாண்டிக் கொண்டிருப்பவள். குசேலர் குடும்பப் பொறுப்புத் தங்கள் மேல் விழுந்து விடுமோ என்ற பயத்தில், வரன்களும், பெண் தேடுவோரும் அந்தத் தெரு வழியாகக் கூடப் பெண் பார்க்கப் போவதில்லை.

ஓட்டுப் பொறுக்கி : குசேலரின் நாலு வயதான மற்றொரு பெண் குழந்தை.

வீட்டுக்காரச் செட்டியார் : வீட்டு உத்திரம், ஜன்னல், குசேலக்குடும்பம் எல்லாம் ஒன்றாகக் கருதும் "அபேத வாதி." இவருக்கு கிருஷ்ணபக்தி தலைவலி போக்கும் மருந்து என்பது அனுபவ நம்பிக்கை.

இருமல் யந்திரம் : குசேலர் வசிக்கும் வீட்டில் முன் கட்டில் குடியிருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தரின் தாயார். தொழில் காசநோயால் இருமுதல், கிருஷ்ண பக்தி.

ஸ்ரீமதி சுப்பராமய்யர் : மேற்படி சர்க்கார் உத்தியோகஸ் தரின் மனைவி. தன் குழந்தைக்குச் சாப்பாடு ஊட்டு வது எப்படி என்ற விஷயத்தில் "அதாரிட்டி" (நிபுணி),

ஸ்ரீகிருஷ்ணசாமி சர்மா : குசேலருக்குக் கிருஷ்ணபக்திக்கு ஆதிகாரணமான, தற்போது மாம்பலத்தில் வசித்து வரும்—பணக்கார ஜந்து. இவருக்கு மூக்குக் கொஞ்சம் தட்டை. இவர்தான் 'பிளெட் டானிக்-சர்மா நூற்கும் ஆலை (லிமிடெட்)'களின் டைரக்டர் போர்டுத் தலைவர். ஆலைகளில் சரிபாதி பங்கு இவருடையது. கருத்தடையில் அபார நம்பிக்கையுடையவர்.

அந்தக் காலத்தில்—அதாவது கிட்டிப்புள் விளையாடி, மாந்தோப்பில் மாங்காய் திருடும் பருவத்தில்-குசேலருடன் ஒன்றாக ஒரு சமஸ்கிருத பாடசாலையில் படித்தார்,

அப்பொழுது ஒரு நாள் வாத்தியார் இந்த நஞ்சன் குஞ்சான்களிடம் தெய்வத்தின் தன்மையைப்பற்றி ஒரு கேள்வி போட்டார். அப்பொழுது கிட்டு, தன் பாட்டனார் தன்னை விடியற் காலையில் எழுப்பிவைத்து, குட்டிக் குட்டி மண்டையில் ஏற்றி வைத்திருந்த ''எல்லாம் நானே'' என்ற பகவத்கீதை ஸ்லோகத்தை அப்படியே கக்கிவிட்டான். வாத்தியாருக்குத் தெரியும் அவன் குட்டு: ஆனாலும் அதைப் பிரமாதப் படுத்தவில்லை. ஆனால் அது ஒரு பிரகிருதியின் மனத்தில் புகுந்து குடியேறி, இந்தக் கஷ்ட காலத்தில் அருமையாய்ச் சம்பாதித்த 'காப்பிஸ்டு' வேலைக்கு உலை வைத்துவிட்டது.

ராமமூர்த்தி: சர்மாவின் செல்லப் பிள்ளை. அவனுடைய ஸினிமாக் காமிரா கதையைக் கொஞ்சம் நீடிக்கிறது.

குஞ்சம்: குசேலரின் கிருஷ்ண பக்திக்குக் கொஞ்சம் உதவி செய்யும் சர்மாவின் நாலு வயதுப் பேத்தி.

டைரக்டர் நண்பர் விசுவநாதய்யர்: பிளேட்டானிக்- சர்மா ஆலை டைரக்டர் போர்டு அங்கத்தினர். சர்மா சொல்லுவதையெல்லாம் புரியாமல் கேட்டுக் கொண்டிருக்கும் பொறுமைசாலி.

ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் கிராமபோன்: குசேலரின் பக்திப் பரவசத்தின் போது சமயா சமயங்களில் பின் பாட்டுப் பாடும்

காரியதரிசி சுந்தரம், மாதவன், சமையல்காரன் முதலிய பாத்திரங்களுக்கும் இதில் இடமுண்டு.

### முன்வாசல்

நிர்மானுஷ்யமான பாழ்வெளியில் ஓர் உயர்ந்த புராதனமான கோயில் சிகரக் கலசங்களில் சில தகர்ந்து விட்டன. மதில்களில் சில பாகங்கள் இடிந்து கிடக்கின்றன.

முன் வாசலில் நின்று பார்த்தால், மூலவர் பக்கத்தில் உள்ள சிறு தீபஒளி தவிர வேறு ஒன்றும் தெரிய வில்லை. அவ்வளவு இருட்டு.

கோயில் கோபுரத்திலிருந்து ஒரு பெரிய நரி வேளவால் நீண்ட தோல் சிறகை விரித்துப் பறந்து செல்லுகிறது.

எங்கோ ஓர் ஆந்தையின் அலறல்.

கோயில் உட்பிரகாரத்தில் தடதட வென்ற பேரிகை குழப்பம், மேள வாத்தியம், இங்கிலீஷ் பாண்டு, சங்க நாதம்—எல்லாம் ஒன்றோடொன்று குழம்பி ஒலிக்கின்றன.

தீப்பந்தங்களையும், காஸ் லைட்டுகளையும் தூக்கிய மெலிந்த தேகிகளும், வாத்தியக்காரர்களும் கோயிலின் உட்பிரகாரத்தில் ஒரு திசையிலிருந்து வெளிப்படு கின்றனர்.

நாதஸ்வரக்காரன் கேதாரகௌளை ராகத்தை எடுத்து ஆலாபனை செய்கிறான். அதே சமயத்தில் பாண்டு வாத்தியம் "ரூல் பிரிட்டானியா" என்ற மெட்டை வெளுத்து வாங்குகிறது.

அதற்கப்புறம் பருத்த சரீரிகள் பலர் மெல்லிய பட் டாடை உடுத்துப் பின் தொடருகின்றனர்.

அவர்களுக்குப்பின் ஒரு பிரமாண்டமான வெண்கலச் சிலையை வெகு சிரமத்துடன் தள்ளாடித் தூக்கிக் கொண்டு பல மெலிந்த தேகிகள் தொடர்கின்றனர். மேலேயிருக்கும் பாரம் அழுத்த, கால்களோ இடுப்போ ஒடிந்து விடாதபடி காப்பாற்றிக் கொள்வதிலும், மேலேயிருக்கும் சுமையிலு மாக அவர்கள் கவனம் பிரிந்து ஊசலாடுகிறது.

இந்த வெளிச்சமும், ஒலியும் மூலவர் திசையிலிருந்து வரும் ஒளியை மறைத்து விடுகின்றன...

ஊர்வலம் சன்னதிக்கு நேர் எதிரில் நிற்கிறது...
மறுபடி பேரிகை, டங்கா ஒலி...

(காட்சி கரைந்து குசேலர் கிருகத்தில் கலந்து தெளிவடைகிறது.)

**சுருள்-1**

காலை 10 மணி. குசேலர் வீட்டில் கிழக்குச் சுவருக் கருகில் ஒரு கள்ளிப் பெட்டியின் மேல் கிருஷ்ண விக்ரகம். அதற்கு முன் இருந்து குசேலர் பூஜை செய்து கொண்டிருக் கிறார். இவர் முன்பு ஒரு சிறு தட்டில் கொஞ்சம் பாசிப் பயறு, எறும்புக்கும் பசிதீராத அளவில் ஒரு சிறு வெல்லத் துண்டு, வீட்டுக்காரச் செட்டியார் தரும் மானயமான கற்பூரம் இருக்கிறது. குசேலர் பக்திப் பரவசத்தில் கண்கள் உள்ளே சொருக, அரைக்கண் போட்ட வண்ணம் பிரபந்தப் பாடல்களைப் பாடிக் கொண்டு இருக்கிறார். சற்று தூரத்தில் இருமல் யந்திரம் தீபாராதனை சமயத்தை எதிர் நோக்கி உட்கார்ந்திருக்கிறாள்.

**குசேலர்**

'உய்ய உலகுபடைத் துண்ட மணிவயிறா!
ஊழிதோறூழிபல ஆலினிலையதன்மேல்
பையவியோகுதுயில் கொண்ட பரம்பரனே!
பங்கய நீள் நயனத் தஞ்சன மேனியனே!
செய்யவள் நின்னகலம் சேமமெனக் கருதி
செல்வு பொலிமகரக் காதுதிகழ்ந்திலக
ஐய! எனக்கொருகாலாடுக செங்கீரை
ஆயர்கள் போர் ஏறே! ஆடுக ஆடுகவே'
'பாலொடு நெய்தயிர் ஒண் சாந்தொடுசண்பகமும்
பங்கயம் நல்லகருப்பூரமும் நாறிவர

கோல நறும்பவளச் செந்துவர்வா யினிடைக்
கோமளவெள்ளி முளை போல்சில பல்லிலக
நீலநிறத்தழகார் ஐம்படையின் நடுவே
நின்கனிவாயமுதம் இற்று முறிந்துவிழ
ஏ ழுமறைப்பொருளே! ஆடுக செங்கீரை
ஏழுலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே.'

(உட்புறம்—அதாவது சமையல் கட்டிலிருந்து—சுசீலையின் குரல்—''ஆடாதே, ஆடாதேன்னு எத்தனை தரம் சொல்றது! பொட்டெக் கழுதே!' அதைத் தொடர்ந்து பொத்துப் பொத்தென்று அடி விழும் சப்தம் கேட்கிறது.)

சிறு குழந்தை ஒன்று அடிபட்டுக்கொண்டே, ''அம்மா பசிக்கிறதே! பசிக்கிறதே!'' என்று கத்திக் கொண்டே பூஜைக் கூடத்திற்கு ஓடி வருகிறது.

''தொலைஞ்சு போ'' என்ற சுசீலையின் குரல். அதே சமயம் மற்றொரு சிறு கைக்குழந்தையின் வீரிடல்.

சுசீலை: ''நீயும் ஆரம்பிச்சுட்டாயா?''

தெருப் பக்கத்திலிருந்து தேசீய பஜனையின் சங்கீதம் எப்படியோ சுற்றிச் சுற்றி வந்து காதில் விழுகிறது.

''தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
ஜகத்தினை யழித்திடுவோம்!''

குசேலர் விக்ரகத்தின் முன்பு விழுந்து நமஸ்கரித்து விட்டு, கற்பூரத்தைக் கொளுத்தி தீபாராதனை செய்கிறார். பின்னர் பாசிப்பயறு நிவேதனத்தை—தண்ணீரில் ஊற வைத்ததுதான்—கிழவியிடம் கொஞ்சம் விநியோகிக்க வருகிறார். அப்பொழுது அடிபட்டு வெளியே வந்த குழந்தை தட்டிப் பிடிக்க எல்லாம் சிந்திவிடுகிறது. குசேலர் பரிதாபத்துடன் குழந்தையைப் பார்த்துச் சிரிக்

கிறார். குழந்தை பயந்து மூலையில் சென்று ஒண்டி நிற்கிறது.

## வெட்டு—2

குசேலர் வெளியில் உஞ்சவிருத்திக்குச் செல்லத் தலையில் ஒரு பழைய பட்டு ஒன்றை—சுசீலை கலியாணத்தின் போது வாங்கியது— எடுத்துக் கட்டிக்கொண்டு, கையில் தம்புரு, சப்ளாக்கட்டை, தோளில் நாடாவில் கட்டித் தொங்கும் நன்றாக விளக்கிய செப்புச் செம்பு சகிதம் வெளியே புறப்படுகிறார். உள்ளிருந்து சுசீலை, ''சித்தே சுருக்கா வாருங்கோ; கொழந்தைகள் துடிக்கிறது'' என்று குரலெடுக் கிறாள். இதெல்லாம் காதில் கேட்காத பாவனையில் பாடிக் கொண்டே வெளியில் புறப்பட்டு விடுகிறார் குசேலர். அவருடன் கிழவியும் வெளி முற்றத்திற்குப் போகிறாள்.

அவர் சென்ற பின்பு...

மூலையில் ஒண்டிக் கொண்டிருந்த குழந்தை தரையில் சிதறிக் கிடந்த பாசிப்பயறுகளைச் சிறு விரலால் எடுத்தெடுத்து விழுங்குகிறது...

## சுருள் 2

சுப்பராமய்யர் வீட்டு முற்றம். அய்யர் ஆபீஸுக்குப் போய்விட்டார். மனைவி இடையில் குழந்தையையும், கையில் வெள்ளிக் கிண்ணத்தில் நெய்விட்ட பருப்புஞ் சாதமும் எடுத்துக்கொண்டு, வேடிக்கை காட்டி, அதற்கு உணவு கொடுக்க வருகிறாள். இவள் ஒரு உருண்டையை எடுத்து அதன் வாயண்டையில் சென்றதுதான் தாமதம், குழந்தை தலையை அப்படியும் இப்படியும் ஆட்டி, முகமெல்லாம் சாதமாக்கிக் கொள்ளுகிறது. 'காக்க ஒஷ்!' என்கிறாள். 'குருவி பார்' என்கிறாள். குழந்தை ஒரே பிடிவாதமாகத் தலையை ஆட்டுகிறது.

ஸ்ரீமதி சுப்பராமய்யருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றுகிறது. வெளியே தெருப் புழுதியில் அளைந்து விளையாடிக் கொண்டிருக்கும் குசேலக் குழந்தைகளைக் கூப்பிடுகிறாள். எல்லாம் ஏகமயமாக ரகளையிட்டுக் கொண்டு கைப்புழுதியைத் துடையில் தட்டிக்கொண்டு ஓடி வருகின்றன.

ஸ்ரீமதி சுப்பராமய்யர், ''அந்தப் பாப்பாக்குக் குடுத்துடறேன் பார்! நீ சமத்தோல்லியோ! ஆக் காட்டு!'' என்று சொல்லிக்கொண்டு பருப்பிட்டுப் பிசைந்த சாத உருண்டையை ஒரு குசேலக் குழந்தையின் வாயண்டையில் கொடுக்கும் பாவனையில் கொண்டு நீட்டுகிறாள். மற்றக் குசேலக் குழந்தைகளும் ''அம்மாமி நேக்கு! நேக்கு!'' என்று வாயைப் பிளக்கின்றன. இதைக்கண்ட இடுப்புக் குழந்தை கொடுக்கக் கூடாதென்ற பாவனையிலோ என்னவோ, தலையைப் பிய்த்துக் கொண்டு கத்துகிறது. உடனே அவள், குசேலக் குழந்தை பக்கம் கொண்டு போன கையை மாற்றித் தன் குழந்தை வாயில் சோற்றைத் திணித்து விடுகிறாள். அவள் குழந்தை சோற்றை விழுங்கியபின் மறுபடியும் அடம் செய்கிறது. குசேலர் குழந்தைகளிடம் கொடுப்பதுபோல் கொண்டு போய் ஏமாற்றுகிறாள். ஏமாந்த குழந்தை தவிர மற்றயாவும் இதை ஒரு புது விளையாட்டாகக் கருதிச் சிரித்துக் கூக்குரலிட்டு ரஸிக்கின்றன சாதம் தங்கள் வாய்ப்பக்கம் வரும்பொழுது ''அம்மாமி நேக்கு, அம்மாமி நேக்கு!'' என்ற குதிப்பும் கூக்குரலும். மறுபடியும் ஏமாறிய குழந்தை தவிர மற்றவரின் ரஸிப்பு. இப்படியாக, சுப்பராமய்யர் குழந்தையின் வயிற்றில் ஒரு கிண்ணம் சோறு திணிக்கப்படுகிறது.

கடைசி உருண்டைதான் பாக்கி. மறுபடியும் ஏமாற்று வேலையை ஸ்ரீமதி சுப்பராமய்யர் கடைசி முறையாகப் பிரயோகிக்க முயன்று குசேலக் குழந்தை ஒன்றிடம் கையை

நீட்டுகிறாள். அது முன்பே ஒருதரம் ஏமாறிய குழந்தை. தாவிக் குதித்துக்கையை பிடித்துக் கொண்டு சோற்று உருண்டையை வாயினால் பிடுங்க முயற்சிக்கிறது. அப்பொழுது அதன் பற்கள் ஸ்ரீமதி அய்யரின் விரல்களில் நறுக்கென்று பட்டுவிடுகின்றன.

ஸ்ரீமதி சுப்பராமய்யர், அப்படியே ''அடியே அம்மா! சனியனே!'' என்று கூவிக்கொண்டு குழந்தையின் மண்டையில் குட்டி விட்டு, ''கோந்தைகளா நாளைக்கு வரப்போ இந்தச் சுந்துவைக் கூட்டிண்டு வராதேங்கோ!,' என்று சொல்லிவிட்டு, அடுக்களைப் பக்கம் சென்று விடுகிறாள்.

அப்பொழுது...

பாசிப்பயறு சிந்திக் கிடந்ததையெல்லாம் பொறுக்கித் தின்றுவிட்ட ஓட்டுப் பொறுக்கி, மெதுவாக அப்பக்கத்தில் வந்து கீழே சிதறிய பருக்கைகளை விரல்களால் தேய்த்துத் தேய்த்து நக்குகிறது.

அச்சமயம் கோதை வெளியிலிருந்து உள்ளே வருகிறாள்.

கோதை: எப்பொழுதும் ஓட்டுப்பொறுக்கி ஓட்டுப் பொறுக்கி வீட்டையே தொடச்சாச்சே? என்ன ஜென்மமடி!

ஒரு அறை கொடுத்துக் குழந்தையைத் தூக்கி இடுப்பில் எடுத்து வைத்துக் கொண்டு உள்ளே செல்லுகிறாள்.

இடுப்பிலிருக்கும் அக்குழந்தை முதுகைத் துடைத்துக் கொண்டே, சிதறிய சோற்றுப் பருக்கைகள் கிடக்கும் திசையையே வெறித்துப் பார்க்கிறது...

(அதே சமயத்தில்)

## சுருள் 3

கச்சாலீசுவரர் அக்ரகாரத்தில் ஒரு தெரு.

தெருவில் ஒரு சொறி பிடித்த நாய் ஓடி வருகிறது. கோடியில், எங்கோ குசேலரின் பாட்டுக் குரல்...

அக்ரகாரத்தின் அந்தக் கோடியில் அவரது குரல் கேட்கிறது. கண்ணன் புகழ் பாடிக் கொண்டு வருகிறார்.

(காட்சி நெருங்குகிறது)

சப்ளாக்கட்டை தம்புரு சகிதமாகக் குசேலர் வெளிப்படுகிறார்...வெறிச்சென்று கண்ணைக் குத்தும் வெய்யில். நெற்றியிலும் உடலிலும் உள்ள துவாதச நாமத்தின் ஸ்ரீசூர்ணம் ரத்தப் பிரவாகம் போல வியர்த்து வழிகிறது. அண்ணாந்த வண்ணம் உரத்த குரலில் பிரபந்தத்தின் பகுதிகள் சிலவற்றைப் பாடிக்கொண்டு வருகிறார்.

உஞ்சவிருத்தியில் அனுபவ ஞானம் பெற்ற குசேலர் ஒவ்வொரு வீட்டு முன்பும் நின்று நின்று பாடிக் கொண்டு காத்துக் காத்து, கிடைத்தால் அமுதுபடி பெற்றுக்கொண்டு நகர்கிறார்.

குசேலர்: (அண்ணாந்து, உச்சி சூரிய கிரணங்கள் கண்களில் உறுத்த மெய்மறந்து)

"ஊனில் வாழுயிரே! நல்லைபோ உன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூதன் என்னம்மான்
தானும் யானும் எல்லாம் தன்னுள்ளேகலந்
தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தே
எனதாவியுள் கலந்தபெரு நல்லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன், இனிமீள்வ
தென்பதுண்டோ?

எனதாவியும் நீ பொழிலேழு முண்ட எந்தாய்!
எனதாவியார்? யானார்? தந்த நீ கொண்டாக்
கினையே!
முன் நல் யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே!
பன்னலார் பயிலும் பரனே! பவித்திரனே!
கன்னலே! அமுதே! கார்முகிலே! என்கண்ணா!
நின்னலால் இல்லேன் காண் என்னை நீ
குறிக்கொள்ளே.''

அச்சமயம் அவர் தலைக்குமேல் செத்த எலியைக் கவ்விய ஒரு கழுகு வட்டமிடுகிறது.

குசேலருக்குத் தெய்வ வெறி மீறுகிறது. கண்களில் உறுத்தும் சூரிய கிரணங்களின் ஊடு ஏதோ தெரிவது போல் நீள் சிறகை விரிக்கிறது. கருடாழ்வான் மேல் சூரிய வட்டத்தின் நடுவே மகாவிஷ்ணுவின் தோற்றம் அவருக்குப் புலப்படுகிறது.

கழுகு மெதுவாக இறங்கி, ஒரு மேல் மாடத்தின் கீழ்ப் புறமாக மறைந்து விடுகிறது. குசேலர் கண்களுக்குத் தெய்வம் மெதுவாகப் பூமியில் இறங்கி மனித வேடம் புனைந்து தன்னைப் பரிசோதிக்க வருவதாக(?) ஒரு பிரமை...

மெதுவாகக் கண்களைத் திறக்கிறார். கண்களில் வெறி; முகத்தில் வியர்வை ஆறு; கை கால்களில் சிறிது நடுக்கம்.

அச்சமயம் ஒரு பார்ப்பனப் பெண் ஒரு சிறு கிண்ணத்தில் அரிசி கொணர்ந்து செம்பில் போட அது நிறைந்து விடுகிறது.

அத்துடன் அக்ரகாரத் தெரு முடிவடைந்து விட்டதால் தொழில் முடிந்து விட்டதென்று வேகமாகப் பவழக்காரத் தெருவை நோக்கி நடக்கிறார்,

வழியில்...

கிருஷ்ணன் கோயில் பக்கம் ஒரு குஷ்டரோகி உட்கார்ந்து கொண்டு, ''அய்யா சாமி, தரும தொரை களே!'' என்று நெஞ்சுலர ஓலமிடுகிறான்.

தெய்வ சோதனை என்று நினைக்கிறார் குசேலர். செப்புச் செம்பில் இருக்கும் அரிசி யாவும் அவனது துருப் பிடித்த தகரப் போகணியிலும், கந்தல் துணியிலும் போய் விழுகிறது.

கிருஷ்ண நாமத்தை பஜித்துக்கொண்டு கோயில் முன்பு போய்ச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துவிட்டு, வீட்டுக்குச் செல்கிறார்.

## சுருள் 4

வீட்டில்...

வெளி முற்றத்தில் நின்ற ஒரு குசேலக் குழந்தை— ''அப்பா வந்துட்டா!'' என்று கோஷித்துக்கொண்டு உள்ளே ஓடுகிறது.

சுப்பராமய்யர் முற்றத்தில் குழாயடியில் தண்ணீரைத் திறந்துவிட்டு விளையாடிக் கொண்டிருந்த இரட்டைக் குழந்தைகள், அந்தச் செய்தியை எடுத்து இன்னும் உரத்த குரலில் கூவிக்கொண்டு அடுக்களை நோக்கி ஓடுகின்றன,

பூஜைக் கூடத்தில், மூன்று வயதான 'ஒட்டுப் பொறுக்கிக்' குழந்தை தலையைத் தூக்கி அப்பாவைப் பார்த்து விட்டு மூலையில் சென்று நின்றுகொள்ளுகிறது.

குசேலர் 'அடியே!' என்று மனைவியைக் கூப்பிட்ட வண்ணம் தமது வேஷத்தைக் கலைத்துவிட்டு, ''கிருஷ்ண கிருஷ்ண!'' என்று கொண்டே, முற்றத்தில் இருக்கும் சிறு

ஜலதாரையின் பக்கத்தில் இருந்த பழைய கொப்பரையில் இருந்த ஜலத்தில் குளிக்கிறார்.

தகப்பனாரின் முதுகுப்புறமே தன் திசையில் இருக்கிறதென்று அறிந்த ஓட்டுப்பொறுக்கி, தன் மூலையை விட்டு வெளிவந்து செம்பில் மெதுவாகக் கையை விட்டுப் பார்த்து விட்டு, தகப்பனாரை வெறிக்கப் பார்க்கிறது. பிறகு தலையைக் குப்புறச் சாய்த்து செம்புக்குள் பார்த்துக் கையை விட்டுத் துழாவுகிறது. அதன் பதற்றத்தில் செம்பு கவிழ்ந்து கடபுட வென்ற சப்தத்துடன் ஜலதாரையை நோக்கி உருள்கிறது.

அந்தச் சப்தத்தில் குழந்தை அப்படியே ஸ்தம்பித்து வெறித்த விழிகளுடன் உட்கார்ந்துவிடுகிறது.

அந்தச் சப்தத்தைக் கேட்ட சுசீலை அடுப்பங் கரையிலிருந்து வெளியே வருகிறாள்.

செம்பையும் குழந்தையையும் பார்த்துவிட்டு, "அடி கோதை! நெனச்சாப்பிலேதான் ஆச்சு. நல்லகாலம் நீ பேட்டு வந்தே. கஞ்சியை எடுத்துக் கொழந்தைகளுக்காவது வாரு" என்று அங்கிருந்தபடியே உத்தரவிடுகிறாள்.

'கஞ்சி' என்ற வசிய மந்திரம் ஒலித்ததுதான் தாமதம். எங்கிருந்தோ ஒரு பட்டாளம் குழந்தைகள் குதி போட்டுக் கொண்டு ஓடி வருகின்றன.

எல்லாக் குழந்தைகளும் வட்டச்சப்பணம் போட்டுக் கொண்டும், துடையைத் தட்டிக்கொண்டும் அடுக்களையை நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருக்கின்றன.

உள்ளே கஞ்சி ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் ஊற்றப்படும் சப்தம் கேட்கிறது.

ஓட்டுப் பொறுக்கிக் குழந்தையின் வாயிலிருந்து ஜலம் சொட்டுகிறது.

ஆறு வயது குசேலக் குழந்தை: அம்மா, நானும் பள்ளிக் கூடம் போகப் போறேனே! அடுத்தாத்து அம்பிகூடப் போவேன்!

சுசீலை: அடி அம்மா! என்ன சமத்துடீ!—போகலாண்டா! மோட்டாருங்கீட்டாருமா இருக்கே! சித்த நாளா கட்டும்!

மேற்படி பையன்: பள்ளிக்கூடத்திலே சாதம் குடுக்கரா ளாம் அம்மா! இவ்வளவு (கையை விரித்துக் கொண்டு) குடுக்கரா—நான் பார்த்தேன்—நான் அந்த அம்பி யோடெ போவேன்.

எல்லாக் குழந்தைகளும் ஏகமேனியாக: "நானும் நானும்!" என்று கூக்குரலிடுகின்றன.

ஓட்டுப் பொறுக்கிக் குழந்தை: கடைசியாக, "அம்மா நானு..." என்று நீட்டுகிறது.

கஞ்சி ஆற்றும் சப்தம்.

குசேலர் மறுபடியும் துவாதச நாமங்களுடன், பூஜை செய்யப் பஞ்சபாத்திரத்துடன், கிருஷ்ண விக்ரகத்தின் முன் சென்று நிற்கிறார்; உட்காருகிறார்.

கோதை கஞ்சிப் பாத்திரத்துடன் வெளியே வரு கிறாள்.

குழந்தைகள் மண்டிபோட்டுக் கொண்டும், ஒன்றை யொன்று தள்ளி எழுந்திருக்க முயற்சித்துக் கொண்டும் ரகளையடிக்கின்றன.

கோதை ஒரு தம்ளரில் கஞ்சியை ஊற்றி ஓட்டுப் பொறுக்கிக் குழந்தைக்குக் கொடுக்கக் குனிகிறாள்.

அச்சமயம்...

வெளியிலிருந்து யாரோ தடதடவென்று உள்ளே நுழையும் சப்தம்...

கோதை தலையை நிமிர்த்திப் பார்க்கிறாள்.

பூஜை முற்றத்திலிருந்து குசேலரின் பாட்டுக் குரல் வருகிறது.

அதே சமயத்தில் குசேலரின் மூத்த பிள்ளைகளில்—அதாவது ஆலைகளில் வேலை பார்க்கும் செட்டில்—ஒருவனான கிட்டு, மண்டை, கை, கால் இவற்றில் கட்டு களுடன். பிரவேசிக்கிறான். சோர்ந்து தள்ளாடி, தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொள்கிறான்.

சுசீலை: இதென்னடாது?—வேஷம்!—கோரணி!

கிட்டு பேச முடியாமல் தவிக்கிறான். கிட்டச் சென்று ஒருவன் தலையைத் தடவிப் பார்க்கிறான். கை தீண்டின வலியால் முகத்தைச் சுளித்துக் கொண்டு, அவன் விரலைத் தள்ள முயற்சிக்கிறான் கிட்டு.

கோதை: (நிமிர்ந்து நின்றவளாய்க் கையில் கஞ்சி தம்ளருடன்...) ஏண்டா கிட்டு! என்னதான் சொல்லேன்! என்ன நடந்ததுடா, எப்பப் பார்த்தாலும் ஊர்க்காரனோடே மல்லுக்கு நின்னா?

கிட்டு: மல்லுக்கும் நிக்கலே, ஒண்ணுமில்லே. மில்லுலே வேலை நிறுத்தம் சேஞ்சா!—அப்புறம் போலீஸுக்கார வந்தா—ஏக கலாட்டாவாகக்கெடந்தது—போலீஸார் எல்லாரையும் தடியாலே வெரட்டி வெரட்டி அடிச்சா! நாங்க ஓடி வந்துட்டம். அண்ணாவைப் போலீஸார் புடிச்சுண்டு போயிட்டா,

சுசிலை வயிற்றிலடித்துக்கொண்டு அழ ஆரம்பிக்கிறாள்... குழந்தைகளும் கத்துகின்றன.

கோதை: நான் அப்பவே சொன்னேனே ஆலையுமாச்சு கிலையுமாச்சுன்னு—குலமா, ஜாதி ஆசாரமா...

கிட்டு: போதும்! உபதேசம் போதும்மா! முளைச்சு மூணலெ குத்தரத்துக்குள்ளே...அப்பா! இட்பத்தான் உமக்கு பூஜை! பூஜை! பூஜைன்னுதான் வீடு வாழரதே!...

சுசீலை: சீ! என்ன வார்த்தையடா! தெய்வத்தை நோகப் பண்ணாதே! எல்லாம் கலி...

கிட்டு: கலியுமாச்சு! கத்தரிக் காயுமாச்சு! கோதே, கையிலே என்ன வச்சுண்டிருக்கே! சாப்பிட்டு எவ்வளவு நேரமாச்சுத் தெரியுமா? அந்த அம்பிப் பயலே பார்க்கலாமின்னு ஹோட்டலுக்குப் போனா போலீஸ்காரப்பயல்கள்...

கோதை அவன் கையில் ஆறிக் குளிர்ந்து போன கஞ்சியைக் கொடுக்கிறாள்.

கிட்டு: இதென்ன குருணைக் கஞ்சியா— ஆறிப் போச்சே!...

மெதுவாக ஒட்டுப்பொறுக்கிக் குழந்தை பக்கத்தில் வந்து அவனையே பார்த்துக்கொண்டு நிற்கிறது. கிட்டு ''என்னடீயம்மா பெரிய மனுஷியாட்டம் கையைப் பின்னாலே கட்டிண்டு? இந்தா'' என்று அதன் கையில் கொடுக்கிறான்.

அதை அப்படியே வாங்கி வாயை எடுக்காமல் 'மடக் மடக்' என்ற சத்தத்தினிடையே, அதனுள் புர் புர் என்று

மூச்சுவிட்டுக்கொண்டு தம்ளரைக் கீழே வையாமல் குடிக்கிறது.

இவை கண்டு பொறுக்காத மற்ற குழந்தைகள் அதன் மீது சாடித் தம்ளரைப் பிடுங்க முயற்சிக்கின்றன. இதற்கும் மற்றவைகளுக்கும் போராட்டம். கோதை வந்து ஒவ்வொன்றின் முதுகிலும் பொத்துப் பொத்தொன்று சாத்துகிறாள். எல்லாம் சேர்ந்துகொண்டு பிரலாபிக்கின்ற நகரத்தின் இரைச்சல்—

சுசீலை : (பெருமூச்சுடன்) அவரைப் பூஜெலெயிருந்து எழுப்புடியம்மா!

பூஜை முற்றத்திலிருந்து மணிச் சப்தமும் கற்பூர வாசனையும் வருகிறது.

எல்லோரும் அத்திசை திரும்புகின்றனர். குசேலர் கைகளில் சிறு தட்டில் உள்ள கற்பூர தீபத்தைக் கிருஷ்ண பொம்மையின் முன்பு உயர்த்துகிறார். அசைந்தாடும் தீபவொளியில் பொம்மைத் தெய்வம் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கிறது.

**அதே சமயத்தில்**

மாம்பலத்தில் ஸ்ரீ கிருஷ்ணசாமி சர்மா பங்களாவில் ஆபீஸ் அறை.

ஸ்ரீ சர்மா காரியதரிசி தயாரித்திருக்கும் வேலை நிறுத்த அறிக்கையின் இரண்டு மூன்று நகல்களில் கையெழுத்திடுகிறார்.

சர்மா : சரிதானா! பயல்களுக்கு இருந்தாற் போலிருந்து என்ன கொழுப்பு!

காரியதரிசி : இந்தக் கலாட்டாவுக்குக் காரணமே தெரியலே! அன்னிக்கி முதல்நாள் வரை ரொம்பக்

கொயட்டாத்' தான் இருந்தான்கள். போலீசார் 'மெஷின்மான்' பார்த்தசாரதி அய்யங்காரைப் பிடிச்சு வச்சிருக்கிறார்கள். அவன் எப்பவுமே கொஞ்சம் துடி. அவனிடமிருந்து வெளியானது த்தான் உண்டு. அன்னிக்குக்கூட ரொம்பப் பதவிசாத்தான் வேலை செய்து கொண்டிருந்தான்கள். திடீரென்று...

சர்மா: ஆமாம் வோய்! இந்தப் பயல்களுக்கு எப்பொ வெறி பிடிக்கும்னு யார் கண்டா? சவத்தெத்தள்ளு. தூதுகோஷ்டி, அது இதுன்னு இங்கே வந்து தொல்லெ குடுக்காமேப் பாத்துக்கும்...அவ்வளவுதான்...இன்னிக்குச் சாயங்காலமா போர்டு மீட்டிங்கு...இந்தப் பயல்கள் என்ன வேணும் என்று கேட்கிறான்களாம்...?

காரியதரிசி: அதுதான் ஒத்தருக்கும் தெரியலே...ஒரு வேளை போட்டிக் கம்பெனி ஏதும் கிண்டி விட்டிருக்கலாமோன்னு...

(பக்கத்திலிருந்த டெலிபோன் மணி அடிக்கிறது. காரியதரிசி அதைக் கையில் எடுத்து) ஹல்லோ! ஹல்லோ! யாரது...பார்க்கணுமா ...அப்படியா! இங்கேதான் இருக்கார்கள்— இதோ... (சர்மாவிடம் டெலிபோனைக் கொடுத்து) ஸ்ரீமதி சாங்கர் பிரசங்கமாம்! நீங்கள் தலைமை வகிக்கணும் என்று சீப் மெடிக்கல் ஆபீஸர் கேட்கிறார்.

சர்மா: அப்படியா (டெலிபோனை எடுத்து கொண்டு) என்ன சப்ஜெக்ட்?—தொழிலாளரும் கருத்தடையும். ரோட்டரி கிளப்பிலா? எப்பொழுது?...சரி—(டெலிபோனை வைத்து விட்டு) லைப்ரரியிலே போய்க் கொஞ்சம் நோட்ஸ் தயார் பண்ணு. புள்ளி விபரமும் வேணும். நாளைக்குச் சாயங்காலம் எங்கேஜ்மென்ட் என்று ஞாபகத்தில் வைத்துக் கொள்...

(மறுபடியும் டெலிபோன் மணி...எடுத்துக் கொண்டு)

ஹலோ—யாரது? போலீஸ் கமிஷனர் ஆபீஸா?

நான் தான் சாமா—? என்னைப் பார்க்க வேண்டுமென் கிறானா? எதற்கு?-வெறும் உருட்டலாக இருக்கும்—ரெண்டு உதை கொடுங்கள்—அவனைப் பார்க்கமுடியாது—எதற்குப் பார்க்க வேண்டும்? ராஸ்கல் என்னைப் பயமுறுத்தறானா?—திட்டமாக முடியாது—(டெலிபோனைக் கீழே வைக்கிறார்.) தடி ராஸ்கல்கள்! வசமாக அகப்பட்டுக் கொண்டு என்னிடமே குண்டு வைக்கிறான்...(எழுந்து கைகளைப் பின் புறத்தில் கட்டிய வண்ணம் உலாவுகிறார். ஜன்னலண்டை சென்று நின்று தூரத்தில் ஆலைச் சிமிணிகளில் இருந்து வரும் புகை மண்டலங்களைக் கவனித்த வண்ணம் யோசனையில் ஆழ்கிறார்.)

## சுருள் 5

மாலை ஆறு மணி சமயம். குசேலர் வீட்டு முன் வாசல். தெருக்கோடியில் நிற்கும் மின்சார விளக்கு தன் திறமையை எல்லாம் வைத்துக்கொண்டு குசேலர் வீட்டு வாசலில் வெளிச்சம் போடப் பார்க்கிறது. எங்கோ ஒருவன் 'மலாய் வாலா' என்று கத்திக்கொண்டு போகிறான். கிருஷ்ணன் கோயில் வாத்திய கோஷம் பவழக்காரத் தெருவில் தலை தெறிக்க ஓடும் மோட்டார் ஹார்ன், கதம்பக் காரன், வெற்றிலைக்காரன் குரல்கள் தம்மில் மாறுபட்டுக் குழம்புகின்றன. வானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக, திடீர் திடீரென்று மன உலகத்தில் சுடர்விடும் உண்மைகள் போல வெளிவரும் நட்சத்திரங்கள்.

வெளியில் உள்ள ஓட்டுத் திண்ணையில் குசேலர், கிட்டு, வீட்டுக்காரச் செட்டியார்; வீட்டின் தலைவாசற் படியில் 'இருமல் யந்திரம்; அவள் பக்கத்தில் 'பிரசவ

யந்திரம்' (குசேலர் மனைவி), அவள் மடியில் ஒட்டுப் பொறுக்கி, பக்கத்தில் கோதை—யாவரும் உட்கார்ந்திருக் கின்றனர்.

ஒட்டுப்பொறுக்கி தன் தாயாரின் முகத்தைத் தன் விசாலமான கண்களால் பார்த்து, "நானும் பள்ளிக்கூடம் போவேன்" என்று ஜபித்துக் கொண்டிருக்கிறது.

வெளித் தெருவில் அரை டஜன் குசேலக் குழந்தைகள் புழுதியைக் கிளப்பி ரகளையடித்துக் கொண்டிருக் கின்றன.

கிட்டு: அதெல்லாம் இல்லை. நான் சொல்றதைக் கேளுங் கள். நீங்கள் அங்கே போனாத்தான் காரியம் நடக்கும். சர்மாதான் உங்களோடே படிச்சவராச்சே! ஆபத்துக்கு ஒதவமாட்டாரா? அண்ணா மேலே தப்பே இல்லை.

வீட்டுக்காரச் செட்டியார்: ஆமாஞ் சாமி! சின்ன அய்யரு சொல்றதுதான் சரின்னு என் புத்திக்குப் படுது; கிருஷ் ணன் ஒங்க கையிலே சாமி—நீங்க நெனச்சா அன்னிக்குப் பாத்திங்கள்ளே, தலை நோவுதுன்னு வந்தா, ஒங்க தொளசித் தண்ணி சாமி, ஆசுபத்திரி மருந்தெத் தோக்க அடிச்சிப்பிடிச்சு. நீங்க மஹான்— தாமரை எலெலெ தண்ணி மாதிரி இருக்கிஹ—உலகத் தையும் நீங்க கொஞ்சம் கடக்கண்ணாலே பார்த்துக் கணுமில்லா.

குசேலர் தலையைக் குனிந்த வண்ணம் கையில் இருந்த துளசிமணி மாலையை உருட்டிய வண்ணம் "கிருஷ்ண! கிருஷ்ண" என்று சொல்லிக்கொண்டு உள்ளே ஏறிட்டுப் பார்க்கிறார்.

செட்டியார்: சுவாமி!

கிட்டு: அப்பா! மத்தவாள்ளாம் எப்படியானான்னு தெரியலே அவஸ்யம் நீங்க போயிட்டுத்தான் வரணும்...

சுசீலை: கொழுந்தே எப்படியானான்னு தெரியலே. காலேலெ சித்த சுருக்கப் பூஜையை முடிச்சுட்டு, வெயிலோடெ சிரமத்தைப் பாராமே போயிட்டு வந்துட்டாப் போரது...அவா ரொம்ப நல்ல மனுஷ்யான்னு சொல்லியிருக்காளே—பின்னே என்ன?

குசேலர்: வினையைத் தடுக்கரவன் உள்ளே இருக்கான்... கிருஷ்ணனும் ரொம்ப நல்ல மனுஷ்யன்தான். பாத்து எத்தனெ வருஷங்களாச்சு!...நான் போய் என்ன நடக்கப் போகிறது!

கிட்டு: உங்கள் புள்ளென்னு நெனக்காமெப் போனாலும் தெய்வத்துக்குப் பொதுவா. ஒரு சகோதர ஜந்து கஷ்டப் படரதே. நம்மாலே முடிஞ்ச உதவியெ செய்வோம் என்றாவது நினையுங்கள். அண்ணாவெ அரஸ்ட் பண்ணினது தெரியும், மத்தவாள் கதி தெரியலெ, அவாளும் ஒருவேளை...

சுப்பராமய்யர் தாயார்: (இருமிக்கொண்டு) ஏண்டா அப்பா குசேலா! அம்பி சொல்றபடிதான் செஞ்சு பாரேன். எல்லாம் ஒண்ணும் வராது. கிருஷ்ணன் இருக்கான்.

கிட்டு: (தன்னைக் குறிப்பிட்டதாகப் பாவித்து) நான்தான் இருக்கிறேனே. மண்டையிலும் காலிலும் கட்டுப் போட்டுண்டு.

செட்டியார்: நான் சொல்றாப்லே கொஞ்சம் கேளுங்க சாமி! அந்தக் காலத்தில் பரமாத்மாவே ஒரு யானைக்கு ஓடி வரலியா? சுவாமி, உங்க பக்திக்குப் பங்கம் வராது.

குசேலர்: செட்டியாரே! தெய்வத்தின் இஷ்டத்தெ மாற்ற முடியுமா?—நான் அவனைத்தான் நம்பறேன்—அவனைப் போல ஆக முடியுமா-உங்கள் ஆசையும் அதன் வழியில் செல்கிறது. இந்தக் கோலத்திலே போகணும்னா, லோக சம்பிரதாயத்தைக் கூட நிறைவேற்ற எனக்குச் சக்தி ஏது!

சுசீலை: உங்களைத்தானே! அப்பப் போட்டுண்ட சட்டையெல்லாம் அப்படியே இருக்கே! என்னமோ நெனச்சுக் கட்டி வச்சேன்... நல்லகாலத்துக் காச்சு!...

செட்டியார்: முதலாளி அய்யிரெ பாக்கணும்னா ரெண்டு எலுமிச்சம் பழமாவது வேணாமா? (எழுந்து அவசர அவசரமாகச் சந்தின் மூலையிலிருந்த வெற்றிலை பாக்குக் கடைக்கு ஓடுகிறார்......)

குசேலர்: கிருஷ்ண! கிருஷ்ண! என்ன பாசம்!...... (வானத்தை அண்ணாந்து பார்க்கிறார்; பிறகு செட்டியார் சென்ற திசையையே நோக்குகிறார்...)

ஓட்டுப்பொறுக்கி: (மெதுவான குரலில்) அம்மா நானும் பள்ளிக்கூடம் போறனே?

குசேலர்: (சடக்கென்று எழுந்துகொண்டு) நேரமாகி விட்டதாடா?—இத்தனை காலம் மறந்திருந்தேனே பாபி!—இதோ வந்து விட்டேனடா...(என்று கூவிக் கொண்டே எல்லோரையும் தள்ளிக்கொண்டு உள்ளே ஓடுகிறார்.)

சுசீலை: (பெருமூச்சு விட்டுக்கொண்டு) வெளக்கே ஏத்தினியாடிம்மா, கோதே!

கோதை: மத்தியானமே சொன்னேனே, அம்மாமி குடுத்த எண்ணெய் ஆயிடுத்துன்னு......

இருமல் யந்திரம்: அப்பவே சொல்லப்படாதா? எம் பின்னோடவா! எண்ணெய் வேண்டாம்...வௌக்கே எடுத்துண்டு போ! (அவள் இருமிக்கொண்டு உள்ளே செல்லுகிறாள். கோதை உடன் தொடர்கிறாள்.)

கிட்டு பல்லை நெறநெற வென்று கடித்துக்கொண்டு உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு, வெளியே பார்க்கிறான்.

எதிரிலே எலுமிச்சம் பழங்களுடன் வந்த செட்டியார் பிரவேசம்

"பெரிய சாமி எங்கே?"

கிட்டு : பெரியசாமியா! அதுக்கும் பெரிய சாமியெத் தேடிப் போயிருக்கு!

செட்டியார் : (கோபத்துடன்) என்னன்னாலும் அய்யிரே, வயசுப் புள்ளே ஏடாகோடமா பேசாதே. பூஜைக்கி கலுப்பூரங்கூடக் கொணாந்திருக்கேன். இந்த ஓலகத்துலே கண்கண்ட தெய்வம் அவரு...

கிட்டு : செட்டியாரே, நீங்கள்ளாம் ஒரு ரகம். ஒரு ஜாதி—உங்களுக்கு. இங்கே பாரும்...(சந்தில் இறங்கிக் கடைப்பக்கம் நடக்கிறான்.)

சுசீலை : கிட்டு! கிட்டு! எங்கடா போரே?

செட்டியார் : அதுபசலெ—கஸ்டத்லே தெசெ தெரியாதே தத்தளிக்குது...

கிட்டு : தொண்டையைக் கிழிக்காதெ. பூஜெ கரடி எல்லாம் முடிஞ்சி தொலஞ்சதும் வரேன்.

செட்டியாரும், ஒட்டுப்பொறுக்கியை இடுப்பில் வைத்துக் கொண்டே சுசீலையும் உள்ளே செல்லுகின்றனர்.

## சுருள் 6

பூஜை இடத்தின் பக்கத்தில் ஒரு அரிக்கன் லைட்டு. கிருஷ்ண விக்ரகத்தின் முன் ஈர உடையில் குசேலர். அவர் நெற்றியில் அப்பொழுதுதான் இடப்பட்ட நாமத்தின் ஸ்ரீ சூர்ணம் இரத்தக் கரைபோல் பிரகாசிக்கிறது. பின்புறம் சுவரருகில் கோதையும் சுப்பராமய்யர் தாயாரும் கைகூப்பிய வண்ணம் நிற்கின்றனர்.

செட்டியாரும் சுசீலையும் பிரவேசம். ஒட்டுப் பொறுக்கி தாயின் இடுப்பைவிட்டு இறங்கி, பழைய மூலை யில் போய் ஒண்டி நிற்கிறது. சுவர்க்கோணம் அதனைக் கொள்ளாததால் அதன் தோள்பட்டைகள் முன்புறம் மடங்கி, கைகள் வயிற்றுன்மேல் தொங்குகின்றன.

குசேலர் : (பக்தி வெறி மீறித் தன்னை மறந்த லயத்தில் நாயகி பாவத்தில் பாடுகிறார்.)

விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!
தெண்ணீர்பாய் வேங்கடத்(து) என்திருமாலும் போந் தானே
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர் வேனை
பெண்ணீர்மை யீடழிக்கும் இது தமக்(கு) ஓர் பெருமையே?
மின்னாகத் தெழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை தங்கியசீர் மார்பற்கு
என்னாகத் திளங்கொங்கை விரும்பித் தாம் நாள் தோறும்
பொன்னாகம் புல்குதற்(கு) என் புரிவுடைமை செப்பு மினே.

(எங்கோ கிராமபோன் பிளேட் சுழல ஆரம்பிக்கும் கிர்ரென்ற சப்தம் கேட்கிறது.)

சங்கமா கடல்கடைந்தான் தண் முகில்காள் வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ் அடி வீழ்ச்சி விண்ணப்பம்

(இடையே கிராமபோன் பிளேட், 'வாங்க வாங்கடி லவண்டிகளா!'' என்ற பாட்டைப் பிரலாபிக்க ஆரம்பிக்கிறது.)

கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்(து) ஒருநாள்
தங்குமேல் என்னாவி தங்குமென் (று) உரையீரே

கிராமபோன் ரிக்கார்டில் கீரல் விழுந்திருக்கிறது போலிருக்கிறது! வாங்கடி, வாங்கடி என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறது......

## சுருள் 7

மாம்பலத்தில் ஸ்ரீ கிருஷ்ணசாமி சர்மா பங்களாவின் வெளிக் கேட்டு. அதன் பக்கத்தில் ஒரு சிறிய சுழல் கேட்டு.

இரண்டின் பக்கத்திலும் இரண்டு போர்டுகள் தொங்குகின்றன.

ஒன்று : வேலை காலி கிடையாது.

மற்றொன்று : நமது மில் தொழிலாளிகள், சொந்தக்காரர்கள் தவிர, இதரர்கள் யாவரும் உதவி கோரினால் என்னை நேரில் காணலாம்.

காலை 7 மணி முதல் 8 மணி வரை, மாலை 6 மணி முதல் 7 மணி வரை. ஸ்ரீ கிருஷ்ண சாமி சர்மா. பிளேட்டானிக் சர்மா மில் டைரக்டர் போர்ட் பிரஸிடெண்ட்.

(காட்சிகரைந்து கலக்கிறது)

ஸ்ரீகிருஷ்ணசாமி சர்மா. தமது மாம்பல பங்களாவில் ஆபீஸ் அறையில் உட்கார்ந்திருக்கிறார். பக்கத்தில் ஆலையின் போர்டு டைரக்டர்களுள் ஒருவரான அவர் நண்பர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்.

சர்மா மேஜைமீது இரண்டு கைகளை வைத்து, விரல்களில் 'பேப்பர் கட்டரைச்' சுழற்றியபடி பக்கத்திலிருக்கும் நண்பரிடம் ரொம்பத் தீவிரமாகப் பேசிக்கொண்டு இருக்கிறார். டைரக்டர் விசுவனாதய்யர் தமது தலை மயிரைக் கோதிக்கொண்டே தலையை அசைத்துக் கொண்டு இருக்கிறார். இருவரும் அப்பொழுது தான் காபி சாப்பிட்டு விட்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அதற்குச் சற்று நேரத்திற்கு முன்பு தான் குளித்ததால் அவருக்குத் தலைமயிர் காயவில்லை.

ஒரு மலையாளி சோக்ரா வெள்ளித் தாம்பாளத்திலிருந்த துளிர் வெற்றிலையைக் கிழித்து நாஸூக்காக மடித்துக் கொண்டிருக்கிறான்.

காரியதரிசி, பக்கத்துமேஜையில் ஹாவ்லக் எல்லிஸ், சாங்கர், பிராய்டு இவர்கள் கருத்தடை, தொழிலாளர் பிரச்னை பற்றி எழுதியுள்ள புத்தகங்களை வரிசையாக அடுக்கி, அதில் குறிப்பிட்ட பகுதிகளை வாசிக்க கடிதத் துண்டுகளைப் பக்கங்களுக்கிடையில் குறிப்பு வைத்துக் கொண்டிருக்கிறார்.

உயரே ஒரு பெரிய மின்சார விசிறி மெதுவாகச் சுழலுகிறது.

கிருஷ்ணசாமி சர்மா : அதெல்லாம் ஒன்றுமில்லை! நமக்கு என்ன வேணுமென்று நமக்கே தெரியாது— உள்ள கஷ்டம் என்னன்னா இத்தனை காலமா ஒரே 'ரட்'லே (Rut-பழைய தேய்ந்த பாதை)போய்ப் போய்

நம்ம திறமையே நாசமாய்ப் போச்சு. நமக்கு 'அட்ஜஸ்டிங் கபாஸிடி' போயிட்டது. சனாதன தர்மம் இன்னா அழுகவே அழுகாத கத்திரிக்காய் இன்னு நினைக்க ஆரம்பிச்சதிலேதான் இந்த வினை பிடிச்சது!—ஒன்றுமில்லே—அந்தக் காலத்திலேதான் 'அட்ஜஸ்ட்மென்ட்' இல்லாமல், புடிச்சு வச்ச பொம்மை மாதிரியா இருந்து வந்தான்கள், இப்பொ எதெடுத்தாலும் பயம்...சின்ன மாறுதல் என்றால் போதும்... அதெச் செய்யறத்துக்குப் பதிலா 'கல்ச்சர்'டா இங்கறது, மதம் இங்கறது, ஏன் பேசமாட்டான் அபேதவாதத்தைப் பற்றி —ஒரு சின்ன விஷயம்...

டைரக்டர் நண்பர் : என்ன சொல்லுகிறீர்கள்? காலம்பர நிலைமை எப்படி என்று கேட்டீர்களா? ஒன்றும் தெரியாமே வேதாந்தம் பேசினா எப்ப விடியும்?

சர்மா , உம்மைப்போல நாலு பயந்தாங்குள்ளி டைரக்டர் இருந்தா ஏன் 'ஸ்டிரைக்' பண்ணமாட்டான்—பயல்கள் எல்லாம்—அரஸ்ட் ஆனவன்கள் தவிர எல்லாரும்—ரோல்காலுக்கு வந்தானாம். நிலைமையும் காமா (calm) இருந்ததாம், ஓர்க் ஆரம்பிக்கட்டுமான்னான்—நான் தைரியமா உத்தரவு போட்டேன்—நேத்து ஏற்பட்ட லாஸுக்கு ஓவர்டயம் போடச் சொன்னேன்! விஷயம் அதிலே இன்னதின்னும் புரியலே. இது தொழிலாளி வேலைமானமில்லை. வேறே என்னமோ நடந்திருக்கிறது.

காரியதரிசி · இன்னிக்குச் சாயங்காலம் பிரசங்கத்துக்கு நோட்ஸ், ரெபரன்ஸ்கள் எல்லாம் அதோ அங்கே வச்சிருக்கிறேன்...நேத்து சாங்கர் பிரசங்கத்துக்கு எதிர்ப் பிரசாரம் நடந்திருக்கு— பிரசங்கத்திலே முக்கியமான பகுதிகளை மார்க் பண்ணியிருக்கிறேன்,

சர்மா: (கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு புருவத்தை உயர்த்தி பத்திரிகையை எட்டிப் பார்க்கிறார்) நேத்திக்கு சாயங்காலமே நோட் பண்ணேன். சனாதன தர்மம் போய்விடும்—சாவித்திரி தமயந்திவகையராவில் ஜனித்த ஸ்திரீ ரத்தினங்கள்!— எதற்கெடுத்தாலும் 'போய்விடும், போய்விடும்!' அது அவ்வளவு பலவீனமானதாக இருந்தால் ஏன் குத்துயிரும் குலையுயிருமாகக் கிடக்க வேண்டும்? அவ்வளவு நோஞ்சான் என்றால் போகட்டுமே—புதுசா ஒண்ணு நம்ம மோட்டார் மாதிரி 'வார்ப்பு இரும்பிலே' செய்கிறது... (உரத்துச் சிரிக்கிறார்) நல்லதுக்கோ கெட்டதுக்கோ ஒரு புது தினுசான பழக்கம் வந்து கொண்டிருக்கிறது. வந்து விட்டது. நீ வேண்டாம் என்றால் போய்விடுமா? நம்ம தேசத்துக்கு 'இன்டஸ்ட்ரியலிஸேஷன்' வேண்டாம் என்று யாரையும் சொல்லச் சொல்லு பார்க்கலாம்! சாவித்திரியும் தமயந்தியும் நாம் பண்ண கற்பனைதானே? புதுசா ஒண்ணெப் பண்ணி வைக்கிறது. நான் சொல்றது என்னன்னா 'அட்ஜஸ்ட்மென்ட்' வேணும்! கருத்தடையிலே என்ன பிரமாதமான பாபமோ தெரியலே...மூச்சு விடரப்போ மூவாயிரம் கிருமி சாகிறது. முட்டாள் தனத்தாலே மூணு லட்சம் 'அபார்ஷன்' வரது... அந்தக் காலத்திலே சமணன்கள் உயிர்க்கொலை கூடாதுன்னு உறியிலே உட்கார்ந்து கொண்டிருந்தான்கள்...இப்பொ அந்த ரகம் இருந்தா கீழ்ப்பாக்கத்திலேகூட இடம் போதாது...நானென்ன மதம் வேண்டாம், கட்டுப்பாடு வேண்டாம் என்கிறேனா? மதம் அவசியம்: முக்கியம். இந்தச் சமூகத்திற்கு அது ரொம்ப அவசியம். ஞாபகம் வரது. மிந்தி என் கிளாஸ்மேட் ஒருத்தன், நல்ல ஆஸ்திகன்; வாலிபன். காப்பிஸ்ட் வேலை பார்த்துக் கொண்டு இருந்தான். நார்மல் மனுஷ்யன்னா அவன்தான். அவன்னா நமக்கு

அத்யந்த பிரீதி. மாடல் ஹிந்துன்னா அவன்தான். அவனைப்போல் இருக்கவேண்டும். ஸ்டிரிக்னைன் (பாஷாணம்) இருக்கு, ஸ்மால்டோஸ் கொடுத்தா வியாதியைக் குணப்படுத்தறது. டோஸ் ஜாஸ்தியாச் சுன்னா...(நிமிர்ந்து பார்க்கிறார்.)

(அறையின் ஒரு வாசல் வழியாகக் குசேலர் பிரவேசிக்கிறார். மேலே ஒரு துண்டு, இடையில் காவியேறிய பஞ்சகச்சமிட்டுக் கட்டிய வேஷ்டி, நெற்றியில் பட்டை நாமம். பிரவேசித்துத் தட்டுக் கெட்டாட் போல் இருவரையும் மாறிமாறிப் பார்த்து விழிக்கிறார். கைவிரல்களில் இரண்டு எலுமிச்சம் பழங்கள் திண்டாடுகின்றன. முகமெல்லாம் வேர்க்கிறது.)

சர்மா: (திடீரென்று அடையாளம் கண்டுகொண்டு)—என்னடா குசேலனா! இதென்ன வேஷம்? வா இப்படி! —சுந்தரம், அந்த நாற்காலியே எடுத்துப் போடு—(காரியதரிசி சுந்தரம் நாற்காலியை எடுத்துப் போடுகிறார். சர்மா உச்ச ஸ்தாயியில் பேசுகிறார்.) என்ன விசேஷம்? ரொம்ப நாளாச்சே! இட்போ என்ன ரிட்டயர் ஆயிட்டயா? உட்காரு—என்ன பேந்தப் பேந்த முழிக்கறே? டேய் மாதவன் ஒரு கூல்டிரிங்க் கொண்டாரச் சொல்லு—(குசேலர் எலுமிச்சம் பழங்களை நீட்டுகிறார்) — சுந்தரம், அதை 'லோஷன்'லே போட்டு இங்கே வாங்கு—உட்காரு—என்ன விசேஷம்?

குசேலர்: வெறுமனே தங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று தான் வந்தேன்.

சர்மா: என்ன 'தாங்கள்' 'நீங்கள்' வக்கணையெல்லாம்! ஏன் உடம்பை இப்படி வச்சிருக்கே? இடுப்பிலேயெல்லாம் சொறி! ஆஸ்பத்திரிக்குப் போகப்படாது?...

குசேலர்: நான் அப்பவே கிருஷ்ணன் பணியிலே இறங்கி விட்டேன்—வேலை ஒத்துக்கொள்ளலே...

சர்மா: அட கர்மமே! உன்னை நார்மல் மனுஷ்யன் என்றல்லவா இப்போதான் சொல்லிக் கொண்டிருந்தேன்! அப்புறம்...?

குசேலர்: உஞ்சவிருத்தியில் இறங்கினேன்!

சர்மா: அப்படி என்ன விரக்தி ஏற்பட்டது! அப்போ ஓன் குழந்தை மனைவியெல்லாம்...ஏதும்?...

குசேலர்: எல்லோரும் சௌக்கியமாகத்தான் இருக்கிறார்கள்!

சர்மா: பொறுப்பு எத்தனை?

குசேலர்: இருபத்தியேழு குழந்தைகள்!

சர்மா: (திடுக்கிட்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டு) சுந்தரம்! 'ஸ்மெல்லிங் சால்டே' எடு! அட தெய்வமே! —அப்புறம்?

குசேலர்: (விசேஷ அர்த்தம் கொடாமல் யதார்த்தமாக) நாலு மாசமாக குளிக்கலெ...

சர்மா: நீர் உஞ்சவிருத்தி எடுக்கின்றீராக்கும்—வயசான பிள்ளைகள் இருக்குமே...அவர்களால்...

குசேலர்: கொஞ்சப் பேர் உங்க ஆலையில்தான் இருக்கிறார்கள்—சிலர் ஹோட்டலில் வேலை பாக்கிறார்கள்—அவா வரும்படி அவா செலவுக்கே போறல்லே.

சர்மா: நம்ம மில்லிலா? யாரது?...

குசேலர்: அதற்காகத்தான் நான் வந்தேன்...நேத்து என்னமோ வேலை நிறுத்தம் நடந்துதாமே! மூத்த

பையனை போலீஸார் புடிச்சுண்டாளாம்— வீட்டிலே உங்களிடம் சொன்னாத் தேவலைன்னா—அதான் தங்களை...

சர்மா: அப்படியா சமாசாரம்-நேத்து மெஷின்மான் என்னைப் பார்க்கணும்னான்! பார்த்தசாரதிதானே உங்க புள்ளை பேர்......அட பாவமே! சுந்தரம், நீ நேரா இந்த லெட்டரைக் கொண்டுபோய் கமிஷனரிடம் கொடு... அவனைக் கார்லே என் பொறுப்பிலே கொண்டா சீக்கிரம்......

சுருக்கமாக ஒரு கடிதம் வரைந்து காரியதரிசி வசம் கொடுத்தனுப்புகிறார். பிறகு டெலி போனை எடுத்து போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் அனுப்புகிறார்...)

டைரக்டர் நண்பர் : (குசேலரைப் பார்த்து) எங்கே தாமசம்?

குசேலர் : டவுன் பவழக்காரத் தெருவிலே, கிருஷ்ணன் கோயிலுக்கு எதிராக நான்கைந்து வீடுகளுக்கப்புறம் வலது பக்கத்தில் ஒரு சந்து போகிறதல்லவா—

டைரக்டர் நண்பர் : எனக்குத் தெரியாது; அதிலேயா?

சர்மா : அங்கே குடியிருந்தா வாடகை யார் குடுக்குறா?

குசேலர் : என்னமோ கிருஷ்ண பரமாத்மா அருள் தான்! செட்டியார்......

சர்மா : (குத்தலாக)தங்களுக்கு இந்த அதீதமான நிலை எப்பொழுது ஏற்பட்டது?

குசேலர் : (விகற்பம் நினையாமல்) உங்கள் புண்ணியந் தான், எனக்குக் கண் திறந்தது...

சர்மா ; என்ன? நானா?...

குசேலர் ; அப்பொழுது நாம் சமஸ்கிருத பாடசாலையில் படிக்கும்பொழுது, நீங்கள் வாத்தியார் கேள்விக்குப் பதில் சொல்லவில்லையா?... அது என் மனத்தில் வேரூன்றிப் பழுத்து...

சர்மா : பழுக்கறதெல்லாம் இருக்கட்டும்—நான் என்ன சொன்னேன்? எனக்கு ஞாபகமில்லையே......

குசேலர் : 'எல்லாம் நானே' என்று தொடங்கும் பகவத் கீதை சுலோகம் சொல்லவில்லையா, அன்னிக்கு வாத்தியார் கேள்வி கேட்டபொழுது? தாங்கள்தான் என் தெய்வம் கண்ணன்; எனக்குக் கண் திறந்துவிட்ட ஞானாசிரியன்...

(குருபக்திப் பரவசமாக சர்மாவைப் பார்க்கிறார்.)

சர்மா : அந்தக் காலத்திலே வாத்தியார் அடிக்குப் பயந்து உளறினதை யெல்லாம் உருப்படியா நினைக்கலாமா? அதெல்லாம் இருக்கட்டும். தெய்வ பக்தி வேண்டாம் என்று சொல்லலே...நான் என்ன கோயிலுக்குப் போகவில்லையா? அதெல்லாம் ஒரு எல்லையிலே வைத்துக் கொள்ளணும். இந்த 'அட்ஜஸ்ட்மென்ட்' இல்லாட்டா கீழ்ப்பாக்கந்தான்—

குசேலர் : எனக்குத் தாங்கள் சொல்றது புரியலையே.

டைரக்டர் நண்பர் : எதற்காகப் புரியணும்?

சர்மா : (உரத்த குரலில்) குசேலரே! ஏதோ அந்தக் காலத்தில் தெரியாமல் தப்புப் பண்ணிவிட்டேன். மன்னித்துக் கொள்ளும்.

(எதற்காக எதை மன்னிக்க வேண்டும் என்பதை யறியாமல் குசேலர் விழிக்கிறார்.)

நான் அன்று செய்த கெடுதலை நிவர்த்தித்து ஈடு பண்ண ஒரு வழி பார்க்கிறேன்...உமக்கு எத்தனை குழந்தைகள் என்று சொன்னீர்? இருபத்தியேழா? சரி. இன்னிக்குச் சாயங்காலம் ஒரு கூட்டம் நடக்கப் போறது. அதிலே நான் தலைமை வகித்து பேசப் போறேன். அங்கே நீர் குடும்ப சகிதம் வரணும். சங்கோஜமா இருந்தா, உங்களை போட்டோப் படம் எடுத்துடறென். அது ரொம்ப அவசியம்; முடியுமா?

குசேலர் : சங்கோஜம் ஒண்ணுமில்லே, பூஜை கெட்டுப் போகும். (பயம் மிகுதியான குரலில் பேசுகிறார்.)

டைரக்டர் விசுவநாதய்யர் : என்னாப்பா பெரி 'ஸ்டன்ட்' பண்ரே! பெண் பிள்ளைகளே இழுத்துக் கொண்டு போகாதே வெள்ளைக்காரக் கூட்டத்துக் குள்ளே— ரொம்பக் கேவலம்—அந்தப் பசங்களும் ஒத்துக்கணுமே.

சர்மா : குசேலன் குடும்பந்தான் கருத்தடைக்கு (Llvlng argument) பிரத்யட்சப் பிரமாணமான ஒரு பதில் ஆச்சே! எதுக்கும் அந்தப் பசங்களைக் கேக்கறது நல்லதுதான். (டெலிபோனை எடுத்துக் கொணடு ரோட்டரி கிளப்பைக் கூப்பிடுகிறார்.)

சர்மா. : ஆமாம்! சர்மா! ஒரு நிமிஷம்; இருபத்தேழு குழந்தைகளைப் பெற்ற தம்பதிகள் இருக்கிறார்கள்—குடும்பம் வறுமையிலே அழிகிறது. கூட்டத்துக்குக் கொண்டு வரட்டுமா? அப்படியா? படம் கொண்டு வந்தால் போதுமா?—சரி—அப்புறம்...தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்யவா? நானாச்சு— (போனைக் கீழே வைத்து விட்டு) குசேலரே! வெள்ளைக்காரன் கூட்டத்திற்குப் படம் மட்டும் போதுமாம்! ஆனால்

தென்னிந்தியாவிலே ஒருத்தர் பிரசங்கம் செய்யச் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்—அந்த அம்மையார் பேர் சாங்கர், வெள்ளைக்காரி. உங்கள் குடும்பமும் கூடவந்தால் தேவலை என்கிறார்—என்ன சொல்கிறீர்! உமக்கு க்ஷேத்திர தரிசனமும் செய்து வைக்கச் சொல்லுகிறேன்— ஆசார அனுஷ்டானங்கள் கெடாமல் பார்த்துக் கொள்ளுகிறேன்—கூடப் போக வேண்டியதுதான்—கடைசியிலே வேணும் என்றால் ஏதாவது கொஞ்சம் பண உதவியும் நான் செய்கிறேன்—என்ன—சொல்லுகிறீர்?

குசேலர் : என் கண்ணன்!

சர்மா : உமது கண்ணன் எல்லா இடத்திலும் இருக்கிறார் என்று நான் அப்பொழுதுதான் என்னமோ சொல்லி நான் வைத்தேன் என்கிறீரே—உம் விலாசத்தைச் சொல்லும்— பசங்கள் எங்கேயிருக்கிறார்கள்? மாதவா, லாரியை எடுத்துக்கொண்டு போய் எல்லோரையும் அய்யர் கூப்பிட்டு வரச் சொன்னார் என்று அழைத்து வா!

(குசேலர் பதில் பேசவில்லை! மௌனம் சம்மதம் என்று நிச்சயிக்கப்படுகிறது.)

குசேலரே, தெய்வத்திலே அபார நம்பிக்கை இருக்கிறது நல்லதுதான்! தெய்வம் கொடுக்கிறது உம் கைக்காவது எட்டவேண்டாமா? பட்டணத்துக்கு வந்து குடியிருக்கிறீரே?

(அச்சமயம் ஒரு பரிசாரகன் ஐஸில் குளிர வைத்த மோர் கொண்டு வருகிறான்—சர்மா அதைக் குசேலரிடம் கொடுக்கும்படி சமிக்ஞை செய்கிறார்.)

சர்மா: என்ன வாங்கிக்கொள்ளாமல் முழிக்கிறீர்—அவனும்......

குசேலர்: (அசடு வழியும் முகத்துடன்) பூஜை பண்ணின பின்பு நைவேதனந்தான்...

சர்மா: கிருஷ்ணா! அதெ அப்படியே அந்த மேஜைலே வச்சுட்டு—நம்ம ஆத்துலே கிருஷ்ண விக்ரகம் இருக்கோ (யோசிக்கிறார்)—அன்னிக்கு குஞ்சத்துக்கு ஒரு செல்லூலாயிட் பொம்மை வாங்கி வந்தேனே, அதை எடுத்துக் கொண்டுவா.

(பரிசாரகன் போகிறான். சற்று நேரத்திற்குள் உள்ளே ஏக ரகளை; ஒரு குழந்தை— அதுதான் சர்மாவின்பேத்தி குஞ்சம்-வீரிட்டுக் கத்துகிறது. முன்னே பரிசாரகன் செல்லூலாயிட் கிருஷ்ண பொம்மையுடன் வருகிறான்—பின் பக்கம் அவனைக்கிள்ளி அழுது வீரிட்டுக் கொண்டு குழந்தை தொடர்கிறது—)

சர்மா: (குழந்தையை எட்டி எடுத்துக்கொண்டு) அசடாட்டமா! நம்ம பொம்மையை யார் என்ன செய்யப்போரா? இதோ பார்! அந்த மாமா வச்சு வெளையாடறதே—

பொம்மை கிழக்குத் திசை பார்த்து வைக்கப் படுகிறது. குசேலர், சர்மா என்ன செய்துவிடு வாரோ என்ற பயத்தால் மானஸீகமாகப் பூஜை செய்கிறார்—

சர்மா: உரக்கப் பாடும்—குழந்தையாவது கொஞ்சம்!...

(குசேலர் குரலெடுக்கிறார்—மேஜையிலிருந்த மோர் தம்ளரை அதன் முன் வைக்க எடுக்கிறார். அவர் இது

வரை அனுபவித்தறியாத, எதிர்பாராத அளவு குளிர்ச்சியாக இருப்பது கண்டு தம்ளரைக் கீழே நழுவ விடுகிறார்—)

சர்மா: அட கஷ்ட காலமே!

(குழந்தை சர்மா கையிலிருந்து நழுவிப் பொம்மையை எடுத்துக் கொண்டு ஓடிவிடுகிறது—)

அடடா—அடியே...

## சுருள் 8

(வெளியே மோட்டார் வந்து நிற்கிற சப்தம். உள்ளே சுந்தரமும் மெஷின்மான் பார்த்தசாரதி அய்யங்காரும் வருகிறார்கள்.)

சர்மா: அப்பா வந்து சேர்ந்தீர்களா? உங்கப்பா உனக்கு மின்னையே இங்கே வத்திருக்கிறாரடா! இதெ நெனச்சுத்தான் நேற்று டெலிபோன் பண்ணச்சொன்னையா?

பார்த்தசாரதி: (தகப்பனார் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு விழித்து) இங்கே ஏன் வந்தே? இவாளே எப்படித் தெரியும்?

சர்மா: இதென்னடா அசட்டுக் கேள்வி? இவரை எனக்குத் தெரியும் என்ற நினைப்பிலேதானே டெலிபோன் பண்ணச் சொன்னே!

பார்த்தசாரதி: அதெல்லாம் ஒண்ணுமில்லையே—ஆபீஸ் காரியமா—

சர்மா: ஆபீஸ் காரியமாகத்தான்—அதென்னடா பிரமாதம்! நீ அப்ரூவராக மாறு, லேசாகத் தப்ப வைக்கி

றேன். அதென்னடா உங்களுக்கு நெனச்ச நெனச்சாப் பிலே பைத்தியம்!—நேத்தென்ன வேலை நிறுத்தம்?

பார்த்தசாரதி: எல்லாம் உங்க இஷ்டத்தின் பேரிலே தானே செஞ்சோம்! பின்னே ஏன் போலீஸ்காரரெ விட்டு அடிக்கச் சொன்னீர்கள்!

சர்மா: உனக்கென்னடா பைத்தியமா?

பார்த்தசாரதி: முதல்லெ நாங்கள் உங்களுக்குக்குத்தான் அப்படி என்று நெனச்சோம்! சின்ன எஜமான் கையெழுத்துப் போட்டு நிஜந்தான் என்று எழுதிக் கொடுத்திருக்கிறாரே—

சர்மா: என்னடா சமாச்சாரம்? விஷயமே புரியலையே! முதல்லே இருந்து சொல்லு—

பார்த்தசாரதி: சின்ன எஜமான், வேலை நிறுத்தத்தே சினிமா எடுக்கணும் என்று நீங்கள் அபிப்பிராயப் பட்டதாயும், அந்த மாதிரி 'இண்டர் வெல்' லுக்கு அரை மணி நோத்துக்கு முந்தி ரகளை பண்ணிக் கொண்டு வரவேண்டும் என்றும் சொன்னார். முதல்லே நாங்கள் நம்பலே—அப்புறம் அவர் கையெழுத்துப் போட்டு நான் இருக்கிறேன் என்று சொன்னார்—என்னிடந்தான் அவர் எழுதிக் கொடுத்த சீட்டு இருக்கிறதே! ஆனாலும் போலீஸ்காரரை விட்டு இப்படியா அடிக்கச் சொல்லுவது? நாங்க முதல்லே வேஷம் என்று நெனச்சோம்; வினையாக முடிஞ்சுது...

சர்மா: அடே! மாதவா! ராமு இருக்கிறானா பார்! இருந்தா இப்படி வரச் சொல்லு!—எப்போப் பார்த் தாலும் ஒண்ணில்லாட்டா ஒண்ணு ரகளை பண்ணிண்டே இருக்கான்—இந்த ஒரு பயலை வச்சுப்

பார்த்துக்க முடியலே— என்ன குசேலரே! உமக்கு எப்படி இந்த இருபத்தேழு குழந்தைகளையும் மானேஜ் பண்ண முடியறது?

குசேலர்: (அதீத நிலையில் கண்களை மூடியபடி) என் கண்ணன் இருக்கிறான்.

(இருபத்தைந்து வயதுடைய ஒரு வாலிபன் உள்ளே வருகிறான்— பார்த்தசாரதி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு நிற்கிறான்.)

சர்மா: என்னடா மில்லிலே போய் ரகளை பண்ணி வச்சுட்டு வந்திருக்கே? உன் கையிலே சினிமாக் காமிரா வாங்கிக் கொடுத்தது பிசகாப் போச்சு. குஞ்சத்திற்கும் உனக்கும் கொஞ்சமேனும் வித்தியாசமில்லையே! வயதுதான் ஆகிறது...

டைரக்டர் நண்பர்: என்னவோ இவ்வளவோ லேசா பாவிக்கிறீரே? இவன் பண்ணி வச்சிருக்கற சிக்கலை லேசிலே அவிழ்க்க முடியாதே! காமிரா இருந்தா— பின்னே என்னை ஏன் தஞ்சாவூரிலே இருந்து ராத்திரி யோடெ ராத்திரியா அலக்கழிச்சீர்? உம். உம்முடைய மகனோடே சீராடறதெப் பாக்கவா...

சர்மா: பொடுபொடுன்னு பொறிக்காதேயும். ஒரு ஒப்பு விசாரணை நடத்தி அப்படியே ஹஷப் பண்ணிட்டாப்போறது—ஓவர்டைம் போட்டமே அதெத் தள்ளி விட்டால் லேபர்ஸே திருப்தி செய்த மாதிரி ஆகிறது—

டைரக்டர் நண்பர்: அதெல்லாம் கூடாது. ஓவர்டைம் ஓர்க் செய்துதான் ஆகணும்! இல்லாவிட்டால் டைரக்டர் போர்டு மீட்டிங் கூட்டி சந்தி சிரிக்க வைப்பேன்.

சர்மா: சரிதான் காணும், ஓவர்டைம் சார்ஜ் நான் கொடுத்துட்டுப் போறேன்!—ராமு! படந்தான் எடுத்தாயே, அது என்ன ஆச்சு!

ராமு: (இலகுவில் தப்பித்துக் கொண்டதனால் உள்ளூர மகிழ்ச்சியுடன்) இல்லேப்பா! பிசாசும் பூதமும் மாதிரி அவ்வளவும் கறுப்புக் கறுப்பா இருக்கு..

சர்மா: பேஷ்! தமிழ் டாக்கிதான் போ!

(ராமு வெளியே போக முயலுகிறான். அதே சமயத்தில் வெளியில் ஒரு லாரி குசேலக் குடும்பத்தை இறக்குகிறது. மாதவனுடன் கோஷ்டி உள்ளே பிரவேசம்.)

சர்மா: ராமு! இதோ பார், இவாள் எல்லாம் வந்திருக்காளே, எல்லாரையும் வரிசையா உட்காத்தி வைச்சு, இந்தா இவரையும் சேர்த்துக்கோ, ஒரு குரூப் போட்டோ எடு. சாயங்காலம் பிரிண்டு ரெடியாகணும்.

சுசீலை இடுப்பிலிருக்கும் ஒட்டுப்பொறுக்கி: அம்மா, இது தானா பள்ளிக்கொடம்?

சுசீலை: (மெதுவாக) சித்தெ சும்மா வாயே வச்சுண்டு இருடீ அம்மா!

கோதை: (தாயாரைப் பார்த்துக்கொண்டு) படம் இடுத்தா ஆயுஸு கட்டையாப் போகும் என்று சொல்ராளே!

சர்மா: என்னைப் போன இருபது வருஷங்களாகப் போட்டோ எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள்! படம் எடுக்கிறதிலே உங்க கலி தீர்ந்தது என்று நினைத்துக் கொள்ளுங்கள்...

குசேலர் (சுசீலையைப் பார்த்து) அடியே விக்ரகத்தை எடுத்துண்டு வந்தியோ?

கோதை: செட்டியாரும் அந்தப் பாட்டியும் சேர்ந்து அதெ அங்கேவிட்டு எடுக்கப்படாதுன்னுட்டா...

இரட்டைக் குழந்தைகளில் ஒன்று: இல்லே அப்பா, அவா எல்லாம் வெளியே வந்தா. நான் மெதுவாகத் தூக்கினேன்! இது மட்டும் கையோடே வந்து விட்டது அப்பா—(கிருஷ்ண விக்ரகத்தின் தலையை அவரிடம் கொடுக்கிறது.)

குசேலர்: (பேய் வெறியுடன்) என்னடா செஞ்சே! (கைகளை அடிக்க ஓங்குகிறார்)

சர்மா: அடே, மாதவா! குஞ்சம் தூங்கி யிருப்பா. அந்த செல்லூராயிட் கிருஷ்ண பொம்மையை இவரிடம் கொண்டுவந்து கொடு. ஓய் குசேலரே, இதற்கு அபிஷேகம் பண்ணினா ஒன்றும் வராது! உமக்கு வேணும்னா நல்ல வெண்கலத்திலே ஒன்று செய்து தரேன். இதைக் கொஞ்ச நாளைக்கு வைத்துக் கொள்ளும்! ஓய் இன்னொரு யோசனை. நீர் ஏன் திருவனந்தபுரத்திற்கே போய்க் குடியேறி விடலாகாது? வேலை பார்க்கிற பிள்ளைகள் இங்கே இருந்து பிழைச்சுக்கட்டும்— நீங்கள் எல்லாரும் பிரயாணம் போய்விட்டு வந்த பிறகுதான்— உமக்கு அங்கே வீடு ஒன்று சின்னதாய் வாங்கித் தருகிறேன்— உம்ம காலத்தெ சௌக்கியமா அங்கேயே கழியுமே!

ஓட்டுப் பொறுக்கி: அம்மா நான் பள்ளிக்கொடம் போட்டுமா?

சர்மா: அடெடே! இதென்னது இவ்வளவு சின்ன வயசிலே!

கோதை: அதெல்லாம் ஒண்ணுமில்லே! நேத்திக்கு முதல் என்னமோ இப்படியே பாடிண்டு இருக்கு! தெய்வக் குத்தமோ என்னவோ! அதுக்கேத்தாப்பிலே...

கிட்டு: கொஞ்சம் சும்மாருடியம்மா— மகா கண்டுட்ட மாதிரிதான்!

சுசீலை: (மெதுவாக) அவாளுக்குப் பூஜெ வேளே ஆயிட்டதே!

சர்மா. மாதவா! இவாளெ எல்லாட் அழைச்சுண்டு போ. சுந்தரம், அந்த நோட்ஸே எங்கே வச்சே?

XXX

# ஆசிரியரின் பிற நூல்கள்

புதுமைப்பித்தன் கதைகள்

புதுமைப்பித்தன் கட்டுரைகள்

புதுமைப்பித்தன் கவிதைகள்

புதுமைப்பித்தனின்
பிறமொழிச் சிறுகதைகள்
(பளிங்குச் சிலை, முதலும் முடிவும்)

புதிய ஒளி

அன்று இரவு

சிற்றன்னை

சித்தி
(ஆண்மை, சித்தி)

உலகத்துச் சிறு கதைகள்

நாரத ராமாயணம்

உலக அரங்கு

பலிபீடம்

பிரேத மனிதன்

மணியோசை
(மணியோசை, தெய்வம் கொடுத்த வரம்)

